T. 1361.

திருவொற்றியூரான்

சாமவேத சங்கிதை

முதற் பாகம்.

வே. மொ. பெ. கா. வெளியீடு, நெ. 4.

சாமவேத சங்கிதை

பூர்வார்ச்சிகம்

சாயண பாடியம்

காசிவாசி உயர்திரு.

சிவானந்த யதீந்திர சுவாமிகளவர்களால்

மொழி பெயர்க்கப்பட்டது.

மொழி பெயர்ப்பாசிரியரின் பதவுரையும்,
குறிப்புரையும் அடங்கியது.

திருவொற்றியூரான் அடிமை என்னும்

சென்னை

த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களால்

பதிப்பித்து

நன்கொடையாக அளிக்கப்பெற்றது.

யுவ ஞு கார்த்திகைத் திங்கள்.

1935.

காபிரைட்] [ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

PRINTED AT THE
EVEREADY PRESS,
34, HUNTERS ROAD,
CHOOLAI - VEPERY,
MADRAS.

உ

இப்புத்தகத்தில் அடங்கியவைகள்.

---

1. சாமவேத மூர்த்தி படம்
2. வேத மொழிபெயர்ப்பாசிரியர் படம்
3. வேத மொழிபெயர்ப்பாசிரியர் சரித்திரம்
4. வேதத்தை வெளியிட்டவரின் படம்
5. வேதத்தை வெளியிட்டவரின் சரித்திரம்
6. முன்னுரை

(உபோற்காதம்)

7. வேதம் என்பதன் பொருள்
8. வேதப் பாகுபாட்டியல்
9. (பொது) வேதமோது மியல்
10. சாமவேதப் பாகுபாட்டியல்
11. சாமவேதச் சாகையியல்
12. சாமவேத கானவியல்
13. தேவதை யியல் (சோமம்)
14. சோமயாகச் சுருக்கம்
15. தமிழும் ஆரிய வேதமும்
16. தமிழ்மறை யியல்
17. சாயணர் சரித்திரம்
18 சாமவேத ருத்ரீய உபோற்காதம்
19. சாமவேத ருத்ரீயம்.

உ

சாமவேதத்தின்

20. மந்திரங்களின் அட்டவணை
21. காண்ட அட்டவணை

(நூல்)

22. ஆக்கினேய காண்டம்
23. ஐந்திர காண்டம்
24. பவமான காண்டம்
25. ஆரண்ய காண்டம்
26 மகாநாம்நியார்ச்சிகம்.

சாமவேதமூர்த்தி.

नीलोत्पलदलाभासः सामवेदो हयाननः ।

अक्षमालान्वितो दक्षे वामे कम्बुधरः स्मृतः ॥



வேத மொழிபெயர்ப்பாசிரியர்.

वेदानां द्राविड भाष्य कर्त्तारः वेद वेदाङ्ग पारगाः,

काशि निवासि श्री १०८, शिवानन्द यतीन्द्र स्वामिनः

SOLDEN & CO., MADRAS.

உ

சிவ குகமயம்.

செந்திநாயகன் றுணை.

வேத மொழிபெயர்ப்பாசிரியர்

காசிவாசி - ஸ்ரீமத் சிவானந்த யதீந்திர சுவாமிக ளவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

இது ஸ்ரீ சு. அ. இராமசுவாமி அவர்களால் இயற்றப்பெற்றது.

திங்கள் செஞ்சடை சேர்த்திடு தம்பிரா னருளினாற் செழித்தே
யங்கண் மாவுல கத்தினி லண்டர்த மூலமென வவிரு
மெங்கண் மாபுகழ்ப் பாரத கண்டமா மினியநல் லுலகிற்
பொங்கு சோழமண் டலவள மோதுதல் புலவர்க்கு மரிதால். (1)

வெண்மை யாகிய நிறமுடை மேதகு முகிற்குழாம் விரைந்து
தண்மை யோடுபன் னலமுடைச் சாகர நீரினை யள்ளி
யுண்மை சேருல கிற்குநல் லுதவியை நெஞ்சினி லுன்னித்
திண்மை யாகிய குடகுமா மலையெனுஞ் சிலைதனைச் சேர்ந்து. (2)

தூய தாம்பர ஞானநற் பொருளெனத் தொல்லுல கோர்க
ளாய நின்றிடு மண்ணலை மஞ்சன மாட்டுதல் கடுப்ப
மேய வம்மலை தன்னிலே யமலைகண் மிகவுமே யோங்க
வேய தண்புனல் சிந்திட வந்தநல் லினியபே ரமிழ்தம். (3)

ஒன்ற தாய்த்திரண் டொருதிருக் காவிரிப் பெயர்தனை யுற்று
நின்ற மாவுல கிதுபெரு நீள்வள மடைந்திட நினைத்து
வென்ற மாபுலன் விரதிய ராதியோர் விரும்பியே மகிழ
நன்ற தாய்வரு நதியெனுங் காவிரி வளந்தனை நாடில். (4)

பொருந்து மந்நதி யாகிய பூவையாங் காவிரிப் பாவை
திருந்து மிவ்வுல கத்துள சீருடைத் தன்றிரு மக்க
ளருந்து பேரமு தாகிய வற்புத நீரெனு மமிழ்தை
விருந்தெ னும்படி விளங்கிட வெங்கணுந் தேக்கியே விரைந்து. (5)

வேறு.

ஏயதிருத் தேவார மியம்புமொரு நூற்றினுட
னாயவொரு தொண்ணூறு மடைவாகப் பெற்றுநலை
மேயதிருச் சோழ மண்டலமா மேதினியி
னேயமுடன் சென்றங்கு நீரைப் பரப்பியரோ. (6)

புனனு டெனப்புகழ்ந்து புலவர்களும் போற்றிசெய
வனநா டெனநவின்றே யறிஞர்களும் வாழ்த்திடநற்
கனமா கியபெருமை கருதி யளித்ததற்பி
னனமேந் தியகரத்தோ டழகு மிளிர்ந்திடவே. (7)

நாடு செழிப்படைய நகரஞ் சிறப்படைய
வீடுதனை விரும்பும் விரகர் களிப்படைய
வோடித்தன் னாயகனு முவரிதனைச் சேர்ந்து
கூடிக் களிக்கின்ற கொழுஞ்சோழ வளநாடு. (8)

மண்ணிற் பிறந்தார்கண் மறித்தும் பிறவாம
னண்ணப் பெருவீடு நனியளிக்கு மாரூரு
மண்ண னடராச னனுதினமு நடஞ்செய்ய
நண்ணு புகழ்த்தில்லை நகருமுடைப் பெருநாடு. (9)

கோழிக் கொடிக்குமரன் கூறுமவ தாரமெனும்
வாழி திருஞான வள்ளல் திருச் சம்பந்த
னாழிப் பெரும்புவியி லடைந்து வளர்ந்ததிருக்
காழிப் பதிதனையுங் கண்கண்ட புகழ்நாடு. (10)

கறுத்து விளங்குதிருக் கண்டமுடைச் சிவனாருக்
கறுத்துக் கறிசமைத்தே யரியதிருக் குழந்தைதனைப்
பொறுத்துப் படைத்தளித்துப் புகழைமிகப் பெற்றதிருச்
சிறுத்தொண்ட ரெனுமரிய சிவபத்தர் வருநாடு.. (11)

தாவிலர சாட்சிமிகத் தான்பிழையாய்ப் போகுமென
வாவினொரு கன்றிற்கா வருமையுடைக் கான்முளையை
வீவா யெனவாழி விட்டமனு நீதியெனுங்
கோவினர சாட்சிதனைக் கொண்டநல நாடு. (12)

சுந்தரனென் றோதுமொரு தொண்ட னியம்பியநற்
செந்தமிழின் பாவிற்காச் செப்புநிசிப் போதினிலே
யிந்தணிந்த வீச னியம்பு பரவைமனை
யந்தூது வந்தநல வரிய திருநாடு. (13)

வேறு.

கந்தப் பொழில்கண் மிகமலிந்து கவினுற் றலைமை பெற்றதெனு
மிந்தத் திருநா டிதனிடையே யிலங்கு மறைகள் போற்றிமிக
வந்தச் சிவனார் தனதருளை யடைந்து மகிழ்ந்த பெருமையுடை
யந்த மறைசை நகர்ப்பெருமை யறைதற் கியாவர் வல்லாரே. (14)

ஆதி சேது வென்றெடுத்தே யறையும் பெருமை மிகவுடைய
சோதி சேது வீதாகுஞ் சொலுமப் பாலே பலநூலு
மோதும் பெற்றி தனையுடைய வுயர்ந்த மறைகள் போற்றியபின்
பாதி மறைசைப் போதனைப் பாரின் மிசையே பகருவரால். (15)

செப்பு புகழா ரப்பாவர் தெரிசித் தேத்த வெப்படியுந்
தப்பில் கபாடந் திறக்கவெனத் தாணி புகழுந் தேவார
மொப்பில் பெருமை யுடையதா யுரைக்கத் திறந்த பெருமையுட
னப்பாற் காழிச் சம்பந்த னடைத்த சீரு மிங்குளதால். (16)

மன்னும் புகழ்சேர் மதுரைநகர் மாறன் சமண ஞகிஞ
னின்னே யீங்கு போந்தெமது வின்னல் தன்னைக் களையென்று
மன்னன் றேவி விடுத்த தொண்டர் மாசில் புகழ்சேர் சீகாழி
மன்னன் றன்னைக் கண்டுகுறை வலிந்து கூறுந் தலமுமிதால். (17)

கூடன் மேவுங் குழகனெனுங் கொற்றச் சோம சுந்தரன்ற
ஞட லெல்லா மிகவிரித்து வழகு மிகவே செய்யுடனுற்
பாடல் செய்த பரஞ்சோதி முனிவ னென்னும் பரந்தபுகழ்
சூடல் செய்த புலவனவன் றோன்றுந் தலமு மீதாமால். (18)

குறைத வில்லாப் புகழிங்ஙன் கூறற் கரிதா யெந்நாளு
நிறைத லோடு நின்றிடுமிந் நீண்ட மறைசைப் பெருமைதனைப்
பறைத வியார்க்கு மரிதாகும் பாரின் மிசையே மிகச்சிறந்தோ
ருறைத ருனு மீண்டென்று வுரைத்த வென்று முண்மையரோ. (19)

வேறு.

இப்பெரும் புகழ்க ளெல்லா மிலங்குமிம் மறைசை யென்னு
மொப்பிலாத் தலத்தின் பாங்க ரொளிர்வதா முயர்ச்சி யாய
வெப்பெரு நலங்க டாமு மினிதொளிர் பெருமை வாய்ந்து
செப்பிடு மாயக் காரன் புலமெனுஞ் சீரூர் தானே. (20)

மொழிந்தவிவ் வாயக் காரன் புலமெனு மூதூர் தன்னிற்
பழந்தமிழ் வாண ரென்று பாரெலாங் கூற நிற்க
மொழிந்திடு மூவேந் தர்தம் முதற்குடி தன்னிற் றோன்றி
யிழந்திடா தவர்த மக்கு வினியபே ரரசு தந்த. (21)

வீரரென் றுரைக்க நிற்கும் விறன்மிகு குடியா மிவைதச்
சீரிய வறிஞர் தாமுஞ் செப்புவர் சிறப்ப தாக
வாரியர் பகுப்பாற் றோன்ற வகமுடை யார்க ளென்று
பூரிய மிவர்க ளின்றேற் போனது தெரியா தன்றே. (22)

இங்கிவர் குலமே யிந்திர குலமென விசைப்பர் மேலோ
ரெங்கிவர் பெருமை தன்னை யானெடுத் தியம்ப லாகுஞ்
சங்கநூ றம்மைப் பார்ப்பிற் சதுருடை யறிஞர் தாமுந்
துங்கமாய்க் கூறி யுள்ள தொடர்பெலா மறிய லாமால். (23)

உரைத்தவிப் பெருமை மிக்க வுயர்பெருங் குடியிற் றூனு
நரைத்தவெள் விடையி லேறு நலமலி சிவனூர் பாத
முரைத்திடு மொருவன் வந்தா னுலகின ரவன்றன் பேரை
யருத்தியாய்ச் சாமித் தேவ ரென்றுதா னறைகு வாரால். (24)

புனனு டெனப்புகழ்ந்து புலவர்களும் போற்றிசெய
வனநா டெனநவின்றே யறிஞர்களும் வாழ்த்திடநற்
கனமா கியபெருமை கருதி யளித்ததற்பி
னனமேந் தியகரத்தோ டழகு மிளிர்ந்திடவே. (7)

நாடு செழிப்படைய நகரஞ் சிறப்படைய
வீடுதனை விரும்பும் விரகர் களிப்படைய
வோடித்தன் னயகனு மூவரிதனைச் சேர்ந்து
கூடிக் களிக்கின்ற கொழுஞ்சோழ வளநாடு. (8)

மண்ணிற் பிறந்தார்கண் மறித்தும் பிறவாம
னண்ணப் பெருவீடு நனியளிக்கு மாரூரு
மண்ண னடராச னனுதினமு நடஞ்செய்ய
நண்ணு புகழ்த்தில்லை நகருமுடைப் பெருநாடு. (9)

கோழிக் கொடிக்குமரன் கூறுமவ தாரமெனும்
வாழி திருஞான வள்ளல் திருச் சம்பந்த
ஞழிப் பெரும்புவியி லடைந்து வளர்ந்ததிருக்
காழிப் பதிதனையுங் கண்கண்ட புகழ்நாடு. (10)

கறுத்து விளங்குதிருக் கண்டமுடைச் சிவனுருக்
கறுத்துக் கறிசமைத்தே யரியதிருக் குழந்தைதனைப்
பொறுத்துப் படைத்தளித்துப் புகழைமிகப் பெற்றதிருச்
சிறுத்தொண்ட ரெனுமரிய சிவபத்தர் வருநாடு. (11)

தாவிலர சாட்சிமிகத் தான்பிழையாய்ப் போகுமென
வாவினெரு கன்றிற்கா வருமையுடைக் கான்முளையை
வீவா யெனவாழி விட்டமனு நீதியெனுங்
கோவினர சாட்சிதனைக் கொண்டநல நாடு. (12)

சுந்தரனென் றேதுமொரு தொண்ட னியம்பியநற்
செந்தமிழின் பாவிற்காச் செப்புநிசிப் போதினிலே
யிந்தணிந்த வீச னியம்பு பரவைமனை
யந்தூது வந்தநல வரிய திருநாடு. (13)

வேறு.

கந்தப் பொழில்கண் மிகமலிந்து கவினுற் றலைமை பெற்றதெனு
மிந்தத் திருநா டிதனிடையே யிலங்கு மறைகள் போற்றிமிக
வந்தச் சிவனர் தனதருளை யடைந்து மகிழ்ந்த பெருமையுடை
யந்த மறைசை நகர்ப்பெருமை யறைதற் கியாவர் வல்லாரே. (14)

ஆதி சேது வென்றெடுத்தே யறையும் பெருமை மிகவுடைய
சோதி சேது வீதாகுஞ் சொலுமப் பாலே பலநூலு
மோதும் பெற்றி தனையுடைய வுயர்ந்த மறைகள் போற்றியபின்
பாதி மறைசைப் பேரதனைப் பாரின் மிசையே பகருவரால். (15)

செப்பு புகழா ரப்பரவர் தெரிசித் தேத்த வெப்படியுந்
தப்பில் கபாடந் திறக்கவெனத் தாணி புகழுந் தேவார
மொப்பில் பெருமை யுடையதா யுரைக்கத் திறந்த பெருமையுட
னப்பாற் காழிச் சம்பந்த னடைத்த சீரு மிங்குளதால். (16)

மன்னும் புகழ்சேர் மதுரைநகர் மாறன் சமண னாகினா
னின்னே யீங்கு போந்தெமது வின்னல் தன்னைக் களையென்று
மன்னன் றேவி விடுத்த தொண்டர் மாசில் புகழ்சேர் சீகாழி
மன்னன் றன்னைக் கண்டுகுறை வலிந்து கூறுந் தலமுமிதால், (17)

கூடன் மேவுங் குழகனெனுங் கொற்றச் சோம சுந்தரன்ற
னாட லெல்லா மிகவிரித்து வழகு மிகவே செய்யுடனாற்
பாடல் செய்த பரஞ்சோதி முனிவ னென்னும் பரந்தபுகழ்
சூடல் செய்த புலவனவன் றோன்றுந் தலமு மீதாமால். (18)

குறைத லில்லாப் புகழிங்ஙன் கூறற் கரிதா யெந்நாளு
நிறைத லோடு நின்றிடுமிந் நீண்ட மறைசைப் பெருமைதனைப்
பறைத லியார்க்கு மரிதாகும் பாரின் மிசையே மிகச்சிறந்தோ
ருறைத லானு மீண்டென்று வுரைத்த லென்று முண்மையரோ, (19)

வேறு.

இப்பெரும் புகழ்க ளெல்லா மிலங்குமிம் மறைசை யென்னு
மொப்பிலாத் தலத்தின் பாங்க ரொளிர்வதா முயர்ச்சி யாய
வெப்பெரு நலங்க டாமு மினிதொளிர் பெருமை வாய்ந்து
செப்பிடு மாயக் காரன் புலமெனுஞ் சீரூர் தானே. (20)

மொழிந்தவிவ் வாயக் காரன் புலமெனு மூதூர் தன்னிற்
பழந்தமிழ் வாண ரென்று பாரெலாங் கூறு நிற்க
மொழிந்திடு மூவேந் தர்தம் முதற்குடி தன்னிற் றோன்றி
யிழந்திடா தவர்த மக்கு வினியபே ராசு தந்த. (21)

வீரரென் றுரைக்க நிற்கும் விறன்மிகு குடியா மிஃதைச்
சீரிய வறிஞர் தாமுஞ் செப்புவர் சிறப்ப தாக
வாரியர் பகுப்பாற் றோன்று வகமுடை யார்க ளென்று
பூரிய மிவர்க ளின்றேற் போனது தெரியா தன்றே. (22)

இங்கிவர் குலமே யிந்திர குலமென விசைப்பர் மேலோ
ரெங்கிவர் பெருமை தன்னை யாரெடுத் தியம்ப லாகுஞ்
சங்கநூ றம்மைப் பார்ப்பிற் சதுருடை யறிஞர் தாமுந்
துங்கமாய்க் கூறி யுள்ள தொடர்பெலா மறிய லாமால். (23)

உரைத்தவிப் பெருமை மிக்க வுயர்பெருங் குடியிற் றோனு
நரைத்தவெள் விடையி லேறு நலமலி சிவனார் பாத
முரைத்திடு மொருவன் வந்தா னுலகின ரவன்றன் பேரை
யருத்தியாய்ச் சாமித் தேவ ரென்றுதா னறைகு வாரால். (24)

சாமியென் றுரைக்கு மந்தச் சற்குண வான்ற னக்குக்
காமிய வில்வாழ்க் கைக்குக் காரிகை யொருத்தி வந்தாள்
பூமியிற் சிறந்து வாழும் பூவையர்க் கரசி போல்வா
ணேமிகொ ளீசன் றேவி நேரென வழகான் மிக்காள். (25)

இன்னவ டானு நாளு மியம்பிடும் வார்த்தை யெல்லாங்
கன்னலே யென்னு மாறு கழறிடுஞ் சிறப்பு வாய்ந்தோ
ளன்னதாந் தன்மை யாலே யவள்பெறு நாமந் தானு
மன்னிடு மதுரம் மாளென் காரண மாயிற் றன்றே. (26)

நம்மையா ளிறைவன் பாத நாண்மலர் தனையும் போற்றி
யம்மனைக் கிழத்தி யோடு மாகுமில் வாழ்க்கை தன்னை
யிம்மியுங் கோணு தென்று மியல்புட னியற்றிக் கொண்டு
செம்மையா யுலகோர் போற்றச் சீருடன் வாழ்ந்து நின்றான். (27)

மதுரம்மா ளென்னு மந்த மாதுடன் வாழு நாளில்
விதுவணி யீச னார்தம் விளங்கிடு கருணை யாலே
புதல்வரோ ரைவர் வந்தார் புத்திரச் செல்வ மாக
மதுமொழி வாய்ந்தி ரண்டு மங்கையர் தாமும் வந்தார். (28)

பின்னரச் சாமி யென்னும் பெரியவன் பேணியே தான்
முன்னர்செய் தவத்தி னாலு முத்தமிழ் நாட்டோர் செய்த
மன்னிய தருமத் தாலு மைந்தன்று ளொருவன் வந்தா
னன்னவன் றன்னைக் கண்டே யனைவரு முவகை பூத்தார். (29)

இறுதியில் வந்த பால னிலங்கிடு வகையைக் கண்டு
செறிதலா மன்பி னோடு சீர்பெற வளர்த்துப் பின்ன
ருறுதியாங் கல்வி தன்னை யுதவென வுபாத்தி தன்பாற்
குறுகிடச் செய்திட் டார்கள் குமானுஞ் சின்ன டன்னில். (30)

பள்ளியிற் பயிலும் வித்தை பாங்குடன் கற்று மேலோ
ரெள்ளிடு நடத்தை யில்லா தினிதுட னிருக்குங் காலை
யொள்ளிய வறிவான் மிகவு முயர்ந்திடு மிராமை யப்பேர்
கொள்ளொரு துறவோ னந்தக் குமரனைக் கொண்டு சென்றான். (31)

தமர்தனை விட்டுச் சென்று தவநெறி யோர்பாற் சேர்ந்த
குமரனப் பெரியோன் பாலுங் கூறிடு மறிஞர் பாலுந்
தமிழ்மொழி நூல்க டம்மைச் சண்முக னருளால் யாருஞ்
சமமிலை யென்னக் கற்றுத் தமிழ்மொழி யறிஞ னானான். (32)

வேறு.

கலைகடனின் மிகச்சிறந்த கவனமுடை யின்னவன்றான் கருதிப் பின்னர்
மலைமகளை யொருபாகம் வைத்தருளுஞ் சிவபெருமான் வயங்கி யோங்க
வலைமகடன் னருள்காட்டு மரும்பதியா மகிலத்திற் சிறப்பு வாய்ந்து
குலைமிகுத்துத் தெங்காடக் குயில்பாடுங் கோயிலூர் குறுகி னானே. (33)

ஆங்கணுள திருமடத்தி லற்புதசிற் கோலமுடனவிர்ந்து நின்று
வோங்கிநெற் கருணைதனி லுலகமதி லொருவனென வுயர்ந்து நாளும்
வீங்கியபொற் புகழோடு விளங்குதிரு வீரசே கானென் றேத்தும்
பாங்குபெறு மொருஞான பண்டிதனும் பெரியோனைப் பணிந்து கண்டு. (34)

பேர்படைத்த வன்னவன்றன் பெற்றிமிக்க திருவடியைப் பெரிது போற்றிச்
சீர்படைத்த செகதலத்திற் பேருள்சேர் மகிமைதனிற் சிறந்து மேலாங்
கார்படைத்த திருவருளோய் ! கழனல்கி யருள்கவெனக் கசிந்து போற்றி
யேர்படைத்த வவன்றாளை யினிதுபணிந் துருகியே யெழுந்து நின்றான். (35)

நின்றவனைத் தன்னிருகண் ணிறைந்தபெருங் கருணைமிக நிலவப் பார்த்து
நன்றஞ்சே லுன்பிறவி நலிந்திடயா நல்கிடுவோ மருந்த தான
வொன்றென்று கூறியவ னுறுபிறப்பாம் பெருநோயை யொழிக்க நாளும்
வென்றபுகழ் வித்தையெலாம் விளங்கவவற் கினிமையுடன் விரித்திட் டானால். (36)

உய்வதற்காம் வழியான வொப்பில்பெரு நூலெல்லா மோர்ந்த பின்னர்ச்
சைவமுத னூல்களையுஞ் சாற்றுமியல் பறிந்திடவே சதுராய்க் கற்றுத்
தெய்வமெனுங் கந்தனது சேவடியு மெக்காலுஞ் சிந்தை கொண்டு
பொய்வருமிவ் வுலகடையப் புரிகரும மெல்லாமும் போக்கி னானால். (37)

பின்னரவன் றென்மொழியைப் பீடுபெற நன்கியாம் பெரிது கற்றோ
முன்னுபுகழ் வடமொழியு மோர்ந்திடுத னல்லதென வுளத்திற் கொண்டு
மன்னுபுகழ்க் குருநாதன் மலரடியைப் போற்றியந்த வகையுங் கூறி
யன்னவன்ற னுத்திரவு பெற்றிந்த வகிலத்திற் பெருமை வாய்ந்த. (38)

காசியெனும் பெரும்பதியைக் கருத்தினுட னெய்தியங்குக் காணு நின்ற
மாசில்புகழ் விசுவநா தப்பெருமான் மலரடியை மகிழ்ந்து போற்றித்
தேசுடைஞா னனந்தத் தேசிகன்பாற் றிகழ்மகிமை வாய்ந்த தான
வேசலிலாப் புகழ்தருநல் லிலிங்கசந் நியாசத்தை யினிது பெற்று. (39)

செம்மைமிகு தன்னுடைய சிறந்தமதி நலத்தாலே சின்னா டன்னி
லம்மொழியி லிருந்திட்ட வருமைமிகு நூலெல்லா மருத்தி யோடு
மிம்மைக்கு மறுமைக்கு மெம்மைக்கு மினிதாகு மென்று போற்றிக்
கொம்மையுடன் விரைவினிலே கொண்டிட்டா னொருசிறிதுங் குறைவில் லாமல்.

தென்மொழியி னிலக்கணமுஞ் செப்புபிற நூல்களையுந் தேர்ந்த தானு
நன்மையருள் சித்தாந்த நன்னூலும் வேதாந்த ஞான நூலுந்
தன்மையுடன் கற்றவையிற் றாணிதனி லொளிருகிற தகுதி யானும்
வன்மையுடை யிருமொழியும் வல்லனென வுலகமதில் வந்திட் டானால். (41)

வேறு.

நல்வழி தன்னையே நாடி நாளுந்தான்
கல்வியை யிங்ஙனங் கனிந்து கற்றவன்
பல்வழி கல்வியைப் பயன்ப டுத்தினன்
சொல்வழி யிவனிடந் தோய்ந்துகற் றோர்பலர். (42)

காதலைக் கல்வியிற் காட்டி னார்தமை
யோதலைச் செய்ம்மினென் றுரைத்துக் கல்வியை
யீதலைச் செய்தவ ரினிதி லங்கவே
மாதரு மத்தினை மகியிற் செய்திட்டான். (43)

தன்குரு நாதனுந் தாவின் மாபுகழ்
நன்கமை வீரமா ஞான தேசிகன்
பொன்புக ழோடிரும் புவியில் வாழ்ந்ததை
யின்புட னெங்குமே யினிது கேட்டரோ. (44)

பாரமர் மக்கடாம் பயனை நாடியே
யாரண மாமென வரிது போற்றிட
வீரமா தவனது விறற்பு ராணமாய்ச்
சீரமை கவியினிற் செய்து வைத்தனன். (45)

பற்பல நூல்கடாம் பாரிற் செய்தவ
னிற்பதோ ரிடமென நிலையி லாமலே
பற்பல விடங்களும் படர்ந்து சென்றவண்
தற்பதி லாசையைக் காட்டி னார்க்கெலாம். (46)

எழுமையு மின்பரு ளினிய வித்தையைக்
கெழுமிய வன்புடன் கேட்க வீந்துதான்
விழுமிய நற்புகழ் விளங்கு சென்னையை
முழுமுத லருளினான் முடிவி லுற்றனன். (47)

சென்னைமா நகர்தனைச் சேர்ந்த மாதவன்
முன்னையூ ழென்பது முனைந்து கூட்டலா
லன்னையா மென்றுதா னாரும் போற்றிட
வுன்னிடு தண்ணளி யுயர்ந்து நிற்பவன். (48)

முத்தவா னந்தனு முதல்வன் சொற்படி
யித்தரை தன்னிலே யினிது நாகர
மெத்தவும் பரவியே விளங்கு மாறுதான்
வித்தியா சாலையை விரைந்து கண்டவன். (49)

அராமதி சூடிடு மண்ணற் போற்றுவோன்
றராமலி கீர்த்தியான் றாணி யோரெலாம்
இராமசா மீயென வியம்பு மாறுதான்
வருமொரு வள்ளலு மகிழ்ந்து கண்டனன். (50)

கண்டவன் றன்னையக் கருணை யாளன்றான்
மண்டிய வன்புடன் மதித்துப் போற்றியே
மிண்டிய மாபுகழ் விளங்கு வேதத்தைக்
கண்டிடு செந்தமிழ்க் கலையி லென்னவே. (51)

செங்கல்வ ராயன்றன் சிறந்த தோட்டத்திற்
கங்கலில் வேண்டிய கடனெ லாமளித்
திங்கிருந் தப்பணி யியற்று வாயென
வங்கவன் றங்கியே யமர்ந்து நின்றரோ. (52)

தவப்பிர காசத்திற் றனக்கு நேரிலாச்
சிவப்பிர காசனார் சிறந்த காதையை
நவப்பொலி வோங்கிட நன்கு செய்துமே
வுவப்புட னிந்தமா வுலகிற் கீந்தனன். (53)

வச்சிர சூசிகை வாய்ந்த பேர்கொளு
மெச்சுப நிடதமும் விரைந்து செந்தமி
ழுச்சியாம் பாஷையி லொளிரப் பேர்த்ததை
யச்சினி லிட்டில கிற்க ளித்தனன். (54)

சங்கர மாதவன் சரிதந் தன்னையு
மிங்கித மாய்மொழி யினிது பேர்த்ததை
யெங்குமே யோங்கிட இராம சாமிப்பேர்
தங்கியோ னுதவியா லச்சிற் சார்த்தினான். (55)

வேறு.

இப்படிப் பலவா நூல்க ளினிதுட னியற்றிக் கொண்டே
யொப்பிலாப் புகழ்சே ரீச னுலகினர்க் களித்து வைத்த
செப்பரு மகிமை வாய்ந்த சிறப்புடை வேதந் தன்னைத்
தப்பறத் தமிழி லேதான் றகவுடன் மொழிபெ யர்த்தான். (56)

காழியில் வந்திட் டோனுங் கவின்பெறு மொருவ னோடு
மாழியிற் கல்லே தெப்ப மாய்க்கரை வந்திட் டோன்றான்
யாழினைப் பழித்த சொல்லி யாரது நாத னை
வாழியவ் வீசன் றன்னை வளமுடன் காண்க வென்று. (57)

மறைகளாற் சாத்தப் பட்ட மாண்பமை கபாடந் தன்னைத்
திறந்திடச் செய்த தான சீர்கெழு செயலே போலம்
மறைப்பொரு ளானைக் காண்பான் மாபுகழ் வேதந் தன்னைச்
சிறந்தநல் விராம னோடுஞ் சேர்ந்துமே திறந்திட் டானால். (58)

வேதமே தமிழி லிந்நாள் விளங்கிட வந்த தாலே
பூதல முள்ளோர் வேதப் பொருடனை யறிந்து நாளும்
வேதத்தைத் தந்தாட் கொண்ட விமலனும் பெருமை வாய்ந்த
மாதுமை யீச னார்தம் மலரடி வழுத்து வாரால். (59)

கடல்புடை சூழு மிந்தக் காசினி தன்னி லோங்கு
மடைவுள வேத நூலை யனைவரு மறிந்த லாலே
விடையிவர் சிவனார் செய்ய விழுமிய தன்மை யெல்லாந்
தடையிலா தறிந்து நல்ல தனிச்சிறப் பெய்து வாரால். (60)

கலியையா யிரத்தி னேடு கழறுமுப் பத்தா ருண்டின்
மலிபுகழ் வயங்கு சாம மறைதனை வெளியாச் செய்தா
னொலிகடல் சூழு மிந்த வுலகினிற் சிவானந் தப்போர்
பொலிவுடன் பெற்ற ஞான புங்கவன் ருனு மாதோ. (61)

வேதத்தைத் தமிழிற் செய்த வித்தக னுகி நிற்கும்
போதமார் சிவானந் தப்பேர் பூண்டவ னினிது வாழி
நாதனு மொற்றி யானே நனிபணி இராமன் வாழி
மாதுமை யீச னிந்த மகிதல மெல்லாம் வாழி. (62)

வேத மொழிபெயர்ப்பாசிரியரின் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.



திருவொற்றியூரான் அடிமை

சென்னை த. ப. இராமசாமிப்பிள்ளையவர்கள்.

श्री बन्धकपुरेश्वरपादपद्मबद्धचित्तभक्तः

श्री. त. प. रामस्वामि नामालंकृत महाशयः, मद्रपुरि.

உ

சிவகுகமயம்.

செந்திநாயகன் றுணை.

வேதத்தை மொழிபெயர்க்கச்செய்து வெளியிட்ட

ஸ்ரீமான் த. ப. இராமசாமிப் பிள்ளையவர்கள்

சரித்திரச் சுருக்கம்.

இது ஸ்ரீ சு. அ. இராமசுவாமி அவர்களால் இயற்றப்பெற்றது.

குஞ்சர வானனக் குருந்தை யீன்றருள்
செஞ்சடை வானவன் சிறந்து மேவலா
லஞ்சக தலத்தினி லழகு மிக்கது
விஞ்சிய புகழ்மிக விளங்கி நாளுந்தான். 1

பன்ன லந்திகழ் பரத கண்டத்திற்
கன்ன லம்மொழிக் கன்னி மாதர்கண்
மன்னி வாழ்தலான் மகிமை யோங்கிடு
மன்னன் சோழன்சீர் மாசில் நாடரோ. 2

இந்த நாட்டினி லிலங்கு வளனெலா
முந்தி நான்சில மொழிந்தன போகவே
யந்த மின்றியே யாகிடு மாட்சியிற்
பிந்தி நின்றதிற் சிற்சில பேசுவேன். 3

செக்கர் மேனியஞ் சிவபி ரான்றனை
மிக்க வேபுகழ் மேன்மை வாய்ந்துத
மொக்க யாருமிவ் வுலகி லில்லெனத்
தக்க மாதவர் தழைத்த நாடிதே. 4

குண்டைநெற் குவையெலாங் கூறு பூதங்கண்
மண்டியே நம்பிக்கு வாரிச் சேர்த்திடப்
பண்டிட மாயதிப் பரந்த நாட்டிடைக்
கண்டிட லாகுமாற் கமலை யென்றரோ. 5

ஈசற்கா நெல்தனை யெடுத்து மாந்திய
நேசமார் சுற்றத்தை நினைத்தி டாமலா
வேசமாய் வாளினால் வீசிக் கொன்றிடு
மாசில்கோட் புலியவர் வாழ்ந்த நாடிதே. 6

மாறனுர் யாகத்தின் மலைகொள் வில்லிதான்
கூறிடும் வேதத்தைக் குக்க லாக்கியே
பேறுடைத் தேவர்கள் பின்ரெு டார்ந்திட
வீறுடன் வந்ததும் விளம்பிந் நாட்டரோ. 7

சோழன்ற ஞட்டது தொல்சி றப்பெலா
மாழி சேர்புண லளவின் மிக்கது
வாழியம் மாட்சியை வருத்துக் கூறிடிற்
பாழியம் புராணமாய்ப் படர்ந்து போகுமால். 8

வேறு.

இந்நல நாட்டினிடை யிலங்குமெழி றனிற்சிறந்தே
யந்தமுள பதியொன்று வமைந்துநனி விளங்கிடுமா
லுந்துபுக ழுலகோர்க ளுரைப்பரதன் பேரதனைத்
தந்தியுரிக் கடவுளுறை தஞ்சைநக ரெனப்புகழ்ந்தே. 9

தஞ்சனெனு மசுரனவன் றழைத்திருந்த தன்மையினற்
றஞ்சாவூ ரெனுநாமந் தரணிதனிற் ருனவிரு
மிஞ்சுபுக ழிந்நகரின் மேன்மையெலாங் கூறுதற்கு
வஞ்சுவனற் பணிகளுடை யரசனவன் ருனுமரோ. 10

விரிந்தபுகழ்த் தஞ்சையுடன் விளங்குமொரு தலமாகும்
பரந்தசிறப் பதனலே பாருறைவோ ரநுதினமுஞ்
சொரிந்துமலர் பணிந்தேத்தத் துங்கமதிக் கடவுளுறை
கருந்திட்டைக் குடியென்னுங் கனமிருந்த பதியதுவும். 11

பணியணிவோ னுமையோடு பரிந்தமரு மித்தலமே
மணிமுத்த நதியென்னும் வடவாருேர் புடைசெல்ல
வணிமிக்க விண்ணுறு மடித்தொருபாற் செலுமிதன்சீ
ரெணிமிக்க வியம்புதரு னெவர்க்குமரி தாகிடுமால். 12

சந்திரசூ ரியர்க்கிருந்த சாபமதுந் தானகலக்
கந்தவே டந்தையவன் கருணைதனைப் புரிந்ததுவு
மந்தமினற் புகழோடு மவிர்ந்துநனி விளம்பவரு
மிந்நல தலமேயென் றியம்புவரா லறிந்தோர்கள். 13

கலிகாலச் சோழனவன் கருங்குட்ட வியாதியின்
னலியுங்காற் றுருவாச நற்றவன்ரு னுங்கடைந்து
பலிகாவ லன்புரியப் பரிந்துமிகப் புகழ்ந்துநினை
நலிகொடு நோய்தானகல நடப்பாய் கரந்தையென. 14

பின்னர்சிவ னருளாலே பேசுகலி காலனவன்
கன்னன்மொழி யுமையோடுங் கண்ணுதலார் தானமர்ந்த
வுன்னுபுகழ்ச் சமிவனமென் றுயர்ந்தபெரு மித்தலத்தை
யின்னலது தானகல வினிதுவந்து பொருந்தியரோ. 15

பிரகாா யகியோடு பெரிதமர்ந்து தானருளு
மூரகபணி யணிந்தோன்ற னுயரடியைப் போற்றிசெய்து
வருகொடுநோ யகன்றிடவே மகிழ்ச்சியெனுங் கடல்படிந்து
கருவேல வனமழித்துக் கருதுதிட்டைத் தானெழித்து. 16

அருந்ததியி னுடன்வசிட்ட னமர்ந்தருளு மிப்பதியிற்
பொருந்துதிருப் பணிகண்மிகப் புரிந்தருளுந் தன்மையினு
லிருந்தவரும் விரும்புமிந்த வினியபுகழ்ப் பெரும்பதியைக்
கருந்திட்டைக் குடியென்று வுலகோர்கள் கழறுவரால். 17

இக்குடியிற் புகழேந்தி யினிதுபிறந் திலங்கியுள
வக்குடியாஞ் சோழியவெள் ளாளருடை யருங்குடியின்
மிக்கபுகழ் மேன்மைதனை மேதகவே பெற்றவனும்
பக்குவர்கள் கூறுபுகழ்ப் பஞ்சநதத் தனிப்பெயரோன். 18

அன்னான்றன் மனைக்கிழத்தி யாயமைந்த காரிகைதான்
மின்னேவென் னிடையுடையாண் மெல்லியர்க்குப் பூஷணமாம்
பொன்னுமச் செந்திருவைப் புறங்கண்ட விவடனக்குச்
சொன்னார்க டிருப்பெயர்தான் சுந்தரத்தம் மாளென்றே. 19

இலங்குசிலை வில்லியின்ற னிருபாதப் போததனைக்
கலங்கவிலா தெக்காலுங் கருத்ததனி விருத்திமிகத்
துலங்கிடுநற் புகழுடைய சுதனையரு ளெனப்போற்றி
மலங்கவிலா தெப்பொழுது மனமதனிற் கொண்டிவர்கள். 20

இல்லறமா நல்லறத்தை யினிமையுட னடத்திடுங்கா
லல்லலறப் பாவையொன்றை யளித்தருளி யதன்பின்ன
ரெல்லவன்போற் புகழதனி னிலங்குமொரு மைந்தனைத்தா
னல்லவர்க்குச் சிவபெருமா னல்கியருள் செய்தனனால். 21

தோன்றுமிந்தக் கான்முளையாந் தோன்றலுக்குத் திருப்பெயர்தா
னீன்றவர்கள் இராமனென வினிமையுடன் சூட்டிமதித்
தான்றநல கல்விதனை யடைந்தவனு மிளிர்ந்திடவே
சான்றவர்தம் பால்விட்டுச் சதுராக வளர்த்தார்கள். 22

வேறு.

பின்னர்த் தம்பி யொருவ னோடு பிறந்த நல்ல தங்கையு
மின்னும் வானி லொளிரு கின்ற மேன்மை கொண்ட மாமதி
யென்னு மாறு வளர்ந்து மிக்க வினிதி னோடு மேவுகால்
சென்னை யென்னு மூரை நாடிச் சேர்ந்தி ராம சாமிதான். 23

கயிலை யாளி கழல்க டன்னைக் கருத்தி லன்பொ டிருத்தியே
முயல லாகும் வழிக டன்னின் முயன்று வாழ்க்கைக் காகிடும்
பயனை யீயும் பொருள்க டன்னைப் பாரி வீச னருளதாஞ்
செயலி னாலே சேர்த்து நன்கு சிறந்த செல்வ மெய்தியே

இல்ல றத்திற் காகு மில்லா ளின்ன ளென்று வள்ளுவர்
சொல்லி வைத்த விலக்க ணத்தைச் சொந்த மென்னக் கொண்டவோர்
நல்ல ளாமீ னும்பா ளென்னு நங்கை தன்னை நாடியே
பல்லி யங்க ளார்ப்ப மன்றல் பண்பி னோடு கொண்டவன். 25

வெண்ணை தன்னை யுரலி லேறி விருப்பி னோடு கொண்டருள்
கண்ண னிந்த வுலகு தன்னிற் கருணை யோடு வந்ததா
லெண்ண நின்ற நன்னா ளென்னு மினிய நல்ல வோரையிற்
றிண்ண மாகச் சிவகு மார னென்னுஞ் சேயைப் பெற்றவன். 26

கருணை தன்னில் வானி லுள்ள கார்க டம்மை வெல்லுவா
னருளை நாடி யண்ண றன்க ணன்பு தன்னைச் செய்வதி
லுருகு கின்ற வுறுவர் கூட்ட மகல மாக வோட்டுவான்
பெருகு மின்னோன் பத்தி தன்னைப் பேச யாருங் கூடுமோ. 27

பூசை யாதி செய்வ தோடு புராரி தொண்டர் தம்மையு
நேச மாகப் போற்றி நின்று நீளு மன்பி னோடு தா
னாசை யாக வன்ன மூட்டி யகங்க ளிக்கு நெஞ்சினான்
பேச லாகு மோவி வன்றன் பெற்றி தன்னை முற்றுமே. 28

தன்னை யாயு தத்தி னாலே தாக்கு கின்ற போதினு
மன்னு மீசர் பாத மீது வைத்த மிக்க வாஞ்சையோ
டுன்னு மந்தத் தீய ருக்கு வொன்றுந் தீமை செய்கிலா
னென்ன வென்று செப்ப லாகு மிவன்றன் கருணை தன்னையே. 29

அருந்த வத்தா லடைந்த சேய்க ளந்த நாடு போதினும்
பெருந்த வத்தோர் போற்று மொற்றி பெரிது நாடிச் செல்லுமா
றிருந்த வின்னோன் பெற்றி நாடி லிந்த நாளிற் றிங்களூ
ரிருந்த வந்தப் பூதி யென்றி யம்ப வென்ன சங்கையே. 30

திங்க ளூரப் பூதி போன்று செய்ய வொற்றி யூரில்வாழ்
மங்கை பங்க னாமங் தன்னை மறந்தி டாதெப் பொருளினுந்
தங்கு மாறு சாற்று கின்ற தன்மை வாய்ந்த சீரினா
னெங்கு நாமி வன்றன் சீரை யெடுத்துக் கூற லாவதே. 31

மாது பாகர்ப் போற்று கின்ற மாண்பி னாலு மகிமைசேர்
சாது சங்கப் பத்தி யாலுஞ் சாற்று கின்ற மாட்சியி
லோது தொண்டர் புராண நூலி லுரைக்கு மாறு பத்தினோ
டேது வான மூவ ரோடு மெண்ண லாகு நான்கதாய். 32

வேத நூலி னந்த மேய விழுப்ப மிக்க பொருளையுங்
காத லோடு கண்ட நல்ல காட்சி யாள னிவனைநா
மோது மிந்தக் கலியு கத்திற் சனக னென்ன வுரைத்திடி
லேது மீதிற் கோதுவென்ப தெள்ளி னளவு மில்லையே. 33

வேறு.

உய்யநல் வழியா தென்னி லுயர்திரு வொற்றி யூர்வாழ்
செய்யநற் சிவன்றன் பாதம் புணையெனச் சிந்தை கொண்டு
மையலாம் வாழ்க்கை தன்னை மதித்திடா தெந்தநாளுஞ்
செய்யநன் மலர்க ளேவிச் சிரம்பணிந் தேத்து வானால். 34

ஆதிமா புரிய தென்னு மரும்பெரு மொற்றி யூராண்
மாதுமை யிடத்திற் கொண்ட மலைவளை வில்லி பொற்றா
ளேதெதெப் படியா ஞலு மேத்துதன் மறக்கி லாதா
னுதனை நன்கு கண்ட நல்லவ னிவனே யாமால். 35

உரமச னந்தி மாயோ னுரைத்திடு மயனின் னோர்க்குச்
சிரமலி கங்கை யாளன் சிறப்புட னடனக் காட்சி
தரவரு மகிமை யுள்ள தனித்தல மென்று கொண்டு
பெருந்திருப் பணிக ளெல்லாம் பெரிதுமே புரிகு வானால். 36

சந்திர னாதி சேஷன் சாற்றுவா சுகியி னோடு
வந்தவான் மீகி தானும் வண்புகழ் வீடே யெய்தத்
தந்ததித் தலமே யாகுந் தரும்பணி யாருஞ் செய்தா
லந்தமில் வீடே யாமென் றரும்பணி புரியா நிற்போன். 37

வேணியின் மதியை வைத்த விமலனித் தலத்தி லேதான்
பாணினி யென்று நாமம் பகர்ந்திடு மொருவன் வேண்ட
வாணியாம் வேதந் தன்னை யன்புட னருளிச் செய்து
வேணவா செய்கென் றிட்டான் வியாகர ணத்தைத் தானும். 38

வானக முள்ள வைந்து வளம்பெறு தருக்க டாமுந்
தானமர் வரங்க ளெல்லாந் தருதியென் றொருவற் போற்றி
மானமர் கரத்தோன் றன்பான் மகிழ்ச்சியோ டடைந்த சீருந்
தானவிர் தலமு மீதே தாணியி லாகு மாலோ. 39

பொதியநல் வரையின் மேவும் புகழ்மிகு குறுமு னிக்கு
விதுவணி யீச னிந்த விறற்றிரு வொற்றி யூரின்
மதுமொழி யுமையி னோடு மணம்புரிந் திட்ட நல்ல
புதுமணக் கோலந் தன்னைப் புலப்படக் காட்டி னானல். 40

கன்னியோ டுறையு மிந்தக் கடவுளாந் தியாக னென்னும்
பன்னகா பரணன் பாதப் பனிமலர் தன்னை நாளும்
பன்னுமாந் தாதா வென்போன் பன்னியோ டடைந்து போற்றி
நன்னரா மிளமை தன்னை நல்கிடப் பெற்றிட் டானல். 41

மறையவ ரிருவ ரிந்த மாதலத் தியாகன் றன்மே
லறைவட மொழிச்சு லோக மமைத்துவந் திடவே நல்ல
நிறைமிகு மாணிக் கத்தை நினைத்தவா கொடுத்த தாலே
யறைகுவர் தியாக னென்ன வகிலத்தோர் நாளுந் தானே. 42

சமயநற் குரவ ரீந்த சதுர்மிகு தேவா ரங்க
ளமைவுடன் கொண்ட தன்றி யருட்பிர காச ரென்னு
நமதுநல் விராம லிங்க நற்றவன் புகழ்ந்து பாடுங்
குமைவிலாப் பாக்கண் மிக்கக் கொண்டதிப் பதியே யாமால். 43

மட்டினற் புகழ்சேர் தாயு மானவர் தம்மா னன்கு
பட்டினத் தடியைப் போலப் பாரெலாந் துறந்தோ ரில்லென்
றொட்டிய வன்பி னோடு முரைத்திட நின்றோன் றானுங்
கிட்டியே சமாதி யாகக் கிளர்ந்தது மொற்றி தானால். 44

தொண்டைமான் பணிக டன்னைத் தோமறச் செய்த விந்த
மண்டிய புகழ்சே ரூரில் வடிவுடை மாதோ டோங்கு
மண்டர்நா யகற்கு மேலா மரும்பணி மிகவு மேதான்
கண்டிடு சிறப்பு வாய்ந்தோன் கனத்தையார் கழற வல்லார். 45

வேறு.

இனிதுசிவ னெழுந்தருளு மிப்பதியும் வேறுபல விடங்க டாமு
நனிதெரிந்து திருப்பணியை நடத்திமிகப் பெருமைதனை நன்கு பெற்று
னனிதெரிவீ ரத்தலங்க ணடராசர் கோயிலுடன் நமது சைவத்
தனிமகிமைச் சுந்தரர்க்குச் சிவபெருமான் றடியதனைத் தந்தாட் கொண்ட. 46

பெருமைமிகு வெண்பாக்கப் பெருந்தலமே முதலான பீடு சான்ற
வருமைமிகு மிடங்களுமா மற்றுமினி வருங்கால மநேகஞ் செய்வா
னொருமையினி லெழுமையையு மொழித்திட்ட விவன்றனது வுயர்ச்சி மிக்கக்
குருமைதனை யெடுத்துரைத்தல் குவலயத்தி லெவர்க்குமரி தாகு மாலோ. 47

இங்குயா முரைத்தவிந்த வெழிற்புகழ்க ளெல்லாமுந் தனதாய்க் கொண்ட
புங்கமுடை இராமன் முக்தாநந்த வடிகளெனும் புனிதன் கூறப்
பங்கமினற் றமிழுலகில் வடமொழியாஞ் சமஸ்கிருதம் பாவு மாறு
திங்களணி திருவொற்றி யூரான்றன் றிருப்பெயரே திகழச் சூட்டி. 48

வடமொழிக்கல் லூரியொன்று வளம்பெறவே நிறுவியங்கு வந்து சேர்ந்த
திடமுடைய துறவிகட்குஞ் சிறுவர்கட்கும் வேண்டுவன திருந்தச் செய்தே
யிடமுதலாம் வசதியெலா மினிதமைத்துத் தாதையென வியம்பக் காத்துக்
கடமையுட னவரையந்தக் கலைதனிலே பயிற்றுகின்ற கருணை யாளன். 49

ஓங்குபுக ழிச்செல்வ னிவ்வண்ண முரைத்திடற்கு மெண்ணு தான
பாங்குபெறு தருமமெலாம் பாரதனிற் செய்துமிகப் பரவு காலை
தேங்குபுகழ் வடமொழியிற் றேர்ச்சிமிகப் பெற்றசிவா னந்த னென்னும்
வீங்குபுகழ்த் துறவியிந்தச் சென்னைதனில் விரவிடவே யினிது கண்டு. 50

முன்னரந்தச் சிவாநந்த முனிவரனை யுபசரித்து முனைந்து போற்றிக்
கன்னன்மொழி யுமைபாகன் காசினியோர்க் கருள்வேதக் காட்சி நூலை
மன்னுபுகழ் நந்தமிழின் மொழிபெயர்த்தே யருள்கவென மகிழ்ந்து கூறிப்
பன்னு மவற் கெலாநலமும் பரிவினுடன் செய்துமிகப் பண்பு செய்தான். 51

அங்கவன்கூ றியபடியே யண்ணலருள் வேதத்தை யன்பி னோடு
பங்கமினற் றமிழ்மொழியிற் பான்மைபெற மொழிபெயர்க்கும் பருவந் தன்னிற்
சங்கரமா தவன்சரிதந் தன்னைமொழி பெயர்த்துளதாய்ச் சாற்றக் கேட்டே
யிங்கதனை யச்சேற்றி யித்தமிழ்நாட் டினிலினிது விளங்கச் செய்தான். 52

நாதனருள் வேதமது நாளுமொழி பெயர்த்துவர நன்கு கூடி
யேதமற வச்சுவா கனமேற்றி யெல்லோரு மினிது காண
வோதுமிந்தத் தமிழுலகி லுலவிவா லாயிற்று வுவப்பி னோடே
போதமருள் வேதமிந்தப் புவியதனி லெஞ்ஞான்றும் பொலிந்து வாழி. 53

வேதத்தைத் தமிழதனில் விளங்கிடவே கொண்டுவந்த வெற்றி மிக்க
நாதனெனும் இராமசா மிப்பிள்ளை நானிலத்தில் நாளும் வாழி
யீதைமொழி பெயர்த்தளித்த சிவானந்த யதீந்திர னினிது வாழி
மாதுமையைப் பாகமுடை மாதேவ னோடுலகம் வாழி மாதோ. 54

பதிப்பித்து வெளியிட்ட த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களின்
சரித்திரச் சுருக்கம்
முற்றிற்று.

ஓம்

வேதாகம ஞானவிநோதாய நம:.

சாமவேத மொழிபெயர்ப்பு

முன்னுரை.

ஈண்டு, கடவுள் என்னுஞ் சொல், எல்லாவற்றையும் கடந்தவன், அல்லது செலுத்துகின்றவன் என்னும் பொருளை யுணர்த்தலின் அக்கடவுள், இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே' என்ற சுருதி வாக்கியத்தைத் தழுவி, இவன் அவன், இவ்வுருவுடையான் அவ்வுருவுடையான், இத்தன்மையன் அத்தன்மையன், என்பன முதலியவற்றால் எடுத்துக் காட்டொணாது நிறைந்து நின்ற அறிவுருவானவன் என்பது, சமயம், சாதி, குலம், என்பன முதலிய கட்டுப்பாடுகளைக் கடந்து உண்மையை யுற்று நோக்குவோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்ததாம். இதுவே கடவுளுக்கு இயைந்த மதமுமாம்.

அக்கடவுள், நம்மனோர்க்குக் கண்கூடாகாதவனெனினும், அதாவது அருவனா யிருக்கின்றானெனினும் தனது அருட்சத்தி வலியால், அருவாய்க் காணப்படாத பசுவின்பால், முலைப்பால், கண்ணீர் முதலியவைகள் உருவாய் வெளிப்பட்டுத் தோன்றுமாறு அன்பின் பெருக்கே நிமித்தமாய் அருட்டிருமேனி கொண்டெழுந்தருளுவன், என்பது வேண்டாதவர்களுக்கும் முடிவில் வலிய வேண்டற்பால தொன்றாம்.

மற்றும், அக் கடவுள், தமது சத்தியால் பல்வகை நிமித்தங்களைக் கொண்டேனும், நேராகவேனும், உலகை, ஆக்கி, அளித்து, அழித்து, மறைத்து, அருளுவன் என்பதும் முடிவில் உடன்படற்பாலதாம்.

அவ்வாறு தோன்றிய வுலகமும், சொல்லும், பொருளுமென இருகூறு புள்ளதாமென்ப. அவற்றினும், சொல் வடிவாய் நிற்பது சத்தியென்றும், பொருள் வடிவாய் நிற்பது சிவனென்றும் சுருதிகள் முழங்குகின்றன. அதினும், ஆன்றோர் சொற் பிரபஞ்சமே சிறந்ததாமென்பர்.

இங்ஙனம் பொருள் வடிவாகிய சிவன், அருகன், புத்தன், அல்லா, ஏசு, அரி, அரன் என்பது முதலிய பல்வகைப் பெயரை யேற்றுப் பல்வகைச் சமயத்தவர்களும் வழக்கிட்டுக்கொண்டு வழிபடுமாறு நிற்கின்றனன்.

இவ்வாறே, சொல் வடிவாகிய சத்தியும், இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் வேதமாகவும், சம்சார தரிசனம், தத்துவாவபோதம், சமத்தான பராமரிசம், வித்தியாப் பிரபோதம் எனவும், திரிபிடகம் எனவும், கொரான் எனவும், பைபிள் எனவும், கிரந்த சாய்பு எனவும் பெயர்பெற்றுப் பல்வகைச் சமயத்தவரும் தத்தமது வேதமெனக் கொண்டு போற்றுமாறு நிற்கின்றது என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பல்வகைப்பட்ட பெயர்களை யுடைய வேதங்கள் முடிவில் ஒரு பொருளையே கூறுவனவாமாயினும் இடையில் மாறுபட்ட பொருள்களைக் கூறுவனவாகின்றன. அதுவும், சிற்றறிவுடையார்களின் நோக்கினாலாமென்க.

இத்தகைய நூல்களனைத்தும் கடவுளின் அருளினாலேயே எழுந்தன. ஆனால், சிலர் அவ் வேதம் நித்தியமாய் அனாதியாய் உள்ளதென்பர். சிலரோ, நேரே பரமேசுரன் அருளியதென்பர். சிலர் கடவுளின் அருள் பெற்றுக் கடவுள் நிலையை யடைந்தவர்களால் அருளப்பட்டதென்பர். மற்றும், பலர் பலவாறு கொள்வர். கொள்ளினும் அனைவரும் பொதுவாகச் சத்தியத்தைக் கூறுவதே வேதம் என்று அன்பு பாராட்டி வருகின்றனர் என்பதில் எவருக்கும் யாண்டும் எப்போதும் இழுக்கொன்றும் இல்லை.

மற்றோ, வேதந் தோன்றிய விஷயத்திலோ, பல்வகை விவாதங்களுண்டு. ஏனெனின்? அவ் விஷயத்தில் அபிமானம்பற்றிப் பலவகைப் புனைந்துரைகள் காணப்படுகின்றனவாதலின் என்க.

அற்றாகலினன்றே,

'இடப தேவரின் அருளால் எமது வேதம் வெளிப்பட்டது' என்று கூறுகின்றனர் ஒரு சாரார்.

'எமது வேதத்தை, எமது கடவுள் புறு வடிவங்கொண்டு உபதேசித்தருளினர்' என்பர் மற்றொரு சாரார்.

மற்றொரு சாரார், 'எமது வேதம், சீனாய் மலையில் எமது கடவுள் மேகமாய் நின்று ஒரு பெரியாருக்கு உபதேசித்தருளியது என்றும், பின்னர், 'கடவுள் வடிவாகிய புறுவால் ஞான நீராட்டப்பெற்ற ஒரு பெரியாரால் பலவகையாய் விரிக்கப்பட்டது' என்றுங் கூறுவர்.

தெய்வப் புலமையால் வெளிவந்தது எமது வேதம் என்பர் மற்றொரு வகையார்.

அருளால் வந்த அருட் பதிகங்களே எமது வேதம் என்பர் இன்னுமொரு சாரார்.

ஆரியர்களோ, 'பரமேசுரனுடைய மூச்சுக்காற்றுப்போல் வெளிப்பட்டது வேதம்' அது அனுதியாகிய சுயம்பு என்றும்,

சூரியன், அக்கினி முதலியோர்கள் அவ் வேதத்தை விளங்கச் செய்தார்களென்றும்,

வேதம் இருடிகளா லியற்றப்பட்டதல்ல, மற்றே, இருடிகளால் கண்டு பிடிக்கப் பெற்றதென்றும்,

முன்னர் இந்திரனுனவன் விருத்திரனை மூன்றுமுறை கொல்ல விரும்பினன், அப்போது விருத்திரன் பயந்துகொண்டு, 'என்னுடைய வன்மைக்குக் காரணமாகிய மூன்று வேதத்தையும் நினக்குத் தருகிறேன்' என்று கொடுத்தனன் என்றும், இதுவே அனைவராலுங் கொள்ளற்பாலது என்றுங் கூறுகின்றனர்.

இனி, வேதம் எத்தன்மைத்தாகவேனும் இருக்குக. அஃதிலெமக்கோர் வழக்குமின்று. மற்றே, அவ் வேதங் கூறுகின்ற பொருள்கள் எத்தன்மைகளை யுடையவைகள்? என்று மக்கள் அனைவரும் உணர வேண்டுவது இன்றியமையாததா மென்பதே எமது கருத்து. அவ் வேதம் நம்மனோர்க்கும் இனியவற்றைக் கூறுமெனின், யாமும் அதுவே உண்மையெனக் கொண்டொழுகி வரல்வேண்டு மென்பதில் விவாதம் இல்லை.

மற்றும், ஈண்டு ஒரு நூலானது உண்மையைக் கூருவிடின், அது பரமேசுரனுலோ, அல்லது பெரியாராலோ இயற்றப்பட்டதாமெனினும், பல நூல்களும் எடுத்துப் போற்றுவதாமெனினும், எங்கும் புகழ் பெற்றிருப்பதாமெனினும், அளவிட முடியாததாமெனினும், மற்றும், பலவகை நிமித்தங்களாமெனினும், அந் நூலானது அனைவராலுங் கொள்ளத் தக்கதாமென்பதும், ஏனைய நூல்கள் தள்ளத்தக்கன வென்பதும் பேரறிவாளரின் கொள்கையன்று. மற்றே, எல்லா வுயிர்களுக்கும் உறுதிப் பயனைக் கூறலாகிய உண்மை கூறலானே ஒரு நூல் அனைவராலுங் கொள்ளற்பாலதா மென்பதே பேரறிவாளரின் கொள்கையாம். இதுவே முறையாம். இதுவே எமது கொள்கையுமா மென்க.

இனி, புக்கண மன்னனையும், வித்தியாரண்ய முனீசுரரையும் திருவருள் கூட்டி வைத்தது போன்று, சென்னையம் பதியின்கண்ணே த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களின், திருவொற்றியூரான் வடமொழிப் பள்ளியில் தலைமை வகித்துள்ள முக்தானந்த சுவாமிகள், அன்பு காரணமாய் என்னையும், ஷெ பிள்ளை யவர்களையும் ஒன்று கூட்டிவைக்க, அப்போது திருவொற்றியூர் தியாகராசப் பெருமான் ஷெ பிள்ளை யவர்களின் திருவுள்ளத்திலிருந்து "வேதம் வெளிவரில் அறத்துறை கடந்து மறத்துறை நடக்கும் மாக்களனைவரும், நன்னெறி யுய்வதற்கு ஏதுவாகிய மறைப்பொரு ளனைத்தையும்

உணர்ந்து, மறை முதல்வனை மறவாமல் அடைந்துய்வர்" என்பதை அறிவுறுத்தருள, அவ்வாறே வடமொழியிலுள்ள வேதங்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து உலகில் பரப்பல் வேண்டுமென்று பிள்ளையவர்களும் பேரன்புடன் வற்புறுத்தி என்னைக் கேட்டுக்கொள்ளவும், அங்கு மற்றுமுள்ள பெரியார்களும் அவ்வாறே செயல்வேண்டுமென்று ஆசிர்வாதஞ் செய்தார்கள்.

இங்ஙனமே, எமதுள்ளத்தில் ஒரு விளக்காய்த் திகழும் எமது முருகப் பெருமானுர் திருவருளும், இதுவும் தமிழுலகிற் கொரு பெரும் பணியென்று என்னை உற்சாகப்படுத்தி யருளவும், யாம் வேதங்களை மொழி பெயர்க்கப் புகுந்தனம். புகுந்து, கடலைக் கையால் நீந்தல் போன்று பலவகையான வேதபாடியங்களையும், ஆங்கில மொழி பெயர்ப்புகளையும் ஆராய்ந்து, இனிது நோக்குங்கால், மகீதரர், உவட்டர், இராவணன் முதலியோர்களாற் செய்யப்பட்ட வேதபாடியங்களும், தயானந்த சரசுவதியார் செய்த பாடியங்களும், ஒருவாறு காலத்திற்கேற்பவும், சமயக்கொள்கைகட்கு ஒப்பவும் பொருத்தமுடையவைகளேயா மாயினும், சாயணர் பாடியமே, எல்லாவற்றினுஞ் சிறந்து விளங்குவதானும், பேரறிவாளர்களால் அதுவே கைக்கொள்ளத் தக்கதாமாதலானும், நான்கு வேதங்கட்கும் முடிவுற்றிருத்தலானும், பலவகைக் கொள்கைக்கும் இனிது நோக்கில் இடங்கொடுப்பதற் குரியதா மாதலானும், அச் சாயணபாடியத்தைத் தழுவியே இச் சாமவேதத்தை மொழி பெயர்த்துள்ளேம். எமது அறிவிற் கெட்டியவாறு அந்துவயமும், பதவுரையும், ஆங்கிலத்தாரின் குறிப்பும், பாடபேதங்களும் எழுதி யிருக்கின்றோம்.

ஸ்டீவன்ஸ் என்னும் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சாமவேத மூலத்தை, சாயணபாடியத்துடன் ஒத்திட்டுப்பார்த்து என்னோடிருந்து உசாவி அவ் வாங்கில மொழி பெயர்ப்பின் கருத்துக்களை இதிற் குறிப்பிடுமாறு உதவி புரிந்த டாக்டர் ராசா பகதூர் நாயகர் அவர்கட்கு மிகவும் நன்றி செலுத்துகின்றேம்.

தொடக்கத்திலிருந்து முடிவுவரை வடமொழிப் பகுதியின் புரூப் பார்த்து உதவிய மீமாம்சை சிரோமணி, அ. கோபால் மேனன் அவர்கட்கும் நன்றி செலுத்துகின்றேம்.

மற்றுப், வேதங்களுள் இருக்கு வேதமே முதலாவதாயிருக்க, ஈண்டுச் சாமவேதத்தை முதலில் மொழி பெயர்க்கப் புகுந்ததென்னையோ வெனின்? அதைக் கூறுதும்:—"இருக்கு வேதமானது மற்றைய வேதங்கட்கும் காரணமானதாலும், இவ் வேதத்திலுள்ள மந்திரங்களை பெரும்பாலும் மற்றைய வேதங்களில் வருவதாலும், ஆராதனைக்குரியதா மாதலானும், மிதுயா யிருத்தலானும் இருக்கு வேதமே முதலாவதாகும்" என்பர் சிலர்.

"வேதங்கள் பெரும்பான்மை வேள்விகளையே விரித்துக் கூறுதலால் வேள்வியின் வடிவம் முடிவுபெற்ற பின்னரே மற்றைய வேதங்கட்குப் பிரயோகஞ் செய்தல் செல்லுதலானும், அத்தகைய வேள்வியை அங்கத்துடனும், உபாங்கத்துடனும் எடுத்துக் கூறும் வகையாலும், 'அநுட்டான முறையில் எசுர் வேதமே முதலாவதாம்' என்று கொண்டு சாயணரும் முன்னர் இதற்கே பாடிய மியற்றியுள்ளதாலும், எசுர் வேதமே முதலாவதாம்" என்பர் சிலர்.

ஆயினும், மற்ற வேதங்களிற் கூறியுள்ள தேவதைகள், வேள்விகள், வேள்விக்குரிய சாதனங்கள் முதலிய அனைத்தையும் துதிப்பது இச் சாமவேதமேயாம். அப்படிப் போற்றுவிடின் ஆராதனை முதலியவைகள் பயனற்றவைகளா மாதலின் பொற்பூடணங்கட்கு மாணிக்கம் பதித்தல்போன்று பிறவற்றினும் சிறப்புற்றதாகித் துதி வடிவமாகவே இச் சாமவேதம் இருத்தலின் இதுவே முதலாவதாகும்; இவ்வகையில் இதனை முதலாவ தென்பதில் யாதொரு இழுக்குமில்லை யென்க.

அற்றாகலினன்றே பகவற்கீதை யென்னும் பிரபல சுருதியின்கண் கண்ணபிரானும்,

"வேதாநாம் சாமவேதோஸ்மி" அதாவது, "வேதங்களுக்குள் சாமவேதம் யானு யிருக்கின்றேன்" என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார். இவ்வாறே எல்லா நூல்களும் "பரமேசுரன் சாம கானப்பிரியன்" என்று முழங்குகின்றன. இதைச் சாமவேத ருத்திரியிற் காண்க.

இதைத் தழுவியன்றோ சிவத்தொண்டில் வன்றொண்டராய் விளங்கும் நமது த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்களும் சாமவேதத்தையே முன்னர் மொழி பெயர்க்க வேண்டுமென்று எம்மைக் கேட்டுக்கொண்டதூஉமென்க.

மேற் கூறியுள்ள வகைகளைக் கொண்டு யாம் சாமவேதத்தை முதலாவதாக மொழி பெயர்த்துள்ளோம். மேலும் எசுர் வேத முதலியவைகளையும் மொழி பெயர்க்க வேண்டுமென்னும் ஊக்கம் எமக்கும் பிள்ளையவர்களுக்கும் முன்னினும் மிகுதியாயிருத்தலின் அவ்வாறே திருவருளுங் கூட்டிவைக்குமென்று நம்புகின்றோம்.

ஆரிய வேதங்களைத் தமிழில் மொழி பெயர்க்கில் தமிழுலகத்திற்கு எவ்வாற்றால் பயனுமெனிலோ? வேதப் பொருளை உள்ளவாறுணர்ந்து உய்தலே பெரும் பயனுமென்க.

மற்றும், வேதப் பொருளை யுள்ளவாறு காணல் மகரிஷிகளுக்கும் மிகவும் அரியதாமாதலின் 'நீ உள்ளவாறு காணல் எவ்வாறும்' எனின்? அஃதுண்மை. ஆனால் முன்னோர்கள் பலரும் வேதத்திற்குப் பொருளுணர்ந்து, பாடிய முதலியவற்றை இயற்றியுள்ளாராதலின் அதைத் தழுவியே யாமும் இயன்றவரை தமிழில் பொருளெழுதுதல் ஒருவாறு கூடுமென்றே துணிந்து எழுதியுள்ளோம்.

அங்ஙனமாயினும், வேதங்களிலுள்ள சொற்களுக்குப் பொருள் கூறல் மிகவரிதாம் என்பது தேற்றம். என்னை? வேதத்திலுள்ள சொற்களும் பொருளும் மிக மறைந்து கிடத்தலின் என்க.

வேதத்திலுள்ள சொற்களுக்கு உள்ளவாறே பொருள் கூறமுடியா; ஏனெனில்? இலக்கண வழுவாய சொற்கள் மிகுதியாய் வழங்கப்பட்டிருத்தலின் என்க. அற்றாகலினன்றே வேதங்களுக்கு அரிய பெரிய பொருளைக் கண்டுபிடித்த நிருக்த நூற்காரராகிய யாஸ்கமுனிவரும், "இவ்வேதத்திலுள்ள சொற்களுக்கும் பொருள் கோடல் மிக வரியதாமாயினும், சொல் பொதுவாதலின் பொருளுடையன" எனவும், "இதிற்சில சொற்களுக்குப் பொருள் கூறல் முடியவில்லை தேடினுங் கிடைக்கவில்லை; அது எனது பிழையல்ல. மற்றோ, வேதங்களில் அத்தன்மைய சொற்கள் வழங்கப்பட்டிருத்தலின்" எனவுங் கூறியுள்ளார். இதனால், சொல்லினும் பொருளினும் வழூஉக்கள் வரின் ஒரு தலையாய் அவை எமது குற்றமே யென்று கொள்வதற்கிடமில்லை யென்பது முணர்க.

மற்றும் தமிழுலகிற்கும், ஆரிய வேதங்கட்கும் உள்ள சம்பந்தத்தை, "தமிழும் ஆரிய மறையும்" என்ற இந்நூல் உபோற்காதத்திற் காண்க. இதனால் ஆரியமுஞ் செந்தமிழும், ஆரியரும் தமிழரும், நீண்ட நாளாய்க் கலப்புற்றிருத்தல் நூல் வழக்கானும் உலக வழக்கானும் பெறப்பட்டதா மென்றுணர்க.

ஈண்டு, நமது, த. ப. இராமசாமிப் பிள்ளை யவர்கள், சிவாலயங்க ளியற்றல், முக்கரணங்களாலும் சிவனை வழிபடல், சிவனடியார்களிடத்துப் பேரன்பு வைத்தல், அறிஞரைப் போற்றல், சமயும் வளர்த்தல், கல்விப் பள்ளி அமைத்தல், சுற்றத்தைப் பேணல் முதலிய பல்வகை அறங்களை இனிது நடத்தி வருவதுடன், தமிழ் மக்கள் மீதிருந்த பேரன்பால் வேதத்தையும் நந்தமிழ்நாடு உள்ளவாறறிந்து உய்யவேண்டுமென்ற ஊக்கத்துடன், வேத மொழிபெயர்ப்பு என்னும் இவ்வரிய பெரிய திருப்பணியைச் செய்ய முன்வந்து, அதற்கு வேண்டிய இடம் பொருள் ஏவலை இனிதளித்து முற்றுபாறு செய்த நன்றியைத் தமிழுலகம் என்றும் மறக்காதென்று நம்புகின்றோம்.

பிள்ளை யவர்களைப்போல் நந்தமிழ் நாட்டில் அறிவாளரும், திருவாளரும், கொடையாளரும், அன்புடையாரும், சிலரேனும் இருப்பரேல், தமிழ் நாடும், தமிழும், சமரச நன்னிலையும், சைவநெறியும், மற்றுமுள்ள நற்றுறைகளும் முன்னேறி வருமென்பதில் ஐயமு முண்டோ? இனிமேலாவது, நமது தமிழ் நாட்டிலுள்ள கன தனவான்கள் பெரு மனத்துடன் பொது நலத்தில் ஈடுபடுமாறு திருவருள் கூட்டிவைக்குமென்று நம்புகின்றோம்.

மேலும், பிள்ளை யவர்கள், ஆயிரக்கணக்கான தனங்களைச் செலவிட்டுப் பதிப்பித்து இச் சாமவேதத்தைத் தமிழுலகெங்கும் பரவுமாறு நன்கொடையாய் வழங்கிய வள்ளற்றன்மைதான் என்னே! என்னே!! மேலும் இவ்வாறே அரிய பெரிய திருப்பணிகளில் சிறிதும் ஊக்கங் குறையாததுடன் உற்சாக மிகுதியாமாறு செய்து பிள்ளை யவர்களின் பேரறங்கள் தழைத்தோங்க வேண்டுமென்று திருவொற்றியூரான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இங்ஙனம்:

வேத மொழிபெயர்ப்பாசிரியர்,

காசிவாசி - சிவானந்த யதீந்திர சுவாமிகள்.

முன்னுரை

முற்றும்.

ஓம்

சாமவேத
மொழி பெயர்ப்பின்
உபோற்காதம்.

வேதம் என்பதின் பொருள்.

காட்சியாலுங் கருதலாலும் உணரப்படாத வுபாயத்தை யுணர்த்துவது வேதம் என்பர். இதனானே, அலௌகிக வுபாயத்தை வேண்டுவோன் அதிகாரி என்பதும்; உபகாரஞ் செய்தல் செய்யப்படல் சம்பந்தம் என்பதும்; அலௌகிக வுபாயம் விஷயம் என்பதும்; அதன் ஞானம் பயன் என்பதும் பெற்றாம்.

மற்றும், வேதம் என்னும் பகுபதமானது பலவகையாய்ப் பொருள் தருகின்றது. அது வருமாறு:—

உ—அ—ஈ, என்னும் மூன்றெழுத்துக்களுஞ் சேர்ந்து, 'வே' என நிற்கின்றன. இது, அநேக உயிரெழுத்துக்களின் புணர்ச்சியாலானமையின், உயிர் மெய்யெழுத்துக்களை இனிமையாய் ஒலிக்கின்ற தன்மைபற்றி வேதத்தின் மந்திர பாகத்தைக் குறிக்கின்றது.

'தம்' (தம்) என்னுஞ் சொல், தா (தா) தானம் என்னும் பொருள் கொண்ட வடமொழிப் பகுதியிலிருந்து எழுந்ததா மாதலின், தானஞ் செய்தலையே (ஈகையையே) மேற்கொண்ட வேள்வி முதலிய கருமங்களைக் குறிக்கின்றமையின், இது வேதத்தின் பிராமண பாகத்தை யறிவுறுத்துகின்றது.

ஈண்டு, வேதத்தின் மந்திரபாகம் மூலம் போன்றிருப்பதாம். பிராமண பாகமோ அதன் உரை வடிவாயுள்ளதாம்.

மற்றும், 'வேதம்' என்பதனானே, அது, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைத்தா மென்பதும் பெறப்படுகின்றது.

அஃதாமாறு:—உ - அ - ஈ - தம், என நின்று, வ - ஈ - தம், எனப் புணருமிடத்து, வ - வாக்கின், ஈ - அழகை, தம் - அறிவுறுத்துதல் எனப்

பொருள் தரலின், அவ் வாக்கின் அழகும், அடி, தளை, எதுகை, மோனை, முதலியவைகளாலாய பாட்டுக்களாலன்றி அமையாதாம்; அத்தகைய பதிகங்கள் பொதுவாக எல்லா வேதங்களினு மிருப்பினும், இருக்கு வேத முழுதும் அவ்வாறான திருப்பதிகங்களால் அமைக்கப் பெற்றிருத்தலின் ஈண்டு இருக்கு வேதம் என்பது இதனால் கொள்ளக்கிடந்தமை காண்க.

அவ்வாறே, வேதமென்னுஞ் சொல்லை, வ, இ - தம், எனப் பிரித்தலுங் கூடுமாதலின், ஈண்டு, வ - அமுதம் (நீர்), இ - இச்சை, தம் - அறுத்தல், எனப் பொருள் தரலின், இப்பொருள் இயைந்தவிடத்து, நீரை விரும்புகின்ற கொடி செடிகளை யறுத்தல் என்பது திரண்ட பொருளாமாதலானும், எசுர் வேதத் தொடக்கத்திலும், 'உஷெசுவா' 'புரசங் கொம்பே! உன்னை வெட்டுகின்றேன்' என்று கூறப்பட்டிருத்தலினானும் அதையே குறிப்பாகக்கொண்டு அமைந்துள்ள எசுர் வேதமும் இதனால் கொள்ளக்கிடந்தமை யுணர்க.

அங்ஙனமே, வேதம் என்னும் அச் சொல்லையே, வ, இ - தம், எனப் பிரிக்குந் தருணத்தில், வ - அமுதம் அதாவது சோமம், இ - இலக்குமி, தம் - தனத்தை யளித்தல் என்பதும் பொருளாமாதலின், சோமரசமாகிய அவிப்பொருளை அருப்பணஞ் செய்தலையே மேற்கொண்ட சாமவேதமுங் கொள்ளற்பாலதா மென்பதும் அறிக.

இஃதொப்பவே, வ, இ, தம் என்பதற்கு, வ - வன்மை யுடையானுக்கு, இ - இலக்குமியாகிய வெற்றியை, த - கொடுத்தற்குரியது என்பதும் பொருளாமாதலின், பகைவரை வெல்லுவதற்கு உபாயங் கூறுகின்ற அதர்வண வேதமும் இதனால் கொள்ளுதற்குரித்தாய் நின்றமை காண்க

இனி, வேதம் என்னுஞ் சொல்லே சைவப் பொருளையு முணர்த்துகின்றதென்பது மறிக. அஃதெவ்வாற்றாலா மெனின்ஞெ? தெரிக்குதும்:— வ, இ - தம், எனப் பிரித்து, வ - வலிமிகுந்த மலையின்கண், இ - இச்சையுடையவன். அதாவது எவன் மலையின்கண் இச்சை யுடையானோ, அவன் சிவனா மென்பதாயிற்று. த - பயனை யளிக்கின்றவன், அதாவது சிவனை வழிபடலால் பயன் பெறல் என்னும் பொருள் திரண்டதா மாதலின் இப் பொருளே வேதத்தின் கருத்தெனக் கொள்ளலால் சைவத்தையே மேற்கொண்டது வேதம் என்பதாயிற்று.

மற்றும், வேதம் என்னும் சொல்லே சத்தி மதத்தின் பொருளையுமுணர்த்துகின்றது. அஃதெவ்வாறு மெனின்? அதையும் தெரிப்பாம்:— வ - இ - தம், என்னும் எழுத்துக்களுக்குள், வ - இராகுவின், இ - இச்சை, அதாவது அமுதம் உண்ணல் வேண்டுமென்னும் இராகுவிற் கெழுந்த

விருப்பை, த - கெடுத்தவர் விஷ்ணுவாவர். அவரைக் கூறுகின்றதால் விஷ்ணுவாகிய சத்தியையே விதந்தோதுவது வேதம் எனப் பொருள்படலால் சத்தியையே மேற்கொண் டெழுந்தது வேதம் என்பதாயிற்று.

அஃதன்றியும், காணபத்தியம், கணபதியின் சம்பந்தத்தையும் கூறுகின்றது என்பதும் வேதம் என்னுஞ் சொல்லிற்குப் பொருளாம். என்னை? வ, இ - தம், என்பதில், வ - மங்களம், இ - இலக்குமி, தம் - இவ்விரண்டையுங் கொடுக்கின்றவன் கணேசனேயாவன். யாண்டும் தடையைப் போக்குகின்றவனாதலின் அவனுடைய தடை நீங்காவழி, திருவும், மங்களமுந் திகழாதாமாதலி னென்க. இவ்வாற்றால் விக்கினத்தைப் போக்கு மிறைவனைக் கூறுகின்றது வேதம் என்றாகவே காணபத்திய மென்னும் பொருளுங் கொள்ளக்கிடந்தமை யூகித்துணர்க.

இதுபோன்றே, வேதம் என்னுஞ் சொல்லே சௌர மதத்தையும் (சூரிய வுபாசனையையும்) அறிவுறுத்துவதாம்; என்னை? வ - இ - த, என்பவற்றில், வ - வலியை வேண்டுவோர்க்கு, இ - இலக்குமியாகிய ஆற்றலை, த - கொடுக்கின்றவன் சூரியனேயாவன். சூரியனுடைய வெயில் படாதேனின் எல்லா வுயிர்களும் வலியொழிந்து அழிந்துவிடுமாதலின், அத்தகைய சூரியனையே மெற்கொண்டது வேதம் என்னும் பொருளும் கொள்ளக் கிடந்தமை காண்க.

மற்றும், வேதம் என்பதனானே, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் பயப்பது வேதமே யென்பதும் பெறப் படுதல் காண்க.

அஃதாமாறு:—வேதம் என்பதை, வ - ஈ, இ - தம், எனவும் பிரிக்க முடியுமாதலின், வ - அமுதம் அதாவது சுவர்க்கம். அதைத் தரும் தருமமாம். ஈ - இலக்குமி அதாவது பொருள். இ - இச்சை அதாவது காமம். த - கெடல் அதாவது பந்தமறல் விடுபடல் வீடு என்னுமிவைகளும் பொருள் படுமாதலின், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையுந் தருவதே வேதம் என்பதாம்.

மற்றும், வித், ஞானே என்னும் வடமொழிப் பகுதியிலிருந்து வந்தது வேதம் என்னுஞ் சொல்லாதலின் எல்லாவற்றையும் அறிவுறுத்துவது வேதம் என்பதும் பொருளாமென்றுணர்க.

வேதம் என்பது ஒரு பெயர்ச் சொல்லன்று; மற்றென்னின்? வித், என்னும் பகுதியாற்றோன்றி உணர்வுப் பொருளுடைய தெனப்பட்டு ஒலிவடிவின் மேற்றாய் ஒரு நூலெனப்படுகின்றதாம்.

வேதம் என்பதே தமிழில் மறை யென வழங்கப்படுகின்றது. இதை, வேய்தல், மறைத்தல் என்பது பற்றி மறை யெனப்படுகின்றது என்ப.

உற்று நோக்கின் பொருள்களை மறைத்து வைத்திருத்தலின் மறை யென்பது ஒருவாறு பொருந்துமென்பது காண்க. ஈண்டு மறைத்துக் கூறல் என்பது ஒரு பெரும் பொருளாகிய பரமேசுரனைப் பல சிறு தேவதைகளாகக் கொண்டது போன்று கூறுதலாம்.

அற்றாகலினன்றே, மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரும்,
'நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் நான் மறை யென்றார்' என்று கூறியுள்ளார்.

அல்லது, மக்கட் கெட்டாது மறைந்து கிடக்கின்ற பொருள்களை யெல்லாம் அறிவுறுத்தலின் மறை யெனினும் அமையும்.

மற்றும், இது இருக்கு, சுருதி, மறை, எழுதாக்கிளவி, ஆதிநூல், சாகை, ஆரணம், ஒத்து எனவும் வழங்கப்பெறும்.

மறை யென்பது வினைச் சொல் ஏவலில் வரின் 'மறைத்துவை' அல்லது 'ஒளித்திரு' எனப் பொருள்படும்.

பெயர்ச் சொல்லெனின்? 'மறைவாயுள்ள பொருளனைத்தையுங் கூறுவது' எனப் பொருள் தரும். புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திர மெனப்படும் என்ப.

வேதம் என்பதின் பொருளியல் முற்றிற்று.

வேதப் பாகுபாட்டியல்.

வேதம் என்பது ஒன்றேயாம். இது, மந்திரம், பிராமணம், என்னும் இருவகைப் பகுதியை யுடையது. இதிலுள்ள மந்திரபாகமே சங்கிதை யென்று கூறப்படும்.

இதுபற்றியே சைமினி முனிவரும்,

"தச்சோதகேஷு மந்த்ராக்யா"

"அவ்விதிகளில் மந்திரமெனப் பெயர்"

அதாவது வேள்வியின் வடிவத்தை (வேள்விக்குரிய பொருள், தேவதை என்னும் இரண்டையும்) அறிவுறுத்துமிடத்து மந்திரமாகும் என்றருளி யுள்ளார்.

இனி, விதித்த பொருளை யுணர்த்துவது மந்திரமாமெனின்? அது பொருந்தாது, என்னை? "வசந்த காலத்தில் கபிஞ்சலப் பறவைகளைக் கொல்க" என்பதும் விதியாமெனல் வருதலின் என்க.

மனனத்திற்குரியது மந்திரமெனினும் இழுக்காகும், என்னை? பிராமண பாகத்திலும் அதிவியாத்திக் குற்றந் தங்கலின் என்க.

முன்னிலை படர்க்கை என்னும் இடங்களில், செய்வாயாக செய்குக என்றாற்போல வியங்கோள் வினைமுற்றாய் வரல் மந்திரமெனலும் பொருந்தாது; அது ஒன்றற்கொன்று அதிவியாத்திக் குற்றமுடையதாமாதலின் என்க.

அற்றேல், மந்திரத்திற் கியல்பு யாதெனின்? தனது உறுப்பு வலியாற் பொருளுணர்த்துவது மந்திரமாம். இதுவே யௌகிகசத்தமெனப்படும். இவ்வியல்பே சைமினி மதத்தர்களுக்கும் ஒத்ததாமாதலின் இதுவே மேற்காட்டிய இயல்பையு முடையதாம். வேள்விக்குரிய, பொருளையும், தேவதையையும் நினைப்பூட்டுவது மந்திரம் என்பது திரண்ட பொருள்.

இதுபற்றியே, 'மந்திரத்தாலேயே நினைத்துக்கொள்ளத் தக்கது' என்று விதிக்கின்றதூஉமென்க. அதாவது, வேள்விக்குரிய, பொருளையும், தேவதையையும், வேத மந்திரங்களாலேயே நினைத்துக் கொள்ளல் வேண்டும் ஏனைய உலக வகையால் அறிந்துகொள்ளல் கூடாது என்பதாம்.

இவ்வியல்பும்,

"புரோகித அக்கினியைப் போற்றுகின்றேன்."

"புரசமரக் கொம்பே! உன்னை வெட்டுகின்றேன்"

"அக்கினியே! நீ அவியை யுண்ண வருவாயாக" என்பது முதலிய மந்திரங்களில் பொருந்துமாறுணர்ந்து கொள்க.

சங்கிதை யென்பதும்,

பதப்பிரகிருதி:,

வர்ணாநாம் ஏகப்ராண யோக:,

பர: சந்நிகர்ஷ:, என்பது முதலிய இயல்புகளை யுடையதாம்.

ஈண்டு, யாஸ்க முனிவர்,

"தேவதைகட்கருகில் அன்போடு இருடிகளாற் செயப்படுகின்ற துதிகளே மந்திரங்கள் ஆம்" என்று கூறியுள்ளார் என்பதும் உணரற்பாலதாம்.

மற்றும், இம் மந்திரம், விதி வாதம், அர்த்த வாதம், யாக்ஞை, ஆசி, துதி, ப்ரைஷம், ப்ரவஹ்லிகா, ப்ரஸ்நம், வியாகரணம், தருக்கம், பூர்வ

விருத்தாநு கீர்த்தனம், அவதாரணம், உபநிடதம் எனப், பதின்மூன்று வகைத்தென்பர் உவட்டர்; இவை கவனிக்கத் தக்கன.

பிராமணம் என்பது, ஏது, திட்டாந்தம் முதலியவைகளில் ஒன்றை யுடைய வாக்கியமாமெனின்? மந்திரத்திலும் அதிவியாத்தி வருதலின் அது பொருந்தாது. கருவிகளேயே மிகுதியாகக் கூறுவது பிராமண மென்பதும் அமையாது. என்னே? பிராமணன் பாடுகின்ற மந்திரத்தில் அதிவியாத்தி யாதலின் என்க. இதி, என்னுஞ் சொல்லே யிறுக வுடையது பிராமணம் எனினும் பொருந்தாது; இத்தன்மைய மந்திரத்திலும் அதிவியாத்தியா மாதலி னென்க. கதையாயுள்ளது பிராமண மெனிலோ? அதுவும் பொருந் தாது. எமன், எமனுடைய மனைவி என்னு மிருவரின் விவாதமாய் வரும் மந்திர பாகங்களில் அதிவியாத்திக் குற்றம் வருதலின் என்க.

மற்றும், பிராமணம் என்பதற்கு இழுக்கிலாத இயல்புதான் எதுவெனிலோ? மந்திர பாகத்தின் சேடமே பிராமணம் என்பதேயாம். இதுவே பல்வகை யியல்புகளிலும் இயைந்து கிடப்பதும், குற்றமற்றதுமாமென்பது காண்க.

இதுபற்றியே, சைமினி முனிவரும் "சேஷே ப்ராமண சப்த: என்று கூறியுள்ளார்.

மற்றும், விநியோகமாவது மந்திரமாம், விதி, துதி முதலியவைகளை மேற்கொண்டது பிராமணமாம் என்பாருமுளர்.

மற்றும், இத்தகைய மந்திரம், பிராமணம், என்னும் இரண்டு பாகமுஞ் சேர்ந்துள்ளதே வேதமாம்.

அற்றாகலினன்றே ஆபத்தம்பரும்,

"மந்திரம் பிராமணம் வேதமெனப்படும்" என்றருளி யுள்ளார்.

'சில உபநிடதம், மந்திரமாம், சில உபநிடதம், பிராமணமாம்; ஆதலின் உபநிடதங்களும் இவற்றுள் அடங்கும். மந்திர பாகங்களே வேத மெனப்படும். அதனாலேயே, மந்திர பாகங்கள் வெளிப்பட்டபோது வேதம் மூன்றெனக் கொள்ளப்பட்டது. பின்னர் கல்ப சூத்திரங்கள் தோன்றியது முதற்கொண்டே பிராமண பாகங்களும் வேதமெனப் பெயர் பெற்றன' என்பர் ஒரு சாரார்.

மற்றும், வேதமானது, கருமபாகை, உபாசனபாகை, ஞானபாகை என மூவகையான பிரிவுகளை யுடையதாம். இவற்றையே, கருமகாண்டம், பக்தி காண்டம், அல்லது தைவத காண்டம், ஞான காண்டமென்பர்.

பக்தி காண்டத்தையும் கரும காண்டத்துளடக்கி கருமபாகை, ஞான பாகை என, இருவகைப் பிரிவுடையதென்பாருமுளர்.

அற்றாகலினன்றே, சேந்தன் திவாகரமும்,

"ஞான பாகையும் கரும பாகையும்
ஆயிரு பாற்பொருள் வேத நூற்கே" என்று கூறுகின்றது.

ஆரணம் என்பது ஞானபாகத்திற்கே சிறப்புப் பெயராம். உபநிடதம் வேதத்தின் உட் பொருள் நுட்பம் என்பதாம்.

மற்றும், இத்தகைய வேதம், இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என்னும் வேறுபாட்டால் நால்வகைத்தாம்.

அவற்றுள், இருக்கானது மூன்று நான்கு பாதங்களைக் கொண்ட காயத்திரி முதலிய சந்தப் பதிகங்களாலாயதாம்.

இதுபற்றியே சைமினிமுனிவரும்,

"தேஷாம் ருக் யத்ரார்த்தவசேந பாதவ்யவஸ்தா"

பொருள் வயத்தால் யாண்டுப் பாதங்கள் வகுக்கப்படுகின்றனவோ, அவைகட்கு இருக்கு என்னும் பெயர் என்றார்.

இவ்விருக்கு வேதம், இருபத்தொரு சாகைகளை யுடையது. சௌனகரின் மதத்தைத் தழுவில், சாகல, வாழ்க்கல, ஆசுவலாயன, சாங்கியாயன, மாண்டுக, ஐதரேய, கௌபீதகி, சைகிர, பைங்க என்பது முதலிய சாகைகளை யுடையதாம்.

மற்றும், இவ்விருக்கு மந்திரமானது பரோட்சம், அபரோட்சம், அத்தியான்மிகம் என மூவகைத்தாம்.

சாமம் என்பது, சா - அவ்விருக்குவேதச் சந்தப் பதிகமே, அமம் - கீதமாய்ப் பாடப் பெறுவது. அதாவது இருக்கு மந்திரத்தைக் கீதத்துடன் சேர்த்துப் பாடும்போது சாமமெனப்படுகின்றது என்பது பொருள்.

அற்றாகலினன்றே, சைமினிமுனிவரும்,

"கீதிஷு ஸாமாக்யா" "கீதத்துடன் சேர்ந்த மந்திரங்கள் சாமமென வழங்கப்படுகின்றது" என்று கூறியுள்ளார்.

இச்சாமவேதம் ஆயிரஞ் சாகைகளை யுடையது. இதனுடைய பேதங்களைச் சாமவேத ருத்திரீய முகவுரையிலும், சாமவேத சாகை என்னும் இவ்வுபோற்காதத்திலுங் காண்க.

இருக்கு, சாமம் என்னுமிரண்டினும் வேறாய் பிரஸ்லிஷ்ட எழுத்துக்களாய மந்திரத் தொகுதியே எசுர் வேதமாம்.

அதுபற்றியே, சைமினிமுனிவரும்,

"ஶேஷே யஜு:ஶப்³த³:" "எஞ்சியதில் எசுரின் இயல்பு" (காண்க) என்றருளியுள்ளார். இவ்வேதம் நூற்றொரு சாகைகளை யுடையதாம்.

மற்றும், 'சாக' என்பது முதலிய பன்னிரண்டு சாகைகளையுமுடையதென்பார் சிலர்.

இம் மூன்று வேதத்தினும் வேறாய், போரையும் அதற்குரிய படைகளின் மந்திரங்களையும் மிகுதியாய் கூறுகின்றது அதர்வண வேதமாம். இது, ஒன்பது அல்லது பதினைந்து சாகைகளை யுடையதாம்.

மேற்கூறியவாற்றால் வேதவியாசர் வேதத்தை நான்காகப் பிரித்தனர் என்ப.

இனி, வேதத்தை வியாசமுனிவர் நான்காய் வகுப்பதன் முன்னமே, வேறு பெயர்கொண்டு நான்காய் வழங்கப்பட்டிருந்த தென்பதுமொன்று.

இதுபற்றியன்றோ, திவாகர முதலிய தமிழ் நிகண்டுகளும்,

"இருக்கு முதல் வேதம் பௌடிக மெனப்படும்" எனவும்,

'இரண்டாம் வேதம் தைத்திரிய மென்ப' எனவும்,

'மூன்றாவது சாமம் கீதனடைசாரும்' எனவும்,

"நான்காம் வேதம் அதர்வண மென்ப" எனவும் கூறுகின்றன.

மற்றும், மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரும், தொல்காப்பியத்தின் பாயிரத்திற்கு உரை கூறப் புகுந்தவிடத்து, "நான்கு கூறுமாய் மறைந்த பொருளுடைமையான் நான்மறை யென்றார்; அவை, தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாம வேதமுமாம். இனி, இருக்கு, எசுவும், சாமமும், அதர்வணமு மென்பாருமுளர். அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாசர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தா ராதலின்" என்று கூறியுள்ளார்.

ஈண்டு, முன்னர் நான்கு வகையாக வேதம் இருக்கில், "நான்கு கூறாக இவற்றைச் செய்தார்" என்னும் நச்சினார்க்கினியர் உரையும் முரணும்; என்னை? முன்னர் நான்காய் உள்ளதை நான்காய் வகுத்தல் பயனற்றதா மாதலினென்க.

அங்ஙனமாயினும், முன்னர் நால்வகை யெனப்பட்டு ஒழுங்குற இல்லாததை அப் பெயர்களுக்கியைய, இருக்கு, எசுர், சாமம் என்னும் பெயர்களால் இனிய முறையில் வகுத்தாரெனின் அவ்வுரை பொருந்துமாறுணர்க.

ஈண்டு, இராம்பிரான் காலத்திற்கு முன்னுள்ள கபாடபுரத்தைக் கடல் கொண்ட பின்னர் உத்தர மதுரை தோன்றிய காலத்தில், சந்தனுவின் மனைவி பரிமளகந்திக்குப் பிறந்தவர் வியாசர். பாரதத்திற் கூறிய சமதக்கினி முனிவரின் மகனும், பரசுராமருக்கு உடன் பிறந்தாருமாகிய திரணதூமாக்கினி முனிவராகிய தொல்காப்பியனார் அவ் வியாசருக்கு முற்பட்டவரென்பதுணர்க.

மற்றும், நாலாயிரப் பிரபந்தம் பெரிய திருமொழியில்,

"சந்தோகா பௌழியா தைத்திரியா சாமவேதியனே" என்று காணப்படு முறைக்கும், நச்சினார்க்கினியர் முறைக்கும், திவாகரம் முதலிய நூல்களிலுள்ள முறைக்கும் ஒன்றற்கொன்று மாறுபாடு காணப்படுதலானும், உபநிடதங்களுக்குரிய பெயரும் அதில் இருத்தலின் உபநிடதமோ, என ஐயப்படுமாறு இருத்தலானும், பௌஷியம் என்பது பூஷா தேவதையை மேற்கொண்ட இருக்கு வேத மெனவும், தைத்திரியம் என்பது அவ் வுபநிடதத்தை அடக்கிக்கொண்டு நிற்கும் எசுர்வேதம் எனவும், ஒருவகையாய்ப் பொருள் கொள்ளினும் அப்பெயருக்குரிய பொருள் இனிது அமையாமையானும், அப் பெயர்கள் மிக இனியன வன்று.

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் பெயர்களோ, வேள்வியைப் போற்றுவது, வேள்விக்கிரியைக் கூறுவது, வேள்வியைத் துதித்துப் பாடுவது போர்புரிதல் என முறையே பிரித்துப் பொருள் கொள்ளுமிடத்து அவ் வேதங்கள் கூறும் பொருளுக்கியைந்தவைகளாமெனத் தோற்றலின் வியாசர் வகுத்த முறையே சிறப்புற்றதாமென ஈண்டு கொள்ளப்பட்டது. மற்றும், பேரறிவாளர் இதை யூகித்துணர்ந்து கொள்வாராக.

அப்பு தத்துவத்தின் குணங்கள் நான்கிலிருந்துண்டானவைகளே நான்கு வேதம். மற்றும், வேதம் என்பது நான்கு மகா வாக்கியங்கள்தான் என்றருளியுள்ளார் இராமலிங்க சுவாமிகளும்,

வேதப் பாகுபாட்டியல் முற்றிற்று.

வேத மோதுமியல்.

இனி சங்கிதை யென்பதும், நிர்ப்புஜ சங்கிதை, ப்ரத்ரண சங்கிதை என ஓதும் வகையின் வேறுபாட்டால் இருவகைத்தாம்.

முதலாவதோ, மூலத்திலுள்ளவாறே ஓதுதலாம். அஃதாமாறு:— 'அக்கினிமீளே புரோஹிதம்' என்றற்றொடக்கத்து மந்திரத்தை அவ்வாறே ஓசை யெழ ஓதலாம்.

இம் மூல மந்திரத்தை விகிருதமாய் ஓதுவது 'ப்ரத்ருண' சங்கிதையாம்.

இது, பத சங்கிதை, கிரம சங்கிதை, ஜடா சங்கிதை, கன சங்கிதை, என்பது முதலியனவாகப் பலவகைப்படும்.

அஃதாமாறு:—

"அக்கினிமீளே புரோஹிதம் யச்ஞஸ்ய தேவம் ருத்விஜம்" என்பது இருக்கு வேதத்தின் முதலாவது மந்திரமாம்.

இது

(1) பத சங்கிதை.

அக்கினிம், ஈளே, புரோஹிதம், யக்ஞஸ்ய, தேவம், ருத்விஜம், என்றிவ்வாறு சொற்களின் புணர்ச்சி, முடிவு முதலியவைகளை யுணர்ந்து ஓதுதல் பத சங்கிதை யெனப்படும்.

(2) கிரம சங்கிதை.

அக்கினிம் ஈளே, ஈளே புரோஹிதம், புரோகிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்ய தேவம், தேவம் ருத்விஜம், என்றிவ்வாறு ஓதல் கிரமசங்கிதை யெனப்படும்.

(3) சடா சங்கிதை.

அக்கினிம் ஈளே, ஈளே அக்கினிம், அக்கினிம் ஈளே, ஈளே புரோஹிதம், புரோஹிதம் ஈளே, ஈளே புரோஹிதம், புரோஹிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்ய புரோஹிதம், புரோஹிதம் யக்ஞஸ்ய, யக்ஞஸ்ய தேவம், தேவம் யச்ஞஸ்ய, யக்ஞஸ்ய தேவம், தேவம் ருத்விஜம், தேவம், தேவம் ருத்விஜம், என்றிவ்வாறு ஓதுதல் சடா சங்கிதை யெனப்படும்.

(4) கன சங்கிதை.

அக்கினிம் ஈளே, ஈளே அக்கினிம், அக்கினிம் ஈளே புரோஹிதம் புரோஹிதம் ஈளே அக்கினிம், அக்கினிம் ஈளே புரோஹிதம் ஈளே புரோஹிதம் யக்ஞஸ்ய புரோஹிதம் தேவம் தேவம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய புரோஹிதம் புரோஹிதம் யச்ஞஸ்ய தேவம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய தேவம் ருத்விஜம் ருத்விஜம் தேவம் யக்ஞஸ்ய யக்ஞஸ்ய தேவம் ருத்விஜம், என்றிவ்வாறு ஓதுதல் கன சங்கிதை யெனப்படும்.

மற்றும், மாலா, சிகா, தவஜம், தண்டம், ரதம் முதலிய வேறுபாட்டால் மறை யோதுமுறை பலவகைப்படுமென் றுணர்க.

வேத மோதுமியல் முற்றிற்று.

சாமவேதப் பாகுபாட்டியல்.

இச் சாமவேத சங்கிதையானது, பூர்வார்ச்சிகம், உத்தரார்ச்சிகம் என இருவகைத்தாம்.

இவற்றுள் பூர்வார்ச்சிகமானது, ஆக்கினேய காண்டம், ஐந்திர காண்டம், பவமான காண்டம், ஆரண்ய காண்டம், மகாநாம்நி யார்ச்கிகம் என ஐந்து பிரிவுகளை யுடையது.

மகாநாம்நி யார்ச்சிகம் என்பதைச் சேர்க்காமல் பூர்வார்ச்சிகம் முடிவு பெறுகின்றதென்பாரு முளர்.

இவை, காண்டங்களென்றும் பருவங்களென்றும் வழங்கப்படுகின்றன.

இவ்வார்ச்சிகத்தைச் சந்த ஆர்ச்சிகம் என்பாருமுளர்.

இவ்வார்ச்சிகம் மற்றுமொரு வகையால்,

ஆக்கினேயம்,	திருஷ்டுப்,	ஆருணம்,
பகுஸாமி,	அநுஷ்டுப்,	சுக்கிரியம்,
ஏகஸாமி,	இந்திரபுச்சம்,	மகாநாம்நி.
பிருகதி,	பவமானம்,	

என்னும் ஊக தந்திரங்களையு முடையதாம். இவைகள் பிருகிருதி தந்திரங்கள் என வழங்கப்படுகின்றன. மற்றும்,

ஆக்கினேய காண்டம்	கண்டம்	12
பகுஸாமி	,,	6
ஏகஸாமி காண்டம்	,,	6
பிருகதி காண்டம்	,,	8
திருஷ்டுப்	,,	3
அநுஷ்டுப்	,,	4
இந்திரபுச்சம்	,,	9
பவமானம்	,,	11
ஆருணம்	,,	3
முதற்பாதி	,,	7
இரண்டாம்பாதி	,,	7
மூன்றாம்பாதி	,,	8
சுக்கிரியம்	,,	3
	ஆக பிரகிருதியின் கண்டங்கள்	87

இவற்றிலுள்ள சாமங்களின் எண்கள் 1446

உத்தரார்ச்சிகமும்

29	சாமங்களைக் கொண்ட	தசராத்திரம்.
41	,,	சம்வத்சரம்
23	,,	ஐகாஹம்
28	,,	அஹீனம்
14	,,	சத்திரம்
19	,,	பிராயச்சித்தம்
53	,,	க்ஷுத்திரம்

என்னும் பிரிவுகளை யுட்கொண்ட ஊஹ தந்திரங்களை யுடையதாம். இதுவே இரகசிய தந்திர மெனப்படுகின்றது.

ஈண்டு, ஆக்கினேய காண்டத்திலிருந்து பவமான காண்டம் வரை, வைதிக கருமங்கட்கு உபயோகமான தந்திரங்களிலுள்ள ஸாமங்கள், ஏனைய சாம மந்திரங்களுடன் சேர்ந்து மூன்று பங்காய் ஊஹ சாமங்கள் என வழங்கப்படுகின்றன.

ஆருணத்திலும் சுக்கிரியத்திலுமுள்ள வைதிக காரியத்திற்கு உபயோகமான சாமங்கள், ஏனைய சாமங்களோடு சேர்ந்து மூன்று பங்காய் இரகசிய சாமங்கள் என வழங்கப்படுகின்றன.

கண்டங்களிலுள்ள சாமங்கள் பலவகை எண்களை யுடையன.

ஊஹ தந்திரங்களிலுள்ள ஒவ்வொரு கண்டங்களும் முறையே இருபது சாமங்களுடன் கூடியவைகள். இவ்வாறே, தசராத்திரம், சம்வத்சரம் முதலியவற்றிலுள்ள கண்டங்களு மிருக்கின்றன.

இரகசிய தந்திரத்திலுள்ள கண்டங்கள் ஒவ்வொன்றும் முறையே பத்துச் சாமங்களை யுடையன. ஊஹத்தில் இருபது சாமங்களையுடைய கண்டங்கள், 48. சாமங்கள், 960.

இரகசிய தந்திரத்தில் பத்துச் சாமங்களையுடைய தசகங்கள் (பத்துகள்) 20. சாமங்கள், 200. பிரகிருதி சாமங்கள் பூர்வார்ச்சிகத்திலிருந்து வந்தவைகள். ஊஹ சாமங்களும், இரகசிய சாமங்களும், உத்தரார்ச்சிகத்திலிருந்து வந்தவைகள்.

ஈண்டு, ஆக்கினேய மென்பது அக்கினி தேவதையை மேற்கொண்டதாம். ஐந்திர மென்பது இந்திர தேவதையை மேற்கொண்டதாம்.

இவ் வைந்திர காண்டமானது, ஆக்கினேய காண்டத்திலுள்ள, பகுசாமி, ஏகசாமி, பிருகதி, திருஷ்டுப், அநுஷ்டுப், இந்திரபுச்சம் என்பன முதலியவற்றிற்குப் பின்னர் ஓதுவதாகும்.

பவமானம் என்பது சோமத்தை மேற்கொண்டதாம்.

ஆருணம் என்பது அருணனால் வெளியாக்கப்பட்டதாம்.

சுக்கிரியம் என்பது சுக்கிரனு லாக்கப்பட்டதாம்.

இருக்குகள் கீதத்துடன் ஓதுங்கால் சாமங்க ளெனப்படுகின்றன. பூர்வார்ச்சிகத்திலுள்ள இருக்குகள் பிருகிருதிகளென வழங்கப்படுகின்றன.

உத்தரார்ச்சிகத்திலுள்ள இருக்குகள் ஊஹங்கள் எனவும், இரகசியங்க ளெனவும் வழங்கப்படுகின்றன.

பொதுவாக உத்தரார்ச்சிகத்தில் மூன்று மந்திரங்கள் சேர்ந்து ஒரு இருக்கெனப்படுகின்றன. இதிலுள்ள முதலாவது மந்திரம் பூர்வத்திலுள்ள தாம். இவ்வாருன சாமப்பதிக மஞ்சரிகள் பெரும்பான்மை பிரகிருதி சாமங்கள் போன்றே இருக்கின்றன.

மகா நாம்நியார்ச்சிகத்திலுள்ள மந்திரங்கள் 'சக்வரி' யென வழங்கப்படுகின்றன.

உத்தரார்ச்சிகம் இருபத்தொரு அத்தியாயங்களை யுடையது.

இம் மந்திரங்கள் அவைகளைக் கண்டவராகிய இருடிகளின் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச் சங்கிதையிலுள்ள மந்திரங்களின் தொகை, 1549 என்பர் சிலர்.

1472, என்பர் ஒரு சாரார்.

இப்போது இங்குக் காணப்படுகின்றவைகளோ, 1873.

இவற்றுள், 78 மந்திரங்களைத் தவிர்த்து மற்றவைகள் இருக்கு முதலிய வேதங்களிலுள்ளவைகளே; இவ் வெழுபத்தெட்டும் புதிய கீதப் பாட்டுகள்.

மற்றுஞ் சிலர் "75 தவிர்த்து ஏனையவை இருக்கிலுள்ளவைகள் ; இவ் வெழுபத்தைந்தும் புதிது" என்பர்.

மற்றும், மொத்த இருக்குகள், 1810. இவற்றுள் முற்பாதியில் உள்ளவை, 585 என்பர் சிலர்.

இந் நூலிலோ, 650 காணப்படுகின்றன.

மற்றும், பிற்பாதியிலுள்ளன, 1225 என்பர் சிலர்.

ஈண்டோ, இத் தொகையே காணப்படுகின்றது. மகாநாம்நி யார்ச்சிகத்தைப் பூர்வார்ச்சிகத்தில் சேர்க்காவிடில் ஒருவாறு ஒத்திருக்கின்றது.

பெரும்பான்மை முற்பாதியிலுள்ள மந்திரங்களே பிற்பாதியிலும் வந்திருக்கின்றன.

அவற்றுள் இரண்டு மந்திரங்கள், மூன்று முறையும், ஒன்பது மந்திரங்கள் இரு முறையும், இரண்டாம் பாதியில் முற்பாதி மந்திரங்கள் மறித்தும் மறித்தும் வந்திருக்கின்றன.

இருக்கு வேதத்தின் எட்டாம் மண்டலத்திலிருந்து பெரும்பான்மை மந்திரங்கள் வந்திருக்கின்றன.

இருக்கு வேதமந்திரங்களை நோக்கப் பழைமைகளாய்ச் சில மந்திரங்கள் இச் சாமவேதத்தி லிருக்கின்றன; ஆதலின் சாமவேதம் பழைமையானதெனவும் யூகிக்க இடமுண்டு.

அல்லது, சாம வேதம் இருக்கு வேதத்திற்குப் பிற்பட்டதென்றும் சொல்லலாம், எனெனில்? அதிலிருக்குமாறே இதுவும் இருத்தலின் என்க.

பல தேசங்களிலும் கீதங்களைப்பற்றிப் பலவகையான பாட பேதங்களுண்டு.

வேத மந்திரங்கள், வியாகரண (வடமொழி யிலக்கண) த்திற்கு அடங்காமையினும், இலக்கண வழூஉச் சொற்கள் மிகுதியா யிருத்தலானும் வியாகரணந் தோன்றியதன் முன்னரேயே வேதம் உள்ளதென்பது புலப்படுகின்றது.

சாம வேதத்தின் சங்கிதை (மந்திர) பாகத்தின் பரிசேடமாகிய பிராமணம் என்பது,

26	பிரபாடகங்களையுடைய	பிரௌடப் பிராமணம்
5	,,	ஷட்விம்சப் பிராமணம்
5	,,	சாமவிதானப் பிராமணம்
3	,,	ஆர்ஷேயப் பிராமணம்
5	,,	தேவதாத்தியாயப் பிராமணம்
10	,,	சாந்தோக்கிய பிராமணம்
5	,,	சங்கிதோபநிடதப் பிராமணம்

என்னும் வேறுபாடுகளை யுடையதாம். அவற்றுள் ஆறு கண்டங்களையுடைய முதலாவது படலத்தையும், மூன்று கண்டங்களையுடைய இரண்டாம் படலத்தையு முடைய வம்சப் பிராமணமானது எண்வகைத்தாம்.

இவற்றுள் பிரௌடப் பிராமணத்தை, மகாப் பிராமணம் என்றும், பஞ்சவிம்சப் பிராமணத்தைத் தாட்டியப் பிராமணம் என்றும் வழங்குவர்.

இவற்றுள், சாந்தோக்கிய வுபநிடதப் பிராமணமானது, பத்து வகையான உட்பிரிவுகளை யுடையது. அவற்றுள், திருமணஞ் செய்தல், இல்லறம்

நடாத்தல் முதலியவைகட்கு ஓதவேண்டிய மந்திரங்கள், மூ
பிரிவுகளினு மிருக்கின்றன; இது மந்திர காண்டமெனப்படும்.

ஏனைய எட்டுப் பிரிவுகளும் சாந்தோக்கியமென வழங்கப்படுகி

வம்சப் பிராமணமானது, பல்வகையான சாமவேத
எண்ணிறந்த இருடிகளின் பரம்பரைகளையுங் கூறுகின்றதாகுமிய
சில வருமாறு :—

ராணயனி, சாத்தியமுக்கினி, துர்வாசர்கள், பாகுரி, கௌண்டி, கௌல்க்குலவி, ஔபமந்யியர்கள், தாலர், கார்க்கிய சார்வணி, வர்ஷகண்யர், குதுமி, சாலிஹோத்திரர், சைமினி, என்னு மிப்பதின்மூவரும் சாமவேதத்திற்கு ஆசிரியர்கள்.

சடி, பால்லவி, காலபவி, தண்டி, விருக், விருஷாணர், ருருகர், அகஸ்தியர், பத்கசிரர், குகதர் என்பவர்கள் சாமவேதத்தின் பேருரையாளர்கள்.

சர்வதத்தன் என்பவன் முதலாகப் பிரமன் ஈறாகவுள்ள பலவகையான சாமவேத உரையாசிரியர்களும் அதிற் கூறப்பட்டிருக்கின்றனர்.

அவர்களுள் பிரமன் முதலாவது ஆசிரியனாகக் கூறப்பட்டிருக்கின்றான்.

இவர்களுள் அறுவகையான தேவர்களைத்த விர்த்து ஏனைய ஐம்பத்தைந்து ஆசிரியர்களும் வம்சப் பிராமணத்தை நோக்க ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் இருந்தவர்களென்றே கொள்ளற்பாலார்.

அவற்றுள் முற்பாதியிலுள்ளவர்களின் பெயர்கள் வருமாறு:—சர்வதத்தகாரியர், சந்திரபூதித்ராகியாயணர், திராத ஏழுமதர், நிகலபார்ணவல்கியர், சங்தோகமாககிஜர், மித்ரவர்ச்ச தௌலங்காயனர், சுப்ரதீத ஔலுந்தியர், பிருகற்பதி குப்த சாயஸ்தியர், பவத்ராத சாயஸ்தியர், குஸ்துக சார்க்கராக்ஷியர், சிரவணதத்த கௌஹலர், சுசாரத சாலங்காயனர், ஊர்ஜயந்ஔபமந்யர், பாநுமந் ஔபமந்யியர், ஆனந்தச்சாந்தனயனர், சாம்பசார்க்கராக்ஷியர், காம்போஜ சௌபமந்யியர், மந்திரகார சௌங்காயனர், சுவாதி ரௌகாக்ஷியர், சுசிரவ வார்ஷகண்யர், பிராதரந்ஹகௌஹலர், கேதுவாத்யர், மித்திரவிந்த கோகலர், சுநீத கபாடவர், சுதேம சாண்டில்யாயனர், அம்சுத்தானசய்யர், அமாவாஸ்ய சாண்டில்யாயனர், ராதோ கௌதமர், சம்வர்க்கஜித் மகாயனர், அதிதந்வ சௌனகர், மசக கார்க்கியர், திரக கார்க்கியர், வாசிட்ட சைகதாநேயர், சாகதா ஸோபாடிதாயனர், விசட்சண தாண்டியர், கர்த்தபமுக தாண்டியாயனர், உதர சாண்டில்யர், அதிதந்வ சௌநகர், மசககார்க்கியர், திரகோ கார்க்கியர், வாசிஷ்ட சைகதாநேயர், வாசிட்ட ஆரோஹண்ய ராஜந்யர், சுமந்த பப்ரவ கௌதமர், சூஷோ வாகுநேய பாரத்துவாசர், தால்

ளனசர், துதி இந்திரோத சௌநகர், இந்திரோத சௌனகர், வாதாவதர், நிட்குரோதபாயசான்யர், பிரதிதி தேவதாசர், சாவசாயனர், சுரவர், அக்கினிபூ கசியபர், இந்திரபூ கசியபர், மித் யபர் விபண்டவ கசியபர், ரிஷியசிருங்க கசியபர், கசியபர், அக் வாயு, மிருத்தியு, பிரசாபதி, பிரமன் என்னும் அறுபது ள்.

இரண்டாம் பாதியிலுள்ளவர்களின் பெயர் வருமாறு:— நயனர், அரிய மபூதிகாலவர், பத்ரசர்மா, கௌசிகர், புஷ்யயசா, ஔதும்பர், சங்கர கௌதமர், அர்யமராதோ கோபிலர், பூஷமித்ரோ காபிலர், அசுவமித்ர கௌபிலர், வச்சமித்ர கௌபிலர், மூல மித்திர கௌபிலர், பிருகத்வசு கௌபிலர், கோ்பிலா, ராதகௌதமர் எனப் பதினைந்து பேர்களாவர்.

இவர்களுள் முன்னிருப்பவர்கள் பின் வருபவர்களுக்கு முறையாய் வித்தையைக் கற்பித்த பிதாவெனப்படுகின்றவர்கள்.

ஈண்டுச் சாயணர் முதலியோர்கள் எல்லா மந்திரங்கட்கும் பரமேஷ்டி, சுயம்பு என வழங்கப்பெறுகின்ற பிரமனே இருடி யென்கின்றனர். மற்றும் இவ்வாறே சுருதி மிருதிகளுங் கூறுகின்றன என்பது காண்க.

இச் சாமவேதத்திற்கு இரண்டு வகையான அநுக்கிரமணிகைகள் இருக்கின்றன; இவ் விரண்டுஞ் சேர்ந்தது ஆர்ஷேய பிராமண மெனப்படுகின்றது. இதுவும் பரிசேஷத்திற் சேர்ந்ததேயாம்.

முதலாவது பரிசேஷம், பதினெண் வகைத்து; அது பெரும்பாலும் ஜெர்மனியில் இருக்கிறதாகத் தெரிகிறது.

இரண்டாவது பரிசேஷம் 'கிரது சங்கிரகம்' என வழங்கப்படுகின்றது.

மூன்றாவது 'வினியோக சங்கிரகம்.'

நான்காவது 'சோமோத்பத்தி.'

ஐந்தாவது 'ஆர்ச்சிகம்' ஆறாவது 'விஷயசூசி.'

மற்றும், இச் சாமவேதத்திற்கு, மூன்று சிரௌத சூத்திரங்களும்; பஞ்சவிம்சம் பிராமணத்தின் உரை வடிவாக ஒரு சூத்திரமும் இருக்கின்றன.

மற்றும், இருக்கு மந்திரங்களைச் சாமங்களாக மாற்றுவதன் பொருட்டு ஐந்து சூத்திரங்க ளிருக்கின்றன.

கிருகிய சூத்திரமொன்றும் இருக்கின்றது.

மற்றும், பல்வகையாகச் சாமவேதத்தின் வழி நூல்களாகவும், சார்பு நூல்களாகவும் ஆயிரக்கணக்கான நூல்களிருக்கின்றன.

சாமவேதப் பாகுபாட்டியல் முற்றிற்று.

சாமவேதச் சாகையியல்.

ஈண்டுச் சாகைகள் என்பன, மகாபாரதத்திற்குள்ள பதினெண் பருவங்களைப் போன்றனவன்று; மற்றோ, இராமாயணம் ஒன்றே, கம்ப ராமாயணம், துளசி ராமாயணம், அத்தியான்ம ராமாயணம் என்பன முதலிய சாகைகளாகப் பிரிந்தது போன்று, சைமினி முனிவர் முதலிய பல்லாயிரம் பேர்களால் ஆயிரக்கணக்கான சாகைகளாய் வேறுபாட்டை யடைந்திருக்கின்றன. இதனால் ஒவ்வொரு சாகைகளை யோதின போதிலும் சாமவேதத்தையே முழுதும் ஓதியதாகு மென்பதும் பெறப்பட்டமை காண்க. மற்றைய வேதங்களின் சாகைகளும் இவ்வாறேயாம்.

சாமவேதத்தின் சாகைகளைப்பற்றி ஒரு நூல், 'பிரதிசாகை' என்னும் பெயரால் புட்ப மகரிஷியாற் செய்யப்பட்டிருக்கின்றது.

சாமவேதத்தின் சாகைகள் ஆயிரங்களாம். ஆனால் அவற்றுள் பெரும்பான்மை தொலைந்தன. இப்போது சில சாகைகளே உலாவுகின்றன.

அற்றாகலினன்றே, அதர்வண வேதத்தின் பரிசேஷமாகிய "சரணவ்யூகம்" என்னும் நூலில்,

"தத்ர ஸாமவேதஸ்ய ஶாகா ஸஹஸ்ராணீ ।
அநத்யாயேஷ்வதீயாநா: ஸர்வே தே ஶக்ரேண விநிஹதா:"

"சாமவேதத்தின் சாகைகள் ஆயிரக் கணக்காய் இருந்தன, அவை, வேதமோதத்தகாத காலத்தில் ஓதியதால், இந்திரனால் முழுதும் நாசமடைந்தன" எனவும், அவற்றுள் தொலையா தொழிந்தன சிலவே விளங்குகின்றன. அவையாவன:—ராணாயனீய, சாத்தியமுக்ரம், கலாப, மகா கலாப, கௌதும, லாங்கலிக என்பவைகளாம் அவற்றுள்ளும், கௌதும சாகையானது, சாராயணீய, வாதராயணீய, வைததிருத, பிராசீனதைஜஸ, அநிட்டக என்னும் பேதத்தால் அறுவகைத்து எனவும் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனால், வாசற்பத்தியம், பிருகத் அபிதானம், சப்த கல்பத்துருமம் முதலியவைகளில் கூறியுள்ளதற்கும் இதற்கும் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அவைகளாவன:— ஆசுராயணீயா:, வாசுராயணீயா:, வார்த்தாந்தவேயா:, ப்ராஞ்சலா:, ருக்வர்ணபேதா:, ப்ராசீனயோக்யா:, ஞானயோக்யா:, ராணாயனீயா:, என்பனவாம்.

இவற்றுள், ராணயனீயா: என்பது, சாட்டியாயனீயா:, சாவாயனீயா:, சாட்டிய முக்கிரியா: ; பராயணீயா:, சாத்வலா:, சாத்யதபாவா:, மௌதக்கலா:, கல்வலா:, மகாகல்வலா:, கௌதுமா:, சைமினீயா:, என்னும் பேதங்களை யுடையதாகும்.

இதை, விஷ்ணு புராணம் மற்றொருவகையாய்க் கூறுகின்றது.

அதாவது:—சாமவேத மென்னுமொரு மரத்தின் கிளைகளை, வியாசமுனிவரின் மாணாக்கராகிய சைமினி முனியானவர் கீழ்க்கண்டவாறு முறையாய் வகுத்தனர். சுமந்துவின் புத்திரர்களான சுகர்மர், சுமந்து என்னுமிருவரும் ஒரு சாகையை யோதினர். சுகர்மர் ஆயிரக்கணக்கான சங்கிதைகளைப் பிரித்தனர். அவருக்கு, இரண்யநாபி, கௌசல்யர், பௌஷ்யஞ்சி, லோகாட்சி, குதுமி, குழீதி, லாங்கலி, என்பவர்கள் மாணாக்கர்கள். இவர்கள் உதீச்ய சாமகர்கள் என வழங்கப்படுவார்கள். மற்றும், இரண்யநாபி என்பவர்க்கு ஐவர் மாணாக்கர்களுளர்; அவர்கள் பிராச்சிய சாமகர்கள் எனப்படுவார்கள். மற்றும், இரண்யநாபி என்பவருக்குக் கிருதியென்பவர் ஒருவர் மாணாக்கராவர். அவர் தமது மாணாக்கர்களுக்கு இருபத்து நான்கு சங்கிதைகளை உபதேசஞ் செய்தனர். அவருடைய மாணாக்கர் முதலியோர்கள் சாமவேதத்திற்கு அநேகம் சாகைகளைப் பிரித்தனர். இவைகள் உபசாகைகள் எனவும் வழங்கப்படுகின்றன என்பதாம். பாகவத முதலிய புராணங்களில் மற்றொரு வகையாய்ச் சாகையின் வேறுபாடுகள் கூறப்பட்டிருக்கின்றன. இதனால் வியாச முனிவரின் காலத்திற்குப்பின் பல்வகைச் சாகைகள் அவருடைய மாணாக்கர்களால் புதிது புதிதாய் வகுக்கப்பட்டிருக்கலா மெனப் புலப்படுகின்றது.

மற்றும், பாணினி முனிவரின் வியாகரணத்திலுள்ள பைலாதி கணத்தில் 'ராணி' என்னும் சொல் சந்ததிப் பொருளில் வருங்கால் 'ராணயனி' என்றாகின்றது. ராணயனி என்பவர் ஒரு சாகையை யுண்டாக்கினவராவர். இதுபோன்றே, தௌலாதி, யாஸ்காதி, கோபவனாதி என்பன முதலிய கணங்களை வகுத்ததுகொண்டு யூகித்து நோக்கில் இத்தகைய வேத சாகைகளை வகுத்தவர்களின் பெயரால் அது வகுக்கப்பட் டிருக்கலாமென்றுந் தோன்றுகின்றது.

இப்போது பாரத நாட்டில் விளங்குகின்ற சாகைகள், கௌதும சாகை, சைமினீய சாகை, ராணயனீய சாகை என்னும் மூன்று சாகைகளேயாம்.

இவற்றுள்ளும், குர்ச்சர தேசத்தில் கௌதும சாகையும், கர்னாடக தேசத்தில் சைமினீய சாகையும், மாராஷ்டிர தேசத்தில் ராணயனீய சாகையும் உலாவுகின்றன.

மற்றும், கௌதும சாகையே, காசி முதலிய பல தேசங்களிலுமுள்ள கூர்ச்சரர், ஸ்ரீமாலியர், நாகரர் முதலியோர்களிடத்தும், வங்க தேசத்திலுள்ளார்களிடத்தும் மிகுதியாய்க் காணப்படுகின்றது.

இக் கௌதும சாகையைத் தழுவிய சங்கிதைகள், ஷட்விம்சப் பிராமணம், தாண்டியப் பிராமணம், சாமவிதானப் பிராமணம் என்பன முதலிய அநேக வகை நூல்களாகின்றன.

அன்றியும், சாந்தோக்கிய வுபநிடதம், மசக கல்ப சூத்திரம், லாட்டியாயன சுரௌத சூத்திரம், கோபில கிருகிய சூத்திரம் முதலியவைகளும் அதைச் சேர்ந்தவைகளாகின்றன.

அதைத் தவிர்த்தும், ராணாயணீய சாகை இப்போது மாராஷ்டிர தேசத்தில் மிகுதியாய் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவே, இராமேச்சுரம் வரையிலுள்ள மறையவர்களிடத்தும் பெரும்பான்மையும் வழங்கப் பட்டு வருகின்றது.

இவர்கட்கு, சுரௌத சூத்திரம், கிருகிய சூத்திர முதலியவைகளும் உடன்பாடுண்டு.

த்ராகியாயன கிருகிய சூத்திரமும், காதிர கிருகிய சூத்திரமும் இவர் கட்கு உடன்பாடு.

கௌதும சாகையைத் தழுவிய கர்னாடக தேசத்தவர்கள் சிலரேயாவர்.

இச் சாகையின் பிரிவு, சைமினி சாகை, சைமினிப் பிராமணம், சைமினி சுரௌத சூத்திரம், சைமினி கிருகிய சூத்திரம் முதலியனவாம். இவை இவ்வாறு அநேக வகைகளாகின்றன.

இதுபற்றியே, வியாகரண மா பாடியகாரரும், 'சாம மறை ஆயிரங் கிளைகளை யுடையது' என்று கூறியுள்ளார்.

இச் சாகைகளின் விஷயங்கள், பிரஸ்லேஷம், விஸ்லேஷம், விருத்த, அவிருத்த, கதம், அகதம், உச்சம், நீசம், கிருஷ்டம், அகிருஷ்டம், சங்கிருஷ்ட முதலியவைகளாகின்றன.

யாஸ்க முனிவரும், இவ்வாறு 'வேதங்களின் சாகைகள் சிதைந்தொழிந்தமையினானே, நிருத்தம் முதலிய வேதாங்கங்கள் எம்மால் செய்ய நேர்ந்தன' என்று கூறியுள்ளார்.

அற்றாகலினன்றே, வேத மந்திரமும், "ஸ்தோமம் ஜநயாமி நவ்யம்" புதிய துதி மஞ்சரியைச் செய்கின்றேன்' என்று கூறுகின்றது.

மற்றும், பிருகதாரணியமும்,

அபிஹிந ரிஷேர்வச:, "இருடியின் வாக்கைக் கேட்டிலேயோ" என்று கூறுகின்றது.

பிரசாபதியே, வேதத்திற் கூறியுள்ள உருவ நாமங்களை வகுத்தவராவர்.

இதுபற்றியே பதஞ்சலி மகரிஷியும், பாணினி, அத்-1, பாதம்-1, 25 வது சூத்திரத்திற்குப் பாடிய மியற்றுங்கால்,

"வேத மியற்றினர் இன்னவரெனக் காணப்படாவிடினும் வேதம் நித்தியமெனல் அமையாது" என்றருளி யுள்ளார்.

ஈண்டு ஒலியானது நித்தியமாமெனினும், 'பல்வகைச் சொற் கூட்டங்களாய வேதத் தொகுதி நித்தியமாதல் யாங்ஙனம்'? என்பது பதஞ்சலியின் கருத்தாமெனல் புலப்படுகின்றது.

இச் சாமவேதம் நாலாயிரம் வியூகங்களை யுடையதாம்.

சாமவேதத்தின் சாகையியல்
முற்றிற்று.

சாமவேத கானவியல்.

ஓம் என்பதை நீட்டிக் கூறின் ஒரு விதமாகிய சுரம் உண்டாகின்றது. இதுபற்றியே சாந்தோக்கிய வுபநிடதமும் இதை விரித்துக் கூறுகின்றது. கண்ணபிரானும் ஆங்கிரசரிடத்தில் சங்கீத வித்தையைப் பயின்றவர் எனவும், கண்ணபிரான் 'சாலிக்யம்' என்பதோர் சங்கீதத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது 'யாதவர்கட்கு இனிது தெரியும்' எனவும் உபநிடதமுரைக்கின்றது. பீஷ்மருடைய உடல் விழுங்கால் சாமவேத கீதஞ் செய்ததாக சாந்திபருவம் 16-வது சுலோகங் கூறுகின்றது.

ஈண்டு, "வேத மந்திரங்கள் கானத்துடன் கூடியே துதிக்கப்படுகின்றன; இன்றேல், பிழையுற்றன" என சைமினி முனிவர் தெளிவாய்க் கூறியிருத்தலின், சங்கீதமும் வேள்வி யநுட்டானத்திற்கு வலிவையுண்டாக்கலின் கீதத்தால் சமத்காரஞ் செய்யப்பெற்ற இருக்கு வேத மந்திரங்களாலேயே துதி செய்தல் இனிது அமையுமாதலின் இருக்கு வேத மந்திரங்களை, சுரங்களுடன் கூடியவைகளாய்ச் செய்தலே சங்கீதத்தின் பிரத்தியட்சபயனும். ஆதலின் சங்கீதமும் ஒருவகையான சமத்கார கருமமே யென்பது காண்க. இப்பொருளே சாமம் என்னும் சொல்லானும் நன்கு விளங்குகின்றது.

அற்றுகலினன்றே சாந்தோக்கிய வுபநிடதமும், "சாமத்திற்கு யாது கதி? சுரம்" என்றறற் றொடக்கத்து மந்திரங்களாலும் இதைக் கூறுகின்றது.

அங்ஙனமே, 'அர்த்தைகத்வாத் விகல்ப:' என்னும் சைமினியின் சூத்திர பாடியத்தில் சபர சுவாமிகளும் "சாமவேதத்தில் சகத்திரம் கீதி யுபாயங்கள்" என்று கூறியுள்ளார்.

இனி, மார்பு, கழுத்து, தலை என்னும் மூன்றிடத்திலுமிருந்து ஒலியெழுகின்றது. இம் மூன்றையும், காலைத் தீயோம்பல், கடும்பகற் றீயோம்பல், மாலைத் தீயோம்பல் போன்றே எண்ணல் வேண்டும். இந்த மூன்றிடங்களில் எழுவகைச் சுரங்களுந் தோன்றுகின்றன.

சுரங்கள் ஏழு, கிராமம் மூன்று, மூர்ச்சனை இருபத்தொன்று, தானங்கள் நாற்பத்தொன்பதாம். இவைகள் ஒன்று கூடி ஒரு சுரமண்டில மெனப்படுகின்றன.

இவற்றுள், ஷட்சம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்னுமிவைகளே எழுவகைச் சுரங்கள். ஷட்சம், மத்தியமம் காந்தாரம் என்னுமிவைகள் கிராமங்க ளெனப்படுகின்றன.

இவற்றுள் ஷட்சக்கிராமத்தில் பதினன்கு தானங்களும், மத்தியமக் கிராமத்தில் இருபது தானங்களும், காந்தாரக் கிராமத்தில் இருபது தானங்களுமாகின்றன.

மூர்ச்சையானது, ரிஷி, பித்திரு, தெய்வம் என்னும் பேதத்தால் தனித்தனி எழுவகையாகின்றது. இதில், நந்தீ, விசாலா, சுமுகீ, சித்திரா, சித்திரவதீ, சுகா, பலா என்னு மிவ்வேழும் தேவமூர்ச்சனைகளாகின்றன,

ஆப்யாயனீ, விசுவபிருதா, சந்திரா, ஹேமா, கபர்த்தினீ, மைத்திரீ பார்ஹதீ, ஹ்ருஷ்யகா, ரசனீ, என்னு மிவ்வேழும் ரிஷி மூர்ச்சனைகளாகின்றன.

தேவ, பித்திரு, ரிஷி என்னும் மூர்ச்சனைகளை, கந்தருவர், வேள்வி, மனிதர் என்பவர்கள் முறையாய்ப் பின் பற்றுபவர்களாகின்றனர். உலகம் பற்றிய மூர்ச்சனைகள் ரிஷி மூர்ச்சனைகள் என்று வழங்கப்படுகின்றன.

ஷட்சத்தால் தேவரும், ரிஷபத்தால் ரிஷிகளும், காந்தாரத்தால் பிதிர்க்களும், மத்தியமத்தால் கந்தருவரும், பஞ்சமத்தால் எல்லா மக்களும், நிஷாதத்தால் வேள்வியும், தைவதத்தால் ஏனைய வுயிர்களும் களிப்படைகின்றன.

கானத்திற்கு, ரத்தம், பூர்ணம், அலங்கிருதம், பிரசன்னம், வியக்தம், விகிருஷ்டம், சலக்ஷம், சமம், சுகுமாரம், மதுரம் என்னுமிவைகள் பத்துக் குணங்களாகின்றன.

சுரமானது, உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம், பிரசிதம், நிகாதம், என ஐவகைத்தாம்.

சாமவேத சங்கிதையிலே, உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்னும் மூன்றேயுள்ளன.

நா, அண்ணம் முதலியவைகளின் மேற்புறத் தெழுவது உதாத்தமாம். அது, 'ஆயே' என்பது போன்றதாம். நா, அண்ணம் முதலியவற்றின் கீழ்ப்புறத்திலிருந்தெழுவது அநுதாத்தமாம். அது 'அர்வாங்' என்பது போன்றதாம். இவ்விரண்டு வகையும்பற்றி யெழுவது சுவரிதமாம்.

ஈண்டு, உதாத்தத்தில் நிஷாதமும் காந்தாரமும்; அநுதாத்தத்தில் ரிஷபமும் தைவதமும்; சுவரிதத்தில் ஷட்சம் மத்தியம் பஞ்சமம் என்பவைகளு மிருக்கின்றன. இதன் விரிவை நாரதீய முதலிய கான நூலிற் காண்க.

ஈண்டு, நிஷாதம் கிருஷ்டம், தைவதம் பிரதமம், பஞ்சமம் துவிதீயம், மத்தியமம் திருதீயம், காந்தாரம் சதுர்த்தம், ரிஷபம் மந்திரம், ஷட்சம் அதிஸ்வாசிரயம் என வழங்கப்படுகின்றன.

கிருஷ்டம்—11. பிரதமம்—1. துவிதீயம்—2. திருதீயம்—3. சதுர்த்தம்—4. மந்திரம்—5. அதிசுவார்யம்—6. பரிசுவார்யம்—156. என்பன சுரத்தின் எண்கள்.

மற்றும்,—பிரேங்கணம். O துவிமாத்திரம். ப தீப்தம். Λ ஆயதை. * கருணை என்னுமிவைகளும் இவற்றின் குறிகளாகின்றன.

அகாரம்—அபிகிதம், நகாரம்—நமனம், விகாரம்—விநதம் எனவும் வழங்கப்படுகின்றன.

சந்தம், அதிச்சந்தம், விச்சந்தம் என மூவகைத்தாம்.

அவற்றுள், காயத்திரிக்கு —	சந்த —	எழுத்துக்கள் —	24
உஷ்ணிக்	,,	,,	28
அநுஷ்டுப்	,,	,,	32
பிருகதி	,,	,,	36
பங்க்தி	,,	,,	40

திருஷ்டுப் —	சந்த —	எழுத்துக்கள் —	44
சகதி	,,	,,	48
அதிசகதி	,,	,,	52
சாக்வரி	,,	,,	56
அதிசக்வரி	,,	,,	60
அஷ்டி	,,	,,	64
அத்யஷ்டி	,,	,,	68
திருதி	,,	,,	72
அதிதிருதி	,,	,,	76

இவைகள் சந்தங்களின் எழுத்துக்களாகின்றன.

ஈண்டுச் சாமவேத கானமானது, கேயகான மென்றும், ஆரணிய கான மென்றும் இருவகைத்து.

இதில் மக்கட் கூட்டத்திலிருந்து பாடுவது கேயகானமாம். இது இல்லற இயலுக்குரியதாம்.

துறவி, மோட்ச வேட்கையாளர் முதலியோர்கள் தவநெறியிற் காலங் கழித்தல் வேண்டுமென ஆரணியத்திலிருந்து பாடுவது ஆரணிய கானமாம்.

'சாம வேதத்தின் சந்த ஆர்ச்சிக மென்னும் முதலாவது ஆர்ச்சிகமானது இருவகைக் கானங்களையு முடையது' என்பர் சிலர்.

சிலர் 'கேய கானம் ஒன்றையே யுடையது' என்பர்.

சுரங்களும் ஏனைய வேதங்களி லுள்ளவற்றினும் சாமவேதப் பிராமணங்களிற் கூறப்பட்டுள்ளவைகள் வேறுபாடுடையவைகளாகின்றன.

மற்றும், ஏனைய வேதங்களிலுள்ள சுரங்கட்கும், சாம வேதத்திலுள்ள சுரங்கட்கும் மாறுபாடு காணப்படுகின்றன. இவ் வேறுபாடு விளங்குமாறு ஒரு மந்திரத்தை மாத்திரம் எடுத்துக்காட்டாகத் தெரிவிப்பாம்:—

அக்கினிம் தூதம் வ்ருணீமஹே ஹோதாரம் விசுவ வேதஸம்,

அஸ்ய யக்ஞஸ்ய சுக்ரதும்.

என்னும் இம் மந்திரம் இருக்கு வேதத்தில் வருங்கால் இவ்வோசையுடன் எளிதாய் இவ்வாறே உச்சரிக்கத்தக்கதாம்.

இம்மந்திரமே சாமவேதத்தில் வரும்போது,

3 2 3 1 2 3 2 3 1 2
அக்கினிம் தூதம் வ்ருணீமஹே ஹோதாரம் விஸ்வ வேதஸம்,

3 2 3 1 2 3 1 2
அஸ்ய யக்ஞஸ்ய சுக்ரதும்.

என்றிவ்வாறு சந்தங்களை ஏற்றே வருகின்றது.

ஈண்டுச் சாமவேதத்தில், 1—2—3—என்னும் எண்கள் முறையே, உதாத்தம், அநுதாத்தம், சுரிதம் என்னும் சுரங்களைக் குறிக்கின்றன.

மற்றும், ரி, க, ம, ப, த, நி, ஸ, என்னும் ஏழு சுரங்களும் சாமவேதத்தில், ம, க, ரி, ஸ, த, நி, ப என வழங்கப்படுகின்றன. இவை நாரத சிட்சையிற் கூறப்பட்டிருப்பனவாம். மற்றும் இவைகளின் பேதங்களைச் சாமவேத கீதத்தை யுணர்ந்த பெரியார்பால் கேட்டுணர்க.

சாமவேத கானவியல்

முற்றிற்று.

தேவதை யியல்.

ஈண்டு, யாஸ்கமுனிவர், "எதை விரும்பி எத்தேவதையை 'இவர் இறைவர்' எனக் கருதி இருடியானவர் துதிக்கின்றாரோ அம்மந்திரத்திற்கு அவரே தேவதையாவர்" என்று கூறியுள்ளார். அத் தேவதைகள்; தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்களாற் கூறத்தக்கதான, அத்தியான்மம், அபரோட்சம், பரோட்சம் என மூவகைகளாகின்றன.

இவற்றுள், மண்ணுலகம், விண்ணுலகம், சுவர்க்கம் என்னும் மூன்றிடங்களிலுமுள்ள ஒளிமண்டிலங்கள், மண்ணிற்கு அக்கினி தேவதை யென்றும், விண்ணிற்கு மின்னல் இந்திர தேவதை யென்றும், சுவர்க்கத்திற்குச் சூரிய தேவதை யென்றுங் கொள்ளப்பட்டிருக்கின்றன என்ப.

இவற்றுள், அக்கினியானது, இந்திர னென்றும், சோம னென்றும், வருண னென்றும், மழை யென்றும், ரிது வென்றும் ஈண்டு விதந்து கூறப்படுகின்றது.

மற்றும், வைதீகர்களால் தனது வீட்டில் எப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கின்ற அக்கினி கார்ஹபத்திய அக்கினி யெனப்படும்.

பின்னர், இவ்வக்கினியிலிருந்து தக்ஷிணுக்கினி என்பது உண்டாகின்றது. அதாவது தென்திசைக்கண் நிறுவப்படுகின்ற அக்கினியாம். ஓமஞ் செய்தற்குரிய ஆகவநீயாக்கினி யென்னும் கீழ்த் திசையிலுள்ள அக்கினியும் கார்ஹபத்திய மென்னும் அவ்வக்கினியிலிருந்தே கொண்டு வரப்படுகின்றது. மற்றும், மின்னல், சூரியன், பலாச மரம், என்னும் மூன்றினுமிருந்துண்டான அக்கினிகளும் இம்மூன்றிடத்துஞ் சேர்க்கப்படுகின்றன. மகரிஷிகளும் ஆரியர்களும் அக்கினியையே தெய்வமாக வழிபட்டு வந்தார்களெனத் தெரிகின்றது. பாரீசிகர்களுக்கும் அக்கினியே தெய்வமாம்.

எல்லா வுலகத்திலும், எம்மதத்திலும், எவ்விடத்திலும் எல்லாராலும் அக்கினியே வழிபடப் பெறுகின்றது. ஒவ்வொரு வேதங்களும் தொடக்கத்திலே அக்கினியையே துதிக்கின்றன.

தேவர்கள் யாகஞ் செய்வதற்குச் சமித்துக்களைத் தேடும்போது இராக்கதர்கள் தேவர்கள்போல் வடிவுடையவராய் அவருட் கலந்துகொண்டு அவரை நிந்தித்தனர். பின்னர் ஒருவருக்கொருவர் போரிட்டனர். அப்போது, ஒருவருக்கொருவர், 'நீ ஏன் இவ்வணஞ் சொன்னாய், நான் அவ்வாறு சொல்லவில்லை' என்றிவ்வாறு கலகமுண்டாகும்போது அக்கினி மாத்திரம் ஒன்றும் பேசாதிருந்ததாலும், பிறர் சொன்னதைக் கேட்காததாலும், அதுதொட்டு அக்கினியையே பெரிய தெய்வம் என தேவர்கள் வணங்கத் தலைப்பட்டனர், என்று 3—4—3—1—8. சதபதப் பிராமணங் கூறுகின்றது.

ஈண்டு, ஐவகைத்தீ, மூவகைத்தீ எனப்படும் இருவகைக் கடவுள் தீக்களும் வெளிப்படுவதற்குக் காரணமாகிய அரசமரத்தையும், அக் கடவுளுக்கு ஆசனமாகிய சமிவிருக்ஷ முதலாகிய மரங்களையும், உலகிலுள்ள தீ, மனையாளோடு இல்லத்தில் ஓம்புந் தீயாகிய ஔபாசனத்தீ எனும் இத்தீக்களைப்போன்று அவியாமல் விளங்கும் சோதி விருக்ஷத்தையும், சமைத்தற்குரிய தீயைப் போன்று வேண்டுங்கால் தீ தோன்றுதற்குரிய ஞெலிய மரங்களையும், வேள்விக்கு இன்றியமையாது வேண்டப்படும் சோமக் கொடி முதலிய பிறவற்றையுமுடையதால் மலையை வேள்விக்கு உவமையாகச் சொல்லலாம்.

தீக் கடவுளானவர், அச்சுவ வுருவங்கொண்டு அதன்பால் ஒளித்தலால் அரசமரம் அச்சுவத்த மெனப்பட்டது.

இவ்வாறே, தீக்கடைக் கோலாலெழுகின்ற அக்கினியானது, காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணாபனம் என மூவகைப்படும். இவற்றோடு சப்பியமும் ஆவசத்தியமுங் கூடில் ஐந்தீயெனப்படும்.

குறிப்பு:— அச்சுவம்—குதிரை.

குறிப்பு:— சப்யம்—சபையிலுள் தீ. ஆவசத்தியம்—உண்டி முதலியன செய்யுந் தீ.

தீக்கடவுள் புகுந்தொளித்தமையால் அரசமரமும், வெள்ளிக்கு இடமென வேதம் புகழ்தலால் அத்திமரமும், சுவர்க்கத்திலிருந்து மண்ணுலகத்திற்கு வந்தமையால் புரசமரசமும், தீக் கடவுளின் கோபத்தைத் தணித்தலால் சமிவிருக்ஷமும், மேக சம்பந்தத்தால் ஒளி தங்கலால் இடிவீழ்மாமும், யாகத்தலைவனுகிய மாயோனிருப்பிடமாதலின் தாமரையிலையும் அக்கினி தேவனுக்கு ஆசனமாகக் கொள்ளப்படுகின்றன.

மற்றும், இவ்வக்கினியே உருத்திர னென்றும், கடோபநிடதத்தில் நாசிகேது என்னும் அக்கினியைப் போதிப்பது போன்று, பரமான்மாவென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஆனல், தீயை அபிமானித்துள்ள அக்கினி தேவதையே தீ யென்பதற்கும், அதுவே அருட்பெருஞ் சோதியாகிய பரமான்மா என்பதற்கும், வேதம், உபநிடதம் முதலிய எல்லா நூல்களும் இடங்கொடுக்கு மென்பதும் ஈண்டு உணரற்பாலது.

அங்ஙனமே, அக்கினி, சோமன், வருணன், பூஷா, பிருகற்பதி, பர்வதம், குச்சம், விஷ்ணு, வாயு முதலிய பெயர்களால் இந்திரன் வழங்கப்படுகின்றுன்.

மற்றும், 'இந்திரிய மிந்திர லிங்கம்' என்றற்றொடக்கத்துப் பாணினி முனிவரின் சூத்திரத்தாலும், 'சமே இந்திரோ மேதயாஸ்பிருணோது' 'சந்த மிந்திரமித்யாசக்ஷதே' என்பது முதலிய உபநிடத வாக்கியங்களாலும் பரமான்மா வெனப்படுகின்றவனும் இவ்விந்திரனே யாவன் என்பதுங் காண்க.

அகலிகையை மணந்து விருத்திரனைக் கொல்லுதல் முதலிய செய்கைகளையுடையவனுன வான நாட்டரசனும் இவ் விந்திரனே யாவன்.

இந்திரோ மாயாபி: புருரூப மீயதே, என்றபடி சகுணம், நிர்க்குணம் என்னும் இருவகையாகக் கொள்வதற்கும் தக்க பிரமாணங்க ளிருக்கின்றன என்பது முணர்க.

சந்திரன், வாயு, சம்வச்சரம், என்பது முதலிய பெயர்களால் சூரியன் வழங்கப்படுகின்றுன்.

காயத்திரி மந்திரத்திலுள்ள 'சவிதா' என்பது சகுணமாகிய சூரிய தேவதையையும், நிர்க்குணமாகிய பரமான்மாவையும் உணர்த்துவது போன்று இவ் வக்கினியையும் இருவகையாகக் கொள்வதற்கும் பிரமாணங்கள் இருக்கின்றன வென்பது மறிக.

ஈண்டு, பல்லாயிரம் மக்கள் கூடிய இராச்சியத்தை ஒரு இராச்சியம் என்பதுபோன்று வியவகாரத்தில் பல்வகைத் தேவதைகளைக் கொண்டு, முடிவில் எல்லாம் ஒரே தெய்வமென்று கொள்வதில் இழுக்கொன்று மில்லை. இதுவே நான்கு வேதங்கட்கும் பாடியமியற்றிய சாயணரின் கருத்தா மென்பது அவருடைய பாடியத்தை உற்று நோக்கின் தெற்றென விளங்கும். இஃதுணராதார் 'சாயணர் ஆரியமதத்தைக் கட்டிவிட்டா ரென்றும், சாயணரின் பாடியம் குருடன் கையிலுள்ள ஒரு கோல் போன்றது என்றும்' பலவாறு சிலர் குழறுவர்.

ஈண்டு அதில் ஒன்றைமாத்திரம் எடுத்துக் காட்டுவாம்:—

விருத்திரன் என்பது 'மேகம்' எனக் கூறுகின்றார் நிருத்தகாரர். இதிகாசர், 'ஒரு அசுரன்' என்பர். 'பாவம்' என்பர் மற்றொருவர். இன்னுமொரு சாரார் 'இருள்' என்பர், மற்றும் இவ்வாறே பலவகையாம் என்பதை யூகித்துணர்க.

மற்றும், இதை வாயுவினாற் சூழப்பட்ட இந்திரனென்னும் மின்னலொளியால் நீர் கொதிப்புண்டாகுமிடத்து மழையாய் விழுகின்றதென்றும், இந்திரன் வச்சிராயுதத்தால் மேகத்தைப் புடைக்கும்போது மழையுண்டாகின்றதென்றும், மேகமாகிய மடுவின்கண் விருத்திரனாற் கட்டிவைத்திருந்த பசு வென்னும் நீரை இந்திரன் அவிழ்த்து விட்டனனென்றும் மற்றும் பலவாறாகவும் மொழிப.

ஈண்டு, நீர், ஒளி என்னு மிவ்விரண்டின் சேர்க்கையாலேயே மழையுண்டாகின்றதென்பதும், இதையே யுத்தமென வழங்குவர் என்பதும் உற்று நோக்கத்தக்கன; இவ்வனைத்தையுங் கூறுகின்றனர் சாயணர் என்பதாம்.

சோமம், என்பது இருக்கு வேதம் ஒன்பதாம் மண்டிலத்தில் பல வகையாய்க் கூறப்பட்டிருக்கின்றது.

இச் சோமமும் சந்திரனும் ஒன்றென்று தோன்றுகின்றது. மற்றும், 10—15—13. வது சூக்தம் இவ்விரண்டும் வேறென்றுங் கூறுகின்றது. ஆனால் சோமக் கொடிக்குள்ள குணங்களனைத்தும் சந்திரனிடத்தும் இருக்கின்றன.

"இச் சோமமானது, ஸ்ரீவை சோமம்" "ராஜாவை சோமம்" "சோமாவை பிரசாபதி:" என்றற் றொடக்கத்து நூற்றுக்கணக்கான வேத மந்திரங்களாற் கூறப்பெற்றதும், வேள்விக்கு முக்கியமானதும், இச் சாமவேதத்தில் பெரும்பான்மை துதிக்கப் பெற்றதுமாம்.

மற்றும், உபநிடதங்களிலும் மற்றைய நூல்களிலும் இச் சோமமே பரமான்மாவெனக் கூறப்படுகின்றது.

மற்றும், இச் சாமவேதத்திலும் பரமேசுரனுகவும் அது துதிக்கப்படு கின்றது. உற்று நோக்கின் ஆன்மா வெனப்படும் இச் சோமம் வேதாந்தி கள் கொள்ளும் அத்துவிதீயப் பிரமமென்றுந் தோன்றுகின்றது.

மற்றும், நூல்களில் இச் சோமமே, இந்திரன், அக்கினி முதலிய தேவதைகளாகவுங் கூறப்படுகின்றது. சோமமே படைப்புத் தொழிலைச் செய்கின்றதென்றும் பிரளயத்தில் மிஞ்சி நிற்கின்றதென்றுங் கூறப்படு கின்றது.

சாந்தோக்கிய உபநிடதத்தில் சோமம் என்பது பிராணனெனக் கூறப் பட்டிருக்கின்றது. மற்றும் பல உபநிடதங்களும் அப்படியே கூறுகின்றன.

மற்றும், சோம மென்பது ஒரு கொடி யெனவும், இது மலையின் உச்சி யிலும், சிந்து முதலிய நதிகளிலும், குருக்ஷேத்திரத்தைச் சார்ந்த 'சர்யண வதி' யென்னும் நதியிலும் உண்டாகின்றதெனவும் வேத முதலிய நூல் கள் கூறுகின்றன.

மற்றும், சோமமானது விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்ததாக இருக்கு வேதத்தின் 9—61—10 வது, மந்திரங் கூறுகின்றது.

இச் சோமம், வானுலகத்திற்கு 'ஒரு குழந்தை' யெனவும் அழைக்கப் பெறுகின்றது. இன்னும், சந்திரன் எனவும் வழங்கப்படுகின்றது.

மற்றும், அசுரர்களின் ஆசிரியர்களான, சண்டன், மர்க்கன் என்னும் இருவரும், தேவர்கள் அசுரர்களிடத்துப் போர் புரிந்து தோல்வியடைந்தமை யால் வேள்வி செய்யத் தொடங்கும்போது அங்கு, 'சுகமந்தி' என்னும் பாத்திரத்திலிருந்த சோமரசத்தை யருந்துவதற்கு அசுரர்கள் வந்தார்கள் என்றும், பின்னர் அவர்களை வெளியே தள்ளி விட்டார்கள்' என்றும் தைத் திரீய சங்கிதை 6—4—10 வது மந்திரங் கூறுகின்றது.

அன்றியும், பிரசாபதியானவர் முன்னர்ச் சோமத்தை யுண்டாக்கிய பின்னர் மூன்று வேதங்களையு முண்டாக்கினர். அச் சோமம் தனது உள்ளங் கையில் மூன்று வேதங்களையும் மறைத்துக்கொள்ள, பிரசாபதியின் மகளா கிய சாவித்திரி யென்னும் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுவதற்குச் சோமம் உடன்படாததால், பிரசாபதியானவர் 'சதாகரம்' என்னுமொரு பச்சிலையைக் கொண்டு வந்து தனது மகளிடத்திற் கொடுத்து 'இதை நெற்றி யிற் பொட்டிட்டுக்கொண்டு செல்வையேல், சோமம் உன்பால் மோகிக்கும்' என்றுகூற, அங்ஙனமே அவள் செல்ல, அவளைக் கண்டு சோமம் மோக மடையுங்கால். அவள், 'சோம! நீ கைக்குள் வைத்திருக்கின்றது யாது'? என்று வினவ, இது மூன்று வேதமாமெனக் கூற, அப்போது அவற்றைச்

சாவித்திரி பெற்றுக்கொண்டனள். பின்னர் சீதாசாவித்திரி யென்னும் அப் பெண்ணைச் சோமம் மணந்து கொண்டது என்று தைத்திரீயப் பிராமணங் கூறுகின்றது.

இருடிகள், கந்தருவ உலகத்திலுள்ள சோமக் கொடியானது இங்கு எவ்வாறு வந்து சேருமென்று ஆராய்ந்து பார்த்து, கந்தருவர் பெண்பாலிடத்து மிக மையல் பூண்டவ ராதலின், கலைமகளையே காயத்திரி முதலிய சந்த வடிவங்களாய் அனுப்பினர். கலைமகளுங் கெருடனாய்ச் சென்று சோமக் கொடியைக் கொண்டுவந்தனள் வருங்கால் 'விச்வா வசு' என்னுமொரு கந்தருவன் வலிந்து அதைக் கொண்டுபோய்த் தன்னிடம் மூன்று தினம் வைத்துக் கொண்டனன்; பின்னர், ஒரு பெண்ணைக் கொடுத்து அதை வாங்கிக் கொண்டனர், என்றும்,

மற்றும், பறவை வடிவாய்க் கால்களா லிறுகப் பிடித்துக்கொண்டு சோமத்தைக் கொண்டு வந்ததால் அப் பறவையின் ஒரு சிறகு ஒடிந்து விழுந்தது அதுவே பர்ண விருட்சம் (புரசமரம்) என்றும், அல்லது சோமக் கொடியின் இலை யொன்று கீழே விழுந்து அதுவே புரசமர மாயிற்றென்றும்,

மூக்கால் கொத்திக்கொண்டு வந்தமையின் சோமரச முழுதையும் கருடன் வாயால் இழுத்துக் குடித்து விட்டனன்; பின்னர் வேட்போர்களால் மந்திரங்களைக்கொண்டு ரசம் உண்டாக்கப்பட்டது என்றும்,

சோமரசத்தை யருந்துவதில் கலக முண்டானபோது, முதலாவது இந்திரன் அருந்தல் வேண்டுமென்றும், பின்னர் வாயு, மித்திரா வருணர்கள் அருந்தல் வேண்டுமென்றும் தீர்மான மாயிற்றென்றும்,

"ஈசானிய திசையில் அசுரர்கள் தோல்வி யடைந்தமையின் அத்திசையே சோமத்தைக் கொண்டு வருவதற்கு உரியது என்றும்" ஐதரேயப் பிராமணம் முதலிய பல சுருதிகளுங் கூறுகின்றன.

இருக்கு வேதத்தில், சோமக் கொடியின் கிழங்கு கூறப்பட்டிருக்கின்றது, மற்றும் அதில், "அக் கொடிக்குப் பதினைந்து இலைகளிருக்கின்றனவென்றும் அக் கொடியும், நீரில் மிதப்பது, மரத்தில் தொங்குவது, பூமியில் முளைப்பதென மூவகைத்தென்றும். மற்றும், அதன் வகைகள் இருபத்து நான்கு என்றும்" பல்வகையான கதைகளும் வேறுபாடுகளும் உண்டு.

தேவதை யியல்

முற்றிற்று.

சோம யாகத்தின் சுருக்கம்.

ஈண்டு, அக்கினிஷ்டோமம், அத்யக்கினிஷ்டோமம், உக்த்தியம், ஷோடசீ, அதிராத்ரம், அப்தோர்யாமம், என்னும் அறுவகைச் சோம யாகங்களுக்கும் பொதுவாய் அக்கினிஷ்டோமம் என்று பெயர்.

வேள்வித் தலைவன், சோம யாகஞ் செய்யக் கருதிச் சிலரைக் குறித்து அதற்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டு அவர்கள் சம்மதிக்கில் முன்னர் ஒருவனைத் தன்னிடம் அவர்களை அழைத்து வருமாறு அனுப்பல் வேண்டும், அவன் 'சோமப் பிரவாகன்' எனப்படுவன்.

இவ்வாறு யாகத்திற்கு அநுகூலர்களாக வேண்டுமென்று பிறரைக் கேட்டுக்கொள்வதற்கு 'வரணம்' என்று பெயர். இருத்துவிக்குகள் (வேட்போர்கள்) பதினறு பேர்களாவார்கள். இவர்களுள் நான்கு நான்கு பேர்கள் ஒரு கண மெனப்படுவர். அவர்களில் அத்துவர்யு, ஹோதா, பிரமா, உத்காதா என்போர்கள் தலைமை பூண்டவர்கள். முதல் மூவரும் தர்சபூரண மாச இஷ்டியில் கிரியைகள் செய்ததுபோன்றே செய்து கொண்டிருப்பவர்கள். உத்காதா என்பவன் சோமரசத்தை ஹோமஞ் செய்வதன் முன்னர் சாம கானஞ் செய்பவன்.

அத்துவர்யு,	பிரதிபிரஸ்தாதா,	நேஷ்டா,	உந்நேதா,
ஹோதா,	மைத்திராவருண,	அச்சாவாகன்,	கிராவஸ்துத்,
பிரமன்,	பிராமணச்சம்ஸி,	ஆங்கினீந்திரன்,	போதா,
உத்காதா,	பிரஸ்தோதா,	பிரதிஹர்த்தா,	சுப்ரமண்யன்.

என்பவர்கள் வேள்வி யாற்றுகின்றவர்கள்.

சோமக் கொடியைக் கொண்டு வந்து, நைவேத்தியஞ் செய்வது முதற் கொண்டுள்ள பதினறு உபசாரங்களையும் நாடோறுஞ் செய்தல் வேண்டும். அவையாவன:—முன்னர் பிராயணீயா இஷ்டி யென்னும் அதிதி தேவியாரைப் பூசை செய்தல், பின்னர் சோமக்கிரயம் அதாவது ஒரு வயதுள்ளதும், பூனைக் கண்ணுடையதும், சிவப்பு நிறமுடையதுமாகிய பசுங் கன்றைக் கொடுத்துச் சோமத்தை விலைக்கு வாங்கல், பின்னர் ஆதித்யா இஷ்டி, அதாவது சோமக் கொடியை அதிதியாகப் பாவித்துப் பூசை செய்தல், பின் பிரவர்க்கியம், அதாவது யாகத்திற்கு ஒரு தலையைப் போன்றதாம். அதுவோ, மூன்று வகையான மண்ணைக் கொண்டுவந்து அவற்றுடன் வெள்ளாட்டின் மயிரையுங் கலந்து முக் கலசங்களை அடுக்கிவைத்தது போன்று ஒரு கலசஞ் செய்து அதின்மேல் (இது மகாவீரம்) நெய்யைப்பூசி வேத மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு சுட்டு, நெய், பசுவின்பால், வெள்ளாட்டுப் பால் மூன்றையும் அக்கலசத்தில் வார்த்துக் கொதிக்கவைத்து (இது கா்மம்) ஆகுதி செய்தல்.

உபஸத்யாகம் விரோதிகளை வெல்வதன் பொருட்டு நெய்யை ஆகுதி செய்தல்.

பின்னர்ச் செய்வது அக்கினிஷோமீய பசுயாகம் எனப்படும். அதாவது ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் புரசமரக் கொம்பாகிய யூபத்தில் கட்டி, இச்சிமரத்தின் கொம்பால் அதைத் தொடல் முதலிய அநேக கருமங்களைச் செய்து ஆக்கினீந்திரன் என்பவன் சாமித்திர சாலை என்னுமிடத்திற்கு (கடாவைக் கொல்லுமிடத்திற்கு)க் கொண்டுபோய், தலை மேற்கும், கால்கள் வடக்காகவும் வைக்க, வேள்வித் தலைவன் கொல்லும்படி சொன்னவுடன் கொல்லுகின்றான். அப்போது வேள்வித் தலைவன், கடாவே! நீ கொல்லப் படவில்லை துன்பமற்ற சுகமயமாகிய இடத்திற்குச் சூரியன் உன்னைக் கொண்டுபோவான் என்னும் பொருள் கொண்ட மந்திரத்தைச் சொல்லுகின்றான்.

இவ்வாறு பசு என்னும் அக் கடாவை வாய்மூடிக் கொன்று அதன் ஈரலின் பக்கத்திலுள்ள ஒருவிதமான மெல்லிய சவ்வை எடுத்து ஒரு முள்ளில் வைத்து ஓமத் தீயில் காய்ச்சி ஆகுதி செய்தல், இது அக்கினி சோமம் என்பவர்களின் ஆராதனையாம்; இதை 'வபா ஹோமம்' என்பர்.

பின்னர், சவனீய பசு யாகம் என்பது, சோம யாகத்தில் மூவகைத்து அதாவது, காலைச் சவனம், மத்தியான சவனம், மூன்றாவது சவனம் என்பதாம்.

இதில் பசு யாகத்தில் ஈரல் பை. (வபை) இது காலையில் ஓமஞ் செய்யப்படுகின்றது. பசுவின் அங்கங்கள் மூன்றாவது சவனத்திலும் ஓமஞ் செய்யப்படுகின்றன, மற்றிரண்டும் புரோடாசத்தால் ஓமஞ் செய்யப்படுவன. இது சவனீய புரோடாச யாக மெனப்படும்.

பின் சோமத்திற்குச் சரு என்னும் பொங்கல் அன்னஞ் செய்து ஆகுதி செய்தல்.

பின் பலவகைக் கருமங்களைச் செய்து சோமக்கொடியை இடித்துப் பிழிந்து ஆகுதி செய்தல். இவ்வாறு சோமயாகத்திற்கு அநேக வகையான அங்க யாகங்களுண்டு அவைகளைப் பிறவிடத்திற் காண்க.

மற்றும், வாயு, விஷ்ணு, வருணன், யமன், அசுவினி குமாரர்கள். அதிதிதேவி, சரஸ்வதி, யமுனா நதி, அக்கினியின் மனைவி, உடன் பிறந்தாள் ரிபு, கருடன், பாத்திரங்களான தேவிகள் என்பவர்களும் ஈண்டுத் தேவர்களென வழங்கப்படுகின்றனர்.

மற்றும், உஷாக்கால தேவதை எண்ணிறந்த வகையாய் விதந்து கூறப்பட்டிருக்கின்றது. பிருகற்பதிசவனம், அந்தணருக்கும்; இராச சூயமும், அசுவமேதமும் அரசருக்கும்; சோம யாகம் வணிகருக்கும்; உரித்தென்ப.

ஈண்டு ரிஷிகள் என்பது வேதமந்திரத்தைக் கண்டொழுகிய தீர்க்க தரிசிகளெனப்படுவார்கள்.

வேதங்களை யியற்றியவர் ரிஷிகளேயாவர்; ஏனெனின்? அவர்கள் பெயரைக்கொண்டு மந்திரங்கள் வழங்கப்படுதலின் என்பர் ஒரு சாரார்.

சோம யாகத்தின் சுருக்கம்
முற்றிற்று.

தமிழும் ஆரிய வேதமும்.

ஈண்டு, பொங்கர் நாடு, ஒளி நாடு, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, பன்றி நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழி நாடு, மலை நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, என்னும் செந்தமிழ் நாட்டிலுள்ள பேரறிவாளர்களும் பேரருளாளரும் ஏனையோரும் வடமொழி மறையைப் போற்றுகின்றார்களென்பது முணர்க அது வருமாறு:—

தொல்காப்பியம்.

அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலு
முளவென மொழிப விசையொடு சிவணிய
நரம்பின் மறைய வென்மனார் புலவர்.

.....................................யுணர்ச்சிவாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

உயர்ந்தோர்க்குரிய ஓத்தி னான.

வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது. எனவும்,

வீரசோழிய வுரை.

வடமொழிச் சந்தம் இருபா லுறென
இருவித சந்த மிவற்றுறன் றெழுத்தா விலங்குமற்றை
யொருவித மாத்திரை யாலே யொளிருமிது
பொருவரி தாகிய வாரியத் துண்டு பொதியமென்னும்
அருவரை மாதவன் கூறுந் தமிழுக் கருகமன்றே.

வடசொல் செய்யு ளீட்டச் சொல்லே. எனவும்,

அப்பர் தேவாரம்.

" சாமுண்டி சாம வேதங் கூத்தொடும் பாட வைத்தார் "

" ஆதியிற் பிரம ணூர்தாம் அர்ச்சித்தா ரடியி ணைக்கீழ்
ஓதிய வேத நாவர் உணருமா றுணர்த்த லுற்றூர் "

" பாடினூர் சாம வேதம் பைம்பொழிற் பழனை மேயார் "

" சந்தோகம் சாமமோதும் வாயானை " எனவும்,

சுந்தரர் தேவாரம்.

" சாம வேதம் பெரிது முவப்பானை "

" சாம வேதனைத் தன்னைப் பிலாதானை "

" குறிகொள் பாடலி னின்னிசை " எனவும்,

சம்பந்தர் தேவாரம்.

" தயங்கு சோதி சாம வேதர் "

" சாம வேதமோர் கீத மோதிய தசமுகன் பரவுநாம தேயமுடையர் "

" சாகை யாயிர முடையர் சாம மோதுவ துடையர் "

" தென்சொல் விஞ்சமர் வடசொற் றிசைமொழி யெழில்நரம் பெடுத்து,
துஞ்சு நெஞ்சிருள் தூங்கத் தொழுதொல் புகலூர் " எனவும்,

" பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்று
மலராய் வழிபாடு செய்யா மறைக் காடா "

" எரி பெருக்கு வரவ்வெரியீசன
துருமருக்கமாவ துணர்கிலார் "

" இருக்கு நான்மறை யீசனையே தொழுங் கருத்தினை நினைப்பார்கள் "
எனவும்,

திருமந்திரம்.

" வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதி வீடு பெற்றூரே " எனவும்,

சிலப்பதிகாரம்.

" ஓதிய வேதத் தொளியுறி னல்லது போதார் " எனவும்,

நீலகண்ட பாடியம்.

"வேதோபி சிவாகம:" "வேதமுஞ் சிவாகமமே"

ஸ்ரீ ருத்திரத்தை யோதினவர் உருத்திரபசுபதி நாயனர். எனவும்,

பெரிய புராணம்.

"தேவரு மெழுதவொணு மறையைத் தமிழ்செய்து திருப்பதிகம் மூவரும்" எனவும்,

அருமறைகள் திருக்காப்புச் செய்துவைத்த அக்கதவம், திருப்புள்ளிருக்குவேளூர்.

திருவாசகம்.

"வேதங்க ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே"

"பண்டாய நான்மறைகள டாமறியா வெம்பெருமான்"

"அருமறையின் நான்கோல மிட் டரற்று மப்பனே"

"அல்லை யீதல்லை யீதென மறைகளு மண்மைச் சொல்லினுற் றுதிக்கும்
சுருதி செந்தமி ழாக்கிய மொழியர்"

"தொகுத்தவ னருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச் சிற்றம்பலம்" எனவும்,

வேதாரணிய புராணம்.

"வீரிய சத்தியாவும் வீந்தனம் மீள நின்னல்
ஆரிய மாகி" எனவும்,

திருவாதவூரர் புராணம்.

"பங்கயச் செங்கரம் நான்கும்
வேத புத்தகமு மமுதமும் தன்விழி மணிவடமும்" எனவும்,

சீவக சிந்தாமணி.

"மாமலர்த் தெரியலான் மணிமிடற் றிடைக்கிடந்த
சாம கீத மற்று மொன்று சாமி நன்கு பாடினுன்"

"நரம்புறு தெள்விளி நவின்ற நான்மறை" எனவும்,

சிலப்பதிகாரம்.

"நான்மறை மரபிற் றீமுறை யொருபால்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி" எனவும்,

மணிமேகலை.

"சார்பிற் றோன்று வாரண வேதக்
காதி யந்த மில்லையது நெறியெனும்" எனவும்,

திருவள்ளுவர் மாலை.

"செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே" எனவும்,

நீலகேசி.

"நாத்திக மல்லது சொல்லலையாயின் முனுள் பயந்த
சாத்திர மாவது வேதமன்றோ வதுதான் சுயம்பு" எனவும்,

கந்தர் கலி வெண்பா.

"பாமேவு தெய்வப் பழமறையும்"

"ஏடகத் தெழுதா வேதச் சிரத்திருக் குமிவன்"

"நின்னிலை நிகழ்த்தாது மறைத்துக் கூறியதாகுமாதலின்
நேரினர் மறையெனச் செப்பினர் தாமே" எனவும்,

சகலாகம பண்டிதரின் நூல்.

"மறைக ளீசன்சொல்"

"ஆரண மாகமங்க ளருளினு னுருவுகொண்டு" எனவும்,

நற்கீரர் கோபப்பிரசாதமுடையரின் நூல்.

"ஆரியப் புத்தகப்பேய் கொண்டு புலம்புற்று"

திருமுருகாற்றுப்படை.

ஒருமுகம்,

"மந்திர விதியின் மரபுளி வழாஅது
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே" எனவும்,

சிவஞான பாடியம்.

"வேதம் நித்தனுகிய பரமசிவனுற் கூறப்பட்டமையினுனும், இறுதிக் காலத்துப் பரமசிவனிடத்திலொடுங்கிப் படைப்புக் காலத்திற் றோன்றுமாதலானும் நித்தியமென உபசரித்துக் கூறப்பட்டது" எனவும்,

திருவிளையாடற் புராணம்.

"ஈட்டிய சாம மாயிர முகத்தா னிமிர்ந்தது வடதிசை முகத்தில்,
பிரணவ முதித்த தவனிடை வேதம் பிறந்தது" எனவும்,

புறநானூறு.

"அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி" எனவும்,

சிறு பாணாற்றுப்படை.

"அருமறை நாவி னந்தணர்க் காயினும்" எனவும்,

பெரும் பாணாற்றுப்படை.

"வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதி சேப்பின்" எனவும்,

பட்டினப்பாலை.

"நான்மறையோர் புகழ்பரப்பியும்" எனவும்,

நான்மணிக்கடிகை.

"மறையறிப அந்தண் புலவர்" எனவும்;

ஆசாரக் கோவை.

"வான்முறை யான்வந்த நான்மறை யாளரை" எனவும்,

ஒட்டக்கூத்த இராமாயணம்.

"தேன்றிக ழிதழி யான்றன் றிருச்செவி சார நின்கை
தான்றிகழ் வீணை யாகப் பாடுதி சாம மென்றான்"

"பன்னருஞ் சாம கீதம் பரிவுடன் பாட லுற்றான்"

"மனுநூறும் வேதமவை யோரா யிரமும்
விளங்குங் கலையுந் தசக்கிரீவ னேதை"

"முன்கையில் நரம்பு வெட்டி முன்னிருக் கிசைகள் பாட" எனவும்,

பெரிய திருமொழி.

"பண்டைநான் மறையும் வேள்வியுங் கேள்விப் பதங்களின் பொருளுந் தானும்"

"சந்தோகா பௌழியா தைத்திரியா சாம வேதியனே நெடுமாலே" எனவும்,

இன்னும் பிறநூல்களிலும் இப்படியே வருவனவற்றைக் காண்க.

இச் சாமவேதத்தில் காணப்படுகின்ற இருடிகளைத் தவிர்த்து மற்றொரு முறையாகவும் இதற்கு இருடிகள் காணப்படுகின்றார்கள்.

உபோற்காதம் மிக விரியுமென்றஞ்சிச் சுருக்கினோம். நுண்ணிய மதியுடையோர் இவ்வாறே யூகித்துணர்ந்துகொள்வாராக.

தமிழ் மறையியல்.

ஈண்டு, அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றையே பயனாகக் கொண்ட தமிழ்மறைகள் உள்ளன; அவை, தென்றமிழ் நாட்டைக் கடல் கொள்ளுவதற்கு முற்காலத்தே நிலவியிருந்தன. அவைகளே தொல்காப்பியப் பாயிரத்தில் விதந்தோதப்பெற்றன.

அற்றாகலினன்றே, 'பல்யாகசாலை முதுகுடுமி' என்னும் தமிழ் வேந்தனைக் கூறும் புறநானூற்றுச் செய்யுளும்,

'நான்மறை முதல்வர் சுற்ற மாக' என்று கூறுகின்றது.

ஈண்டு, முதுகுடுமி மன்னன், வடமொழி மறையை வகுத்த வியாசர் காலத்திற்கு நெடுநாள் முன் வாழ்ந்தவன் என்பதனால் ஆண்டெடுத்துக் கூறியது, தமிழ் மறைகளே யென்பது உணரற்பாலது.

மற்றும், கல்லாலடிக்கீழ் சொல்லாமற் சொன்ன வேதம் நால்வரின் பக்குவத்திறம்பற்றி நான்காயிற்று. தமிழ் நூல்களில் ஆரிய நான்மறை யென் றெடுத்துப் புகழ்ந்திருத்தலோ, சிவனது வழிபாட்டைச் செவ்வனே கூறும் தமிழ்மறை, ஆரியமறை யென்றே வழங்கப்பட்டு வந்தமையாலென்க. இவ்வாற்றால் புருடப்பேறு நான்கையுங் கூறும் தமிழ்மறைகள் தமிழில் நான்கு உண்டென்பது அநுமானித்து அறியப்படுமென்பர் செந்தமிழ் நாட்டுக் கவிஞர் சிலர்.

உபோற்காதம் முற்றிற்று.

சாயணர் சரித்திரச் சுருக்கம்.

வித்தியாரண்ய சுவாமிகளென்றும், சாயணர் என்றும் அழைக்கப்படும் இம் மாதவர், ஆந்தர தேச மென்னும் தெலுங்கு நாட்டில் வறியதோர் அந்தண குலத்தில் அவதரித்து, வறுமையாற் பல இடுக்கணை யடைந்து மனம் நொந்து இளமையிலேயே செல்வனுதல் வேண்டுமென்னும் பேரவாக் கொண்டு கல்வி பயின்று வந்தனர். அவருக்கு அவ்வெண்ணம் விரைவிற் கைகூடாமையின், திருமகளையும், கலைமகளையுங் குறித்துத் தவஞ் செய்யக் கருதிக் காட்டிற் சென்று அங்குத் திரிந்துகொண்டிருக்குங்கால், ஒரு நாள் அரசனுடைய மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த 'புக்கணன்' என்னு மொருவனைக் கண்டு, அவனிடத்தில் தனது வருத்தத்தை யெடுத்துக்கூற, அதைக் கேட்ட புக்கணன் இரக்கமுற்று தினந்தோறும் வேண்டிய பாலைத் தருவதாக வாக்களித்தனன். அதற்கு வித்தியாரண்ய சுவாமிகள் அரசனுக்குரிய பாலை யான் அருந்தல் கூடுமோ, என்றனர். அதற்கவன் ஐய! அரசனுக்கு வேண்டிய பால் குறைவிலாதிருக்கின்றது வீணே யொழுகிப்

போகின்ற பாலில் சிறிது தங்கட்குக் கொடுப்பதலால் யாதொரு இழுக்கு மில்லை. மற்றும், அது அரசனுக்கும் புண்ணியத்தையே வளர்க்கும் என்றனன். அதற்குச் சாயணரும் அவ்வாறியைந்து கொண்டு பலநாள் தவஞ் செய்து வருங்கால் புக்கணன் வாக்களித்தபடியே நாடோறும் பால் கொடுத்து வந்தனன். அதை யருந்திகொண்டே எண்ணியவாறு பயனை யெய்துவேமென்னும் ஊக்கத்துடன் இடையறாது தவஞ்செய்து வந்தனர். அக்கால் புக்கணனிடத்தில் அவர் பேரன்புடையவராயினர்.

இவ்வாறு நெடுங்காலங் கழித்த பின்னர் கலைமகளும், திருமகளும் புக்கணனிடத்திற்றோன்றி "மாதவன் கருத்து இப்பிறப்பில் நிறைவேறாது" என்று கூறியருளினர்.

பின்னர், புக்கணன் அச் செய்தியை மாதவர்க்குணர்த்த அவர் அதைக் கேட்டு மனத் தளர்ச்சியடையாது முன்போலவே, விடாமல் தவத்தையே செய்துவந்து இறுதியில் மனவெறுப்படைந்து சிகை பூணூல் முதலியவற்றை நீத்து துறவி வேடம் பூண்டனர்.

அதைக்கண்ட நாமகளும், பூமகளும் அருளால் வெளிப்பட்டு; மாதவ! உனக்கு வேண்டியது யாது? என வினவியருள; அதற்கு மாதவர் 'இப்போது யான் துறவியாதலின் கலைமகளின் அருளொன்றையே வேண்டுகின்றேன்; திருமகளின் அநுக்கிரகத்தை வேண்டேன்; புக்கணன் உங்களுடைய திருவருளை யடைவதற்கு நிமித்தனா யிருந்ததால், திருமகளின் அருள் அவனுக்கு உண்டாதல் வேண்டும் என்றனர். அவர்கள் அங்ஙனமே யாகுக என்று அநுக்கிரகித்து மறைந்தனர்.

இவ்வாறு நிகழ்ந்த சில நாட்களுக்குப் பின்னர், அத்தினாபுரத்து மன்னன் மாண்டுவிட மந்திரிகள் பட்டத்து யானையை அலங்கரித்து அபிடேக கலசத்தை அதன் கையிற் கொடுத்து ஒரு அரசனைப் பார்த்துக்கொண்டு வருமாறு பரிசனங்களுடன் விடுத்தனர். அது பல நாடுகளைக் கடந்து புக்கணனிருந்த நாட்டை யடைந்து அங்கு அவன் வீட்டில் நித்திரையிலிருந்த அப் புக்கணனை யடைந்து தன்பாலுள்ள கங்கை நீரை அவன்மேற் சொரிந்தது உடனே புக்கணன் துணுக்குற்றெழுந்தனன்; எழுந்தவுடன் அந்த யானை அவன் கழுத்திலொரு மாலையைச் சூட்டித் தன் முதுகின்மேலுள்ள தவிசின் மேலேற்றிக்கொண்டு போய் அரசனாகச் செய்தது.

பின்னர், சிலநாட் கழித்து மாதவாசாரியர், முன்னர் புக்கணன் தன்பால் வைத்த அன்பானது இப்போது அரசனா யிருக்கும்போதும் அவன்பால் இருக்குமோ, என நிதானித்தற்பொருட்டு அவனிடத்துச் செல்ல, அம் மன்னனும் ஒற்றரால் இவர் வரவை யறிந்து முன்னினும் மிகுந்த அன்பும், வணக்கமும் அடக்கமு முடையனாய் நடந்து எதிர்கொண்டு வந்து இவரைத்

தழுவிக் கொண்டாடி இவரையே தனக்கு மிகப் பிரியராகக்கொண்டு எல்லாக் காரியங்களையும் இவருடைய கருத்திற்கிசைய உசாவிக்கொண்டே நடத்தி வருவானாயினன்.

அவ்வாறிருக்குங்கால் ஒரு தினம் புக்கண அரசன் மாதவரை நோக்கி, 'ஐய! உமது பெயருங் கீர்த்தியும், இவ்வுலகில் யாண்டும் நிலைபெற்றுலவுமாறும், எனக்குப் பின்வரும் இளவரசர்கட்கும் பயன் கொடுக்கும் பொருட்டும் நீர் சில நூல்கள் செய்தருளல் வேண்டும்' என்று வேண்டிக்கொள்ள அதற்கு மாதவரும் அங்ஙனமே செய்வாமென்று கூறிவிட்டு அது முதற்கொண்டு நூல்கள் செய்யத்தொடங்கினர்! தொடங்கி பஞ்சதசி, வேதபாடியம், வையாசிக நியாயமாலை, சைமினீய அதிகரணமாலை, சீவன்முத்தி விவேகம், அநுபூதிப் பிரகாசிகை, தாதுவிருத்தி, சங்கர திக்குவிசயம், மாதவ நிதானம், சூத சங்கிதை யுரை, பாராசர மாதவீயம் என்பது முதற்கொண்டு எண்ணிறந்த நூல்களையும் பாடியங்களையும் இயற்றி யருளினர். இவர் அவ்வாறு செய்திலரேல் வைதிக சமய நூல்கள் கெட்டொழிந்து அம் மதமும் மிகக் குன்றியதாய் இருக்கும். இவர் சங்கர விலாசம் என்னும் ஒரு நூலும் நாற்பதாயிரஞ் சுலோகங்களை யுடையதாகச் செய்திருக்கின்றனர்.

இவர், பம்பை நதிக்கரையில் உள்ள வித்தியா நகரத்தில் அரசு புரிந்திருந்த ஹரிஹர ராயர் காலத்தவர். இற்றைக்குச் சுமார் ஐந்நூற்று முப்பது ஆண்டுகளுக்கு முன்றோன்றியவர் எனத் தெரிகிறது.

இவருடைய தந்தையார் 'மாயணர்' என்பவராவர். மற்றும், இவருடைய சகோதரரே சாயணர் என்பர் சிலர்.

இவ் வித்தியாரணிய சுவாமிகளையே மாதவரென்றும், சாயணரென்றும் வழங்குகின்றனர். மற்றும், 'புக்கண ராசன், இவ்வித்தியாரணிய முனிவரொடு சாயணர் முதலிய இருபத்து நான்கு வடமொழிக் கவிஞர்களை வைத்துக்கொண்டு பற்பல நூல்களை இயற்றி மாதவர் பெயராலேயே வெளியிட்டனர்' என்பர் சிலர்.

'மாதவாசாரியரே வேதங்கட்குப் பாடியஞ் செய்துள்ளார்' என்பதே பெரும்பான்மை வழங்கப்பட்டு வருகின்றது.

பாடியத்தை நோக்கிலோ, பலர் குழுமியே செய்துள்ளார் என்பது புலப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும் சாயண பாடியமே மேல்நாட்டறிஞர்களாலும், இந்நாட்டுப் பேரறிஞர்களாலும் போற்றப்பட்டு வருகின்றது என்பதைக் காண்க.

மற்றும், இவர், விசிட்டாத்துவித மதத்திலுள்ள ஒரு பேராசிரியருடன் விவாதஞ் செய்து தோல்வி யடைந்த காலத்தில், அதைக்கண்ட தேசிகர் என்னும் வடகலையை நிறுவிய வைணவப் பெருந்தகையார் ஒருவர்,

சுலோகம்:

அஸிநா தத்த்வமஸிநா பரஜீவ ப்ரஹேதிநா ।
வித்யாரண்யம் மஹாரண்யம் அக்ஷோப்ய முநிரச்சிநத் ॥

" தத்துவமசியாகிய வாளால் எல்லாச் சமய நூல்களையும் வெட்டுவதும், தான் ஒன்றினாலேயும் வெட்டப்படாததுமாகிய வித்தியாரண்யத்தை (கல்விக் காட்டை) ஒரு முனிவர் வெட்டினர் " என்று கூறி யிருக்கின்றனர் என்ப.

இவர் எல்லா நூல்களிலும் சர்வ சுதந்தரர், இவர் நான்கு வேதங்கட்கும் பாடிய மியற்றப் புகுந்து பொருளை நோக்கி முன்னர் எசுர் வேதத்திற்கே பாடிய மியற்றியுள்ளார் என்பதுணர்க.

இவருடைய சரிதை உண்மையாய்த் தெரியவில்லை, தெரிந்து அளிக்கின் மறுபதிப்பில் பதிப்பிக்கப்பெறும்.

சாயணர் சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

உ

பதினொரு

உருத்திர கீதப் பாடல்கள்

என்னும்

சாமவேத உருத்திரீயமும்

பேராசிரியருடைய பாடியத்தைத் தழுவி

வேத மொழி பெயர்ப்பாசிரியர்

காசிவாசி

சிவானந்த யதீந்திர சுவாமிகள் எழுதிய

விருத்தியுரையும்.

உருத்திராய நம:

சாமவேத உருத்திரீய சங்கிதை

உபோற்காதம்.

ஈண்டு, கைவல்யம், சாபாலம் என்பது முதலிய உபநிடதங்களில், முத்திக்கு ஒரு நெறியதாமெனவும், அந்தணர் முதலியோர்களைக் கொன்ற பாதக முதலியவைகளைப் போக்குவதெனவும் கூறப்பட்டிருக்கின்றதும், மற்றும், எல்லாப் பாவங்கட்கும் பிராயச்சித்தமானதென்று தருமநூல்களாற் கூறப்பெற்றதும், மிகப் புநிதமுடையதென்று காந்தம் முதலிய புராணங்களனைத்தும் இனிதெடுத்துப் போற்றுகின்றதுமாகிய, "சத உருத்ரீயம்" எனப் பெயர்பெறும் ஸ்ரீ உருத்திராத்தியாயமே அனைவராலும் ஓதற்பாலதாம். அதனாலேயே உருத்திரன்பால் பேரன்புண்டாதலும் இனிது கூடும். அன்றியும், பட்டபாஸ்கரர், அபிநவ சங்கரர் முதலியோர்களாற் செய்யப்பெற்றுள்ள உருத்திராத்தியாய பாடியங்களும் இப்பொருளையே தெளிவாய்க் கூறி யிருக்கின்றன. இவ்வாற்றால், எசுர் வேதத்திலுள்ளதும், யாண்டும் புகழ்ப்பெற்றதும், பண்டைக்காலந்தொட்டு வழக்கத்தில் வந்துகொண்டிருப்பதும், ஸ்ரீ உருத்திரனைச் சிறப்பாக வியந்தோதுகின்றதுமாகிய உருத்திராத்தியாயத்தை ஓதுவதுகொண்டே, இச் சாமவேத உருத்திராத்தியாயத்தை ஓதுதலால் வரும் பயனும் ஒருதலையாகப் பெறப்படுமாதலின், இச் சாமவேத உருத்திரீய மந்திரங்களை ஓதுதலும், செபித்தலும் பயனற்றவைகளல்லவோ வெனின்?

நன்று கூறினாய், பிரமாணங்களின் ஆற்றலைக்கொண்டு, இவ்விரு வகை உருத்திரங்களுள் ஒன்று உருத்திரப் பிரீதிக்குக் காரணமாமென்றேனும், அல்லது இருவகை உருத்திரங்களும் ஒன்றுகூடியே உருத்திரப் பிரீதிக்குக் காரணமாமென்றேனும் இனிது துணியப்படுதலின், இச் சாமவேத உருத்திரீயத்தை ஓதலும், செபித்தலும் பயனுடையவைகளே யெனப் பெறப்படுதலின் பயனற்றன என்பது யாங்ஙனம்?

அற்றாகலினன்றே, "நெற்களாலேனும், கோதுமைகளாலேனும் வேட்க" என்றற்றொடக்கத்துச் சுருதி வாக்கியங்களைக்கொண்டு, நெற்களேனும், அல்லது கோதுமைகளேனும் வேள்வியின் சாதனமானதூஉம் என்க. இவ்வாற்றால் இருவகை உருத்திரங்களையும் விரும்புவோர்க்கேனும்,

அல்லது, இரண்டனுள் ஒன்றையே விரும்புவோர்க்கேனும், இச் சாமவேத உருத்திரமும் உண்மையாக வேண்டற்பாலதேயாமாதலின், இதன் பொருளை விரித்துக் கூறுதலும் பெரும்பயனுடையதா மென்பதுங் காண்க.

உண்மையை நோக்கினல், உருத்திரனுகிய பரமேசுரன், சாமகானப் பிரியன் ஆதலின் எசுர் வேதத்திலுள்ள சத உருத்திரத்தை, ஓதுதலையுஞ் செபித்தலையும் நோக்க, இச்சாமவேத உருத்திரத்தை யோதல் முதலியவை களே பரமேசுரனது பேரன்பிற்குச் சிறந்த காரணங்களாமென உடன் படலே இயைபுடைத்தாமென்பது ஈண்டு உணரற்பாலதாம்.

இதுபற்றியே, கந்த புராணத்திற் கூறியுள்ள சகத்திர நாமங்களுக்குள் ளும், 'சாமப்பிரியாய நம:' ஸாமப்ரியாய நம:, என்று கூறப்பட்டிருக்கின் றது. இதனல் சாமப்பிரியன் என்னும் ஒரு திருநாமமும் பரமேசுரனுக் குள்ளதென்பதும், அவ்விறைவன் சாமவேத கீதத்தில் மிகப்பிரியன் என் பதும் தெள்ளிதிற் பெறப்பட்டமை காண்க.

அஃதன்றியும், மகாபாரதத்தும், உபமந்யு முனிவர் வரலாற்றைக் கூறத் தொடங்கி உபமந்யு முனிவர்க்குச் சிவ சாட்சாத் காரத்தை (சிவன் வெளிப்பட்டதை)க் கூறுந் தருணத்தில்,

"யதா ப்ரஹ்மா ஹவஞ்சதாஸுளஶீர்ஷ ரதந்தர முதீரயத் ।
ஜ்யேஷ்ட ஸாமேந து தேவேஶம் ஜகௌ நாராயண: ப்ரபு:"

"பிரமன், நாராயணன் என்னும் இருவராலும் 'ரதந்தர' (ரதந்தர) என்று தொடங்கியுள்ளதும், 'ஜ்யேஷ்ட' (ஜ்யேஷ்ட) என்று தொடங்கியுள் ளதுமாகிய சாமவேத கீதத்தால் பரமேசுரன் துதிக்கப்பெற்றனன்" என்று கூறியிருத்தலையும் உற்று நோக்குக.

இனி, இச்சாமவேத உருத்திரத்திலுள்ள பதினெரு மந்திரங்களுள், சில ஆர்ச்சிகங்களெனப்படும், சில ஸ்தௌபிகங்கள் எனப்படும். அதாவது, இருக்காலானது ஆர்ச்சிக மெனப்படும். அது இருக்கு மந்திரத்திற்குள்ள எழுத்துக்களைக்கொண்டே முடிந்து நிற்பதாம். மற்றும், ஸ்தோத்திரத் தாலானது ஸ்தௌபிகமெனப்படும். அது தோத்திரப்பதிகங்கட்குள்ள எழுத்துக்களால் முடிவு பெற்று நிற்பதாம்.

மற்றும், கேவலார்ச்சிகமெனவும், கேவல ஸ்தௌபிகமெனவும், ஆர்ச்சி கார்ச்சிக ஸ்தௌபிகம் எனவும் மூவகைப்படும். இவற்றுள், 'ஆவோ ராஜா' என்றதற்றொடக்கத்து, முதலாவதாகிய சாமவேத உருத்திர மந்திரம் கேவ

லார்ச்சிகமாம். 'தேவவிரதம்' எனப்படும் மூன்று மந்திரங்களும் கேவல ஸ்தௌபிகங்களெனப்படும். இவ்விரண்டற்கும் இடையிலுள்ள மந்திரங்கள் ஏழும் 'ஆம்சிகார்ச்சிக ஸ்தௌபிகங்கள்' எனப்படும்.

இனி ஸ்தோபமும், (கீதமும்) பொருளுடையதெனவும், பொருளிலாததெனவும் இருதிறப்படும். அவற்றுள், பொருளுடையதோ, 'ஈயிவதா ஊ சூஜ்ஜ ஷொஹம்' என்றல் தொடக்கத்ததாம். பொருளிலாததும், ஹா, உ, ஹா, உ-ஹா, என்பது முதலியனவாம்.

அற்றேலஃதாகுக. ஈண்டுப் பொருளுடையதெனப்படுவதோ, இருக்கேயாம். அதன் பொருள் அதற்குள்ள பாடியத்தானே நன்கு விளங்கும், பொருளிலாததற்கு உரை கூறலோ, பயனிலாததாமெனின்? அற்றன்று, ஆங்காங்குக் கூறிய பொருள்களை ஒருங்கே திரட்டிக் கூறுதலானும், இருடி, சந்தம், தேவதை என்பது முதலியவற்றை ஈண்டெடுத்துக் காட்டுதலானும், சாமவேத சங்கிதையில் பொதுவாய்க் கூறியுள்ள பரமேசுரனுடைய மகிமையைச் சிறப்பா யெடுத்து நன்கு காட்டுதலானும், 'அதிகாரிகள் இருடி முதலிய விடயங்களை யுணரற்பாலர்' என ஆர்ஷேயப் பிராமண மென்னுஞ் சுருதியிற் கூறியுள்ளவாறே இதை விரித்துக் கூறுதலும் பயனு மென்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

அற்றேல், சாமவேதத்தில் உருத்திரனைக் கூறுகின்ற மந்திரங்கள் வெளிப்படையாய்க் காணப்படாமையின் அவைகட்கு உரை கூறப்புகல் யாண்டையதெனின்?

நன்று கூறினாய், சாமவேதம் பொதுவாக ஈசுர துதியாமாயினும் சிறப்பாகவும் அதை வெளியாக்குதும் காண்பாயாக.

சாமவேதத்திலுள்ள, 'ஆவோராஜா' என்றற்றொடக்கத்துப் பதினொரு மந்திரங்களே உருத்திரனைக் கூற வெழுந்தவைகளாதலால் "உருத்திர சங்கிதை" எனப் பெயர்பெறுகின்றன.

அற்றாகலினன்றே, சாமவேதப் பிராமண மென்னுஞ் சுருதியிலும், "ஆவொ ராஜா, தவொவமூ, ஆஜ்ய தொஹாநி, தெவவ்ரதாநி வெஷா ரௌத்ர ஸம்ஹிதா தெதாம் ப்ரயுஞ்ஜந் ருத்ரம் ப்ரீணாதி" எனவுங் கூறியிருக்கின்றது. அதாவது, ஆவோராஜா என்றற்றொடக்கத்ததும், தத்வோ வர்க்கமும், ஆஜ்யதோஹங்களும், தேவ விரதங்களும், உருத்திரசங்கிதை யெனப்படுகின்றன; இந்த இரௌத்திரீய சங்கிதையை நன்கு ஓதி உருத்திரனுக்கு அன்பு செய்யற்பாலது என்பதாம்.

இம் மந்திரத்திலுள்ள 'ரௌத்திரி' என்னுஞ் சொல், உருத்திரனுக்கு இது ரௌத்திரி எனப் பொருள்படுமெனிலோ? அவ்வாறு கோடற்குப் பிரமாணம் இல்லை யென்க. அல்லது, உருத்திரன் என்னுஞ் சொல் விருத்தலின் 'ரௌத்திரி' என்னலாமெனின்னோ? அஃதும் அமையாது. என்னை? அங்ஙனமாகுமேல்? 'உருத்திரீயம்' என்றாதல் வேண்டும் ஆதலினென்க. மற்றும், இவ்வாறே ஏனைய வகையாலும் இனிது பொருந்தாமையின் "இந்த ரௌத்திரி சங்கிதையை நன்கு ஓதி உருத்திரனுக்கு அன்பு செய்யற்பாலதாம்" என்றலே இயைபுடைத்தாம். இதனால் உருத்திரனுக்கு அன்பு செய்வதற்குக் காரணமாகிய பிரயோக மென்னுங் கரும சம்பந்தமுடையது 'ரௌத்திரி' யென்னுஞ் சொல் என்பது பெற்றாம்.

இனி, 'ரௌத்திரி சங்கிதையை நன்கு ஓதி' என்றமையால், வாக்கால் வாழ்த்துதலாகிய வழிபாடே கொள்ளற்பாலதாமாயினும், ஈண்டு முக்கரணங்களாற் செய்யப்படும் ஈசுரவழிபாடும் கொள்ளற்பாலதாம். என்னை? 'நன்கு ஓதி' என்பதால் இப்பொருள் கொள்ளக் கிடக்கின்றமையினென்க. இதனானே சாம மறையை இனிது உணர்ந்தார்க்கும், உருத்திரன்பாற் செய்யும் அன்பிற்குக் காரணமாகிய முக்கிய வழிபாடுஞ் செய்யற்பாலதாமென்பது பெறப்பட்டது. பெறவே உணராததை யறிவுறுத்தலின் இஃது ஒரு விதியாமென்பதும் ஒருவாற்றாற் பெறப்பட்டதென்பது முணர்க.

அற்றேலஃதாகுக. இது விதியாயின் 'முத்தி வேட்கையாளன் தீயோம்புக' என்பது முதலிய விதியானது துன்பெலா மகன்ற இன்பமயமாகிய முத்தியைக் குறித்தெழுந்ததாம். அஃதொழித்து, இதற்கு உருத்திரன்பாற் செய்யுமன்பைக் குறியாகக் கொள்ளினும் பொருந்தாது, என்னை? உருத்திரன்பாற் செய்யும் அன்பானது, புருடார்த்தங்களுள் ஒன்றினு மடங்காமையினென்க.

நன்று கூறினாய். உருத்திரன்பாற் செய்யப்படும் அன்புளதேல் முத்தியும், மற்றும், விரும்பிய அனைத்தும் ஒருங்கே அடைதல் கூடுமாதலின் உருத்திரன்பாற் செலுத்தும் அன்பே சிறந்த புருடார்த்தமா மென்பது அனைவருக்கும் ஒப்ப முடிந்ததாமென்றுணர்வாயாக. இவ்வாற்றால், 'இவ்வுருத்திர சங்கிதையை இனிது ஓதுவதால் உருத்திரனுடைய அன்பை யுண்டாக்குக' என இஃதோர் விதியாயினமைக்கு இழுக்கொன்றுமில்லை.

இதுபற்றியே, சிவபுராணமும்,

நவா தஸ்மிந் ஸக்திகிஷிஞ்சவி உ—மு—ஹம் வாம்ஸவ: வவ—தாயஞ்ஜெ வாம்ஸ—யஞ்ஜெ வவ—தா: । ஶிவ ப்ரஸாத யத்ரா நா ஶாஜ்ஞயெவ த—

கெவமுழ । நிரு ஹாநுரு ஹெ ஶக்தி: வவ-ஃதாதெபு ஹெஃநழ । வைவ ஊதீநி ஶி௦ஹாநி வரு ஸாஃஸ் விநாகிந: । “ கிஷஜுஹ் ஃஹ௦ நரணா௦ ஶொகெ வருஸாதெ வாவஃதி வதஎ ”

“ ஈசன்பால் அன்பிருக்கில் அரியதொன்று மில்லை ; அணுவும் மலையாகும், மலையும் அணுவாகும், சிவனருள் பெற்றார் தம் ஆணை மாத்திரத்தால் அநுக்கிரகித்தல், நிக்கிரகித்தல், மலையைப் பிளத்தல் என்னும் இவை முதலியன, மலைமகள் கொழுநனாகிய அப்பரசிவனது அருளின் குறிகளாகின்றன ” என்று சிவ புராணமுங் கூறுகின்றது. இது போன்ற வாக்கியங்கள் புராணங்களில் ஆயிரக்கணக்கானவைகள் கொள்ளக்கிடக்கின்றன வென்பதூஉங் காண்க.

இதனாலன்றோ, வேதவியாசரும்,

‘ வலஉத உவவதெ: ’, ‘ பயன் இவனிலிருந்து அடையப்படுதலின் ’ என்று சூத்திரமுஞ் செய்துள்ளார்.

அங்ஙனமே,

“ க்வ கஊஃ வருயூஸ௦ ஹலி வாராஷாராய நஜ்தெ, ” “ஒருவனை ஆதாரமாகக் கொள்ளாமல் அழிந்துபோன கருமம் எவ்வாறு பயன்றரும் ? ” என்று புட்பதந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிய சிவமகிம்நத்தோத்திரம் என்னும் பிரபல சுருதியுங் கூறுகின்றது.

இங்ஙனம் கூறிப்போந்தவாற்றால் இச் சாமவேத உருத்திரீயமும், எசுர்வேத உருத்திராத்தியாயமாகிய சதஉருத்திரீயத்தைப்போன்று பரமேசுரன்பால் அன்பு செலுத்துவோர்க்கு, ஓதற்பாலதும், செபிக்கற்பாலதுமாமென்பது பெறப்பட்டது.

இதுகொண்டே இதற்கு, அதிகாரியும் பரமேசுரன்பால் அன்பு செலுத்தும் வேட்கையுடையானே என்பதும் தானே பெறப்பட்டமை காண்க.

உபோற்காதம்

முற்றும்.

சாமவேத உருத்திரீய சங்கிதை

(அவதாரிகை)

ஈண்டுச் சாமவேத சங்கிதையின் முற்பாதியானது, ஆக்கினேயபருவம், ஐந்திரபருவம், பவமான பருவம் என மூன்று பருவங்களை யுடையதாம். அவற்றில், ஆக்கினேய பருவத்தில், "ஆவோ ராஜானமத்வரஸ்ய ருத்ரம்" என்றற்றொடக்கத்து இருக்கு, முதலாவது மந்திரமாக இருத்தலானும், ஆண்டு அக்கினியையே உருத்திரனெனக் கூறப்பட்டிருத்தலானும், ஏனைய பாடியகாரரும் அவ்வாறே உடன்பட்டிருத்தலானும், மற்றும், எசுர் வேத சங்கிதை முதற் காண்டத்திலும், தேவர்கட்கும் அசுரர்கட்கும் சம்வாதங் கூறப் புகுந்து, "ஸோரோதீத்யத்ரோதீத் தத்ருத்ரஸ்ய ருத்ரத்வம்" 'அக்கினி அழுதது அதனால் உருத்திரத்தன்மை யடைந்தது' எனக் கூறப்பட்டிருத்தலானும் 'உருத்திரன்' என்பதற்கு ஈண்டு அக்கினியே கொள்ளற்பாலதா மாலோவெனின்; அற்றன்று, என்னை? உபக்கிரமநியாயம் என்னும் வழக்குப்பற்றி, தொடங்கும்போது உருத்திரன் என்று தொடங்கிய சாரத்தைக்கொண்டு அக்கினி என்பதற்கு உருத்திரன் எனக் கொள்ளலே இயைபுடைத்தாமாதலினென்க.

அற்றாகலினன்றே, வாயு சங்கிதையில்,

> ஸிஷேஹி ஸாமவேதஸ்ய யஜ்ஞஸ்ய ப்ரதம ஸ்ருதி: ।
> ருத்ரம் விஹாய யஜ்ஞாங்க தேவானாம் கிம் ப்ரயோஜனம் ॥

வேள்விக்கு இறைவன் உருத்திரனு மாதலின் அவ்வுருத்திரனை நீ பூசியாதொழித்து ஏனைய தேவர்களை வேள்வியின்கண் பூசித்தலால் வரும் பயன் யாது கொல்? (பயன் இல்லை யென்பதாம்) எனக் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றும், பலவகைச் சுருதி வாக்கியங்களானும், பின் வரும் பதினொரு மந்திரங்களும் உருத்திரனையே கூறும் மந்திரங்களென உறுதிப்படலானும், இப்பதினொரு மந்திரங்களே உருத்திர சங்கிதை எனப்படுகின்றன. அவற்றுள், ஈண்டுப் பதினொரு உருத்திரர்கள் போன்றே பதினொரு மந்திரங்களாகி இயைபு பெற்று நிற்றல் மிக வியக்கற்பாலதாம்.

மந்திரம் 1.

२ ३ १ २ ३ १ २ ३ १ २ २ ३ २ ३

आवो राजानमध्वरस्य रुद्रंꣳ होतारंꣳ सत्ययजंꣳ रोदस्योः ।

३ २ १ २ २ ३ १ ३ २ ३ १ २ ३ १ २

अग्निं पुरा तनयित्नोरचित्ताद्धिरण्यरूपमवसे कृणुध्वम् ॥

ஆவோ ராஜாநமத்⁴வரஸ்ய ருத்³ரம் ஹோதாரம் ஸத்யயஜம் [ரோத³ஸ்யோ: ।

அக்³நிம் புரா தநயித்நோரசித்தாத்³ஹிரண்யரூபமவஸே க்ருணுத்⁴வம் ॥

கீதப்பாடல்-1.

४ १ ५ २ २ ४ ३ २ ३ २ ३ ४ ५ १ २ २ १ २ २

आवो राजा । नमध्व । रस्यरुद्राम् । हो । ता । राम् । सत्ययजा२म् ।

२ ३ ४ ५ २ १ १ ३ २ ३ ४ ५ १ २ १ २ १

रोदसीयोः । अग्निम्पू । रा । तनयि । त्नो रचित्तात् । हिरण्य । रू । पा३मव ।

२ २ ४

सा ३–४–३ यि । का२णुं । ध्वा६५६म् ।

ஈண்டுச் சாமம் என்பது, ஸா = அவ்விருக்கு மந்திரமே, அமம் = கீதப் பாடலானதாம், எனவே இருக்கு வேதத்தில், அடி, தளை, முதலியவற்று லாக்கப்பெற்ற சந்தப் பதிகங்களே சங்கீதத்துடன் சேருங்கால் சாமகீத மாகின்றது என்பது பெற்றும்.

அவற்றுள் இருக்கு வேதப் பதிகங்கள் கீதத்துடன் சேருங்கால், எழுத்து மிகல், திரிதல், அளபெடையேற்றல் முதலிய பல வேறுபாடுகளை யடைகின்றன. ஒரு பதிகமே, இரண்டு, அல்லது மூன்று, நான்கு பதிகங் களாக ஆதலுமுண்டு. அவற்றுள், இம் முதல் மந்திரமோ, இருக்கு வேதத் திலும் ஒருபதிகமே, சாம வேதத்தினும் ஒன்றேயாமென்பதுணர்க.

இறப்பதன் முன்னரே பரமேசுரனை வழிபட வேண்டுமென ஒரு இருடியானவர் தமது புதல்வர்கட்கு அறிவுறுத்தும் முறையாக ஈசனிடத்து அன்புசெய்ய வேண்டுமென்னும் பொருளை மேற்கொண் டெழுந்தது இம் முதலாவது மந்திரமாகும்

மற்றும், இது, இருக்கு வேதம்-நான்காம் மண்டலம்-ஆறுஞ் சூக்தத்தின் முதல் மந்திரமாம் இதுவே சாம வேதத்தின் முதல் ஆர்ச்சிகம், ஆக்கி

னேய காண்ட (பருவ)ம் ஆறும் பத்து, ஆறுங்கண்டம் ஏழாம் மந்திர முமாம்.

மந்திரத்தின் பதவுரை.

(हे पुत्राः !)	(ஹே புத்ரா: !)	எமது புதல்வர்களே ! நீவிர்,
वः	வ:	உங்களை,
अवसे	அவஸே	பாதுகாத்துக்கொள்ளுதற் பொருட்டு,
अध्वरस्य	அத்⁴வரஸ்ய	வேள்விக்கு
राजानं	ராஜாநம்	வேந்தனும்,
होतारं	ஹோதாரம்	பயனை யளிக்கின்றவனும், அல்லது ஆராதிக்கப் பெறுவோனும், அல்லது அழைத்தற் குரியானும்,
रोदस्योः	ரோத³ஸ்யோ:	வானுலக மண்ணுலக மிரண்டிற்கும்
सत्ययजं	ஸத்யயஜம்	அன்னங் கொடுக்கின்றவனும், உண்மையில் நிறைந்திருக்கின்றவனும், அல்லது உண்மையால் போற்றப் பெறுகின்றவனும்,
हिरण्यरूपं	ஹிரண்யரூபம்	பொன்னார் திருமேனியனும்,
अग्निं	அக்³நிம்	அக்கினியி லிருக்கின்றவனுமாகிய
रुद्रं	ருத்³ரம்	உருத்தி (பரமேசு) ரனை,
तनयित्नोः इव	தநயித்நோ: இவ	மேகம்போன்று நிலையின்றி வரும்
अचित्तात्पुरा	அசித்தாத்புரா	'சித்தங் கெடுதல்' என்னும் மரணத்திற்கு முன்னர்
आकृणुध्वम्	ஆக்ருணுத்⁴வம்	உம்மிடத்து அருள்நோக்குடையனைச் செய்துகொள்வீர்களாக.

விருத்தி யுரை.

வாமதேவர் ரிஷியாவர். இதுபற்றியே மிருதியும்,

"வாமதேவ ரிஷிஸ்தாஸாம் ஜ்ஞேய இத்யாஹ சௌநக:" "அவைகட்கு 'வாமதேவர் இருடியென்று உணரற்பாலது' எனக் கூறுகின்றார் சௌனக முனிவர்" எனக் கூறுகின்றது.

அல்லது, தேவதைகளே இருடிகளாவார்கள் எனப்படுதலின், இம் மந்திரத்திற்குரிய தேவதை உருத்திரராதலின் உருத்திரரே இருடியாவர் என்பதுமாம். இதனாலன்றோ, வேத பாடியகாரராகிய பட்டபாஸ்கரரும்,

"தெவ ஏவவா ஸாமெநாவதூ்ரஷிஃ ருத்ரொவா" "சாம மறை, மந்திரங்கட்குத் தேவர்களே இருடியாவர் அல்லது உருத்திரரே இருடியாவர்" என்று கூறியுள்ளார்.

ஈண்டு, "உஜ்ர வாஅ்யாசெக்ஷா தெவதா" 'மந்திரத்தின் வாச்சியப் பொருளே தேவதையாம்' என்று நிருத்தமுங் கூறுகின்றது. இதனால், இம் மந்திரத்திலுள்ள 'உருத்திரன்' என்னுஞ் சொற்குப் பொருளாகிய பரமேசுரனே தேவதையாவன் என்க. சந்தம் திருஷ்டுப் என்பதுணர்க.

அற்றேல் அஃதாகுக, இம்மந்திரத்தில் உள்ள "ஸஜ்ஞிம் வாடாதநீ யிசெந்தாஃ" என்னும் வாக்கியத்தில் 'அக்கினி என்னுஞ் சொல்லுமிருத்தலினும், இது ஆக்கினேய காண்டத்தின் மந்திரமாதலானும், யாண்டும் வேள்விகளில் அக்கினியே முக்கியமாகக் கொள்ளப்படலானும், அந்தணர் முதலியோர்கட்கு அக்கினியே முக்கியமாகிய தெய்வமாதலானும், அதன் பொருளாகிய அக்கினியைத் தேவதையாகக் கொள்ளாதொழித்து வலிந்து கொள்ளும் பொருளாகிய உருத்திரனை மாத்திரம் தேவதை யெனக் கொள்ளல் எவ்வாற்றாலாமெனின் ?

நன்று கூறினாய், அஃதாமாறு காட்டுதும்:—

इन्द्र मित्रं वरुणमग्नि माहुरथो दिव्यः सुपर्णो गरुत्मान् ॥

"இந்திரனையும், மித்திரனையும், வருணனையும் அக்கினி யென்று சொல்லுகின்றார்கள்" என இருக்குவேதம்-1-164-46-வது மந்திரங் கூறுகின்றது. மற்றும்,

तदेवाग्निस्तदादित्यस्त द्वायुस्तदु चन्द्रमाः ॥

"அதுவே அக்கினியாம், அதுவே ஆதித்தனும், அதுவே வாயுவாம், அதுவே சந்திரனும்," என எசுர் வேதம், 322-1-வது மந்திரமுங் கூறுகின்றது, மற்றும்,

ब्रह्मह्यग्निः ॥

'பிரமமே அக்கினி' என்று சத-பிரமாணம்1-42-12-வது மந்திரமுங் கூறுகின்றது. மற்றும்,

अयं वा अग्निः प्रजाश्च प्रजापतिश्च ॥

இவ்வக்கினியே பிரசைகளும் பிரசாபதியுமாம், என 6-1-2-42-வது மந்திரமுங் கூறுகின்றது. மற்றும்,

आत्मा वा अग्निः ॥

ஆன்மாவே அக்கினியாம், என-1-2-2-3-வது மந்திரமுங் கூறுகின்றது.

அஃதன்றியும்,

एतमेके वदन्त्यग्निं मनुमन्ये प्रजापतिम् ॥

"இதைச் சிலர் அக்கினி என்கின்றார்கள், மநுவாகிய யான் பிரசாபதி யென்று எண்ணுகின்றேன்" என, மநு, அத்தியாயம் 12. சுலோக 122-வது அக்கினியே பரமேசுரனென்றே ஐயந்திரிபின்றிக் கூறுகின்றது.

அஃதல்லாமலும்,

"𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌾 𑌅𑌭𑌿𑌧𑌯𑌨𑍍𑌤𑍀𑌹 𑌹 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑌗𑍍𑌨𑌿𑌂 𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌕𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌉𑌪𑍈𑌮𑌿"

"வேதங்கள் அக்கினியாகிய உன்னையே உருத்திரனென்று சொல்லுகின்றன; (ஆதலின்) உன்னையே சரணடைகின்றேன்" என வாயு புராணத்திலுங் கூறப்பட்டிருக்கின்றது. மற்றும்,

"𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌂 𑌤𑌥𑌾 𑌦𑍇𑌵𑌂 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍"

'அக்கினியை மகாதேவனென்றும், மகேசுரனென்றுஞ் சொல்கின்றார்கள்' என மகாபாரதம் அநுசாசன பருவத்திலும் கூறியிருக்கின்றதும் இங்குணர்தற்பாலது.

மற்றும், இவ்வாறே பலவிதமான பிரமாணங்களையும் கூரிய மதியுடையார் யூகித்துக்கொள்வாராக.

இவ்வாறாகிய வழி எமது புதல்வர்களே! நீவிர், (பரமேசுரனாகிய) உருத்திரனை அருள் நோக்குடையராய்ச் செய்து கொள்வீர்களாக என இயைத்துக்கொள்க. அதாவது துதித்தல், வணங்கல், அருச்சித்தல் முதலிய திருப்பணிகளால் உம்மிடத்து அவ்வுருத்திரனுக்கு அருள் நோக்குண்டாமாறு செய்து அப்பரமேசுரனை உமது அன்பு வயப்பட்டோனாச் செய்து கொள்வீர்களாக என்பதாம்.

'ஈண்டு இவ்வாறு செய்தல் யாது பயனைக் கருதியோ?' என்பதற்கு 'உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதற்பொருட்டு' எனல் உத்தரங் கூறிய வாறும்.

ஈண்டுப் 'பாதுகாத்தல்' என்பது வேண்டாதவைகளை விலக்கலும், நோய், வறுமை, மூப்பு, இறப்பு முதலியவற்றால் வரும் துன்பங்களைப் போக்கலுமாமென்றுணர்க.

இவ்வண்ணமாகும் பாதுகாப்பை முன்னிட்டு உருத்திரனாகிய பரமே சுரனுக்கு, நம்மிடத்து அருள் நோக்குண்டாமாறு அன்பு செய்வீர்களாக என்பது திரண்டபொருள்.

உருத்திரன் என்பது வடமொழியில் 'ருத்ர:' என்பதாம். அச் சொல், ரு=துன்பத்தை, த்ர:=போக்குகின்றவன், அல்லது, ரு=துன்பத் தின் காரணங்களை, த்ர:=போக்குகின்றவன் என விரிக்கப் பெறுதலின், காரணப் பெயர்பற்றியும், துன்பங்களையும் அதன் நிமித்தங்களையும் ஒருங்கே யொழிக்கின்றவன் பரமேசுரனேயாதலின் உருத்திரன் என்னுஞ்சொல் பர மேசுரவாசகமே யல்லாது பிறவாசகம் அன்றாமென்பதுங் கொள்ளக்கிடக் கின்றது.

அற்றாகலினன்றே, வாயு சங்கிதையும்,

"ருத்³து:க²ம் து:க²ஹேதும் வா தத்³த்³ராவயதி ந: |
ப்ரபு⁴: ருத்³ர இத்யுச்யதே தஸ்மாச்சி²வ: பரம காரணமிதி"

"ருகாரம் துன்பங்கள், அல்லது துன்ப காரணங்கள் அவற்றைத் தொலைக்கின்றவன் எமது பரமேசுரனாகிய உருத்திரனெனப்படுகின்றான் ஆதலின் சிவனே மேலான காரணன்" என்று இப்பொருளையே வலியுறுத்து கின்றது.

அஃதன்றியும், இலக்கண வகையால் நோக்குமிடத்தும், ரு-த்ர:, என் னும் இரண்டு வடமொழிப்பகுதிகளும் பிருஷோதராதி கணத்திலுள்ள வைகளாமாதலின், "தொண்டாது அமங்களத்தை நீக்குதல்" என்னும் பொருளை கொள்ளக்கிடத்தலின் இலக்கண முறையானும் மேற் கூறிய பொருளுக்கோர் இடையூறுமின்மை யுணர்க.

அல்லது, 'ருத்ர:' என்பதை இடுகுறிப் பெயராமெனக் கொள்ளி னும் சிறிதும் இழுக்கின்றாம். என்னை? அச்சொல் கறுத்த கண்டன், என் பது முதலிய சகுணப் பிரமமாகிய பரமேசுரனையே யறிவுறுத்தலினென்க.

இதுபற்றியே "ஸ்தாணு ருத்ர உமாபதி:" என அமரகோசமும் கோஷிக்கின்றது.

மற்றும், சுவேதாசுவதர வுபநிடதமும்,

'யொ தெவாநாம் ப்ரமவொ ருத்ரஸ்சாவிஸ்வாதிகொ ருத்ரொ மஹர்ஷி:'

"எவன், தேவர்கட்கு முதல்வனாய் நிற்கின்றவன் உலகைக் கடந்தவன் உருத்திரன் மகரிஷி" என்று கூறுகின்றது.

அவ்வாறே, அவ்வுபநிடத வுரையும், "ருத் துவனாஸ அஹவதா ஊவெகி ருத்ர இதி ப்ரகிஉ ஷெடி", "ருத் என்னுந் துன்பங்களைப் போக்கலால் தங்களைப் பாதுகாக்கின்றேன் ஆதலின் ருத்திர என்பது வெளிப்படை" என்று கூறுகின்றது.

அல்லது, "ரொஷெணிருக்" என்னும் வடமொழிப் பாணினி இலக்கண சூத்திரத்தால் ரோதனம் (அழுகை) என்பதே பொருளாமெனக் கொள்ளினும் இழுக்கின்றாம் என்னை? "ரொடியதி ஸஊகாலெ ஸவஉ இதி" 'பிரளயகாலத்தின் உயிர்களனைத்தையும் அழுமாறு அழிக்கின்றவன்' என்பதே பொருளாய் முடிந்து மேற்கூறிய பொருளையே வலியுறுத்துகின்றமையினென்க.

அற்றேலஃதாகுக. இங்ஙனங் கூறியவாற்றால் அக்கினியும் உருத்திரனும் ஒன்றுமென்பதே துணியப்படுதலின் முன்னர்க் கூறியவாறே அக்கினி அழுததை உருத்திரன் அழுதான் என்று கொள்ளின் வருமிழுக் கென்னை கொல்? அற்றன்று. ஆண்டு அஃது இயையாமையினென்க. அஃதாமாறு:—முன்னொருகால் தேவர்கள் அசுரர்களை வென்றும் கொன்றும் அவர்களுடைய தனங்களனைத்தையுங் கவர்ந்து அக்கினி தேவன்பால் வைத்து, அக்கினியே! நீ, இவற்றைப் பாதுகாத்துப் பின்னர் எமக்குக் கொடுத்தல் வேண்டும் என்று உறுதி செய்துவிட்டு, முன்போல் போர் முதலியவற்றை முடித்துக்கொண்டு, தேவர்கள் அக்கினியின்பால் வந்து முன்னர் நாங்கள் நின்னிடத்தில் வைத்த தனங்களை எமக்குக் கொடுப்பாயாக என்று அக்கினியைக் கேட்க, அவற்றைக் கொடுக்க மனமிலாதிருக்க அதைக் கண்ட தேவர்கள் அக்கினியை வற்புறுத்தியபோது அக்கினி அழுதது அதுவே வெள்ளியாயிற்று; ஆதலின் தீயை யோம்புங்கால் வெள்ளியைத் தானஞ் செய்யில் அழல் நேரிடும் என்னும் கதை வேதத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் ஆண்டு, அக்கினி யென்பது ஐவகைப் பூதங்களுள்

ஒன்றாகிய அக்கினியே யன்றி அனைத்திற்கும் காரணமாகிய உருத்திரன் அன்றென்பது உற்று நோக்குவோர்க்கே தெற்றென விளங்கும், மதப்பேய் கொண்டு மாறுகூறுவோர்க்கு மருந்தென்னை ?

இவையனைத்தையும் கருத்தில் அடக்கிக்கொண்டன்றோ, நேரே சுருதி யும், பிராணனை உருத்திரன் எனல் எவ்வாறு மென்றாசங்கித்துக் கொண்டு;

"ப்ராணவாவ ருத்ரா ஏதெஹிதம் ஸர்வம் ரோதயந்தி" என்றற்றொடக்கத்து மந்திரத்தில் விடை கூறுமுகத்தால் இப்பொருளை இனிது விளக்குகின்றது என்பது ஈண்டு உற்று நோக்கத்தக்கதொன்றாம்.

'வேள்விக்கு வேந்தன் என்பது' வேள்விகளனைத்திற்கும் இறைவனா யிருக்கின்றவன் என்பதாம்.

அற்றேல்? வேள்விகட்கெல்லாம் இறைவனாந் தன்மை உருத்திரன் பாற் பொருந்தல் எவ்வாற்றாலாமெனின் ? வேள்விகளில் அளிக்கின்ற அவி களை (தேவ வுணவுகளை) இப் பரமேசுரனே யருந்துகின்றவனாதலின் இனிது பொருந்துமென்க.

அங்ஙனமாயினும், வேள்விகளனைத்திலும் ஒவ்வொரு வேள்விக்கும் ஒவ்வொரு தேவதையும் சிறந்ததாய் நின்று அவிகளை யேற்குமெனில், பரமேசுரனே உண்கின்றானெனல் முற்றும் முரணாமெனிலோ ? அற்றன்று; ஆசங்கித்தது ஒருபுடை உண்மையாமாயினும் அவிகளை யுண்ணுகின்ற பல வகையான தேவர்களனைவரும் முடிவில் பரமேசுரன் வடிவர்களேயாதலின் அவனொருவனே உண்கின்றான் என்றதற்கு இழுக்கொன்றுமில்லை யென்ப துணர்ந்து கொள்க.

மற்றும், உண்மையில் உற்றுநோக்குங்கால் வேள்விகளனைத்திலும் அவிகளை யுண்கின்றவனும், வணக்கம் முதலிய வழிபாடுகளை ஏற்றுக்கொள் கின்றவனும் பரமேசுரனே யென்பது அனைவருக்கும் உடன்பாடற்பாலதா மென்பது தேற்றம்.

இதைத் தழுவியன்றோ மிருதியும்,

"அஹம் ஹி ஸர்வ யஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச" 'வேள் விக ளனைத்திலும் கொடுக்கின்ற அவிகளை உண்கின்றவனும், இறைவனும் யானாகவே யிருக்கின்றேன்' என்று கூறுகின்றது.

“வட்டக்குண்டத்தி லெரிவளர்த்தோம்பி மறைபயில்வார், அட்டுக் கொண்டுண்பதறிந்தோமே” என்னும் திருமறை வாக்கியங்களும் ஈண்டு கொள்ளற்பாலன என்பது பெற்றும்.

வணக்கம் முதலியவைகள் ஏனைய தேவர்களைக் குறித்துச் செய்ய வேண்டுமென்பது சுருதிகளிற் கூறப்பட்டிருப்பினும், பரமேசுரனே வணக்கத்தை ஏற்றுக்கொள்ளுதற் குரியானென்பதும், பிற தேவதைகள் ஏற்றுக் கொள்ளற்குத் தக்கார்கள் அல்லரென்பதும் மேற்கூறிய வகையாற் பொருந்துமாறுணர்க.

இப்பொருளையே, பழையோர்களான பேராசிரியர்களுள்ளும் மிகப், பழையோரான தெய்வத்திருவருள் திறம்பழுத்த அரதத்த சிவாசாரியரும்,

“ நமோ உவஸா ந ஹ்யஸ்ய விநா தாஷூஹ்ர வீதா: உநமும் ந ஹி கஸ்ஷீஷெ ”

“ வணக்கத்திற்கு வரம்பு நிலமாகிய பரமேசுரனாகிய நின்னைத்தவிர்த்து அத் தேவர்களுள் ஒருவர்க்கேனும் அவ் வணக்கத்தைப் பெற்றுக்கொள்ள ஆற்றலில்லை, வேந்தன் திருமுடியைத் திருடியவனொருவன் அம்முடியைத் தனது தலையில் அணிந்துகொள்ள முடியாதவன் ஆவனன்றோ, அது போன்று” என்று தாமியற்றிய சுருதி சூத்திமாலையிற் கூறியுள்ளார்.

இதுபற்றியே நாட்டிய நூலும், “ வச்சிரமுத்திரையால் இந்திரனையும், பத்மினிமுத்திரையால் பிரமனையும், சங்கினிமுத்திரையால் விஷ்ணுவையும், உருத்திர பரமேசுரனைத் தலை மேல் கைகுவித்தலாகிய வணக்கத்தாலும் பாவித்தல் வேண்டும்” என்று கூறுகின்றதென்க.

இவ்வாற்றால், இந்திரன் முதலிய தேவர்களைப் பிரியப்படுத்தும் பொருட்டுச் செய்யப்படுகின்ற கருமங்களும் பரமேசுரனையே பிரியப்படுத்துவனவாய் முடிதலால் உருத்திர பரமேசுரனே வேள்விக் கருமங்களிற் கொடுக்கப்படும் அவிகளை யருந்தி, வணக்கம் முதலிய வழிபாடுகளால் மகிழ்ந்து, பயனைக் கொடுக்கும் இறைவன் என்பது இனிது பெறப்பட்டமை காண்க.

மற்றும், இது போன்றே புராணங்களும்,

யஸ்யைவ வஸ்துவத்ஸராதை: ப்ரீதா ப்ரீதோ ஹவெத்திதா ।
தஸ்யைவ ஸர்வ ஸம்ப்ரீதா ப்ரீதோ ஹவதி ஶங்கர: ॥

"புத்திர பௌத்திரர்கள் பிரியமடைதலால் பிதா பிரியமடைவது போன்று, தேவர்கள் அனைவரும் பிரியமடைதலால் சங்கராகிய பரமேசுரர் இனிது பிரீதி யடைகின்றனர்" என்று கூறுகின்றன.

ஈண்டு, வேள்வி முதலியன 'அபூர்வமாகிய புண்ணிய வாயிலாகப் பயனை யளிக்கின்றன' என்னும் ஒரு சாராரின் உடன்பாட்டையும் நன்கு உற்று நோக்கின் புண்ணியமாகிய அவ் வபூர்வமும் பரமேசுரனுடைய அருளே யன்றி வேறில்லை யென்பதும் உணரற்பாலதாம்.

ஈண்டு "வேள்விகட்கெல்லாம் இறைவனுதற்றன்மையாவது, வேள்விப் பயனை யளிப்பதில் சுவதந்திரமும், மாறுபடில் அதைச் சிட்சித்தலுமாம்; இப் பொருளே தக்கனுடைய வேள்வியில் பல தேவர்களிருந்தும் பரமேசுரனது அம்சமாகிய வீரபத்திரரால் அவ்வேள்வி நாசமாக்கப்பட்டது, பின்பு அவர் மானாக ஓடியும் வேள்வியைக் கெடுத்தனர்" என்பதும், மற்றும், சிவபுராணம், பாகவதம் முதலிய புராணங்களால் சில கதைகளைக்கொண்டு நன்கெடுத்துப் போதிக்கப்பட்டிருக்கின்றது.

மற்றும், இப்பொருளையே தைத்திரீய சுருதியும்,

"தெவா வை யஜ்ஞாத் ருத்ரமந்தராயந் ஸ யஜ்ஞமவித்யத்"

"உருத்திரனைத் தவிர்த்துத் தேவர்கள் வேள்வி செய்தனர், அவ் வேள்வியை உருத்திரன் நாசப்படுத்தினன்" என்று கூறுகின்றது.

அஃதன்றியும், இப்பொருளை இனிது விளக்குதற்பொருட்டே ஈண்டு, (ஹோதாரம்) 'பயனை யளிக்கின்றவனும்' அல்லது 'ஆராதிக்கப்பெறுவோனும்' என விதந்து கூறப்பட்டதூஉமென்க.

எவ்வாற்றால் அப்பொருள் விளக்கமானதாமெனின்? கூறுதும்:— 'ஹோதாரம்' என்னும் வடமொழிச் சொல்லில் உள்ள, ஹு, என்னும் பகுதிக்கு, ஈதல், உண்ணல், என்னும் இருபொருளும் உள்ளதால், அதற்கு வடமொழி யிலக்கணத்தைத் தழுவி, பயனை யளிக்கின்ற உருத்திரனை யெனக் கொள்ளப்பட்டிருத்தலி னென்க.

அல்லது 'ஹோதாரம்' என்பதற்கு ஆராதிக்கப்பெறுவோனை எனப் பொருள் கொள்ளினும் இழுக்கின்றாம். என்னை? "விஷ்ணு ருபாம்ஸு யஷ்டவ்ய:" என்றாற்போல 'ஹோதவ்யம்' எனவாகி ஆராதிக்கத்தக்கோனை எனப் பெற்று எல்லா வேள்விகளிலும் இறைஞ்சுதற்குரிய பரமேசுரனை என்னும் பொருளே கொள்ளக்கிடத்தலின் என்க.

உண்மையிலோ 'ஹோதார:' என்னும் சொல் 'ஹ்வயதே' (அழை) என்னும் வடமொழிப் பகுதியிற் பிறந்ததாம்.

அற்றுகலினன்றே ஐதரேயப் பிராமணமென்னுஞ் சுருதியும் இவ்வாறே கூறுகின்றது.

ஈண்டு 'ஹோதவ்யம்' எனக் கொள்ளுமிடத்து 'அழைத்தற்குரியானை' எனப் பொருள்கோடலே தகுதியாம். என்னை? அனைவருந் துன்புறுமிடங்களில் உருத்திர பரமேசுரனே அழைப்பதற்குரியான் ஆதலினென்க.

இதையே "ஆதரித் தழைத்தா லதர்துவே யென்றருளாயே" என்று கூறுகின்றது திருமறையும், பயனை யளிக்கின்றவனை என்றதோ, பட்டபாஸ்கரரின் பாடியத்தைத் தழுவிக் கூறியதாமென்றுணர்க.

'அன்னங் கொடுக்கின்றவனும்' என்பது. இருவித வுலகிற்கும் உணவுப் பொருள்களை யளிக்கின்றவனை யென்பதாம். என்னை? 'யஜ' என்னும் வடமொழிச் சொல், "தேவாராதனை, சங்கதி, கரணம், தானம்" என்னும் பொருள்களையுடையதாம் ஆதலின் 'அன்னத்தைத் தானஞ் செய்கின்றவன்' என்னும் பொருளும் பொருந்துமென்று கொள்ளலாமென்க.

அல்லது, மூலத்தில் சத்திய யஜனை என்பது சத்தியமான அதாவது பலவகையான ஆராதனையை யுடையானை எனினுமாம்.

அல்லது, உண்மை கூறலாகிய ஆராதனையை யுடையானை என்பதாம். இதனல் எய்தருஞ் சிவமன்றி மற்றொன்றை யிசைத்தல் பொய்யென்பது பெற்றும்.

இது பற்றியே சுருதியும்,

"ஸத்யேநைநம் தபஸா யோऽநு பஶ்யதி" "சத்தியமாகிய தவத்தினுல் இப்பரமான்மாவை எவன் காண்கின்றுனே" என்று கூறுகின்றது. இவ்வாறே கண்ணபிரானும்,

"ஸத்யஶௌசார்ஜவத்யாகைஸ்ஸ்வஸா நியமேந ச"

'உண்மை, தூய்மை, ஆராமை, விடல், நியமம் என்பவற்றுல் யான் பூசிக்கப் பெறுகின்றேன்' என்றருளிச் செய்துள்ளார்.

அல்லது, சத்தியம் என்பது என்றுமுள்ள தனது சத்தை அதாவது வடிவத்தை வானுலக மண்ணுலகங்களில் நிறைந்திருக்குமாறு செய்கின்றவனை யென்பதாம்.

அற்றுகலினன்றே "ஈஶாவாஸ்ய மிதம் ஸர்வம்" என்றெழுந்த ஈசாவாஸ்ய உபநிடத முதலிய நூல்களனைத்தும் இப்பொருளையே முழங்குகின்றன.

இவ்வாறே, காளிதாசரென்னும் கவிச்சக்கரவர்த்தியாரும்,

"வேதாந்தேஷு யமாஹு ரேக புருஷம் வ்யாப்ய ஸ்திதம் ரோதஸீ"

"மறை முடிகளில் கூறப்பட்டுள்ள ஒரு பரமான்மாவானது வானுலக மண்ணுலகங்களில் நிறைந்து நிற்கின்றது" என்று கூறியுள்ளார் என்பதும் காண்க.

'பொன்னார் திருமேனியனும்' என்பது, பொன் போன்ற திருமேனியை யுடையவன் என்பதாம்.

இப்பொருளையே சுருதிகளும்,

"நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதயே உமாபதயே பஶுபதயே நமோ நம:"

"பொற்றோளுடையானுக்கு வணக்கம், பொன்னிறமுடையானுக்கு வணக்கம், பொன் வடிவுடையானுக்கு வணக்கம், பொன்னுக்குத் தலைவன் பொருட்டு வணக்கம், அம்பிகையின் தலைவனுக்கு வணக்கம், உமையின் இறைவனுக்கு வணக்கம், பசுக்களுக்குப் பதியானவனுக்கு நமஸ்காரம்" எனவும்.

"ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருஶ்யதே ஹிரண்ய ஶ்மஶ்ருர் ஹிரண்ய கேஶ:"

"சூரியனுக்குள் பொன்மயமான தாடிகளை யுடையவனும், பொன்மயமான மயிர்களை யுடையவனும், பொன்மயனுமாகிய ஒரு பரமபுருடன் காணப்படுகின்றான்" எனவும், மற்றும் ஆயிரக்கணக்கான வகையாகவும் கூறுகின்றன.

மற்றும், மிருதிகளும்,

"தப்த ஹேமநிகாஶாபம் ஶிதிகண்டம் த்ரிலோசநம்"

"உருக்கிய பொன்போன்ற திருமேனியை யுடையவனை, காளகண்டனை, முக்கண்ணனை" எனவும்,

" ஶமுமெஜக கனூஉ-ஶஷ்ஹூஉ-த கநக நிஹமு "

" கல்பந்துருமத்தின் வேரானவன் உருக்கிய பொன்போன்றவன் " எனவும், மற்றும் பலவகையாகவுங் கூறுகின்றன.

அக்கினியிலிருக்கின்றவனும், அக்கினியின்கண் இருக்கின்றவனே யெனக் கோடலு மியைபுடைத்தாம் ஆதலினென்க. என்னை? சுருதி மிருதிகளில் அவ்வாறே கூறப்பட்டிருத்தலினென்க.

அவற்றில் சிலவருமாறு :—

" யொ ருஷ்ரொ அஹ்நௌ யொ அவ்ஸு ய ஓஷதீஷு யொ ருஷ்ரோ விஶ்வா புவநா விவேஶ தஸ்மை ருஷ்ராய நமோ அஸ்து "

" யாதொரு உருத்திர பரமேசுரன் அக்கினியில் இருக்கின்றானோ, நீரின் கண்ணும், கொடி செடிகளினும் இருக்கின்றானோ, எவ்வுருத்திரன் அக்கினியி லிருந்துகொண் டிருக்கின்றானோ, எவ் வுருத்திரனை அக்கினி அறிய வில்லையோ, எவ்வுருத்திரனுக்கு அக்கினியே திருமேனியோ, எவ்வுருத்திரன் அக்கினிக்குள்ளிருந்துகொண்டு அதை ஏவுகின்றானோ " என்பதாம்.

மற்றும், " அஹ்நௌ திஷ்டதி விப்ராணாம் "

" அந்தணர்களுக்கு அக்கினியிலிருக்கின்றான் " என்பதுமாம்.

மற்றும் பலவகையாகவுங் கூறுகின்றன என்பது ஆண்டாண்டு உண ரற்பாலது.

ஈண்டு, உருத்திர பரமேசுரன் அக்கினியாகிய திருமேனியை யுடையா னெனவும், அக்கினியைச் செலுத்துவோனெனவும் கூறப்பட்டிருத்தலின், 'யாண்டும் தேகத்தைக் கொள்ளுங்கால் தேகியே கொள்ளப்படுகின்றான்' என் பது நியாயமாமென்பது முணரற்பாலது. இதனால் பரமேசுரனுடைய திருமேனியாகிய அக்கினியைக் கொள்ளுமிடத்து அவ்வுடம்பை யுடைய உருத்திர பரமேசுரனையே கொள்ளக்கிடக்கின்றமை காண்க.

அன்றியும், அக்கினி யென்பதே உருத்திர பரமேசுரனை யறிவுறுத்துஞ் சொல்லாம்; ஆதலின், அக்கினி என்பதன் பொருள் நேரே உருத்திர பரமே சுரனேயாகின்றான்; மற்றையன் அல்லன்.

இதுபற்றியே சுருதிகளும்,

" ஸ ஏவ விஷ்ணுஃ ஸ ப்ராணாஃ ஸ காலோ அக்நிஸ் ஸ சந்ரமா "

"அவனே விஷ்ணு, அவனே பிராணன், அவனே காலன், அவனே அக்கினி, அவனே சந்திரன்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் பரமேசுரனே அக்கினி யெனக் கூறுகின்றன. இதனால் அக்கினி யென்னுஞ் சொற்பொருள் உருத்திர பரமேசுரனே என்பது பெற்றாம்.

அல்லது, அக்கினி என்னுஞ் சொல், அக்ரே=மேல், நயதி=கொண்டு போகின்றவன் என விரித்துப் பொருள் கொள்ளினும், சோமரசத்தை யருந்தியவர்களை மேற்பதவியை யடையுமாறு செய்கின்றவனும் உருத்திர பரமேசுரனே யாவன்; ஆதலின், அக்கினி யென்பது உருத்திர பரமேசுரனுக்கு ஒரு சிறந்த காரணப் பெயரா மென்பது ஈண்டு உணரற்பாலது.

அல்லது அஙி, (அகி,) என்னும் பிராப்திப் பொருளைக் கொண்டு நகாரத்தைக் கெடுக்குமிடத்து எங்கும் நிறைந்து நிற்கின்றவன் எனப்படுதலின் உருத்திர பரமேசுரனே கொள்ளப்படுவன் என்பதும் உணர்க. இத்தகைய சொல்லமைவுக்கும் வடமொழியிலக்கணம் இடங்கொடுக்கின்றதென்பதுங் காணத்தக்கது. இதை வடமொழிப் பாடியத்திற் காண்க.

மற்றும், சருவகதத்தன்மை எனப்படும் எங்கும் நிறைதற் றன்மையானது ஒன்று கொள்ளப்படவே ஏனைய சருவக்ஞத்தன்மை முதலிய எண்குணங்களும், அக்கினி யென்னுஞ் சொல்லானே குறிப்பிக்கப் பெற்றன என்பதை யூகித்துக்கொள்க.

அல்லது, பரமேசுரனுடைய, அட்டமங்கள மூர்த்தங்களில், அக்கினியும் ஒரு மூர்த்தமாமாதலின், ஈண்டு அக்கினி அபிமானியாகிய மூர்த்தியையே அக்கினி யென்னுஞ் சொல் தெரிவிக்கின்றதெனினும் சிறிதும் முரணின்றென்பது முணர்க.

இது பற்றியே சிவபுராணமும்,

"வஹிரஞ்ஜஃமவிஶ்வம் வ்ராவ்ய தெஜொ ஶயீ ஸாஹா।
ஶஈ்ரஸ்ரஶயீ ஶஒத்ராஷிதா வொர ஸஒவிணீ"

"ஒளிப்பிழம்பானதும், மங்களமானதும், உருத்திர மயமானதும், கோரவடிவமுமாகிய உருத்திரனுடைய மூர்த்தியானது உலகின்கண் உள்ளும் புறம்பும் நிறைந்து நிற்கின்றது" எனக் கூறுகின்றது.

மற்றும், எல்லாமுணர்ந்தவராகிய வியாசபகவானும் தாமியற்றி யருளிய பிரமசூத்திரமென்னும் சாரீரகமீமாஞ்சை (ஆராய்ச்சி) யின்கண்,

“ அபிமானி வ்யபதேஶஸ்து விஶேஷாநுகதிப்யாம் ”

“சிறப்பாலும் இயைபாலும் அபிமானி என்னும் வழக்கும் உண்டு” அதாவது ஒருபொருளைக் கொள்ளுமிடத்து அதனுடைய விசேடத்தாலும் இயைபாலும் அதனுடைய அபிமானியுங் கொள்ளப்படும் என்பதாம். எனவே, ஈண்டு அக்கினி தேவதையைக் கொள்ளில் மேற்கூறிய புராண வாக்கியத்திற்கு முரண்படுமாதலின் அவ்வக்கினியைத் தனக்கோர் மூர்த்த (வடிவ) மாய்க்கொண்டு அதில் அபிமானம் வைத்துள்ள உருத்திர பரமேசுரனே கொள்ளத்தக்கான் என்பது தாமேபோதரும்,

மந்திரத்தின் பிண்டப்பொழிப்பு வருமாறு :—

‘வேண்டுவதை யீவான்’ என்னும் வேள்விகட்கெல்லாம் வேந்தனும், வேள்வியால் ஆராதிக்கப்பெறுகின்றவனும், உண்மை யுரைப்பதிற் பிரிய முடையானும், புவனங்களனைத்திலும் நிறைந்திருக்கின்றவனும், வானுலக மண்ணுலகங்களின் போகப்பொருளை யளிக்கின்றவனும், பொன்னூர் திருமேனியனும், அக்கினிக்குள்ளிருந்து செலுத்துகின்றவனும், வழிபடுவோரை மேற்பதத்திற் சேர்க்கின்றவனும், அனைத்திற்கும் அதிட்டானனும், சருவக்ஞனும், பவத்துன்பைப் போக்குகின்றவனும், என்றுமுள்ளவனும், மற்றும் பலவகை மங்கள குணங்களோடு கூடியவனுமாகிய உருத்திர பரமேசுரனை, எமது புதல்வர்களே! நீவிர், அருள்நோக்குடையவனாகச் செய்து கொள்வீர்களாக என்பதாம்.

‘மேகம்போன்று நிலையற்ற மரணத்தின் முன்னர்’ என்பது. எமது பிதாவே! பரமேசுர வழிபாடு அனைவரானும் செய்யற்பாலதாமென்பது உண்மையேயாம். அவ்வாறே யாமுஞ் செய்கின்றோம். ஆனால் இதனுள் ஒன்றுளது. அஃதென்னையெனின் ?

வேதமானது,

“ ஶதாயுர்வை புருஷ: ”

‘நூறுவயதுடையவன் மனிதன்’ என்று கூறியிருத்தலின் மனிதர்க்கு வயது நூறுமென்பதில் ஐயமில்லை. இதில் தொண்ணூறுவயது சென்ற பின்னர் அவ் வழிபாடு செய்யில் மிக நலமாம். நீவிர் எம்மை இப்போதே வழிபாடு செய்தல்வேண்டுமென விரைவுப்படுத்தல் என்னை எனின் ? அதற்கு,

இருடி, தமது புதல்வரை நோக்கிக் கூறுகின்றார்:—புதல்வர்களே! நீவிர், இவ்வண்ணம் ஆசங்கை செய்யாதீர்கள். ஏனெனின்? இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்றெண்ணவோ திடமில்லை யாதலின் என்க. ஆயுள் இவ்வளவே யென்று உறுதி கூறலும், இறக்குங்கால மீதுதா னென்று தெரிந்து சொல்லலும் யாவர்க்கும் மிக அரிதாமாதலின் இனிது வாழுங்காலத்திலேயே இறைவனை வழிபடல் வேண்டுமென்றுணர்வீர்களாக. இது தமது மக்களை யுடன்படுத்துவார் போன்று உலகிற்குக் கூறுகின்றார் என்பது காண்க.

'சித்தங்கெடல்' என்றதால் சித்தத்தை உபலக்கணமாகக்கொண்ட இந்திரியங்களனைத்துங் கெட்டொழிதலாகிய இறத்தல் கொள்ளப்பட்டது.

ஈண்டு, 'நானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்'

எனவும்,

" மரண வேதனை யாவரால் அறியலா மயங்கி யைம்புலன் அந்தக்
கரணம் யாவைம் கலங்கிட வருந்துயர் கடவு ளேயறி கிற்பான்"

எனவுங் கூறிப் போந்தவாறே,

மற்றும், எண்ணிறந்த பெரியார்களும், நூல்களும் மிகப் பயந்து முறை யிடுகின்ற இறப்பினால் வருந் துன்பத்தை உற்று நோக்கின் மனமுருகாதாரும் உளரோ? இலர் என்பதாம்.

மரணம் வருங்காலம் நியம மன்றுமோ வென்பதற்கு, 'கணப்போதே னும் நிலைத்திருக்குமென்று எண்ணவுங் கூடாததாய் மேகத்தைப்போன்று நியமமின்றி வரும்' எனக் கூறினர் என்பது.

இதுபற்றியே,

"இறக்குங் காலத்தைத் தெய்வமு முணராதெனின் மக்களெவ்வாறு ணர்வர்" என்னும் வழக்குச் சொல்லும் நிகழ்கின்றது.

இவ்வாற்றால், இனிது வாழும்போதே மக்களாய்ப் பிறந்த அனைவரும் பரமேசுரனையே வழிபடல் வேண்டு மென்பதும், அவ்வண்ணம் வழிபாடு செய்தல் அனைவருக்கும் எளிதாமென்பதும் பெறப்பட்டன. எளிதாதலும் 'யாவர்க்குமா மிறைவர்க் கொருபச்சிலை' என்றாற்போல எளிய சாதனங்களைக் கொண்டே செய்யற்பாலதா மாதலினென்க. அவ்வழிபாடே வேண்டியவற் றை யடைவித்தல், வேண்டாதவற்றை விலக்கல் என்னும் பாதுகாப்பிற்குச், சிறந்த சாதனமாமென்பது முணர்க.

இக்கருத்தைக் கொண்டே கந்த புராணம் மலயாசல கண்டமும்,

“யாவந்நாயாதி மரணம் யாவந்நாக்ரமதே ஜரா ।
யாவந்நேந்த்ரிய வைகல்யம் தாவத்பூஜய ஶங்கரம் ”

“மரணம் எதுவரையில் வரவில்லையோ, எதுவரையில் கிழத்தன்மை வரவில்லையோ, எதுவரை புலன்கள் கெடவில்லையோ, அதுவரையும் சங்கரனைப் பூசிப்பாயாக” என்று கூறுகின்றது.

மற்றும்,

“ப்ரஹ்மண꞉ ஸ்ருஷ்டிகர்த்ருத்வம் விஷ்ணோ꞉ ஸம்ரக்ஷகத்வகம் ।
இந்த்ரஸ்ய ஸ்வர்க்கராஜ்யத்வம் ஶிவபூஜாவிதே꞉ பலம் ”

“பிரமன் உலகைப் படைப்பதும், விஷ்ணு உலகைக் காப்பதும், இந்திரன் சுவர்க்கத்தை ஆள்வதும், சிவபூசையின் பயனும்” எனச் சிவபூசையின் பயனை யெடுத்துக்கூறி, சிவபூசை, பண்ணல் வேண்டுமென்பதையே வற்புறுத்துகின்றது.

அங்ஙனமே, பிரமோத்தரகாண்டமும்,

“பத்ரமாத்ரேண ஸந்துஷ்டோ யோ ததாதி நிஜம் பதம் ।
அஹோ ஶம்போ꞉ பூஜாயா மாஹாத்ம்யம் விஸ்மயாவஹம் ”

“ஒரு பச்சிலையால் பிரியமடைந்த ஈசுரன் தனது பதத்தை யளித்தருள்கின்றான். ஐய ! பரமேசுரனுடைய பூசையின் மான்மியம் வியப்பாயிருக்கின்றது” என்று கூறுகின்றது.

அவ்வாறே பாரதமும்,

“யாவச்சஶாங்க ஶகலாமலபத்த மௌலி
ந ப்ரீயதே பஶுபதிர் பகவான் மமேஶ꞉ ।
தாவஜ்ஜராமரண ஜந்ம ஶதாபி வாதை
து꞉காநி தேஹவிஹிதாநி ஸமுத்வஹாமி ”

‘இளம்பிறை சூடிய மௌலியனும், பசுபதியும், பகவானுமாகிய மகேசுரன் எதுகாறும் பிரியமடைந்திலனோ, அதுகாறும் நூற்றுக்கணக்கான மூப்பிறப்புக்களில் அடிபட்டு உடம்பால் உண்டாகின்ற துன்பங்களைப் பொறுத்துக்கொள்வேன்” என்று கூறுகின்றது. இது உபமன்யு முனிவர்

சரிதமென்றுணர்க. இதுபற்றியே, மகான் அப்பைய தீக்ஷிதரவர்களும், வெள்ளெருக்கம்பூ முதலியவைகளால் உனது திருவடியைப் பூசிக்குந்தன்மை யொன்றை எனக்கருள் செய்வையேல், அதனால் முத்தியென்பது தானே வரும் என்றனர்.

மற்றும், இவ்வாறே அளவற்றுள்ள பிரமாணங்களை யூகித்துணர்க என்பதாம். (1)

விருத்தியுரை முற்றும்.

முதல் மந்திரம் முற்றிற்று.

இரண்டாம் மந்திரம்.

இம்மந்திரம் இருக்குப் பதிகத்திற்கு ஒரு பதிகமாகவும், சாமகீதத்தில் நான்காகவும் உள்ளதாம்.

இருக்கு மந்திரம் 2.

१ २   ३ १र २र ३ १ २ १ २
तद्वो गाय सुते सचा पुरुहूताय सत्वने ।
२उ ३ २ ३ १ २
शं यद्गवे न शाकिने ॥ २ ॥

தத்³வோ கா³ய ஸுதே ஸசா புருஹூதாய ஸத்வநே |
ஶம் யத்³க³வே ந ஶாகிநே ||

கீத மந்திரம் 2.

५ र ४५ १ ^ ३ २ ३ ५ १ २र २२ १ २
तद्वो होवा । गायार । सुता ईसार३४चा पुरु हूताय सात्वा ।
‾ १ २ २ ^ ३ ५ १ ^ ३ ५ २र
नार यि । शयत् । हा । औ३हायि । गार३४वायि । नारशार३४औ हो वा ।
२ १ १२११
ए३ । किनेर३४५ ॥

கீத மந்திரம் 3.

५ र र   २   १   ३   ३र २   १ ३
तद्वो गया । सुतायि सचा३ । पुरु२३हूता२३४ । हा हो३ । यासा
^३ . ५   र १   -   -   १   ५
त्वा२३४नायि । श यद्वा२२३वे । न शौ२ । हौ२ । हुवो२३४ । वा ।
४   ५
का५यिनो६हायि ॥

கீத மந்திரம் 4.

५ र र   र   ५   २   र १र   र२   १   ११२र   १   ७
तद्वो गाय सुते सचा६ए । यु पु हूताय सत्वने । पुरु हूता । या सत्वा
२   ४ ५   २   ^३ ५   १ . ४   २^   ५
ना इ । शयत् । गौवा ओ वा । ना शा । का । ईनो हायि ।

கீத மந்திரம் 5.

५ र र   र   ५   २ र १र   १   २
तद्वो गाय सुते सचा ए । पुरुहूताय सत्वना ई । शं यद्वा वे । ऐ हो
२   १   १   ३   ५र र   ३   र२
आ ईही । नशा का ईना औ होवा । ई हा उ ॥

இந் நான்கும் தத்வோவர்க்கம் எனப்படுகின்றன.

இவற்றிற்கு மூலகாரணமாகிய இரண்டாவது மந்திரத்தின்

பதவுரை.

(हे स्तोतार: !)	(ஹே ஸ்தோதார:)	(துதிப்போர்களே !)
व:	வ:	நீவிர்
सुते	ஸுதே	புத்திரப்பேறு முதலிய பயனை யடைவதற்கு,
पुरुहूताय	புருஹூதாய	பல பெரியோர்களால் அழைத்தற்கும் பூசித்தற்கும் உரியானும்,
सत्वने	ஸத்வநே	ஈகையில் பேராற்றலுடையானும்,
शाकिने	ஶாகிநே	சாகரத்தை யுண்டாக்கிய இருடியால் மகிமையை உணரப் பெற்றவனும்,
इन्द्राय	இந்த்ராய	இந்திர வடிவங் கொண்டுள்ளவனுமாகிய பரமேசுரன் பொருட்டு,

गवे न	கவே ந	பசுவிற்குப் புதிய கன்றானது களிப்புண்டாக்குவது போன்று
यत् शं	யத் ஸம்	யாதொரு சங்கீதம் களிப்பை யுண்டாக்குகின்றதோ,
तत्	தத்	அச் சங்கீதத்தை,
सचा	ஸசா	கூடியுள்ளவராய்,
गाय	காய	பாடுவீர்களாக.

விருத்தியுரை.

இம்மந்திரத்திற்கு, சம்யு, வார்ஹஸ்பத்தியர் ரிஷிகள் ஆவர். இச் சாமகீதத்திற்கோ, உருத்திரர், மிருக்யுர் ரிஷியாவர், வடமொழிச் சந்தம் காயுத்திரி.

தேவதை, இந்திரனுடைய திருமேனி கொண்டு நிற்கும் உருத்திரனே யாவன்.

"துதியாளர்களே! நீவிர், இந்திரனென்னும் உருத்திர பரமேசுரனைப் பாடுவீர்களாக என்பது" இம்மந்திரத்தின் கருப்பொருளாம்.

ஈண்டுக் 'கூடிக்கொண்டு' என்பதால், பாடுவோர், துதிப்போர் முதலிய அனைவரும் ஒருங்கே குழுமி நின்று பாடுவீர்களாக என்பது பெற்றும்.

"இந்திரன் வடிவங் கொண்டுள்ள இவ் வுருத்திர பரமேசுரன் பொருட்டு என்பது" எவன் பொருட்டுப் பாடவேண்டும்? என்னும் வினவிற்கு விடை கூறியவாறும்.

எவ் வண்ணத்தனாகிய இந்திரன் என்றறிய விரும்புமிடத்து * புருகூதன் எனப்பட்டது. அதாவது பல பெரியோர்களால் பல பெயரைக்கொண்டு அழைத்தற்குரியான் என்பதாம்.

இவ்வாறு இந்திரனைப் பல பெயர் கொண்டு அழைத்தலாலன்றோ, சுப்ரமணியரை அழைக்குங்கால் இந்திர! வருக, ஹரிவ! வருக என்றற்றொடக்கத்து மந்திரங்களால் வேள்வி செய்கின்ற பல்லோர்களும் அழைக்கின்றார்கள் என்பது காண்க.

மற்றும், இக் கருத்துக்கொண்டே உபநிடதமும்,

"இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே" "இந்திரனென்னும் பரமான்மா மாயைகளால் பலவகை யுருவங்களைக்கொண்டனர்" என்று கூறுகின்றது.

---

* புரு - பல பெயர்களால், ஹூத: - அழைக்கப் பெறுகின்றவன்.

ஈண்டு " ஒருநாமம் ஒருருவ மொன்று மிலார்க்கு ஆயிரம் திருநாமம் " என்று பல சுருதிகளும் கூறுகின்றதையும் உணர்க.

மற்றும், இந்திரன் என்னுஞ் சொல் ஐசுவரியமுடையான் என்னும் பொருளேயே வலியாலும் இனிதுணர்த்துகின்றது என்பதுங் காண்க. அதுவும் மேலே வெளியாம்.

அற்றேல் புருகூதன், புரந்தரன் என நிகண்டிற் கூறியிருத்தல் என்னையோ வெனின்? அஃதும் இடுகுறிப் பெயரால் அமைதலினென்க.

" ஈகையில் பேராற்றலுடையான் என்பது " இப் பொருள் கொண்ட 'ஸத்வன்' என்னும் வட சொல்லிலுள்ள 'ஷணு' என்னும் பகுதியின் பொருள் ஈதலாமாதலின் தன்னை வழிபடுகின்றவருக்கு வேண்டியவற்றை அளிக்கின்ற பெரும் வன்மையை யுடையவன் என்பது பெறப்பட்டமை காண்க.

" சாகரத்தை யுண்டாக்கிய இருடியாலுணரப்பெற்ற மகிமையை யுடையவன் என்பது " இப்பொருளைத்தரும் 'சாகினே' என்னும் வடமொழிச் சொல் எல்லாம்வல்லான் என்னும் பொருளைத் தருவதுடன் சாகரத்தை யுண்டாக்கிய 'மங்கணகர்' என்னும் முனிவரால் அறியப்பெற்ற பெரும் மகிமையை யுடையவன் உருத்திர பரமேசுரன் என்பதையும் அறிவுறுத்துகின்றதனுலென்றுணர்க.

இப்பொருள் பெறல் யாண்டையதெனின்? அஃதாமாறு தெரிவிக்குதும்;—

முன்னர் 'மங்கணகர்' என்னுமொரு இருடி யிருந்தனர்; அவர் தமது திருக்கரத்தில் ஒரு தருப்பையின் நுனியால் அடிக்க, அக் கையிலிருந்து ஏழுகடலுந் தோன்றின; அதைக்கண்ட அவர் பாடிக்கொண்டே ஆடத் தொடங்கினர்; அதைக்கொண்டு உலகனைத்தும் ஆடத்தொடங்கின. அப்போது, உருத்திர பரமேசுரன் தோன்றி அவ்வெழு கடலையும் ஒரு பனித்துளிபோலத் தனது திருக்கரத்தில் அடக்கிக்கொண்டருளினர்; உடனே அம்மகரிஷியானவர், உருத்திரபரமேசுரனுடைய மகிமையை யுணர்ந்தவராய் எல்லாம்வல்ல இறைவ! நீயே, தேவர்கட்கெல்லாம் தேவனுகின்றாய், என்று பலவகையாகப் பரமேசுரனைத் துதித்தனர் என்னுமிக்கதை பாரதம் உத்தராத்தியாயத்திற் கூறியிருப்பதென்பதாம்.

"யாதொரு சங்கீதம் களிப்பை யுண்டாக்குகின்றதோ அச் சங்கீதத்தை" என்பது, எவ்விதமாகிய சங்கீதத்தை யென்பதற்கு விடை கூறப்படுகின்றது.

'பசுவிற்குப் புதியகன்றுனது களிப்புண்டாக்குவதுபோன்று' என்பது, எதைப்போன்று களிப்புண்டாக்கத்தக்க சங்கீதத்தை? என்பதற்கு விடை கூறலாம்.

ஈண்டு, பசுவிற்குப் புதிய பசும்புல் களிப்புண்டாக்குமாறு என்லும் பொருந்துமாயினும் அக்கால் இளம்புல் கொடுக்கின்ற களிப்பிலும் மிகுந்த களிப்பைப் புதிய இளங்கன்றே கொடுத்தலின் அதையே உவமையாகக் கூறப்பட்டதென்க.

மற்றும், உருத்திரபரமேசுரன் என்னுது இந்திரன் வடிவங்கொண்டுள்ள உருத்திரபரமேசுரன் என்றல், இத்தோத்திரம் உச்சிப்போதிற் செய்கின்ற வேள்வியில் இந்திரனுடைய குணங்களைப் புகழ்ந்து போற்றுதல் கொண்டு இந்திரனுடைய தோத்திரமென்பதும் இனிது பெறப்படினும், அவ்வண்ணங் கொள்வார் கருத்திற்கு முற்றும் முரணுகாது அதையும் உடன்படல்போன்றே கூறியதென்பதாமெனக் கண்டுகொள்க.

அஃதன்றியும், இந்திரன் என்னுஞ்சொல் பெயரானும், பொருளானும் உருத்திரபரமேசுரனையே தெரிவிப்பதாமாயினும் இடம்நோக்கி இந்திரன் என்னும் ஒருவனைக்கொண்டு அவனுக்கு அதிட்டானமாகிய உருத்திரபரமேசுரன் கொள்ளப்பெற்றனன். இதுபோன்று நேரே உருத்திரபரமேசுரனை யுணர்த்தாத சொற்களின் பொருளான ஏனைய தேவர்களை மேற்கொண்டெழுந்த மந்திரங்களும் முடிவில் பரமேசுரனிடத்திலேயே இனிது அமைகின்றன என்பது ஈண்டு உற்றுநோக்கத்தக்கது.

இதுபற்றி யன்றே,

ஈசுரன் என்ற சொற்குப் பொருளாகிய கண்ணபிரானும்,

"யெப்யந்யதெவதா ஭க்தா யஜந்தெ ஶ்ரத்தயாந்விதா: ।
தெவி மாமெவ கௌந்தெய யஜந்த்யவிதிபூர்வகம் ॥"

"அருச்சுன! அன்போடு ஏனைய தேவர்களை ஆராதிக்கின்ற பக்தர்களும், விதியைத் தழுவாது என்னையே யாராதிக்கின்றூர்கள்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அங்ஙனமே, இருக்குவேதம் 1-164-169-வது மந்திரமும்,

इन्द्रं मित्रं वरुणं अग्निमाहुः ॥

"பரமேசுரனை, இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி என்று கூறுகின்றூர்கள்" என்று கூறுகின்றது.

மற்றும், வாசநேய சுருதியும்,

एकैकं देवं एतस्यैव साविसृष्टिरेष उह्येवसर्वे देवाः ॥

"எல்லாத் தேவர்களும் இப்பரமேசுரனிடத்திற் றோன்றியவர்களே யாவர்கள்" என்று கூறுகின்றது.

இதனாலன்றோ, நான்கு மறைகட்கும் நற்பாடியங்கண்ட சயணாசிரியரும், ஆங்காங்கு இந்திரன் முதலிய தேவர்கள் சுருதியில் பலர் அழைக்கப் பெறுவரேனும் பரமேசுரன் ஒருவனே அவ்வத் தேவர்கள் வடிவனாய் நிற்றலின் சிறிதும் மாறுபாடில்லை யென்றார்.

இதுபற்றியே கந்தபுராணமும்,

காமி ஷிவெஷவாக்யாநி ஬்ராஹ்மணா வெஷவித்தமா: |
ரூஜ்ரெசூஷ்ஷிஷ்டம் ஸமாஶ்ரித்ய ஶிவெ வரமகாரணெ,
வயஷவஸ்யுஜி ॥

மறையை நன்குணர்ந்த அந்தணப் பெரியோர்களே! "சில மறைமொழிகள் உருத்திரபரமேசுரனிடத்தில் முடிவுறுகின்றன அதாவது உருத்திர மூர்த்தியைக்கொண்டு முடிகின்றன" என்று கூறுகின்றது.

மற்றும்,

"ஶ்ருதிவாக்ய மஹாதெவொ ஹிதஸ்ஸவஷாவ்ஸு மூர்த்திஷு" "கூறப்பெற்ற மகாதேவர் எல்லாமூர்த்திகளிலும் இருக்கின்றனர்" எனவுங் கூறுகின்றது.

இவ்வாற்றால், நீண்ட கழுத்தன், அகன்ற மார்பன், பெருந்தோளன் என்பது முதலிய வாக்கியங்கள் அத்தகைய திருமேனியை யுடைய இராம பிரானையே குறிப்பதுபோன்று இந்திரனைப் புகழ்தலும் உருத்திரபரமேசுரனையே குறிக்கின்றது என்பது திரண்டபொருள்.

இனி, "இச்சாமவேத உருத்திரியை நன்கு ஓதி உருத்திரனுக் கன்பு செய்வானாக" எனக் கூறிப்போந்த சாமவேதப் பிரமணம் என்னும் பிரபல சுருதியின் வலியால் இம்மந்திரங்கள் நேரே உருத்திரபரமேசுரனையே துதிக்கின்றன என்று கோடலே மிகவும் பொருத்தமுடையதா மென்றுணர்க.

என்னை? "ஐந்த்ர்யா காஹபத்ய முபதிஷ்டதே" "இந்திரன் மந்திரத்தால் காருகபத்தியமென்னும் அக்கினியைத் தாபிக்குக" என்னும் வேதவிதியில், இந்திரன் என்னுஞ்சொல் இருந்தும் ஆண்டு இந்திரன் என்ற சொல் ஐசுவரியத்தை மேற்கொண்டதாமாதலின் அவ்வக்கினியை வளர்ப்பதற்கே இம்மந்திரம் சாதனமாயிற்று என்பதறுலென்க.

அற்றேலஃதாகுக? மறைகளிற் கூறப்பட்ட சொற்களுக்கெல்லாம் நியமமாய் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருள் கொள்ளல்வேண்டாமோ வெனின்? இஃதுண்மை. அங்ஙனமாயினும் பிராமணம் என்னும் வேதபாகத்திற்கே அவ்வண்ணமென்பதும் மந்திரமென்னும் வேதபாகத்திற்கு அவ்வண்ணம் இல்லையெனலுமே உடன்பாடாதலின் என்க.

இதுபற்றியே அப்பய்ய தீக்ஷிதரும்,

"ஶ்ருதிஷ்வபி மத அநேக வொயத்யேஷு
ஏகார்த்யம் ஸங்காயஸ்ஸம் வ்யவஸ்தாபயத்"

"வேதம் போதிக்கின்ற பல்வகைப் பொருள்களிலும் மந்திரபாகத்தில் ஓரேபொருள் என்பதை நிறுவி" என்று கூறியுள்ளார்.

ஈண்டு, 'ஸத்வன்' என்னும் வடமொழிச் சொற்கு அறிஞர்களால் தொழற்குரியான், அல்லது, அன்பர்களைப் பாதுகாக்கின்றவன் எனினும் பொருந்தும்.

அல்லது, சத்துவம், என்பது ஒருகுண மெனக்கொண்டு சத்துவ குணச் செய்கையையுடைய உருத்திரபரமேசுரன் எனினுமாம்.

இப் பொருளையே சுவேதாசுவதர வுபநிடதத்திலும்,

"ஸத்த்வஸ்யைஷ ப்ரவர்த்தகஃ"

"சத்துவகுணச் செயலுடையவனே யிவன்" என்று கூறியிருக்கின்றது.

அல்லது, சத்வம், என்றது பரமார்த்த மென்னுஞ் சத்தையாம். அதாவது முக்காலத்துங் கெடாத உண்மையாம், அத்தகைய சத்தை உடையவன் என்பது மமையும்.

இதுபற்றியே, உண்மை வாக்கியமொன்றும்,

"ஸத்தி ஹாதி ப்ரியாஶைவம் நாஸ்ய ஜந்தோஃ ஸம் பக்ஷிஷு ।
ஶுத்யந்த்யம் ப்ரஹ்மாஶைவம் ஜகத்ரைவம் தஸ்தோஸ்த்விஷு"

"இருத்தல், விளங்கல், பிரியம், உருவம், நாமம் என்னும் ஐவகைக் கூறு களை யுடையது இவ்வுலகம்; இதில் முதலாவது மூன்று கூறுகளும் பரப்பிர மத்தின் கூறுகளாகின்றன. இரண்டாவதாகிய இரண்டு கூறும் உலகின் கூறுகளாகின்றன" என அறிவுறுத்துகின்றது.

இதைத் தழுவியே தொல்காப்பியனாரும்,

"நிலம் நீர் தீவளி விசும்போடைந்தும்,
கலந்த மயக்கம் உலக மாதலின்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

இவ்வாறே, திருமறையும்,

"பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதி,
பேய்த்தேர் முகக்குறும்" என்று கூறுகின்றது.

இது கொண்டன்றோ கந்த புராணமும்,

"யஸ்ய மாயாமயம் ஸத்வம் ஶரீரம் ஸ்யாத்ததோ குண: ।
ஸம்ஹாராய த்ரிமூர்த்தீநாம் ஸ ருத்ர: ஸ்யாஜ்ஜநார்த்தந:"

"எவனுக்கு மாயையின் சத்துவகுணம் திருமேனியோ, அவனே சம்மாரத்தின் பொருட்டுத் தமோகுணமுடைய உருத்திரனாய் மும்மூர்த்தி களில் ஒருவனாகின்றான்; பிறனலன்." என்று கூறுகின்றது.

இதையே "உள்ளே சத்துவகுணமுடையான் வெளியிலே தமோகுண முடையான்" என்று சூதசங்கிதை முதலிய நூல்களுங் கூறுகின்றன.

இதனால் 'குணி உருத்திரனே தமோகுணமுடையான்' என்பாரின் கொள்கையும் பயனற்றதாயிற்றென்க. என்னை? வெம்பவக் கடலில் மூழ்கித் துன்புற்றலைந்த ஆன்ம கோடிகட்கு, களைப்பாறுதற்கோர் குளிர் நிழலென் னும் இன்ப மயமாகிய பரமேசுரன் உபசம்மாரத்தின் பொருட்டாகவே புண் ணுற மருந்து கொள்ளல் போன்று தமோகுணத்தைப் பெற்றுக் கொள்கின்ற னன்; அவன் கருணைக் கடலாகிய அருட்டிருமேனியான் ஆதலினென்க.

இப்பொருளையே சிவபுராணமும்,

"நிதாநஜ்ஞஸ்ய பிஷஜோ ருக்ணே ஹிம்ஸாம் ப்ரயுஞ்ஜத: ।
ந கிஞ்சிதபி நைர்க்ருண்யம் க்ருணைவாத்ர ப்ரயோஜிகா"

நோயுற்றாரை வைத்தியன் (சுடுதல், அறுத்தல் முதலியவைகளால்) துன்புறுத்தினும் அவன் சிறிதும் கருணையற்ற பட்சபாதன் ஆகான், (என்னை?) இங்கு நோயைப் போக்குதற்கு அன்புடைமையே காரண

மாதலின்" (இது போன்றே பரமேசுரனுடைய நிக்கிரக, அநுக்கிரகங்களும் என்பது காண்க.) என்று கூறுகின்றது.

மற்றும், இத்தகையனாகிய பரமேசுரனே பரப்பிரமம் எனக் கொள்ளுங்கால், அது குணத்திற்கு அடங்கிய தென்பது பொருந்தாமையின், நித்திரை, சோம்பல் முதலிய தமோகுணத்தின் காரியங்கள் அவன்பால் உண்டெனலே அமையாமையின் என்க.

அஃதன்றியும், "சத்துவகுணத்தால் ஞானமும் சுகமும்" என்னும் மிருதியால், உருத்திர பரமேசுரன் இன்பமயன் என்பதற்கு நிமித்தங்களான சிவ, ம்ருட, சம்பு, சங்கர என்பது முதலிய திருநாமங்களாலும் பரமேசுரனே இன்பங் கொடுக்கின்றவன் என்பதும் தானே போதரும்.

சத்துவகுணத் திருமேனியான் என்னுமிது கொண்டே,

"𑌈𑌶𑌾𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍍"

'எல்லா வித்தைகட்கு மிறைவன்' எனவும்,

"𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛𑍇𑌤𑍍"

"பரமேசுரனிடத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்க" எனவும் சுருதி கூறுகின்றபடி, இதனால் ஈசுரன் வித்தையை யளித்தருளுந் தன்மையன் என்பதும் பெறப்பட்டதென்க.

ஈண்டு, புருகூதன், என்பதற்குப் பலர்களால் பல பெயரிட்டு அழைக்கப் பெறுகின்றவன் என்றமையினானே, வழிபடுகின்ற அநேக அன்பர்களாலும் 'பரமேசுர! நினது தரிசனந் தந்தருளல் வேண்டும்' என்று வேண்டப்படுகின்றவன் என்பதுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

என்னை? '𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌕𑌰𑌣𑍀' என்னும் வேத மந்திரத்தில் '𑌹𑍍𑌵𑌯' என்னும் அழைத்தலையே பொருளாகக்கொண்ட வடமொழிப் பகுதிக்கு வேண்டுகோளும் பொருளாமெனப் பாடியத்திலும் உரைக்கப்பட்டிருத்தலினென்க.

இதையே, பாரதத்தின் ஆரண்ய பருவமும்,

"𑌏𑌵𑌂 𑌸𑌂𑌵𑍍𑌯𑌾𑌹𑌰𑌿𑌷𑍍𑌟𑍇 𑌤𑌾 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌭𑌾𑌰𑌤"

'இவ்வாறு இராசரிஷிகளால் வேண்டப்பெற்ற உருத்திர பரமேசுரன்' என்று தொடங்கி,

" ஸ்ரஷ்டா கொடிஸூ- ரூஷீணாம் ஜக்ஷீணாசஜூ தஸ்ரிதா ।
• ஐயா வாஷிவஹ்தரூம் தூரஷ்டா "

" கோடிக்கணக்கான இருடிகட்கு (சிவன்) முன் தோன்றினன், யானும் கண்குளிரக் கண்டேன்" என்று முடித்துக்கொண்டு இதை ஒரு சரித்திர வாயிலாகக் கூறுகின்றது.

இதனால் வழிபடுகின்றவர்கள் உருத்திரபரமேசுரனைத் தரிசிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றனர் என்பதும், வேண்டினவர்கட்கு அருவுருவாகிய பரமேசுரன், ஆவில் பால் போலும், எந்திழைபால் முலைப்பாலும், கண்ணீரும் போன்றும், அருளுருவாய்த் தோன்றியருளுவன் என்பதும் பெறப்பட்டமை காண்க.

மற்றும், ஈண்டுப் புதிய இளங்கன்று பசுவிற்குக் களிப்பை யுண்டாக்குவது போன்று உருத்திரபரமேசுரனுக்குக் களிப்பை யுண்டாக்கும் சங்கீதத்தைப் பாடுவீர்களாக என்றமையால், அதனோடு பேராற்றலுடையவன் என்பதையும் இயைத்து, சங்கீதத்திலும் பேராற்றலுடைய உருத்திரபரமேசுரனுக்குக் களிப்புண்டாக்கத்தக்க சங்கீதத்தைப் பாடுவீர்களாக என்பதுங் கொள்ளற்பாலதாம்.

இதனால், காந்தருவ வேதத்திற்குங் காரணனாகிய உருத்திரபரமேசுரன் ஒருவனே, சங்கீதத்தின் இன்சுவையை யுணர்ந்து அருள் செய்யவல்லான் என்பதுங் கொள்ளக்கிடந்த பொருளாயிற்றென்க.

அற்றாகவினன்றே,

" வபஶவெத்தி ஶிஶுவெத்தி வெத்திமாநாஸஂஹெணீ ।
ஸஂமீதாஸ் அாதயஂ ஶஂகரொ வெத்திநா வாஃ "

"விலங்குகளும், குழந்தைகளும், பாம்புகளும் சங்கீதச் சுவையை யுணர்ந்து கொள்கின்றன, சங்கீதத்தின் வல்லுநத் தன்மையைச் சங்கரனொருவனே யறிகின்றான் பிறனல்லன்" என்னும் ஒரு பழமொழியும் யாண்டும் பரவுகின்றது.

அங்ஙனமே, யாக்ஞவல்கிய மிருதியும்,

" ஶ்ருதிஜ்ஞா யதி யொமென ந ஶஷ்வதாஸஂ வதி ।
ஸ்ருஷ்டாந அனொ ஷூக்வா தெநெவ ஸஹ மொக்ஷதெ "

"சங்கீதத்தை யுணர்ந்தவன் பரமபதத்தை யடையமாட்டானேல், உருத்திரபரமேசுரனுடைய தொண்டனாய் அவனோடு கூடவே களிப்புறு கின்றான்" என்று கூறுகின்றது.

இவ்வாறே சூதசங்கிதையின் ஒரு கூறாகிய பிரமகீதையும்,

"கீதிஜ்ஞாநம் ஶிவப்ராப்தே ஸாதநம் காரணம் பவேத் ।
கீதிஜ்ஞாநேந யோகஃ ஸ்யாத் யோகாதேவ ஶிவைக்யதா"

"சங்கீத ஞானம் பரமேசுரனை யடைவதற்குக் காரணமாகும். சங்கீத வுணர்ச்சியால் யோக முண்டாகின்றது; யோகத்தினாலே சிவனோடு ஒன்றாகுந் தன்மை யுண்டாகும்" என்று கூறுகின்றது.

மற்றும், இவ்வாறே சிவபுராண முதலியவைகளும் கூறுகின்றன வென்றுணர்க.

ஈண்டு, உருத்திரபரமேசுரன் பல விடத்தில் நிமித்தம்பற்றி அருள் திருமேனிகொண்டு எழுந்தருளி யிருக்கினும் பேரன்புடன் ஒழுங்காகிய சங்கீதத்துடன் அவனது புகழைப் பாடுகின்ற இடத்திலேயே பேராதிருப்பன் என்பது உட்கிடை.

அதுபற்றியே பகவான் விஷ்ணு மூர்த்தியும்,

"மத்பக்தா யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி"

"யான் வைகுண்ட முதலிய விடங்களில் இருக்கமாட்டேன், மற்றெங்கிருப்பேன் எனின்; எனது அன்பர்கள் யாண்டுப் பாடுகின்றார்களோ ஆண்டு நிலையாயிருப்பேன்" என்றருளிச் செய்துள்ளார்.

ஈண்டு வடமொழியில், புத்திரன் என்னுமொரு பயனை மாத்திரங் கருதிப் பாடுவீர்களாக எனக் கூறியிருக்க, புத்திரன் முதலிய எல்லாப் பயன்களையு மடைதற்பொருட்டு என்றது எவ்வாற்றாலாமெனின்? தெரி விக்குதும்.

மக்கட்பேறொன்றே ஒருவன் அடையவேண்டிய எல்லாப் பயன் வடிவாகவும் இருத்தலினென்க.

இதுபற்றியே,

"ஆநந்தி ஹ்யைநமேவாயம் புத்ரஸ்ஸர்வதோ க்ஷயதே"

"புத்திரனொருவனே ஆனந்தப் பிழம்பெனப்படுகின்றான்" என்னும் பழையார் வாக்கியமும் உலாவுகின்றது.

மற்றும், பாகவதமும்,

'பைங்குழவி மீது கொழுந்து விட்டோங்கும்' என்று கூறுகின்றது. இது கொண்டன்றோ தெய்வத் திருவருளால் வந்த பெருவேதமும்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற" என்று கூறுகின்றது.

இம்மந்திரத்தின் பிண்டப்பொழிப்பு:—

புத்திரர்களே! நீவிரும், உமக்கு வேண்டிய பயன் முதலியவற்றை யடைதற்பொருட்டு, இந்திரனுடைய திருமேனி கொண்டெழுந்தருளுகின்றவனும், எல்லாப் பயன்களையும் அளிக்க வல்லானும், ஆன்றோர்களால் ஆராதிக்கத்தக்கோனும், அன்பர்களைப் பரிபாலிக்கின்றவனும், சத்துவ குணமாகிய அருள் திருமேனியை யுடையவனும், சத்துவகுணச் செயல்களை யுடையவனும், பிரம வித்தையை யளிக்கின்றவனும், பொது நோக்குடையானும், தொண்டர்களுடைய பரிதாபத்தைப் பொறுக்காதவனும், உலகிற் கொரு காரணனும், பரப்பிரம வடிவனுமாகிய உருத்திர பரமேசுரனுடைய அருள் சுரக்குமாறு, வேத வழக்கைப்பற்றிய சங்கீதத்தையேனும், அல்லது உலக வழக்கைப்பற்றிய சங்கீதத்தையேனும் இனிது பாடுவீர்களாக என்பதாம்.

இரண்டாவது மந்திர விருத்தியுரை

முற்றிற்று.

சங்கீதத்தில் 3-4-5-வது மந்திரங்கள்

முடிந்தன.

மூலம்

மூன்றாவது மந்திரம்.

சங்கீதத்தில் 6-7-8-வது மந்திரங்கள்.

இம்மந்திரம் இருக்கிலும் சாமத்திலும் ஒரு பதிகமாகவும் சங்கிதத்தில் மூன்று பதிகங்களாகவும் உள்ளது.

३ १२ ३ १ २३ १ २ ३ १ २ ३२३२उ ३२
मूर्द्धानं दिवो अरतिं पृथिव्या वैश्वानरमृत आजातमग्निम् ।
३ २ ३ २ ३१ २ ३ १ २ २३ ३ १२ ३ २
कविंश्च सम्राजमतिथिं जनानामासन्नः पात्रं जनयन्त देवाः ॥

𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌂 𑌦𑌿𑌵𑍋 𑌅𑌰𑌤𑌿𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾
𑌵𑍈𑌶𑍍𑌵𑌾𑌨𑌰𑌮𑍃𑌤 𑌆𑌜𑌾𑌤𑌮𑌗𑍍𑌨𑌿𑌂 ।
𑌕𑌵𑌿𑌂 𑌸𑌮𑍍𑌰𑌾𑌜𑌮𑌤𑌿𑌥𑌿𑌂 𑌜𑌨𑌾𑌨𑌾
𑌮𑌾𑌸𑌨𑍍𑌨𑌃 𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤 𑌦𑍇𑌵𑌾𑌃 ॥

கீத மந்திரம் 6.

२२ ३ ४३५ २२२१ २ १ ३ ४ ५ २२१२
आज्या दोहम् ॥ ३ ॥ मूर्द्धानं दाइ । वा३अर । तिं पृथिव्याः वैश्वा
२ १ २ २२ ३ ४ ५ २ १ २ १ २ ३४२ ५
नराम् । ऋत आ । जात मग्निम् । कविंश्च सम्रा । जा३मति । थिं जनानाम् ।
२२ १ २ १ २३ ४२५ २२
आसन्नः पा । त्रा३जनः । यंत देवाः । हा उ ॥

२२ १२२ २२ ३ ४ २२ २ १२२
आज्य दोहम् । २ । अज्य दो५३हा उ । वा ए । आज्य दोहम् । २ ।
२२ उ १२ ३ २२ २
अज्य दोहम् । २ । ए । आज्यदोहा२३४५म् ॥ हा उ । ३ । हुम् ॥

கீத மந்திரம் 7.

१२ २२ २ २२ २ १ २
चिदोहम् । ३ । मूर्द्धानं दाई । पूर्ववत् । हा उ । हुम् । चिदोहम् । २ ।
१ २ ३१ १११ २२
चिदो३हाउ । वा३ई२३४५ ॥ ६५ ॥ हा उ ॥ ३ ॥

கீத மந்திரம் 8.

१२ २२१२ २२ १२
च्योहम् । ३ । मूर्द्धानं दाइ । पूर्ववत् । हा उ । ३ । च्योहम् ॥ २ ॥
५ २ २ १२
च्यो३हाउ । वा३ । ए३ । ऋतम् ॥

மூல இருக்கு மந்திரத்தின் பதவுரை.

दिवः मूर्द्धानं	𑌦𑌿𑌵𑌃 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌨𑌂	தேவர்களுக்குள் மேம்பட்டோனும், அல்லது வானுலகைத் தாங்குகின்றவனும்,
पृथिव्याः	𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃	மண்ணுலகத்தும்
अरतिं	𑌅𑌰𑌤𑌿𑌂	இறைவனாய் விளங்குகின்றவனும்,

वैश्वानरं	வைஶ்வா நரம்	எல்லா வுலகமாயுள்ளவனும்,
ऋते	ருதே	வேள்வியில்
आजातं	ஆஜா தம்	அருள் திருமேனிகொண்டு எழுந் தருளுகின்றவனும்,
अग्निं	அக்நிம்	அனைத்திற்குந் தலைவனும்,
कविं	கவிம்	வரம்பிலா ஞானங்களை யுடையவனும்,
सम्राजं	ஸம்ராஜம்	இயற்கைச் சோதி வடிவனும்,
जनानां अतिथिं	ஜநாநாம் அதிதிம்	அனைவராலும் அதிதிபோன்று போற்றத்தக்கானுமாகிய உருத்திர பரமேசுரனை,
देवाः	தேவாஃ	தேவர்கள்
नः आसन् पात्रं	நஃ ஆஸந் பாத்ரம்	செபிக்கின்ற எம்முடைய மந்திரங்கட்கு விஷயம் ஆகுமாறு
आजनयन्त	ஆஜநயந்த	செய்கின்றார்கள்.

விருத்தி யுரை.

ஈண்டுப் பரத்துவாசர் ரிஷி. சாமத்தில் வைசுவாநராக்கினி. திருஷ்டுப், சந்தம். அக்கினியையே தனக்குத் திருமேனியாகக்கொண்ட சிறப்பு வடிவாலேனும், நேரே சொரூபமாந் தன்மையாலேனும் உருத்திர பரமேசுரனே தேவதை யாவன். இவ்விருவகைப் பட்சங்களும் முன்னர்க் கூறப்பட்டன ஆண்டுக் காண்க.

மூலத்தில் "மூர்த்தா" என்பது உடலுக்கு ஒரு தலையைப் போன்று தேவர்களுக்குள் சிறந்தோனாய் வான நாட்டைத் தாங்குகின்றவன் என்பது பொருள்.

இதுபற்றியே, சுருதியும்,

"உதஃ வைஶ்வாநரம் தேவா உபஜீவந்தி"

"முக்கியமாகிய இவ் வக்கினியைக்கொண்டு தேவர்கள் பிழைக்கின்றார்கள்" என்று கூறுகின்றது.

இதனாற் போந்த பொருள் என்னையோ வெனின்? தேவர்கள் இனிது வாழ்ந்து வருதல் அவிகளைக் கொண்டேயாம்; அத்தகைய அவிகளை யளித்தலும், அக்கினியின் வயமாமாதலின் அக்கினியே அமர நாட்டைத் தாங்குகின்றதென்பதும், தேவர்களுக்குள் தலைமையதா மென்பதுமாம். அக்கினியே உருத்திரன் பரமேசுரன் என்னும் பொருளாம் என்பதை முன்னர்க் கூறினும், அதை ஈண்டும் நினைத்துக்கொள்க.

"மண்ணுலகத்தும் இறைவனாய் விளங்குகின்றவனும்" என்பது மூலத்தில் இப் பொருளைத் தரும் வடமொழிச் சொல் 'அரதி' என்பதாமாதலின் என்க.

அச் சொல்லும்,

"ஊஹ்ரு உ-ஔஊ-ஃா திவஃ கக-ஃக" என்றற் றொடக்கத்து மற்றொரு மந்திரத்தில் இறைவன் என்னும் பொருள் தந்து நிற்றலின், ஈண்டும் 'அரதி' என்னுஞ் சொல் இறைவன் என்னும் பொருளையுந் தந்து நின்றதென்க. இறைவன் என்பவன் பரிபாலிப்பவனே யாவன்; ஆதலின் மண்ணுலகத்தைப் பரிபாலித்தற் பொருட்டு, காசி, சிதம்பரம், கமலாலயம் முதலிய தலங்களில் அருளுருக் கொண்டெழுந்து அருள் செய்கின்றவனும் உருத்திர பரமேசுரனே என்பது பெற்றாம்.

மற்றும், மூலத்தில் வானுலகம், என்றதற்கு இடவாகு பெயரால் தேவர்களைக் கொள்ளப்பட்டது; என்னை? வானவர்க்கு மேலுலகமே வாழிடமா மாதலினென்க.

'மூர்த்தா' என்றது தலையாம் ஆதலின் சிறந்தவன் என்பதாயிற்று, ஆகவே தேவர்களுக்குள் சிறந்தவனும், மண்ணுலகிற்கு இறைவனும் உருத்திர பரமேசுரனே என்பது திரண்ட பொருள்.

அல்லது, வான நாட்டையும், மண்ணாட்டையும் தாங்குகின்றவன் உருத்திரபரமேசுரனே எனக்கொள்ளினும் அமையு மென்க.

அதுபற்றியே சுருதிகளும்,

"ஊதஸ்ய வா ஃக்ஷரஸ்ய ப்ரஶாஸநே நாஉஹ்ரு-ஃவா ஃபரிவழள வியரதெ திஷ்தஃ"

"நித்தியமாகிய இப் பரமான்மாவின் ஆணையால் வானுலக மண்ணுலகங்கள் தாங்கப்பெற்று நிற்கின்றன" எனவும்,

"ஊஷ ஸெ-து-ஃ வியரண ஊஷாம் லொகாநாழ"

"இவ் வுலகங்களைத் தாங்குகின்ற ஆதார வடிவானது இப்பரமான்மாவாகும்" எனவுங் கூறுகின்றன.

அல்லது, 'அரதி' என்னும் வடசொல்லை, ரதி - விருப்பம், அஃதில்லாதோன் அரதி யெனப்படுவன் எனப் பொருள் கொள்ளில் உருத்திரபரமேசுரன் முழு வைராக்கியத்தை யுடையவன் எனப் பொருள் கொள்ளினும் இனிதமையும் என்பதுங் காண்க.

இதனானே,

பகவான், என்னுஞ் சொல்லிலுள்ள பகம் - ஐசுவரியம் என்னுமிடத்து ஞானமும், வைராக்கியமும் பகம் என்பதற்குப் பொருளாக நூலாசிரியர் கூறியுள்ளார்.

அவ்வாறே பரமேசுரனுக்கு நிலையான பத்துவகைக் குணங்களைக் கொள்ளுங்காலும்,

"ஜ்ஞாந விராகைஶ்வர்ய..."

'ஞானம் வைராக்கியம் ஐசுவரியம்' என்பது முதலிய அப் பத்துக் குணங்களிலும் வைராக்கியமும் கொள்ளப்பட்டிருக்கின்றதென்க.

'எல்லா வுலகமாயுள்ளவனும்' என்பது, வைசுவாநரன் என்பது வைசுவ - உலகனைத்துமுள்ள, நரன் - நர வடிவன், என விரிதலின் எல்லா வுயிர்களுமாய் நிற்பவன் என்பது பொருளாயிற்றென்பதாம்.

இவ்வாறே, வைசுவாநரன் என்பது உலகனைத்தையும் நியமிப்போன் என்னும் பொருளைத் தருமென்பது முணர்க.

அற்றாகலினன்றே வியாச சூத்திர பாடியமும்,

"ஆத்மாநம் வைஶ்வாநர உபாஸ்தே"

"ஆன்மாவை வைசுவாநரனென உபாசிக்கின்றான்" என்னுஞ் சுருதி வாக்கியத்திற்குப் பொருளுரைக்குங்கால், "வைசுவாநரன், என்னுஞ் சொல் எல்லா வடிவனுமாகிய பகவான் பரமேசுரனையே காரணப் பெயரானுங் காட்டுகின்றது" எனக் கூறுகின்றது.

அல்லது, வேள்விப் பொருள்தரும், 'ருதே' என்னும் வடமொழிச் சொல் சத்தியம் என்னும் பொருளையுந் தருவதாமாதலின், 'சத்தியமாகிய தனது வடிவில் நிலைத்திருக்கின்றவன்' எனப் பொருள் கொள்ளலும் உரியதே யாகும். ஈண்டு 'நிலைத்திருக்கின்றவன்' என்பது எஞ்சி நின்றதாய்க் கொள்ளற்பாலதாம்.

இதுபற்றியே, சுருதியும்,

ஸ "ஹ பகவ: கஸ்மிந் ப்ரதிஷ்டித: ?"

'பகவான் எதில் நிலைத்திருக்கின்றான்?' என வினவிக்கொண்டு, 'ஸ்வே மஹிம்நி' 'தனது மகிமையில் நிலைத்திருக்கின்றான்' என உத்தர முரைக்கு முகத்தாற் கூறுகின்றது.

மற்றும், ஈண்டு எழுந்தருளுகின்றவன் என்பதை எல்லா வுலகமாய், என்பதுடன் இயைத்து 'எல்லா வுலகமாய் நிற்கின்றவன்' எனப் பொருள் கொள்ளினும் இனிது பொருந்துமாறுணர்க. என்னை ? பரமேசுரனே எல்லா வுலகமாய்த் தோன்றி நிற்கின்றானாதலின் அவனைத் தவிர்த்துச் சிறிதும் உண்மையிலின்றாமென்பது யாண்டும் ஒப்ப முடிந்ததாமாதலினென்க.

அற்றாகலினன்றே, சுருதிகளும்,

" தடைஷக்ஷத வஹுஸ்யாம் ப்ரஜாயேய "

" அப்பரமான்மா பல்லுயிர்களாவோம் என்று திருவுளங் கொண்டது " எனவும்,

" ஸோऽகாமயத வஹுஸ்யாம் ப்ரஜாயேய "

" அப்பரமான்மா பல்லுயிர்களாவோம் " என விரும்பிற்று எனவும்,

" தஹாத்மாநம் ஸ்வயமகுருத "

" அப்பரமான்மா தன்னையே உலகமாய்ச் செய்தது " எனவும், மற்றும் பலவகையாகவுங் கூறுகின்றன.

அவ்வாறே 'உலகனைத்துமாணுய் நீயே' எனவும், " உலகேழெனத் திசை பத்தெனத் தான் ஒருவனுமே பலவாகி நின்றவா " எனவும், அருள் திருமறைகளும் முழங்குகின்றன என்பதும் ஈண்டுணரற்பாலது.

'ஸர்வோ வை ருத்ர:' " எல்லாம் உருத்திரனே யாவன் " என்னும் உண்மைச் சுருதியையும் ஈண்டுணர்ந்துகொள்க.

'வரம்பிலா ஞானங்களை யுடையவனும்' என்பது, முன்னர்க் கூறியவாறே பதினெண் வித்தைகட்கும் உருத்திர பரமேசுரனே காரணனாதலின் அவனே எல்லா ஞானங்களையு முடையவன் எனப்படுதலினென்க; இதனால், எல்லாமுணர்ந்தவன் என்பதுந் தானே போதருமென்றுணர்க.

இதுபற்றியே, வியாசபகவானும்,

'சாஸ்த்ர யோனித்வாத்' 'சாத்திரங்கட்குக் காரணமாதலின்' எனச் சூத்திரமு மியற்றியருளினர். ஈண்டு, வாக்கு மனங்கட் கெட்டாத வேத முதலியவைகளைப் பரமேசுரன் செய்தனன் என்பதனானே அவன் எல்லா முணர்ந்தவன் என்பது கருத்து. என்னை ? 'ஒருவர் ஒரு நூலைச் செய்யின், அவருடைய உணர்வு அந்நூலினுள்ள அறிவினும் பேரறிவாகவே யிருத்தல் வேண்டும்' என்பது மகரிஷி பாணினி முனிவரிடத்துக் காணக் கிடத்தலி னென்றுணர்க. ஈண்டு விரிக்கிற் பெருகுமென விடுத்தாம்.

'இயற்கைச் சோதி வடிவனும்' என்பது, இப் பொருள்தரும் வடமொழிச் சொல்லாகிய 'ஸம்ராஜ:' என்பது, ஸம் - நன்கு, அதாவது இயற்கையாகவே, ராஜ: - விளங்குகின்றவன் என விரிக்கப்படுதலின் இப் பொருள் கொள்ளக்கிடந்ததாம்; இதனுல் இயற்கைச் சோதியன் எனவே சுயஞ்சோதி வடிவன் என்பதும், பிற வொளிகளால் விளக்க முடியாதவன் என்பதும் பெறப்பட்டமை காண்க.

அல்லது,

'ராஜ:' என்னுஞ் சொல் விளங்குதலாகிய பொருளைத் தருவது போன்று ஐசுவரியங்களனைத்தையு முடைய தலைவன் என்னும் பொருளையுந் தருவதாமாதலின், அனைவருக்கும் உருத்திர பரமேசுரனே தலைவன் (இறைவன்) என்பதும் அமையும். இதை 'சேனைகட்கு ராஜன்' என்னுமிடத்துச் சேனைகட்குத் தலைவன் என்பதே வெளிப்படையா யிருத்தல் போன்று எனக் கண்டுகொள்க என்பதாம்.

அற்றுகலினன்றே, சுருதியும்,

"ഈശ്വരാണാം പരമോ മഹേശ്വരഃ"

'ஈசுரர்களுக்கெல்லாம் ஈசுரன் பரமேசுரன்' என்று கூறுகின்றது.

'அனைவராலும் அதிதிபோன்று போற்றத்தக்கானும்' என்பது, தேவர், சுரர், மனிதர் முதலிய அனைவராலும் விருந்துபோன்று (நிலையின்றித் திடீரென வந்தவர்போன்று) ஆராதிக்கத்தக்கான் என்பதாம்.

அதிதியானவன், அந்தணன் முதலிய மேம்பட்டோனு யிருப்பினும், சண்டாளன் முதலிய தாழ்ந்தோனு யிருப்பினும் உண்ணுங்கால் வருவானேல், அவன் பூசிக்கத்தக்கான். அவனை யாராதிக்காவிடில் பெருந்தீமை விளையும்; பூசிக்கிலோ, பெரும்பயனை யடைவர் என்பதாம்.

இதுபற்றியே பல நீதி நூல்களும்,

"വിപ്രോ വാ യദി ചണ്ഡാലോ വിപ്രഘ്നഃ പിതൃഘാതകഃ ।
വൈശ്വദേവേ തു സമ്പ്രാപ്തഃ സോഽതിഥിഃ സ്വർഗ്ഗസംക്രമഃ"

"அதிதியானவன் அந்தணனேயாயினும், சண்டாளனேயாயினும், அந்தணனைக் கொன்றவனு யிருப்பினும், தந்தையைக் கொன்றவனு யிருப்பினும், வைசுவதேவ மென்னும் (தேவர்கட்கு நிவேதித்துத் தான் உண்ணும்) காலத்தில் முன்பின் அறியாதவனுப் வருகின்ற அவ் வதிதியானவன் சுவர்க்கத்தை

யடையச் செய்கின்றவனே யாவன்; அதாவது அவனைப் பூசிக்கில் சுவர்க் கத்தை யடைதல் பயனும்'' எனவும்,

"ஹூாமதெ நாஉஹ்யஃ வீ்ர தா ஞூமஹெ ஸதக்ர த॰ஃ।
வி தஈள வாஉமளெஅ ந ஸஹாஒஜ் ந வ்ர ஜாவதிஃ।
மயெநந அத॰ஷாஸ்ரஜ்॰ஸ்ர ஃ ஹூவிஷ்ண॰ உஹெமூாஃ''

"அதிதியானவன் வந்ததால் அக்கினிகள் பிரியமடைகின்றன. அவன் ஆசனத்தின்கண் அமர்ந்திருக்கில் இந்திரன் பிரியமடைகின்றான். அவனு டைய பாதங்களைக் கழுவியதால் பிதிர்க்கள் பிரியமடைகின்றனர். அவன் உண்டதால் பிரசாபதியானவர் பிரியமடைகின்றனர். அவன் உறங்கில் பிர மன், விஷ்ணு, மகேசுரர் பிரியமடைகின்றனர்'' எனவும்,

"வயிஹ்ராஹஉவிஜ்ஞாத உகியிம் க்ஷ॰ஜ் விவாஸிதழ।
யொ ந வஃஜயதெ ஹக்த்யா தஉாஹ॰ஃ ஸ்ர ஹ்ஹவா தகழ''

"வழியில் களைப்புற்றவனும், தெரியாதவனும், பசி தாகங்களை யுடைய வனுமாகிய அதிதியானவன் வரின், எவன் அவனை அன்போடு ஆராதிக்கவில் லையோ, அவன் அந்தணரைக் கொன்றவனாகின்றான்'' எனவும் கூறுகின்றன என்பதாம்.

'தேவர்கள் செபிக்கின்ற மந்திரங்கட்கு விஷயம் ஆகுமாறு செய்கின் றார்கள்' என்பது.

ஈண்டு, "ஆஸந் பாத்திரம்'' என்னும் வடமொழிச் சொல்லில், 'ஆஸ் யம்' என்பது வாயினாற் கூறப்படுகின்ற எழுத்துக்களாம்.

இதுபற்றியே,

"ஸஸ்ஜ்ஜ்ஜ்நெந வணஷா நீ த்ஜாஸ்ஜ்ழ''

'அஸ்யம் என்னும் வாயால் உச்சரிக்கப்படுவதாமாதலின் ஆஸ்யம் எனப் படுகின்றது' என்றார் பதஞ்சலி மாமுனிவராகிய வியாகரண மாபாடியகார ரும். இவ்வாற்றால் ஆஸன் செபிக்கின்ற மந்திரம் என்பது பெற்றாம்.

செய்கின்றார்கள், என்றது 'ஆஜநயந்த' என்னும் வடமொழி வினைச் சொற்கு வடமொழி யிலக்கணத்தைத் தழுவிச் செபிக்கின்றார்கள் என்ப தும் பொருளாமாதலின் என்க. இதன் முறையை ஆண்டுக் காண்க. இத னால் உருத்திர பரமேசுர மந்திரத்தைச் செபிக்கின்றார்கள் என்னும் பொரு ளுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

ஈண்டு உருத்திர செபமே எல்லாவற்றினும் சிறந்ததா மென்பதுணரற்பாலது.

இதுபற்றியே பல நூல்களும்,

“𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 𑌶𑌤𑌰𑍁𑌦𑍍𑌰𑍀𑌯𑌂 𑌤𑌥𑌾𑌽𑌥𑌰𑍍𑌵𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑌿 ।
𑌸𑍍𑌵𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌜𑌪𑌃 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 । 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 𑌇𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌃”

“பிரணவம், சதருத்திரம், அதர்வசிரசு முதலியவைகளைச் செபித்தல், தனது மறையை ஓதுவதேயாகும் என்று சொல்லப்படும்” என்று கூறுகின்றன.

அங்ஙனமே கண்ணபிரானும்,

“𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌂 𑌜𑌪𑌯𑌜𑍍𑌞𑍋𑌽𑌸𑍍𑌮𑌿”

“வேள்விகளுக்குள் செபவேள்வி யானுயிருக்கின்றேன்” என்றருளிச் செய்தனர். இதனால், வேள்விகளனைத்தினும் உருத்திர செபஞ் செய்தலாகிய வேள்வியே சிறப்புடைத்தென்பது பெற்றாம்.

இவ்வண்ணமே, கூறிப்போந்த சுருதி, மிருதி, புராணம் முதலியவற்றின் வாக்கியங்களால், அக்கினியையே தனக்கொரு திருமேனியாகக் கொண்டு, வானுலக மண்ணுலகங்களைத் தாங்குகின்றவனும், எல்லா வுலகமாய் நிற்கின்றவனும், மண்ணுலகத்தும் அன்பர்கட்கு அருள் திருமேனி கொண்டு அநுக்கிரகஞ் செய்கின்றவனும், கெடாத சத்தியத் தன்மையால் நிறைந்தவனும், எல்லாவற்றிற்கும் தலைமையா யிருக்கின்றவனும், வரம்பில்லாத ஞானம் முதலிய குணங்களை யுடையவனும், அதிதிபோன்று பேரன்புடன் போற்றத் தக்கானுமாகிய உருத்திர பரமேசுரனுடைய மந்திரங்களைத் தேவர்கள் செபிக்கின்றார்கள் என்பது இம்மந்திரத்தின் பிண்டப் பொழிப்பாம் என்பது காண்க.

இதுபற்றியே சுருதி மிருதிகளும்,

“𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍁 ।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑍁𑌖𑌾 𑌵𑍈 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑍀𑌣𑌾𑌤𑌿 ।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃”

“தேவர்கட்கு முதன்மையானது அக்கினியேயாம். அக்கினி வாயிலாகவே தேவர்களனைவரும் பிரியமடைகின்றனர், அக்கினியே எல்லாத் தேவர்களாகும்” என்று கூறுகின்றன.

அற்றேலஃதாகுக, எல்லாத் தேவர்கட்குள்ளும் சிறந்தவர் உருத்திர பரமேசுரரே என்பதும், அவரிடத்து அன்பு செலுத்தலே, எல்லாவித மான பயன்களையுங் கொடுக்கும் என்பதும், அவ்வன்பு எல்லாருக்கும் ஒரு தலையாக வேண்டுமென்பதும், அது மிகவும் எளிதாய் முடியுமென்பதும், யாவரும் அறிந்திருக்கின்றனர். அவ்வண்ணஞ் செய்யாது ஏனைய புன்னெறி களிற் சென்றுழல்கின்றனரே அஃது என்னை யெனின்? கலியுகத்தில் பர மேசுரனிடத்து அன்பு செலுத்தல் முதலிய வழிபாடுகள் மக்களிடத்துக் காணப்படுகின்றனவாயினும் தேவர்களே பொறாமைகொண்டு அவற்றைக் கெடுத்துவிடுகின்றனர்; ஆதலின் அவை முடிந்து பயனை யளித்தற்கு வலி யற்றவைகளாகி ஒழிகின்றனவென்பது ஈண்டு உணரற்பாலது.

அற்றாகலினன்றே சிவ புராணமும்,

"யொ ஹி தெநுர் யதா நீதா து:கதா க்ருஹமெயிநாம் ।
தயைவ ஜ்ஞாநவாந் விப்ரொ தெவாநாம் து:கதொ பவெத் ।
த்ரிதஸாஸ்தெந விப்நந்தி ப்ரவிஷ்டா ஹ்ருதயம் ந்ருணாம் ।
ததொ ந ஜாயதெ பக்தி ஸம்பஸௌவ்யாபி து தெஹிந: ।
யஸ்யாபிவித்யஷா நைவ ஜாயதெ ஸங்குவாணிந: ।
யதாகதஞ்சிஜ்ஜாதாபி மத்யெ விச்சித்யதெ ந்ருணாம் ।
ஜாதம் வாபி ஸிவஜ்ஞாநம் ந விஸ்வாஸ்யம் பவத்யுத "

"பால் கறக்கின்ற பசுவானது போய்விட்டால் இல்லறத்தானுக்குத் துன்பமுண்டாவது போன்று, ஞானமுடையவன், தேவர்கட்குப் பெருந் துன்பத்தைக் கொடுக்கின்றவனாகின்றான்; (என்னை? வேள்வியில் ஈயப் படும் அவியைத் தவிர மற்றொன்றும் அவர்கள் வாழ்வதற்கு வருவாய் இல் லாமையின் அவன் ஞானியாய்விடில் வேள்வியில் அவி கொடுக்கமாட்டான் என்னுங் கருத்தாலென்க.) ஆதலின், தேவர்கள் மனிதர்களின் உள்ளத்திற் புகுந்து கெடுக்கின்றனர்; அதனால் ஒருவர்க்கேனும் ஈசுரபக்தி யுண்டா கின்றதில்லை. சூலமேந்தியவன்பால் பக்தி செய்யவேண்டுமென்னும் விருப் பமே உண்டாவதில்லை. மக்கட்கு எவ்வாற்றாலேனும் பக்தி யுண்டாயினும் இடையில் கெட்டுவிடுகின்றது. சிவஞான முண்டானபோதும் அது விசு வாசஞ் செய்யத்தகாததாய் ஒழியும்" என்று கூறுகின்றது.

6-7-8-வது கீதப் பாடல்களின் விருத்தியுரை

முற்றும்.

எட்டுக் கீதப் பாடல்கள் முடிந்தன.

கீத மந்திரம் 9.

இது கேவலம் கீதப்பாடலே யன்றி இருக்கு மந்திரமன்று.

. १ ३२ १ २ १ २ १ २ १ २

अधिप तायि। मित्रपा तायि। क्षत्रप। तायि। स्वः पतायि। धनपता२इ।

१ २ १ र २१र र र २ १र २१र २ १२र १ २र १र२१र र२र

ना२माः। मन्युना वृत्रहा सूर्येण स्वराड्यज्ञेन मघवा दक्षिणास्य प्रियातनू राज्ञा

१ २र र १ र २१र २ र१२ १ र २१ २ १र २ १र र

विशंदाधार। वृषभस्त्वष्टा वृत्रेण शचीपतिरन्नेन गयः पृथिव्या सृणिकोग्निना

२र१ २ र र१ र र २ १र २ र र१रर२

विश्वं भूतम। भ्यभवो वायुना विश्वाः प्रजा अभ्यपावथा वषद् कारेणर्द्धं

१र र र२ र १र २र र१र र र २र र र १२ १ र र

भाक्सोमेन सोमपाः समित्पा परमेष्ठी। ये देवा देवाः। दिविषदः। स्थतेभ्यो

२र२र र१ २र १२ र १ र२ र र २ १२ १ र र २ रर

वो देवा देवेभ्यो नमः। ये देवा देवाः। अंतरिक्षसदः। स्थतेभ्यो वो देवा

र१र २ र१२ १रर १र र २ र २ १ र र १र र र र१र २र

देवेभ्यो नमः। ये देवा देवाः। पृथिवीषदः। स्थतेभ्यो वो देवा देवेभ्यो

१२ १र र र र २ १२ १ र र रर र २१र रर १२

नमः। यो देवा देवाः। अप्सुषदः। स्थतेभ्यो वो देवा देवेभ्यो नमः।

१र र र र १ र र रर र २१र रर १ २ ३ १र रर१

यो देवा देवाः। दिक्षुसदः। स्थतेभ्यो वो देवा देवेभ्यो नमः। यो देवा

र रर २र १ १ २ १ र र रर र र१र २र १२ १२ १र

देवाः। आशा सदः। स्थतेभ्यो वो देवा देवेभ्यो नमः। अक्ज्यामिव

२ १२र १ र २ १ ३र १ र २ १ २ १ २ १ २ १

धन्वनो बिते मन्युन्नयामास मृडतान्न इह अस्मभ्यम्। इडा२३ भा। य इदं

र २ १ १ ३ ५

विश्वं भूतम। युयो३। आ उ। वा२३। ना२३४माः॥

ஒன்பதாவது கீதப் பாடலின் பதவுரை.

मित्रः पतिः	மித்ர: பதி:	(பரமேசுர! நீ) மித்திரனு (சூரியனு)க்கு இறைவனுகின்றாய்.
क्षत्रः पतिः	க்ஷத்ர: பதி:	அரி, இந்திரன் என்பவர்களுக்கும் இறைவனுகின்றாய்.

स्वः पतिः	ஸ்வ: பதி:	சுவர்க்கத்திற்கும் இறைவனாகின்றாய்.
धनपतिः	தநபதி:	தனங்களுக்கும் தலைவனாகின்றாய்.
मन्युना वृत्रहा	மந்யுநா வ்ருத்ரஹா	கோபத்தால் விருத்திரனைக் கொன்றவனும் ஆகின்றாய்.
सूर्येण स्वराट्	ஸூர்யேண ஸ்வராட்	சூரிய வடிவாய் உலகை விளக்குகின்றவனா யிருக்கின்றாய்.
यज्ञेन मघवा	யஜ்ஞேந மகவா	யாகத்தால் அதன் பயனை நுகரும் இந்திரனுமாயிருக்கின்றாய்.
दक्षिणास्य प्रियातनूः	தக்ஷிணாஸ்ய ப்ரியா தநூ:	தக்ஷிணாமூர்த்தியாய் அன்பு செய்தற்குரியவனும் நீ யாகின்றாய்.
राज्ञा विशं दाधार	ராஜ்ஞா விசம் தாதார	மற்றும், வேந்தன் வடிவால் குடிகளைத் தாங்குகின்றவனும் நீயாயிருக்கின்றாய்.
वृषभः	வ்ருஷப:	விரும்பியவற்றைப் பொழிபவனும் நீயாயிருக்கின்றாய்.
त्वष्टा	த்வஷ்டா	தீயர்களைத் தண்டிப்பவனும் நீயாயிருக்கின்றாய்.
वृत्रेण शचीपतिः	வ்ருத்ரேண சசீ பதி:	மறைத்தலால் விருத்திரனைக் கொல்லுக் தொழிற்குத் தலைவனும் நீயாகின்றாய்.
अन्नेन गयः	அந்நேந கய:	அன்னங்களையுடைய இல்லறத்தானும் நீயாயிருக்கின்றாய்.
पृथिव्या सृणिकः	ப்ருதிவ்யா ஸ்ருணிக:	மண் நாட்டைத் தன்வயமாகச் செய்கின்றவனும் நீயாயிருக்கின்றாய்.
अग्निना विश्वं भूत-मभ्यभवः	அக்நிநா விச்வம் பூத மப்யபவ:	அக்கினிவடிவால் அனைவரையும் கட்டுப்படுத்தியவனும் நீயாயிருக்கின்றாய்.
वायुना विश्वा प्रजा अभ्यभवत	வாயுநா விச்வா ப்ரஜா அப்யபவத	வாயுவால் உயிர்களைப் பிழைக்கச் செய்கின்றவனும் நீயாயிருக்கின்றாய்.
वषट्कारेणार्द्धभाक्	வஷட்காரே-ணார்த்தபாக்	வஷட்கார மந்திரத்தையுடைய யாகத்தால் அதன் பயனை அநுபவிப்பவனும் நீயாயிருக்கின்றாய்.
समित्या परमेष्ठी	ஸமித்யா பரமேஷ்டீ	சபையில் விளங்கும் பிரமனும் நீயாயிருக்கின்றாய்.

ये देवा देवाः दिवि- षदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌯𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌦𑌿𑌵𑌿𑌷𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇- 𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	சுவர்க்கத்தில் எந்த, தேவகணங்களும் உருத்திர கணங்களும் உண்டோ, அவைகட்கு வணக்கம்.
अन्तरिक्षसदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌸𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇- 𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	வானிலுள்ள தேவர்கட்கும் உருத்திரகணங்கட்கும் வணக்கம்.
पृथिवीषदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌷𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	மண்ணிலுள்ள தேவகணங்கட்கும் உருத்திரகணங்களுக்கும் வணக்கம்.
अप्सुषदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌅𑌪𑍍𑌸𑍁𑌷𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	நீரிலுள்ள தேவர்கட்கும் உருத்திரகணங்கட்கும் வணக்கம்.
दिक्षुसदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌦𑌿𑌕𑍍𑌷𑍁𑌸𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	திக்குகளிலுள்ள தேவர்கட்கும் உருத்திரகணங்கட்கும் வணக்கம்.
आशासदः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌆𑌶𑌾𑌸𑌦𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	பத்துத் திசைகளிலுமுள்ள தேவர்கட்கும் உருத்திரகணங்கட்கும் வணக்கம்.
अवज्यामिव धन्वनो स्थतेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌅𑌵𑌜𑍍𑌯𑌾𑌮𑌿𑌵 𑌧𑌨𑍍𑌵𑌨𑍋 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	தனுவில் நாணேற்றித் தளர்விப்பது போல் எங்கள் மேலுள்ள கோபத்தைப் பொறுத்தருளின தேவர்களுக்கு வணக்கம்.
य इदं भूतसः स्थ तेभ्यो वो देवा देवेभ्यो नमः	𑌯 𑌇𑌦𑌂 𑌭𑍂𑌤𑌸𑌃 𑌸𑍍𑌥 𑌤𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃	எவர் இந்த உலகைத் தோற்றுவித்தருளிய பரமேசுரரோ, அவருக்கு வணக்கம்.

விருத்தி யுரை.

இவைகளின் சுர முதலியவைகளை வடமொழியிற் காண்க.

இருக்கு இல்லாததால் இதற்குச் சந்தம் இல்லை.

முன்னிரண்டு பாடல்களின் தேவதைகள் வைசுவ தேவர்கள் ஆவர். மூன்றாவது மந்திரத்திற்கு உருத்திரனாவன், அல்லது பின்னிரண்டிற்கும் வைசுவ தேவர் ஆவர். முதலாவதற்கு உருத்திரனாவன்.

ஈண்டு, முதலாவதாயுள்ள 'நம:' என்னும் வரை, இடையிலுள்ளது ஓர் எசுராம். நினக்கு ஆகுக என்பது எஞ்சி நின்றது. 'அதிபதியா (இறைவனை) தற்றன்மை முதலிய குணங்களையுடைய உருத்திரனாகிய

பரமேசுரனே! உனக்கு (எனது) வணக்கம் ஆகுக; என இயைத்துக் கொள்க. ஈண்டு வணக்கம் என்பது வணங்குதற்குரியோன் மேம்பட்டோன் என்னும் உணர்ச்சி காரணமாய் வணங்குவோன் தாழ்ந்தோன் என்னு முணர்ச்சியுடன் செய்கின்ற ஒருவனுடைய அங்கங்களின் செய்கையேயாம்.

ஈண்டு 'இறைவன்' எனவே அனைவருக்கும் இறைவனுமென்பது கொள்ளக்கிடக்கின்றது.

இதுபற்றியே, சுதரிசனசாரியரும்,

'ஆயிரங் கிளைகளையுடைய சாமவேதத்திற் கூறப்பட்ட மகிமைகளை யுடையவன் சங்கரனேயாவன், மகிமைதங்கிய அக்குணங்களே தேவ விரத முதலியவைகளில் எண்ணப்படுகின்றன' என்று கூறியுள்ளார்.

மித்திரனு (சூரியனு)க்கும் நீயே இறைவனு யிருக்கின்றாய் என்பது,

(1) உருத்திர பரமேசுரனே எல்லாவற்றிற்கும் இறைவனு யிருக்கின்றான் என்றதை விரித்துக் காட்டத் தொடங்கி, அவனது பல்வகை நாமங்கள் தனித்தனியே கூறப்படுகின்றன. அவற்றுள், முதலாவது சூரியனுக்கும், உருத்திர பரமேசுரனே இறைவன் என்று கூறப்படுகின்றது என்பதாம்.

ஈண்டு, 'பதி' என்பது சுவாமியாகும். சுவாமி யெனவே ஈசுரன் என்பது பெறப்படுகின்றது. என்னை? 'பதி யீசுரன்' என்று அமர கோசங் கூறுதலின் என்க. இவ்வாற்றால், ஒப்பற்ற கீர்த்தியை யுடையவன் என்பது கருத்து. இதனால் உலகத்திலும், வேதத்திலும் மிகப் பிரசித்தியா யுள்ள சூரியனும், உருத்திர பரமேசுரனுடைய அநுக்கிரகத்தை யடைதற் குரியான் என்பது பெற்றாம்.

இதுபற்றியே, சுருதியும்,

"யேந ஸூர்யஸ்தபதி தேஜஸேத்த:"

"யாதொரு பரமேசுரனால் பேரொளியுடன் சூரியன் விளங்குகின்றனனே" என்று கூறுகின்றது.

அங்ஙனமே, மிருதியும்,

"யதாதித்யகதம் தேஜோ ஜகத்பாஸயதே(அ)கிலம்"

"இரவியின்கண்ணுள்ள ஒளியாய் நின்று உலகத்தை விளக்குகின்றது எதுவோ, அது எனது ஒளியென்றுணர்வாயாக" என்று கூறுகின்றது.

மற்றும், உருத்திர பரமேசுரனுடைய அட்ட மங்கள மூர்த்தங்களுள் இரவியும் ஒரு சிறந்த மூர்த்தமா யிருக்கின்றதென்பதுமுணர்க.

இப்பொருளையே, சுருதியும்,

"யஃ ஸூர்யே திஷ்டந்"

"எவன் இரவியின்கண் இருந்துகொண்டு செலுத்துகின்றானோ" என்பதனால் வலியுறுத்துகின்றது.

அங்ஙனமே, புராணமும்,

"ஹுதாசனோ ஹோதா தீக்ஷிதோ வாயுராகாச க்ஷேத்ரஜ்ஞாகாச நிசாகரா:"

"நிலம் நீர் தீ வளி விண் மதி இரவி ஆன்மா" என்று நேரே இதையே விளக்குகின்றது.

இவ்வாற்றால் சூரியனுடைய மகிமையினாலேயே உலகம் விளங்குகின்றதென்பதும், அச் சூரியனும், பரமேசுரனுடைய திருமேனியேயாவன் என்பதும் தெளியப்பட்டது. மற்றும், தேகத்திற்கு இறைவன், தேகியென்பதிற் சொல்லவேண்டுவதென்னைகொல்? இது யாண்டும் மிக வெளிப்படையாமென்க.

அர்க்கும் இந்திரனுக்கு மிறைவன் என்பது,

ஈண்டு, மூலத்திலுள்ள 'க்ஷத்திரம்' என்னுஞ் சொல் விஷ்ணுவையும், இந்திரனையுங் குறிக்கின்றது. முன்னர் 'மித்திரன்' என்பதற்கு, சூரிய தேவனைக் கொண்டதால், ஈண்டுத் தேவர்களை கொள்ளற்பாலர் என்பதே தகுதியாமாதலினென்க. வடமொழி யிலக்கணவகையானும் இப்பொருள் பெறப்படுகின்றதென்பது முணர்க.

இதனாலன்றோ, சுருதியும்,

"இந்த்ராவிஷ்ணூ ஹவிஷாவிஷ்ணோர்வாயிவதம் க்ஷத்ரம்"

"இந்திரனும் விஷ்ணுவும் க்ஷத்திரம் எனப்படுகின்றார்கள்" என்று கூறுகின்றது.

அங்ஙனமே புராணமும்,

"ந்ருபாணாம் தைவதம் விஷ்ணுர்தேவஸ்ச வாஸவ:"

"அரசர்களின் தெய்விகத்தன்மை, விஷ்ணுவும் இந்திரனுமாகின்றது" என்று கூறுகின்றது.

'சுவர்க்கத்திற்கும் இறைவன்' என்பது,

"𑌯𑌨𑍍𑌨 𑌦𑍁𑌃𑌖𑍇𑌨 𑌸𑌂𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌨 𑌚 𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌮𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌅𑌭𑌿𑌲𑌾𑌷𑍋𑌪𑌨𑍀𑌤𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌸𑍍𑌵𑌃 𑌪𑌦𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑍍"

"துன்பத்தோடு சேராததும், என்று முள்ளதும், சிறப்புடையதும் அனைவரும் விரும்பத்தக்கதுமாகிய இன்பமே சுவ: (சுவர்க்கம்) என்பதின் பொருள்" எனக் கூறப்பட்டிருத்தலானும்,

சுருதியும்,

"𑌸𑍍𑌵𑌰𑌿𑌤𑍍𑌯𑌸𑍌 𑌲𑍋𑌕𑌃"

"சுவ: என்பது ஒரு வுலகம்" என்று கூறுகின்றதாலும், சுவர்க்கம் என்னும் மூன்று முலகத்திற்கும், இன்பவடிவாகிய முத்திக்கும், பரமேசுரனே இறைவன் என்பது பெறப்படுகின்றதென்க.

'தனங்கட்கு இறைவன் என்பது' கண்டு, தனம் என்றதால் எல்லாப் புருடார்த்தங்களுங் கொள்ளக் கிடக்கின்றன. சுவ: பதி, தனபதி என்னும் இரண்டு சொற்களாலும், இவ்வுலக, பரவுலக போக்கியப் பொருள்களுக்கும், இவ்வாறே, அதிபதி, என்றதனுனே தேவர், மனிதர் முதலியோர்களுக்கும் இறைவன் என்றதாயிற்று. இதனுல் மித்திரபதி, க்ஷத்திரபதி, சுவ: பதி, தனபதி, என்னும் நான்கு சொற்களாலும், தேவர், மனிதர் முதலிய எல்லாப் பிராணிகட்கும் இறைவன் என்பதும், புத்திரர், தனம் முதலிய உலகிலுள்ள போகப் பொருள்களுக்கும், பேரின்பத்திற்கும் உருத்திர பரமேசுரனே இறைவனுகின்ருன் என்பதும் பெறப்பட்டமை காண்க.

இப்பொருளையே, சாமமறைப் பாடல்களும்,

"𑌯 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌮𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋"

"பொன் மயமாகிய இப்புருடன் இரவியினுள் காணப்படுகின்ருன்" என்றற்றொடக்கத்து மந்திரங்களாற் கூறுகின்றன என்பதுணர்க.

இவ்வாற்ருல் போந்தபொருள் யாதோவெனின்? கூறியவாங்கே தடையிலாத ஐசுவரியங்களை யுடைய உருத்திரபரமேசுரனை, யான் வணங்குகின்றேன் என்பதாம்.

இனி, 'மித்திரன்' என்பவன் முதலியோர்கட்கு இறைவன் உருத்திர பரமேசுரனென்று மேற் கூறப்பட்டது. ஆண்டு, மித்திரன் என்னுஞ் சொல் 'ஞிமிதா' சிநேகம், என்னும் வடமொழிப் பகுதியிலிருந்து வந்ததா

மாதலின், இதனுல் பேரன்புடைய அகத்தியர், கௌதமர், ததீசி, மார்க்கண்டர், உபமந்யு, பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலிய பக்தர்கள் கொள்ளக்கிடக்கின்றனர்; கொள்ளவே, அன்பர்களை இனிது பரிபாலிக்கின்ற உருத்திர பரமேசுரனை வணங்குகின்றேன் எனப் பொருள் கொள்ளலும் ஈண்டு உரித்தாகு மென்பது காண்க.

அற்றேல்? உருத்திர பரமேசுரனே ஐங்தொழிலையும் நடத்துகின்றவனுதலின் பொதுவாகிய அத் தொழில்களுக்குள் காத்தற்றொழிலும் அடங்குமேனும், அன்பர்களை இனிது பாதுகாத்தலே உருத்திர பரமேசுரனது சிறப்புத் தொழிலா மென்றுணர்த்துதற் பொருட்டே ஈண்டு மித்திரன் முதலியோர்களைப் பாதுகாக்கின்றவன் எனக் கூறப்பட்டதென்றுணர்க.

அற்றாகலினன்றே புராணமும்,

"ஜஜ்ஜ ரக்ஷணாயைவ மம ஸர்வம் ஹி சேஷ்டிதம் ।
இதி ஜாநீத ஜஜ்ஜா ப்ராணேப்யோ(அ)பி ப்ரியோ மத:"

"யான் செய்கின்ற தொழிலனைத்தும் எனது அன்பரைப் பாதுகாத்தற்பொருட்டேயாம் என்றுணர்வாயாக; எனது அன்பன் எனது உயிரினுஞ் சிறந்தோனுவன்." என்று கூறுகின்றது.

அல்லது, மித்திரன் என்பது, பன்னிரு சூரியர்களுள் ஒருவனுவன் அவனுக்கு இறைவன், உருத்திர பரமேசுரனே முக்கியமாகிய சூரியனுகின்றான் என்பதாம். அங்ஙனமே, க்ஷத்திரபதி யென்னும் விஷ்ணுவு மாகின்றான்; சுவ: பதி யென்னும் இந்திரனுமாகின்றான்; தனபதி யென்னும் குபேரனுமாகின்றான் என்பதாம். இதனுல் பரமேசுரனே எல்லாத் தேவர்களாகவு மிருக்கின்றான் என்பது கொள்ளக்கிடந்தமை காண்க.

இதுபற்றியே, ஏனைய சுருதிகளும்,

"ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்ர: ஸோ(அ)க்ஷர: பரமஸ்ஸ்வராட் ।
ஸ ஏவ விஷ்ணுஸ்ஸ ப்ராணஸ்ஸ காலோ(அ)க்நிஸ்ஸ சந்த்ரமா:"

"அப்பரமான்மாவே, பிரமன், சிவன், இந்திரன், அக்கரம், பரமம், சுவராட், விஷ்ணு, பிராணன், காலன், அக்கினி, சந்திரன் முதலிய தேவர்கள் வடிவங்களாய் இருக்கின்றது." என்று கூறுகின்றன.

ஈண்டு "இந்திரன் முதலிய தேவர்கள் சுவர்க்க முதலியவற்றிற்கு இறைவராவர்" என்பது சுருதிகளிற் கூறப்பட்டிருப்பினும் அவர்கள் பரமேசுரனுடைய கூறுகளானதால் பரமேசுரன் வடிவர்களென்பதுங் கூடுமென்றுணர்க.

இதுபற்றியே, பாரதவாக்கும்,

"ஸேந்த்ராதிஷு ச தேவேஷு ததைஶ்வர்யஞ்ச த்ருஶ்யதே"

"இந்திரன் முதலிய தேவர்களிடத்துள்ள ஐசுவரியமானது பரமேசுரனுடைய ஐசுவரியமேயாம்" என்றெழுந்தது.

இவ்வாறு, எல்லாவற்றிற்கும் இறைவனாகவும், எல்லாவற்றையும் பாதுகாப்போனாகவும், எல்லா வடிவனாகவும் பரமேசுரன் துதிக்கப்பெற்றனன் என்பதுணர்க.

இனி, 'மந்யுநா' என்பது முதல் 'பரமேஷ்டி' என்பது ஈறாக, பல் வகை மகிமைகளையுடையவனாக அப் பரமேசுரன் சிந்திக்கப்படுகின்றான்.

அவற்றுள், "கோபத்தால் விருத்திராசுரனைக் கொன்றவனாய் இருக்கின்றாய்" என்பது, ஈண்டு இருக்கின்றாய் என்பது எஞ்சி நின்றதாம்.

கோபம் என்னும் நிமித்தத்தால் எண்ணூற்றுப்பத்து விருத்திராசுரர்களைக் கொன்றனன் என்பதாம்.

இதுபற்றியே, சுருதிகளும்,

"இந்திரோ விருத்திர மஹாந்" எனவும்,

"இந்த்ரோ த³தீ⁴சோ அஸ்தி²பி⁴ர் வ்ருத்ராண்யப்ரதிஷ்குத꞉ ஜகா⁴ந நவதீர்நவ"

"இந்திரன் ததீசியின் எலும்புகளால் எண்ணூற்றுப் பத்து விருத்திரர்களைக் கொன்றனன்" எனவுங் கூறுகின்றன.

அற்றேலஃதாகுக. சுருதிகள், இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றனன் என்று முழங்குகின்றனவே யன்றி பரமேசுரன் கொன்றானெனக் கூறவில்லையே யெனின்? அப்படிக் கூறுவது உண்மையே ஆனால், தலவகாரவுபநிடதமென்னும் கேநோப நிடதமும், "தேவர்கள், யாமே வெற்றி கொண்டோமென இறுமாந்திருக்க, பரமேசுரன் இயக்க வடிவமாய் எழுந்தருளி எல்லாவற்றிற்கும் தானே காரணனென்றும், அவ் வெற்றியும் தன்னாலேயே ஆனது என்றும் அறிவுறுத்தருளினன்" என்பதை இரண்டு கண்டங்களால் கூறுகின்றது. அதைப்போல் உருத்திர பரமேசுரனே விருத்திராசுரனைக் கொன்றனன் என்பதும், ஏனைய தேவர்கள் நிமித்தர்களாமென்பதுந் தெற்றென விளங்குமாறு காண்க.

அல்லது, 'மந்யுநா விருத்திரனைக் கொன்றனன்' என்பதை 'மந்யு' என்பதை 'சதமந்யு' என்பதில் ஒரு கூறெனக்கொண்டு, இந்திரனால் அதா

வது இந்திரனாகிய காரணத்தைக்கொண்டு பரமேசுரன் விருத்திராசுரனைக் கொன்றனன் எனப் பொருள்கொள்ளினும், வடமொழி இலக்கண வகையாலும் இது இனிதமையு மென்பதுணர்க.

அல்லது, மந்யுநா என்பது, வேள்வியால் எனவும், விருத்திரம் என்பது பாவத்தை யெனவுங் கொள்ளலாம், அதாவது யாகத்தால் பாவத்தைப் போக்கி யருளுகின்றவன் என்பது பொருள்.

இதுபற்றியே சுருதியும்,

"தைவயஜ்ஞைர் வ்ருத்ர ஹா ஸ்யாபாபஸ:"

"தேவாராதனையா (யாகத்தா)ல் பாவத்தைத் தொலைத்தவர்களாவோமாக." எனக் கூறுகின்றது.

மற்றும்,

"ஹத்வா பித்வா ச ஸம்ஹ்ருத்ய ஸர்வமிதம் ஜகத் ।
யஜத்யேகம் விரூபாக்ஷம் ந ஸ பாபேந லிப்யதே"

"உயிர்களைக் கொன்றாகிலும், பயமுறுத்தியாகிலும், இவ் வுலகத்தை யழித்தாகிலும் விரூபாக்ஷராகிய பரமேசுரரை எவன் ஆராதிக்கின்றானோ, அவன் பாவமடையான்" எனவும்,

இன்னும்,

"தர்மேண பாபமபநுததி"

"தருமத்தால் பாவங் கெடுகின்றது" எனவுங் கூறுகின்றது.

இதனாலன்றோ, பாரதமும்,

"பிநாகபாணிர்ப்பகவாந் ஸர்வபாபஹரோ ஹர:"

"பிநாகபாணியாகிய பகவான் பரமேசுரனே எல்லாப் பாவத்தையும் போக்குகின்ற அரனாகின்றான்." என்று கூறுகின்றது.

மற்றும், அதன் பாடியமும்,

நீ, மந்யுநா (கோபமாகிய) காரணத்தால், விருத்திரனைக் கொன்றவனா யிருக்கின்றாய்." என்று இப்பொருளையே வலியுறுத்துகின்றது.

உலகனைத்தையும் சூரிய வடிவால் விளக்குகின்றவனா யிருக்கின்றாய், என்பது, சுயம்பிரகாச வடிவனாயிருக்கின்றாய் என்பதாம்.

ஈண்டு, "யேந ஸூர்யஸ்தபதி"

"எவனால் சூரியன் காய்கின்றான்" என்னுஞ் சுருதியால், பரமேசுரனுடைய அருளைப் பெற்றதாலேயே சூரியனுக்கும் விளக்குந்தன்மை யுள்ளதாமென்பது உணரற்பாலதாம்.

"யாகத்தால் அதனுடைய பயனை நுகர்கின்ற இந்திரனும் நீயாயிருக்கின்றாய்" என்பது, ஈண்டு 'மகவன்' என்னுஞ்சொல் 'மம்ஹதி' 'ஈகை' என்னும் வடமொழிப் பகுதியின்கண் பிறந்ததாமாதலின் யாகமாகிய சாதனத்தால் வேட்போர்கட்குப் பயனை யளிக்கின்றவன் நீயாயிருக்கின்றாய் எனவும் பொருள்படுமாறுணர்க. இருக்குப் பாடியத்திலும், 'மகவன்' என்பதற்கு பயன் அளிக்கின்றவன் என்று கூறப்பட்டிருக்கின்றதென்க.

அல்லது, யாகமாகிய சாதனத்தால் இந்திரனாற் செய்யப்படும் மழை பெய்வித்தல் முதலிய காரியங்களைச் செய்கின்றவனும் நீயா யிருக்கின்றாய் எனினுமாம்.

இதுபற்றியே சுருதியும்,

"பயாதிந்த்ரஸ்ச வாயுஸ்ச"

பயத்தால் இந்திரனும் வாயுவும், என்று தொடங்கி "இந்திரனே மழை பெய்விப்பவன்" என்று கூறி முடிக்கின்றது.

தக்ஷிணாமூர்த்தியாய் அன்பு செய்தற்குரியானும் நீயாகின்றாய்' என்பது,

இப் பரமேசுரனுடைய தக்ஷிணா மூர்த்தமானது முத்தி விருப்புடையார்கட்கு மிக விரும்பற்பாலதாம். அதாவது பக்தி செய்வதற்குரியதாம். ஈண்டு முத்தி விருப்புடையார்களால் அன்பு செய்யற்பாலது என்று கூட்டிக் கொள்க.

இதுபற்றியே, வாயு சங்கிதையும்,

"அஜாத இத்யேவம் கஸ்சித் பீரவ: ।
ஜந்மத்ராஸ்த்ரா: ப்ரபத்யந்தே ருத்ராக்ஷ்யம் தக்ஷிணம் முகம்"

"பிறப்புக்கட்குப் பயமடைந்தோர்கள் பிறப்பற்றவனுயுள்ள ஒருவன் நீயே யென்று உன்னையுணர்ந்துகொண்டு, உருத்திரனாகிய நினது தட்சிணாமுக மூர்த்தியை யடைகின்றனர்." என்று கூறுகின்றது.

அங்ஙனமே, சுவேதாசுவதர சுருதியும்,

“ ப்ரபத்யதே ருத்ர யத்தே தக்ஷிணம் முகம் தேந மாம் பாஹி ”

“ உருத்திர ! உன்னுடைய தக்ஷிணமுகம் யாதொன்று இருக்கின்றதோ, அதனல் எம்மைப் பாதுகாப்பாயாக ” என்று இப்பொருளையே வலியுறுத்துகின்றது. இதனல் முத்தி விருப்புடையாரால் வழிபடற் குரியவன் உருத்திர பரமேசுரனே என்பதும் பெறப்பட்டமை காண்க.

அல்லது, பேரன்பிற்கு விஷயமானது இவ் வுருத்திர பரமேசுரனுடைய தாட்சண்ய முடையதென்னும் அருட்டிருமேனியே யென்பதுமாம். இதனல் கருணைக் கடலான் என ஈண்டு எடுத்துக்கொண்ட பரமேசுரனே உயிர்களிடத்துப் பேரன்புடையான் என்பதும் கொள்ளக் கிடந்தமை காண்க.

“ வேந்தன் வடிவால் மக்களைத் தாங்குகின்றவன் நீயாயிருக்கின்றாய் ” என்பது, அதாவது அரசர்களால் பிரசைகளைப் பரிபாலிக்கின்றவனும் உருத்திர பரமேசுரனே யாகின்றான் என்பதாம். இதனல் அரசனாய் நின்று தண்ட நீதி முறையில் ஆணை செலுத்துகின்ற தன்மையும் பரமேசுரனுடைய வயப்பட்டதேயாம் என்பதாயிற்று. அல்லது வழிபடுகின்றதை நோக்கிப் பயனை யளிக்கின்றவனும் நீயாயிருக்கின்றாய் என்பதாம்.

“ அன்பர்கள் விரும்பியவற்றை நிறையப் பொழிகின்றவனும் நீயாயிருக்கின்றாய் ” என்பது, ரிஷபம் என்னும் வடமொழிச் சொற்கு இவ்வாறே பொருள் கூறல்கொண்டு, ரிஷபக்கொடி, ரிஷபவாகனம் என்பது முதலியவைகளுக்கும் பொருள் கூறல் எளிதிற் கூடும் என்பதை பாரத வாக்கியத்தாலும் உணர்ந்துகொள்ளற்பாலதாம்.

‘ துஷ்டர்களைச் சிட்சிக்கின்றவனும் நீயாயிருக்கின்றாய் ’ என்பது,

ஈண்டு, துவஷ்டா என்னுஞ்சொல் விரைவுப் பொருள்கொண்ட வியாபகத்தன்மையை யறிவுறுத்துவதாமாயினும் ‘ துவக்ஷ ’ என்னும் வடமொழிப் பகுதியிலிருந்து வந்ததாமெனக் கொள்ளவின், ஈண்டு அப் பொருள் பொருந்தா தென்பதுணர்க.

மறைக்கின்ற நிமித்தத்தால் விருத்திராசுரனைக் கொல்லுதலாகிய தொழிலை யுடையவனும் நீயா யிருக்கின்றாய் ” என்பது, ஈண்டு, “ விருத்திரனைக் கொல்லுதலாகிய தொழிற்குத் தலைவன் ” என்னும் பாடிய வாக்கியமும் உணரற்பாலதாம்,

அற்றாகலினன்றே, தைத்திரீய சுருதியும்,

"ஸ இமாம்ல்லோகாந் அவ்ருணோத் யதிமாம்ல்லோகாநவ்ருணோத் தத்வ்ருத்ரஸ்ய வ்ருத்ரத்வம்"

"இவ் வுலகை மறைத்தலின் அவன் விருத்திரனெனப்படுகின்றான்" என விருத்திரன் என்பதற்கு காரணங் கூறும் வாயிலாய் இப் பொருளையே விளக்குகின்றது.

மற்றும், 'ஶசீ' (சசி,) என்பதும் கருமத்தை (செயலை)யே பொருளாக வுடையதென்பது நூல்களில் வெளிப்படையாம்.

இவ்வாற்றால் விருத்திராசுரன், உலகை இருள் மூடுமாறு செய்ததால் பரமேசுரன் அவனைக் கொன்றனன் என்பது பொருள்.

பிறவிடத்தும் இவ்வாறே கூறப்பட்டிருத்தலின், 'பசுபதி' என்பது போன்று 'சசிபதி' என்பதும் பரமேசுரனையே நன்கு அறிவுறுத்துவதா மென்பது காண்க.

"அன்னத்தையுடைய இல்லறத்தானாக இருக்கின்றனை" என்பது,

ஈண்டு, "கயோ க்ருஹஸ்த: ஶிவேஹி ரக்ஷ்ய பரிவாஹி" என்னு மிடத்து 'கய:' என்பதற்கு, கிருகத்தன் என்பதே பொருளானதால், ஈண்டு இல்லறத்தான் எனக் கொள்ளப்பட்டது. இதனால் யாகத்திற்குரிய அன்ன முதலியவைகளும், ஈகை முதலியவைகளும், தன முதலியவைகளும் இல்லறத்தானுக்கு நிறைந்திருத்தலும், பரமேசுரனுடைய அருளாலேயே யென்பது பெறப்பட்டது.

"யானையை அங்குசத்தால் தன் வசப்படுத்துமாறு உலகைத் தன் வயமாயிருக்கச் செய்கின்றவனும் நீயாகின்றாய்" என்பது,

ஈண்டுப் பாடியத்திலும் இவ்வாறே பொருள் கூறப்பட்டுள்ள தென் றுணர்க.

பிருதிவி, (மண்) என்பது, மண்ணுலகிலுள்ள மக்கள்மேல் நின்றது. நல்லோர்களையும் தீயோர்களையும் புண்ணியத்தாலும், பாவத்தாலும், பரமேசுரன் செலுத்துகின்றானாதலின், அதாவது உயிர்களின், நன்மை தீமைகளுக்கியைய ஆட்டி வைக்கின்றவனாதலின் உலகனைத்தும் பரமேசுரனுடைய வசமேயாம் என்பதாம்.

இது பற்றியே, சுருதியும்.

“ 𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌪𑌾𑌪𑌃 𑌪𑌾𑌪𑍇𑌨 ”

“ நல்லோர் நற் கருமத்தாலும், தீயவர் தீய கருமத்தாலும் தோன்றுகின்றனர் ” என்று கூறுகின்றது.

அங்ஙனமே மிருதியும்,

“ 𑌨 𑌹𑍍𑌯𑌯𑌾 𑌕𑍇𑌵𑌲𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨 𑌚 𑌕𑍇𑌵𑌲 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌕𑌰𑍍𑌮𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 ”

“ கருமமாத்திரத்தாலுமன்று, என்னல் மாத்திரமுமன்று, மற்றோ, கருமத்தைச் சகாயமாய்க் கொண்டதனாலே உலகமாக்கப்படுகின்றது.” என்று கூறுகின்றது.

ஈண்டு, யானையை அடக்குவதற்குத் தோட்டியானது சாதனமாயிருத்தல் போன்று மக்களைத் தன்வயமாக்குதற்குப் புண்ணிய பாவங்களே கருவியாமென்பது காண்க. இதுவும், எல்லாம் வல்ல இறைவனுக்கு உபசாரமேயென்பது உணரப்பாலது.

“ அக்கினியால் தேவர்களையும், மனிதர்களையும் கட்டுப்பட்டிருக்கின்றவர்களாய்ச் செய்கின்றாய் ” என்பது,

‘ஆகவனீயம்’ என்பது முதலிய மூன்று அக்கினிகளாயிருந்து தேவர்கள் வாழ்வதற்குரிய, அன்னம், என்னும் கோதுமைமாப் பணியாரம் முதலிய தேவவுணவுகளைக் கொடுத்தல் அக்கினியின் ஆதீனமாமாதலின், தேவர்கள் அக்கினி வயப்பட்டவர்களென்றுணர்க.

மக்களோ, சமைத்தல், விளக்கல், சூடுண்டாக்கல் முதலியவைகளால் தீயின் அதீனமா யிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையேயாம்.

அல்லது, நெற்றிக் கண்ணிலுள்ள அக்கினியால் ஊழிக் காலத்தில் உலகனைத்தையும் இலயஞ் செய்து கொள்கின்றனை என்பதும் அமையுமென்க.

“ காற்றால் புநிதமாக்கி உயிர்களனைத்தையும் பிழைத்திருக்குமாறு செய்கின்றாய் ” என்பது,

வாயுவினால் மிகப் புநிதமுண்டாக்கி இனிது வாழுமாறு செய்தருள்கின்றாய் என்பது பொருள். இதனால் ஆன்மாவைப் பற்றிய பிராண சம்பந்த மின்றேல், உயிர் என்பதும் இன்றாம் ; காற்றுப்படுதல் முதலியவைகளாற் புநிதமாதலென்பதும் இன்றாமென்க.

இதனால், அக்கினியும், வாயுவும், பரமேசுரனுடைய ஆணையைப் பெற்றுக்கொண்டு தத்தந் தொழிலைச் செய்கின்றவைகளாகின்றன என்பது ஈண்டுக் கொள்ளக்கிடந்தமை காண்க.

அற்றாகலினன்றே, சுருதிகளும்,

“ ஹயாஉஸ்ஹா ஙிஷவ தி ”

“ இவனது பயத்தால் அக்கினி எரிக்கின்றது ” எனவும்,

“ ஹீஷாஹா ஊா தஃ வவதி ”

“ இவனிடத்தில் பயத்தை யடைந்து வாயு சலிக்கின்றது ” எனவும்,

“ ந ஹ்ராணெந நாவாநெந உதெ்ஹா ஜீவதி கஸ்ஹந ।
ஊதரெண தூ ஜீவஷி யஹிநெதா வூவாஸ்ரிதள ”

“பிராணனாலும் அபானனாலும் மனிதர் ஒருவரும் பிழைத்திலர்; மற்றோ, இவ்விரண்டும் எவனைப் பற்றி நிற்கின்றனவோ, அவனால் பிழைத்திருக்கின்றனர்.” எனவுங் கூறுகின்றன.

“வஷட்காரம், சுவதாகாரம் என்பது முதலிய பிரயோகங்களைக் கொண்ட யாகத்தால் அதனுடைய பயனை அநுபவிக்கின்றவனும் நீயாயிருக்கின்றாய்” என்பது,

வேள்வியாகிய சாதனத்தால் வேள்வித் தலைவனாய் விரும்பிய பயன்களை அநுபவிக்கின்றவன் உருத்திர பரமேசுரனே யன்றி வேறலன் என்பது பொருள்.

இதுபற்றியே சுருதியும்,

“ கதமொ தெவொ ஹஹ்ஸஷஹாக ”

“ இவர்களுள் எத்தேவர் பயனை நுகர்பவர் ?” என்றற்றொடக்கத்து மந்திரத்தில் இப்பொருளைக் கூறியிருக்கின்றது.

உண்மையை நோக்கிலோ, ‘ வஷட்காரம் ’ என்னும் மந்திரத்தாற் குறிப்பிட்ட யாகமாகிய விஷ்ணுவைப் பாதித்திருமேனியாகக் கொண்டவன் என்பதே கொள்ளக் கிடக்கின்றது.

இதுபற்றியே சுருதியும்,

“ யெஜ்ஞா வை விஷ்ணுஃ ”

‘ யாகமே விஷ்ணு வெனப்படும் ’ என்று கூறுகின்றது. இதனால், அரிகரமூர்த்தம் கொள்ளப் பெற்றமையுங் காண்க.

அல்லது, மூலத்திலுள்ள 'ஆர்த்தம்' என்னுஞ் சொல் 'சமீபம்' என்னும் பொருளையுந் தருவதாமாதலின் வேள்வித் தலைவனுக்கருகில் தேவதா வடிவாயிருந்து அநுபவிக்கின்றவன் என்பதும் அமையுமாறுணர்க.

"சோமயாகஞ் செய்தலால் சந்திரமண்டலத்திலிருந்து அப் போகங் களை யநுபவிப்பவனும் நீயாயிருக்கின்றாய்" என்பது,

இங்ஙனமே பாடியமுங் கூறுகின்றதென்பதுணர்க.

உண்மையிலோ, சோமத்தாற் குறிப்பிடப்பட்ட வைசுவதேவ யாகத் திற் கூடியுள்ள தேவர்களனைவரும் நீயாயிருக்கின்றாய் என்பதாம்.

சபையாற் குறிப்பிட்ட (பிரமனும்) இரணியகருப்பனும் நீயாயிருக்கின் றாய், என்பது,

ஈண்டு, ஸம், என்பது 'சபை' என அமரகோசங் கூறுதலானும், பரமேஷ்டி என்பது பிரமன் எனல் வெளிப்படையா மாதலானும் இது போந்த பொருளென்க.

இனி, "பாடியத்தில், பரமேட்டி என்பதற்கு, பத்தினியுடன் (மனையா ளுடன்) உயர்ந்ததாகிய இல்லறத்தலைவனு யிருக்கின்றவனும் நீயே" என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது மனைவியுடன் கூடிய இல்லறம் என்பதனாற் குறிப்பிக்கப்பெற்ற, வேள்வியாற்றல், தானமிடல், ஓமஞ்செய்தல் முதலிய நற்கருமங்களில் வழுவாது இருப்பவனும் நீயாகின்றாய் என்பதாம். மனை யாளுடன் கூடினவனுக்கே அதில் அதிகார மிருத்தலினென்பதுணர்க. இது வாழ்நாள் முழுதும் நற்கருமங்களையே செய்துகொண்டு வாழல் வேண்டு மென்பது எல்லா நூல்களுக்குங் கருத்தாமாதலி னென்க.

அற்றாகலினன்றே சுருதியும்,

"யாவஜ்ஜீவஉஹிஹொத்ரும் ஜுஹுயாத்"

'வாழ்நாள் வரையும் எரியோம்புக' என்று கூறுகின்றது.

அங்ஙனமே, மாபாரதமும்,

"விஶெஷணெ க்ருஹஸ்தஸ்ய ஶெஷாஸ்த்ரய்"

"இல்லறத்தானே உயர்ந்தோன் மற்றைய மூவரும் அங்கத்தினர்கள்" என்று கூறுகின்றது.

இதுபற்றியே மநுமிருதியும்,

"அன்னையாரைப் பற்றிக்கொண்டே அனைத்துயிரும் வாழ்கின்றன, அது போன்று இல்லறத்தானைப் பற்றிக்கொண்டே ஏனைய ஆசிரமத்தி லுள்ளவர்கள் பிழைக்கின்றார்கள்." என்று கூறுகின்றது.

ஈண்டு, தமிழ் மறையும்,

" துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கும்

இல்வாழ்வா னென்பான் றுணை " என்பது முதலிய மந்திரங்களால் அறத்துப்பாலில் இல்லறத்தை யெடுத்துமிக விதந்தோதியுள்ளதும் உணரப்பாலதாம்.

அல்லது, 'ஸ்ரீக' என்பது ஞானமாமாதலின், உபாசனையால், பரமாகிய (மேலாகிய) பதத்தில் இருப்பவன் பரமேஷ்டி என்பதுமாம்.

அல்லது, இனிது உபதேசிக்குந் தன்மையால், பரம்=எல்லாத் தேவர்கட்கும் மேலாய் விளங்கிக்கொண்டிருக்கின்றவன், பரமேஷ்டி எனினு மமையும்.

அல்லது, பார்வதி தேவியாருடன், பரம்=மேலாகிய கைலாசத்தி லிருக்கின்றவன் பரமேஷ்டி என்பது மமையும்.

இனி, " யோ தேவா " என்பது முதற்கொண்டு நமஃ, என்பது ஈறாகிய ஆறு மந்திரங்களால், மூலகாரணனும், பிரம சொரூபனும், ஒருவனும், மற்றும் பல மகத்தாந் தன்மைகளை யுடையவனுமாகிய உருத்திர பரமேசுரனுடைய கூறுகளை யுடையவர்களான குணிருத்திரர்கள் வணங்கப்படுகின்றார்கள். அவ் வுருத்திரர்களும், ஆயிரக்கணக்கானவர்களாவார்கள் ; அவர்களும் 'ஒருவனாகிய உருத்திர பரமேசுரனைப் போற்றிக்கொண்டு அவனுக்கருகில் புடைசூழ்ந்து நிற்கின்றவராய்க் கணங்கள் எனப்படுவார்கள் என்றுணர்க.

இதுபற்றியே, உருத்திராத்தியாயத்தின் முதலாம் அநுவாகத்தின் நடுவில்,

" யெ சாஷ் ஸகஸெநாஹம் தெஹ்யாகஊஹஈ ஊதி "

" உருத்திரன் கூறுகளையுடைய இக் கணங்களுக்கு வணக்கம் " எனவுங் கூறப்பட்டுள்ளது.

அற்றேலஃதாகுக ? தேவர்கள் தேவனை வணங்கல் என்றது எவ்வாறுமெனின் ? பரமேசுரன் தனது அருள்வலியால் கணக்கில்லாத உருத்திர கணங்களை யுண்டாக்கி, ஒவ்வொரு வுலகத்திற்குந் தலைவர்களாக்கி, அருளையும், மருளையுஞ்செய்து வருமாறு அவர்களை நியமித்திருத்தலின், அரசனைப், பிரசைகள் வணங்குமாறு வணங்குதல் கூடுமென்க.

இது கொண்டே சுருதியும்,

" யெ ரு~உூா ஊயிஹ்ஊதூாம் ஊஷ்நூஹதூண ஃவெஷாஸி ஹவா ஊயி ஷிவம் ரு~உூா உவஶ்ரிதாஃ "

'மண்ணிலும், கடலிலும், விண்ணிலுந் தோன்றுகின்ற உருத்திரர்கள்' என்றற் றொடக்கத்து மந்திரங்களால் இப்பொருளையே கூறுகின்றது.

அங்ஙனமே, பாரதமாகிய இதிகாசமும்,

" ஶூலஹஸ்தா வஹுஹஸ்தா: ஸர்வே ஸர்பக்ருத கிரீடிந: "

" சூல மேந்திய கையர்கள், வாளேந்திய கரத்தர்கள், பாம்பென நீண்ட முடியினர் " என்றற் றொடக்கத்துச் சுலோகங்களால், இப் பிரமத கணங்களையே விதந்து கூறுகின்றது.

அவ்வாறே, துரோண பருவத்திலும்,

" தஸ்ய பாரிஷதா திவ்யா நாநாரூபா ஸஹஸ்ரஶ: "

" அவ் விறைவனுடைய வானுலகப் பிரமத கணங்கள் பலவகையாவர்கள் " என்று கூறப்பட்டிருக்கின்றது.

மற்றும், இலிங்கபுராணம், கந்தபுராண முதலிய பல நூல்களிலும் உருத்திர பரமேசுரனுடைய பிரமத கணங்கள் பலவகையாய்க் கூறப்பட்டிருக்கின்றன வென்பதும் ஈண்டு உணரற்பாலதாம்.

தேவர்காள்! உருத்திர தேவதைகளே! நீங்கள், சுவர்க்கத்தில் இருக்கின்றவர்களாவீர்கள்; அத்தகையர்களான உங்கட்கு நமஸ்காரம்.

இவ்வாறே, வானுலகில் இருக்கின்றவர்களான தேவர்காள்! உங்கட்கு நமஸ்காரம். தண்ணீரில் இருக்கின்ற தேவர்காள்! உங்கட்கு நமஸ்காரம். பத்துத் திக்குகளிலும் இருக்கின்ற தேவர்களே! உங்கட்கு நமஸ்காரம். எட்டுத் திசைகளிலும் இருக்கின்ற தேவர்காள்! உங்கட்கு நமஸ்காரம்.

' தநுவில் நாணேற்றுவது போன்று உமது ஆணையைக் கடந்ததால் எங்களிடத்தெழுகின்ற உமது கோபத்தை, யாம் வணங்குதல் முதலியவற்றால் பொறுத்துக் கொள்ளுமாறு செய்கின்றோம் ' என்பது,

ஈண்டுப் பரமேசுரனது ஆணையாகிய வேத முதலியவற்றால் அறிவுறுத்தப்பட்டதைக் கடந்ததால், பரமேசுரனுக்குண்டாகும் கோபத்தை, அவனை வழிபடுதலாலன்றி ஏனைய வுபாயங்களால் அடக்க முடியாதென்பதால் அதை நீக்குதற்குப் பரமேசுரனையே இனிது வழிபடல் வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகின்றதென்பது முணர்க.

அற்றாகலினன்றே பகவானும்,

" ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞே யஸ்தே உல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மமத்வேஷ்யஸ்ஸ வத்யஶ்ச ஜாயதே "

" சுருதி மிருதிகள் எனது ஆணைகள்; அவைகளைக் கடந்து நடக்கின்றவன் எவனோ, அவன் என்னால் வெறுக்கப்படுபவனும், கொல்லப்படுபவனுமாகின்றான். " என்றருளிச் செய்துள்ளார். ஈண்டு உயிர்களின் கருமங்களைத்

தழுவிக்கொண்டே நிக்கிரகாநுக்கிரகங்களைப் பரமேசுரன் செய்தலின் அவன் பொறுமை யுடையான் என்பதும் பொருந்தாதென்றுணர்க.

இதையே வியாசபகவானும் பிரமமீமாஞ்சையில் நன்கு விரித்திருக்கின்றனர்; அதை ஆண்டுக்காண்க. இதனால், உருத்திர பரமேசுரனைக் களிப்படைவிக்கில் இன்புறலாம், வருத்தமடைவிக்கில் துன்புறலாமென்பது தெற்றென விளங்குகின்றதென்பதைக் காண்க.

"யாதொரு உருத்திர பரமேசுரன் காணப்படுகின்ற இவ்வுலகனைத்தையும் உண்டாக்கியருளினனோ, அவனுக்கு நமஸ்காரம்" என்பது,

எல்லாமாய் எல்லாவற்றையும் ஆக்கி அளித்து அழித்துத் தனித்து நிற்கும் தனிப் பெருங்கருணை அருட்பெருஞ் சோதி பரப்பிரம சொரூபனாகிய பரமேசுரனுக்கு வணக்கம் என்பதாம்.

ஒன்பதாங் கீத மந்திர விருத்தியுரை

முற்றிற்று.

கீத மந்திரம் 10.

१ २ १ २ १ २ १ २ १
अधिप । ताइ । मित्रपा । ताइ । क्षत्रपा । ताइ । स्वः पताइ ।
२ - १ २ १ २र २१र २ १ र २र १ २र र १
धनपता २ ॥ ना२माः । नम उत्ततिश्चोत्तन्वानेभ्यश्चनमोनीषंगिभ्यश्चोपवीति-
२ १ र ३ १ र२र १ २ १ २ र १ २
भ्यश्च नमोस्यभ्द्यश्चप्र । ति दधानेभ्यश्च नमः । प्रविद्यभ्यश्च प्रव्याधिभ्यश्च
१२ १ २ र १ २ १ २ १र २ र १ २ १२ १ २ र
नमः त्सरभ्द्यश्चत्सारिभ्यश्च नमः श्रि । तेभ्यश्च श्रायिभ्यश्च नमस्तिष्ठभ्द्यश्चोप-
१ २ १ र २१र २ २र२ १ २१र२ १ २र १२ १र २
तिष्टभ्द्यश्च नमो यतेच व्रियतेच नमः पथेच विपथायच । आवज्यामिव
१ २र १ र २ १ २र १ र २ १ २ १ २ १ २ १
धन्वनो विते मन्युन्नयामसि मृडतान्न इह अस्मभ्यम । इडा२३ भा यइदं
र २ १ - ३ ५
विश्वं भूतम् । युयो ३ । आउ । वा२ । ना२३४ माः ॥

இம் மந்திரமும் இருக்கன்று கேவலம் கீதமேயாம்.

மந்திரத்தின் பதவுரை.

नम उत्ततिभ्यश्च	நம உத்திப்யஶ்ச	உத்தரீய முடையார்கட்கும் வணக்கம்.
उत्तन्वानेभ्यश्च	உத்த்வநாநேப்யஶ்ச	நாணேற்றிய தநுக்களையுடையார்கட்கும் வணக்கம்.
नमो नीषंगिभ्यश्च	நமோ நீஷங்கிப்யஶ்ச	அம்பறாத்தூணியை யுடையவர், கட்கும் வணக்கம்.

उपवीतिभ्यश्च	உபவீதிப்யச்ச	பூணூல் உடையார்கட்கும் வணக்கம்.
प्रतिधानेभ्यश्च नमः	ப்ரதிதானேப்யச்ச நம:	குறிப்பில் பாணங்களை விடுகின்றவர்களுக்கும் வணக்கம்.
प्रविद्यभ्यश्च नमः	ப்ரவித்யப்யச்ச நம:	நன்றாக (உயிர்களை)க் கொல்லுகின்றவர்களுக்கும் வணக்கம்.
प्रव्याधिभ्यश्च	ப்ரவ்யாதிப்யச்ச	கொல்லுமாறு படைகளை, நன்கு ஏவுகின்றவர்களுக்கும் வணக்கம்.
नमः स्सरभ्यश्च	நம: ஸ்ஸரப்யச்ச	பவக்கடலைத் தாண்டுகின்றவர்களுக்கும் வணக்கம்.
स्तारिभ्यश्च	ஸ்தாரிப்யச்ச	மக்களை, பவக்கடலினின்று கரையேற்றுகின்றவர்களுக்கும் வணக்கம்.
नमः श्रितभ्यश्च	நம: ஶ்ரிதப்யச்ச	வழிபாடு செய்ய உரியவர்களுக்கும் வணக்கம்.
श्रायिभ्यश्च नमः	ஶ்ராயிப்யச்ச நம:	பரமேசுரனை வழிபடுகின்றவர்களுக்கும் வணக்கம்.
नमस्तिष्ठभ्यश्च	நமஸ்திஷ்டப்யச்ச	தனதான்மாவில் நிலைத்திருக்கின்றவர்களுக்கும் வணக்கம்.
उपतिष्ठभ्यश्च नमः	உபதிஷ்டப்யச்ச நம:	தனது நிலை நழுவுமிடத்துப் பரமேசுரன் திருவடியில் நிலைத்திருக்கின்றவர்கட்கும் வணக்கம்
नमो यतेच	நமோ யதேச	அனைத்தையும் நியமிக்கின்ற உருத்திர பரமேசுரனுக்கு வணக்கம்
वि यथेच	வி யதேச	நியமிக்கின்ற ஏனைய தேவர்களையும் நியமிக்கின்ற உருத்திர பரமேசுரனுக்கு வணக்கம்.
नमः पथेच	நம: பதேச	நன்னெறிகளை யுண்டாக்கிய பரமேசுரனுக்கு வணக்கம்.
वि पथेच	வி பதேச	தீ நெறிகளைத் தோற்றி வைத்தருளிய பரமேசுரனுக்கு வணக்கம்.

விருத்தி யுரை.

இம்மந்திரத்திலும், மேல்வரும் பதினோராவது மந்திரத்திலுமுள்ள பன்மைச் சொற்கள். குணி உருத்திரர்களைக் குறிப்பிடுகின்றன. அதாவது கணருத்திரர்களைப் பற்றியவைகள் என்பதாம், ஒருமைச் சொற்களோ, ஒருவனாகிய உருத்திர பரமேசுரனையே யறிவுறுத்துகின்றன வென்பதுணர்க, இவ்வாறே பிறவிடத்துங் காணப்படுதலினென்க.

இதில், நம: என்பது முதலிய ஒன்பதும், இடையிலுள்ள எசுருக்குப் பொதுவானவைகள். முதலாவது ஒரு எசுராம். முடிவிலுள்ளன நான்கு எசுர்க்கள். ஐந்தாவது மூன்று சாமங்கட்கும் பொதுவாம்.

ஈண்டு உத்தரீயமுடையார் என்பதற்கு, பிராணிகளைப் பரிபாலிப்பதன் பொருட்டு எழுந்து நிற்கின்ற திருமேனியையுடையவர் என்பர் சிலர்; ஆயினும் 'நம: உஷ்ணீஷிணெ' "உத்தரீயமுடையோனுக்கு நமஸ்காரம்" எனப் பிற சுருதியுங் கூறுதலின் இதுவே ஈண்டைக்கியை புடையதாமென்பதுணர்க.

நாணேற்றிய தநுவைத் தாங்கினவர்கட்கும் வணக்கம், என்பது, பிநாகபாணிகளென்பதாம்.

அங்ஙனமே உருத்திராத்தியாயமும்,

"நம இஷுமத்ப்யோ தந்வாயிப்யஶ்ச"

"பாணத்தையுடையவர்கட்கும் தநுவையுடையவர்கட்கும் நமஸ்காரம்" என்று கூறுகின்றது.

"பூணூல் உடையவர்கட்கும் வணக்கம்" என்பது, உருத்திர பரமேசானுடைய கணங்கள் பலவகைப்பட்டவர்களாதலின் என்க.

தநுவில் பாணத்தைத் தொடுப்பவர்கட்கும், குறிப்பில் பாணத்தை விடுகின்றவர்கட்கும் வணக்கம் என்பது முதலியவைகளால், உருத்திர கணங்கள் போரிலும், படைகளிலும் மிக வல்லுநர்களென்பதும், யாண்டும் வெற்றியையே யுடையவர்களென்பதும் அறிவுறுத்தினமை காண்க.

"நன்கு கொல்லுமாறு ஆயுதங்களை ஏவுகின்றவர்களுக்கும், நன்கு கொல்லுகின்றவர்களுக்கும் வணக்கம் என்பது,

இதனுல் பிரமத கண உருத்திரர்கள் மிக வல்லவர்களென்பதும், அவர்களுடைய ஆயுதங்களும், மிக வன்மையுடையன என்பதும் அறிவுறுத்தப் படுகின்றது.

பவக்கடலினின்று கரை யேறுகின்றவர்கட்கும் வணக்கம், உயிர்களைக் கரையேற்றுகின்றவர்கட்கும் வணக்கம், என்பது, இவ்வாற்றுல் துஷ்டர்களை நிக்கிரகிக்கின்ற உருத்திர கணங்கட்கு வணக்கங் கூறப்பட்டவாறும்.

வழிபடத்தக்கவர்களான உருத்திர கணங்கட்கு வணக்கம், பரமேசுரனை வழிபடுகின்றவர்களான உருத்திர கணங்கட்கும் வணக்கம் என்பது,

தமதான்மாவின்கண் நிலையை யுடையவர்கட்கும் வணக்கம், மற்றும், தமது ஆன்மநிலை தவறுங்கால் பரமேசுரனுக்கு அருகிலிருந்து கொண்டிருப் பவர்கட்கும் வணக்கம் என்பதாம். அதாவது பரமேசுரனையே உள்ளத் திருத்துவான் மேற்கொண்டவர்கட்கும் நமஸ்காரம் என்பது பொருள். ஈண்டு இதுவே பாடியத்திற்கும் இயைந்த பொருளாமென்பதும், ஏனையவைகள் அல்லாதவைகளா மென்பது முணர்க.

நியமிப்பவனுக்கும், மற்றும், நியமஞ் செய்கின்ற தேவர்களையும் நிய மஞ் செய்கின்றவனுக்கும் வணக்கம், என்பது,

மேற்கூறியவாற்றால் உருத்திர கணங்களை வணங்கிக்கொண்டு, நேரே உருத்திர பரமேசுரன் இரண்டு வாக்கியங்களால் வணங்கப்படுகின்றான் என்பதாம்.

தாபர சங்கமப் பொருள்களைச் செலுத்துவோன் எனல் ஈண்டைக்கி யையாமை காண்க.

அங்ஙனமே துறவறத்தானாகவும், இல்லறத்தானாகவும் இருக்கின்ற வனுக்கும் வணக்கம் என்பதும், ஈண்டுப் பொருந்தாததாமென்க.

நன்னெறியையும், தீநெறியையும் உண்டாக்கினவனுக்கும் வணக்கம், என்பது,

ஈண்டு, உருத்திர பரமேசுரனே எல்லா வித்தைகட்குங் காரணனாத லின், அவனே முத்திக்குச் சாதனமாகிய வைதிக மார்க்கங்களையும், முத்தி நெறியலாத புன்னெறிகளையும் அருளியுள்ளான். இதுவும் மக்களின் நல் வினை தீவினைகளைத் தழுவி, முறையாய் பன்னுளில் முத்திநெறியிற் கூட்டு விக்குமென்பது கருதி பரமேசுரனுடைய கருணைச் செயலேயாம் என்ப துணர்க.

விருத்தியுரை முற்றும்.

பத்தாவது மந்திரம்

முற்றிற்று.

பதிஞோராவது கீத மந்திரம்.

१ २ १ २ १ २ १ २ १
अधिप । ताइ । मित्रप । ताइ । क्षत्रप । ताइ । स्वः पताइ । धन-
२ - - १ २ र र२ १र २ र र१र २र र१र २
पता२इ । ना२माः । नमोन्नाय नमोन्नपतय एकाक्षाय चावपन्नादायच
११र१ २ १ २र १२र १ २ १र १२१ २र २१ १ २
नमोनमः । रुद्रायतीरसदे नमः स्थिराय स्थिरधन्वने नमः प्रतिपदायच पट-
१ र२ १२१ २ र १ र२ १ २र र१र २ र र१र १२
रिणेच नमस्त्रियंबकायच । कपर्दिनेच नम आश्रायेभ्यश्च प्रत्याश्रायेभ्यश्च
१ २ १र २ १र २ १ २१र२ ११र १२ १र २ १ २र
नमः कृव्येभ्यश्च बिरिंफेभ्यश्च नमः संवृतेच विवृतेच । अवज्यामिव धन्वनो
१र २ १ २र १ र२ १ २ १ २ १ २ १
विते मन्युन्नयामसि मृडतान्न इह अस्मभ्यम । इडा२३भा । य इदं विश्वं
र २ १ २ ५
भूतं । युयो ३ । आउ । वा २३ । ना२३४माः ॥

மந்திரத்தின் பதவுரை.

नमोऽन्नाय	𑌨𑌮𑍋𑌽𑌨𑍍𑌨𑌾𑌯	நிலனாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.
नमोऽन्नपतयेच	𑌨𑌮𑍋𑌽𑌨𑍍𑌨𑌪𑌤𑌯𑍇 𑌚	நிலத்திற்கு இறைவனாகிய பரமேசுரனுக்கும் வணக்கம்.
एकाक्षायच नमः	𑌏𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌯 𑌚 𑌨𑌮𑌃	ஒன்றாய் நிறைந்துள்ள பரமேசுரனுக்கு, அல்லது ஒன்றாகிய மனமுடைய பரமேசுரனுக்கு, அல்லது ஒன்றாகிய நெற்றிக் கண்ணை யுடைய பரமேசுரனுக்கு வணக்கம்.
अवपन्नादायच नमः	𑌅𑌵𑌪𑌨𑍍𑌨𑌾𑌦𑌾𑌯 𑌚 𑌨𑌮𑌃	உதிர் சருகை யுண்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
नमो रुद्राय च	𑌨𑌮𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌚	அஞ்ஞானத்தை நீக்குகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
तीरसदे नमः	𑌤𑍀𑌰𑌸𑌦𑍇 𑌨𑌮𑌃	பவக்கடலின் கரை யென்னும் நித்திய முக்தியில் விளங்குகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
नमस्थिराय च	𑌨𑌮𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌯 𑌚	திடமாகிய பரமேசுரனுக்கு வணக்கம்.

स्थिरधन्वने	ஸ்திரதந்வநே	வன்மை மலிந்த தநுவையுடைய பரமேசுரனுக்கு வணக்கம்.
नमः प्रतिपदाय	நம: ப்ரதிபதாய	உயிர்களுக்கு அருகிலிருக்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
पटरिणे नमः	பட்ரிணே நம:	உயிர்க் கூட்டங்களுள் நிறைந் திருக்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
त्रियंबकायच नमः	த்ரியம்பகாயச நம:	முக்கண்ணனுக்கு வணக்கம்,
कपर्दिने नमः	கபர்திநே நம:	தெளிந்த கங்கைப் பெருக்கைச் சடையிற்றாங்கிய பரமேசுரனுக்கு வணக்கம்.
नमः कृवेभ्यश्च	நம: க்ருவேப்யஶ்ச	பெரும் வன்மையை யுடைய பிரமத கணங்கட்கும் வணக்கம்.
विरिंफेभ्यश्च	விரிம்பேப்யஶ்ச	கொடிய வுயிர்களைக் கொல்லுகின்றவர்களுக்கும் வணக்கம்.
नमः संवृतेच	நம: ஸம்வ்ருதேச	மாயா சத்தியால் தனது திருமேனியை மறைத்துக்கொள்ளுகின்ற பரமேசுரனுக்கு வணக்கம்.
विवृतेच	விவ்ருதேச	அருட் சத்தியால் தனது திருமேனியை வெளிப்படுத்தியருள்கின்ற பரமேசுரனுக்கு வணக்கம்

விருத்தியுரை.

"நிலனாகியவனுக்கும், நிலத்திற்கு இறைவனாகியவனுக்கும் வணக்கம்" என்பது,

ஈண்டு, அன்னமென்பது பூமியாம். அன்னத்திற்குப் பதி என்பது பூமிக்கு இறைவனென்பதாம். என்னை? அன்னம் என்னுஞ்சொல் ஈண்டுப் பூமியை யுணர்த்தி நிற்றலினென்க.

இதுபற்றியே சுருதியும்,

"அந்நமஸ்ருஜத"

"அன்னத்தை யுண்டாக்கி யருளினன்" என்றற் றொடக்கத்து வாக்கியத்தாலுணர்த்துகின்றது.

அங்ஙனமே,

'பத்யிவிஷயிகார' என்றற் றொடக்கத்துப் பிரம சூத்திரமுங் கூறுகின்றது என்பது காண்க.

அல்லது, அன்ன முதலிய எல்லாப் போக்கியப் பொருள்களுமாகிய பரமேசுரனுக்கு வணக்கம். அவற்றை யுண்கின்ற போக்தாவாகியவனுக்கும் வணக்கம் என்பதும் ஈண்டுப் பொருந்துமாறுணர்க.

ஒன்றாய் நிறைந்தவனுக்கு வணக்கம், என்பது,

வியாபகனும் ஒருவனுமுள்ள உருத்திர பரமேசுரனுக்கு வணக்கம் என்பது பொருள்.

பரமேசுரன் ஒருவனே என்பதும், அவன் யாண்டும் நிறைந்துள்ளவன் என்பதும் எல்லா நூல்களிலும் மிக வெளிப்படையாமாதலினென்க.

அற்றாகலினன்றே, சுருதியும்,

"ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே ।
ஸர்வ வ்யாபீ ஸ பகவாந் தஸ்மாத் ஸர்வகத: ஶிவ: "

"உருத்திர பரமேசுரன் ஒருவனே இருவரலர். அவன் யாண்டும் நிறைந்தவன், பகவான் ஆதலின், சிவன் எல்லாவற்றுள்ளுங் கலந்து நிற்கின்றான்" என்று கூறுகின்றது.

கீத பாடியத்திலோ, வியாபகமாகிய திருவுளத்தை யுடையவன் என்பது பொருள். அதாவது நிறைந்ததாகிய ஒரு தெய்வீக மனதை யுடையவன் பரமேசுரன் என்றவாறாம்.

இதுபற்றியே, சுருதியும்,

"மநோऽஸ்ய தைவம் சக்ஷு:"

"இப் பரமேசுரனுடைய மனம் தெய்வீக திருஷ்டியாம்" என்று கூறுகின்றது.

அற்றேல், நம்மனோர்களைப்போன்று புலன்களை வேண்டானோவெனின்?

புலன்களை வேண்டாமலே அனைத்தையு முணர்கின்ற அருள் வலியானாதலின் புலன்களை வேண்டாமலே அனைத்தையு முணர்வன் என்க.

இதைத் தழுவியே சுருதியும்,

"பஶ்யத்யசக்ஷு: ஸ ஶ்ருணோத்யகர்ண:"

"கண்ணின்றிப் பார்க்கின்றான், காதின்றிக் கேட்கின்றான்" என்றற்றொடக்கத்து வாக்கியங்களால் இப் பொருளையே வெளியாய்த் தெரிவிக்கின்றது.

அல்லது, ஒன்றாகிய நெற்றிக்கண்ணை யுடையான் என்பதும் பொருந்து மென்றுணர்க.

'உதிர்ந்த சருகுகளை யுண்கின்ற பரமேசனுக்கு வணக்கம்' என்பது, தவமும், பரமேசுரனுடைய பத்துக் குணங்களில் இதுவும் ஒன்று மாதலி னென்க.

இது பற்றியே, சுருதியிலும்,

"ஜ்ஞாநம் விராகமைஶ்வர்யம் தபஸ்ஸத்யம் க்ஷமாத்ருதி:।
ஸ்ரஷ்ட்ருத்வமாத்மஸம்போதோ ஹ்யதிஷ்டாத்ருத்வமேவ ச"

"ஞானம், விராகம், ஐசுவரியம், தவம், சத்தியம், க்ஷமை, தைரியம், படைத்தல், ஆன்மஞானம், அதிட்டானத்தன்மை" என்பன, பரமேசுரனுடைய ஐசுவரிய குணங்கள் எனக் கூறப்பட்டிருக்கின்றன என்பது காண்க.

அங்ஙனமே வாயுசங்கிதையும்,

"அவ்யயாநி வைதாநி நித்யம் திஷ்டந்தி ஶங்கரே"

"கேடிலாத இக்குணங்கள் சங்கரனிடத்தில் என்றுமிருக்கின்றன" என்று கூறுகின்றது.

'அஞ்ஞானத்தைப் போக்குகின்றவனுக்கு வணக்கம்' என்பது, தனது ஆன்மானந்தத்தை மறைத்திருக்கின்ற அஞ்ஞானத்தைத் தனது சொரூப ஞானத்தாற் போக்கியருளி அவ்வானந்தத்தைக் கொடுக்கின்றவன் என்பதாம்.

அல்லது, ரௌதி=பேசல், தத்துவமசி, முதலிய மகாவாக்கியங்களை, த்ராவயதி=கொடுக்கின்றவன். அதாவது உபதேசிக்கின்றவன் உருத்திரன் என்பதுமாம்.

அல்லது, எப்போதும் அன்பர்களின் பவத்துன்பங்களைப் போக்குகின்றவன் என்றலுமமையும்.

ஈண்டு, உருத்திரனெனவன் மரண காலத்தில் தாரகப்பிரம மந்திரத்தை யருளிச் செய்து அன்பர்களை முத்தியடைவிக்கின்றானென்பதும் உணரப் பாலது.

இதுபற்றியே, சாபாலோபநிடதமும்,

"ப்ராணேஷூத்க்ராமத்ஸு ருத்ரஸ்தாரகம் ப்ரஹ்ம வ்யாசஷ்டே"

"பிராணன் நீங்குமிடத்து, உருத்திர பரமேசுரன் தாரக மந்திரத்தை உபதேசிக்கின்றான்" என்று கூறுகின்றது.

அற்றேலஃதாகுக ?

“𑌮𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍍 𑌮𑌾𑌯𑌿𑌨𑌂 𑌤𑍁 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍”

“மாயையைப் பிரகிருதியென்றுணர்க, மாயையை யுடையவனை (மாயாவியை) மகேசுரனென்றுணர்க” என்ற சுருதி வாக்கியத்தைத் தழுவி, உருத்திர பரமேசுரனே அஞ்ஞானத்தை யுடையவனாதலின், அவன் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை யளித்து இன்புறச் செய்வானெனல் முரணாகாதோவெனின் ? அற்றன்று, மூலப் பிரகிருதிக்கு இருவகைச் சத்திகளுள்ளன ; அவற்றுள், மறைக்கின்ற சத்தியை யுடைய பிரகிருதியே அஞ்ஞானமாம்; அதுவே மக்கட்கு உபாதி யெனப்படும். விட்சேபம், (உண்டாக்கும்) சத்தியையுடையதே மாயை யெனப்படும் ; அது ஈசுரனுக்கு உபாதியாம் ; என்றிவ்வாறு பிரித்துக்கொள்ளில் முரண் என்ப தெங்ஙனம் ?

‘அஞ்ஞானமாகிய கடலின் கரையின்கண் விளங்குகின்ற உனக்கு வணக்கம்’ என்பது,

உருத்திர பரமேசுரன் நித்திய முத்தனுவனெனப் பல சுருதிகளும் முழங்குகின்றன வாதலின் என்பதுணர்க.

அற்றாகலினன்றே, கைவல்யோபநிடதமும்,

“𑌉𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌂 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍”

“உமையுடன் கூடிய பரமேசுரனை” என்று தொடங்கி,

“𑌸𑌰𑍍𑌵 𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍”

‘அனைத்திற்குஞ் சாக்ஷியும், அஞ்ஞானத்தைக் கடந்து நிற்கின்றவனுமாகின்றான்’ என்று கூறி முடிக்கின்றது.

அல்லது, தமசு ஆறத்துவா மயமாகிய உலகனைத்திற்கும், பரம் = உன்மனைமுதலிய சகல உலகத்தையுங் கடந்த, சோம லோக மென்னும் பரமேசுரனுடைய வுலகத்தில் விளையாடுகின்றவன் என்பதுமாம்.

“𑌨𑌮𑌃 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌯 𑌸𑍍𑌥𑌿𑌰𑌧𑌨𑍍𑌵𑌨𑍇”

“வல்லவனும், வலிமிகுந்த தநுவையுடையவனுமாகிய பரமேசுரனுக்கு வணக்கம்” என்பது,

பகைவரை யடக்கும் முறையில் உறுதியுடையவனும், வலிமிகுந்த ஆயுதத்தை யுடையவனும் என்பது பொருள். பயமிலாதோன் என்பர் சிலர், அஃது இங்கு இயைபிலாததென்றுணரற்பாலது.

உண்மையிலோ, 'ஸ்திரம்' என்பதற்கு அசலம் என்பது பொருளாம். அதாவது கைலையங்கிரியின்கண் வாழ்கின்றவனும், மா மேருவை வில்லாகக் கொண்டவனுமாகிய பரமேசுரன் என்பது கருத்தாம். இதனால், இராவணன் கைலையங்கிரியை யெடுத்து அழிந்தானென்பதையும், திரிபுரர்கள் ஆண வத்தா லழிந்தார்களென்பதையும் ஈண்டு ஊகித்துக்கொள்க.

உயிர்களின் காலடியிலிருக்கின்றவனும், உயிர்க் கூட்டத்தில் இருக்கின்ற வனுமாகிய பரமேசுரனுக்கு வணக்கம், என்பது,

ஈண்டுக் காலடியில் என்பதால் யாண்டு நிறைந்திருக்கின்றவன் என் பதும், உயிர்களனைத்தையுஞ் செலுத்துகின்றவன் என்பதுங் கொள்ளக் கிடந்தமை காண்க.

மற்றும், 'பதம்' என்பதற்கு, அதிகாரம், பாதக்குறி, இடம், பாது காப்பு, என்பவைகள் பொருள் என்று அமரகோசமுங் கூறுகின்றது என் பதும், இதுவே பாடியத்திற் கூறியுள்ள பொருள் என்பதும் ஈண்டு உணரற் பாலது.

அல்லது, 'பதம்' என்பது சொல்லாமாதலின், எல்லாச் சொற்கும் பொருளாயிருக்கின்றவன் பரமேசுரன் எனினுமமையும்,

மூக்கண்ணனுக்கு வணக்கம் என்பது,

ஈண்டு, அம்பகம்=கண், என்று கூறுகின்றது ஹலாயுதம் என்னும் வடமொழிக் கோசம், ஆதலின், சோமன், சூரியன், அக்கினி என்னும் மூன்று கண்களை யுடையவன் பரமேசுரனே என்பதாம்.

இதுபற்றியே மாபாரதமும்,

"ஸூர்ய ஶஶாங்கவஹ்நி நேத்ர:"

"சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று கண்களையுடையவன்" எனக் கூறுகின்றது.

இதுபற்றியன்றோ, ஒருகால் அம்பிகை பரமேசுரனது கண்களைத் திருக் கரத்தால் மூடிக்கொள்ள, மூன்றுலகங்களும் மறைபட்டன என்பதும் ஒரு உண்மைச் சரிதமாயிற்றென்க.

அல்லது, அம்ப=என்பது வேதமாம். ஆதலின், வேதங் கூறிய அகார, உகார, மகாரங்களாற் கூறப்பட்டவன். அல்லது மூன்று வேதங் களாற் கூறப்பட்டவன் என்பதும் அமையுமென்றுணர்க.

அல்லது, பூ, புவ: சுவ:, (மண், நீர், வான்) என்னும் மூன்றாலும் ஆரா திக்கத்தக்கவன் என்பது மொன்று.

அற்றாகலினன்றே, துரோண பருவமும்,

"ஊ௱ளாவ: வ௺யிவீ ௭ெவ த்ர்யம்பகஸ்ய தத்ஸ்ர்த௯"

"வான், நீர், மண் என்பவைகளைக்கொண்டு ஆராதிக்கப்படுந் தன்மையால் திரியம்பகன் எனப் பெறுகின்றான்" என்று கூறுகின்றது.

மற்றும், ஈண்டு, திரியம்பகன் என்பதால், பரமேசுரனிடத்திலிருந்துண்டாகிய மும்மூர்த்திகளின் மந்திரத்தை யுட்கொண்ட திரியம்பக மந்திரமென்னும், அபமிருத்து நீங்குதற்குக் காரணமாகிய மந்திரசெப ஆராதனையும், சாதுர்மாசிய ஆராதனை முதலியவைகளும் குறிப்பிக்கப்பட்டன என்பதாம்.

இது கொண்டே, அ ... அஂ ...

"ஊஸ்ரஜஜூக்ஷிணாஜஂஶாக ... ஶிழ।

வ௺ஷ ஜெயா௫ஹெபா௩௯"

"பரமேசுரன், இடக்கரத்திலிருந்து பிரமனையும், வலக்கரத்திலிருந்து விஷ்ணுவையும், பின்புறத்திலிருந்து மகேசுரனையும் படைத்தனன்" என்று கூறுகின்றது.

தெளிந்த கங்கையைத் தரித்தவனுக்கு வணக்கம் என்பது.

ஈண்டு, (கபர்த்தி) அதாவது க=நீர், பர்= பெருக்கு, நீர்ப்பெருக்கைத் தரித்தவன் எனவே கங்கையின் பெருக்கைத் தாங்கியருளினவன் பரமேசுரன் என்று, அட்டோத்தர சதநாம உரையிற் கூறியுள்ளதும் கவனிக்கற்பாலதாம்.

இதுபற்றியே, இராமாயணமும்,

"வவாத ஜாஹ்நவீ ஸாணா௱ வாணெ௱ ௱ாஉ௺ஸ் ௨௵ஊ௨ஙி"

"புண்ணிய கங்காதேவியானவள் புண்ணியவடிவ உருத்திர பரமேசுரனுடைய சிரசின்கண் விழுந்தனள்" என்று கூறுகின்றது.

அல்லது, கங்கையைத் தாங்கிய சடாமுடியினன் என்பதுமாம்.

அல்லது, ஏனைய தேவர்களால் தாங்க முடியாத கங்கையின் வேகத்தை தனது சடையின் கண்ணே மிக எளிதாய்த் தாங்கிக் கொண்டவன், அதாவது பெரும் பிரவாஹத்தை ஒரு தூளியெனக் கொண்டருளியவன் என்பதுமாம்.

அது பற்றியே, பாரதமும்,

" ந ஶக்தா த்ரிஷு லோகேஷு கஶ்சித்தாரயிதும் ந்ருப ।
ஸம்ருத்தே விபுதஶ்ரேஷ்டாந் நீலகண்டாந் மஹேஶ்வராத் "

" வேந்த ! தேவர்களுட் சிறந்த நீலகண்டனாகிய மகேசுரனைத் தவிர்த்து மூன்றுலகத்துள்ளும் ஏனைய தேவர்களால் தாங்கமுடியாது என்று கங்கா தேவி கூறுகின்றாள் " என்று கூறுகின்றது.

ஈண்டு, பரமேசுரனுடைய சிரசிற் படுதலானே கங்கை மிகப் புநிதமாயிற்றென்றும், அத்தகைய கங்கைநீர் உலகைப் புநிதப்படுத்துவதென்பதும் கொள்ளக்கிடந்த பொருளாம்.

இப்பொருளையே கூர்ம புராணமும்,

" ஸைவம் ஸ [illegible] ஷாணாம் ஸக ஶோதநீ "

" இத்தகைய கலி [illegible] ருதலையாப் போக்குவது " என்றற் றொடக்கத்துச் சுலோகங்களாற் கூறுகின்றது.

இதனாலன்றோ, சிவ தருமநூலும்,

" அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாம் கதோபி வா ।
யஸ்ஸ்மரேத் ஈஶாநம் ஸ பாஹ்யாப்யந்தரஶ்ஶுசி: "

" எந்த அவத்தையுடனிருந்தேனும், புநிதனாயிருந்தேனும், புநிதமற்றவனாயிருந்தேனும் எவன் பரமேசுர தேவனை நினைக்கின்றானோ, அவன் உள்ளும் புறம்பும் புநிதனாகின்றான் " என்று கூறுகின்றது.

" பரசிவனை வழிபடுவோர்க்கும் பரமேசுரனால் அநுக்கிரகிக்கப் பெறுவோர்க்கும் வணக்கம் " என்பது.

இஃது உருத்திர கணங்களைப் பற்றியதாம். பிரமத கணங்கள் எவ்வாறு வழிபடுகின்றார்களோ, அவ்வாறே பரமேசுரனும் அவர்களை பற்றிக் கொண்டருளலின் என்க.

पिब	பிப³	(போய் அச் சோமத்தை) அருந்துவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—5. இரிமீட ரிஷி.

இந்திரனே! நினக்காக இச் சோமரசம், வேதிகையிற் பரப்பியிருக்கின்ற தருப்பையின் மீது ஆடையின் நுனியால் சோதிக்கப்பட்டுள்ளது. அதாவது இடித்துப் பிழிதன் முதலிய சமற்காரங்களால் சுத்தம் பண்ணப் பட்டதென்பது பொருள். இப்போது இத் தகைய சோமத்தின் பொருட்டு வருவாயாக. வந்து யாண்டு ரசவடிவ சோமம் ஓமம் பண்ணப்படுகின்றதோ, ஆண்டு விரைவிற் செல்வாயாக. (சென்ற) பின்னர் அச்சோமத்தை அருந்துவாயாக என்பதாம். (5)

மந்திரம் 6.

३ २ ३१२ ३१ २ ३१२
160. सुरूपकृत्नुमूतये सुदुघामिव गोदुहे ।
३ २ ३ १ २
जुहूमसि द्यवि द्यवि ॥ ६ ॥

இருக்கு 9-4-1

ஸுரூபக்ருத்னுமூதயே ஸுது³கா⁴மிவ கோ³து³ஹே ।
ஜுஹூமஸி த்³யவி த்³யவி ॥

அந்வயம்.

सुरूपकृत्नुं, ऊतये, गोदुहे, सुदुघां इव, द्यवि द्यवि, जुहूमसि ॥

பதவுரை.

सुरूपकृत्नुं	ஸுரூபக்ருத்நும்	நற் கருமத்திற்குத் தலைவனாகிய இந்திரனை
ऊतये	ஊதயே	தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கு,
गोदुहे	கோதுஹே	பால் கறத்தற் பொருட்டு
सुदुघां इव	ஸுதுகாம் இவ	அழகிய பாற்பசுவை யழைப்பது போல
द्यवि द्यवि	த்யவி த்யவி	ஒவ்வொரு நாளும்
जुहूमसि	ஜுஹூமஸி	ஆவாகனம் பண்ணுகின்றோம். (அழைக்கின்றோம்.)

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—6. மதுச்சந்த ரிஷி.

நற்கருமத்திற்குத் தலைவனாகிய இந்திரனை, எங்களைக் காப்பாற்றும் பொருட்டு நாடோறும் அழைக்கின்றோம். அழைப்பதிலுவமை :—பால் கறப்பதற்கு நற்பசுவை அழைப்பது போன்றென்றல். அதாவது நன்கு பால் கறக்கும் பசுவை உலகில் பால் கறப்போன் பால் கறப்பதற்கு வேண்டிக் கூப்பிடுவது போன்று என்பதாம். 'த்யவி த்யவி' என்றது பன்னிரு தினத்தின் பெயர் எனக் கூறுகின்றது நிருக்தம். ஆதலின் நாடோறும் என்றது பன்னிரு பகலெனக் கொள்க. (6)

மந்திரம் 7.

३ १ २ ३ २ ३१ २ ३१२
161. अभि त्वा वृषभा सुते सुतꣳ सृजामि पीतये ।
३ १ २ ३ १२
तृम्पा व्यश्नुही मदम् ॥ ७ ॥

இருக்கு 8-45-22.

அபி த்வா வ்ருஷபா ஸுதே ஸுதம் ஸ்ருஜாமி பீதயே ।
த்ரும்பா வ்யஶ்நுஹீ மதம் ॥

அந்வயம்.

हे वृषभ !, त्वा, सुते, सुतं, पीतये, अभिसृजामि, तृम्पा, मदं, व्यश्नुही ॥

பதவுரை.

हे वृषभ!	ஹெ வ்ரஷஹ !	வேட்கையைப் பெய்யும் இந்திர !
त्वा	க்வா	உன்னைக் குறித்து
सुते	ஸுதெ	சோமரசம் பிழிந்த காலத்து
सुतं	ஸுதம்	பிழிந்த அச் சோமரசத்தை
पीतये	வீதயெ	அருந்துவதற்கு
अभिसृजामि	அஹிஸ்ரஜாஹி	(நினக்கு) அர்ப்பிக்கின்றேன்.
तृम्पा	த்ரஷ்வா	திருப்தியைச் செய்வதும்
मदं	உஜம்	களிப்பைக் கொடுப்பதுமாகிய சோமரசத்தை
व्यश्नुही	வ்யூஸுஹீ	நன்கு ஏற்றுக்கொள்வாயாக.

சாயணபாடியம்.

கண்டம்—5. இருக்கு—7. திரிசோக ரிஷி.

விரும்பியதை மழையெனப் பெய்வோனாகிய இந்திரனே! உனக்குச் சோமரசம் பிழிந்தெடுத்த விடத்து, பிழிந்த அச் சோமரசத்தை யருந்துவதற்கு அர்ப்பணஞ் செய்கின்றேன். திருப்தியைத் தருவதும், களிப்பையுண்டாக்குவதுமாகிய அச் சோமரசத்தை இனிது பெற்றுக்கொள்வாயாக. (7)

மந்திரம் 8.

१ २   ३ १   २२३१२   ३२

162. य इन्द्र चमसेष्वा सोमश्चमूषु ते सुतः ।

१ २२३ १ २

पिबेदस्य त्वमीशिषे ॥ ८ ॥

இருக்கு 8-82-7.

ய இந்த்ர சமஸெஷ்வா ஸொமஶ்சமூஷு தெ ஸுதஃ ।

பிவெதஸ்ய க்வமீஶிஷெ ॥

அந்வயம்.

हे इन्द्र !, ते, सुतः, यः, सोमः, चमसेषु, चमूषु, आ, अस्य, त्वं, पिब इत्, ईशिषे ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹெ ஊ்ரு!	இந்திரனே!
ते	தெ	நின் பொருட்டு
सुतः	ஸுதஃ	பிழியப்பட்ட
यः सोमः	யஃ ஸொமஃ	எச் சோமரசம்
चमसेषु	அமஸெஷு	சமசு, என்னும்பாத்திரங்களிலும்
चमूषु	அமூஷு	கிரகம் என்னும் பாத்திரங்களிலும்
आ	ஆ	நிறைக்கப்பட்டிருக்கின்றதோ,
अस्य	அஸ்ய	அச் சோமரசத்தை
त्वं	த்வம்	நீ
पिब इत्	பிப இத்	அவசியம் அருந்துவாயாக, (இந்திர! நீ)
ईशिषे	ஈஶிஷெ	ஈசனுயிருக்கின்றாய், (ஆதலின்).

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—8. குசீத ரிஷி.

இந்திர! உன்பொருட்டுப் பிழியப்பட்ட சோமரசம், சமசு, என்னும் பாத்திரங்களிலும், அருந்தற்குரிய கிரகம், என்னும் பாத்திரங்களிலும், நிரம்பியிருக்கின்றது. இதனுடைய அச் சோமரசத்தை ஒரு தலையாகக் குடிப்பாயாக. எவ்வாறு அஃது யான் குடித்தற்குரியதோவெனின்? ஆண்டுக் கூறப்படுகின்றது :—இந்திரனே! நீ உண்மையில் அதற்கு ஈசனுயிருக்கின்றாய் ஆதலின். அருந்துவயாக என முடித்துக்கொள்க. (8)

குறிப்பு.—பிழிந்தெடுக்கும் பல்லோர்களால் அநேக அகப்பைகளில் நிறைய வைத்திருக்கின்றது அதை அருந்துவாயாக என்பது பிறர் கொள்கை.

மந்திரம் 9.

१ २ ३ १ २ ३ १ २

163. योगे योगे तवस्तरं वाजे वाजे हवामहे ।

१ २ ३ १ २ ३ १ २

सखाय इन्द्रमूतये ॥ ९ ॥

இருக்கு

யொமெ யொமெ தவஸ்தரம் வாஜெ வாஜெ ஹவா குக.

ஸவாய இந்ரமூதயெ ॥

அந்வயம்.

योगे योगे, वाजे वाजे, तवस्तरं, इन्द्रं, ऊतये, सखायः, हवामहे ॥

பதவுரை.

योगे योगे	யோகே யோகே	ஒவ்வொரு கருமத் தொடக்கத்தி லும்
वाजे वाजे	வாஜே வாஜே	இடையூறுகப் போர்விளைந்த விடத்து
तवस्तरं	தவஸ்தரம்	பேராற்றலுடைய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை,
ऊतये	ஊதயே	(எம்மை) காக்கும் பொருட்டு
सखायः	ஸகாய:	மித்திரர்களான நாங்கள்
हवामहे	ஹவாமஹே	அழைக்கின்றோம்.

சாயண பாஷ்யம்.

கண்டம்—5. இருக்கு—9. சுனச்சேப ரிஷி.

அவ்வக் கருமத்தின் றொடக்கத்தில் கருமத்தைக் கெடுக்கத்தக்க போருண்டாகிய விடத்து, ஆற்றல் மிக்குடைய இந்திரனை, மித்திரர்களைப் போல் அன்புடைய யாங்கள் எம்மைப் பாதுகாத்தற் பொருட்டு அழைக் கின்றோம். (9)

மந்திரம் 10.

२उ ३ १ २ ३१ २ ३ १ २२
164. आ त्वेता निषीदतेन्द्रमभिप्रगायत ।
१ २ ३ १ २
सखायः स्तोमवाहसः ॥ १० ॥

இருக்கு 1-5-1.

ஆத்வேதா நிஷீததேந்த்ரமபிப்ரகாயத ।
ஸகாய: ஸ்தோமவாஹஸ: ॥

அந்வயம்.

हृसः, हे सखायः! तु, आ इत, आ इत, निषीदत, इन्द्रं,
गायत ॥

பதவுரை.

स्तोमवाहस:	ஸ்தோமவாஹஸ:	ஸ்தோத்திரக் கொத்துகளை யடைவிக்கின்ற
(हे) सखाय: !	(ஹே) ஸகாய: !	வேட்போர்காள்! நீவிர்
तु	து.	மிக விரைவாய்
आ इत	ஆ இத	வருவீர்களாக,
आ इत	ஆ இத	வருவீர்களாக. (வந்து)
निषीदत	நிஷீதத	உட்காருங்கள். (உட்கார்ந்து)
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனைப்
अभिप्रगायत	அபிப்ரகாயத	பலவகையாய்த் தோத்திரம் புரிவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—10. மதுச்சந்த ரிஷி.

ஈண்டு 'து' என்றது விரைவுப் பொருள்கொண்ட அசைச் சொல், ஆ-து. ஆ-இத, என இரண்டு ஆகாரங்களால் மந்திரத்தில் இத:—வருவீர்களாக, என்பதை இரட்டித்துக்கொள்க. கொண்டு விடத்து நண்பர்களான வேட்போர்களே! (நீவிர்) விரைவாக இக்கருமத்தில் வருவீர்களாக, வருவீர்களாக எனப் பொருள்பட்டது. ஈண்டு அன்பின் பொருட்டு இரட்டித்தலாம். வந்து உட்காருவீர்களாக. மற்றும் இந்திரனை எல்லா வகையாலும் நன்கு துதிப்பீர்களாக. எத்தன்மையர் நீவிரெனின்? மும்முறையாகவும், ஐம்முறையாகவும், பத்துமுறையாகவும் சொல்லப்படுகின்ற தோத்திர மஞ்சரிகளை (ஸ்தோமங்களை) இக் கருமத்தில் அடைவிப்போர்களாவீர்கள்.

குறிப்பு—ஸ்தோமம்—துதிமஞ்சரி.

ஐந்தாவது கண்டம்

முற்றும்.

ஆறுவது கண்டம்.

பிரபாடகம்—2. அத்தியாயம்—2. கண்டம்—6.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३१ २२ ३१ २
165. इदं॑ ※ह्यन्वोजसा सुतं॑ राधानां पते ।
२ ३ २ १ २
पिबात्वा३स्य गिर्वणः ॥ १ ॥

இருக்கு 3-51-10.

இதம் ஹ்யந்வோஜஸா ஸுதம் ராதாநாம் பதே ।
பிபா த்வா(அ)ஸ்ய கிர்வண: ॥

அந்வயம்.

हे राधानां पते!, गिर्वणः, ओजसा, इदं, अनु, ओजसा, सुतं, अस्य, तु, पिब, हि ॥

பதவுரை.

हे राधानां पते!	ஹே ராதாநாம் பதே!	தனக்கட் கிறைவனே!
गिर्वण!	கிர்வண!	தோத்திரத்தாற் போற்றத்தக்க இந்திர!
ओजसा	ஓஜஸா	ஆற்றலோடு கூடிய நீ
इदं अनु	இதம் அநு	இம்முறையாய்
ओजसा	ஓஜஸா	வலியுடன் (கற்களாலிடித்து)
सुतम्	ஸுதம்	பிழிந்தெடுக்கப்பட்ட
	அஸ்ய	இச் சோமரசத்தை
	து	விரைவில்
	பிப ஹி	அருந்துவாயாக

※ औजसा, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—1. விசுவாமித்திர ரிஷி.

திரவியங்கட் கிறைவனே! துதியாற் போற்றத்தக்க இந்திர! வலியோடு கூடிய நீ இம்முறையால் ஆற்றலோடு கற்களாற் (இடித்துப்) பிழிந்தெடுக்கப்பட்ட இச் சோமரசத்தை விரைவி லருந்துவாயாக. (1)

மந்திரம் 2.

३ १ २२ ३१२ ३ १२ ३ १ २

166. महांश्च इन्द्रः परश्च *नो महित्वमस्तु वज्रिणे ।

१ २२ ३ १ २२

द्यौर्न प्रथिना शवः ॥ २ ॥

இருக்கு 3-51-10.

மஹாம் இந்த்³ர: பரஶ்ச நோ மஹித்வமஸ்து வஜ்ரிணே ।
த்³யௌர்ந ப்ரதி²நா ஶவ: ॥

அந்வயம்.

नः, इन्द्रः, महान्, परः, वज्रिणे, महित्वं, अस्तु, द्यौः न, शवः, प्रथिना ॥

பதவுரை.

नः	ந:	எமது
इन्द्रः	இந்த்³ர:	இவ், விந்திரன்
महान्	மஹாந்	தேகத்தாற் பெரியனாகவும்
परः	பர:	குணத்தால் மேம்பட்டவனாகவு (முள்ளான்)
वज्रिणे	வஜ்ரிணே	வச்சிரமேந்திய இந்திரனுக்கு
महित्वं	மஹித்வம்	(முற்கூறிய இருவகைப்) பெருந் தன்மைகளும்
अस्तु	அஸ்து	எப்போதும் இருக்குக, (மற்றும்)
द्यौः न	த்³யௌ: ந	வானுலகுபோன்று
शवः	ஶவ:	சேனைவடிவ ஆற்றலும்
प्रथिना	ப்ரதி²நா	மிகக் கீர்த்தியுள்ளதாகுக.

* नु, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—2. மதுச்சந்த ரிஷி.

இவ் விந்திரன் தேகத்தாற் பெரியன், குணங்களாலுஞ் சிறந்தவனுவன். அன்றியும், வச்சிரந் தாங்கிய இந்திரனுக்கு முற்கூறிய இருவகைப் பெருந் தன்மைகளும் எப்போதுமுண்டாகுக. ஆயினும், இபற்கையிலமைந்ததைையும் வாழ்த்துதல் அன்பினுலாம். இன்னும், விண்ணுலகுபோன்று இந்திரனுடைய சேனைவடிவ வலி தழைத்தோங்குக. ஈண்டுத் தழைத்தோங்குக என்பது எஞ்சி நின்றது. விண்ணுலகு எவ்வாறு விரிந்துள்ளதோ, அஃதொப்ப இவனுடைய சேனை விரிந்தோங்குக என்பது பொருள். மூலத்திய 'நு' விரைவு நாமங்களுட் கூறியிருப்பினும் அப் பொருள் ஈண்டு அமையாமையின் கூட்டுறவாகிய பொருளே ஈண்டுக் கொள்ளப்பட்டது. நகாரம், உலகவழக்கில் நிடேதப்பொருள், உவமைப் பொருள் என இருவகைப் பொருளை யுடைத்து. அவற்றுள் எப் பதத்தோடு அந்வயப்படுகின்றதோ, அப் பதத்தினின்றும் முற்கூறப்பட்ட நகாரம் நிடேதப்பொருளை யுடையதாம். பின்னர்க் கூறப்பட்ட நகாரம் உவமைப் பொருளையுடையதாம். யாஸ்க முனிவரும் 1, 2, 6-ல் இதற்கு இவ் வண்ணமே பொருள் கூறியுள்ளார். (இது பற்றியே) ஈங்கு உவமை வாசகமாகிய 'த்யௌ' 'த்யௌ' என்னுஞ் சொல்லின் பின்னர், 'த்யௌர்ந' என நகாரங் கூறப்பட்டிருத்தலின் நகாரத்திற்கு உவமைப் பொருள் கொள்ளக் கிடந்தமை காண்க. (2)

குறிப்பு.—ஈண்டுப் பாடியத்திற் குறிப்பிட்ட 'நு' என்னுஞ் சொல் வேறு பிரதிகளிலிருக்கலாம்.

மந்திரம் 3.

१ २र ३१ २ ३२ ३१ २र
167. आ तु न इन्द्र क्षुमन्तं चित्रं ग्राभꣳ संगृभाय ।
३ १ २र
महाहस्ती दक्षिणेन ॥ ३ ॥

இருக்கு 8-18-1.

ஆ து ந இந்த்ர க்ஷுமந்தம் சித்ரம் க்ராபம் ஸம்க்ருபாய ।
மஹாஹஸ்தீ தக்ஷிணேந ॥

அந்வயம்.

हे इन्द्र !, महाहस्ती, तु, नः, क्षुमन्तं, चित्रं, ग्राभं, दक्षिणेन, आसंगृभाय ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
महाहस्ती	மஹாஹஸ்தீ	பெருங் கைகளையுடைய (நீ)
तु	து	இப்போது
नः	நஃ	எங்கட்குக் கொடுத்தற்பொருட்டு,
क्षुमन्तं	க்ஷுமந்தம்	துதிக்கத்தக்கதும்
चित्रं	சித்ரம்	பலவகையானதும்
ग्राभं	க்ராபம்	{ கொள்ளத்தக்கதுமாகிய தனத்தை
दक्षिणेन	தக்ஷிணேந	வலக்கையால்
आसंगृभाय	ஆஸம்க்ருபாய	நேர்முகமாய் எடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—3. குசீதோ கண்ணுவ ரிஷி.

இந்திர ! மகத்தான கைகளையுடைய நீ எங்கட்குக் கொடுத்தற் பொருட்டு, போற்றத்தக்கதும், பலவகைப்பட்டதும், கொள்ளற்பாலதுமாகிய தனத்தை வலக்கையால் இப்போதே ஒருமுகப்பட்டு எடுப்பாயாக. (3)

குறிப்பு.—வலக்கையால் (சோம) பாத்திரத்தை யெடுத்துச் சோமரசத்தை அருந்துவாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 4.

३ १ २र ३ १ २ ३ १ २ ३ २

168. अभि प्र गोपतिं गिरेन्द्रमर्च यथा विदे ।

३ २ ३ २ ३ १ २

सूनुं सत्यस्य सत्पतिम् ॥ ४ ॥

இருக்கு 8-66-4.

அபி ப்ர கோபதிம் கிரேந்த்ரமர்ச யதா விதே ।

ஸூநும் ஸத்யஸ்ய ஸத்பதிம் ॥

அந்வயம்.

गोपतिं, सत्यस्य, सूनुं, सत्पतिं, इन्द्रं, गिरा, यथा विदे, अभि प्र अर्च ॥

பதவுரை.

गोपतिं	கொவதிம்	கோக்கட்குத் தலைவனும்
सत्यस्य	ஸத்யஸ்ய	வேள்வியினுடைய
सूनुं	ஸூநும்	புத்திரனும்
सत्पतिं	ஸத்பதிம்	எசமானர்களைப் பரிபாலிப்பவனுமாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை
गिरा	கிரா	துதியால்
यथा विदे	யதா விதெ	துதியையும், வேள்விக்கு வருதலையும் அவன் அறியுமாறு
अभि अर्च	அபி அர்ச	முற்றும் மிகப் பூசிப்பீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—4. பிரியமேத ரிஷி.

கோக்கட்கு இறைவனாகிய இந்திரனைத் தோத்திரத்தால் (நீவிர்) இனிது பூசிப்பீர்களாக. அவ் விந்திரன் எவ்வாற்றால் தனது தோத்திர முறையை அறிகின்றானோ, அல்லது எவ் வாற்றால் வேள்வியை யுத்தேசித்து செல்லற் பாலது, என வுணர்கின்றானோ, அவ்வாற்றால் பூசிப்பீர்களாக என முடித்துக் கொள்க. எவ் வண்ணமாகிய இந்திரனை யெனின்? வேள்வியினுடைய புத்திரனை. ஈண்டுப் புத்திரனென்றது, அதில் மிக விருப்புடைமையால் புத்திரனென உபசரிக்கப்பட்டது. மற்றும், எசமானர்களைப் பாதுகாப்போனை. பூசிப்பீர்களாக என மேலே சேர்த்துக்கொள்க. (4)

குறிப்பு.—எனது அறிவளவில் சோமரசத்தின் தலைவனாகிய இந்திரனை வாக்காற் போற்றுகின்றேன் என்று கூறுகின்றது ஆங்கிலம்.

மந்திரம் 5.

१ २ ३ १ २र ३ २ ३ १२३ १ २र

169. कया नश्चित्र आ भुव दूती सदावृधः सखा ।

२ ३ १ २ ३ २

कया शचिष्ठया वृता ॥ ५ ॥

இருக்கு 4-31-1.

கயா நஶ்சித்ர ஆ புவ தூதீ ஸதாவ்ருத: ஸகா ।

கயா ஶசிஷ்டயா வ்ருதா ॥

அந்வயம்.

सद्मावृधः, चित्रः, सखा, कया, ऊती नः आ भुवत्, शचिष्ठया, कया वृता ॥

பதவுரை.

सदावृधः	ஸதாவ்ருத:	எக்காலும் வளர்ந்து கொண்டிருப்பவனும்
चित्रः	சித்ர:	விசித்திர குணமுடையோனும்
सखा	ஸகா	நண்பனுமாகிய இந்திரன்
कया	கயா	யாதானுமோர்
ऊती	ஊதீ	திருப்தியைச் செய்கின்ற கருமத்தால்
नः	ந:	எங்கட்கு முன்
आ भुवत्	ஆ புவத்	தோன்றுவானாக.
शचिष्ठया	ஶசிஷ்டயா	அறிந்துசெய்த
कया वृता	கயா வ்ருதா	யாதானுமொரு அநுட்டானத்தால்
आ भुवत्	ஆ புவத்	நேரே வெளிப்படுவானாக.

சாயண பாடியம்

கண்டம்—6. இருக்கு—5. வாமதேவ ரிஷி.

என்றும் வளர்பவனும், பற்பல குணமுடையவனும், மித்திரனுமாகிய இந்திரன் யாதானுமோர் திருப்தியின் காரணத்தால் எங்களை முன்னிட்டுத் தோன்றுவானாக. மிக நன்குணர்ந்து அநுட்டிக்கப்பட்ட யாதேனுமொரு தற்காலத்திய கருமத்தாலும் முன் றோன்றுவானாக. (5)

குறிப்பு.—எங்களுடைய மித்திரனும் எப்போதும் வளர்ப்பவனும், அநேக குணங்களை யுடையவனுமாகிய இந்திரன் தற்காலத்திய வேள்விக்கருமத்தை நடத்திக்கொண்டு காப்பாற்றுதற் பொருட்டு எங்களிடத்தி லிருப்பானாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 6.

१ २　　३ २३ १ २　३ १ २
170. त्यमु वः सत्रासाहं विश्वासु गीर्ष्वायतम् ।
१ २　　३१
आच्या वयस्यूतये ॥ ६ ॥

இருக்கு 8-62-7.

த்யமு வ: ஸத்ராஸாஹம் விஶ்வாஸு கீர்ஷ்வாயதம் ॥
ஆச்யா வயஸ்யூதயே ॥

அந்வயம்.

हे स्तोतः!, सत्रासाहं, वः, विश्वासु, गीर्षु, आयतं, त्यं उ, ऊतये, आच्यावयसि ॥

பதவுரை.

हे स्तोतः!	ஹே ஸ்தோதஃ !	துதிப்போர்காள்! (நீவிர்)
सत्रासाहं	ஸத்ராஸாஹம்	பலவற்றைத் தாழ்மைப்படுத்துகின்ற
वः	வஃ	உங்களுடைய
विश्वासु	விஶ்வாஸு	எல்லாத்
गीर्षु	கீர்ஷு	தோத்திரங்களிலும்
आयतं	ஆயதம்	பரவியுள்ள
त्यं उ	த்யம் உ	அவ் விந்திரனையே
ऊतये	ஊதயே	எனது பாதுகாப்பின் பொருட்டு
आच्यावयसि	ஆச்யாவயஸி	நேர்முகமாக்கி அனுப்புவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—6. சுருதகக்ஷ ரிஷி.

வேள்வித்தலைவன் துதிப்போர்களை யழைத்து இனிது கூறுகின்றான்:— துதிப்போர்காள்! நீவிர் பலவற்றைத் தாழ்மைப்படுத்துவனவும், அல்லது சத்துருக்களைத் தனது வலியா லடைந்து வெற்றிகொள்வனவுமான உங்களுடைய எல்லாத் தோத்திரங்களிலும் வியாபித்திருக்கின்ற (யாண்டும் இந்திரனே, துதிக்கப்படுகின்றா னாதலின் அத் துதிகளில் இந்திரன் பரவியுள்ளான்) அவ் விந்திரனையே எனது பாதுகாப்பின் பொருட்டு உங்களுடைய தோத்திரங்களால் எனது வேள்வியை நேரே அடையச் செய்வீர்களாக. (6)

குறிப்பு.—எல்லோர்களாலுந் துதிக்கப்பட்டவனும், எக்காலும் வெற்றியுள்ளவனுமாகிய இந்திரனை, என தான்மாவே நீ உனது பாதுகாப்பின் பொருட்டு அடைவாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 7.

१२ ३ २ ३ १ २ ३ १ २र ३ १ २
171. सदसस्पति मद्भुतं प्रियमिन्द्रस्य काम्यम् ।
३ २ ३ १ २
सनिं मेधामयासिषम् ॥ ७ ॥

இருக்கு 1-18-6.

ஸத₃ஸஸ்பதி மத்₃பு₄தம் ப்ரியமிந்த்₃ரஸ்ய காம்யம் ।
ஸநிம் மேதா₄மயாஸிஷம் ॥

அந்வயம்.

मेधां, अद्भुतं, इन्द्रस्य प्रियं, काम्यं, सनिं, सदसस्पतिं, अयासिषम् ॥

பதவுரை.

मेधां	மேதாம்	கூரிய மதியை யடைதற் பொருட்டு
अद्भुतं	அத்புதம்	வியப்பைத் தருவதும்
इन्द्रस्य प्रियं	இந்த்ரஸ்ய ப்ரியம்	இந்திரனுக்குப் பிரியமானதும்
काम्यं	காம்யம்	விரும்பத்தக்கதும்
सनिं	ஸநிம்	தனத்தைக் கொடுப்பதுமாகிய
सदसस्पतिं	ஸதஸஸ்பதிம்	சதசற்பதி யென்னும் வேட்போரவைத்தலைமைத் தெய்வத்தை
अयासिषम्	அயாஸிஷம்	(யான்) அடைந்துள்ளேன்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—7. மேதாதிதி ரிஷி.

நுண்ணறிவைப் பெறுவதன்பொருட்டு யான் 'சதசற்பதி' என்னும் பெயருள்ள தேவதையை அடைந்தவனாயிருக்கின்றேன். எவ்விதமாகிய தேவதையை யெனின்? ஆச்சரியத்தைத் தரத்தக்கதும், சோம மருந்துவதிற் கூடவிருக்குந்தன்மையாற் பிரியமானதும், விரும்பத்தக்கதும், திரவியத்தை யளிப்பதுமாகிய இத்தன்மைய சதசற்பதி என்னுந் தேவதையை அடைந்துள்ளவனா யிருக்கின்றேன் என முடித்துக்கொள்க. (7)

ஈண்டு, सदसस्पतिं, என்பது வேட்போர் அவைத்தலைமைத் தெய்வத்தை.

குறிப்பு.—சபைத் தலைவனும் கீர்த்தியுடையவனும், விரும்பத்தக்கோனும் அழகுடையவனும் வேட்போனுக்கு அருகிலிருப்பவனுமாகிய இந்திரனைத் தனத்தின்பொருட்டு வேண்டுகின்றேன் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 8.

२ ३ १ २ ३ २ ३२उ ३क२र ३१२
172. ये ते पन्था अधो दिवो येभिर्व्यश्वमैरयः ।
३१ २ ३ १२
उत श्रोषन्तु नो भुवः ॥ ८ ॥

யே தே பந்தா அதோ திவோ யேபிர்வ்யஶ்வமைரய꞉ ।
உத ஶ்ரோஷந்து நோ புவ꞉ ॥

அந்வயம்.

हे इन्द्र !, दिवः, अधः, ये, पन्थाः, येभिः, विश्वं, ऐरयः, ते, उत, नः, भुवः, श्रोषन्तु ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
दिवः	𑌦𑌿𑌵𑌃	வானுலகிற்குக்
अधः	𑌅𑌧𑌃	கீழே
ये पन्थाः	𑌯𑍇 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃	எந்த மார்க்கங்க ளிருக்கின்றனவோ,
येभिः	𑌯𑍇𑌭𑌿𑌃	எம் மார்க்கங்களினல்
विश्वं	𑌵𑌿𑌶𑍍𑌵𑌂	உலகனைத்தையும்
ऐरयः	𑌐𑌰𑌯𑌃	அடைந்திருக்கின்றாயோ,
ते	𑌤𑍇	அம் மார்க்கங்கள் தலைவர்களாற் றுதிக்கத்தக்கனவாம்.
उत	𑌉𑌤	மற்றும்
नः	𑌨𑌃	எங்களுடைய
भुवः	𑌭𑍁𑌵𑌃	உறைவிடங்களைத்
श्रोषन्तु	𑌶𑍍𑌰𑍋𑌷𑌨𑍍𑌤𑍁	தலைவர்கள் கேட்பார்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—8. வாமதேவ ரிஷி.

(இந்திர !) வானுலகிற்குக் கீழாக எவ் வழிகளிருக்கின்றனவோ, எவ் வழிகளால் உலகனைத்தையும் அடைந்திருக்கின்றாயோ, அவ் வழிகள் எசமானர்களாற் றோத்திரம் பண்ணத்தக்கனவாம். ஈண்டுத் தோத்திரம் பண்ணத்தக்கன என்பது எஞ்சி நின்றது. மற்றும் நினது அநுக்கிரகத்தால் எசமானர்கள் எங்களுடைய நிவாசத்தானங்களைக் கேட்பார்களாக. (8)

குறிப்பு.—விரைவிலோடும் பரிபோல் சுவர்க்கத்தின் கீழ் எம் மார்க்கத்தில் நீ சென்றபோதிலும் பூமியில் எங்கள் துதிகள் நினது செவியிற்படத் தக்கனவாகுக என்பது ஆங்கிலம்.

ம ந் தி ர ம் 9.

३ १ २ ३ २ ३२३१ २
173. भद्रं भद्रं न आ भरेषमूर्जं शतक्रतो ।
१ २ ३ १ २
यदिन्द्र मृडयासि नः ॥ ९ ॥

இருக்கு 8-93-28.

஭த்ரம் ஭த்ரம் ந ஆ ஭ரேஷமூர்ஜம் ஶதக்ரதோ ।
யதிந்த்ர ம்ருடயாஸி ந: ॥

அந்வயம்.

हे शतक्रतो !, इन्द्र !, भद्रं, भद्रं, नः, आभर, इषम् ऊर्जं, नः, यत् ;
मृडयासि ॥

பதவுரை.

हे शतक्रतो !	ஹே ஶதக்ரதோ !	நூற்றுக்கணக்கான கருமங்களைச் செய்தோய் !
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
भद्रं भद्रं	஭த்ரம் ஭த்ரம்	மிக நலந்தருந் தனத்தை
नः	ந:	எங்கட்கு
आभर	ஆ஭ர	நிறையத் தருவாயாக.
इषम् ऊर्जं	இஷம் ஊர்ஜம்	வலிவு[illegible]ள அன்னத்தைத் தருவா[illegible]
नः	ந:	எங்களைச்
यद् मृडयासि	யத் ம்ருடயாஸி	சுகப்படுத்துவையேல் (தன முதலியவைகளைத் தருவாயாக).

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—9. சுருதகக்ஷ ரிஷி.

நூற்றுக் கணக்கான கருமத்தோய் ! அல்லது நூற்றுக் கணக்கான மெய்யுணர்வுள்ளோய் ! இந்திரனே ! மங்களமிக்குடைய அல்லது இன்ப முண்டாக்குகின்ற தனத்தை எங்கட்குக் கொடுப்பாயாக. அங்ஙனமே அன்ன ரசத்தை அல்லது வலிவுள்ள அன்னத்தைக் கொடுப்பாயாக. எங்களைச் சுகப்படுத்துவையேல், திரவிய முதலியவைகளைத் தருவாயாக என்பதாம்.

ஈண்டு, மிருட என்னும் வடமொழிப் பகுதிச் சொல், சுகமென்னும் பொருண்மேனின்றது. (9)

மந்திரம் 10.

२ ३ १ २ ३ २ ३१ २र ३ १२
174. अस्ति सोमो अयꣳ सुतः पिबन्त्यस्य मरुतः ।
३ २ ३ १ २ ३ १ २
उत स्वराजो अश्विना ॥ १० ॥

இருக்கு 8-94-4

𑌅𑌸𑍍𑌤𑌿 𑌸𑍋𑌮𑍋 𑌅𑌯𑌂 𑌸𑍁𑌤𑌃 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌮𑌰𑍁𑌤𑌃 ।
𑌉𑌤 𑌸𑍍𑌵𑌰𑌾𑌜𑍋 𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑌾 ॥

அங்வயம்.

अयं, सोमः, सुतः, अस्ति, अस्य, स्वराजः, मरुतः, पिबन्ति, उत, अश्विना ॥

பதவுரை.

अयं	𑌅𑌯𑌂	இந்தச்
सोमः	𑌸𑍋𑌮𑌃	சோமரசம்
सुतः	𑌸𑍁𑌤𑌃	பிழியப்பட்டு
अस्ति	𑌅𑌸𑍍𑌤𑌿	இருக்கின்றது.
अस्य	𑌅𑌸𑍍𑌯	இச் சோமரசத்தை
स्वराजः	𑌸𑍍𑌵𑌰𑌾	தன்னொளியால் விளங்குகின்ற
मरुतः	𑌮𑌰𑍁	மருத்துக்கள்
पिबन्ति	𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌿	காலையில் அருந்துகின்றார்கள்.
उत	𑌉𑌤	மற்றும்
अश्विना	𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑌾	அசுவினி குமாரர்களும் காலையோமத்தில் அருந்துகின்றார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—10. பிந்தர் ரிஷி.

முன்னிலிருக்கின்ற இச்சோமரசம் மருத்துக்களின் பொருட்டு எங்களால் பிழியப்பட்டிருக்கின்றது. இதை ஏற்றுக்கொண்டவிடத்து தனது பிரகாசத்தால் விளங்கப்பட்ட அதாவது பிறவற்றின் பிரகாசத்தால் விளங்கப்படாத என்பதாம். மருத்துக்கள் (வாயு தேவதைகள்) இச்சோமரசத்தை காலையில் அருந்துகின்றார்கள். இன்னும் அசுவினி குமாரர்களும் காலையிற் செய்யும் சவனத்தில் (கருமத்தில்) அருந்துகின்றார்கள் என்பதாம். (10)

ஆறாவது கண்டம்

முற்றும்.

ஏழாவது கண்டம்.

பிரபாடகம்—2. அத்தியாயம்—2. கண்டம்—7.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३१२ ३ २३१२ ३१ २र
175. ईङ्खयन्तीरपस्युव इन्द्रं जातमुपासते ।
३ १२ ३१२
*वन्वानासः सुवीर्य्यम् ॥ १ ॥

இருக்கு 10-153-1.

ஈங்க்ஷயந்தீரபஸ்யுவ இந்த்ரம் ஜாதமுபாஸதே ।
வந்வாநாஸ꞉ ஸுவீர்யம் ॥

அந்வயம்.

ईङ्खयन्तीः, अपस्युवः, जातं, (तं) इन्द्रं, उपासते, सुवीर्यं, वन्वानासः ॥

பதவுரை.

ईङ्खयन्तीः	ஈங்க்ஷயந்தீ꞉	துதிவாயிலாக இந்திரனை யடைந்தவர்களும்
अपस्युवः	அபஸ்யுவ꞉	தமது கருமத்தை விரும்பியவர்களுமான இந்திரனுடைய மாதாக்கள்
जातं	ஜாதம்	வெளித்தோன்றிய
(तं) इन्द्रं	(தம்) இந்த்ரம்	(அவ்) விந்திரனைப்
उपासते	உபாஸதே	போற்றுகின்றார்கள். (மற்றும்)
सुवीर्यं	ஸுவீர்யம்	மிக வீரமுள்ள தனத்தை
वन्वानासः	வந்வாநாஸ꞉	அவ் விந்திரனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றார்கள்.

---

* भेजानासः, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—1. இந்திரமாதாக்கள், தேவ சாமயர்கள், ரிஷிகள்.

துதி முதலியவைகளால் இந்திரனை யடைந்தவர்களும், தமது கருமத்தை விரும்பினவர்களுமான இந்திர மாதாக்கள், அதாவது இம் மந்திரத்தைக் கண்டவர்கள், வெளிப்பட்ட அவ் விந்திரனைக் குறித்துப் பணிசெய்கின்றார்கள். மற்றும் மிக வீரமுள்ள தனத்தை இந்திரனிடத்தினின்றும் பெற்றுக்கொள்ளுகின்றவர்களாகின்றார்கள். (1)

ஈண்டு இந்திர மாதாக்களென்பது இருடிகளை.

குறிப்பு.—*நமது துதிகள் இந்திரனிடஞ் சென்று, தங்கி, அடைந்து, இருந்து ஆற்றலைப்பெற இந்திரனை வேண்டுகின்றன என்பது ஆங்கிலம்.*

மந்திரம் 2.

१ २ ३ १ २र

176. *न कि देवा इनीमसि न क्या †योपयामसि ।

३ १२

मन्त्रश्रुत्यं चरामसि ॥ २ ॥

இருக்கு 10-134-1.

ந கி தெவா இநீமஸி ந க்யா யொபயாமஸி ।

மந்த்ரஶ்ருத்யம் சராமஸி ॥

அந்வயம்.

हे देवाः!, न कि इनीमसि, न कि योपयामसि, मन्त्रश्रुत्यं, चरामसि ॥

பதவுரை.

हे देवाः!	ஹெ தெவாஃ!	தேவர்களே!
न कि इनीमसि	ந கி இநீமஸி	(உங்கள் விஷயத்தில்) சிறிதுங் கெடுதல் செய்யோம்.
न कि योपयामसि	ந கி யொபயாமஸி	மாறுமுழுக்கத்தால் மோகிக்கவும் செய்யோம்.
मन्त्रश्रुत्यं	மந்த்ரஶ்ருத்யம்	உங்களுடைய வாக்கினின்றுங் கேட்கப்பட்ட கருமத்தை
चरामसि	சராமஸி	அனுட்டிக்கின்றோம்.

---

* 'न कि देंवा ' रि.नीमसि ' என்பன இருக்கு.

† पजोभिरपि कक्षेभिरत्राभिसंरभामहे என்பது இருக்கில் அதிக பாடம்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—2. கோதா ரிஷி.

இந்திரன் முதலிய தேவர்காள்! உங்கள் விஷயத்தில் சிறிதும் துன்பஞ் செய்யோம், ஒழுக்கமில்லாததாலும், அல்லது மாறுபட்ட அனுட்டானத்தாலும் மோகிக்கவுஞ் செய்யோம், மற்றென்னெனில்? வேதவிதி வாக்கியங்களால் கூறப்பட்ட உங்களைப்பற்றிய கருமங்களை அனுட்டிக்கின்றோம். (2)

ஈண்டு 'மாங்' என்னும் வடமொழிப் பகுதி, அகரமாய்க் குறு மகாரங் கெட்டு ஆகாரங்கூடி 'இநீமஸி' எனவாகி துன்பமென்னும் பொருளைத் தந்து நின்றது.

மந்திரம் 3.

३ १ २र ३१ २ ३ १ २

177. *दोषो आगाद् बृहद्गाय द्युमद्गामन्नाथर्वण ।

३ २ ३ १ २ ३ १२

स्तुहि देवꣳ सवितारम् ॥ ३ ॥

அதர்வணம் 6-1-1.

ஷொஷொ ஆமாக் ப்ருஹத்காய த்யுமத்காமந்நாதவ்ண ।

ஸ்துஹி தெவம் ஸவிதாரம் ॥

அந்வயம்.

हे बृहद्गाय!, द्युमद्गामन्, आथर्वण, दोषः, आगात्, सवितारं, देवं, स्तुहि ॥

பதவுரை.

हे बृहद्गाय!	ஹெ ப்ருஹத்காய!	பெருங் கீதம் பாடுவோய்!
द्युमद्गामन्!	த்யுமத்காமந்!	ஒளியுடன் நடப்போய்!
आथर्वण!	ஆதவ்ண!	அதர்வண ரிஷி சந்தானனே! (நீ)
दोषः	ஷொஷஃ	வேட்போர், எசமானன் என்னுமிவர்களுடைய பிழைகளால் யாதொரு தோஷம்
आगात्	ஆமாக்	வருகின்றதோ, (அதை) நீக்குதற் பொருட்டு
सवितारं देवं	ஸவிதாரம் தெவம்	பிரேரகம், என்னுந் தேவதையைத்
स्तुहि	ஸ்துஹி	துதிப்பாயாக.

---

* दोषो गाय बृहद्गाय द्युमद्धेहि आथर्वण देवं सवितारम्, என்பது அதர்வணம்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—3. *தத்தியக் ஆதர்வண ரிஷி.*

பிருகத் என்னுங் கீதம் பாடுவோய்! பிரகாசத்தோடு செல்வோய்! அதர்வண ரிஷியின் சந்தானனே! என, இந்த ரிஷி தனதான்மாவையே அழைக்கின்றார். வேட்போர், எசமானன், என்பவர்களின் பிழையால் யாதா கினுஞ் சிறிது தோடம் வருமாகில் அதைப் போக்க 'பிரேகம்' என்னும் தேவதையை நீ துதிப்பாயாக. அல்லது இருளை நாசம் பண்ணும் தா தேவதை, அல்லது இராக்கதர்களைத் தகிக்கச் செய்யுஞ் சவிதா வதை வந்திருக்கின்றது. ஆதலின் அதர்வண ரிஷியின் சந்தான! நீ பிரு , என்னுந் தோத்திரத்தைப் பாடுவாயாக. இத்தன்மைய பாடலைப் பாடும் னதான்மாவே! நீ விளக்கமுள்ள மற்றையத் துதியைப் பாடுவாயாக. எஞ்சியது மறித்தும் அன்பின் பொருட்டுக் கூறப்பட்டது என்பதாம். (3)

குறிப்பு.—வாமதேவ ரிஷி. இரவு நீங்குந் தருணத்தில் வந்துவிட்டேன். சவிதா தேவதையைப் பூசிப்பீர்களாக. சவிதா = உண்டாக்குகின்ற தேவதை என்பது ஆங்கிலம்.

மந்திரம் 4.

३ २ ३ १ २र ३क २र ३ २ ३ २
178. **एषो उषा अपूर्व्या व्युच्छति प्रिया दिवः ।**
३ २ २ ३ २
स्तुषे वामश्विना बृहत् ॥ ४ ॥

இருக்கு 1-46-1.

ஏஷோ உஷா அபூர்வ்யா வ்யுச்சதி ப்ரியா திவ꞉ ।
ஸ்துஷே வாமஶ்விநா ப்ருஹத் ॥

அங்வயம்.

प्रिया, अपूर्व्या, एषः, उषा, दिवः, व्युच्छति, अश्विनौ, वाम्, बृहत्, स्तुषे ॥

பதவுரை.

प्रिया	ப்ரியா	யாவர்கட்கும் பிரிய காரணமாகி யதும்
अपूर्व्या	அபூர்வ்யா	முற்போதிலாததும் (இச்சமயத்தி லுள்ளதும்)
एषः	ஏஷ꞉	எங்கட்குக் காணப்படுகின்றது மாகிய இந்த

उषा	உஷா	உஷா தேவதை
दिवः	தி³வ꞉	வானுலகிலிருந்து வந்து
व्युच्छति	வ்யுச்ச²தி	இருட்டைப் போக்குகின்றது. (பிரகாசிக்கின்றது).
हे अश्विनौ !	ஹே அஶ்விநௌ !	அசுவினி குமாரர்களே !
वाम्	வாம்	உங்களிருவரையும்
बृहत्	ப்³ருஹத்	மிகவுந்
स्तुषे	ஸ்துஷே	துதிக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—4. பிரஸ்கண்ணுவ ரிஷி.

எங்களால் காணப்பட்டதும், யாவர்கட்கும் பிரிய காரணமானதும், முந்திய நடு இரவு முதலிய காலங்களில் இராததும், அதாவது இப்போதிலுள்ளதுமாகிய உஷா தேவதை விண்ணுலகினின்று வந்து இருளைப் போக்குகின்றது. அசுவினி குமாரர்காள்! உங்க ளிருவரையும் உள்ளவாறு மிகத் துதிக்கின்றேன். (4)

மந்திரம் 5.

१ २　３ २ ३ १ २३ १　२र
179. इन्द्रो दधीचो अस्थभिर्वृत्राण्यप्रतिष्कुतः ।
३ १२　३ १२र
जघान नवतीर्नव ॥ ५ ॥

இருக்கு 1-84-13.

இந்த்³ரோ த³தீ⁴சோ அஸ்த²பி⁴ர்வ்ருத்ராண்யப்ரதிஷ்குத꞉ ।
ஜகா⁴ந நவதீர்நவ ॥

அந்வயம்.

अप्रतिष्कुतः, इन्द्रः, दधीचः, अस्थभिः, नव, नवतीः, वृत्राणि, जघान ॥

பதவுரை.

अप्रतिष्कुतः	அப்ரதிஷ்குத꞉	மாறுபட்ட சப்தமிலாத (பிறரால் வெல்லமுடியாத)
इन्द्रः	இந்த்³ர꞉	இந்திரன்
दधीचः	த³தீ⁴ச꞉	அதர்வண மறையோதுந் ததீசி ரிஷியின்
अस्थभिः	அஸ்த²பி⁴꞉	தலை யெலும்புகளினால்

नव	நவ	ஒன்பதாற் பெருக்கிய
नवतीः	நவதீ:	தொண்ணூறு (810)
वृत्राणि	வ்ருத்ராணி	அசுரர்களைக்
जघान	ஜகா ந	கொன்றனன்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—5. கோதம ரிஷி.

இதில் சாட்டியயாயனருடைய இதிகாசம் சொல்லப்படுகின்றது :— அதர்வண வேதியராகிய ததீசி ரிஷி வாழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டதினாலேயே அசுரர்கள் தோல்வி யடைந்துவிட்டார்கள். அவர் சுவர்க்கஞ் சென்றவிடத்து இப் பூவுலகம் அசுர்களால் வியாபிக்கப்பட்டது. பின்னர் இந்திரன் அசுரர்களோடு போராட முடியாதவனாய், அந்த ரிஷியைத் தேடிச்செல்ல அவர் சுவர்க்கமடைந்தனர் எனக் கேள்விப்பட்டனன். கேட்டு இங்கே அவருடைய எலும்பு சிறிதேனும் மீந்திருக்கின்றதா? என அங்குள்ளார்களை வினவினன். அவர்கள் எந்தத் தலையினால் அசுவினி குமாரர்கட்கு மது வித்தையை உபதேசித்தாரோ, குதிரையின் றலை வடிவ, அந்தச் சிரசிருக்கின்றதென, இந்திரனுக்குக் கூறினார்கள். மற்றும் அது யாண்டுளதோ? என்பதை யாங்களறியோம் என்றுங் கூறிவிட்டனர். அது கேட்ட இந்திரன் அதைத் தேடுவீர்களாக, அல்லது, அதைத்தேட விரும்புவீர்களாக என்றான். அதைக் கேட்டுத் தேடியவிடத்து குருக்ஷேத்திரத்திலுள்ள, 'சர்யணாவத்' என்னும் புட்கரணியிற் கிடைத்தது. அதைக்கொண்டு அவருடைய எலும்புகளால் இந்திரன் அசுரர்களைக் கொன்றனன் என்பதாம்.

(மந்திரப் பொருள்) அன்னியர்களால் மாறுபட்ட வார்த்தை கூறப்படாத இந்திரன் அதர்வண வேதியராகிய ததீசி ரிஷியின் முதுகுமுதலிய விடங்களிலுள்ள எலும்புகளினால், தொண்ணூற்றை ஒன்பது முறையாகக் கொண்ட (அதாவது 810) அசுரர்களைக் கொன்றனன். அது வருமாறு:— மூவுலகத்திலுள்ள தேவர்களையும் வெல்லுதற்பொருட்டு அசுரமாயை முதவில் மூன்று வகையாகின்றது. அம் மூன்றும், இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்னும் வேறுபாட்டால் அக்காலத்தவர்களைவெல்ல மூன்று வகையாகின்றது, மீண்டும் ஒவ்வொன்றும் முக்குணமுடையதாகின்றது, இவ்வாறு ஒன்பதாகின்றன. மீண்டும், உற்சாகமுதலிய மூன்று சத்திகளால் முக்குணமான விடத்து இருபத்தேழு (27) ஆகின்றன மறித்தும் முக்குணத்தால் எழுபத்தொன்று (71) ஆகின்றன. இவ்வாறு நான்குமுறை மூன்றாற் பெருக்கினமாயைகளால் பத்துத் திக்குகளிலும், ஒவ்வொன்றும் நிலைத்தவிடத்து (810-வகை) என்பது பொருந்துகின்றது. இவ் விதமாகிய ஆவரணங்களை, அல்லது அசுரக் கூட்டங்களைக் கொன்றுவிட்டனன் என்பதாம். (5)

மந்திரம் 6.

२ उ ३ १ २र ३ १ २ ३१२
180. इन्द्रेहि मत्स्यन्धसो विश्वेभिः सोमपर्वभिः ।
३ १ २ ३ १ २र
महाꣳ अभिष्टिरोजसा ॥ ६ ॥

இருக்கு 1-9-1.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌹𑌿 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌨𑍍𑌧𑌸𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌭𑌿𑌃 𑌸𑍋𑌮𑌪𑌰𑍍𑌵𑌭𑌿𑌃 ।
𑌮𑌹𑌾𑌂 𑌅𑌭𑌿𑌷𑍍𑌟𑌿𑌰𑍋𑌜𑌸𑌾 ॥

அந்வயம்.

हे इन्द्र !, एहि, विश्वेभिः, सोमपर्वभिः, अन्धसः, मत्सि, ओजसा, महान्, अभिष्टिः ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே! நீ
एहि	𑌏𑌹𑌿	இப்போது வருவாயாக (வந்து)
विश्वेभिः	𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌭𑌿𑌃	எல்லாச்
सोमपर्वभिः	𑌸𑍋𑌮𑌪𑌰𑍍𑌵𑌭𑌿𑌃	சோமரஸமாகிய்
अन्धसः	𑌅𑌨𑍍𑌧𑌸𑌃	அன்னங்களால்
मत्सि	𑌮𑌤𑍍𑌸𑌿	களிப்படைவாயாக. (பின்னர்)
ओजसा	𑌓𑌜𑌸𑌾	ஆற்றலினுல்
महान्	𑌮𑌹𑌾𑌨𑍍	மகானுகிச்
अभिष्टिः	𑌅𑌭𑌿𑌷𑍍𑌟𑌿𑌃	சத்துருவை யடக்குவோனுகுதி.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—6. மதுச்சந்த ரிஷி.

இந்திர! இக்கருமத்தில் வருவாயாக, வந்து, சோமரசமாகிய அன்னங்களனைத்தாலுங் களிப்படைவாயாக. அதன் பின்னர், வலியால் பெரியோனுகிச் சத்துருக்களை அடக்குவாயாக. ஈண்டு ஆவாயாக என்பது எஞ்சி நின்றது. வலியினுடைய பெயர்கள் இருபத்தெட்டனுள் ஓஜ:—என்பதும் நிருத்தம் 2-9-ல் கூறப்பட்டிருத்தலின் ஈண்டு ஓஜ:—என்பது வலியெனக் கொள்ளப்பட்டது. (6)

மந்திரம் 7.

१ २र ३ २ ३२३ १२
181. आ तू न इन्द्र वृत्रहन्नस्माकमर्द्धमागहि ।
३ २ २ १ २ २ १ २
महान् महीभिरूतिभिः ॥ ७ ॥

இருக்கு 4-32-1.

ஆ தூ ந இந்த்ர வ்ருத்ரஹந்நஸ்மாகமர்த்தமாகஹி ।
மஹாந் மஹீபிரூதிபி: ॥

அந்வயம்.

हे वृत्रहन्!, इन्द्र!, नः, आ तु, महान्, महीभिः, ऊतिभिः, अस्माकं, अर्द्धं, आगहि ॥

பதவுரை.

हे वृत्रहन्!	ஹே வ்ருத்ரஹந்!	சத்துருவைக் கொல்லுகின்ற
इन्द्र!	இந்த்ர!	இந்திரனே! (நீ)
नः	ந:	எமக்கருகில்
आ तु	ஆ து	விரைவில் வருவாயாக.
महान्	மஹாந்	மகானுகிய நீ
महीभिः	மஹீபி:	பெரிய
ऊतिभिः	ஊதிபி:	பாதுகாப்புகளுடன்
अस्माकं	அஸ்மாகம்	எங்களுக்குச்
अर्द्धं	அர்த்தம்	சமீபத்தில்
आगहि	ஆகஹி	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—7. வாமதேவ ரிஷி.

சத்துருக்களை நாசம் பண்ணும் இந்திரனே! நீ, எங்களைக் குறித்துச் சீக்கிரம் வருவாயாக. இந்திர! பெரியோனுகிய நீ முற்றுங் காப்பாற்றுவதோடு எங்கட்குச் சமீபமாயும் வருவாயாக. (7)

மந்திரம். 8.

२ ३ १२ ३२उ ३ १२
182. ओजस्तदस्य तित्विष उभे यत्समवर्तयत् ।
२ ३ १ २ ३ १२
इन्द्रश्चर्मेव रोदसी ॥ ८ ॥

இருக்கு 8-6-5.

ஓஜஸ்தத³ஸ்ய தித்விஷ உபே⁴ யத்ஸமவர்தயத் ।
இந்த்³ரஶ்சர்மேவ ரோத³ஸீ ॥

அந்வயம்.

यत्, इन्द्रः, उभे, रोदसी, चर्म इव, समवर्तयत्, अस्य, तत्, ओजः तित्विषे ॥

பதவுரை.

यत्	யத்	எவ் வலியினுல்
इन्द्रः	இந்த்³ர:	இந்திரன்
उभे रोदसी	உபே⁴ ரோத³ஸீ	வானுலகு மண்ணுலகிரண்டையும்
चर्म इव	சர்ம இவ	தோலைப்போல்
समवर्तयत्	ஸமவர்தயத்	அடக்கிக்கொண் டிருக்கின்றனே,
अस्य	அஸ்ய	இவ் விந்திரனுடைய
तत्	தத்	அந்த
ओजः	ஓஜ:	ஆற்றல்
तित्विषे	தித்விஷே	விளக்கமாயிற்று.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—8. வத்ச ரிஷி.

இவ் விந்திரன் எவ் வலியினுல் வானையு மண்ணையும் சருமம்போல் இனிது தன் வயப்படுத்திக்கொண்டிருக்கின்றனே, அவ் வன்மை விளங்கிற்று. அதாவது ஒருவன் ஒரு தோலை ஓர்கால் விரித்து ஒருபோது சுருட்டுவதுபோல (வானும் மண்ணும்) அவன் வயமாகவே ஆகிவிட்டன என்பது பொருள்.

குறிப்பு :—'த்விஷ' என்னும் பகுதி விளக்கப் பொருளினின்றது.

மந்திரம் 9.

३ १२ ३ ३ १ २ २ २
183. अयमु ते समतसि कपोत इव गर्भधिम् ।
२ ३ १ २
वचस्तच्चिन्न ओहसे ॥ ९ ॥

இருக்கு 1-30-4.

ஃயஉ௱ தெ ஸஉதஸி கபொத ஜவ ഗர்ஃயிஂ ।
வசஸ்தச்சிஞ ஒஹஸெ ॥

அந்வயம்.

(हे इन्द्र !,) अयं उ, ते, कपोतः, गर्भधिं, इव, समतसि, तच्चित्, नः, वचः, ओहसे ॥

பதவுரை.

(हे इन्द्र !)	(ஹெ ஊஂ !)	(இந்திரனே !)
अयं उ	ஃயஂ உ	காணப்படும் இச் சோமரசம்
ते	தெ	நினக்குத் தேடிவைக்கப்பட்டிருக்கின்றது. (நீ சோமரசத்தை)
कपोतः	கபொதঃ	ஆண்புறவு
गर्भधिं इव	ഗர்ஃயிஂ ஜவ	சூல்கொண்ட பெண்புறவையடைவதொப்ப
समतसि	ஸஉதஸி	எப்பொழுதும் நன்கு அடைகிறாய்.
तच्चित्	தச்சிஸ்	அக்காரணத்தாலே
नः	நঃ	எங்களுடைய
वचः	வசঃ	வார்த்தையையும்
ओहसे	ஒஹஸெ	அடைகின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—9. சுனச்சேப ரிஷி.

இந்திரனே ! நீ கருப்பங்கொண்ட பெண்புறவை ஆண்புறவு அடைவதுபோல எச் சோமரசத்தை எப்போதும் இனிது பெறுகின்றாயோ, அச் சோமரசந் தேடப்பட்டது. அக்காரணத்தானே எங்களுடைய வாக்கும் உன்னை அடைகின்றது. (9)

மந்திரம் 10.

२ ३ १ २ ३२ ३ १ २ ३१ २ ३२
184. वात आ वातु भेषजꣳ शम्भु मयोभु नो हृदे ।
२ ३ १२
प्र न आयूꣳषि तारिषत् ॥ १० ॥

இருக்கு 10-186-1.

வாத ஆ வாது பேஷஜம் ஶம்பு மயோபு நோ ஹ்ருதே ।
ப்ர ந ஆயூம்ஷி தாரிஷத் ॥

அந்வயம்.

वातः, नः, हृदे, शम्भु, मयोभु, भेषजं, आ वातु, नः, आयूंषि, प्रतारिषत् ॥

பதவுரை.

वातः	வாதஃ	காற்று
नः	நஃ	எங்களுடைய
हृदे	ஹ்ருதே	உள்ளத்திற்கு
शम्भु	ஶம்பு	வியாதியை யொழிப்பதும்
मयोभु	மயோபு	சுகந்தருவதுமாகிய
भेषजं	பேஷஜம்	மருந்தையேனும், அல்லது நீரை யேனும்
आ वातु	ஆ வாது	அடைவிக்குக. (மற்றும்)
नः	நஃ	எங்களுடைய
आयूंषि	ஆயூம்ஷி	ஆயுட்களை(யும்)
प्रतारिषत्	ப்ரதாரிஷத்	வளர்ப்பதாகுக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—10. வாதாயன உல்ல ரிஷி:

காற்றானது எங்களுடைய இருதயத்திற்கு மருந்தையேனும் அல்லது தண்ணீரையேனுங் கொண்டுவருக. எத்தன்மையதை யெனின்? வியாதியை நீக்கிச் சுகமுண்டாக்கத்தக்கதை. கொண்டுவருக என்பதுடன் சேர்த்துக் கொள்க. அன்றியும் எங்களுடைய ஆயுளை வளர்க்குக. (10)

ஏழாவது கண்டம்.

முற்றும்.

எட்டாவது கண்டம்

பிரபாடகம்—2. அத்தியாயம்—2. கண்டம்—8.

ஒன்பது மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २र ३ १२ ३ १ २ ३ २
185. यᳬ रक्षन्ति प्रचेतसो वरुणो मित्रो अर्य्यमा ।
२ ३ १ २ ३ १ २
*न किः स दभ्यते जनः ॥ १ ॥

இருக்கு 4-16-3.

யம் ரக்ஷந்தி ப்ரசேதஸோ வருணோ மித்ரோ அர்யமா ।
ந கி: ஸ தப்யதே ஜந: ॥

அந்வயம்

प्रचेतसः, वरुणः, मित्रः, अर्यमा, यम्, रक्षन्ति, सः, जनः, न किः दभ्यते ॥

பதவுரை.

प्रचेतसः	ப்ரசேதஸ:	உயர்ந்த ஞானமுடைய
वरुणः	வருண:	வருணதேவன்
मित्रः	மித்ர:	மித்திர தேவன்
अर्यमा	அர்யமா	அரியமா தேவதை (என்னுமிவர்கள்)
यं	யம்	எவ் வேள்வித் தலைவனைக்
रक्षन्ति	ரக்ஷந்தி	காப்பாற்றுகின்றனரோ,
सः जनः	ஸ: ஜந:	அவ் வேள்வித்தலைவனாகிய மனிதன்
न किः दभ्यते	ந கி: தப்யதே	எவற்றாலேனுந் துன்புறுத்தப்படான்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—1. கண்ணுவ ரிஷி.

மெய்யுணர்வையுடைய வருணன் முதலிய தேவர்கள், எவ்வெசமானனைக் காப்பாற்றுகின்றனரோ? அவ்வெசமானன் எவற்றாலுந் துன்பமடையான் என்பதாம். (1)

* நூசித்ஸ, என்பது இருக்கு.

மந்திரம் 2.

३ २उ   ३ १ २ ३ २ ३ १ २र३२

186. गव्योषु णो यथा पुराश्वयोत रथया ।   நிறைக்கின்றன,

३ २ ३ १ २

* वरिवस्या महोनाम् ॥ २ ॥

இருக்கு 8-64-10.

𑌗𑌵𑍍𑌯𑍋𑌷𑍁 𑌣𑍋 𑌯𑌥𑌾 𑌪𑍁𑌰𑌾𑌶𑍍𑌵𑌯𑍋𑌤 𑌰𑌥𑌯𑌾 ।
𑌵𑌰𑌿𑌵𑌸𑍍𑌯𑌾 𑌮𑌹𑍋𑌨𑌾𑌮𑍍 ॥

அந்வயம்.

(हे इन्द्र !,) यथा, पुरा, नः, सु गव्या, उ, अश्वया, उत, रथया, महोनां, वरिवस्या ॥

பதவுரை.

(हे इन्द्र !)	(𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !)	(இந்திரனே ! நீ)
यथा	𑌯𑌥𑌾	எவ்வண்ணம்
पुरा	𑌪𑍁𑌰𑌾	முன்னர் எங்கள் வேள்வியில் பசு முதலியவற்றைக் கொடுப்பதற்கு வந்ததுபோல் இப்போதும்
नः	𑌨𑌃	எங்கட்கு
सु गव्या	𑌸𑍁 𑌗𑌵𑍍𑌯𑌾	நல்ல பசுவைக் கொடுக்கவேண்டுமென்ற இச்சையாலும்
उ	𑌉	மற்றும்
अश्वया	𑌅𑌶𑍍𑌵𑌯𑌾	குதிரையைக் கொடுக்கவேண்டுமென்னும் இச்சையாலும்
उत	𑌉𑌤	அஃதன்றியும்
रथया	𑌰𑌥𑌯𑌾	தேரைக் கொடுக்கவேண்டுமென்னும் இச்சையாலும்
महोनां	𑌮𑌹𑍋𑌨𑌾𑌂	கீர்த்தியைத் தருந் தனங்களைக் கொடுப்பதற்கும்
वरिवस्या	𑌵𑌰𑌿𑌵𑌸𑍍𑌯𑌾	வருவாயாக.

---

* वरिवस्य महामह, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

இருக்கு—2. வச்ச ரிஷி.

ங்கட்கு ஆவைத் தரவேண்டுமென்னும் இச்சையால் பள்ளியின்கண் முன்னர் வந்தனை, அதுபோல் இப்போதும் —பசுவைக் கொடுக்கும் பொருட்டு வருவாயாக. பசுவைக் கொடுக்கவேண்டுமென்னும் விருப்பத்தால் மாத்திரமன்று, மற்றே, அசுவத்தையுந் தரவேண்டு மென்னு மிச்சையினனும் வருவாயாக. அஃதன்றியும், இரதங் கொடுக்கவேண்டு மென்னும் விருப்பத்தானும் வருவாயாக. மற்றும் பெருங் கீர்த்தியைத் தரும் தனத்தைக் கொடுத்தற் பொருட்டும் வருவாயாக. இவைகளைக் கொடுப்பாயாக என்பது பொருள். (2)

குறிப்பு:—பசு, குதிரை, தேர், என்பவைகளைப் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ள நாங்கள் முன்போல நின்னைத் துதிக்கின்றோம். எனெனின்? அவி கொடுப்போர்களால் நீ துதிக்கத்தக்கோனு யிருக்கின்றாய் ஆதலின் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 3.

३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २

187. **इमास्त इन्द्र पृश्नयो घृतं दुहत आशिरम् ।**

३ २ ३१ २ ३ १ २

एनामृतस्य पिप्युषीः ॥ ६ ॥

இருக்கு 8-6-19.

ஐமாஸ்த ஐந்த்ர ப்ருஶ்னயொ க்ருதம் து³ஹத ஆஶிரம் ।
ஏநாம்ருதஸ்ய பிப்யுஷீ: ॥

அந்வயம்.

हे इन्द्र!, ते, ऋतस्य, पिप्युषीः, इमाः, पृश्नयः, घृतं, एनां, आशिरं, दुहते ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹெ ஐந்த்ர!	இந்திரனே!
ते	தெ	உன்னுடைய
ऋतस्य	ருதஸ்ய	சத்தியத்தை அல்லது வேள்வியை
पिप्युषीः	பிப்யுஷீ:	விருத்தி பண்ணப்பெற்ற
इमाः	இமா:	இந்த
पृश्नयः	ப்ருஶ்னய:	நல்ல நிறமுடைய கோக்கள்

घृतं	ஷ்ருதம்	பொங்குந் தன்மையுள்ள
एनां	ஏநாம்	இந்தப்
आशिरं	ஆஶிரம்	பாலை
दुहते	துஹதே	(பாத்திரத்தில்) நிறைக்கின்றனர்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—3. வத்ச ரிஷி.

இந்திர ! நினது சம்பந்தமுள்ள நன்னிறமுடைய இந்தக் கோக்கள் பொங்குந் தன்மையுள்ள பாலைப் பாத்திரம் நிறையக் கறக்கின்றன. நன்னிறப் பசுக்கள் எத்தன்மையன வெனின் ? சத்தியத்தை அல்லது இந்திரனுடைய வேள்வியை வளர்க்கத்தக்கன என்பதாம். (3)

குறிப்பு.—*சோமரசமும் வெண்ணெயும் எடுக்குமிடத்தில் பாடப்படும் பாடல்கள் நினக்காகுக என்பது ஆங்கிலம்.*

மந்திரம் 4.

३ २ ३ १ २ ३ १ २र

188. **अया धिया च गव्यया पुरुणामन् पुरुष्टुत ।**

१ २र ३ १ २

यत्सोमे सोम *आभुवः ॥ ४ ॥

இருக்கு 8-6-91.

அயா தியா ச கவ்யயா புரூணாமந் புரூஷ்டுத ।
யத்ஸோமே ஸோம ஆபுவ: ॥

அந்வயம்.

पुरुणामन् !, पुरुष्टुत !, सोमे सोमे, यद्, आभुवः, गव्यया, अया, धिया ॥

பதவுரை.

हे पुरुणामन् !	ஹே புரூணாமந் !	பல நாமங்களையுடையோய் !
पुरुष्टुत !	புரூஷ்டுத !	பல்லோரால் றுதிக்கப்படுகின்றோய் ! இந்திர !
सोमे सोमे	ஸோமே ஸோமே	எமது சோமயாகமனைத்திலும்
यद्	யத்	எக்கால்
आभुवः	ஆபுவ:	அதையருந்த வருவையோ, அப்போது

* आ भवः, என்பது இருக்கு.

गव्यया	மவ்யயா	"நமக்குப் பசுக்கள் வேண்டும்" என்னும்
अया	அயா	இந்தப்
धिया	யியா	புத்தியோடு கூடியவர்களாவோம். (பசு தன முதலியவைகளை யுடைத்தானவர்களாவோம்).

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—4. சுருதகக்ஷ ரிஷி.

சக்கரன், விருத்திரனைக் கொன்றோன், என்பது முதலிய பல நாமங் களை யுடையோய்! அல்லது பலராலுந் தோத்திரம் பண்ணப்படுவோய்! இந்திரனே! என்னுடைய சோமயாகமனைத்திலும், நீ எப்போது அதை யருந்துவான் வருவையோ, அப்போது நாங்கள் எம் பொருட்டுக் கோக்களை விரும்பும் புத்தியுடையவர்களாவோம். நீ சோமரசங் குடித்தவிடத்து யாங் கள் கோக்கள் முதலியவைகளை யுடையவர்களாவோம் என்பது பொருள். (4)

குறிப்பு.—ஈண்டு நமயதி, துதிக்கின்ற தேவதையிடம் நயதி - கொண்டு போகின்றது ஆதலின் நாமம் என்பது தோத்திரமாம்.

மந்திரம் 5.

३ २ ३ १२ ३ १२ ३ १२

189. पावका नः सरस्वती वाजेभिर्वाजिनीवती ।

३ १ २ ३ १ २

यज्ञं वष्टु धिया वसुः ॥ ५ ॥

இருக்கு 8-45-26.

வாவகா நஃ ஸரஸ்வதீ வாஜெபி⁴ர்வாஜிநீவதீ ।

யஜ்ஞம் வஷ்டு யியா வஸுஃ ॥

அந்வயம்.

पावका, वाजिनीवती, धिया वसुः, सरस्वती, वाजेभिः, नः, यज्ञं, वष्टु ॥

பதவுரை.

पावका	வாவகா	பவித்திரம் பண்ணுபவரும்
वाजिनीवती	வாஜிநீவதீ	அன்னந்தருஞ் சத்தியானவரும்
धिया वसुः	யியா வஸுஃ	கருமத்தாலடையுந் தனத்திற்குக் காரண வடிவருமான
सरस्वती	ஸரஸ்வதீ	சரஸ்வதி தேவியார்

वाजेभिः	வாஜெஹிঃ	கொடுக்கத்தக்க அன்னங்களோடு
नः	நঃ	எங்களுடைய
यज्ञं	யஜ்ஞং	வேள்வியை
वष्टु	வஷ்டு	விரும்புவாராக. (மற்றும் அதை முடித்துவைப்பாராக.)

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—5. மதுச்சந்த ரிஷி.

கலைமகளாந் தேவியார் அவிகளென்னும் அன்னங்களான நிமித்தங்களோடு, அல்லது, எசமானர்கள் கொடுக்கத்தக்க அன்னங்களான நிமித்தங்களோடு எம்முடைய வேள்வியை விரும்புவாராக. அதாவது நடத்துவிப்பாராக என்பது பொருள். கலைமடந்தை சுத்தன்மையரெனின்? பவித்திரம் பண்ணுபவர். அன்னமுள்ள கிரியையுடையார். கருமத்தா லடையத்தக்க தனத்திற்கு நிமித்தமானவர். (5)

இம்மந்திரத்திற்கு யாஸ்க முனிவரும் நிருக்தத்தில் இவ்வாறே பொருள் கூறியுள்ளார்.

ஐதரேய ஆரண்யகாண்டச் சுருதியாலும் இவ்வாறு உரை கூறப்பட்டுள்ளது.

மந்திரம் 6.

२ ३ १ २र ३ २उ ३ १ २
190· क इमं नाहुषीष्वा इन्द्रꣳ सोमस्य तर्पयात् ।
२ ३ २३ १ २
स नो वसून्या भरात् ॥ ६ ॥

க இமம் நாஹுஷீஷ்வா இந்த்ரꣳ ஸோமஸ்ய தர்பயாத் ।
ஸ நோ வஸூந்யா பராத் ॥

அந்வயம்.

नाहुषीषु, कः, इमं इन्द्रं, सोमस्य, तर्पयात्, सः, नः, वसूनि, आभरत् ॥

பதவுரை.

नाहुषीषु	நாஹுஷீஷு	மநுடப்பிறப்பினுள்
कः	கঃ	எவன்
इमं इन्द्रं	இமம் இந்த்ரம்	இவ்விந்திரனைச்
सोमस्य	ஸோமஸ்ய	சோமரசத்தைக் கொண்டு

तर्पयात्	தர்பயாத்	திருப்திபண்ண வல்லான்?
सः	ஸ:	அத் தன்மைய இந்திரன்
नः	ந:	எங்கள் வேள்வியில் திருப்த னுய்த்
वसूनि	வஸூநி	தனங்களைக்
आभरत्	ஆபரத்	கொடுப்பானாக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—6. வாமதேவ ரிஷி.

மனுடப் பிறப்பினுள் இவ் விந்திரனைச் சோமரசத்தால் திருப்திபண்ண (பிரியமுண்டாக்க) வல்லார் யாவர்? (ஒருவரும் இலர் என்பதாம்), அத்தன்மைய, (அதாவது மனிதர்களாற் பிரியப்படுத்த முடியாத) அவ் விந்திரன் எங்களுடைய வேள்வியில் திருப்தியுடையனுய்த் தனங்களைக் கொண்டுவந்து கொடுப்பானாக என்பது பொருள். (6)

குறிப்பு:—சண்டு நகுஷ என்பது மனிதர் பெயர் என, 2-3-9-ல் நிருக்தங் கூறுகின்றது. ஆதலின் மனுடப் பிறப்பினுள் எனப்பட்டது.

மந்திரம் 7.

१ २ ३ २उ ३ २ ३ २ ३ १ २ ३२

191. आ याहि सुषुमा हि त इन्द्र सोमं पिबा इमम् ।

२उ ३१ २ ३ १२

एदं बर्हिः सदो मम ॥ ७ ॥

இருக்கு 1-7-1

ஆ யாஹி ஸுஷுமா ஹி த இந்த்ர ஸோமம் பிபா இமம் ।
ஏதம் பர்ஹி: ஸதோ மம ॥

அந்வயம்.

हे इन्द्र !, आयाहि, ते, सुषुमा हि, इमं, सोमं, पिब, मम, इदं, बर्हिः, आ सदः ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர!	இந்திரனே! (நீ)
आयाहि	ஆயாஹி	வருவாயாக.
ते	தே	நினக்கு
सुषुमा हि	ஸுஷுமா ஹி	யாம் சோமரசத்தைப் பிழிந்துள்ளோம்

इमं	இமம்	இந்தச்
सोमं	ஸோமம்	சோமரசத்தை
पिब	பிப	அருந்துவாயாக. (அருந்தி)
मम	மம	எமது
इदं	இதம்	இந்த
बर्हिः	பர்ஹி:	வேதிகையில் விரித்துள்ள தருப்பையின் மீது
आसदः	ஆஸத:	உட்காருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—7. இரிமீட ரிஷி.

இந்திர ! நீ வருவாயாக. நாங்கள் நின் பொருட்டு உண்மையில் சோமரசம் பிழிந்து வைத்திருக்கின்றோம். அத்தகைய இச் சோமரசத்தை அருந்துவாயாக. அருந்திவிட்டு எமது வேள்வியின் வேதிகையில் நினக்கு விரித்து வைத்திருக்கும் தருப்பையின் மீது இனிது உட்காருவாயாக. (7)

மந்திரம் 8.

१ २ ३ १२र ३२ ३ १ २ ३ २

192. महि त्रीणामव * रस्तु द्युक्षं मित्रस्यार्यम्णः ।

३ २३ १२

दुराधर्षं वरुणस्य ॥ ८ ॥

இருக்கு 10-185-1.

மஹி த்ரீணாமவரஸ்து த்யுக்ஷம் மித்ரஸ்யார்யம்ண: ।
துராதர்ஷம் வருணஸ்ய ॥

அந்வயம்.

मित्रस्य, अर्यम्णः, वरुणस्य, त्रीणां, द्युक्षं, दुराधर्षं, महि, अवः, अस्तु ॥

பதவுரை.

मित्रस्य	மித்ரஸ்ய	மித்திரதேவன்
अर्यम्णः	அர்யம்ண:	அரிய மாதேவன்
वरुणस्य	வருணஸ்ய	வருண தேவன் என்னும்
त्रीणां	த்ரீணாம்	(இம்) மூவர்களுடைய
द्युक्षं	த்யுக்ஷம்	ஒளியானது,

* अवोस्तु, என்பது இருக்கு.

दुराधर्षं	துராதர்ஷம்	பிறராற் கெடுக்கமுடியாத
महि	மஹி	பெரிய
अवः	அவ:	பாது காப்பாக
अस्तु	அஸ்து	(எமக்கு) இருக்குக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—8. வாருணி சத்தியதிருதி ரிஷி.

மித்திரன், அரியமா, வருணன், என்னும் இம் மூன்று தேவர்களின் பேரொளியானது, அதாவது பிறராற் கெடுக்க முடியாத முழுப் பிரகாசம் எங்கட்கு பெரும் பாதுகாப்பாக இருக்குக. (8)

அவ: என்பது சந்தம் பற்றி அவர: என வந்தது.

மந்திரம் 9.

१ २ ३ १ २
193. त्वावतः पुरुवसो वयमिन्द्र प्रणेतः ।
१ २
स्मसि स्थातर्हरीणाम् ॥ ९ ॥

இருக்கு 8-46-1.

த்வாவத: புருவஸோ வயமிந்த்ர ப்ரணேத: ।
ஸ்மஸி ஸ்தாதர்ஹரீணாம் ॥

அந்வயம்.

हे पुरुवसो !, प्रणेतः, हरीणां, स्थातः, इन्द्र !, त्वावतः, वयं, स्मसि ॥

பதவுரை.

हे पुरुवसो !	ஹே புருவஸோ !	மிகுந்த தனமுடையோய் !
प्रणेतः	ப்ரணேத:	கருமத்தினின்றும் கரையேற்றி வைப்போனும்
हरीणां	ஹரீணாம்	அரி, என்னும் குதிரைகளுக்கு
स्थातः	ஸ்தாத:	இறைவனுமாகிய
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
वयं	வயம்	நாங்கள்
त्वावतः	த்வாவத:	நின்னுடையவர்களாக
स्मसि	ஸ்மஸி	இருக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—9. *வத்ச ரிஷி.*

மிகுந்த தனமுடைய இந்திரனே! அரி, என்னும் குதிரைகளுக்கு இறைவனும், கருமங்களின் கரையைக் கடக்கச் செய்வோனுமாகிய இந்திர! உனக்கொப்புள்ளார் வேறொருவருமின்மையால் நாங்கள் நின்னுடையவர்களாகவே இருக்கின்றோம். (9)

எட்டாவது கண்டம்

முற்றும்.

இரண்டாவது பிரபாடகம்

முடிந்தது.

ஒன்பதாவது கண்டம்.

பிரபாடகம்—3. அத்தியாயம்—2. கண்டம்—9.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २ ३ १ २ ३ १ २र
194. उ त्वा मदन्तु *सोमाः कृणुष्व राधो अद्रिवः ।
१२ ३ १२
अव ब्रह्मद्विषो जहि ॥ १ ॥

இருக்கு 6-6-1.

உ த்வா மத₃ந்து ஸோமா: க்ரு'ணுஷ்வ ராதோ₄ அத்₃ரிவ: ।
அவ ப்₃ரஹ்மத்₃விஷோ ஜஹி ॥

அந்வயம்.

हे इन्द्र !, त्वा, सोमाः, उत्, मदन्तु, अद्रिवः, राधः, कृणुष्व, ब्रह्मद्विषः,
अवजहि ॥

---

* स्तोमा, என்பது இருக்கு.

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்³ர!	இந்திரனே!
त्वा	த்வா	உன்னை
सोमाः	ஸோமா꞉	சோமரசம்
उत्	உத்	மிகக்
मदन्तु	மத³ந்து	களிப்படையச் செய்வதாகுக
अद्रिवः	அத்³ரிவ꞉	வச்சிரமேந்திய இந்திர! நீ
राधः	ராத⁴꞉	தனத்தைக்
कृणुष्व	க்ருணுஷ்வ	கொடுப்பாயாக.
ब्रह्मद्विषः	ப்³ரஹ்மத்³விஷ꞉	பிரமத் துவேஷிகளை
अवजहि	அவஜஹி	நாசஞ் செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—1. பிரகாத ரிஷி.

இந்திர! உன்னைச் சோமரசம் மிகுந்த களிப்பை யுண்டாக்கத்தக்க தாகுக. வச்சிரந் தரித்த இந்திர! எங்கட்குத் தனத்தைக் கொடுப்பாயாக. மற்றும், பிரமத் துவேஷிகளைத் தொலைப்பாயாக. (1)

மந்திரம் 2.

१ २ ३ १ २ ३२उ ३ २ २
195. गिर्वणः पाहि नः सुतं मधोर्धाराभिरज्यसे ।
२ ३ १ २ ३ १ २र
इन्द्र त्वादातमिद्यशः ॥ २ ॥

கி³ர்வண꞉ பாஹி ந꞉ ஸுதம் மதோ⁴ர்தா⁴ராபி⁴ரஜ்யஸே ।
இந்த்³ர த்வாதா³தமித்³யஶ꞉ ॥

அந்வயம்.

गिर्वणः!, नः, सुतं, पाहि, मधोः, धाराभिः, अज्यसे, इन्द्र!, त्वादातम्, इत्, यशः ॥

பதவுரை.

गिर्वणः!	கி³ர்வண꞉!	துதியாற் போற்றத் தக்க இந்திர! நீ
नः सुतं	ந꞉ ஸுதம்	தேடப்பட்ட எங்களுடைய இச் சோமத்தை

पाहि	வாஹி	அருந்துவாயாக. (ஏனெனின்) ?
मधोः	மதோ:	களிப்பைத்தருஞ் சோமரசத்தின்
धाराभिः	தாராபி:	தாரைகளால்
अज्यसे	அஜ்யஸே	நீ தெளிக்கப்படுகின்றாய்.
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
त्वादातं इत्	த்வாதாதம் இத்	நின்றாற் சுத்தமாக்கிய
यशः	யஶ:	அன்னம் (எங்களிடத்தி லிருக்கின்றது.)

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—2. விசுவாமித்திர ரிஷி.

தோத்திரவாக்குகளாற் றுதிக்கத்தக்கோய் ! இந்திரனே ! பிழிந்தெடுக்கப்பட்ட எங்களுடைய சோமரசத்தை யருந்துவாயாக. ஏனெனின் ? களிப்புண்டாக்குஞ் சோமரசத்தின் தாரைகளால் நீ நனைக்கப்படுகின்றா யாதலின் என்க. இந்திர ! நின்னால் உண்டாக்கப்பட்ட அன்னமே எங்களிடத்திலிருக்கின்றது. (2)

சண்டு வநநீயம் என்பதற்கு - துதிக்கத்தக்கது எனப் பொருள் கொண்டமை காண்க.

அங்ஙனமே யாஸ்க முனிவரும், "தோத்திரவாக்காற் றுதிக்கத், தேவராகின்றார். துதி வாக்குகளால் இவரைத் துதிக்கின்றார்கள்" கூறியுள்ளார் நிருக்தத்தில்.

மந்திரம் 3.

१ २ ३ २ ३ १ २ ३ २ ३ ३ १ २ २ ३ २

196. सदा व इन्द्रश्चर्कृषदा उपोनु स सपर्यन् ।

२ ३ २ ३ २ ३ ३ १ २

न देवो वृतः शूर इन्द्रः ॥ ३ ॥

ஸதா வ இந்த்ரஶ்சர்க்ருஷதா உபோ நு ஸ ஸபர்யந்
ந தேவோ வ்ருத: ஶூர இந்த்ர: ॥

அந்வயம்.

(हे ऋत्विजः !), (हे यजमानाः !), इन्द्रः, सदा, उपोनु
आचर्कृषत्, वृतः, इन्द्रः, देवः, शूरः न ॥

பதவுரை.

(हे ऋत्विजः !)	(ஹெ ருத்விஜஃ !)	(வேட்போர்களே !)
(यजमानाः !)	(யஜமாநாஃ !)	(வேள்வித் தலைவர்களே !)
इन्द्रः	இந்த்ரஃ	இந்திரன்
सदा	ஸதா	எப்போதும்
उपोनु	உபொநு	உங்கட்கருகில் (இருந்து)
स सपर्यन्	ஸ ஸபர்யந்	பிரார்த்திப்போனாய்
वः	வஃ	உங்களை
आचकृषत्	ஆசக்ருஷத்	வேள்வி யநுட்டானஞ்செய்விக்க விரும்புகின்றான்.
वृतः	வ்ருதஃ	பிரார்த்திக்கப்பட்ட
इन्द्रः	இந்த்ரஃ	இந்திரனாகிய
देवः	தெவஃ	தேவன்
शूरः न	ஶூரஃ ந	சூரனல்லன். (பாதகஞ் செய்யான்.)

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—3. வாமதேவ ரிஷி.

வேட்போர்களே! எசமானர்களே! உங்களை இந்திரன் எப்போதும் ·ி யனுட்டிக்குமாறு செய்ய விரும்புகின்றான். யாது செய்துகொண் ·ன்? உங்கட் கருகிலேயே மீண்டும், மீண்டும், அல்லது மிகுதியாக, ..த்தனை செய்துகொண்டு. அதாவது "அவியுண்ண நீவிர் எம்மை யழைப்பீர்களாக" என வேண்டுகின்றான் என்பது பொருள். இதுபற்றியே "தானத்தாலே தேவர்கள் பிழைக்கின்றார்கள்" என வேனைய சுருதியும் ·த்வர்கள் எசமானன் கொடுத்த அவியால் வாழ்கின்றார்களெனக் கூறுகின் ·து. இதனால் எங்களைப் பிரார்த்திப்பதற்குக் கருத்தனாந் தன்மையால் ·ங்களை வேண்டிக்கொள்வதால்) இந்திரதேவன் எசமானர்கட்குப் பாதகஞ் ·வனலன் என்பதாம். (3)

·ப்பு:—புத்திரர்களுக்கும், பௌத்திரர்களுக்கும் இந்திரன் எப்போதும் ·ய்கின்றான் எனக் கூறப்படுகின்றதென்பது ஆங்கிலம்.

மந்திரம் 4.

१ २ ३ १ २३ ३ १ ३ ३ १ २
त्वा विशन्त्विन्दवः समुद्रमिव सिन्धवः ।
३ १ २
ामिन्द्रातिरिच्यते ॥ ४ ॥

இருக்கு 8-92-22.

ஆ த்வா விஶந்த்விந்தவ: ஸமுத்ரமிவ ஸிந்தவ: ।
ந த்வாமிந்த்ராதிரிச்யதே ॥

அந்வயம்.

हे इन्द्र !, इन्दवः, सिन्धवः, समुद्रं इव, त्वा, आविशन्तु, इन्द्र !, त्वां, न अतिरिच्यते ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
इन्दवः	இந்தவ:	யாங்கள் கொடுத்த ஒழுகுகின்ற சோமரஸம்
सिन्धवः	ஸிந்தவ:	ஆறுகள்
समुद्रं इव	ஸமுத்ரம் இவ	கடலிற் புகுவதுபோல்
त्वा	த்வா	உன்னைச்
आविशन्तु	ஆவிஶந்து	சேர்வதாகுக.
इन्द्र !	இந்த்ர !	இந்திர ! (ஆற்றலாலுந் தனத்தாலும் ஒருவரும்)
त्वां	த்வாம்	உன்னைக்
न अतिरिच्यते	ந அதிரிச்யதே	கடக்கின்றவரிலர்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—4. சுருதகக்ஷ ரிஷி.

இந்திரனே! எம்மாற் கொடுக்கப்பட்டதும், ஒழுகுகின்றதுமாகிய சோமரசம் உன்னை யடைவதாகுக. அதிலுவமை :—செல்லுஞ் சீலமுடைய நதிகள் (கடலை) நாற்புறத்தும் வந்தடைவனபோன்றெனல். இவ்வாறானமையின் இந்திர! தேவர்களுளொருவரும் தனத்தாலும், வலியாலும் நின்னை கடக்கின்ற மேம்பட்டார் இலர். (என்பது பெற்றாம்.) நின்னில் மேம்பட்ட ஆற்றலுடையார் இலர் என்பது பொருள். (4)

மந்திரம் 5.

२ ३ २ ३ १ २३ १ २र३ १२ ३१२
198. इन्द्रमिद्गाथिनो बृहदिन्द्रमर्केभिरर्किणः ।
२ ३ १ २
इन्द्रं वाणीरनूषत ॥ ५ ॥

இருக்கு 1-7-1.

இந்த்ரமித்காதிநோ ப்ருஹதிந்த்ரமர்கேபிரர்கிண: ।
இந்த்ரம் வாணீரநூஷத ॥

அந்வயம்.

गाथिनः, इन्द्रं इत्, बृहत्, अनूषत, अर्किणः, इन्द्रं, अर्केभिः, वाणीः, इन्द्रं ॥

பதவுரை.

गाथिनः	காயிநः	சாமவேதம்பாடுகின்ற உத்காதாக்கள் என்பவர்கள்
इन्द्रं इत्	இந்த்ரம் இத்	இந்திரனையே
बृहत्	ப்ருஹத்	பிருகத் என்னும் பாடல்களால்
अनूषत	அநூஷத	துதிக்கின்றார்கள்.
अर्किणः	அர்கிணः	அருச்சனை மந்திரமென்னும் இருக்கோதும் ஓதாக்கள் என்பவர்கள்
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனைப்
अर्केभिः	அர்கேபிः	பாடல் வடிவ மந்திரங்களால் துதிக்கின்றார்கள். (எஞ்சின எசுரோதும் அத்துவரியுக்கள்)
वाणीः	வாணீः	எசுராகிய வாக்குகளால்
इन्द्रम्	இந்த்ரம்	இந்திரனைத் (துதிக்கின்றார்கள்).

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—5. மதுச்சந்த ரிஷி.

கீதவடிவ சாமவேதம் பாடுகின்ற உத்காதா என்பவர்கள் பிருகதென்னும் பாடல்களால் அதாவது "உன்னையே அழைக்கின்றோம்" என்னும் இத்தன்மைய மந்திரத்தில் உண்டாகிய பிருகதென்னுங் கீதத்தால் இந்திரனையே துதிக்கின்றார்கள். அருச்சனைக்குக் காரணமான மந்திரத்தை ஓதுகின்ற ஓதாக்கள் என்பவர்களும், யாப்பு வடிவ மந்திரங்களால் துதிக்கின்றார்கள். எஞ்சின அத்துவரியுக்களும் (வேட்போர்களும்) எசுரென்னும் மந்திரங்களால் இந்திரனைத் துதிக்கின்றார்கள் என்பதாம்.

அர்க்கம் என்றது மந்திரம் என்னும் பொருண்மேனின்றது. யாஸ்க முனிவரும்:—"இதனால் அருச்சிக்கப்படுதலின் அர்க்கம் என்றது மந்திரமாம்" என நிருத்தம் 5-4-ல் கூறியுள்ளார். (5)

மந்திரம் 6.

१ २ ३ १ २ ३ १२ ३ २ ३ २

199. इन्द्र इषे ददातु न ऋभुक्षणमृभुं रयिम् ।

३ १ २ ३ १ २

वाजी ददातु वाजिनम् ॥ ६ ॥

இருக்கு 8-93-34.

இந்த்ர இஷே ததாது ந ருபுக்ஷணம்ருபும் ரயிம் ।
வாஜீ ததாது வாஜிநம் ॥

அந்வயம்.

इन्द्रः, ऋभुक्षणं, रयिं, ऋभुं, नः, इषे, ददातु, वाजी, वाजिनं, ददातु ॥

பதவுரை.

इन्द्रः	இந்த்ர꞉	என்னுற்றுதிக்கப்பட்ட இந்திரன்
ऋभुक्षणं	ருபுக்ஷணம்	அனைத்தினும் மேம்பட்ட
रयिं	ரயிம்	கொடையாளியாகிய
ऋभुं	ருபும்	சோமபானத்தால் மரணமிலாத் தன்மைவாய்ந்த, ரிபு என்னுந் தேவதையை
नः	ந꞉	எங்கட்கு
इषे	இஷே	அன்னத்தின் பொருட்டுக்
ददातु	ததாது	கொடுப்பானுக. அல்லது
वाजी	வாஜீ	வலியுள்ள இந்திரன்
वाजिनं	வாஜிநம்	ஆற்றலுடைய இளைய சகோதரனைக் (அன்னத்தின்பொருட்டுக்)
ददातु	ததாது	கொடுப்பானுக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—6. சுருதகக்ஷ ரிஷி.

இந்திரன் இவ்வாறு எங்களால் துதிக்கப்பட்டு அதனுற் பிரியமுடையோனுகி, வேள்வி முதலிய கருமங்களைச் செய்ததால் மகத்தானவனும், அல்லது எல்லாச் சகோதரர்க்குள்ளுஞ் சிறந்த சௌதன்வனை, அல்லது மூன்றுஞ் சவனத்தில் பிரசாபதி, சவிதா என்னு மிருவர்களுக்குட் சோமபானத்தால் பெரியோனுனவனும், அல்லது கொடையாளியும், அல்லது, சோமபானத்தால் மனிதத்தன்மை நீங்கி தேவத்தன்மையை யடைந்தவனுமாகிய ரிபு என்னுந் தேவனை எங்கட்கு அன்னத்தின் பொருட்டுத் தருவானுக. அல்லது அவ்வாறே ஆற்றலுடைய இந்திரன், வலியுடைய 'வாசம்' எனப் பெயர் பூண்டானை அல்லது இளைய சகோதரனுகிய சௌதன்வனை, எங்களுடைய அன்னலாபத்தின் பொருட்டுக் கொடுப்பானுக. (6)

குறிப்பு :—இந்திரன் சந்ததிகளையும் குதிரைகளையுங் கொடுப்பானுக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 7.

१ २ ३ २ ३२ ३ २ ३ १ २र

200. इन्द्रो अङ्ग महद्भयमभी षदपचुच्यवत् ।

२र ३ १ २र

स हि स्थिरो विचर्षणिः ॥ ७ ॥

இருக்கு 2-61-10.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌅𑌙𑍍𑌗 𑌮𑌹𑌦𑍍𑌭𑌯𑌮𑌭𑍀 𑌷𑌦𑌪𑌚𑍁𑌚𑍍𑌯𑌵𑌤𑍍 ।

𑌸 𑌹𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑍋 𑌵𑌿𑌚𑌰𑍍𑌷𑌣𑌿𑌃 ॥

அந்வயம்.

सस्थिरः, विचर्षणिः, इन्द्रः, महत्, भयं, अङ्गम्, हि अभीषत्, अपचुच्यवत् ॥

பதவுரை.

सस्थिरः	𑌸𑌸𑍍𑌥𑌿𑌰𑌃	நிலையுடன் கூடியவனும்
विचर्षणिः इन्द्रः	𑌵𑌿𑌚𑌰𑍍𑌷𑌣𑌿𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃	உலகத்தைக் காண்போனுமாகிய இந்திரன்
महत्	𑌮𑌹𑌤𑍍	மிகுந்த
भयं	𑌭𑌯𑌂	பயத்தை
अङ्गम्	𑌅𑌙𑍍𑌗𑌂	விரைவில்
हि	𑌹𑌿	நிச்சயமாகக்
अभीषत्	𑌅𑌭𑍀𑌷𑌤𑍍	குறைக்கின்றான்
अपचुच्यवत्	𑌅𑌪𑌚𑍁𑌚𑍍𑌯𑌵𑌤𑍍	நிவிர்த்தியுஞ் செய்கின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—7. கிருத்சமத ரிஷி.

இந்திரன் மிகுந்த பயத்தை, அல்லது, பயகாரணத்தை விரைவில் அடக்குகின்றான், நீக்கியும் விடுகின்றான். அல்லது, பயகாரணத்தை விலக்குவானாக. யாதினாலெனின்? எவராலுமசைக்க முடியாதவனும், உலகத்தைக் காண்பவனும் இருக்கின்றான் ஆதலின் என்க. (7)

மந்திரம் 8.

२ १ २　　३ १ २ ३ १ २　　३ १२

201. इमा उ त्वा सुते सुते नक्षन्ते गिर्वणो गिरः ।

२ ३ ३२उ　　३ १ २

*गावो वत्सं न धेनवः ॥ ८ ॥

இருக்கு 6-45-28.

𑌇𑌮𑌾 𑌉 𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌤𑍇 𑌸𑍁𑌤𑍇 𑌨𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇 𑌗𑌿𑌰𑍍𑌵𑌣𑍋 𑌗𑌿𑌰𑌃 ।

𑌗𑌾𑌵𑍋 𑌵𑌤𑍍𑌸𑌂 𑌨 𑌧𑍇𑌨𑌵𑌃 ॥

அந்வயம்.

गिर्वणः, सुते सुते, इमाः, गिरः, धेनवः, गावः, वत्सं न, त्वा, नक्षन्ते ॥

பதவுரை.

गिर्वणः !	𑌗𑌿𑌰𑍍𑌵𑌣𑌃 !	வாக்காற் றுதிக்கத்தக்க இந்திர !
सुते सुते	𑌸𑍁𑌤𑍇 𑌸𑍁𑌤𑍇	சோமரசத்தைப் பிழிந்தவிடத்து
इमाः	𑌇𑌮𑌾𑌃	(எமது) இந்தத்
गिरः	𑌗𑌿𑌰𑌃	துதிகள்,
धेनवः	𑌧𑍇𑌨𑌵𑌃	பால் தருங்
गावः	𑌗𑌾𑌵𑌃	கோக்கள்
वत्सं न	𑌵𑌤𑍍𑌸𑌂 𑌨	(தமது) கன்றையடைவன போன்று
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னை
नक्षन्ते	𑌨𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇	அடைகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—9.　இருக்கு—8.　பரத்துவாச ரிஷி.

தோத்திர வாக்குகளாற் றுதிக்கத் தக்கோய்! இந்திர! சோமரசத்தைப் பிழிந்தவிடத்து எமது தோத்திர வாக்குகள், பாற் பசுக்கள் கன்றை விரைவில் அடைவன போன்று உன்னைச் சூழ்கின்றன என்பதாம். (8)

---

* वत्सं गावो, என்பது இருக்கு.

மந்திரம் 9.

२ ३ २ ३१ २ ३२ ३ १ २ ३ १२
202. इन्द्रा नु पूषणा वयꣳ सख्याय स्वस्तये ।
३२३ १ २
हुवेम वाजसातये ॥ ९ ॥

இருக்கு 6-57-1.

இந்த்ரா நு பூஷணா வயம் ஸக்யாய ஸ்வஸ்தயே ।
ஹுவேம வாஜஸாதயே ॥

அந்வயம்.

इन्द्रा पूषणा, नु, वयं, स्वस्तये, सख्याय, वाजसातये, हुवेम ॥

பதவுரை.

इन्द्रा पूषणा	இந்த்ரா பூஷணா	இந்திரன் பூஷா என்னுமித்தேவதைகளை
नु	நு	இப்போது
वयं	வயம்	நாங்கள்
स्वस्तये	ஸ்வஸ்தயே	மங்களமாகிய
सख्याय	ஸக்யாய	மித்திரத் தன்மையின் பொருட்டும்
वाजसातये	வாஜஸாதயே	அன்னத்தையேனும், வலியையேனும் அடைதற்பொருட்டும்
हुवेम	ஹுவேம	ஆவாகனஞ் செய்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—9. பரத்துவாச ரிஷி.

இந்திரன், பூஷா, என்னு மிவ்விரண்டு தேவதைகளையும், இப்போது நலத்திற்கும், அழகிய நண்பனுந் தன்மைக்கும், அன்னம் அல்லது ஆற்றலை அடைதற் பொருட்டும் நாங்கள் ஆவாகனஞ் செய்கின்றோம், அல்லது துதிக்கின்றோம் என்பதாம். (9)

மந்திரம் 10.

१ २ ३ १ २ ३ १ २र
203. न कि इन्द्र त्वदुत्तरं न ज्यायो अस्ति वृत्रहन् ।
२ ३२३ ३ २
न क्येवं यथा त्वम् ॥ १० ॥

இருக்கு 4-30-1.

ந கி ஏந்த்₃ர த்வது₃த்தரம் ந ஜ்யாயோ அஸ்தி வ்ருத்ரஹந் ।
ந கேவம் யதா₂ த்வம் ॥

அந்வயம்.

वृत्रहन् !, इन्द्र !, त्वत्, उत्तरः, न कि अस्ति, ज्यायान्, (हे इन्द्र !) त्वं, यथा, एवं, न कि अस्ति ॥

பதவுரை.

वृत्रहन् !	வ்ருத்ரஹந் !	விருத்திராசுரனைக் காய்ந்த
इन्द्र !	இந்த்₃ர !	இந்திரனே! (வானுலகத்தும்)
त्वत्	த்வத்	நின்னில்
उत्तरः	உத்தர꞉	மிகச் சிறந்தவர்
न कि अस्ति	ந கி அஸ்தி	யாருமிலர்.
ज्यायान्	ஜ்யாயாந்	மிகப் புகழுற்றவரும் (இலர்.)
(हे इन्द्र !)	(ஹே இந்த்₃ர !)	(இந்திரனே !)
त्वं	த்வம்	நீ, (உலகத்தில்)
यथा	யதா₂	எவ்வண்ணம் கீர்த்தியடைந்தனையோ,
एवं	ஏவம்	இவ்வணம் கீர்த்தி பெற்றவர்
न कि अस्ति	ந கி அஸ்தி	ஒருவருமிலர்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—10. வாமதேவ ரிஷி.

விருத்திராசுரனைக் கொன்ற இந்திரனே! வானுலகத்திலும், நின்னில் மிகப் புகழுற்றவர் யாருமிலர். நின்னில் மேம்பட்டாரும் ஒருவரு மிலர். ஈண்டு வானுலகத்திலும் என்பது எஞ்சி நின்றது. இந்திர ! நீ உலகத்தில் கீர்த்திபெற்றது போன்று கீர்த்தி பெற்றவர் ஒருவருமே இலர். அதாவது உலகில் இந்திரனைப் போன்றார் ஒருவருமே இலர் என்பது பொருள். (10)

ஒன்பதாவது கண்டம்.

முற்றும்.

பத்தாவது கண்டம்.

பிரபாடகம்—3. அத்தியாயம்—2. கண்டம்—10.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३१२ ३ १२ ३१ २र १ २
204. तरणिं वो जनानां त्रदं वाजस्य गोमतः ।
३ २३ १२
समानमु प्रशंसिषम् ॥ १ ॥

இருக்கு 8-45-28.

தரணிம் வோ ஜநாநாம் த்ரதம் வாஜஸ்ய கோமத꞉ ।
ஸமாநமு ப்ரஶம்ஸிஷம் ॥

அந்வயம்.

(हे अस्मदीयाः जनाः !), वः, जनानां, तरणिं, त्रदं, गोमतः, वाजस्य,
समानं उ, प्रशंसिषम् ॥

பதவுரை.

(हे अस्मदीयाः)	(ஹே அஸ்மதீயா꞉)	(எமது)
(जनाः !)	(ஜநா꞉ !)	(சனங்களே !)
वः	வ꞉	உங்களுடைய
जनानां	ஜநாநாம்	புத்திர, பௌத்திரர் முதலிய மக்களைக்
तरणिं	தரணிம்	கரையேற்றுபவனும்,
त्रदं	த்ரதம்	சத்துருக்கட்குப் பயங்கொடுப்போனும்,
गोमतः	கோமத꞉	பசுக்களை யுடையோனும்
वाजस्य	வாஜஸ்ய	அன்னமளிப்போனுமாகிய இந்திரனை
समानं उ	ஸமாநம் உ	இடையறாது
प्रशंसिषं	ப்ரஶம்ஸிஷம்	நன்கு துதிக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—1. திரிசோக ரிஷி.

என்னைச்சேர்ந்த சனங்களே! உங்களுடைய புத்திரன், பௌத்திரன், முதலியவர்களைக் கரையேற்றுவோனும், சத்துருக்களைப் பயப்படுத்துவோனும், கோக்களை யுடையோனும், ஆற்றலையும், அன்னத்தையுங் கொடுப்போனுமாகிய இந்திரனை எப்போதும் யான் இனிது துதிக்கின்றேன். (1)

மந்திரம் 2.

१ २　　　३ २३　२३　१　२र

205· असृग्रमिन्द्र ते गिरः प्रति त्वामुदहासत ।

३ १ २　३१ २र

सजोषा वृषभं पतिम् ॥ २ ॥

அஸ்ருக்ரமிந்த்ர தே கிர: ப்ரதி த்வாமுதஹாஸத ।
ஸஜோஷா வ்ருஷபம் பதிம் ॥

அந்வயம்.

हे इन्द्र !, ते गिरः, असृग्रं, वृषभं, पतिं, त्वां प्रति, उदहासत, सज

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே!
ते गिरः	தே கிர:	உனது துதிகளை
असृग्रं	அஸ்ருக்ரம்	{ யான் இயற்றினேன், (அ. கள்)
वृषभं	வ்ருஷபம்	{ மனோவேட்கையை வருஷிப்பவனும்
पतिं	பதிம்	{ சோம மருந்துவோனும், அல்லது, வேள்வித் தலைவர்களைக் காப்பாற்றுவோனும்
त्वां प्रति	த்வாம் ப்ரதி	{ சுவர்க்கத்திலிருக்கின்றவனுமாகிய உன்னைக் குறித்து
उदहासत	உதஹாஸத	வந்து சேர்ந்தன.
सजोषा	ஸஜோஷா	{ அவைகளை நீயும் பெற்றுக் கொண்டனை.

சாயண பாடியம்.

கண்டம்—10.　இருக்கு—2.　மதுச்சந்த ரிஷி.

இந்திரனே! நினது சம்பந்தமான துதிகளை இயற்றி யிருக்கின்றேன். அத்துதிகள், சுவர்த்திலிருக்கும் உன்னைக்குறித்து மேலெழும்பி வந்து சேர்ந்தன. அத்தன்மைய துதிகளை நீயும் ஏற்றுக்கொண்டவனா யிருக்கின்றாய். நீ எவ்வண்ணத்தன் எனின்! விரும்பியவைகளை வருஷிப்பவன். மற்றும், சோமரசமருந்துவோன். அல்லது, எசமானர்களைப் பாதுகாப்பவன். (2)

'காப்பாற்றுவோன் அல்லது அருந்துவோன், என 10—11-ல் யாஸ்க முனிவருங் கூறியுள்ளாராதலின் (பதி என்பதற்கு அருந்துவோன் காப்பாற்றுவோன் என இருபொருளுங் கொள்ளப்பட்டது.)

செய்யாத மருத்துத் தேவதைகள் இரட்சிக்கின்றார்களோ, அங்ஙனமே அரியமா தேவதையும் எவனைக் காப்பாற்றுகின்றதோ! எவ் யெசமானனை மித்திர தேவதையும் காப்பாற்றுகின்றதோ, அவனை என்க. அம்மனிதன் என்றது இத்தன்மையனானவனை எனச் சேர்த்துக்கொள்க. (3)

குறிப்பு.—ஈண்டு ‘च’ என்றது புகழாகிய பொருளைத் தந்து நின்றது.

மந்திரம் 4.

२ ३ १२ ३ २ ३ १ २र ३ १ २
207. यद्वीडाविन्द्र यत्स्थिरे यत्पर्शाने पराभृतम् ।
१२ ३ १ २र
वसु स्पार्हं तदाभर ॥ ४ ॥

இருக்கு 8-6-45.

யத்³வீடா³விந்த்³ர யத்ஸ்தி²ரே யத்பர்ஶாநே பராப்⁴ருதம் ।
வஸு ஸ்பார்ஹம் ததா³ப⁴ர ॥

அந்வயம்.

हे इन्द्र !, वीडौ, यत्, स्थिरे, यत्, पर्शाने, यत्, पराभृतं, स्पार्हं, तत्, वसु, आभर ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்³ர !	இந்திரனே! நீ
वीडौ	வீடௌ³	எவராலும் அசைக்கமுடியாதவனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
स्थिरे	ஸ்தி²ரே	நிலைத்த புருடனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
पर्शाने	பர்ஶாநே	பொறுமையில்லாதவனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
पराभृतं	பராப்⁴ருதம்	நிறுத்தி வைத்திருக்கின்றனையோ,
स्पार्हं	ஸ்பார்ஹம்	விரும்பத்தக்க
तत्	தத்	அந்தத்
वसु	வஸு	தனத்தை
आभर	ஆப⁴ர	எமக்குக் கொடுப்பாயாக.

செய்யாத மருத்துத் தேவதைகள் இரட்சிக்கின்றார்களோ, அங்ஙனமே அரியமா தேவதையும் எவனைக் காப்பாற்றுகின்றதோ! எவ் யெசமானனை மித்திர தேவதையும் காப்பாற்றுகின்றதோ, அவனை என்க. அம்மனிதன் என்றது இத்தன்மையனானவனை எனச் சேர்த்துக்கொள்க. (3)

குறிப்பு.—ஈண்டு 'ঘ' என்றது புகழாகிய பொருளைத் தர்து நின்றது.

மந்திரம் 4.

२ ३ १२ ३ २ ३ १ २२३ १२
207. यद्वीडाविन्द्र यत्स्थिरे यत्पर्शाने पराभृतम् ।
१२ ३ १ २२
वसु स्पार्हं तदाभर ॥ ४ ॥

இருக்கு 8-6-45.

யத்வீடாவிந்த்ர யத்ஸ்திரே யத்பர்சாநே பராப்ருதம் ।
வஸு ஸ்பார்ஹம் ததாபர ॥

அந்வயம்.

हे इन्द्र !, वीडौ, यत्, स्थिरे, यत्, पर्शाने, यत्, पराभृतं, स्पार्हं, तत्, वसु, आभर ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே! நீ
वीडौ	வீடௌ	எவராலும் அசைக்கமுடியாதவனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
स्थिरे	ஸ்திரே	நிலைத்த புருடனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
पर्शाने	பர்சாநே	பொறுமையில்லாதவனிடத்தும்
यत्	யத்	யாதொரு தனத்தை
पराभृतं	பராப்ருதம்	நிறுத்தி வைத்திருக்கின்றனையோ,
स्पार्हं	ஸ்பார்ஹம்	விரும்பத்தக்க
तत्	தத்	அந்தத்
वसु	வஸு	தனத்தை
आभर	ஆபர	எமக்குக் கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—4. திரிசோக ரிஷி.

இந்திர ! உன்னால் திடமாகியவனிடத்தில் அதாவது :—அன்னியர்களாலசைக்கமுடியாதவனிடத்தில் யாதொரு தனம் வைக்கப்பட்டிருக்கின்றதோ, இயற்கையிலேயே அசையாதவனிடத்தும் யாதொரு தனம் வைக்கப்பட்டிருக்கிறதோ, விவேகமில்லாதவனிடத்தும் யாதொரு தனம் வைக்கப்பட்டிருக்கின்றதோ, யாதொரு தனம் விரும்பற்பாலதோ, அந்தத் தனத்தை எமக்குக் கொண்டுவந்து தருவாயாக. (4)

குறிப்பு.—பெட்டியிலும், மலையின் கண்ணும், கிணற்றிலும் உள்ள தனத்தைக் கொண்டுவந்து கொடுப்பாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 5.

३ १ २ ३१ २३ १ २र ३ २
208· श्रुतं वो वृत्रहन्तमं प्र शर्द्धं चर्षणीनाम् ।
३ २३ १२ २३
*आशिषे राधसे महे ॥ ५ ॥

இருக்கு 8-9-93.

ஶ்ருதம் வோ வ்ருத்ரஹந்தமம் ப்ர ஶர்த்⁴ம் சர்ஷணீநாம் ।
ஆஶிஷே ராத⁴ஸே மஹே ॥

அந்வயம்.

श्रुतं, वृत्रहन्तमं, शर्द्धं, चर्षणीनां, वः, महे, राधसे, प्र आशिषे ॥

பதவுரை.

श्रुतं	ஶ்ருதம்	கீர்த்தியுடையவனும்
वृत्रहन्तमं	வ்ருத்ரஹந்தமம்	விருத்திராசுரனைக்கொன்ற சிறப்புடையோனும்
शर्द्धं	ஶர்த்⁴ம்	மிக வேகமுடையவனுமாகிய இந்திரனைக் குறித்து
चर्षणीनां	சர்ஷணீநாம்	மனிதர்களுக்குள்
वः	வ:	உங்கள் நிமித்தம்
महे	மஹே	மிகுந்த
राधसे	ராத⁴ஸே	தனத்தின் பொருட்டு
प्र आशिषे	ப்ர ஆஶிஷே	சந்தோஷித்து அர்ப்பணஞ் செய்கின்றேன்.

* आशुष, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—5. சுகக்ஷ ரிஷி.

மனிதர்களுக்குள் உங்களை முன்னிட்டு, கீர்த்தியுள்ளவனும் விருத்திராசுரனைக்கொன்ற சிறப்புடையோனும், ஆற்றலை அல்லது, மிகுந்த வேகத்தையுடையவனுமாகிய இந்திரனுக்கு அர்ப்பணஞ் செய்கின்றேன். அதாவது அவ் விந்திரனைத் தோத்திரங்களாற் பிரியப்படுத்தி உங்கட்காக தேவவுணவுகளை மிகுதியாய்க் கொடுக்கின்றேன் என்பதாம். எதன் பொருட்டெனின்? உங்கட்கு மிகுந்த தனத்தைக் கொடுத்தற் பொருட்டென்க. (5)

குறிப்பு.—வீரர்களுக்குள் வலிவுள்ள அத்தன்மைய இந்திரனை அடைகின்றேன் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 6.

१२ ३ १२ ३ १२ ३ १२
209. अरं त इन्द्र श्रवसे गमेम शूर त्वावतः ।
१ २ ३ १ २
अरंꣳ शक्र परेमणि ॥ ६ ॥

அரம் த இந்த்ர ஶ்ரவஸே கமேம ஶூர த்வாவத꞉ ।
அரம் ஶக்ர பரேமணி ॥

அங்வயம்.

हे शूर !, इन्द्र !, ते, श्रवसे, अरं, गमेम, हे शक्र !, त्वावतः, परेमणि, अरम् ॥

பதவுரை.

(हे) शूर !	(ஹே) ஶூர !	சூரனாகிய
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
ते	தே	உன்னுடைய
श्रवसे	ஶ்ரவஸே	கீர்த்தியைக் கேட்க
अरं	அரம்	போதுமானவரை
गमेम	கமேம	முயல்வோமாக.
हे शक्र !	ஹே ஶக்ர !	ஆற்றலுடைய இந்திர !
त्वावतः	த்வாவத꞉	உனக்கொப்பாக
परेमणि	பரேமணி	{ ஏனைய தேவர்களின் கீர்த்தியையும்
अरम्	அரம்	வேண்டியவரை அடைவோமாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—6. வாமதேவ ரிஷி.

சூரனாகிய இந்திரனே! கேட்கத்தக்க உன்னுடைய கீர்த்தியைக் கேட்பதற்கு வேண்டியவாறு முயல்வோமாக. வலியுள்ள இந்திர! உனக்கொத்த வினைய தேவர்களின் மேம்பாட்டின் நிமித்தமாயுள்ள கீர்த்தியையும் வேண்டியவரை அடைவோமாக. அதாவது நின்னுடைய புகழைப்போன்று நின்னை யொத்த தேவர்களின் புகழையும் அடைவோமாக என்பது பொருள்.

குறிப்பு.—அவிகளுடன் உன்னை யடைகின்றோம் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 7.

३ १२ ३ १ २ ३१२ ३ १ २
210. धानावन्तं करम्भिणमपूपवन्तमुक्थिनम् ।
१ २ ३ १२
इन्द्र प्रातर्जुषस्व नः ॥ ७ ॥

இருக்கு 3-52-2.

யாநாவந்தம் கரம்பிணமபூபவந்தமுக்திநம் ।
இந்த்ர ப்ராதர்ஜுஷஸ்வ நஃ ॥

அந்வயம்.

हे इन्द्र !, धानावन्तं, करम्भिणं, अपूपवन्तं, उक्थिनं, नः, प्रातः, जुषस्व ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! நீ
धानावन्तं	யாநாவந்தம்	கோதுமைப் பொரிகளை யுடையதும்
करम्भिणं	கரம்பிணம்	தயிர் கலந்த மாவையுடையதும்
अपूपवन्तं	அபூபவந்தம்	வேள்வி சம்பந்தமாகிய புரோடாச மென்னும் பணியாரத்தோடு கூடியதும்
उक्थिनं	உக்திநம்	துதி செய்யப்பட்டதுமாகிய
नः	நஃ	எங்களுடைய சோமத்தை
प्रातः	ப்ராதஃ	விடியற்காலத்தில் செய்யும் ஓமத்தில்
जुषस्व	ஜுஷஸ்வ	அருந்துவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—7. விசுவாமித்திர ரிஷி.

எசமானன் கூறுகின்றான் :—இந்திரனே ! வறுத்த கோதுமைப் பொரிகளையுடையதும், தயிர்கலந்த மாவோடு கூடியதும், ஓமம்பண்ணும் புரோடாசத் (பணியாரத்)தோடு கூடியதும், தோத்திரஞ் செய்யப்பட்டதுமாகிய எங்களுடைய இச் சோமரசத்தை நீ காலையோமத்திலருந்துவாயாக. (7)

மந்திரம் 8.

३ १ २र ३ १२ ३ १२ ३ १२
211. अपां फेनेन नमुचेः शिर इन्द्रोदवर्तयः ।
२ ३ १ २र ३ १२
विश्वा यदजय स्पृधः ॥ ८ ॥

அபாம் ஃபேநேந நமுசே: ஶிர இந்த்³ரோத³வர்தய: ।
விஶ்வா யத³ஜய ஸ்ப்ருʼத⁴: ॥

அந்வயம்.

इन्द्र !, यत्, विश्वाः, स्पृधः, अजयः, अपां फेनेन, नमुचेः, शिरः, उदवर्तयः ॥

பதவுரை.

इन्द्र !	இந்த்³ர !	இந்திர ! (நீ)
यत्	யத்	எப்போது
स्पृधः विश्वाः	ஸ்ப்ருʼத⁴: விஶ்வா:	போரிடும் எல்லா அசுர சேனைகளையும்
अजयः	அஜய:	வென்றனையோ, (அப்போது)
अपां फेनेन	அபாம் ஃபேநேந	வச்சிர வடிவமாகிய நீர் நுரையால்
नमुचेः	நமுசே:	நமுசி, என்னு மசுரனுடைய
शिरः	ஶிர:	தலையை
उदवर्तयः	உத³வர்தய:	அறுத்துவிட்டாய்.

சாயண பாடியம்

கண்டம்—10. இருக்கு—8. கோசூத்தி அசுவசூத்தி ரிஷி.

முன் காலத்தில் இந்திரன் அசுரர்களை வென்றும், நமுசி, என்னும் அசுரனைப் பிடிக்க முடியாதவனாயினன். அன்றியும் போர் செய்த அவ்வசுரனால் இந்திரன் பிடிக்கப்பட்டான். அப்போது அவ்வசுரன் இரவிலும்

பகலிலும், உலர்ந்த அல்லது ஈரமாகிய ஆயுதத்தால் என்னைக் கொல்லாதிருப்பையேல், உன்னை விட்டுவிடுகின்றேன் எனப் பிடிப்பட்டுள்ள இந்திரனுக்குக் கூறினன். அதற்குடன்பட அவ் விந்திரன் அவ் வசுரனால் விடப்பட்டவனாகி, இரவு பகற் காலங்களின் சந்தியில் (இடையில்) உலர்ந்ததற்கும் ஈரமானதற்கும் வேறாகிய நீர் நுரையால் அவ்வசுரனுடைய தலையையறுத்துவிட்டனன் என்னும் இப்பொருள் இம் மந்திரத்திற் கூறப்படுகின்றது.

இந்திரனே! நீ நீர்நுரை வடிவமாகிய வச்சிராயுதத்தால் நமுசி, என்னும் அசுரனுடைய தலையை அறுத்துவிட்டாய். எப்போதெனிலோ? போராடும் அசுர சேனைகளனைத்தையும் வென்றவனுயுள்ள காலத்து. "விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன் அசுரர்களைச் செயித்து நமுசி, என்னும் அசுரனைக் கொன்றிலன்" என்பது முதலிய பிராம்மண வாக்கியம். ஈண்டு வேட்போர்களாற் சிந்திக்கற்பாலது. (8)

குறிப்பு.—பிராம்மணம் என்பது மறையில் ஒரு பாகம்.

மந்திரம் 9.

३ १ २ ३ १ २ ३ २ ३ २ ३ १ २
212. इमे त इन्द्र सोमाः सुतासो ये च सोत्वाः |:
१ २
तेषां मत्स्व प्रभूवसो ॥ ९ ॥

𑌇𑌮𑍇 𑌤 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑍋𑌮𑌾𑌃 𑌸𑍁𑌤𑌾𑌸𑍋 𑌯𑍇 𑌚 𑌸𑍋𑌤𑍍𑌵𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑌤𑍍𑌸𑍍𑌵 𑌪𑍍𑌰𑌭𑍂𑌵𑌸𑍋 ॥

அந்வயம்.

हे इन्द्र!, ते, इमे, सोमाः, सुतासः, च, ये, सोत्वाः, प्रभूवसो, तेषां, मत्स्व ॥

பதவுரை.

हे इन्द्र!	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰!	இந்திரனே!
ते	𑌤𑍇	நின் பொருட்டு
इमे	𑌇𑌮𑍇	இந்தச்
सोमाः	𑌸𑍋𑌮𑌾𑌃	சோமரசம்
सुतासः	𑌸𑍁𑌤𑌾𑌸𑌃	பிழியப்பட்டிருக்கின்றது.
च	𑌚	இன்னும்

ये	யெ	எச் சோமரசம்
सोत्वाः	ஸொத்வாஃ	தேடப்படுமோ,
तेषां	தெஷாம்	அதைக் குறித்து
प्रभूवसो !	ப்ரபூவஸொ !	மிகுந்த தனமுடைய இந்திர ! நீ
मत्स्व	மத்ஸ்வ	களிப்படைவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—9. வாமதேவ ரிஷி.

இந்திர ! நின் பொருட்டு முன்னே காணப்படுகின்ற இச் சோமரசம் பிழிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்குமேல் எச் சோமரசம் பிழிந்து எடுக்கப்படுமோ, பிழிந்து எடுத்ததும் எடுக்கவேண்டுவதுமாகிய அதைக் குறித்து மிகத் திரவியமுள்ள இந்திர ! நீ களிப்படைவாயாக. (9)

மந்திரம் 10.

१ २ ३ २ ३ १ २ ३ २ ३ १ २

213. **तुभ्यꣳ सुतासः सोमाः स्तीर्णं बर्हिर्विभावसो ।**

३ १ २

स्तोतृभ्य इन्द्र मृडय ॥ १० ॥

இருக்கு 8-93-25.

துப்₄யம் ஸுதாஸஃ ஸொமாஃ ஸ்தீர்ணம் ப₃ர்ஹிர்விபா₄வஸொ ।
ஸ்தொத்ருப்₄ய இந்த்₃ர ம்ருட₃ய ॥

அந்வயம்.

विभावसो !, तुभ्यं, सोमाः, सुतासः, बर्हिः, स्तीर्णं, इन्द्र !, स्तोतृभ्यः, मृडय ॥

பதவுரை.

विभावसो !	விபா₄வஸொ !	ஒளி வாய்ந்த தனமுடைய இந்திர !
तुभ्यं	துப்₄யம்	நின் பொருட்டுச்
सोमाः	ஸொமாஃ	சோமரசம்
सुतासः	ஸுதாஸஃ	பிழியப்பட்டிருக்கின்றது.
बर्हिः	ப₃ர்ஹிஃ	தருப்பையாசனமும்
स्तीर्णं	ஸ்தீர்ணம்	விரிக்கப்பட்டிருக்கின்றது.
इन्द्र !	இந்த்₃ர !	இந்திரனே ! நீ (அவ் வாசனத்தமர்ந்து சோமத்தைப் பருகி)
स्तोतृभ्यः	ஸ்தொத்ருப்₄யஃ	துதிக்கின்ற எங்கட்கு
मृडय	ம்ருட₃ய	நலஞ்செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—10. சுருதகக்ஷ ரிஷி.

ஒளிர்கின்ற தனமுடையோய்! அல்லது ஒளியால் வியாபகமுடைய இந்திர! நின் பொருட்டுச் சோமரசம் பிழியப்பட்டிருக்கின்றது. அங்ஙனமே தருப்பையாசனமும் விரித்திருக்கின்றது. இக்காரணத்தால் இந்திரனே! நீ தருப்பை யாசனத்தி லுட்கார்ந்துகொண்டு சோமத்தைப் பருகி எங்கட்கு அருள் செய்வாயாக. அல்லது நலஞ் செய்வாயாக என்பதாம். (10)

பத்தாவது கண்டம்.

முற்றும்.

பதினோராவது கண்டம்

பிரபாடகம்—3. அத்தியாயம்—2. கண்டம்—11.

ஒன்பது மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

२ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २
214. **आ व इन्द्रं क्रिविं यथा वाजयन्तः शतक्रतुम् ।**
१ २ ३ १ २
मꣳहिष्ठꣳ सिञ्च इन्दुभिः ॥ १ ॥

இருக்கு 1-30-1.

ஆ வ இந்த்ரம் க்ரிவிம் யதா வாஜயந்த: ஶதக்ரதும் ।
மம்ஹிஷ்டம் ஸிஞ்ச இந்துபி: ॥

அந்வயம்.

(हे ऋत्विग्यजमानाः!,) वाजयन्तः, वः, शतक्रतुं, मंहिष्ठं, इन्द्रं, क्रिविं यथा, इन्दुभिः, आसिञ्चे ॥

பதவுரை.

(हे ऋत्विजः!)	(ஹே ருத்விஜ:!)	(வேட்போர்காள்!)
(यजमानाः!)	(யஜமாநா:!)	(வேள்வித் தலைவர்காள்!)
वाजयन्तः	வாஜயந்த:	அன்னத்தை விரும்புகின்ற யாங்கள்
वः	வ:	உங்கள் சம்பந்தமாகிய
शतक्रतुं	ஶதக்ரதும்	நூறு வகைக் கருமமுடையவனும்
मंहिष्ठं	மம்ஹிஷ்டம்	மிகப் பூசிக்கத் தக்கோனுமாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனைக் குறித்து
क्रिविं यथा	க்ரிவிம் யதா	விளை நிலத்திற்கு நீர் பாய்ச்சுவது போன்று
इन्दुभिः	இந்துபி:	சோமரசத்தால்
आसिञ्चे	ஆஸிஞ்சே	இனிது தெளிக்கின்றோம். (வழிபடுகின்றோம்.)

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—1. சுனச்சேப ரிஷி.

அன்னத்தை விரும்புகின்றவர்களும் சுனச்சேப ரிஷி சம்பந்தமுடையவர்களுமான யாங்கள், வேட்போர்களே! வேள்வித் தலைவர்களே! உங்கள் சம்பந்தமுள்ள இந்திரனைக் குறித்துச் சோமரசங்களால் முழுதுந் தெளிக்கின்றோம், அதாவது வழிபடுகின்றோமென்பதாம். எவ் வண்ணத்தனாகிய இந்திரனை யெனின்! நூறு வகைக் கருமங்களை யுடையவனை. மற்றும் விசேடமாய்ப் பூசிக்கத்கோனை என்க, தெளிப்பதில் உவமை:—உழுத நிலத்திற்கு நீர் பாய்ச்சுவது போன்றெனல். (1)

குறிப்பு.—கிணற்றிற்குப் போம் வழியில் சாணத் தண்ணீர் தெளித்தல் போல் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 2.

१ २ ३ १ २र ३ १ २
215. **अतश्चिदिन्द्र न उपा याहि शतवाजया ।**
३ २ ३ १ २
इषा सहस्रवाजया ॥ २ ॥

இருக்கு 8-92-30.

அதஶ்சிதிந்த்ர ந உபா யாஹி ஶதவாஜயா ।
இஷா ஸஹஸ்ரவாஜயா ॥

அந்வயம்.

हे इन्द्र !, अतश्चित्, शतवाजया, सहस्रवाजया, इषा, नः, उपयाहि ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! (நீ)
अतश्चित्	அதஶ்சித்	விண்ணுலகினின்று
शतवाजया	ஶதவாஜயா	நூறுவகை ஆற்றல்களோடும்
सहस्रवाजया	ஸஹஸ்ரவாஜயா	ஆயிரவகை அன்னங்களோடும்
इषा	இஷா	அன்னரசங்களோடும்
नः	ந:	எங்களிடத்து
उपयाहि	உபயாஹி	நோக்கமாய் வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—2. சுருதகக்ஷ ரிஷி.

இந்திர! நீ, இவ் விண்ணுலகினின்றே, அல்லது, இச் சத்துருவினிடத்தினின்று, நூறுவகை வலிகளோடும், அங்ஙனமே ஆயிரவகை அன்னங்களோடும், அன்னரசங்களோடுங் கூடியவனாய் எங்களைக் குறித்து மிக நோக்கமாய் வருவாயாக. (2)

வாஜம் - அன்னம் என நிருக்தம் 2-7ல் கூறியிருக்கின்றது.

மந்திரம் 3.

२ ३ १ २३ १ २ ३१ २ ३ २ ३१२
216. आ बुन्दं वृत्रहा ददे जातः पृच्छाद्वि मातरम् ।
२ ३ १ २र
क उग्राः के ह शृण्विरे ॥ ३ ॥

இருக்கு 8-45-4.

ஆ புந்தம் வ்ருத்ரஹா ததே ஜாத: ப்ருச்சாத்வி மாதரம் ।
க உக்ரா: கே ஹ ஶ்ருண்விரே ॥

அந்வயம்.

वृत्रहा, जातः, बुन्दं, आददे इह, उग्राः, शृण्विरे, केके, मातरं, विपृच्छात् ॥

பதவுரை.

वृत्रहा	வ்ருத்ரஹா	விருத்திரனைக் கொன்ற இந்திரன்
जातः	ஜாத:	பிறந்தவுடனே
बुन्दं	புந்தம்	பாணத்தை
आददे	ஆததே	ஏந்திக்கொண்டு
इह	இஹ	இவ்வுலகில்
उग्राः	உக்ரா:	ஆற்றலைக் காட்டுவோர்களான
शृण्विरे	ச்ருண்விரே	புகழாளர்
के के?	கே கே?	யாவர்? யாவர்? என
मातरं	மாதரம்	அன்னையை
विपृच्छात्	விப்ருச்சாத்	வினவினன்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—3. திரிசோக ரிஷி.

இந்திரன் பிறந்தவுடனே பாணத்தை எடுத்துக்கொண்டு பெரும் வலி யுடையாராய் ஈண்டு வீரத்தாற் கீர்த்தியுடையார் யாவர்? யாவர்? எனத் தனது அன்னையைக் கேட்டனன் என்பதாம். (3)

புந்தம் என்பது பாணமென்று நிருக்தம் 6-32-ல் யாஸ்கமுனிவர் கூறி யுள்ளார்.

மந்திரம் 4.

३१२　　　३१२　३१२
217. वृवदुक्थंᳪ हवामहे सृप्रकरस्नमूतये ।
१२ ३२ ३१२
साधः कृण्वन्तमवसे ॥ ४ ॥

இருக்கு 8-32-10.

வ்ருவதுக்தம் ஹவாமஹே ஸ்ருப்ரகரஸ்நமூதயே ।
ஸாத: க்ருண்வந்தமவஸே ॥

அந்வயம்.

ऊतये, सृप्रकरस्नं, अवसे, साधः, कृण्वन्तम्, वृवदुक्थं, हवामहे ॥

பதவுரை.

ऊतये	ஊதயே	உலகத்தை யிரக்ஷித்தற்பொருட்டு
सुप्रकरस्नं	ஸுப்ரகரஸ்நம்	கை தூக்கிக்கொண்டு நிற்பவனும்,
अवसे	அவஸே	உலக பரிபாலனத்திற்காக
साधः	ஸாத:	அநுகூலமாகிய திரவியத்தைக்
कृण्वन्तं	க்ருண்வந்தம்	கொடுக்கப்பட்டவனும்,
वृधदुक्थं	வ்ருதது³க்த²ம்	மிகத் துதிக்கப்படுபவனுமாகிய இந்திரனை
हवामहे	ஹவாமஹே	யாம் அழைக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—4. மேதாதிதி ரிஷி.

உலகத்தைக் காப்பாற்றுவதற்குக் கையெடுத்துக்கொண்டிருப்பவனும், உலக பரிபாலனத்தின் பொருட்டு அநுகூலமாகிய தனத்தைக் கொடுப்பவனும் மிகத் துதிக்கப்பட்டோனுமாகிய இந்திரனை ஆவாகனம் பண்ணுகின்றோம். (அழைக்கின்றோம்).

யாஸ்க முனிவரும் 'மிகத் துதிக்கப்படுவோன்' எனவும், பாது காப்புத் தொழிற் செய்ய எடுத்துள்ள கைகளை யுடையான், எனவுங் கூறியுள்ளார். (4)

மந்திரம் 5.

३ २ ३ १२ ३ १ २ ३ २
218. ऋजुनीती नो वरुणो मित्रो * नयति विद्वान् ।
३ २ ३२ ३ १ २
अर्यमा देवैः सजोषाः ॥ ५ ॥

இருக்கு 1-90-1.

ருஜுநீதீ நோ வருணோ மித்ரோ நயதி வித்வாந் ।
அர்யமா தேவை: ஸஜோஷா: ॥

அந்வயம்.

मित्रः, वरुणः, विद्वान्, नः, ऋजुनीती, नयति, देवैः, सजोषाः, अर्यमा ॥

* नयतु, என்பது இருக்கு.

பதவுரை.

मित्रः	மி த்ர:	பகலுக்குக்குரிய (அபிமானி) தேவனும்
वरुणः	வருண:	இரவுக்குரிய (அபிமானி) தேவனும்
विद्वान्	வித்வாந்	சேர்ப்பிக்கத்தக்க மேலிடத்தை யுணர்ந்தவனும்
नः	ந:	எங்களை
ऋजुनीती	ருஜுநீதீ	நேர்வழியாகக்
नयति	நயதி	கொண்டுபோய்ச் சேர்க்கின்றான்.
देवैः	தெவை:	ஏனைய தேவர்களோடு
सजोषा	ஸஜோஷா	சமப்பிரியமுள்ள
अर्यमा	அர்யமா	பகலிரவுகளை வேறுபடுத்துஞ் சூரியனும், (நல்ல வழியாய் அவ்விடங் கொண்டுபோய்ச் சேர்ப்பானாக எனச் சேர்த்துக் கொள்க.)

சாயண பாடியம்.

கண்டம்—11 இருக்கு—5. கோதம ரிஷி.

பகலுக்கு அபிமான தேவன் மித்திரன், இரவிற்கு அபிமான தேவன் வருணன் என்னு மிவ்விருவர்களும், தாம் கொண்டுபோகத் தக்க உத்தம விடத்தையுணர்ந்து கோணவழியிற் கொண்டுபோகாது நல்வழியிற் கொண்டு போய் எங்களை வேண்டியபலனை அடையுமாறு செய்கின்றார்கள். அங்ஙனமே இந்திரன் முதலிய அன்னிய தேவர்களோடு சமமாகிய பிரியமுள்ளவனும், இரவு பகலை வேறுபடுத்துங் கருத்தனுமாகிய சூரியனும், எங்களை நேர் வழியாய் விரும்பிய இடத்தை அடையுமாறு செய்வானாக. (6)

மந்திரம் 6.

३ २३ २३ २ ३ २ ३२ ३ १ २
219. दूरादिहेव *यत्सतोऽरुणप्सु रशिश्वितत् ।
२ ३२ ३ १ २
वि भानुं †विश्वथाऽतनत् ॥ ६ ॥

தூராதிஹெவ யத்ஸதோऽருணப்ஸு ரஶிஶ்விதத் ।
வி பா⁴நும் விஶ்வதா²ऽதநத் ॥

*यत्सत्यरणप्सु, †दिश्वधातनत्, என்பது இருக்கு.

அந்வயம்.

दूरात्, इह सतः इव, अरुणप्सुः, यत्, अशिश्वितत्, भानुं, विश्वथा, व्यतनत् ॥

பதவுரை.

दूरात्	தூராத்	தூரத்திலிருந்து (கொண்டே)
इह सतः इव	இஹ ஸத: இவ	ஈண்டு அருகிலிருப்பது போன்று
अरुणप्सुः	அருணப்ஸு:	பிரகாசமாகிய உஷா தேவதை
यत्	யத்	எப்போது
अशिश्वितत्	அசிச்வி்தத்	விளங்குகின்றதோ, (அப்போது)
भानुं	பாநும்	பிரகாசத்தைப்
विश्वथा	விச்வதா	பல வகையாக
व्यतनत्	வ்யதநத்	விரியச் செய்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—6. பிரமாதிதி ரிஷி.

தூரத்திலேயே அதாவது ஆகாசத்தின் பூர்வபாகத்திலிருந்துகொண்டே, ஈண்டு அருகில் இருப்பது போன்று பிரகாசமாகிய உஷா தேவதை எப்போது விளங்குகின்றதோ, அப்போது சூரியப் பிரகாசத்தைப் பல வகையாகப் பரவச் செய்கின்றது.

அசுவினி குமாரர்களே! உஷா தேவதை துதிக்கப்பட்டதாய் வெளிப்பட்டது. விதிக்கப்பட்ட அசுவினியின் வேள்வியைக் கேட்க நீங்களிருவரும் வெளிப்படுவீர்களாக, என பிராதரனுவாக உஷா காண்டத்தைத் தழுவி இம் மந்திர வாக்கியத்தை முடித்துக்கொள்க. (6)

மந்திரம் 7.

१ २ ३१ २र

220. आ नो मित्रावरुणा घृतैर्गव्यूतिमुक्षतम् ।

२ ३ १ २

मध्वा रजाꣳसि सुक्रतू ॥ ७ ॥

இருக்கு 3-62-16.

ஆ நோ மித்ரா வருணா க்ருதைர்கவ்யூதி முக்ஷதம் ।
மத்வா ரஜாꣳஸி ஸுக்ரதூ ॥

அந்வயம்.

सुक्रतू, मित्रा वरुणा, नः, गव्यूतिं, घृतैः, आ उक्षतम्, रजांसि, मध्वा उक्षतम् ॥

பதவுரை.

सुक्रतू	ஸு॒க்ரு॒தூ	அழகிய கருமமுடைய
मित्रा वरुणा	மி॒த்ரா வ॒ரு॒ணா	மித்திர வருணர்களே! நீவிர்
नः	ந॒:	எங்களுடைய
गव्यूतिं	ம॒வ்யூ॒திம்	கோக்களுறைவிடத்தை
घृतैः	வ்ரு॒தை॒:	நெய்க்குக் காரணமான பாலால்
आ उक्षतं	ஆ உ॒க்ஷ॒தம்	எங்குந் தெளிப்பீர்களாக. (அதாவது பாற் பசுக்களைக் கொடுப்பீர்களாக.)
रजांसि	ர॒ஜாம்॒ஸி	இலௌகிக வைதிக இடங்களைத்
मध्वा (उक्षतम्)	ம॒த்வா (உ॒க்ஷ॒தம்)	தீம் பாலாற் (றெளிப்பீர்களாக.)

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—7. விசுவாமித்திரர், அல்லது சமதக்கினி ரிஷி.

அழகிய கருமங்களையுடைய மித்திர வருணர்களே! நீவிர் எங்களுடைய கோக்களின் வழியை அதாவது:—கோக்கள் வாழுமிடத்தை, வெண்ணெக்குக் காரணமாகிய பாலினால் முற்றுந் தெளிப்பீர்களாக. பாற் பசுக்களைக் கொடுப்பீர்களாக என்பது பொருள். எங்களுடைய இலௌகிக வைதிக இடங்களை மதுரமாகிய பாலாற் றெளிப்பீர்களாக. (7)

குறிப்பு:—மித்திர வருணர்கள் பசுக்கள் மேயும் புற்பூமியை மழையால் நனைப்பார்களாக. மற்றும் வானுலக மண்ணுலகங்களுக்கும் நீரால் நலஞ் செய்வாராக என்பது ஆங்கிலம்.

மந்திரம். 8.

२३ २ ३२ ३ २३ १ २ ३ १ २
221. **उदु त्ये सूनवो गिरः काष्ठा * यज्ञेष्वत्नत ।**
३ १ २ ३ १ २र
वाश्रा अभिज्ञु यातवे ॥ ८ ॥

இருக்கு 1-37-10.

உது த்யே ஸூநவோ கிர: காஷ்டா யஜ்ஞேஷ்வத்நத ।
வாஶ்ரா அபிஜ்ஞு யாதவே ॥

அந்வயம்.

त्ये, गिरः, सूनवः, यज्ञेषु, काष्ठाः, उत् उ, अत्नत, वाश्राः, अभिज्ञु, यातवे ॥

* अज्मेष्वत्नत, என்பது இருக்கு.

பதவுரை.

त्ये	த்யெ	புகழ்பெற்ற அந்த
गिरः सूनवः	கிர: ஸூநவ:	வாக்கையுண்டாக்கும் வாயுக்கள் (மருத்துகள்)
यज्ञेषु	யஜ்ஞெஷு	தமது யாகங்களிலிருக்கும்போது
काष्टाः	காஷ்டா:	நீரை
उत् उ	உத் உ	மேம்பாடாகப்
अत्नत	அத்நத	பெருக்குகின்றன. (அதை யருந் தற்பொருட்டு
वाश्राः	வாஶ்ரா:	கத்துகின்ற பசுக்களை
अभिज्ञु	அபிஜ்ஞு	கால் தூக்கிக்கொண்டு
यातवे	யாதவெ	ஓடுமாறுஞ் (செலுத்துகின்றன).

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—8. பிரஸ்கண்வ ரிஷி.

புகழுற்ற வாக்கை யுண்டாக்கப்பட்ட அவ் வாயுக்கள், (நா. அண்ணம் முதலிய விடங்களிலிருந்து சலித்துக்கொண்டு வாக்கை யுண்டாக்குகின்றன). தமது வேள்விகளிலிருக்குமிடத்து நீரைப் பெருக்குகின்றன. நீரைப் பெருகச்செய்து அதைக் குடிப்பதன் பொருட்டுச், சத்தமிட்டுக்கொண்டு கால் தூக்கி ஓடுமாறு பசுக்களைச் செலுத்துகின்றன. ஈண்டுச் செலுத்து கின்றன என்பது எஞ்சி நின்றது. (7)

ஈண்டு மூலத்திலுள்ள 'காஷ்டம்' என்பதற்கு = நீர், என்பது பொருளாம் 'அப்புக்களுங் காஷ்டமெனப்படுகின்றன, என்றார் யாஸ்க முனிவரும்.

குறிப்பு—அவிகளை விரும்பி வருவீர்களாக, என அழைக்குமாறு மருத்துக்கள் (பிருஷ்ணியின் புத்திரர்கள்) சத்தத்தோடு மழையையும் வேள்வி செய்யுமிடத்திற்கு அனுப்புகின்றார்கள் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 9.

३२उ ३ १ २ ३ १ २उ ३ २
222. इदं विष्णुर्विचक्रमे त्रेधा निदधे पदम् ।
१ २ ३ २
समूढमस्य पांसुले ॥ ९ ॥

இருக்கு 1-22-17

இதம் விஷ்ணுர்விசக்ரமெ த்ரெதா நிதயெ பதம் ।
ஸமூடமஸ்ய பாம்ஸுலெ ॥

அந்வயம்

विष्णुः, इदं, विचक्रमे, त्रेधा, पदं, निदधे, अस्य, पांसुले, समूढम् ॥

பதவுரை.

विष्णुः	விஷ்ணு:	திரிவிக்கிரமாவதாரங் கொண்ட பகவான்
इदं	இதம்	இவ் வுலகனைத்தையும்
विचक्रमे	விசக்ரமே	விசேடமாய் ஆக்கிரமித்துக் கொண்டனன் (அக்கால்)
त्रेधा	த்ரேதா	மூவகையாக
पदं	பதம்	தனது அடியை
निदधे	நிததே	வைத்தனன்.
अस्य	அஸ்ய	இப் பகவானுடைய
पांसुले	பாம்ஸுலே	தூளியையுடைய திருவடிக்கண்
समूढं	ஸமூடம்	இவ் வுலகனைத்து மடங்கின.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—9. மேதாதிதி ரிஷி.

திரிவிக்கிரமாவதாரமெடுத்த விஷ்ணு, காணப்படும் இவ்வுலகனைத்தையுங் குறித்து விசேடமாக ஆக்கிரமித்தனர். அப்போது மூவகையாகத் தனது அடியை வைத்தனர். இவ் விஷ்ணுவினுடைய தூளிபடிந்த திருவடியின்பால் இவ்வுலகனைத்தும் அடங்கிவிட்டது.

ஈண்டு வியாபகமாகிய விஷ்ணு மூன்றடி வைத்தனர். மண், விண், சுவர்க்கம் என்னும் மூன்றும் தன்மையாம் பொருட்டென்பர் சிலர், கயாசுரன் சிரசில் என்பர் சிலர், எல்லாம் அடங்கியவிடத்து அந்தரிக்கத்தில் திருவடி காணப்படாமையின் தூளிபோல் திருவடி காணப்படவில்லை யென்று அடங்கியதன் உவமையாமென்பர் சிலர், இவ்வாறு யாஸ்க முனிவர் நிருத்தங் கூறுகின்றது. (இது நிருத்தத்தின் கருத்து.) (9)

பதினோராவது கண்டம்

முற்றும்.

பன்னிரண்டாவது கண்டம்

பிரபாடகம்—3. அத்தியாயம்—2. கண்டம்—12.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २ ३ १२ ३ २ ३ १ २२
223. अतीहि मन्युषाविणꣳ सुषुवाꣳसमुपेरय । *
३ २ ३ २ ३ १ २
अस्य रातौ सुतं पिब ॥ १ ॥

இருக்கு ௪-32-22.

அதீஹி மந்யுஷாவிணம் ஸுஷுவாம் ஸமுபேரய ।
அஸ்ய ராதௌ ஸுதம் பிப ॥

அந்வயம்.

हे इन्द्र!, मन्युषाविणं, अतीहि, सुषुवांसं, उपेरय, अस्य, रातौ, सुतं, पिब ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே! நீ
मन्युषाविणं	மந்யுஷாவிணம்	கோபத்தால் சோமரசம் பிழிந்தெடுக்கின்றவனை
अतीहि	அதீஹி	நீக்கிவிடுவாயாக.
सुषुवांसं	ஸுஷுவாம்ஸம்	அழகிய முறையில் இந்த ரசம் பிழிந்தவனை
उपेरय	உபேரய	தனதிடம் வரச் செய்வாயாக.
अस्य	அஸ்ய	இந்தத் தலைவனுடைய
रातौ	ராதௌ	வேள்வியைப்பற்றிய ஈகையில்
सुतं	ஸுதம்	தேடிய சோமரசத்தை
पिब	பிப	அருந்துவாயாக.

* समुपारये इमं रातं सुतं पिबं, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—1. மேதாதிதி ரிஷி.

இந்திரனே! நீ கோபத்தோடு சோமரசம் பிழிந்தெடுக்கின்றவனை யணுகாதே. இவ்விடத்தில் அன்போடு சோமரசம் பிழிந்தவனை அருகில் வரச்செய்துகொள்வாயாக. இந்த எசமானனுடைய வேள்வி ஈகையிற் பிழிந்த சோமரசத்தை யருந்துவாயாக. (1)

குறிப்பு:—சோமரசம்பிழியும் ஏனையோர்கள்பாற் செல்லுமிடத்து மேம்பட்ட சோமரசம் பிழியுமென்னிடத்தும் வருவாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 2.

२ ३ १ २ ३ १ २ २ ३ १ २
224. कदु प्रचेतसे महे वचो देवाय शस्यते ।
१ २२३ १ २
तदिदस्य वर्द्धनम् ॥ २ ॥

கது³ ப்ரசேதஸே மஹே வசோ தே³வாய ஶஸ்யதே ।
ததி³த³ஸ்ய வர்த்³த⁴நம் ॥

அந்வயம்.

महे, प्रचेतसे, देवाय, कदु, वचः, शस्यते, तदित्, अस्य, वर्द्धनम् ॥

பதவுரை.

महे	மஹே	மகத்தாகியதும்
प्रचेतसे	ப்ரசேதஸே	மேம்பட்ட அறிவையுடையதுமாகிய
देवाय	தே³வாய	இந்திர தேவதைக்கு
कदु	கது³	பழிப்புள்ள
वचः	வச꞉	துதியாகிய எனது வாக்கும்
शस्यते	ஶஸ்யதே	புகழுடையதாகின்றது.
तदित्	ததி³த்	அது(வே)
अस्य	அஸ்ய	இவ் வேள்வித் தலைவனுடைய
वर्द्धनं	வர்த்³த⁴நம்	வளர்ச்சிக்குச் சாதனமாம்,

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—2. வாமதேவ ரிஷி.

பேரறிவை யுடையவனும், பிரகாச முதலிய குணங்களோடு கூடிய வனுமாகிய இந்திரனுக்கு, பழிக்கத்தக்க எனது தோத்திர வடிவ வாக்கும் பெருமை யுடையதாகின்றது. அதாவது:—மேம்படுமாறு இந்திரதேவன் அனுக்கிரகிப்பானாக என்பது பொருள். அதுவே இவ் வெசமானன் வளர் வதற்குக் காரணமாகும். அதாவது உண்மையில் முயற்சிக்குச் சாதனம் என்பதாம். (2)

குறிப்பு.—துதிப்பது எதற்கு? இந்திரனுடைய கீர்த்தியை வளரச்செய்வதற்கு என்பது ஆங்கிலக் கருத்து.

மந்திரம் 3.

३ २ ३ २ ३ १ २ ३ १ २३ १ २र

225. उक्थं च न शस्यमानं * नागोरयिराचिकेत ।

१ २३२ ३ १ २

न गायत्रं गीयमानम् ॥ ३ ॥

இருக்கு 4-16-3.

𑌉𑌕𑍍𑌥𑌂 𑌚 𑌨 𑌶𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌨𑌾𑌗𑍋𑌰𑌯𑌿𑌰𑌾𑌚𑌿𑌕𑍇𑌤 ।
𑌨 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌂 𑌗𑍀𑌯𑌮𑌾𑌨𑌮𑍍 ॥

அங்வயம்.

अगोः, अयिः, शस्यमानं, उक्थं च न, आचिकेत, न, गायत्रम् ॥

பதவுரை.

अगोः	𑌅𑌗𑍋𑌃	துதியாதவர்க்குச்
अयिः	𑌅𑌯𑌿𑌃	சத்துருவாகிய இந்திரன்
शस्यमानं	𑌶𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌂	ஓதா, என்னும் இருக்குப் படிப் போன் கூறிய
उक्थं च	𑌉𑌕𑍍𑌥𑌂 𑌚	துதிகளையும்
आचिकेत	𑌆𑌚𑌿𑌕𑍇𑌤	அறிகின்றான்.
न	𑌨	இப்போது
गीयमानं	𑌗𑍀𑌯𑌮𑌾𑌨𑌂	பாடப்படுகின்ற
गायत्रं	𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌂	கீத நடையையும் அல்லது காயத்திரி யென்னுஞ் சந்த விசேடத்தையும் (அறிகின்றான்).

* आगो, अरि, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—3. மேதாதிதி பிரியமேதர்கள் ரிஷிகள்.

துதிக்காதவர்கட்குச் சத்துருவாகிய இந்திரன், இருக்கோதுவார்களென்னும் ஓதாக்கள் சொல்கின்ற சஸ்திரமென்னும் தோத்திரங்களையுங் கேட்கின்றான். இப்போது துதிப்போர்களாற் பாடத்தக்க கீதநடையையும் (சாமத்தையும்) அல்லது காயத்திரி என்னுஞ் சந்தப் பாடலையுங் கேட்கின்றான். இக்காரணத்தால் யாங்களும் அவ் விந்திரனைத் துதிக்கின்றோம் என்பது பொருள். (3)

குறிப்பு:—தனமுள்ள இந்திரன் இனிமையற்ற துதியைக் கேட்கான். நற்றுதியைக் கேட்பான் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 4.

१२ ३२३१ २३ १२ ३१२
226. इन्द्र उक्थेभिर्मन्दिष्टो वाजानां च वाजपतिः ।
१२ ३२३१२
हरिवान्त्सुतानां सखा ॥ ४ ॥

ஐந்த்₃ர உக்தே₂பி₄ர்மந்தி₃ஷ்டோ வாஜாநாம் ச வாஜபதி: ।
ஹரிவாந் த்ஸுதாநாம் ஸகா₂ ॥

அந்வயம்.

वाजानां, वाजपतिः, हरिवान्, इन्द्रः, उक्थेभिः, मन्दिष्टः, सुतानां, सखा ॥

பதவுரை.

वाजानां	வாஜாநாம்	அன்னங்களுக்குள்
वाजपतिः	வாஜபதி:	சிறப்புற்ற அன்னங்கட்கு இறைவனும்
हरिवान्	ஹரிவாந்	அரி, என்னுங் குதிரைகளையுடையவனுமாகிய
इन्द्रः	இந்த்₃ர:	இந்திரன்
उक्थेभिः	உக்தே₂பி₄:	பாடல்வடிவத் தோத்திரங்களால்
मन्दिष्टः	மந்தி₃ஷ்ட:	மிகக்களிப்படைந்தனன்.
सुतानां	ஸுதாநாம்	பிழிந்த சோமரசத்திற்கு
सखा	ஸகா₂	நண்பன்போற் பிரியமுள்ளான்.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—4. விசுவாமித்திர ரிஷி.

அன்னங்களுக்குள் மேம்பட்ட அன்னங்கட்குத் தலைவனும், அரி, என்னுங் குதிரையையுடையவனுமாகிய இந்திரன், இருக்கோதுவார் கூறுகின்ற தோத்திரங்களால் மிகக் களிப்படைந்தோனாய், பிழிந்தெடுக்கப்பட்ட சோமரசத்தில் நண்புன்போல் பிரியமடைகின்றான் என்பது பொருள். (4)

மந்திரம் 5.

२ ३ १ २ ३ १ २र ३ १२
227. आया ह्युप नः सुतं वाजेभिर्मा हृणीयथाः ।
३ १ २३ १२
महाँ३ इव युवजानिः ॥ ५ ॥

ஆயா ஹ்யுப நஃ ஸுதம் வாஜேபிர்மா ஹ்ருணீயதாஃ ।
மஹாம் இவ யுவஜாநிஃ ॥

அங்வயம்.

(हे इन्द्र !,) युवजानिः, महान् इव, नः, सुतं, उपयाहि, वाजेभिः, मा हृणीयथाः ॥

பதவுரை.

(हे इन्द्र !)	(ஹே இந்த்ர !)	(இந்திரனே ! நீ)
युवजानिः	யுவஜாநிஃ	தருணியாகிய மனையாளையுடைய
महान् इव	மஹாந் இவ	தலைவன் போல்
नः	நஃ	எங்களுடைய
सुतं	ஸுதம்	சோமரசத்தை
उपयाहि	உபயாஹி	ஏற்றுக்கொள்வாயாக. (மற்றும்)
वाजेभिः	வாஜேபிஃ	ஏனைய அன்னங்களாற்
मा हृणीयथाः	மா ஹ்ருணீயதாஃ	களிப்படையாதோனாகுவாய்.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—5. மேதாதிதி பிரியமேதர்கள் இருடிகள்.

இந்திர ! பிழிந்தெடுத்த எங்களுடைய சோமரசத்தை நீ வந்து ஏற்றுக் கொள்வாயாக. மற்றும் ஏனையோர்கள் கொடுத்த அவியாகிய அன்னங்களாற் களிப்படையாதோனுவாயாக. அதிலுவமை :—தருணியாகிய மனை

யானையுடைய தலைவன்போன்று. அதாவது அழகிய மாதை மணந்த தருணன் ஏனைய பெண்களாற் களிப்படையான், ஆனால் அத் தருண மாதையே தழுவுவான் அங்கொப்ப என்பதாம். (5)

குறிப்பு—சோமரசத்தையும் ஏனைய அன்னங்களையும் ஏற்றுக்கொள்ள எங்களிடம் வருவாயாக. வயது மிகுந்தவன் தருணியிடத்தில் கோபம் வையாததுபோல் எங்களிடத்திற் கோபம் வையாதே என்பது ஆங்கிலம்.

மந்திரம் 6.

३ १ २ ३ १ २र ३ १ २र ३ १ २३ २
228. कदा वसो स्तोत्रं᳡ हर्यत आ अव श्मशारुधद्वाः ।
३२ ३२ ३ १ २
दीर्घं᳡ सुतं वाताप्याय ॥ ६ ॥

இருக்கு 30-105-1.

கதா வஸோ ஸ்தோத்ரம் ஹர்யத ஆ அவ ச்மசாருதத்வா: ।
தீர்கம் ஸுதம் வாதாப்யாய ॥

அந்வயம்.

वसो !, हर्यते, स्तोत्रं, श्मशा, वाताप्याय, दीर्घं, सुतं, कदा, अवारुधत्, वाः ॥

பதவுரை.

वसो !	வஸோ !	வியாபகனாகிய இந்திரனே !
हर्यते	ஹர்யதே	துதிவிரும்பிய நின்னை
स्तोत्रं	ஸ்தோத்ரம்	எனது துதி
श्मशा	ச்மசா	வாய்க்கால் வழியாக நீரைக்கட்டி வைப்பதுபோல்
वाताप्याय	வாதாப்யாய	தண்ணீரைக் கொடுக்குமாறு
दीर्घं	தீர்கம்	பரந்த
सुतं	ஸுதம்	சோமரசத்தை முன்னிட்டு
कदा	கதா	எப்போது
अवारुधत् ?	அவாருதத் ?	கட்டுப்படுத்துமோ ?
वा; ?	வா: ?	தடுத்து நிவர்த்திக்குமோ ?

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—6. கௌத்ச தூர்மித்திர ரிஷி.

வாழ்விக்கின்ற இந்திரனே! துதி விரும்பிய உன்னை, எனது தோத்திரம் எக்காலத்தில் கட்டுப்படுத்துமோ? கட்டுப்படுத்தி, எப்போது நீக்கு

மோ? அதாவது இத்தன்மைய சமயம் எக்கால் எமக்குக் கிடைக்குமோ? என விரும்புகின்றேன் என்பதாம். அதிலுவமை:—வாய்க்கால் வழியாக வயலில் தண்ணீரைக் கட்டிவைத்து விடுமாறெனல். யாது கருதித் தடுத்த லெனின்? ஆண்டுக் கூறப்படுகின்றது:—வேள்வியின் மூவகைக் கருமங் களால் மிகப்பிழிந்தெடுத்த சோமரசத்தை முன்னிட்டு என்க. எதன்பொருட் டெனின்? தண்ணீரைக் கொடுப்பதற்கு. ஈண்டு வாதமாகிய காற்ருல் கீழே வீழ்த்தப்படுதலின் தண்ணீர் 'வாதாப்யம்' எனப்பட்டது. (6)

மந்திரம் 7.

१२ ३ १२३ २ ३ १२३१ २र
229. ब्राह्मणादिन्द्र राधसः पिबा सोममृतूꣳ रनु ।
२३२ ३ १ २र
तवेदं सख्यमस्तृतम् ॥ ७ ॥

இருக்கு 1-35-5.

ப்³ராஹ்மணாதி³ந்த்³ர ராத⁴ஸ: பிபா³ ஸோமம்ருதூꣳ ரநு ।
தவேத³ம் ஸக்²யமஸ்த்ருதம் ॥

அந்வயம்.

हे इन्द्र !, ब्राह्मणात्, राधसः सोमं, ऋतून् अनु, पिब, तव, इदं, सख्यं, अस्तृतम् ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்³ர !	இந்திரனே! (நீ)
ब्राह्मणात्	ப்³ராஹ்மணாத்	வேட்போர்களிற்சிறந்த நாயகன் என்னும் பிரமனைப்பற்றிய
राधसः	ராத⁴ஸ:	பொன் வடிவப் பாத்திரத்திலிருந்து
सोमं	ஸோமம்	சோமரசத்தை
ऋतून् अनु	ருதூந் அநு	தேவர்கட்குப் பின்னர்
पिब	பிப³	அருந்துவாயாக, ஏனெனின்?
तव	தவ	உனக்கு
इदं सख्यं	இத³ம் ஸக்²யம்	தேவர்களோடுகூடிய இந்த நட்புத் தன்மையானது
अस्तृतं	அஸ்த்ருதம்	கெடாதிருத்தலாம். (ஆதலின் என்க.)

சாணய பாடியம்.

கண்டம்—12. இருக்கு—7. மேதாதிதி ரிஷி.

இந்திரனே! நீ 'பிரமன்' என்னும் வேள்வி நியாமகனுடைய சம்பந்தமாகிய பொன்மயப் பாத்திரத்தினின்றுஞ் சோமரசத்தை யருந்துவாயாக. யாது செய்துகொண்டெனின்? தேவர்களைத் தழுவிக்கொண்டு. அதாவது தேவர்களும் அருந்துவார்களாக என்பது பொருள். தேவர்களுடைய நட்புத் தன்மை கெடாதிருக்கின்ற இக்காரணம் பற்றியே தேவர்களாலும் அருந்தற்பாலது என்பது பொருந்துமென்க. (7)

மந்திரம் 8.

३१ २ ३ १ २ ३ १२
230. वयं घा ते *अपि स्मसि स्तोतार इन्द्र गिर्वणः ।
१ २
त्वं नो जिन्व सोमपाः ॥ ८ ॥

இருக்கு 8-32-7.

வயம் வா தெ அபி ஸ்மஸி ஸ்தோதார இந்த்ர கிர்வணঃ ।
த்வம் நொ ஜிந்வ ஸொமபாঃ ॥

அந்வயம்.

हे गिर्वणः !, हे इन्द्र !, ते, अपि, वयं घा, स्तोतारः, स्मसि, सोमपाः, त्वं, नः, जिन्व ॥

பதவுரை.

हे गिर्वणः !	ஹெ கிர்வணঃ !	வாக்குகளாற் றுதிக்கத் தக்க
हे इन्द्र !	ஹெ இந்த்ர !	இந்திரனே !
ते अपि	தெ அபி	உனக்கு
वयं घा	வயம் வா	யாங்கள் உண்மையில்
स्तोतारः	ஸ்தோதாரঃ	தோத்திரம் பண்ணுகின்றவர்களாக
स्मसि	ஸ்மஸி	இருக்கின்றோம்.
सोमपाः !	ஸொமபாঃ !	சோமமருந்துவோய் !
त्वं	த்வம்	நீ
नः	நঃ	எங்கட்குப்
जिन्व	ஜிந்வ	பிரியமுண்டாக்குவாயாக.

* अपिष्मसि, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—8. மேதாதிதி ரிஷி.

வாக்குகளாற் போற்றத்தக்க இந்திரனே! உண்மையாய் உன்னை நாங்கள் துதிக்கப்பட்டவாகளா யிருக்கின்றோம். சோமரச மருந்துவோய்! நீ எங்களைப் பிரியப்படுத்துவாயாக. (8)

மந்திரம் 9.

१ २ ३ १ २र ३ २ ३ १२
231. एन्द्र पृक्षु कासुचिन् नृम्णं तनूषु धेहि नः ।
१ २ २ १ २
सत्राजिदुग्र पौंस्यम् ॥ ९ ॥

𑌏𑌨𑍍𑌦𑍍𑌰 𑌪𑍃𑌕𑍍𑌷𑍁 𑌕𑌾𑌸𑍁𑌚𑌿𑌨𑍍 𑌨𑍃𑌮𑍍𑌣𑌂 𑌤𑌨𑍂𑌷𑍁 𑌧𑍇𑌹𑌿 𑌨𑌃 ।
𑌸𑌤𑍍𑌰𑌾𑌜𑌿𑌦𑍁𑌗𑍍𑌰 𑌪𑍌𑌂𑌸𑍍𑌯𑌮𑍍 ॥

அந்வயம்.

हे इन्द्र!, पृक्षु, कासुचित्, नः, तनूषु, नृम्णं, आधेहि, उग्र!, सत्राजित्, पौंस्यं, आधेहि ॥

பதவுரை.

हे इन्द्र!	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰!	இந்திரனே!
पृक्षु	𑌪𑍃𑌕𑍍𑌷𑍁	கூடியுள்ள
कासुचित्	𑌕𑌾𑌸𑍁𑌚𑌿𑌤𑍍	யாதானுமொரு
नः	𑌨𑌃	எங்களுடைய
तनूषु	𑌤𑌨𑍂𑌷𑍁	அங்கங்களில்
नृम्णं	𑌨𑍃𑌮𑍍𑌣𑌂	ஆற்றலை
आधेहि	𑌆𑌧𑍇𑌹𑌿	நிலை நாட்டுவாயாக.
उग्र!	𑌉𑌗𑍍𑌰!	முழு வலியுள்ளோய்!
सत्राजित्	𑌸𑌤𑍍𑌰𑌾𑌜𑌿𑌤𑍍	பன்னிரு தினங்களிலாகின்ற வேள்வியால் வசப்பட்டோனாய்
पौंस्यं	𑌪𑍌𑌂𑌸𑍍𑌯𑌂	ஆண்மக்கட்கு நலந்தரும் பயனைக்
आधेहि	𑌆𑌧𑍇𑌹𑌿	கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—9. விசுவாமித்திரர், அல்லது காதினர், ஆ
பீபாதர், அல்லது உதலர் ரிஷி.

இந்திர! எங்களுடைய கூட்டமாயுள்ள அங்கங்களில் எவைகளிலே வலியை நிறையக்கொடுப்பாயாக. முழுவன்மையுடையோய்! பன்னிரண் நாட்களிற் செய்யப்படும் வேள்விகளால் வசப்படுத்தப்பட்டவனு யிருந் புருடரிடத்து நலந்தரும் பயனைத் தருவாயாக என்பதாம். (5

மந்திரம் 10.

३ १ २र ३२३ १ २र३२ ३ २
232. एवा ह्यसि वीरयुरेवा शूर उत स्थिरः ।
३ २३ २ ३१२
एवा ते राध्यं मनः ॥ १० ॥

இருக்கு 8-92-28.

ஏவா ஹ்யஸி வீரயுரேவா ஶூர உத ஸ்திர꞉ ।
ஏவா தே ராத்⁴யம் மந꞉ ॥

அந்வயம்.

हे इन्द्र!, वीरयुः, एव, असि, हि, शूरः एव, उत, स्थिरः, ते, राध्यम् ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்³ர!	இந்திரனே! (நீ)
वीरयुः एव	வீரயு꞉ ஏவ	போர்வீரர்களைக் கொல்ல விருப்புடையனாகவே
असि	அஸி	இருக்கின்றாய்.
हि	ஹி	இக்காரணத்தால் நீ
शूरः एव	ஶூர꞉ ஏவ	சூரனே.
उत	உத	மற்றும்
स्थिरः	ஸ்தி²ர꞉	தைரியமுடையோன். ஆதலின்
ते	தே	உனது
मनः	மந꞉	மனம்
राध्यम्	ராத்⁴யம்	ஆராதிக்கத் தக்கதாம்.

சாயண பாடியம்.

—12. இருக்கு—10. சுருதகக்ஷ ரிஷி.

இந்திர! நீ போர்த் தொழிலில் வல்லுநரான சத்துருக்களைக் கொல்லமையில் விருப்புடையவனுகவே யிருக்கின்ருய். இதுபற்றியே நீ சமர்த்தன் ஆகின்ருய். மற்றும் போர்க்களத்தில் நிலையுடையவனுகின்ருய். அதாது :—ஓரிடத்திலிருந்துகொண்டே சத்துருக்களை அடியோடழிக்கின்ருய் என்பதாம். இவ்வாருனமையின் உன்னுடைய மனம் தோத்திரங்களாற் போற்றத் தக்கதேயாம். அதாவது மனதால் நீ சத்துருக்களை யழிக்க போரில் தைரிய முதலியவைகளை யடைகின்றதினுலேயே உன்னுடைய மனது யாவர்களாலுந் துதிக்கற்பாலது என்பது பொருள். (10)

பன்னிரண்டாவது கண்டம்

முற்றும்.

ஐந்திர காண்டம் முற்பாதி

இரண்டாம் அத்தியாயம்

முடிந்தது.

மூன்ரும் அத்தியாயம்.

பிரபாடகம்—3. அத்தியாயம்—3. கண்டம்—1.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३ १ ३ १ २ ३१२
233. अभि त्वा शूर नोनुमोऽदुग्धा इव धेनवः ।
१ २ ३ १ २र ३२३ १ २ ३ १ २
ईशानमस्य जगतः स्वर्दृशमीशानमिन्द्र तस्थुषः ॥ १ ॥

இருக்கு 7-32-22.

அபி த்வா ஶூர நோநுமோऽதுக்தா இவ தேநவ꞉ ।
ஈஶாநமஸ்ய ஜகத꞉ ஸ்வர்த்ருஶமீஶாநமிந்த்ர தஸ்துஷ꞉ ॥

அந்வயம்.

हे शूर इन्द्र !, अस्य, जगतः, तस्थुषः, ईशानं, स्वर्दृशं, त्वा, अदुग्धाः, धेनवः, इव, अभिनोनुमः ॥

பதவுரை.

हे शूर इन्द्र !	ஹெ ஶூர இந்த்ர !	சூரத் தன்மையுள்ள இந்திரனே !
अस्य जगतः	அஸ்ய ஜகத:	இச் சங்கமப் பொருள்கட்கும்
तस्थुषः	தஸ்துஷ:	தாபரப் பொருள்கட்கும்
ईशानं	ஈஶாநம்	ஈசனும்,
स्वर्दृशं	ஸ்வர்த்ருஶம்	அனைத்தையுங் காண்கின்றவனு மாகிய
त्वा	த்வா	உன்னையே
अदुग्धाः	அதுக்தா:	கறவாது பால்நிறைந்துள்ள
धेनवः इव	தெநவ: இவ	கோக்கள் போல், (சோமரசத்தை யேந்தி நிற்கும் யாங்கள்)
अभिनोनुमः	அபிநோநும:	பன்முறை வணங்குகின்றோம்.

சாயண பாடியம்.

இவ் வத்தியாயத்திலும் இந்திரனே துதிக்கப்படுகின்றான். மற்றும், ஏனைய தேவதைகளுந் துதிக்கப்படுகின்றார்கள்.

எவர்பால் வேதம் வெளிப்பட்டதோ! எவர் வேதங்களால் உலகனைத்தையு முண்டாக்கினரோ! அந்த வித்தியா தீர்த்த மகேசுரனை யான் வணங்குகின்றேன்.

கண்டம்—1. இருக்கு—1. வசிட்ட ரிஷி, பிருகதி சந்தம்.

சூரத்தன்மையுள்ள இந்திரனே! தாபர சங்கம மாகிய இவ் வுலகிற்கு இறைவனும், எல்லாவற்றையுங் காண்கின்றவனுமாகிய நின்னையே, கறவாத கோக்கள் பாலை மடியில் நிறைய வைத்துக்கொண்டு நிற்பன போல, சோமரசத்தால் நிறைந்துள்ள 'சமசு' என்னும் அகப்பை விசேடத்தைத் தாங்கிக் கொண்டு நிற்கின்ற யாங்கள் பன்முறை வணங்குகின்றோம் என்பதாம். (1)

குறிப்பு.—ஈசனென்பதை யிரட்டித்தது அன்பின் பொருட்டு,

மந்திரம் 2.

१ २र ३ १ २र ३१२

234. त्वा मिद्धि हवामहे *सातौ वाजस्य कारवः ।

२ ३१ २ ३१२३ २ ३२उ ३१२

त्वां वृत्रेष्विन्द्र सत्पतिं नरस्त्वां काष्टास्वर्वतः ॥ २ ॥

இருக்கு 4-46-1.

த்வா மித்தி ஹவாமஹே ஸாதௌ வாஜஸ்ய காரவ꞉ ।

த்வாம் வ்ருத்ரேஷ்விந்த்ர ஸத்பதிம் நரஸ்த்வாம் காஷ்டாஸ்வர்வத꞉ ॥

அந்வயம்.

इन्द्र !, कारवः, वाजस्य, सातौ, त्वामिद्धि, हवामहे, इन्द्र !, सत्पतिं, त्वां, नरः, वृत्रेषु, हवन्ते, अर्वतः, काष्ठासु, त्वाम् ॥

பதவுரை.

इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
कारवः	காரவ꞉	துதிக்கின்ற யாங்கள்
वाजस्य	வாஜஸ்ய	அன்னத்தைக்
सातौ	ஸாதௌ	கொடுப்பதற்கு
त्वामिद्धि	த்வாமித்தி	நின்னையே
हवामहे	ஹவாமஹே	அழைக்கின்றோம்.
सत्पतिं	ஸத்பதிம்	நல்லாரைக் காப்பாற்றும்
त्वां	த்வாம்	நின்னை
नरः	நர꞉	ஏனைய மனிதர்களும்
वृत्रेषु	வ்ருத்ரேஷு	சத்துருக்களுக்குண்டான விடத்து
हवन्ते	ஹவந்தே	அழைக்கின்றார்கள். மற்றும்
अर्वतः	அர்வத꞉	குதிரைகளைப் பற்றின
काष्ठासु	காஷ்டாஸு	தறிகளிருக்குமிடத்தும்
त्वाम्	த்வாம்	(அழைக்கின்றார்கள். நின்னை யாங்களும் அழைக்கின்றோம் என்க.)

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—2. பரத்துவாச ரிஷி.

தோத்திரம் பண்ணுகின்ற யாங்கள் அன்னத்தை யடைவதை முன்னிட்டு, இந்திர ! நின்னையே யழைக்கின்றோம். மற்றும் நல்லார்களைக் காப்பாற்றுபவனும், மேம்பட்டவனுமாகிய நின்னையே ஏனைய மனிதர்களும்

---

* सातां, என்பது இருக்கு.

சத்துருக்களால் மறைப்புண்டான விடத்தில் அவர்களை வெல்வதற்கு அழைக்கின்றார்கள். அஃதன்றியும், குதிரைகளைக் கட்டியிருக்குந் தறிகளிலும் அதாவது, போர்புரிய விரும்புவோர்களும், நின்னையே அழைக்கின்றார்கள். இதனால் யாங்களுமழைக்கின்றோம் என்பது பொருள். (2)

குறிப்பு.—யாங்கள் அன்னத்திற்கும் தனத்திற்கும் நின்னை அழைக்கின்றோம். ஏனையோர்கள் மழையின் பொருட்டும் சத்துருவை வெல்வதற்கும் அழைக்கின்றார்கள் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 3.

३ १ २र ३ १२ ३ १ २ ३ १ २ ३ २
235. **अभि प्र वः सुराधसमिन्द्रमर्च यथाविदे ।**
१ २ ३ २ ३ १ २ ३ १२ ३१ २ ३ १ २
यो जरितृभ्यो मघवा पुरूवसुः सहस्रेणेव शिक्षति ॥ ३ ॥

இருச்கு 8-49-1.

அபி ப்ர வ: ஸுராதஸமிந்த்ரமர்ச யதாவிதே ।
யோ ஜரித்ருப்யோ மகவா புரூவஸு: ஸஹஸ்ரேணேவ
[ஶிக்ஷதி ॥

அந்வயம்.

पुरूवसुः, यः, मघवा, जरितृभ्यः, सहस्रेण इव, शिक्षति, यथाविदे, वः, सुराधसं, इन्द्रं, अभि, प्रार्च ॥

பதவுரை.

पुरूवसुः	புரூவஸு:	பலவகைத் தனங்களையுடைய
यः	ய:	யாதொரு
मघवा	மகவா	இந்திரன்,
जरितृभ्यः	ஜரித்ருப்ய:	தோத்திரம்பண்ணுகின்ற எங்கட்கு
सहस्रेणेव	ஸஹஸ்ரேணேவ	ஆயிர வகைத் தனங்களாற் போன்று
शिक्षति	ஶிக்ஷதி	கட்டளையிடுகின்றான். அதாவது (மிகுந்த தனத்தைக் கொடுக்கின்றான் என்பது பொருள்.)
यथाविदे	யதாவிதே	யாங்கள் உணர்ந்தவாறே (உணர்ந்து)
वः	வ:	வேட்போர்களான நீவிரும்

सुराधसं	ஸுராயஸம்	நல்ல திரவியமுள்ள
इन्द्रं	இந்த்ரம்	அவ் விந்திரனை
अभि प्रार्च	அபி ப்ரார்ச	ஒருமுகமாய் நன்கு ஆராதிப்பீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—3. பாலகில்யர் ரிஷி.

பசு முதலிய பலவிதத் தனங்களையுடைய, அல்லது, வேள்வி பலவாமாதலின் பல வேள்விகளில் வசிக்கின்ற யாதொரு இந்திரனுண்டோ, அவன் துதிப்போர்களான எங்கட்கு ஆயிரம்வகைத் திரவியத்தாற் போன்று கட்டளையிடுகின்றான். அதாவது, பசு முதலிய மிகுந்த தனங்களை எங்கட்குக் கொடுக்கின்றான் என்பது பொருள். அவ் விந்திரன் எங்களால் அறியப்படுவது போன்று, வேட்போர்காள்! நீவிரும் சிறந்த ஐசுவரியமுடைய இந்திர தேவனை அறிந்து நன்கு ஆராதிப்பீர்களாக. (3)

குறிப்பு.—தனத்தைக் கொடுக்கும் நின்னைத் துதிக்கின்றேன். யாதினாலெனின்? எல்லாச் சாத்திரமுணர்ந்தோனாகவும், மிகுந்த திரவியமுடையோனாகவும் இருக்கின்றாயாதலின் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 4.

१ २ ३ १ २ ३ २ ३ १ २ ३ १ २ २
236 तं वो दस्ममृतीषहं वसोर्मन्दानमन्धसः ।
३ २ ३ १ २ २ ३ २ ३ १ २ ३ १ २
अभि वत्सं न स्वसरेषु धेनव इन्द्रं गीर्भिर्नवामहे ॥ ४ ॥

இருக்கு 8-88-1

தம் வோ தஸ்மம்ருதீஷஹம் வஸோர்மந்தாநமந்தஸ: ।
அபி வத்ஸம் ந ஸ்வஸரேஷு தேநவ இந்த்ரம் கீர்பிர்நவாமஹே ॥

அந்வயம்.

(हे ऋत्विजः !,) (यजमानाः !,) दस्मं, ऋतीषहं, वसोः, अन्धसः, मन्दानं, तं इन्द्रं, वः, धेनवः, वत्सं न, गीर्भिः, स्वसरेषु, अभिनवामहे ॥

பதவுரை.

(हे ऋत्विजः !)	(ஹே ருத்விஜ: !)	(வேட்போர்களே !)
(यजमानाः !)	(யஜமாநா: !)	(தலைவர்களே !) (யாம்)
दस्मं	தஸ்மம்	தரிசிக்கத்தக்கோனும்

ऋतीषहं	ருதீஷஹம்	சத்துருக்களை யடக்குவோனும்
वसोः	வஸோः	துன்பத்தை நீக்குவோனும்
अन्धसः	அந்தஸः	சோமமாகிய அன்னத்தால்
मन्दानं	மந்தானம்	களிப்படைகின்றவனும்
वः	வः	உங்கட்குப் போற்றத் தக்கவனுமாகிய
तं इन्द्रं	தம் இந்த்ரம்	அவ்விந்திரனை)
धेनवः	தேநவः	பாற் பசுக்கள்
वत्सं न	வத்ஸம் ந	கன்றைக் கருதிக் கதறுமாறு
गीर्भिः	கீர்பிः	துதியாகிய வாக்குகளால்
स्वसरेषु	ஸ்வஸரேஷு	பகற் காலங்களில்
अभिनवामहे	அபிநவாமஹே	யாம் பலவகையாக இறைஞ்சுகின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—4. நோதா ரிஷி இந்திரனைத் துதிக்கின்றார்.

வேட்போர்களே! தலைவர்களே! தரிசித்தற்குரியோனும், துன்புறுத்துஞ் சத்துருக்களை யடக்குவோனும், மற்றும், துன்பத்தைப் போக்குவோனும், அல்லது, பாத்திரத்தில் இருக்கின்ற சோமமென்னும் அன்னத்தை யருந்தியதாற் களிப்புறுகின்றோனும், ஆராதிக்கப்பாலதாந் தன்மையால் உங்களைப் பற்றியவனுமாகிய அவ் விந்திரனைப் பெரிது மிறைஞ்சுகின்றோம். யாம் இந்திரனைக் குறித்துக் கதறுகின்றோமென்பது பொருள். எக்காலங்களிலெனின்? இரவியால் நியமிக்கப்பட்ட பகல்களில் (ஸ்வசரேழு,) என்றதற்கு யாஸ்க முனிவரும் 5-4-ல் பகல்கள், எனப் பொருள் கூறியுள்ளார். (பகற் போதுகளில் தோத்திரத்தாற் கதறுகின்றோம் என்பது திரண்ட பொருள்.) அதிலுவமை:—கோட்டங்களில் புதிதாயீன்ற பசுக்கள் தமது கன்றைக் குறித்துக் கதறுவன போன்றெனல். (4)

மந்திரம் 5.

१ २ ३ १ २ ३१२ ३ १२ ३ १२
237. तरोभिर्वो विदद्वसुमिन्द्रं सबाध ऊतये ।
३१ २र ३१२ ३२ ३२उ ३ २ ३१२
बृहद्गायन्तः सुतसोमे अध्वरे हुवे भरं न कारिणम् ॥ ५ ॥

இருக்கு 8-64-1.

தரோபிர்வோ விதத்வஸுமிந்த்ரம் ஸபாத ஊதயே ।
ப்ருஹத்காயந்தः ஸுதஸோமே அத்வரே ஹுவே பரம் ந காரிணம் ॥

அந்வயம்.

(हे ऋत्विजः !,) वः, तरोभिः, विदद्वसुं, इन्द्रं, सबाधः, ऊतये, बृहत्, गायन्तः, सुतसोमे, अध्वरे, भरं, कारिणं न, हुवे ॥

பதவுரை.

(हे ऋत्विजः !)	(𑌹𑍇 𑌋𑌤𑍍𑌵𑌿𑌜𑌃 !)	வேட்போர்காள் !
वः	𑌵𑌃	நீங்கள்
तरोभिः	𑌤𑌰𑍋𑌭𑌿𑌃	விரைவுள்ள பரிகளோடு கூடியவனும்
विदद्वसुं	𑌵𑌿𑌦𑌦𑍍𑌵𑌸𑍁𑌂	தனத்தைக் கொடுப்பவனுமாகிய
इन्द्रं	𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂	இந்திரனை,
सबाधः	𑌸𑌬𑌾𑌧𑌃	பீடையுற்றோர்களாகித்
ऊतये	𑌊𑌤𑌯𑍇	தம்மைப் பாதுகாத்தற்பொருட்டு
बृहत्	𑌬𑍃𑌹𑌤𑍍	பிருகத், என்னுஞ் சாமகீதத்தைப்
गायन्तः	𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌃	பாடுவோர்களாய் (ஆராதிப்பீர்களாக,) யானும்
सुतसोमे	𑌸𑍁𑌤𑌸𑍋𑌮𑍇	சோமரசந் தேடப்பட்டுள்ள
अध्वरे	𑌅𑌧𑍍𑌵𑌰𑍇	வேள்வியில்,
भरं	𑌭𑌰𑌂	குடும்பத்தைக் காப்பாற்றுவோனைத்
कारिणं न	𑌕𑌾𑌰𑌿𑌣𑌂 𑌨	தமக்குதவி செய்பவனை மக்கள் முதலியோர்கள் அழைப்பது போல்
हुवे	𑌹𑍁𑌵𑍇	அழைக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—5. கலி பிரகாத ரிஷி.

வேட்போர்காள் ! நீவிர், வேகமுடைய குதிரைகளோடு கூடியவனும், மிக வேகமாய்த் தனங்களை யடைகின்றவனுமாகிய இந்திரனை, பீடையுற்றவர்களாகி தம்மைப் பாதுகாத்தற்பொருட்டு, பிருகத் சாமம், என்னும் பாடலைப் பாடுகின்றவர்களாயிருந்து ஆராதிப்பீர்களாக. ஈண்டு 'ஆராதிப்பீர்களாக' என்பது எஞ்சி நின்றது. யாண்டெனின் ? கூறப்படுகின்றது :— சோமரசம் பிழிந்தெடுத்துள்ள விடத்தில், சோமயாகத்தில் என்பதுமது. யானும் அவ்விந்திரனை அழைக்கின்றேன் என்க. எதைப்போலெனின் ? குடும்பத்தைப் பாதுகாக்கின்றவனும், தமக்கு நலஞ்செய்யுஞ் சீலமுடையவனுமாகிய, ஒருவனை, அவனது புத்திரர் முதலியோர்கள் தமக்குதவிபுரியுமாறு அழைக்கின்றதைப் போன்றெனல். அத் தன்மைய இந்திரனை யான் அழைக்கின்றேன் என்பதாம். (5)

மந்திரம் 6.

३२३१२　३२३
238. तरणिरित्सिषासति वाजं पुरन्ध्या युजा ।
२३१२　३१२　३२३१　२र　३१२
आ व इन्द्रं पुरुहूतं नमे गिरा नेमिं तष्टेव सुद्रुवम् ॥ ६ ॥

தரணிரித்ஸிஷாஸதி வாஜம் புரந்த்யா யுஜா ।
ஆ வ இந்த்ரம் புருஹூதம் நமே கிரா நேமிம் தஷ்டேவ ஸுத்ருவம்

அந்வயம்.

तरणिरित्, युजा, पुरन्ध्या, वाजं, सिषासति, सुद्रुवं, नेमिम्, तष्टा इव, पुरुहूतं, इन्द्रं, गिरा, वः, आनमे ॥

பதவுரை.

तरणिरित्	தரணிரித்	போரில் வேகமுடையவனே
युजा	யுஜா	அநுகூலமாகிய
पुरन्ध्या	புரந்த்யா	பெரும் புத்தியால்
वाजं	வாஜம்	அன்னத்தைப்
सिषासति	ஸிஷாஸதி	பெறுகின்றான்.
सुद्रुवं	ஸுத்ருவம்	நற்கட்டையை
नेमिं	நேமிம்	சக்கரமாய்
तष्टा इव	தஷ்டா இவ	தச்சன் வளையச் செய்வது போன்று
पुरुहूतं	புருஹூதம்	பல்லோரால் அழைக்கப்பட்ட
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனைத்
गिरा	கிரா	தோத்திரத்தால்
वः	வः	உங்கட்காக
आनमे	ஆநமே	ஒருமுகப்படுத்துகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—6. வசிட்ட ரிஷி.

போர்த்தொழில் முதலிய கருமங்களில் அனுகூலமாகிய பெரும் புத்தியால் விரைவாகவே ஒருவன் அன்னத்தை நுகர்கின்றான். பல்லோர்களால் அழைக்கப்பட்ட இந்திரனை, வேள்வித் தலைவர்காள்! நும்பொருட்டு யான் தோத்திரத்தால் ஒருமுகப்படுத்துகின்றேன். அதிலுவமை:—தச்சன் ஒரு மரத்தைச் சக்கரமாகச் செய்வது போன்றெனல். (6)

குறிப்பு.—பெரும் புத்தியோடுகூட அன்னத்தைக் கொடுக்க விரும்புகின்றான் என்பது ஆங்கிலம்.

மந்திரம் 7.

१ २ ३ १ २ ३२ ३ १ २ ३ १ २

239. पिबा सुतस्य रसिनो मत्स्वा न इन्द्र गोमतः ।

३ १ २ ३ १ २ ३२ १ २ ३ १ २

आपिर्नो बोधि *सधमाद्ये वृधेऽस्माँ अवन्तु ते धियः ॥ ७ ॥

இருக்கு 8-3-1.

𑌪𑌿𑌬𑌾 𑌸𑍁𑌤𑌸𑍍𑌯 𑌰𑌸𑌿𑌨𑍋 𑌮𑌤𑍍𑌸𑍍𑌵𑌾 𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌗𑍋𑌮𑌤𑌃 ।

𑌆𑌪𑌿𑌰𑍍𑌨𑍋 𑌬𑍋𑌧𑌿 𑌸𑌧𑌮𑌾𑌦𑍍𑌯𑍇 𑌵𑍃𑌧𑍇𑌽𑌸𑍍𑌮𑌾𑌁 𑌅𑌵𑌨𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌧𑌿𑌯𑌃 ॥

அந்வயம்.

हे इन्द्र !, रसिनः, गोमतः, नः, सुतस्य, पिब, मत्स्व, सधमाद्ये, आपिः, नः, वृधे, बोधि, ते, धियः, अस्मान्, अवन्तु ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே ! (நீ)
रसिनः	𑌰𑌸𑌿𑌨𑌃	இரசத்தையுடையதும்
गोमतः	𑌗𑍋𑌮𑌤𑌃	பசு நெய் முதலியவைகளோடு கூடியதுமாகிய
नः	𑌨𑌃	எங்களுடைய
सुतस्य	𑌸𑍁𑌤𑌸𑍍𑌯	பிழிந்தெடுத்த சோமரசத்தை
पिब	𑌪𑌿𑌬	அருந்துவாயாக. (அருந்தி)
मत्स्व	𑌮𑌤𑍍𑌸𑍍𑌵	களிப்படைவாயாக.
सधमाद्ये	𑌸𑌧𑌮𑌾𑌦𑍍𑌯𑍇	தேவர்கள் களிப்பெய்தும் வேள்வியில்
आपिः	𑌆𑌪𑌿𑌃	சுற்றத்தானாய்
नः	𑌨𑌃	எங்களுடைய
वृधे	𑌵𑍃𑌧𑍇	விருத்தியின் பொருட்டுச்
बोधि	𑌬𑍋𑌧𑌿	சாவதானமாவாயாக.
ते	𑌤𑍇	உன்னுடைய
धियः	𑌧𑌿𑌯𑌃	அனுக்கிரகமாகிய புத்திகள்
अस्मान्	𑌅𑌸𑍍𑌮𑌾𑌨𑍍	எங்களைப்
अवन्तु	𑌅𑌵𑌨𑍍𑌤𑍁	பாதுகாப்பனவாகுக.

* सधमादः, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—7. மேதாதிதி ரிஷி.

இந்திர! சுவையுடையதும், ஆவின் பரிணாமமாகிய பால், நெய் முதலியவைகளோடு கூடியதுமாகிய, எங்களுடைய சோமரசத்தை அருந்துவாயாக. அருந்திக் களிப்படைவாயாக. மற்றும், தேவர்கள் களிப்படைதலின் சதமாத்யம் எனப்படும் வேள்வியில் நீ சுற்றத்தானாக இருந்து, நாங்கள் வளர்தற் பொருட்டுக் கருத்துடையோனாகுதி. உன்னுடைய அனுக்கிரகமாகிய புத்தி துதிக்கின்றவர்களான எங்களைக் காப்பாற்றுக என்பதாம். (7)

மந்திரம் 8.

२उ ३ १२ ३२उ३ १२
240. त्वꣳ ह्येहि चेरवे विदाभगं वसुत्तये ।
१२
उद्वावृषस्व मघवन् गविष्टय उदिन्द्राश्वमिष्टये ॥ ८ ॥

இருக்கு 8-17-6.

𑌤𑍍𑌵𑌂 𑌹𑍍𑌯𑍇𑌹𑌿 𑌚𑍇𑌰𑌵𑍇 𑌵𑌿𑌦𑌾𑌭𑌗𑌂 𑌵𑌸𑍁𑌤𑍍𑌤𑌯𑍇 ।
𑌉𑌦𑍍𑌵𑌾𑌵𑍃𑌷𑌸𑍍𑌵 𑌮𑌘𑌵𑌨𑍍 𑌗𑌵𑌿𑌷𑍍𑌟𑌯 𑌉𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌶𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌟𑌯𑍇 ॥

அந்வயம்.

हे इन्द्र!, हि, त्वं, वसुत्तये, एहि, चेरवे, भगं विदाः, मघवन्, गविष्टये, उद्वावृषस्व, इन्द्र! अश्वमिष्टये, उद्वावृषस्व ॥

பதவுரை.

हे इन्द्र!	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰!	இந்திரனே! நீ
हि	𑌹𑌿	உண்மையில் வள்ளலாதலின்
वसुत्तये	𑌵𑌸𑍁𑌤𑍍𑌤𑌯𑍇	எமக்குத் தனத்தைக்கொடுத்தற் பொருட்டு
एहि	𑌏𑌹𑌿	வருவாயாக. வந்து
चेरवे	𑌚𑍇𑌰𑌵𑍇	நல்லொழுக்கமுடைய எமக்கு
भगं	𑌭𑌗𑌂	ஐசுவரியத்தைக்
विदाः	𑌵𑌿𑌦𑌾𑌃	கொடுப்பாயாக.
मघवन्!	𑌮𑌘𑌵𑌨𑍍!	இந்திர!
गविष्टये	𑌗𑌵𑌿𑌷𑍍𑌟𑌯𑍇	பசுக்களை விரும்பும் எமக்கு

उद्वावृषस्व	உத்³வாவ்ருஷஸ்வ	பசுக்களைத் தருவாயாக.
इन्द्र !	இந்த்³ர !	இந்திர !
अश्वमिष्टये	அஶ்வமிஷ்டயே	அசுவத்தை விரும்பும் எமக்கு
उद्वावृषस्व	உத்³வாவ்ருஷஸ்வ	அசுவத்தையுந் தருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—8. பர்க்கரி ரிஷி.

இந்திர ! நீயே உண்மையாகிய கொடையாளி யென்று அறியப்படுகின்றாய். இதனால் நீ வருவாயாக. எதன் பொருட்டெனின்? எங்கட்குத் திரவியத்தை கொடுத்தற் பொருட்டு. வந்து நல்லலொழுக்கமுடைய எமக்குப் போற்றத்தக்க ஐசுவரியத்தைத் தருவாயாக. தனமுள்ள இந்திர! ஆவை விரும்பும் எமக்கு ஆவைத் தருவாயாக. அவ்வாறே குதிரையை யிச்சிக்கு மெமக்குக் குதிரையுந் தருவாயாக என்பதாம். (8)

குறிப்பு.—நல்லறிவுடைய எமது ஐசுவரியத்தை யுணர்ந்தவனாய், கோ, பரி முதலியவைகளைக் கொடுப்பாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 9.

१ २र ३२ ३ १ २र ३१ २
241. न हि वश्चरमं च न वसिष्ठः परिमंसते ।
३ १ २ ३२ ३ १२ ३२उ ३ १ २ ३ १ २
अस्माकमद्य मरुतः सुते सचा विश्वे *पिबन्तु कामिनः ॥ ९ ॥

இருக்கு 7-59-3.

ந ஹி வஶ்சரமம் ச ந வஸிஷ்ட²: பரிமம்ஸதே ।
அஸ்மாகமத்³ய மருத: ஸுதே ஸசா விஶ்வே பிப³ந்து காமின: ॥

அந்வயம்.

हे मरुतः !, वः, चरमं च न, वसिष्ठः, न हि परिमंसते, अद्य, अस्माकं, सुते, मरुतः कामिनः, विश्वे, सचा, पिबन्तु ॥

பதவுரை.

हे मरुतः !	ஹே மருத: !	மருத்துக்களே !
वः	வ:	உங்களுக்குள்
चरमं च न	சரமம் ச ந	சிறுவரையுங் கூட

* पिबत என்பது இருக்கு.

वसिष्ठः	வஸிஷ்ட:	வசிட்ட ரிஷியாகிய யான்
न हि परिमंसते	ந ஹி பரிமம்ஸதெ	நீக்கித் துதித்திலேன்.
अद्य	அத்ய	இப்போது
अस्माकं	அஸ்மாகம்	எங்களுடைய
सुते	ஸுதெ	சோமரசந் தேடியவிடத்து
मरुतः कामिनः	மருத: காமிந:	சோமரசத்தை விரும்புகின்ற
विश्वे	விஶ்வெ	நீவிர் எல்லோரும்
सचा	ஸசா	ஒன்றுகூடி
पिबन्तु	பிபந்து	அருந்துவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—9. வசிட்ட ரிஷி, பரோட்சமாய்க் கூறுகி

மருத்துக்களே! 'வசிட்டன்' என்னும் ரிஷியாகிய நான், உங்க கடையளுபுள்ளவனையுங்கூட நீக்கித் துதி செய்திலேன். மற்று, உங் லோரையுமே துதிக்கின்றேன் என்பது பொருள். எமது சோமரசம் பிழி தெடுத்த இச் சமயத்தில் சோமரசம் வேண்டிய மருத்துக்களான நீவிர் யாவரு மொருங்கு சேர்ந்து குடிப்பீர்களாக. (9)

குறிப்பு.—மருத்துக்களே! நீங்களிருக்குமிடம் சிறிதுந் தெரியவில்லை ஆயினும் தேவர்களுடன் வந்து சோமரசம் அருந்துவீர்களாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 10.

१ २ ३ १ २र ३१ २ ३ १ २

242\. मा चिदन्यद्विशंसत सखायो मा रिषण्यत ।

२ ३ १ २ ३ १२ ३ १ २ ३१ २र ३ १ २

इन्द्रमित्स्तोता वृषणं सचा सुते मुहुरुक्थाच शंसत ॥ १० ॥

இருக்கு 8-1-6.

மா சிதந்யத்விஶம்ஸத ஸகாயோ மா ரிஷண்யத ।

இந்த்ரமித்ஸ்தோதா வ்ருஷணம் ஸசா ஸுதெ முஹுருக்தாச ஶம்ஸத ॥

அந்வயம்.

हे सखाय!, अन्यत्, मा चिद्विशंसत, मा रिषण्यत, सुते, वृषणं, इन्द्रमित्, सचा, स्तोत, उक्था च, मुहुः, शंसत ॥

பதவுரை.

हे सखायः !	ஹெ ஸவாயஃ !	(துதிப்போராய) நண்பீர் !
अन्यत्	அ_ந்யகி	இந்திரனது துதியினும் வேறு துதியைச்
मा चिद्विशंसत	உா அிவிபஂஂஸ_த	சொல்லாதீர்கள்.
मा रिषण्यत	உா ரிஷண்ய_த	வீணாய் மெலியாதீர்கள்.
सुते	ஸுதெ	சோமரசந் தேடியவிடத்து
	வ்ருஷணஂ	விழைந்தவாற்றாற் பெய்தளிக்கும்
	ஊ_ந்_ரூகி	இந்திரனையே
	ஸஅா	ஒன்று சேர்ந்து
	ஸ்தோத	துதிப்பீர்களாக.
	உக்தா அ	இந்திரனைப் போற்றும் சஸ்த்திரமென்னுந் துதிவிசேடங்களையும்
मुहुः	உஙஹாஙஃ	அடிக்கடி
शंसत	பஂஸ_த	ஓதுவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—10. பிரகாத காண்வ ரிஷி.

(எமக்கு) ஒத்த வுணர்வுடைய துதிப்போர்களே! நீவிர், இந்திரனுடைய தோத்திரத்தைத் தவிர்த்து மற்றைய துதிகளை யுரைக்காதீர்கள். துன்புறுத்துவோராகாதீர்கள். பிறர் துதிகளால் வீணாக மெலியாதீர்கள் என்பதாம். சோமரசம் பிழிந்தவிடத்து, மனம் விரும்பியவைகளை மழையெனப் பெய்யும் இந்திரனையே நீவிரெல்லீருமொருங்கு குழுமித் துதிப்பீர்களாக. இந்திரனைப்பற்றிய சஸ்திரமென்னும் மந்திர விசேடங்களை அடிக்கடி யோதுவீர்களாக. (10)

முதலாவது கண்டம்.

முற்றும்.

இரண்டாவது கண்டம்

பிரபாடகம்—3. அத்தியாயம்—3. கஉ

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

२ ३ १ २र ३ २ ३ १ २ ३ १ २

243· नकिष्टं कर्मणा नशद्यश्चकार सदावृधम् ।

२ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २र

इन्द्रं न यज्ञैर्विश्वगूर्तमृभ्वसमधृष्टं *धृष्णुमोजसा ॥ १ ॥

இருக்கு 8-70-3.

𑌨𑌕𑌿𑌷𑍍𑌟𑌂 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌨𑌶𑌦𑍍𑌯𑌶𑍍𑌚𑌕𑌾𑌰 𑌸𑌦𑌾𑌵𑍃𑌧𑌮𑍍 ।

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌨 𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌗𑍂𑌰𑍍𑌤𑌮𑍃𑌭𑍍𑌵𑌸𑌮𑌧𑍃𑌷𑍍𑌟𑌂 𑌧𑍃𑌷𑍍𑌣𑍁-
[𑌮𑍋𑌜𑌸𑌾 ॥

அந்வயம்.

यः, सदावृधं, विश्वगूर्तम्, ऋभ्वसं, ओजसा, अधृष्टं, न, धृष्णुं, इन्द्रं, यज्ञैः, चकार, तम्, कर्मणा, नकिः, नशत् ॥

பதவுரை.

यः	𑌯𑌃	யாதொரு வேள்வித் தலைவன்,
सदावृधं	𑌸𑌦𑌾𑌵𑍃𑌧𑌂	எப்போதும் வளரப்பெற்றவனும்
विश्वगूर्तं	𑌵𑌿𑌶𑍍𑌵𑌗𑍂𑌰𑍍𑌤𑌂	உலகந் தொழத்தக்கோனும்
ऋभ्वसं	𑌋𑌭𑍍𑌵𑌸𑌂	பெரியோனும்
ओजसा	𑌓𑌜𑌸𑌾	ஆற்றலால்
अधृष्टं	𑌅𑌧𑍃𑌷𑍍𑌟𑌂	எவருக்கு மடங்காதோனும்
न	𑌨	மற்றும்
धृष्णुं	𑌧𑍃𑌷𑍍𑌣𑍁𑌂	சத்துருக்களை யடக்குவோனுமாகிய
इन्द्रं	𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂	இந்திரனை
यज्ञैः	𑌯𑌜𑍍𑌞𑍈𑌃	வேள்விகளால், வசமாகச்

* धृष्ण्वोजसम्, என்பது இருக்கு.

செய்துவிட்டானோ,
அவ்வேள்வித் தலைவனை
{கொல்லுதன் முதலிய கருமத்
தால் (வரும்பலன்)}
நகிஃ நமஸ (உணா) வியாபிக்காது. (பற்றுது.)

சாயணபாடியம்.

இருக்கு—1. ஆங்கிரசர் புருஷன்மர் ரிஷிகள்.

வேள்வித் தலைவனைக் கொல்லுதல் முதலிய தொழிலால் வரும் வியாபிக்காது. (எவ்விதமாகிய தலைவனை யெனின்?) யாதொருவன் கூலமான வேள்விகளால் இந்திரனையே தன்வயமாக்கிக்கொண்டானோ, அவனை என முடித்துக்கொள்க) எவ் வண்ணமாகிய இந்திரனை யெனின்? எப்போதும் வளரப்பெற்றுனை. மற்றும், அனைவர்களாலுந் துதிக்கத் தக் கோனை. மற்றும் பெரியோனை. மற்றும் பிறராற்றலா லமிழ்த்தப்படா தோனை. சத்துருக்களை யடக்குவோனை. (வியாபிக்காது என்பதனோடு சேர்க்க.) (1)

மந்திரம் 2.

२ ३१ २ ३ १ २ ३२ ३ १ २ ३ १ २
244. य ऋते चिदभिश्रिषः पुरा जत्रुभ्य आतृदः ।
१ २ ३ २ ३१ २ ३२३१ १ १ ३ १ २३ १२
सन्धाता सन्धिं मघवा पुरूवसु *निष्कर्ता विहुतं पुनः ॥ २ ॥

இருக்கு 8-1-129.

ய ஋தே சிதபிஶ்ரிஷஃ புரா ஜத்ருப்ய ஆத்ருதஃ ।
ஸந்தாதா ஸந்திம் மகவா புரூவஸு நிஷ்கர்தா விஹுதம் புனஃ ॥

அந்வயம்.

यः, अभिश्रिषः, ऋते चित्, जत्रुभ्यः, आतृदः, पुरा, सन्धिं, सन्धाता, मघवा, पुरूवसुः, (इन्द्रः), विहुतं, पुनः, निष्कर्ता ॥

* इष्कर्ता विहुतं, என்பது இருக்கு.

பதவுரை.

यः	யஃ	யாதொரு இந்திரன்
अभिश्रिषः	அபிஶ்ரிஷஃ	கூட்டுங் கருவிகள்
ऋते चित्	ருதே சித்	இல்லாமலே
जत्रुभ्यः	ஜத்ருப்யஃ	கழுத்துகளினின்றும்
आतृदः	ஆத்ருதஃ	இரத்தமெழுவதன்
पुरा	புரா	முன்பே
सन्धिं	ஸந்திம்	கூட்டத்தக்கதைக்
सन्धाता	ஸந்தாதா	கூட்டிவைப்பவனாகின்றானோ,
मघवा	மகவா	தனமுடையோனும்
पुरूवसुः	புரூவஸுஃ	மிகுந்த ஐசுவரியமுடையவனுமாகிய
(इन्द्रः)	(இந்த்ரஃ)	(அவ் விந்திரன்)
विहुतं	விஹ்ருதம்	துணித்து வேறாக்கியவைகளை
पुनः	புநஃ	மறித்தும்
निष्कर्ता	நிஷ்கர்தா	சுத்தப்படுத்தி வைக்கின்றான் (சேர்த்து வைக்கின்றான் என்பது பொருள்.)

விளங்கிலன், என்னும் மறைவாக்காலென்க. விரிப்பிலென்? தோன்றின வனைத்தும் நின்னை அடையமுடியாதனவேயாம். அங்ஙனமே, வானும் மண்ணும் நின்னைத் தம்முள் அடக்கிக்கொள்ளமுடியாதனவேயாம். இதனால் நீ எல்லாவற்றினும் மேம்பட்டவன் என்பது பொருள். "தரையினும் பெரியான், வானினும் பெரியான், சுவர்க்கத்தினும் பெரியான், இவ்வுலகங்களினின்றும் பெரியான்" என மறையுங் கூறப் பெற்றுள்ளதாலுமென்க. (6)

மந்திரம் 7.

१२ ३ २ उ ३ २ ३क २ ३ २ ३ १ २

279\. यदिन्द्र प्रागपागुदग्न्यग्वा हूयसे नृभिः ।

१ २ ३ १ २ ३ २ ३१ २ ३१२

सिमा पुरू नृषूतो अस्यानवेऽसि प्रशर्ध तुर्वशे ॥ ७ ॥

இருக்கு 8-4-1.

யதிந்த்ர ப்ராகபாகுதக்ந்யக்வா ஹூயஸே ந்ருபிஃ।
ஸிமாபுரூ ந்ருஷூதோ அஸ்யானவேஸி ப்ரஶர்த துர்வஶே॥

அங்வயம்.

हे इन्द्र!, यत्, प्राक्, वा, अपाक्, उदक्, न्यक्, नृभिः, हूयसे, सिम्, आनवे, पुरु, नृषूतः, असि, प्रशर्ध, तुर्वशे ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திர! நீ
प्राक्	ப்ராக்	கிழக்கு
अपाक्	அபாக்	மேற்கு
उदक्	உதக்	வடக்கு
न्यक्	ந்யக்	தெற்கு என்னும் நான்கு திசைகளிலுமுள்ள
नृभिः	ந்ருபிஃ	மனிதர்களால்
यदिहूयसे	யதி ஹூயஸே	தத்தமது காரியத்தின் பொருட்டு அழைக்கப்பட்டோனாயினும்
आनवे	ஆநவே	அநு, என்னும் வேந்தனுடைய புத்திரன் பொருட்டு
पुरु नृषूतः	புரூ ந்ருஷூதஃ	துதிக்கின்ற அநேகர்களை ஏவிக்கொண்டே
असि	அஸி	இருக்கின்றாய்.
प्रशर्ध!	ப்ரஶர்த!	சத்துருக்களை யடக்குவோய்! நீ
तुर्वशे	துர்வஶே	துருவசன், என்பவனுக்கும் அவ்வாறே யிருக்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—7. தேவாதிதி ரிஷி.

இந்திர ! நீ, கீழ்த்திசைக்க ணிருப்பவர்களால், அல்லது, மேற்றிசைக்க ணிருப்பவர்களால், அல்லது தென்றிசைக்க ணிருப்பவர்களால் அல்லது, வட திசைக்க ணிருப்பவர்களால், அதாவது நின்னைத் துதிக்கின்ற நாற்றிசைகளிலுமுள்ள மனிதர்களால் தத்தமது காரியத்தின் பொருட்டு அழைக்கப்படுகின்றாய். மேம்பட்ட இந்திர! ஈண்டிச் சிமம் என்றது, சிறப்பாம். "சிமம் என்பது மேம்பாடெனப்படுகின்றது" என வாசசனேய சம்மிதை (மறை) கூறுகின்றதாமாதலின் என்க. எப்போதும் பல்லோர்களாலுமழைக்கப்படுகின்றாய் என்பதாம். அத்தன்மையனாயினும், அநு, என்னும் அரசனது புத்திரராகிய இராசரிஷி விஷயத்தில் அவருடைய துதியாளர்களால் ஏவப்பட்டோனா யிருக்கின்றாய். அதாவது அரசனுக்கு நலஞ் செய்யுமாறு தோத்திரஞ் செய்வோர்கள் ஏவுகின்றார்கள் என்பது பொருள். மற்றும், சத்துருக்களை முழுது மடக்குவோய்! இந்திர! நீ, துருவசன், என்னும் வேந்தன் விஷயத்திலும் மனிதர்களால் ஏவப்பட்டோனாகவே யிருக்கின்றாய் என்பதாம். (7)

குறிப்பு.—நாற்றிசைகளி லிருக்கின்ற மனிதர்கட்கும், துருவசனுக்கும் தன முதலியவைகளைக் கொடுப்பாயாக என்பது ஆங்கிலம்.

மந்திரம் 8.

१ २र ३ १ २र

280. कस्तमिन्द्र त्वा वसवा मर्त्यो दधर्षति ।

३ १ २र ३ १ २ ३ २ ३ १ २र

*श्रद्धा हि ते मघवन् पार्ये दिवि वाजी वाजं सिषासति ॥८॥

இருக்கு 8-32-14.

கஸ்தமிந்த்ர த்வா வஸவா மர்த்யோ தத⁴ர்ஷதி ।

ஶ்ரத்³தா⁴ ஹி தே மக⁴வந் பார்யே தி³வி வாஜீ வாஜம் ஸிஷாஸதி ॥

அந்வயம்.

हे वसो !, इन्द्र !, तं, त्वा, कः मर्त्यः, आदधर्षति, मघवन् !, ते श्रद्धा, वाजी, पार्ये दिवि, वाजं, सिषासति ॥

---

* श्रद्धा इत्था, என்பது இருக்கு.

பதவுரை.

वसो! इन्द्र!	வஸோ! இந்த்ர!	வியாபகனாகிய இந்திரனே!
तं त्वा	தம் த்வா	புகழ்பெற்ற அத்தன்மைய நின்னை
कः मर्त्यः?	கஃ மர்த்யஃ?	எம்மனிதன்?
आदधर्षति?	ஆத³த⁴ர்ஷதி?	இழிவு பண்ணவல்லான்?
हे मघवन्!	ஹே மக⁴வந்!	இந்திர!
ते	தே	நின் பொருட்டு
श्रद्धा	ஶ்ரத்³தா⁴	அன்புள்ள யாதொரு வேள்வித் தலைவன்
वाजी	வாஜீ	அவியுடையோன் ஆகின்றானோ, அவன்
पार्ये दिवि	பார்யே தி³வி	சோமரசந் தேடும் நாளில்
वाजं	வாஜம்	அவியென்னுந் தேவவுணவை
सिषासति	ஸிஷாஸதி	(நினக்குக்) கொடுக்க விரும்புகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—8. வசிட்ட ரிஷி.

வியாபகனாகிய இந்திர! கீர்த்தியுடையோனாகிய உன்னை எவன் தாழ்வுப்படுத்துபவன்? (எவனுமிலன் என்பதாம்) இந்திர! நின்பொருட்டு யாவனொருவன், (தலைவன்) அன்போடு அவி தேடுகின்றானோ! அவன் சோமரசந் தேடுகின்ற ‘சௌத்தியம்’ என்னும் நாளில் அவியாகிய அன்னத்தைக் கொடுக்க இச்சிக்கின்றான். (8)

மந்திரம் 9.

१ २ ३ २ ३ १ २र ३ १ २

281. इन्द्राग्नी अपादियं पूर्वागात् पद्वतीभ्यः ।

३ २ ३ १२३१२ ३ २ ३ १ २

*हित्वा शिरो जिह्वया रारपच्चरत् त्रिंशत्पदान्यक्रमीत् ॥९॥

இருக்கு 3-45-1.

இந்த்³ராக்³நீ அபாதி³யம் பூர்வாகா³த் பத்³வதீப்⁴ய꞉ ।

ஹித்வா ஶிரோ ஜிஹ்வயா ராரபச்சரத் த்ரிம்ஶத்பதா³ந்யக்ரமீத் ॥

---

* हत्वी शिरो जिह्वया वावदच्, என்பது இருக்கு.

அந்வயம். நவாயாக. ஈண்டு

हे इन्द्राग्नी !, अपात्, इयं, पद्वतीभ्यः, सुप्ताभ्यः, पूर्वा, आगात्, शिरः ல்லது
हित्वा, जिह्वया, ररपत्, चरत्, त्रिंशत् पदानि, न्यक्रमीत् ॥ ன் (1)

பதவுரை.

हे इन्द्राग्नी !	ஹே இந்த்ராக்நீ !	இந்திர, அக்கினிகளே !
अपात्	அபாத்	காலின்றிய
इयं	இயம்	இந்த உஷாதேவதை (விடியற் காலதேவதை)
पद्वतीभ्यः	பத்வதீப்ய:	கால்களையுடைய
सुप्ताभ्यः	ஸுப்தாப்ய:	சனங்களினின்றும்
पूर्वा	பூர்வா	முன்னரேயே
आगात्	ஆகாத்	வருகின்றது.
शिरः	ஶிர:	(பிராணிகளின்) தலையை
हित्वा	ஹித்வா	நீக்கிவிட்டு
जिह्वया	ஜிஹ்வயா	பிராணிகளிடத்துள்ள வாக்கிந்திரிய வழியாகப்
ररपत्	ரரபத்	பெருஞ் சத்தமிட்டுக்கொண்டு
चरत्	சரத்	செல்கின்ற உஷா தேவதை
त्रिंशत् पदानि	த்ரிம்ஶத் பதாநி	முப்பது முகூர்த்தங்களைக்
न्यक्रमीत्	ந்யக்ரமீத்	கடக்கின்றது.

சாயண பாடியம்

கண்டம்—5. இருக்கு—9. பரத்துவாச ரிஷி.

இந்திராக்கினிகாள் ! பாதமின்றிய இந்த உஷா தேவதை, பாதங்களையுடைய பிராணிகளுக்கு முன்னரேயே வந்து தோன்றுகின்றது. அங்ஙனமே, பிராணிகளுடைய தலையைத் தவிர்த்து, அதாவது தான் தலையில்லாததாயிருந்தும் பிராணியின்பாலுள்ள அவைகளின் வாக்கிந்திரியத்தால் பேரொலி செய்துகொண்டு சஞ்சரிக்கின்றது. இவ்வாறு சஞ்சரிக்கின்ற உஷா தேவதை, கூறுகளான முப்பது முகூர்த்தங்களை ஒருபகலால் தாண்டிவிடுகின்றது. இதுவும் உங்களிருவர்களுடைய தொழிலேயாம் எனத் தோத்திரஞ் செய்யப்படுகின்றது. (9)

மந்திரம் 10.

` ३ ३ २ ३ १२   ३१२   ३ १ २

282. इन्द्र नेदीय एदिहि मितमेधाभिरूतिभिः ।

१२ ३ १ २   ३१२३१   ३ १२

आशन्तम शन्तमाभिरभिष्टिभिरा स्वापे स्वापिभिः ॥ १० ॥

இருக்கு 8-53-5

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌨𑍇𑌦𑍀𑌯 𑌏𑌦𑌿𑌹𑌿 𑌮𑌿𑌤𑌮𑍇𑌧𑌾𑌭𑌿𑌰𑍂𑌤𑌿𑌭𑌿𑌃 ।

𑌆𑌶𑌨𑍍𑌤𑌮 𑌶𑌨𑍍𑌤𑌮𑌾𑌭𑌿𑌰𑌭𑌿𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌰𑌾 𑌸𑍍𑌵𑌾𑌪𑍇 𑌸𑍍𑌵𑌾𑌪𑌿𑌭𑌿𑌃 ॥

அந்வயம்.

हे इन्द्र !, नेदीयः, मितमेधाभिः, ऊतिभिः, एदिहि, शन्तम, शन्तमाभिः, अभिष्टिभिः, आ, स्वापे, स्वापिभिः, आ ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே ! நீ
नेदीयः	𑌨𑍇𑌦𑍀𑌯𑌃	மிக்கருகிலுள்ள எமது வேள்வியின்கண்
मितमेधाभिः	𑌮𑌿𑌤𑌮𑍇𑌧𑌾𑌭𑌿𑌃	மிதமான புத்திகளோடும்
ऊतिभिः	𑌊𑌤𑌿𑌭𑌿𑌃	பாதுகாப்புகளோடும்
एदिहि	𑌏𑌦𑌿𑌹𑌿	வருவாயாக.
शन्तम !	𑌶𑌨𑍍𑌤𑌮 !	பேரின் பவடிவோய் !
शन्तमाभिः	𑌶𑌨𑍍𑌤𑌮𑌾𑌭𑌿𑌃	இன்பமலிந்த
अभिष्टिभिः	𑌅𑌭𑌿𑌷𑍍𑌟𑌿𑌭𑌿𑌃	நண்பர்களோடு
आ	𑌆	வருவாயாக.
स्वापे !	𑌸𑍍𑌵𑌾𑌪𑍇 !	உறவினனே ! நீ
स्वापिभिः	𑌸𑍍𑌵𑌾𑌪𑌿𑌭𑌿𑌃	அன்புள்ள மித்திரர்களோடு
आ	𑌆	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—6. பால கில்லியர் ரிஷி.

இந்திரனே ! நீ, மிக அருகாயுள்ள எமது வேள்வியிடத்திற்கு வரவே வேண்டும். எவைகளுடன் எனின் ! கூறப்படுகின்றது. அளவுள்ள இனிய நற்புத்திகளையுடைய பாதுகாப்புக்களோடு. அல்லது, வேள்வியை யுண்டாக்கின மருத்துக்களோடு, இன்பமலிந்த வடிவோய் ! நீ அன்பு மிகுந்தவர்க

ளுடன் அல்லது வேண்டியவை (பொருள்) களுடன் வருவாயாக. ஈண்டு வருவாயாக என்றது எஞ்சி நின்றது. எங்களுடைய சுற்றத்தோய்! அல்லது இன்பந் தருவோய்! சுற்றத்தார்களோடு, அல்லது இன்பங் கொடுக்கின்ற அன்பர்களோடு நீ வருவாயாக என்பதாம். (10)

ஐந்தாவது கண்டம்

முற்றும்.

ஆறுவது கண்டம்

பிரபாடகம்—3. அத்தியாயம்—3. கண்டம்—6.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३२ ३ १ २ ३१२ ३२३ १ २

283. इत ऊती वो अजरं प्रहेतारमप्रहितम् ।

२२३ १ २ ३ १२ १ १ २ ३१२

आशु जेतारं हेतारꣳ रथीतम मतूर्तं *तुग्रियावृधम् ॥ १ ॥

இருக்கு 8-99-7.

இத ஊதீ வொ அஜரம் ப்ரஹெதாரமப்ரஹிதம் ।

ஆஶும் ஜெதாரம் ஹெதாரம் ரதீதமமதூர்தம் துக்ரியாவ்ருதம் ॥

அந்வயம்

(हे अस्मदीयाः !,) वः, अजरं, प्रहेतारं, अप्रहितं, आशुं, जेतारं, हेतारं, रथीतमं, अतूर्तं, तुग्रियावृधं, ऊतये, इतः (कुरुत) ॥

பதவுரை.

(हे अस्मदीयाः !)	(ஹெ அஸ்மதீயாஃ!)	(எம்மைச் சேர்ந்தோர்களே !)
वः	வஃ	நீவிர்
अजरं	அஜரம்	மூப்புத் தன்மையற்றவனும்,

---

* तुग्रया वृधम्, என்பது இருக்கு.

प्रहेतारं	ப்ரஹேதாரம்	சத்துருக்களைச் செலுத்துவோனும்,
अप्रहितं	அப்ரஹிதம்	ஒருவராலும் ஏவப்படாதோனும்,
आशुं	ஆஶும்	விரைவுள்ளவனும்,
जेतारं	ஜேதாரம்	சத்துருவை வெல்வோனும்,
हेतारं	ஹேதாரம்	செல்கின்றவனும்,
रथीतमं	ரதீதமம்	இரதமுடையார்களில் மேம்பட்டோனும்
अतूर्तं	அதூர்தம்	ஒருவரானுங் கொல்லப்படாதோனும்
तुग्रियावृधं	துக்ரியாவ்ருதம்	மழையைப் பெருக்குவோனுமாகிய இந்திரனை
ऊती	ஊதீ	(எமது) பாதுகாப்பின்பொருட்டு
इतः (कुरुत)	இத꞉ (குருத)	முன்னிற்போனாய்ச் செய்வீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—1. நிருமேத ரிஷி.

என்னைச் சேர்ந்த ஜனங்களே! நீங்கள், கிழத்தன்மையற்றவனும், விரோதிகளை யேவுவோனும், ஒருவராலும் ஏவப்படாதோனும், விரைவுள்ளோனும், பகைஞரை வெல்வோனும், செல்கின்றவனும், இரதமுள்ளார்களுட் சிறந்தோனும், யாவராலுங் கொல்லப்படாதோனும், நீர்வளத்தைத் தருவோனுமாகிய இந்திரனை, எம்மைப் பாதுகாக்கும் விஷயத்தில் முன்னிற்போனாய்ச் செய்வீர்களாக. (1)

மந்திரம் 2.

१   २र   ३१२३२उ ३ १   २र

284. मो षु त्वा वाघतश्चनारे अस्मन्नि रीरमन् ।

३ १ २ ३ १ २ ३ १२ ३२ ३ १ २र

*आरात्ताद्वा सधमादं न आगहीह वा सन्नुपश्रुधि ॥ २ ॥

இருக்கு 7-31-2.

மோ ஷு த்வா வாகதஶ்சநாரே அஸ்மந்நி ரீரமந் ।

ஆராத்தாத்வா ஸதமாதம் ந ஆகஹீஹ வா ஸந்நுபஶ்ருதி ॥

அந்வயம்.

(हे इन्द्र !,) त्वा, वाघतश्चन, अस्मत्, आरे, मोनिरीरमन्, आरात्ताद्वा, नः, सधमादं, सु, आगहि, इह वा सन्, उपश्रुधि ॥

---

* आरात्ताचित्, என்பது இருக்கு.

பதவுரை.

(हे इन्द्र!)	(ஹே இந்த்ர!)	(இந்திரனே!)
त्वा	த்வா	நின்னை
वाघतश्चन	வாவதஶ்சந	வேள்வித்தலைவனும்
अस्मत्	அஸ்மத்	எம்மிலுந்
आरे	ஆரே	தூரத்தில் (இருந்து)
मोनिरीरमन्	மோநிரீரமந்	இரமிக்கச் செய்யாதோனுகுக.
आरात्ताद्वा	ஆராத்தாத்வா	(நீ) தூரத்திருப்பினும்,
नः	நஃ	எமது
सधमादं	ஸதமாதம்	வேள்விக்கு
सु	ஸு	இனிது
आगहि	ஆகஹி	வருவாயாக.
इह वा सन्	இஹ வா ஸந்	அல்லது இங்கிருந்து கொண்டேனும்
उपश्रुधि	உபஶ்ருதி	எமது துதியைக் கேட்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—3. வசிட்டரிஷி.

இந்திரனே! உன்னை வேள்வித் தலைவனும், எம்மிலுந் தூரத்திலிருந்து கொண்டு, இயற்கையா யிரமிக்கச் செய்யாதோனுகுக. இதனுல் நீ தூரத்தி லிருப்பினும் எமது வேள்விகளில் இனிது வருவாயாக என்பது பெற்றும். அல்லது, இங்கிருந்துகொண்டேனும் எமது தோத்திரத்தைக் கேட்பா யாக என்பதாம். (2)

மந்திரம் 3.

२ १२ ३ २ ३ २३ १ २ २ १ २
285. सुनोत सोमपाव्ने सोममिन्द्राय वज्रिणे ।
१२ ३ १ २र ३ २ ३ ३२ २र३ १ २र
पचता पक्तीरवसे कृणुध्वमित् पृणन्नित् पृणते मयः ॥ ३ ॥

இருக்கு 7-32-8.

ஸுநோத ஸோமபாவ்நே ஸோமமிந்த்ராய வஜ்ரிணே ।
பசதா பக்தீரவஸே க்ருணுத்வமித் ப்ருணந்நித் ப்ருணதே மயஃ ॥

அந்வயம்.

(हे मदीयाः पुरुषाः!,) वज्रिणे, सोमपाव्ने, इन्द्राय, सोमं, सुनोत, अवसे, पक्तीः, पचता, कृणुध्वमित्, मयः, पृणन्नित्, पृणते ॥

பதவுரை.

(हे मदीया पुरुषाः!)	(ஹே மதீயா புருஷா:!)	என்னைச்சேர்ந்த மக்காள் நீவிர்!
वज्रिणे	வஜ்ரிணே	வச்சிராயுதந்தாங்கியவனும்
सोमपाव्ने	ஸோமபாவ்நே	சோமரசம் அருந்துவோனுமாகிய
इन्द्राय	இந்த்ராய	இந்திரன் பொருட்டுச்
सोमं	ஸோமம்	சோமரசத்தைப்
सुनोत	ஸுநோத	பிழிந்தெடுப்பீர்களாக.
मदसे	மதஸே	இந்திரனைத் திருப்தி செய்தற் பொருட்டு
पक्तीः	பக்தீ:	பக்குவம் பண்ணத்தக்கவைகளை
पचता	பசதா	பாகஞ் செய்வீர்களாக.
कृणुध्वमित्	க்ருணுத்வமித்	இந்திரன் களிக்கத்தக்க கருமங்களைச் செய்வீர்களாக. ஏனெனின்?
मयः	மய:	சுகத்தை
पृणन्नित्	ப்ருணந்நித்	வேள்வித் தலைவனுக்குக் கொடுத்துக்கொண்டே
पृणते	ப்ருணதே	அவிகளை விரும்புகின்றான். (ஆதலின் என்க.)

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—3. வசிட்ட ரிஷி.

என்னைச்சேர்ந்த மனிதர்காள்! நீவிர், வச்சிராயுதத்தை யேந்தியவனும், சோமரசத்தைப் பானம் பண்ணுவோனுமாகிய இந்திரனுக்குச் சோமரத்தைப் பிழிந்தெடுப்பீர்களாக. இந்திரனைக் களிப்படைவித்தற்பொருட்டு பக்குவஞ் செய்யத்தக்க புரோடாச முதலியவைகளை (மாவுருண்டை முதலியவைகளை) பக்குவஞ் செய்வீர்களாக. (மற்றும்) இந்திரனுக்குக் களிப்புண்டாக்கத்தக்க கிரியைகளைச் செய்வீர்களாக. யாதினாலெனின்? வேள்வித் தலைவனுக்கு இன்பங் கொடுத்துக்கொண்டே அவன் அவிகளை (தேவ உணவுகளை) விரும்புகின்றான் ஆதலின் என்பதாம். (3)

மந்திரம் 4.

३ २ ३ १ २र ३ २ ३ १ २ ३२
286. यः सत्राहा विचर्षणिरिन्द्रं तꣳ हूमहे वयम् ।
१२ ३ १ २ ३ १ २ ३ २
*सहस्रमन्यो तुविनृम्ण सत्पते भवा समत्सु नो वृधे ॥ ४ ॥

இருக்கு 6-46-3.

---

* सहस्रमुष्कः, என்பது இருக்கு.

யஃ ஸத்ராஹா விசர்ஷணிரிந்த்ரம் தம் ஹூமஹே வயம் ।
ஸஹஸ்ரமந்யோ துவிந்ருண ஸத்பதே பவா ஸமத்ஸு நோ வ்ருதே ॥

அந்வயம்.

यः, सत्राहा, विचर्षणिः, तं इन्द्रं, वयं हूमहे, सहस्रमन्यो !, तुविनृम्ण !, सत्पते !, समत्सु, नः, वृधे, भव ॥

பதவுரை.

यः	யஃ	யாதொரு இந்திரன்
सत्राहा	ஸத்ராஹா	பகைஞரைத் தொலைத்தனனோ,
विचर्षणिः	விசர்ஷணிஃ	(மற்றும்) சிறப்புடன் அனைவரையும் பார்க்கின்றானோ,
तं इन्द्रं	தம் இந்த்ரம்	அவ் விந்திரனை
वयं हूमहे	வயம் ஹூமஹே	யாம் துதியால் அழைக்கின்றோம்.
सहस्रमन्यो !	ஸஹஸ்ரமந்யோ !	ஆயிரக்கணக்கான முனிவுகளையுடையோய் !
तुविनृम्ण !	துவிந்ருண !	மிகுந்த தனமுடையோய் !
सत्पते !	ஸத்பதே !	நல்லார்களைக் காப்போய் ! நீ
समत्सु	ஸமத்ஸு	போர்களில்
नः	நஃ	எங்களை
वृधे	வ்ருதே	வளர்த்தற்பொருட்டுத்
भव	பவ	தோன்றுவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—4. சம்யு ரிஷி.

எவ் விந்திரன், பெரும் பகையுடையாரைக் கொன்றனனோ, மற்றும் விசேடமாக எல்லாவற்றையுங் காண்கின்றானோ, அவ் விந்திரனை யாங்கள் தோத்திரங்களாலழைக்கின்றோம். இதன் பிற்பாதி மந்திரம் பிரத்தியட்சமாய்ச் செய்யப்பட்டது. பகைஞர்கள் பல்லோரை யழிக்க ஆயிர வகையான முனிவுகளையுடையோய்! அல்லது, மந்யு:, என்றது வேள்வியாமாதலின் ஆயிரக்கணக்கான வேள்விகளாற் போற்றத்தக்க இந்திர! மிகுந்த தனமுடையோய்! நல்லோர்களைக் காப்பாற்றுகின்ற இந்திர! நீ எங்களுடைய வளர்ச்சியின் பொருட்டுப் போர்களிற் றோன்றுவாயாக. (4)

மந்திரம் 5.

१ २ ३ २ ३ १ २
287. शचीभिर्नः शचीवसू दिवानक्तं *दिशस्यतम् ।
२ ३ १ २ र ३ २ ३ २ उ ३ २ ३ २ ३ २
मावाꣳ रातिरुप दसत्कदाचनास्मद्रातिः कदाचन ॥ ५ ॥

இருக்கு 1-139-5.

ஶசீபிர்ந꞉ ஶசீவஸூ திவா நக்தம் திஶஸ்யதம் ।
மாவாம் ராதிருப தஸத்கதாசநாஸ்மத்ராதி꞉ கதாசந ॥

அந்வயம்.

हे शचीवसू !, शचीभिः, दिवानक्तं, दिशस्यतं, वां, रातिः, कदाचन, मा उपदसत्, अस्मत्, रातिः, कदाचन, मा (उपदसत्) ॥

பதவுரை.

हे शचीवसू!	ஹே ஶசீவஸூ!	அக்கினிட்டோம முதலிய வேள்விகளையே தனமாகக் கொண்ட அசுவினி குமாரர்களே! உங்களால்
शचीभिः	ஶசீபி꞉	எமது வேள்விகளான கருமங்களென்னுங் காரணங்களினால்
दिवानक्तं	திவா நக்தம்	இரவு பகல்
दिशस्यतं	திஶஸ்யதம்	வேண்டிய பலன் கொடுக்கப்பட்டது.
वां	வாம்	உங்களுடைய
रातिः	ராதி꞉	வரம், ஈகை முதலிய தன்மைகள்
कदाचन	கதாசந	ஓர் காலும்
मा उपदसत्	மா உபதஸத்	குறையாதிருக்குக.
अस्मत्	அஸ்மத்	எனது
रातिः	ராதி꞉	அவி கொடுத்தற்றன்மையும்
कदाचन	கதாசந	ஓர் காலுங்
मा (उपदसत्)	மா (உபதஸத்)	குறையாதிருக்குக.

* दशस्यताम्, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—5. புருச்சேப ரிஷி. அசுவினி குமாரர்கள் - தேவதைகள்.

அக்கினிட்டோம முதலிய வேள்விகளையே தனமாகவுடைய அசுவினி குமாரர்காள்! நாங்களனுட்டிக்கின்ற வேள்வி முதலிய கரும நிமித்தங்களால் இரவு பகல் உங்களுடைய வரங் கொடுக்குந் தன்மை (விரும்பியவைகளையீதற்றன்மை) ஓர்காலும், அதாவது வேள்வியாற்றும்போதும், வேள்வியியற்றாத காலத்தும், குறைவுபடாதிருக்குக. உங்களுடைய ஈகை மாத்திரம் அங்ஙனமன்று, மற்றோ, எங்களுடைய அவி முதலிய ஈகையும், அல்லது, வேண்டுவோர்களின் பொருட்டு எல்லா ஈகைகளும் ஓர்காலும், அதாவது எல்லா அவத்தைகளிலுங் குறையாதிருக்குக என்பதாம். யானும் எப்போதும் உங்களைக் குறித்து (அவி முதலியவற்றைக்) கொடுத்துக்கொண்டிருப்பேனாக. நீவிரும் எனது விருப்பத்தை எக்காலுங் கொடுத்துக்கொண்டிருப்பீர்களாக என்பது பொருள். (5)

மந்திரம் 6.

३ २ ३ १ २ ३१२ ३ १ २ ३ १ २
288. यदा कदा च मीढुषे स्तोता जरेत मर्त्यः ।
१ २२ ३ १२ ३ २ ३ २ ३ २३ १२
आदिद्वन्देत वरुणं विपा गिरा धर्त्तारं विव्रतानाम् ॥ ६ ॥

𑌯𑌦𑌾 𑌕𑌦𑌾 𑌚 𑌮𑍀𑌢𑍁𑌷𑍇 𑌸𑍍𑌤𑍋𑌤𑌾 𑌜𑌰𑍇𑌤 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌃 ।
𑌆𑌦𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍇𑌤 𑌵𑌰𑍁𑌣𑌂 𑌵𑌿𑌪𑌾 𑌗𑌿𑌰𑌾 𑌧𑌰𑍍𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

அந்வயம்.

यदा कदा च, मीढुषे, मर्त्यः, स्तोता, जरेत, आदित्, वरुणं, विव्रतानां, धर्त्तारं, विपा, गिरा, वन्देत ॥

பதவுரை.

यदा कदा च	𑌯𑌦𑌾 𑌕𑌦𑌾 𑌚	எப்போதோ ஓர் கால்
मीढुषे	𑌮𑍀𑌢𑍁𑌷𑍇	அவி கொடுக்கின்ற வேள்வித் தலைவனது வேள்வியின் பொருட்டு
स्तोता	𑌸𑍍𑌤𑍋𑌤𑌾	துதிப்பவனாகிய
मर्त्यः	𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌃	மனிதன்
जरेत	𑌜𑌰𑍇𑌤	துதி செய்கின்றானோ,

आदित्	ஆதித்	அதன் பின்னரேயே (அப்போது)
वरुणं	வருணம்	பாவத்தைப் போக்குவோனும்
विव्रतानां	விவ்ரதாநாம்	பலவகைக் கருமங்களைத்
धर्त्तारं	தர்த்தாரம்	தாங்கப்பட்டவனுமாகிய வருண தேவனை
विप्रा	விப்ரா	நன்கு பாதுகாத்தற்குரிய
गिरा	கிரா	தோத்திரத்தால்
वन्देत	வந்தேத	வணங்குக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—6. வாமதேவ ரிஷி.

எக்காலத்தில் அவிகொடுக்கும் வேள்வித் தலைவனுடைய வேள்வியின் பொருட்டு மரிக்குந் தன்மையுடைய மர்த்தியனென்னும், வேதம் (சாம வேதம்) பாடுவோன் துதி செய்கின்றானோ, அதன் பின்னரேயே அதாவது அக்காலத்திலேயே என்பது பொருள். பாவத்தை நீக்குவோனும், பல வகைக் கருமங்களைத் தாங்குவோனுமாகிய 'வருணன்' என்னுந் தேவனைச் சிறந்த பாதுகாப்பிற்குரிய தோத்திரத்தால் வணங்கல் வேண்டும், அல்லது துதித்தல் வேண்டும் என்பதாம். (6)

மந்திரம் 7.

३१ २र ३ २३ १ २
289. *पाहि गा अन्धसो मद इन्द्राय मेध्यातिथे ।
१ २र ३ २ ३ १ २३२३ १ २ ३१ २३ १२
यः संमिश्लो †हर्य्यो यो हिरण्यय इन्द्रो वज्री हिरण्ययः ॥ ७ ॥

இருக்கு 8-46-1.

பாஹி கா அந்தஸோ மத இந்த்ராய மேத்யாதிதே ।
யஃ ஸம்மிஶ்லோ ஹர்யோ யோ ஹிரண்யய இந்த்ரோ வஜ்ரீ ஹிரண்யயஃ ॥

அந்வயம்.

हे इन्द्राय !, मेध्यातिथे, अन्धसः, मदे गाः, पाहि, यः, इन्द्रः, हर्योः, संमिश्लः, वज्री, हिरण्ययः, हिरण्ययः ॥

---

* पाहि माथान्धसो, என்பதும், † हर्योऽर्यः सुते सचा वज्रो हिरण्ययः, என்பதும் இரு-

பதவுரை.

हे इन्द्राय !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 !	இந்திரனே !
मेध्यातिथे	𑌮𑍇𑌧𑍍𑌯𑌾𑌤𑌿𑌥𑍇	வேள்வியில் அதிதியாகின்றோய்! நீ
अन्धसः	𑌅𑌨𑍍𑌧𑌸𑌃	சோமரசம் அருந்தியதால்
मदे	𑌮𑌦𑍇	களிப்புற்றவிடத்து
गाः	𑌗𑌾𑌃	எனது கோக்களை (பிரசைகளை)க்
पाहि	𑌪𑌾𑌹𑌿	காப்பாயாக.
यः इन्द्रः	𑌯𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃	யாதொரு இந்திரன்
हर्योः	𑌹𑌰𑍍𑌯𑍋𑌃	அரியென்னும் பரிகளை
संमिश्लः	𑌸𑌂𑌮𑌿𑌶𑍍𑌲𑌃	இரதத்திற் கட்டுகின்றானோ,
वज्री	𑌵𑌜𑍍𑌰𑍀	வச்சிராயுத மேந்தியவனோ,
हिरण्ययः	𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌯𑌃	இனிமையுடையதும் இன்ப வடிவினதும் ஆகிய
हिरण्ययः	𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌯𑌃	பொன்மய இரதமுடையானோ, அவன் நீ.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—7. மேத்யாதிதி ரிஷி

வேள்வியிலுள்ள அதிதிவடிவ இந்திர! சோமரசத்தை யருந்திக் களிப்புண்டாய விடத்து நீ எங்களுடைய பிரசைகளைக் காப்பாயாக. குதிரைகளை இரதத்திற் கட்டுகின்றவனும், வச்சிர மேந்தினோனும், இனிய பொன் வடிவத் தேருள்ளானும் எவ் விந்திரன் ஆவனோ, அத்தன்மையன் நீ. (ஆதலின் என்க.) (7)

குறிப்பு.—இந்திராய, என்ற நான்காம் வேற்றுமை ஒருமை விளிக்கண் காண்க. அதாவது இந்திரனே! என்பதாம். மூலத்தில் மேத்தியாதிதே என்றது மேத - என்றது வேள்வி, அதிலுள்ளான் மேத்தியன் மேத்தியனாகிய அதிதி, அவனை விளித்த தென்றுணர்க.

மந்திரம் 8.

३ १२ ३ १ २ ३ १ २ ३ २ ३ २ २र

290. उभयं शृणवच्च न इन्द्रो अर्वागिदं वचः ।

३ १ ३ ३२३ १२ ३ १ २र ३ १ २

सत्राच्या मघवान्त सोमपीतये धिया शविष्ट आगमत् ॥ ८ ॥

இருக்கு 8-61-1.

உபயம் ஶ்ருணவச்ச ந இந்த்ரோ அர்வாகிதம் வச: ।
ஸத்ராச்யா மகவாந் ஸோமபீதயே தியா ஶவிஷ்ட ஆகமத் ॥

அந்வயம்.

उभयं, नः, इदं वचः, अर्वाक्, इन्द्रः, शृणवत्, च, सत्राच्या, धिया, मघवान्, धिया, शविष्टः, सोमपीतये, आगमत् ॥

பதவுரை.

उभयं	உபயம்	வேண்டுகோள், துதி, என்னுமிரு வகையாகிய
नः	ந:	எங்களுடைய
इदं वचः	இதம் வச:	இவ் வாசகத்தை
अर्वाक्	அர்வாக்	எம்பால் நோக்கமாய்
इन्द्रः	இந்த்ர:	இந்திரன்
शृणवत्	ஶ்ருணவத்	கேட்பானாக.
	ச	கேட்டு, (மற்றும்)
मघवान्	மகவாந்	தனமுள்ளவனும்
शविष्टः	ஶவிஷ்ட:	பேராற்ற லுடையோனுமாகிய இந்திரன்
सत्राच्या	ஸத்ராச்யா	எமது வேள்வியைப் பூசிக்கும்
धिया	தியா	புத்தியுடையோனைச்
सोमपीतये	ஸோமபீதயே	சோமரசம் அருந்துவதற்கு
आगमत्	ஆகமத்	வருவானாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—8. பர்க்க ரிஷி.

தோத்திரம் பிரார்த்தனை என்னு மிருவகையாகிய இவ் வாசகத்தை இந்திரன் எமது நோக்குடன் கேட்பானாக. கேட்டு, தனமுடையானும், மிகுந்த, ஆற்றலுடையானுமாகிய இந்திரன் எமது வேள்வியைப் பூசிக்கும்புத்தியுடையோனைச் சோமரசம் அருந்துவதற்கும் வருவானாக தாம்.

மந்திரம் 9.

३२ ३ १ २ ३ १२ ३ १२

291. महे च न त्वाद्रिवः *परा शुल्काय दीयसे ।

२ ३१२३ १ २र ३ २ ३१२

न सहस्राय नायुताय वज्रिवो न शताय शतामघ ॥ ९ ॥

இருக்கு 8-1-5.

மஹே ச ந த்வாத்ரிவ: பரா ஶுல்காய தீயஸே ।

ந ஸஹஸ்ராய நாயுதாய வஜ்ரிவோ ந ஶதாய ஶதாமக ॥

அந்வயம்.

हे अद्रिवः!, महेच, शुल्काय, न, परादीयसे, वज्रिवः, सहस्राय, न, अयुताय, न, शतामघ!, शताय ॥

பதவுரை.

हे अद्रिवः!	ஹே அத்ரிவ: !	வச்சிராயுத முடைய இந்திர !
महेच	மஹேச	மிகுந்த
शुल्काय	ஶுல்காய	விலைக்கும்
त्वा	த்வா	நின்னை
न परादीयसे	ந பராதீயஸே	விற்கமாட்டேன்
वज्रिवः!	வஜ்ரிவ: !	வச்சிராயுதந்தாங்கிய கையோய் !
सहस्राय	ஸஹஸ்ராய	ஆயிரங்கணக்கான பொன்கட்கும்
न	ந	(நின்னை) விலைப்படுத்தேன்.
अयुताय	அயுதாய	பத்தாயிரத்தி (பொன்னி) ற்கும்
न	ந	விற்கமாட்டேன்.
शतामघ!	ஶதாமக !	மிகுந்த தனமுடைய இந்திர !
शताय न	ஶதாய ந	எண்ணிலாத் தனங்கட்கும் நின்னை விலைப்படுத்தேன்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—9. மேதாதிதி மேத்யாதிதிகள் இருடிகள்.

வச்சிராயுதத்தோய் ! இந்திர ! பெரும் விலைக்கும் நான் உன்னை விலைப் படுத்தமாட்டேன், வச்சிராயுதக் கையனே ! இந்திர ! ஆயிரம் எண்கொண்ட பொன்கட்கும் விற்கமாட்டேன். பத்தாயிரம் பொன்களுக்கும் நின்னை விலையாக்கேன். மிகுந்த தனமுடைய இந்திர ! சதம் - என்றது அளவிலாப்

---

* परा शुल्काय देयाम, என்பது இருக்கு.

பொருண்மேனின்றது, ஆதலின் அளவிலாத தனங்கட்கும் நின்னை விற்க மாட்டேன் என்பதாம். அதாவது மேற்கூறிய அளவுகொண்ட பொருளை முன்னிட்டு உன்னை விட்டுவிடேன், மற்றோ, அநேகம் அவிகளால் (தேவ உணவுகளால்) வழிபடுவேன் என்பது பொருள். (9)

பெரும் விலைக்கே கொடுப்பேன் என்பார் இருக்கோதுவார்.

குறிப்பு.—மூலத்திலுள்ள ச-காரம், ந-காரம், என்னும் இரண்டு அசைச் சொற்களையும் பிரித்துச் சேர்த்துக்கொள்க.

மந்திரம் 10.

१ २ ३२३२उ ३१२
292. वस्याँ इन्द्रासि मे पितुरुत भ्रातुरभुञ्जतः ।
३ १२ ३ १ २ ३ २ ३ १२
मातच मे छदयथः समा वसो वसुत्वनाय राधसे ॥ १० ॥

இருக்கு 8-1-6.

𑌵𑌸𑍍𑌯𑌾𑌂 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑌿 𑌮𑍇 𑌪𑌿𑌤𑍁𑌰𑍁𑌤 𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌰𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑌃 ।
𑌮𑌾𑌤𑌾𑌚 𑌮𑍇 𑌛𑌦𑌯𑌥𑌃 𑌸𑌮𑌾 𑌵𑌸𑍋 𑌵𑌸𑍁𑌤𑍍𑌵𑌨𑌾𑌯 𑌰𑌾𑌧𑌸𑍇 ॥

அந்வயம்.

हे इन्द्र !, मे, पितुः, वस्यान्, उत, अभुञ्जतः, भ्रातुः, वसो, मे, समा, वसुत्वनाय, राधसे, माता च, छदयथः ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே! நீ.
मे	𑌮𑍇	என்னுடைய
पितुः	𑌪𑌿𑌤𑍁𑌃	தந்தையினும்
वस्यान् असि	𑌵𑌸𑍍𑌯𑌾𑌨𑍍 𑌅𑌸𑌿	மிகத் தனமுடையோனாகின்றாய்.
उत	𑌉𑌤	மற்றும்
अभुञ्जतः	𑌅𑌭𑍁𑌞𑍍𑌜𑌤𑌃	பாதுகாப்பாற்றாத எனது
भ्रातुः	𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌃	உடன்பிறந்தோனினும் மிகுந்த தனமுடையோனாகின்றாய்.
वसो !	𑌵𑌸𑍋 !	வியாபகனே! நீ
मे	𑌮𑍇	எனது
वसुत्वनाय	𑌵𑌸𑍁𑌤𑍍𑌵𑌨𑌾𑌯	தனத்தின் பொருட்டும்
राधसे	𑌰𑌾𑌧𑌸𑍇	அன்னத்தின் பொருட்டும்
माता च	𑌮𑌾𑌤𑌾 𑌚	அன்னையும் நீயும் ஒத்தவர்களாகி
छदयथः	𑌛𑌦𑌯𑌥𑌃	என்னை மேம்பட்டோனாய்ச் செய்வீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—10. மேதாதிதி மேத்யாதிதி ரிஷிகள்.

இந்திரனே! நீ, எனது தந்தையாரினும் மேம்பட்ட தனமுடையோனா கின்றாய். மற்றும், பாதுகாப்பாற்றாத எனது சகோதரனினும் மேம்பட்டோனா யிருக்கின்றாய். வியாபகனாகிய இந்திர! எனது அன்னையாரும் நீயும் ஒத்தவர்களாயிருந்து, என்னைப் புகழுடையோனாய்ச் செய்வீர்களாக. ஏதன் பொருட்டெனினோ? தனம், அன்னம் என்னுமிரண்டின் இலாபத்தின் பொருட்டு என்பது பொருள். (10)

ஆறாவது கண்டம்

முற்றும்.

ஏழாவது கண்டம்

பிரபாடகம்—4. அத்தியாயம்—3. கண்டம்—7.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३ १ २र ३ १ २ ३ १ २
293. इम इन्द्राय सुन्विरे सोमासो दध्याशिरः ।
१ २र ३ २ ३ १ २ ३ २ ३ २
ताँ३ आ मदाय वज्रहस्त पीतये हरिभ्यां याह्योक आ ॥ १ ॥

இருக்கு 7-32-4.

𑌇𑌮 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌸𑍁𑌨𑍍𑌵𑌿𑌰𑍇 𑌸𑍋𑌮𑌾𑌸𑍋 𑌦𑌧𑍍𑌯𑌾𑌶𑌿𑌰𑌃 ।
𑌤𑌾𑌂 𑌆 𑌮𑌦𑌾𑌯 𑌵𑌜𑍍𑌰𑌹𑌸𑍍𑌤 𑌪𑍀𑌤𑌯𑍇 𑌹𑌰𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌹𑍍𑌯𑍋𑌕 𑌆 ॥

அந்வயம்.

हे वज्रहस्त!, दध्याशिरः, इमे, सोमासः, इन्द्राय, सुन्विरे, तान्, मदाय, पीतये, ओकः, आ, हरिभ्याम्, आयाहि ॥

பதவுரை.

हे वज्रहस्त!	ஹே வஜ்ரஹஸ்த!	வச்சிராயுத மேந்திய கையோய்!
दध्याशिरः	தத்யாஶிர:	தயிர் கலந்த
इमे	இமே	இந்தச்
सोमासः	ஸோமாஸ:	சோமரசம்
इन्द्राय	இந்த்ராய	இந்திரனுகிய நினக்குத்
सुन्विरे	ஸுந்விரே	தேடப்பட்டிருக்கின்றது.
तान्	தாந்	அச் சோமரசத்தை
मदाय	மதாய	களிப்பின் பொருட்டு
पीतये	பீதயே	அருந்துவதற்கு
ओकः	ஓக:	வேள்வி மண்டபத்தை
आ	ஆ	நோக்கி
हरिभ्यां	ஹரிப்யாம்	இரண்டு குதிரைகள்வாயிலாக
आयाहि	ஆயாஹி	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—1. வசிட்ட ரிஷி.

வச்சிராயுதக் கைய! தயிர் கலந்த இச் சோமரசம், இந்திரனுகிய நின் பொருட்டுத் தேடப்பட்டிருக்கின்றது. அச் சோமரசத்தை ஆனந்தத்தை முன்னிட்டு அருந்துவதற்கு வேள்வி மண்டபத்தை நோக்கி குதிரைகளின் மீது வருவாயாக. (1)

மந்திரம் 2.

३१ २३ १२ ३ १२ ३ १२
294. इम इन्द्र मदाय ते सोमाश्चिकित्र उक्थिनः ।
१२ ३ १ २र ३ १२ ३१२ ३१ २
मधोः पपान उप नो गिरः शृणु रास्व स्तोत्राय गिर्वणः ॥ २ ॥

இம இந்த்ர மதாய தே ஸோமாஶ்சிகித்ர உக்திந: ।
மதோ: பபாந உப நோ கிர: ஶ்ருணு ராஸ்வ ஸ்தோத்ராய [கிர்வண: ॥

அந்வயம்.

हे इन्द्र !, ते, मदाय, उक्थिनः, इमे, सोमाः, चिकित्रे, मधोः, पपानः, नः गिरः, उपशृणु, गिर्वणः, स्तोत्राय, रास्व ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
ते	𑌤𑍇	உனக்கு
मदाय	𑌮𑌦𑌾𑌯	ஆனந்தமுண்டாதற் பொருட்டு
उक्थिनः	𑌉𑌕𑍍𑌥𑌿𑌨𑌃	துதிகளோடு கூடிய
इमे	𑌇𑌮𑍇	இந்தச்
सोमाः	𑌸𑍋𑌮𑌾𑌃	சோமரசம்
चिकित्रे	𑌚𑌿𑌕𑌿𑌤𑍍𑌰𑍇	(இங்கு) காணப்படுகின்றது.
मधोः	𑌮𑌧𑍋𑌃	களிப்பைத் தரும் இச் சோம ரசத்தை
पपानः	𑌪𑌪𑌾𑌨𑌃	நிறைய அருந்தியவனாய்
नः गिरः	𑌨𑌃 𑌗𑌿𑌰𑌃	எமது துதியாகிய வாசகத்தை
उपश्रृणु	𑌉𑌪𑌶𑍃𑌣𑍁	இனிது கேட்பாயாக.
गिर्वणः !	𑌗𑌿𑌰𑍍𑌵𑌣𑌃 !	தோத்திரத்தாற் போற்றத் தக்க இந்திர !
स्तोत्राय	𑌸𑍍𑌤𑍋𑌤𑍍𑌰𑌾𑌯	துதிக்கின்ற எமக்கு
रास्व	𑌰𑌾𑌸𑍍𑌵	விருப்பிய பலனைத் தருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—2. வாமதேவ ரிஷி.

இந்திரனே ! நினது களிப்பின் பொருட்டு, தோத்திரத்தோடு கூடிய இச் சோமரசங் காணப்படுகின்றது. மற்றும், களிப்பை யுண்டாக்குஞ் சோமரசத்தை நிறைய அருந்தி எனது தோத்திரமாகிய வாசகத்தை இனிது கேட்பாயாக. துதிவாக்காற் போற்றற்குரிய இந்திர ! தோத்திரம் பண்ணுகின்ற எமக்கு விரும்பியதைக் கொடுப்பாயாக. (2)

மந்திரம் 3.

१ २ ३ २३ १ २ ३१ २३ १ २

295. आ त्वा३द्य सर्वदुघां हुवे गायत्र वेपसम् ।

१२ ३ २ ३२३२ ३ १२३१ २ ३ १ २

इन्द्र धेनुं सुदुघामन्यामिषमुरुधारामरंकृतम् ॥ ३ ॥

இருக்கு 8-3-10.

𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯 𑌸𑌬𑌰𑍍𑌦𑍁𑌘𑌾𑌂 𑌹𑍁𑌵𑍇 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌵𑍇𑌪𑌸𑌮𑍍 ।

𑌧𑍇𑌨𑍁𑌂 𑌸𑍁𑌦𑍁𑌘𑌾𑌮𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌷𑌮𑍁𑌰𑍁𑌧𑌾𑌰𑌾𑌮𑌰𑌂𑌕𑍃𑌤𑌮𑍍 ॥

அந்வயம்.

हे इन्द्र!, अद्य, सर्वदुघां, गायत्रवेपसं, सुदुघां, अन्यां, उरुधारां, इषं, धेनुं, अरंकृतम्, तु, आहुवे ॥

பதவுரை.

अद्य	𑌅𑌦𑍍𑌯	இப்போது
सर्वदुघां	𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌘𑌾𑌂	மிகப் பால் கொடுப்பதும்
गायत्रवेपसं	𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌵𑍇𑌪𑌸𑌂	புகழத் தக்க வேகமுடையதும்
सुदुघां	𑌸𑍁𑌦𑍁𑌘𑌾𑌂	நன்கு பால் கறத்தற் குரியதும்
अन्यां	𑌅𑌨𑍍𑌯𑌾𑌂	கோக்களினின்றும் வேறோர் வகை யுடையதும்
उरुधारां	𑌉𑌰𑍁𑌧𑌾𑌰𑌾𑌂	முலைகளினின்று பாலின் தாரை யொழுகப்பட்டதும்
इषं	𑌇𑌷𑌂	விரும்பத்தக்கமாகிய
धेनुं	𑌧𑍇𑌨𑍁𑌂	காமதேனு என்னும்
अरंकृतं	𑌅𑌰𑌂𑌕𑍃𑌤𑌂	அழகு மலிந்த இந்திரனை
तु	𑌤𑍁	விரைவாக
आहुवे	𑌆𑌹𑍁𑌵𑍇	அழைக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—3. மேதாதிதி மேத்யாதிதி ரிஷிகள்.

சிலர் விசுவாமித்திரர் என்பர். இம் மந்திரத்தால் இந்திரனைக் காமதேனு வடிவமாகவும், மழை வடிவமாகவுந் துதிக்கின்றார். இப்போது காமதேனுவாகிய இந்திரனை விரைவில் அழைக்கின்றேன். எவ்விதமாகிய காமதேனுவை யெனின்? மிகுந்த பால் தருவதும், போற்றத்தக்க வேகமுடையதும், இனிது பால் கறக்கத் தக்கதும், வேறு வகையுடையதும், நிறைய முலையினின்றும் பாலொழுகப்பட்டதும், விரும்பற்பாலதுமாகிய மழையை அல்லது காமதேனுவை. அதாவது அழகு வாய்ந்த, அல்லது, போதுமான வைகளைத் தருகின்ற இந்திரனை. அழைக்கின்றேன் என முடித்துக்கொள்க.

மந்திரம் 4.

१ २ ३२ ३ १२ ३ १२ ३१ २
296. न त्वा बृहन्तो अद्रयो वरन्त इन्द्र वीडवः ।
१ २र ३ १ २र३ २ ३ २ ३ १ २ र
* यच्छिक्षसि स्तुवते मावते वसु न किष्टदा मिनाति

இருக்கு

---

* यद्ददित्सति, என்பது இருக்கு.

𑌨𑌤𑍍𑌵𑌾 𑌬𑍃𑌹𑌨𑍍𑌤𑍋 𑌅𑌦𑍍𑌰𑌯𑍋 𑌵𑌰𑌨𑍍𑌤 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌵𑍀𑌳𑌵𑌃 ।
𑌯𑌚𑍍𑌛𑌿𑌕𑍍𑌷𑌸𑌿 𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍇 𑌮𑌾𑌵𑌤𑍇 𑌵𑌸𑍁 𑌨𑌕𑌿𑌷𑍍𑌟𑌦𑌾 𑌮𑌿𑌨𑌾𑌤𑌿 𑌤𑍇 ॥

அந்வயம்.

हे इन्द्र !, बृहन्तः, वीडवः, अद्रयः, त्वा, न वरन्ते, स्तुवते, मावते, यत् , वसू, शिक्षसि, ते, तत्, नकिः, आमिनाति ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
बृहन्तः	𑌬𑍃𑌹𑌨𑍍𑌤𑌃	வலியாற் பெரியவைகளும்
वीडवः	𑌵𑍀𑌳𑌵𑌃	மிக உறுதி யுடையவைகளுமான
अद्रयः	𑌅𑌦𑍍𑌰𑌯𑌃	மலைகளும்
त्वा	𑌤𑍍𑌵𑌾	நின்னைத்
न वरन्ते	𑌨 𑌵𑌰𑌨𑍍𑌤𑍇	தடைசெய்யத் தகாதனவாம்.
स्तुवते	𑌸𑍍𑌤𑍁𑌵𑌤𑍇	(மற்றும்) துதிக்கின்ற
मावते	𑌮𑌾𑌵𑌤𑍇	எமைப் போன்றார்க்கு
यत् वसु	𑌯𑌤𑍍 𑌵𑌸𑍁	யாதொரு தனத்தை
शिक्षसि	𑌶𑌿𑌕𑍍𑌷𑌸𑌿	கொடுக்கின்றனையோ,
ते तत्	𑌤𑍇 𑌤𑌤𑍍	உன்னுடைய தனத்தைக் கொடுக்கும் அவ் விஷயத்தில்
नकि आमिनाति	𑌨𑌕𑌿 𑌆𑌮𑌿𑌨𑌾𑌤𑌿	நின்னை ஒருவரும் தடுக்கமாட்டார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—4. நோதா ரிஷி.

இந்திர ! வலியாற் பெரியவைகளும், இதனாலே உறுதியானவைகளும் அதாவது நீ எவர்கட்குத் தனங் கொடுக்கின்றனையோ அவர்களெல்லாரினும் உறுதியானவைகளா யிருந்தும், மலைகள் வலியால் நின்னைத் தடுக்கமாட்டாதனவாயின என்பதாம். தடுக்காத் தன்மையே மந்திரத்தின் பிற்பாதியாற் கூறப்படுகின்றது. நின்னைத் துதிக்கின்ற எமை யொத்தார்கட்கு யாதொரு தனத்தைக் கொடுக்கின்றனையோ, உனது அத் தனத்தைக் குறித்து நோக்கமாகி ஒருவருந் தடுக்கார் என்பதாம். (4)

மந்திரம் 5.

१ २ ३२३ ३ १२ ३ १ २र
297. क ईम् वेद सुते सचा पिबन्तं कद्वयो दधे ।
३ १ २र ३ २र ३ २ ३ १२
अयं यः पुरो विभिनत्त्योजसा मन्दानः शिप्रचन्धसः ॥ ५ ॥

இருக்கு 8-33-7.

𑌕 𑌈𑌮𑍍 𑌵𑍇𑌦 𑌸𑍁𑌤𑍇 𑌸𑌚𑌾 𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌂 𑌕𑌦𑍍𑌵𑌯𑍋 𑌦𑌧𑍇 ।
𑌅𑌯𑌂 𑌯𑌃 𑌪𑍁𑌰𑍋 𑌵𑌿𑌭𑌿𑌨𑌤𑍍𑌤𑍍𑌯𑍋𑌜𑌸𑌾 𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑌃 𑌶𑌿𑌪𑍍𑌰𑍍𑌯𑌨𑍍𑌧𑌸𑌃 ॥

அந்வயம்.

सुते, सचा, पिबन्तं, ईम्, को वेद ?, कत्, वयः, दधे, यः अयं, शिप्री, अन्धसः, मन्दानः, ओजसा, पुरः, विभिनत्ति ॥

பதவுரை.

सुते	𑌸𑍁𑌤𑍇	சோமரசம் பிழிந்த விடத்து
सचा	𑌸𑌚𑌾	வேட்போர்களுடன்
पिबन्तं	𑌪𑌿𑌬𑌨𑍍𑌤𑌂	சோமரசம் அருந்துகின்ற
ईम्	𑌈𑌮𑍍	இந்திரனை
को वेद ?	𑌕𑍋 𑌵𑍇𑌦 ?	யாவனறிவான் ? (ஒருவனு மறியான்.)
कत्	𑌕𑌤𑍍	(அல்லது) எவ்வளவு
वयः	𑌵𑌯𑌃	அன்னத்தைத்
दधे ?	𑌦𑌧𑍇 ?	தாங்கு (தரிக்) கின்றான் ?
यः अयं	𑌯𑌃 𑌅𑌯𑌂	இத்தன்மைய யாதோரிந்திரன் உள்ளானோ, அவன்
शिप्री	𑌶𑌿𑌪𑍍𑌰𑍀	வேகமுடையோனும்,
अन्धसः	𑌅𑌨𑍍𑌧𑌸𑌃	சோமரசத்தாற்
मन्दानः	𑌮𑌨𑍍𑌦𑌾𑌨𑌃	களிப்புடையோனுமாய்
ओजसा	𑌓𑌜𑌸𑌾	வலியால்
पुरः	𑌪𑍁𑌰𑌃	பகைஞரின் நகரங்களை
विभिनत्ति	𑌵𑌿𑌭𑌿𑌨𑌤𑍍𑌤𑌿	நாசஞ்செய்கின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—5. மேதாதிதி ரிஷி.

சோமம் பிழிந்தெடுத்த காலத்தில், வேட்போர்களோடு சோம பானம் பண்ணுகின்ற இந்திரனை, எவனறிவான் ? எவனும் அறியான் என்பது பொருள். அல்லது, அவன் எத்துணை யன்னத்தைத் தாங்குகின்றான் ? அவ் விந்திரன் வேகமுடையோனும், சோமரசத்தாற் களிப்புடையோனுமாகி ஆற்றலுடன் பகைஞரின் புரங்களைத் தகர்க்கின்றான் என்பதாம். (5)

மந்திரம் 6.

१२ ३ १ २ ३ २ २२ ३ १२३ १२
298. यदिन्द्र शासो अव्रतं च्यावया सदसस्परि ।
३ ३ २१ २ २१२ ३२ ३ १२
अस्माकमंशुं मघवन् पुरुस्पृहं वसव्ये अधिबर्हय ॥ ६ ॥

யதிந்த்ர ஶாஸோ அவ்ரதம் ச்யாவயா ஸதஸஸ்பரி ।
அஸ்மாகமம்ஶும் மகவந் புருஸ்ப்ருஹம் வஸ

அந்வயம்.

हे इन्द्र!, यत्, शासः, सदसः, परि, अव्रतम्
अस्माकं, अंशुं, वसव्ये, अधिबर्हय ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இ
यत्	யத்	(
शासः	ஶாஸ:	
सदसः	ஸதஸ:	
परि	பரி	
अव्रतम्	அவ்ரதம்	
च्यावय	ச்யாவய	
मघवन्!	மகவந்!	
पुरुस्पृहं	புருஸ்ப்ருஹம்	
अस्माकं	அஸ்மாகம்	
अंशुं	அம்ஶும்	
वसव्ये	வஸவ்யே	
अधिबर्हय	அதிபர்ஹய	

சாய

கண்டம்—7. இருக்கு—6. வாமே

இந்திர! யாது காரணத்தா
தக்கவர்களைத் தண்டிக்கின்றவன்
புறத்துமுள்ள வேள்வி விரோதி
னும், தனமுடையோய்! பல்லே

சோமரசத்தை அஃதிருக்கத் தக்க விடத்தில் மிகப் பெருகச் செய்வாயாக. வேள்விச் சாலையினின்றும் வேள்விக்கு விரோதிகளான இராக்கதர்களைத் தூரத்தில் ஓட்டிவிட்டுச் சோமரசத்தைப் பெருகச் செய்வாயாக என்பது பொருள். (6)

மந்திரம் 7.

३ १ २ ३ २ ३ १ २ ३ १ २
यं वचः पर्जन्यो ब्रह्मणस्पतिः ।
३ १ २ ३ २ ३ १ २ ३ १ २
तिर्नु पातु नो दुष्टरं त्रामणं वचः ॥ ७ ॥

யம் வச: பர்ஜந்யோ ப்ரஹ்மணஸ்பதி:।
அதிதிர்நு பாது நோ துஷ்டரம்
[த்ராமணம் வச: ॥

அந்வயம்.

पुत्रैः, भ्रातृभिः, अदितिः, दुस्तरं, त्रामणं,
॥

வுரை.

உருவத்தை அபிமானிக்கின்ற துவஷ்டா என்னும் தேவதையும்
மேகத்திற்கு நிலைக்களமாகிய தேவதையும்,
மந்திரத்திற் கபிமானியாகிய பிரமணற்பதி என்னும் தேவதையும்,
புத்திரர்களுடனும்
உடன்பிறந்தார்களுடனும்
தேவர்கட்கு அன்னையாராகிய அதிதி தேவியாரும்,
விரோதிகளால் அடக்கமுடியாததும்
காப்பாற்றத் தக்கதுமாகிய
பிரகாசமுடையு

नः	நः	எமது
वचः	வசः	வேள்வியின் துதிவடிவ வாக்கை
नु	நு	விரைவாகப்
पातु	பாது	பாதுகாத்திடுக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—7. வாமதேவ ரிஷி.

'துவஷ்டா' என்னும் பெயர் பூண்ட உருவத்தை யபிமானிக்குந் தேவதை எங்களுடைய வாக்கைக் காப்பாற்றுக. 'பிரமணற்பதி' என்னும் மந்திராபிமானி தேவதை எங்களுடைய வாணியைப் பரிபாலிக்குக. மற்றும் வரையப்படாத, அல்லது, தீனத்தன்மையற்ற 'அதிதி' என்னுந் தேவமாதா வானவர் தமது புத்திர சகோதரர்களுடன், பகைஞரால் தாழ்த்தக்கூடாததும் பரிபாலிக்கத் தக்கதுமாகிய எமது வாக்கைப் பாதுகாப்பவராகுக என்பதாம். (7)

குறிப்பு.—துவஷ்டா தேவதை வாக்கைக் கொடுக்குக, பிரமணற்பதி மழையைப் பெய்விக்குக. அதிதி தேவியார் சத்துருக்களின் உபத்திரவத்தினின்று எம்மையும், எமது புத்திர பௌத்திரர்களையுங் காப்பாற்றுவாராக என்பர் சிலர்.

மந்திரம். 8.

३ २ ३२ ३ १२३ १ २ ३ १२

300. कदाचन स्तरीरसि नेन्द्र सश्चसि दाशुषे ।

२ ३ १ २र २ ३ २उ ३ १ २ ३ १ २

उपोपेन्नु मघवन् भूय इन्नु ते दानं देवस्य पृच्यते ॥ ८ ॥

இருக்கு 8-53-7.

கதாசந ஸ்தரீரஸி நேந்த்ர ஸஶ்சஸி தாஶுஷே ।
உபோபேந்நு மகவந் பூய இந்நு தே தானம் தேவஸ்ய
[ப்ருச்யதே

அந்வயம்.

हे इन्द्र !, कदाचन, स्तरीः, न असि, दाशुषे, सश्चसि, मघवन्, देवस्य, ते, भूयः, दानं, उपोपेत्, पृच्यते ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே! நீ
कदाचन	கதாசந	ஓர் போதும்
स्तरीः	ஸ்தரீ:	துன்புறுத்துவோனாய்
न असि	ந அஸி	இருக்கின்றிலை.
दाशुषे	தாஶுஷே	அவிகொடுப்போனுக்கு
सश्चसि	ஸஶ்சஸி	(பயனை) அடைவிக்கின்றாய்.
मघवन्!	மகவந்!	தனமுடையோய்!
देवस्य	தேவஸ்ய	பிரகாசமுடைய
ते	தே	உனது
भूयः	பூய:	மிகுந்த
दानं	தானம்	ஈகையானது
उपोपेत् पृच्यते	உபோபேத் ப்ருச்யதே	எம்பாலே வந்து சேர்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—8. பால கில்லியர்கள் ரிஷிகள்.

இந்திரனே! நீ, ஓர் காலும் துன்புறுத்துவோனாகாய். அதாவது மலட்டாவைப் போல ஆகமாட்டாய் என்பதாம். மலட்டு ஆ கன்றைக் கருதி வீட்டிற்குச் செல்லாவாறு செய்யமாட்டாய் என்பது பொருள். மற்றோ, அவிகொடுக்கின்ற வேள்வித் தலைவன் பொருட்டு வருவாய். அதாவது எம்மை வந்தடைவாய் என்பதாம். தனமுடைய இந்திர! ஒளி முதலிய குணங்களையுடைய உனது வர தானம் எங்களிடத்திலேயே சேர்கின்றது. மலட்டுப் பசுப்போலிராது, நீ எங்களிடம் வந்து எமக்கு வேண்டிய வரத்தைத் தருகின்றாய் என்பது கருத்து. (8)

மந்திரம் 9.

३ १ २र ३ १२ ३१२
301. * युङ्क्ष्वा हि वृत्रहन्तम हरी इन्द्र परावतः ।
३ १२३ १ २ ३२ ३ २ ३ १
अर्वाचीनो मघवन्त सोमपीतय उग्र ऋष्वेभिरागहि ॥ ९ ॥

இருக்கு 8-3-17.

யுங்க்ஷ்வா ஹி வ்ருத்ரஹந்தம ஹரீ இந்த்ர பராவத: ।
அர்வாசீநோ மகவந்த ஸோமபீதய உக்ர ருஷ்வேபிராகஹி ॥

† युक्ष्वाहि, என்பது இருக்கு.

அந்வயம்.

हे वृत्रहन्तम !, हि, हरी, युङ्क्ष्व, मघवन् !, उग्रः, सोमपीतये, अर्वाचीनः, ऋष्वेभिः, मरुद्भिः, परावतः, आगहि ॥

பதவுரை.

हे वृत्रहन्तम !	𑌹𑍇 𑌵𑍃𑌤𑍍𑌰𑌹𑌨𑍍𑌤𑌮 !	விருத்திரனைக் கொன்ற சிறப்புடையோய் !
हि	𑌹𑌿	நிச்சயமாக
हरी	𑌹𑌰𑍀	நினது குதிரைகளை
युङ्क्ष्व	𑌯𑍁𑌂𑌕𑍍𑌷𑍍𑌵	இரதத்திற் பூட்டுவாயாக.
मघवन् !	𑌮𑌘𑌵𑌨𑍍 !	இந்திர !
उग्रः	𑌉𑌗𑍍𑌰𑌃	மிகுந்த ஆற்றலுடைய நீ
सोमपीतये	𑌸𑍋𑌮𑌪𑍀𑌤𑌯𑍇	சோமரசம் அருந்துவதற்கு
अर्वाचीनः	𑌅𑌰𑍍𑌵𑌾𑌚𑍀𑌨𑌃	எம்பால் நோக்கமாய்
ऋष्वेभिः	𑌋𑌷𑍍𑌵𑍇𑌭𑌿𑌃	காணத் தக்க
मरुद्भिः	𑌮𑌰𑍁𑌦𑍍𑌭𑌿𑌃	மருத்துக்களாய தேவதைகளுடன்
परावतः	𑌪𑌰𑌾𑌵𑌤𑌃	பரவுலகினின்றும்
आगहि	𑌆𑌗𑌹𑌿	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—9. மேதாதிதி அல்லது மேத்தியாதிதி ரிஷி.

விருத்திரனைக் கொன்ற சிறப்பு மலிந்தோய்! அதாவது :—மறித்தும் எழுமாறு கொன்றோய்! என்பதாம். நினது குதிரைகளை இரதத்திற் பூட்ட வேண்டும். தனமுடைய இந்திர! உயர்ந்த வன்மையுள்ள நீ சோமரசம் அருந்துதற் பொருட்டு எம்பால் நோக்கமாயுள்ள மருத்துக்களோடு தூரமாகிய வானுலகிலிருந்து வருவாயாக என்பதாம். (9)

'ஹி' என்னுஞ் சொல் தேற்றப் பொருளினின்றது.

மந்திரம் 10.

२ ३ १ २र ३ १ २
302. त्वामिदा ह्यो नरोऽपीप्यन् वज्रिन् भूर्णयः ।
१ २ ३ १ २ ३३ ३ २ ३ १ २३ २
स इन्द्र *स्तोमवाहस इह श्रुध्युप स्वसरमागहि ॥ १० ॥

இருக்கு 8-99-1.

* स्तोमवाहसामिह, என்பது இருக்கு.

த்வாமிதா ஹ்யோ நரோऽபீப்யந் வஜ்ரிந் பூர்ணய: ।
ஸ இந்த்ர ஸ்தோமவாஹஸ இஹ ஶ்ருத்யுப ஸ்வஸரமாகஹி

அந்வயம்.

हे वज्रिन्!, त्वां, भूर्णयः, नरः, इदा, ह्यः, अपीप्यन्, इन्द्र!, सः, स्तोमवाहसः, इह, श्रुधि, स्वसरं, उपागहि ॥

பதவுரை.

हे वज्रिन्	ஹே வஜ்ரிந் !	வச்சிராயுதத்தைத் தாங்கினோய் !
त्वां	த்வாம்	நினக்கு
भूर्णयः	பூர்ணய:	அவிகொடுப்போனாகிய
नरः	நர:	வேள்வி நாயகன்
इदा	இதா	இன்றும்
ह्यः	ஹ்ய:	முந்திய, தினமும்,
अपीप्यन्	அபீப்யந்	சோமரசம் அருந்துவித்தனன்.
सः	ஸ:	அத்தகைய
इन्द्र!	இந்த்ர !	இந்திரனே ! நீ
स्तोमवाहसः	ஸ்தோமவாஹஸ:	தோத்திரஞ் செய்கின்றோனாகிய (எமது துதியை)
इह	இஹ	இவ் வேள்வியிற்
श्रुधि	ஶ்ருதி	கேட்பாயாக.
स्वसरं	ஸ்வஸரம்	எமதிடத்திற்கு
उप आगहि	உப ஆகஹி	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—10. நிருமேத ரிஷி.

வச்சிராயுதந் தாங்கிய இந்திர ! நின்னைக்குறித்து அவிகளை நிறையக் கொடுக்குஞ் சிலர்களான வேள்வித் தலைவர்கள், இன்றும், நேற்றும், நின்னைச் சோமரச மருந்தச் செய்தனர். அத்தகைய இந்திர ! நீ துதியாளர்களான எங்களுடைய தோத்திரத்தை இவ் வேள்வியிற் கேட்பாயாக. எமது வீட்டிற்கும் வருவாயாக. (10)

குறிப்பு.—ஈண்டுச் 'சுவசரம்' என்றது வீடாம். (நிருத்தம் 3-4-10)ல் இது வீட்டின் பெயர்களுட் கூறப்பட்டிருத்தலின் என்க.

ஏழாவது கண்டம்

முற்றும்.

वां	வாம்	உங்களிருவரையும்
अवसे	அவஸெ	தனது காப்பின்பொருட்டு, அல்லது, உங்கள் திருப்தியின் பொருட்டு
अह्वे	அஹ்வெ	அழைக்கின்றேன்.
हि	ஹி	யாதிஞலெனின்? நீவிர்
विशं विशं	விஶம் விஶம்	தம்மைத் துதிக்கின்ற ஒவ்வொருவரிடத்தும்
गच्छथः	கச்சத:	செல்கின்றவர்கள் (ஆதலின் என்க.)

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—2. வசிட்ட ரிஷி.

வானுலகை விரும்புகின்ற இச் சனங்களும், (மற்றும்) வேட்போர்களும், அசுவினி குமாரர்காள்! வியாபகமான உங்களை யழைக்கின்றார்கள். இத்தன்மைய வசிட்டனுகிய நானும், கருமத்தைத் தனமாகக் கொண்டோர்களே! உங்களிருவரையும் என்னைப் பாதுகாக்கும்பொருட்டு, அல்லது, உங்களிருவரையுங் களிப்படைவித்தற் பொருட்டு அழைக்கின்றேன். எதன் பொருட்டுப் பிரசைகளும்யானும் நினக்கு அன்பு கூறல் எனினே? ஆண்டுக் கூறப்படுகின்றது. தம்மைத் துதிக்கின்றவர்கள் ஒவ்வொருவரிடத்துந் தாமே செல்கின்றீர்கள் ஆதலின் என்க. தோத்திரம் பண்ணுகின்ற மக்களை முன்னிட்டு நீங்களிருவரும் உண்மையாய்ச் செல்கின்றீர்கள்; அதனுல், இவ்வாறு (உங்கட்கு) இன்சொற் கூறப்படுகின்றது என்பதாம். (2)

மந்திரம் 3.

२ ३ १ २ ३ १ २ ३ १ २

305. कु ष्ठः को वामश्विना तपानो देवा मर्त्यः ।

३ १ २ ३ १ २र ३ २ ३ २ ३ २ ३ १ २

घ्नता वामश्नया क्षपमाणोंऽशुनेत्थमु आद्वन् यथा ॥ ३ ॥

கு ஷ்ட: கொ வாமஶ்விநா தபாநொ தெவா மர்த்ய: ।

க்நதா வாமஶ்நயா க்ஷபமாணொம் ஶுநெத்தமு ஆத்வந் யதா ॥

அந்வயம்.

देवा, अश्विना, कु ष्ठः, कः, मर्त्यः, वां, तपानः, वां, अश्नया, घ्नता, अंशुना, क्षपमाणः, आद्वन् यथा, इत्थं उ ॥

பதவுரை.

देवा	தேவா	பிரகாசமுடைய
अश्विना !	அஶ்விநா !	அசுவினி குமாரர்களே !
कृष्टः	க்ருஷ்ட:	தரையில் வாழ்கின்ற
कः मर्त्यः ?	க: மர்த்ய: ?	எம்மனிதர் ?
वां	வாம்	உங்களைப்
तपानः	தபாந:	பிரகாசிப்பவர்கள் ? (யாருமிலர்.)
वां	வாம்	உங்கணிமித்தம்
अश्नया	அஶ்நயா	கல்லால்
घ्नता	க்நதா	இடித்துச்
अंशुना	அம்ஶுநா	சோமரசத்தைப் பிழிந்ததால்
क्षपमाण:	க்ஷபமாண:	களைப்புற்ற வேள்வித் தலைவன்
आद्वन् यथा	ஆத்ந யதா	அரசனைப்போல
इत्थं उ	இத்தம் உ	இத்தன்மைய ஐசுவரியமுடையவனாகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—3. அசுவினிகள் வைவசுவத ரிஷிகள்.

பிரகாசிக்கின்ற அசுவினி குமாரர்களே ! உங்களைப் பூமியின்கண்ணுள்ள எம் மனிதர் (மரண சீலமுள்ள துதிப்போர்) பிரகாசிக்க வல்லார் ? ஒருவருமிலர் என்பது பொருள். உங்கள் நிமித்தம், பிழிவதற்குக் கருவியாகிய கல்லாலிடித்துச் சோமரசம் எடுத்தலால், அல்லது, எங்களாற் பிழிந்தெடுக்கப்பட்டு உங்களைச் சேருகின்ற சோமரசத்தால் களைப்புற்ற வேள்வித் தலைவன் இவ்வாறாகவே யாகின்றான். அதாவது மிகுந்த ஐசுவரியமுடையானாகின்றான் என்பது பொருள். (யாரைப் போலெனின்) வேண்டிய அன்னரச முதலியவைகளை யருந்துகின்ற மன்னன் முதலியோர் போல. அவ் வேந்தன் எவ்வாறு மிகுந்த விருத்தி யுடையோனாய் எடுத்துக் காட்டுவதற்கு விடயமாகின்றானோ, அங்ஙனமே இவனுமாகின்றான் என்பதாம். (3)

மந்திரம் 4.

३१ ३ १२ ३२उ ३ १२
306. अयं वां मधुमत्तमः सुतः *सोमो दिविष्टिषु ।
१२ ३ १ २ ३ १ २र ३१२
तमश्विना पिबतं तिरो अन्ह्यं धत्तꣳ रत्नानि दाशुषे ॥ ४ ॥

இருக்கு 1-47-1.

---

* साम ऋतावता, என்பது இருக்கு.

அயம் வாம் மதுமத்தம: ஸுத: ஸோமோ திவிஷ்டிஷு ।
அச்விநா பிபதம் திரோ அந்ஹ்யம் தத்தம் ரத்நாநி தாசுஷே ॥

அந்வயம்.

हे अश्विना !, वां, दिविष्टिषु, मधुमत्तमः, अयम् सोमः, सुतः, तिरो अन्ह्यं, पिबतं, दाशुषे, रत्नानि, धत्तं ॥

பதவுரை.

हे अश्विना !	ஹே அச்விநா !	அசுவினி குமாரர்காள் !
वां	வாம்	உங்கட்கு
दिविष्टिषु	திவிஷ்டிஷு	வேள்விகளில்
मधुमत्तमः	மதுமத்தம:	தீஞ்சுவை மிகுந்த
अयं सोमः	அயம் ஸோம:	இச் சோமரசம்
सुतः	ஸுத:	பிழியப்பட்டிருக்கின்றது.
तिरो अन्ह्यं	திரோ அந்ஹ்யம்	முற்பகற் றேடிய சோமரசத்தை
पिबतं	பிபதம்	அருந்துவீர்களாக.
दाशुषे	தாசுஷே	அவிகொடுக்கின்ற வேள்வித் தலைவனுக்கு
रत्नानि	ரத்நாநி	இரத்தினங்களைக்
धत्तं	தத்தம்	கொடுப்பீர்களாக.

சாணய பாடியம்.

கண்டம்—4. இருக்கு—8. பிரகண்ணுவ ரிஷி.

அசுவினி குமாரர்காள் ! உங்களுக்கு வியனுலகு வேட்கும் வேள்விகளில், இச் (முன்னுள்ள) சோமரசம் பிழிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. (அது எவ்வண்ணமானதெனின் ?) மிகச் சுவையுடையது. சென்ற முன் தினத்தில் பிழிந்தெடுத்த அச் சோமரசத்தை யருந்திக்கொண்டு, அவி கொடுக்கின்ற வேள்வித் தலைவனுக்கு இரமணீயமான தனங்களைக் கொடுப்பீர்களாக என்பதாம். (4)

மந்திரம் 5.

२ ३ १२ ३ १२ ३ २ ३ १ २३१ २
307. * आ त्वा सोमस्य गल्दया सदा याचन्नहं † ज्या ।
१२ ३२ २र ३ १ २र३ १ २
भूर्णिं मृगं न सवनेषु चुक्रुधं क ईशानं न याचिषत् ॥ ५ ॥

இருக்கு 8-1-20.

* मात्वा, † गिरा, என்பன இருக்கு.

𑌆 𑌤𑍍𑌵𑌾 𑌸𑍋𑌮𑌸𑍍𑌯 𑌗𑌲𑍍𑌦𑌯𑌾 𑌸𑌦𑌾 𑌯𑌾𑌚𑌨𑍍𑌨𑌹𑌂 𑌜𑍍𑌯𑌾 ।
𑌭𑍂𑌰𑍍𑌣𑌿𑌂 𑌮𑍃𑌗𑌂 𑌨 𑌸𑌵𑌨𑍇𑌷𑍁 𑌚𑍁𑌕𑍍𑌰𑍁𑌧𑌂 𑌕 𑌈𑌶𑌾𑌨𑌂
[𑌨 𑌯𑌾𑌚𑌿𑌷𑌤𑍍 ॥

அந்வயம்.

हे इन्द्र !, भूर्णिं, मृगं न, त्वा, सवनेषु, सोमस्य, गल्दया, ज्या, अहं, सदा, याचन्, आचुक्रुधं, कः, ईशानं, न, याचिषत् ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
भूर्णिं	𑌭𑍂𑌰𑍍𑌣𑌿𑌂	தலைமையாகிய
मृगं न	𑌮𑍃𑌗𑌂 𑌨	சிங்கம் போன்ற
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னை
सवनेषु	𑌸𑌵𑌨𑍇𑌷𑍁	வேள்விகளில்
सोमस्य	𑌸𑍋𑌮𑌸𑍍𑌯	சோமரசத்தின்
गल्दया	𑌗𑌲𑍍𑌦𑌯𑌾	பெருக்கோடும்
ज्या	𑌜𑍍𑌯𑌾	வெற்றித்தன்மையுள்ள தோத்திரத்தோடுங்கூடிய யான்
सदा	𑌸𑌦𑌾	எக்காலும்
याचन्	𑌯𑌾𑌚𑌨𑍍	இரப்போனாகி
आचुक्रुधं	𑌆𑌚𑍁𑌕𑍍𑌰𑍁𑌧𑌂	நினது குரோதத்தைப் போக்குகின்றேன்.
कः ?	𑌕𑌃 ?	யார் ?
ईशानं	𑌈𑌶𑌾𑌨𑌂	இறைவனை
न याचिषत् ?	𑌨 𑌯𑌾𑌚𑌿𑌷𑌤𑍍 ?	இரக்கமாட்டார் ?

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—5. மேதாதிதி மேத்தியாதி ரிஷிகள்.

இந்திர ! உன்னை, வேள்விகளில் சோமரச வொழுக்கோடும், வெற்றிச் சிலமுள்ள தோத்திரத்தோடுங் கூடிய யான், எப்போதும் யாகஞ் செய்வோனாய் நினது குரோதத்தைப் போக்குகின்றேன். மிகுதியாய் ஏற்குமிடத்து நின்பால் குரோதமுண்டாகின்றது, அதைச் சோமரசத்தின் ஒழுக்கினாலும், தோத்திரத்தாலும் நீக்குகின்றேன் என்பது பொருள். எத்தன்மைய நின்னை யெனின்? நிறைந்த தன்மையுள்ள சிங்கம்போல் பயங்கொடுக்கும் அத்தன்மையனை. இறைவனாகிய இந்திரனை யிரப்பதில் உலகம் பற்றிய

நியாயங் காட்டப்படுகிறது :—உலகில் எவன் இறைவனை (தலைவனை) யாசிக்க மாட்டான்? யாவர்களுமே யாசிப்பார்கள். (இரக்கின்றார்கள்) என்க. இதனால் யானும் இறைவனாகிய நின்னை யிரக்கின்றேன் என்பது உட்கிடை. (5)

குறிப்பு.—'ஜ்யா' என்றதற்கு, வெற்றிச் சீலமுள்ள தோத்திரம் எனப்பொருட்படுதல் பற்றியே गिरा (கிரா) என ஓதுகின்றார்கள் இருக்குப் படிப்போர்கள். ஈண்டு ஆ, என்னும் இடைச்சொற்கு, நீக்கப் பொருளாம். இடைச் சொற்களுக்குப் பல பொருளாமாதலின். இதுபற்றியே இருக்குப் படிப்போர்கள் 'மாத்வா' என நீட்டேத வாசகத்தை யோதுகின்றார்கள் (என்பது காண்க.)

மந்திரம் 6.

१ २ ३ २ ३ २उ ३ १ २
308. अध्वर्यो द्रावया त्वꣳ सोममिन्द्रः पिपासति ।
१ २ ३ १ २ ३ १२ ३ १२ १ २ ३ २
*उपो नूनं युयुजे वृषणा हरी आ च जगाम वृत्रहा ॥ ६ ॥

இருக்கு 8-4-11.

அத்⁴வர்யோ த்³ராவயா த்வம் ஸோமமிந்த்³ர꞉ பிபாஸதி |
உபோ நூநம் யுயுஜே வ்ருஷணா ஹரீ ஆ ச ஜகா³ம வ்ருத்ரஹா ||

அந்வயம்.

हे अध्वर्यो !, त्वं, सोमं, द्रावया, इन्द्रः, पिपासति, वृषणा, हरी, नूनं, उपो युयुजे, वृत्रहा च, आजगाम ॥

பதவுரை.

हे अध्वर्यो !	ஹே அத்⁴வர்யோ !	வேள்வியாற்றுவோய் !
त्वं	த்வம்	நீ
सोमं	ஸோமம்	சோமத்தை
द्रावया	த்³ராவயா	உத்தரவேதிகை, என்னுமிடத்திற் சேர்ப்பாயாக. ஏனெனின்?
इन्द्रः	இந்த்³ர꞉	இந்திரன்
पिपासति	பிபாஸதி	சோமரசம் அருந்துவதற்கு விரும்புகின்றான்.
वृषणा	வ்ருஷணா	தருணப் பருவமுடைய
हरी	ஹரீ	குதிரைகளை

* उपनूनं, என்பது இருக்கு.

नूनं	𑌨𑍂𑌨𑌂	நிச்சமாய் (இன்று)
उपो युयुजे	𑌉𑌪𑍋 𑌯𑍁𑌯𑍁𑌜𑍇	இரதத்திற் பூட்டிவிட்டான்.
वृत्रहा च	𑌵𑍃𑌤𑍍𑌰𑌹𑌾 𑌚	விருத்திரனைக் கொன்ற இந்திரன்
आ जगाम	𑌆 𑌜𑌗𑌾𑌮	வந்துவிட்டனன். (ஆதலின் என்க.)

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—6. தேவாதிதி ரிஷி.

வேள்விச்செய்கின்றவனே ! நீ, உத்தரவேதிகையிற் சோமத்தை சேர்ப்பாயாக. அல்லது இளகுமாறு செய்குதி. அதாவது பிழிந்தெடுப்பாயாக என்பது பொருள். காரணமென்னையோவெனின் ? இந்திரன் சோமரசத்தை அருந்த இச்சிக்கின்றான் ஆதலினென்க. நின்னால் இஃதெவ்வாறு உணரப்பட்டதெனின்றே ? ஆண்டுக் கூறப்படுகின்றது :—இப்போது தருணமான குதிரைகளைத் தேர்ப்பாகன் இரதத்திற் பூட்டிவிட்டனன். விருத்திரனைக் கொன்ற இந்திரன் வந்துவிட்டான். (இவ் வாற்றானென்க.) (6)

மந்திரம் 7.

३ २३२उ ३२ ३ २ ३ १ २
309. अभीषतस्तदा भरेन्द्र ज्यायः कनीयसः ।
३ २ ३ १ ३ १ २ ३ १२ ३ १ २
पुरूवसुर्हि * मघवन् बभूविथ भरे भरे च हव्यः ॥ ७ ॥

இருக்கு 7-37-76

𑌅𑌭𑍀𑌷𑌤𑌸𑍍𑌤𑌦𑌾 𑌭𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌜𑍍𑌯𑌾𑌯𑌃 𑌕𑌨𑍀𑌯𑌸𑌃 ।
𑌪𑍁𑌰𑍂𑌵𑌸𑍁𑌰𑍍𑌹𑌿 𑌮𑌘𑌵𑌨𑍍 𑌬𑌭𑍂𑌵𑌿𑌥 𑌭𑌰𑍇 𑌭𑌰𑍇 𑌚 𑌹𑌵𑍍𑌯𑌃 ॥

அந்வயம்.

हे इन्द्र !, ज्यायः, इषतः, तत्, कनीयसः, अभ्याभर, मघवन् !, पुरूवसुः, बभूविथ, भरे भरे, हव्यः ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
ज्यायः	𑌜𑍍𑌯𑌾𑌯𑌃	எவரினுஞ் சிறந்தோனாகிய நீ
इषतः	𑌇𑌷𑌤𑌃	வேண்டப்பட்டதும்
तत्	𑌤𑌤𑍍	புகழ்பெற்றது மாகிய தனத்தை

* मघवन्त्सनासि, என்பன இருக்கு.

कनीयसः	கநீயஸ:	தாழ்ந்தே
अभ्याभर	அப்⁴யாப⁴ர	எல்லா யாக.
मघवन्!	மக⁴வந்!	தனமுட
पुरूवसुः	புரூவஸு:	பலரா
बभूविथ	ப³பூ⁴வித²	இருச்
भरे भरे	ப⁴ரே ப⁴ரே	ஒவ்வொ
हव्यः च	ஹவ்ய: ச	அழை ஞய். தற்கு

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—7. வசிட்ட ரிஷி.

மேம்பட்டோனுகிய இந்திர! நீ உண்மையாய்த் குப் புகழ் வாய்ந்த திரவியத்தை எல்லாவாற்ருனுங் கெ யாக. தனமுள்ள இந்திர! நீ, பலராலும் போற்றப்பட்டே ருய். ஒவ்வொரு போர்க்களத்தும் அழைக்கப்படுவோனும், கத் தக்கோனுமா யிருக்கின்ருய் என்பதாம்

மந்திரம் 8.

१ २ ३ १ २.२ २ ३ १ २ ३ १ २

310. यदिन्द्र यावतस्त्वमेतावदहमीशीय ।

३ २ ३ १ २ ३ १ २ ३ १ २

*स्तोतारमिद्दधिषे रदावसो न पापत्वाय रंसिषम् ।

இருக்கு 7-

யதி³ந்த்³ர யாவதஸ்த்வமேதாவத³ஹமீஶீய ।

ஸ்தோதாரமித்³த³தி⁴ஷே ரதா³வஸோ ந பாபத்வாய ரம்ஸிஷம் ।

அந்வயம்.

हे इन्द्र!, त्वं, यावतः, ईशिषे, एतावत्, अहं, ईशीय, यत्, रदावसो, स्तोतारं, इत् दधिषे, पापत्वाय, न, रंसिषम् ॥

*स्तोतारमिद्दिधिषेय रदावसो न पापत्वाय रासीय, என்பது இருக்கு.

பதவுரை.

...!	இந்திரனே !
	நீ
...:	எவ்வளவு தனத்திற்கு
...க்ஷெ	இறைவனாகின்றனையோ,
...கி	அவ்வளவு தனத்திற்கே
	யானும்
...	தலைவனாகின்றேன்.
	இதற்கு யாது காரணமோ, அதனால்
...வா !	தனமீயும் இந்திர ! யான்
...ரம்	சாமமறை பாடுவோனையே
... யிக்ஷெ	பாதுகாப்பேன்.
...வகூவாய	பாவத்திற்கு
...ம் லிஷம்	ஈயவேமாட்டேன்.

சாயண பாடியம்.

...க்கு—8. வசிட்ட ரிஷி.

நீ, எவ்வளவு தனத்திற்கு இறைவனாகின்றனையோ, அவ்வளவு யானுந் தலைவனாகின்றேன். ஆதலின், தனத்தைக் கொடுக்...ர! நான் என்னைச் சோ...ஸ்தோதா, என்னுஞ் சாமவேத பாட...ங்கொடுத்துப் பாட வைப்பேன்... (காப்பாற்றுவேன்) தீமையிற்...ர் என்பதாம். (8)

மந்திரம் 9.

त्वमिन्द्र प्रतूर्त्तिष्वभि विश्वा असि स्पृधः ।
अशस्तिहा जनिता वृत्रतूरसि त्वं तूर्य तरुष्यतः ॥ ९

...இந்திர ப்ரதூர்த்திஷ்வபி விச்வா அஸி ஸ்ப்ருத: । இருக்...
...ஸ்திஹா ஜநிதா வ்ருத்ரதூரஸி த்வம் தூர்ய தருஷ்யத: ॥ 58

அந்வயம்.

...न्द्र !, त्वं, प्रतूर्तिषु, विश्वा स्पृधः, अभ्यसि, तूर्य !, त्वं, ...
...जनिता, वृत्रतूः, असि, तरुष्यतः ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
त्वं	த்வம்	நீ
प्रतूर्तिषु	ப்ரதூர்திஷு	போர்களில்
विश्वा स्पृधः	விஶ்வா ஸ்ப்ருத꞉	போராடுவோர்களின் எல்லாச் சேனைகளையும்
अभ्यसि	அப்யஸி	அடக்கி விடுகின்றாய்.
तूर्य !	தூர்ய !	பகைஞரை வதைக்கின்ற இந்திர !
त्वं	த்வம்	நீ
अशस्तिहा	அஶஸ்திஹா	தெய்வீக ஆபத்துக்களைப் போக்கின்றாய்.
जनिता	ஜநிதா	எனது விரோதிகட்கு ஆபத்தை யுண்டாக்குகின்றாய்.
वृत्रतूः !	வ்ருத்ரதூ꞉ !	பகைஞர் (கூட்டங்)களைத் தொலைப்போனாய்
असि	அஸி	இருக்கின்றாய்.
तरुष्यतः	தருஷ்யத꞉	எனக்கிடையூறானவைகளை நீக்குகின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—9. நிருமேத ரிஷி.

இந்திர ! நீ, உயுத்தங்களில் போர் செய்வோர்களின் எல்லாச் சேனைகளையும் அடக்கி விடுகின்றாய். மற்றும் பகைஞரை வதைக்கின்ற இந்திரனே ! நீ, தெய்வீகமாய் வரும் ஆபத்தை நீக்குவோனா யிருக்கின்றாய். அசுரர்கட்குத் தெய்வீகமாய் ஆபத்துக்களை யுண்டாக்குவோனாகவும் இருக்கின்றாய். எல்லாப் பகைஞர் குலங்களை யறுப்போனாகவும் இருக்கின்றாய். எனது பாதகங்களைத் தொலைப்போனாகவும் இருக்கின்றாய் என்பதாம். (9)

மந்திரம் 10.

१ २र३ १ २र ३ १ २र ३ १ २

312. *प्रयोरिरिक्ष ओजसा ‡ दिवः सदोभ्यस्परि ।

१ २ ३ १ २ ३ १ २ ३ २ ३ १ २

न त्वा विव्याच रज इन्द्र पार्थिव †मति विश्वं ववक्षिथ ॥ १० ॥

ப்ரயோரிரிக்ஷ ஓஜஸா திவ꞉ ஸதோப்யஸ்பரி ।

ந த்வா விவ்யாச ரஜ இந்த்ர பார்திவமதி விஶ்வம் வவக்ஷித ॥

---

* प्रहिरिरिक्ष, ‡ पिब अन्तेभ्यस्परि, † अनुस्वधां दिवक्षित, என்பன இருக்கு.

அந்வயம்.

हे इन्द्र !, दिवः, सदोभ्यः, ओजसा, प्ररिरिक्षे, पार्थिवं, रजः, त्वा, नविव्याच, विश्वम्, अति, ववक्षिथ ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
य :	ய :	யாதொரு நீ
दिवः	திவ:	வானுலகின்
परि सदोभ्यः	பரி ஸதோப்ய:	பதவி (யிடங்) களினின்று
ओजसा	ஓஜஸா	வலியால்
प्ररिरिक्षे	ப்ரரிரிக்ஷே	மிகச் சிறந்தவனாகின்றாய். மற்றும்,
पार्थिवं	பார்த்திவம்	தரையிலுண்டாகிய
रजः	ரஜ:	உலகம்
त्वा	த்வா	உன்னை
नविव्याच	ந விவ்யாச	தன்னுள் அடக்கிக்கொள்ளாது. (அத்தன்மைய நீ)
विश्वं	விஶ்வம்	உலகத்தைத்
अति	அதி	கடக்கச் செய்வித்து
ववक्षिथ	வவக்ஷித	(என்னைத்) தாங்கிக்கொள்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—10. நோதா ரிஷி.

இந்திர! நீ, வானுலகிலுள்ள இடங்களினின்று வலியினால் மிக மேம்பட்டவனாயிருக்கின்றாய். அன்றியும், இந்திர ! தரையிற் றோன்றிய உலகம் உன்னை மகத்தாகிய தனது வடிவால் அடக்கிக்கொள்ளமாட்டாது. இயற்கையில் அதினின்றும் ஆற்றலுடையோனாயிருக்கின்றாய் என்பது பொருள். இவ் வண்ணனாயுள்ள நீ எம்மை, உலகங்களைத் தாண்டச் செய்வித்துத் தாங்கிக்கொள்ள விரும்புவாயாக. (எம்மை எல்லாவற்றினும் மேம்பாடாகச் செய்வாயென்பது கருத்து.) (10)

குறிப்பு.—இந்திர! நீ தூளி படலம் போல் உலகனைத்தினும் வியாபித்திருக்கின்றாய். நின்பால் உலகெலாம் வியாப்பியமாம் எனப் பொருள் கொள்வாருமுளர்.

எட்டாவது கண்டம்

முற்றும்.

ஒன்பதாவது கண்டம்

பிரபாடகம்—4. அத்தியாயம்—3. கண்டம்—9.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २ ३ १ २२ ३ २ ३क २२ ३ १ २ ३ १२
313. असावि देवं गो ऋजीकमन्धो न्यस्मिन्निन्द्रो जनुषे मुवोच ।
१ २ ३ १ २ २ ३ २ ३ १ २ ३ १२
बोधामसि त्वा हर्य्यश्व यज्ञैर्बोधानस्तोममन्धसो मदेषु ॥

இருக்கு 7-21-1.

அஸாவி தேவம் கோருஜீகமந்தோ ந்யஸ்மிந்நிந்த்ரோ ஜநுஷே முவோச।
போதாமஸி த்வா ஹர்ய்யஶ்வ யஜ்ஞைர்போதாந ஸ்தோமமந்தஸோ
[மதேஷு ॥

அந்வயம்.

देवं, गो ऋजीकं, अन्धः, असावि, ईं, इन्द्रः, अस्मिन्, जनुषा, न्यवोच, हर्यश्व !, त्वा, यज्ञैः, बोधामसि, अन्धसः, मदेषु, नः, स्तोमं, बोधः ॥

பதவுரை.

देवं	தேவம்	பிரகாசமானதும்
गो ऋजीकं	கோ ருஜீகம்	ஆவின் பால், நெய் முதலியவைக ளாற் சுத்தஞ் செய்யப்பட்டது மாகிய
अन्धः	அந்த:	சோமமென்னும் அன்னம்
असावि	அஸாவி	தேடி வைக்கப்பட்டிருக்கின்றது.
ईं इन्द्रः	ஈம் இந்த்ர:	இந் விந்திரன்
अस्मिन्	அஸ்மிந்	தேடிய இச் சோமமாகிய அன் னத்தில்
जनुषा	ஜநுஷா	இயற்கையாகவே
न्युवोच	ந்யுவோச	மிக வொருமுகப்பட்டவனாகின் றான்.
हर्यश्व !	ஹர்யஶ்வ !	பொற் குதிரையை யுடைய இந் திர!

त्वा	த்வா	உன்னை
यज्ञैः	யஜ்ஞை:	தோத்திரங்களாலும் அவிகளாலும்
बोधामसि	போதாமஸி	ஞாபகமடையச் செய்கின்றேன்.
अन्धसः	அந்தஸ:	சோமத்தின்
मदेषु	மதேஷு	களிப்புண்டாமிடங்களில்
नः	ந:	எங்களுடைய
स्तोमं	ஸ்தோமம்	தோத்திரத் தொகுதியை
बोध	போத	(நீ) அறிவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—1. வசிட்ட ரிஷி.

பிரகாசமுள்ளதும், ஆவின் பால், நெய் முதலியவைகளோடு கலந்துள்ளதும் (கவ்யத்தாற் பவித்திரம் பண்ணப்பட்ட தென்பதுமது) ஆகிய சோமமென்னும் அன்னந் தேடப்பட்டிருக்கின்றது. இவ் விந்திரன் பிழிந்தெடுத்துள்ள சோமமாகிய இவ் வன்னத்தில் இயற்கையாகவே தற்பரனுகின்றான். இனிமேல் பிரத்தியட்சமாகிய தோத்திரம். இந்திர! உனக்கு, தோத்திரங்களால், அல்லது, அவிகளால் அறிவுறுத்துகின்றேன். சோமத்தினுடைய களிப்புண்டாமிடங்களில் எங்களுடைய தோத்திரத்தை யறிந்துகொள்வாயாக என்பதாம். (1)

மந்திரம் 2.

१ २ ३ १२ ३ १ २२ ३ १ २

314. योनिष्ट इन्द्र सदने अकारि तमानृभिः पुरुहूत प्रयाहि ।

२ ३ १ २ ३ २ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २

असो यथा नोऽविता वृधश्चिद्दो वसूनि ममदश्च सोमैः ॥ २ ॥

இருக்கு 7-24-1.

யோநிஷ்ட இந்த்ர ஸதநே அகாரி தமாந்ருபி: புருஹூத
[ப்ரயாஹி ।
அஸோ யதா நோऽவிதா வ்ருதஸ்சித்ததோ வஸூநி மமதஸ்ச ஸோ
[மை: ॥

அந்வயம்.

हे इन्द्र!, ते, सदने, योनिः, अकारि, पुरुहूत!, नृभिः, तम्, आप्रयाहि, नः, यथा, अविता, वृधश्चित्, असः, वसूनि, ददः, च, सोमैः, ममद ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹெ இந்த்ர !	இந்திரனே!
ते	தெ	உன்னுடைய
सदने	ஸதநெ	இருப்பின் பொருட்டு
योनिः	யொநிः	ஓர் இடஞ்
अकारि	அகாரி	செய்யப்பட்டிருக்கின்றது.
पुरुहूत !	புருஹூத !	பலராலழைக்கப்படும் இந்திர !
नृभिः	ந்ருபிः	நியமிக்கும் மருத்துக்களோடு
तं	தம்	அவ்விடத்தைக் குறித்து
आ प्रयाहि	ஆ ப்ரயாஹி	வருவாயாக.
नः	நः	எங்களைக்
अविता	அவிதா	காப்பாற்றுவோனும்
वृधश्रित्	வ்ருதஶ்ரித்	விருத்தி பண்ணுவோனுமாக
यथा	யதா	எவ்வாறு
असः	அஸः	இருக்கின்றாயோ, (அவ்வாறே) எமக்குத்
वसूनि	வஸூநி	தனங்களைக்
ददः	ததः	கொடுப்பாயாக.
सोमैः च	ஸொமைः ச	மற்றும், சோமரசத்தாற்
ममदः	மமதः	களிப்படைவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—2. வசிட்ட ரிஷி.

இந்திர ! வசித்தற்கு உனக்கு ஓரிடஞ் செய்யப்பட்டிருக்கின்றது. பல்லோராற் கூப்பிடப்பட்ட இந்திர! நியதாக்களான மருத்துக்களோடு அவ்விடத்திற்கு வருவாயாக. எவ்வாற்றால் எங்களைக் காப்பாற்றுவோனாகவும் விருத்தி செய்வோனாகவும் இருக்கின்றனையோ, அவ்வாற்றானே எங்கட்குத் தனத்தையுங் கொடுப்பாயாக. எங்களுடைய சோமரசத்தாலுங் களிப்படைவாயாக என்பதாம். (2)

குறிப்பு —वृधेच என்பர் இருக்கோதுவார்.

மந்திரம் 3.

१२ ३२ ३१ ३ २उ ३१२३१ २३ १ २
315. अदर्दरुत्सम सृजो वि खानित्वमर्णवान् बद्बधानाँ * अरम्णः ।
३१२ ३ १२३२उ ३२उ ३ २३१२३२
महान्तमिन्द्र पर्वतं वि यद्वः सृजद्धारा †अव यद्दानवान् हन्॥३॥

இருக்கு 5-32.1.

அதர்தருத்ஸம ஸ்ருஜோ வி வாநித்வமர்ணவாநு பத்பாநாநு அரம்ண:|
மஹாந்தமிந்த்ர பர்வதம் வி யத்வ: ஸ்ருஜத்தாரா அவ யத்தாநவாநு ஹநு ॥

அந்வயம்

हे इन्द्र !, त्वं, उत्सं, अदर्दः, खानि, व्यसृजः, बद्बधानान्, अर्णवान्, अरम्णः, यत्, महान्तं, पर्वतं, व्यसृजत्, धाराः, यत्, दानवान्, अवहन् ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! நீ
उत्सं	உத்ஸம்	நீர் நிறைந்துள்ள மேகத்தைப்
अदर्दः	அதர்த:	பிளந்தனே. பின்னர்
खानि	வாநி	மேகத்தின் நீர் வரும் வழிகளை (யும்)
व्यसृजः	வ்யஸ்ருஜ:	இனிது உண்டுபண்ணினாய்.
बद्बधानान्	பத்பாநாநு	பீடை தருகின்ற
अर्णवान्	அர்ணவாநு	மேகங்களை
अरम्णः	அரம்ண:	இரையுமாறு செய்தாய்.
यद्	யத்	எப்போது
यत्	யத்	யாதொரு நீ
महान्तं	மஹாந்தம்	பெரிதாகிய
पर्वतं	பர்வதம்	மேகத்தை
व्यसृजत्	வ்யஸ்ருஜத்	விரியச்செய்தாயோ, (மற்றும்)
धाराः	தாரா:	நீர்த்தாரைகளை விழச்செய்தனேயோ,
दानवान्	தாநவாநு	தானவர்களை
अवहन्	அவஹநு	நன்கொழித்தனேயோ, (அப்போதென்க.)

* अरम्णा, सृजो विधार, † अबदानव इन्, என்பன இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—9. காதுர் ரிஷி.

இந்திரனே! நீ, நீர்கொண்ட மேகத்தை பிளந்தோனு யிருக்கின்றாய். பின்னர், மேகத்தினுடைய நீர்வரும் வழிகளைச் சிறப்புடையனவாகச் செய்தவனு யிருக்கின்றாய். இன்னும், பீடிக்கின்ற நீர் நிறைந்த மேகங்களைப் பிழிந்தாய். (விடுதலை பண்ணினாய்.) இந்திர! நீ, பெரிய மேகத்தை விரியச் செய்தாய். நீர்த்தாரைகளை விழச் செய்தவனு யிருக்கின்றாய். எப்போதெனின்? தானவர்களை, (தநுவின் புத்திரர்களை) அல்லது, நீரைக் கொடுக்கும் மேகங்களை நாசமாக்கினையோ, அப்போதென்க. இங்ஙனமே நிருத்தமும் இதற்குப் பொருளுரைக்கின்றது. (3)

குறிப்பு.—ஆசீர்வாதங் கொடுக்கின்ற இந்திரன் அழியாதவன் என, விசேடமாக்கியும் பொருள் கொள்வர் சிலர்.

மந்திரம் 4.

३ १२ ३१२ ३१२ ३१२
316. सुष्वाणास इन्द्र स्तुमसि त्वा सनिष्यन्तश्चित्तुविनृम्ण वाजम् ।
१२ ३१२र ३२उ ३१२ ३१२
आ नो भर सुवितं यस्य *कोना तनात्मना सह्याम त्वोताः ॥४॥

இருக்கு 10-148-1.

ஸுஷ்வாணாஸ இந்த்ர ஸ்துமஸி த்வா ஸநிஷ்யந்தஶ்சித்துவிந்ருண [வாஜம் |

ஆ நோ பர ஸுவிதம் யஸ்ய கோநா தநாத்மநா ஸஹ்யாம [த்வோதா꞉ ||

அந்வயம்.

हे इन्द्र!, सुष्वाणास, त्वा स्तुमसि, तुविनृम्ण, वाजं, सनिष्यन्तः, नः, सुवितं, आभर, यस्य, कोना, त्वोताः, तना, त्मना, सह्याम ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே!
सुष्वाणासः	ஸுஷ்வாணாஸ꞉	சோமரசம் பிழிந்தெடுப்போர்களான யாங்கள்
त्वा स्तुमसि	த்வா ஸ்துமஸி	உன்னைத் துதிக்கின்றோம்.

* चाकन्त्मना तना सनुयाम, என்பது இருக்கு.

तुविनृम्ण !	துவிந்ருண !	மிகுந்த தனமுடைய இந்திர !
वाजं	வாஜம்	அவியாகிய அன்னத்தை
सनिष्यन्तः	ஸநிஷ்யந்த:	பிரித்துக் கொடுக்கின்ற யாங்களுந் துதிக்கின்றோம் (ஆதலின்)
नः	ந:	எங்கட்கு
सुवितं	ஸுவிதம்	இனிய தனத்தைக்
आभर	ஆபர	கொடுப்பாயாக.
यस्य	யஸ்ய	எதைப்பற்றி
कोना	கோநா	வேட்கின்றார்களோ, அத் தனத்தைத் தருவாயாக.
त्वोताः	த்வோதா:	நின்னாற் காப்பாற்றப்பட்ட நாங்கள்
तना	தநா	மிகுந்த தனங்களைத்
त्मना	த்மநா	தாமாகவே
सह्याम	ஸஹ்யாம	நினது அநுக்கிரகத்தா லடைகின்றோம்.

சாயண பாடியம்

கண்டம்—9. இருக்கு—4. பிருதுர்வைந ரிஷி.

இந்திர ! சோமரசம் பிழிந்தெடுக்கின்ற யாங்கள் உன்னைப் போற்றுகின்றோம். மிகுந்த தனமுடையோய் ! அல்லது, மிகுந்த வலியுடையோய் ! இந்திர ! சரு, புரோடாச முதலிய அன்னத்தைப் பிரித்துக் கொடுக்கின்ற யாங்கள் உன்னைத் துதிக்கின்றோம். இங்ஙனமா மாதலின், எங்கட்கு அடையத்தக்க இனிய தனத்தைக் கொடுப்பாயாக. அல்லது, எந்தத் தனத்தை விரும்புகின்றவனா யிருக்கின்றனையோ, அந்தத் தனத்தைக் கொடுப்பாயாக. யாங்கள் நின்னாற் காப்பாற்றப்பட்டோர்களாய் மிகுந்த தனங்களைத் தாமாகவே (பிறரை வேண்டாமலே) உனது கிருபையால் அடைந்துகொள்கின்றோம் என்பதாம். (4)

குறிப்பு.—தனம், வெற்றி, அடிமை முதலியவைகளைக் கொடுப்பாயாக என்பாருமுளர்.

மந்திரம் 5.

३ २ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १२
317. *जगृह्मा ते दक्षिणमिन्द्र हस्तं वसूयवो वसुपते वसूनाम् ।
३२उ ३ १२ ३ १ २ ३ १ २ ३१ २र ३ १ २
विद्मा हि त्वा गोपतिं शूर गोनामस्मभ्यं चित्रं वृषणं रयिं दाः ॥

இருக்கு 10-47-1.

𑌜𑌗𑍃𑌹𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌸𑍂𑌯𑌵𑍋 𑌵𑌸𑍁𑌪𑌤𑍇 [𑌵𑌸𑍂𑌨𑌾𑌮𑍍 ।

𑌵𑌿𑌦𑍍𑌮𑌾 𑌹𑌿 𑌤𑍍𑌵𑌾 𑌗𑍋𑌪𑌤𑌿𑌂 𑌶𑍂𑌰 𑌗𑍋𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌭𑍍𑌯𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌵𑍃𑌷 [𑌣𑌂 𑌰𑌯𑌿𑌂 𑌦𑌾𑌃 ॥

அந்வயம்.

वसूनां, वसुपते, इन्द्र, वसूयवः, ते, दक्षिणं हस्तं, जगृह्म, शूर, गोनां, त्वा, गोपतिं, विद्मः, अस्मभ्यं, चित्रं, वृषणं, रयिं, दाः ॥

பதவுரை.

वसूनां	𑌵𑌸𑍂𑌨𑌾𑌂	தனமுடையார்கட்குள்
वसुपते इन्द्र !	𑌵𑌸𑍁𑌪𑌤𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	தனங்கட் கிறைவனாகிய இந்திர !
वसूयवः	𑌵𑌸𑍂𑌯𑌵𑌃	தனத்தை இச்சிக்கின்ற நாங்கள்
ते	𑌤𑍇	நினது
दक्षिणं हस्तं	𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌹𑌸𑍍𑌤𑌂	வலக் கையைப்
जगृह्म	𑌜𑌗𑍃𑌹𑍍𑌮	பிடித்துக்கொள்கின்றோம்.
शूर !	𑌶𑍂𑌰 !	பராக்கிரமமுடையோய் !
गोनां	𑌗𑍋𑌨𑌾𑌂	கோக்களுடையார்களுள்
त्वा	𑌤𑍍𑌵𑌾	நின்னை
गोपतिं	𑌗𑍋𑌪𑌤𑌿𑌂	கோக்கட்கு இறைவனென்று
विद्मः	𑌵𑌿𑌦𑍍𑌮𑌃	(யாம்) அறிகின்றோம். ஆதலின்
अस्मभ्यं	𑌅𑌸𑍍𑌮𑌭𑍍𑌯𑌂	எங்கட்குப்
चित्रं	𑌚𑌿𑌤𑍍𑌰𑌂	பலவகையான
वृषणं	𑌵𑍃𑌷𑌣𑌂	மனவேட்கையை நிறையச் செய்கின்ற
रयिं	𑌰𑌯𑌿𑌂	தனத்தைக்
दाः	𑌦𑌾𑌃	கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—5. சப்தகுர் ரிஷி.

தனங்கட்கெல்லாந் தலைவனாகிய இந்திர! திரவியத்தை யிச்சிக்கின்ற நாங்கள் உனது வலக்கையைப் பிடித்துக்கொள்கின்றோம். எங்கட்குத் தனங் கொடுக்காமற் போகக்கூடாது என மிகுந்த தனமுடையவர் தங் கையைப் பிடித்துக்கொள்வது போன்று. (பிடித்துக் கொள்கின்றோமென மேலே கூட்டுக.) பராக்கிரமமுடைய இந்திர! உன்னை, கோக்கட்கு இறைவனென்று உணர்கின்றோம். ஈண்டு இருத்தலானும், இல்லாமையானும் இறைவனாந் தன்மையும், அநேகமாந் தன்மையுங் கூறப்படுகின்றது. இதனால் எங்கட்குப் பல்வகைப்பட்ட மனோ விருப்பத்தை நிறையச் செய்யுந் தனத்தைக் கொடுப்பாயாக என்பதாம். (5)

மந்திரம் 6.

२ ३ १ २ ३ १ २ ३ १ २र ३ १ २ ३ २ ३ २
318. इन्द्रं नरो नेमधिता हवन्ते यत्पार्य्या युनजते धियस्ताः ।
२ ३ १२ ३ १ २ ३ २ ३ १ २र ३ १ २ ३ १ २
शूरो नृषाता * श्रवसश्चकाम आ गोमति व्रजे भजा त्वं नः ॥६॥

இருக்கு 7-27-1.

இந்த்ரம் நரோ நேமதிதா ஹவந்தே யத்பார்யா யுநஜதே தியஸ்தா:
ஶூரோ ந்ருஷாதா ஶ்ரவஸஶ்சகாம ஆ கோமதி வ்ரஜே பஜா த்வம்
[நஃ ॥

அந்வயம்.

यत्, पार्याः, ताः, धियः, युनजते, नरः, नेमधिता, इन्द्रं, हवन्ते, शूरः, नृषाता त्वं, श्रवसः, चकामे, गोमति, व्रजे, नः, भज ॥

பதவுரை.

यत्	யத்	எப்போது
पार्याः	பார்யா:	போரிற் பாதுகாப்பிற்குக் காரணமானவைகளும்
ताः	தா:.	கீர்த்தியுள்ளவைகளுமான
धियः	தியஃ	எவற்றெழில்கள்
युनजते	யுநஜதே	பிரயோகம் பண்ணப்படுகின்றனவோ, அக்கால்
नरः	நரஃ	வேள்வி, அல்லது போராற்றுகின்ற மனிதர்கள்
नेमधिता	நேமதிதா	வேள்வியில் அல்லது போரில்
इन्द्रं	இந்த்ரம்	எவ் விந்திரனை
हवन्ते	ஹவந்தே	அழைக்கின்றார்களோ,
शूरः	ஶூரஃ	வீரனும்
नृषाता त्वं	ந்ருஷாதா த்வம்	மனிதர்களைப் பாகுபாடு செய்வோனுமாகிய அத்தகைய நீ
श्रवसः	ஶ்ரவஸஃ	அன்னம் அல்லது வலியை
चकामे	சகாமே	விரும்புமிடத்து

* शवसश्चकान, என்பது இருக்கு.

गोमति	கோமதி	கோக்களுள்ள
व्रजे	வ்ரஜே	கோசாலையில்
नः	நஃ	எங்களைப்
भज	பஜ	பாகமுடையோர்களாகச் செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—6. வசிட்ட ரிஷி.

எக்காலத்தில் போரில் இறப்பைக் காரணமாக வுடைய (மரண பயத்தால்) கருமத் தொழில்கள் பிரயோகம் பண்ணப்படுகின்றனவோ, அப்போது வேள்வியின் கருத்தர்கள், அல்லது, போர்த் தலைவர்கள், வேள்வியில், அல்லது போரில், எவ் விந்திரனை யழைக்கின்றார்களோ, இந்திர! அத்தகைய நீ, வீரனாகவும், மனிதர்களைப் பாகுபாடு செய்வோனாகவும் இருக்கின்றாய். (ஆதலின்) அன்னத்தையேனும், வலியையேனும் இச்சிக்குமிடத்தில் கோக்கள் வாழும் கோட்டத்தில் எங்களைப் பாகமுடையர்களாய்ச் செய்வாயாக. (6)

மந்திரம் 7.

१२ ३ १२र ३१२ ३१२३ १२३
319. **वयः सुपर्णा उपसेदुरिन्द्रं प्रियमेधा ऋषयो नाधमानाः ।**
१२ ११२३२ ३१ २र ३२ २ ३१२ ३२
अप ध्वान्तमूर्णुहि पूर्धिचक्षुर्मुमुग्ध्या३स्मान्निधयेव बद्धान् ॥ ७ ॥

இருக்கு 30-73-13.

வய꞉ ஸுபர்ணா உபஸேதுரிந்த்ரம் ப்ரியமேதா ருஷயோ நாத[மாநா꞉ ।
அப த்⁴வாந்தமூர்ணுஹி பூர்தி⁴சக்ஷுர்முமுக்³த்⁴யா꞉ஸ்மாந்நித⁴[யேவ ப³த்³தா⁴ந் ॥

அந்வயம்.

वयः, सुपर्णाः, प्रियमेधाः, ऋषयः, नाधमानाः, इन्द्रं, उपसेदुः, इन्द्र !, ध्वान्तं, अपोर्णुहि, चक्षुः, पूर्द्धि, निधया इव बद्धान्, अस्मान्, मुमुग्धि ॥

பதவுரை.

वयः	வய꞉	செல்கின்றவைகளும்
सुपर्णाः	ஸுபர்ணா꞉	மிகுந்த நலத்தைக் கொடுப்பவைகளும்
प्रियमेधाः	ப்ரியமேதா꞉	வேள்வியை விரும்புகின்றவைகளும்

ऋषयः	ரிஷய:	நீண்ட பார்வையுடையவைகளும்
नाधमानाः	நாதமாநா:	மெய்புணர்வை யேற்படவைகளுமான கிரணங்கள்,
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை
उपसेदुः	உபஸேது:	அடைந்தன. அடைந்து
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே ! நீ
ध्वान्तं	த்வாந்தம்	இருளைப்
अपोर्णुहि	அபோர்ணுஹி	போக்குவாயாக.
चक्षुः	சக்ஷு:	ஒளியைப்
पूर्द्धि	பூர்த்தி	பரப்புவாயாக.
निधया इव बद्धान्	நிதயா இவ பத்தாந்	பாசக்கூட்டங்களாற் கட்டுப்பட்டவர்களை (விடுவிப்பதுபோல)
अस्मान्	அஸ்மாந்	எங்களை
िध	முமுக்தி	விடுவிப்பாயாக. (என வேண்டுகின்றன என்க)

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—7. கௌரிவீதி ரிஷி.

செல்லுகின்றவைகளும், சுகங் கொடுப்பதை வளர்ப்பவைகளுமான இரவியின் கிரணங்கள், இந்திரனை யடைந்தன. எவ்விதமானவைகளெனின் ? வேள்வியிற் பிரியப்படுபவைகள், நீண்ட நோக்குடையவைகள், வேள்வியை வேண்டுபவைகளாம். வேண்டுகின்ற வகைகளே கூறப்படுகின்றன :—இந்திரனே ! இருளை யொதுக்குவாயாக. ஈண்டு "எவ் விருள் மறைக்கப்பட்டுள்ளதோ அது மனதாலடையத்தக்கது. இதினின்றுங் கெட்டு உலோபமாகின்றது" என்னும் ஐதரேயப் பிராமணம் (பிராமணம் என்னும் வேத பாகத்தின் வாக்கு) சிந்திக்கற் பாலது. மற்றும், ஒளியையும் நிறையச் செய்வாயாக. அதாவது பாசக்கூட்டங்களாற் கட்டுப்பட்டவர்களான எங்களைப் பாசங்களினின்று நீங்குமாறு விடுவிப்பாயாக என்பதாம். ஈண்டு 'வயோவோ' என்றற் றொடக்கத்து 4-3-ல் உள்ள நிருத்தச் சூத்திரத்தில் இதன் பொருள் காணத் தக்கது. (7)

குறிப்பு.—இந்திரியங்கட்கு ஆன்மாவை முன்னிட்டும், மாணாக்கர்கட்கு பிரமஞானியாகிய ஆசிரியரை முன்னிட்டும், இருடிகட்கும் ஞானிகட்கும், பரமான்மாவைக் குறித்தும் நடந்த பேச்சென்பர் சிலர்.

மந்திரம் 8.

१२ ३ २उ १ २र ३ १ २र ३ १ २
320. नाके सुपर्णमुपयत्पतन्तꣳ हृदावेनन्तो अभ्यचक्षत त्वा ।
१२ ३ १२ ३ २ ३२ ३ १ २ ३ १ २३२
हिरण्यपक्षं वरुणस्य दूतं यमस्य योनौ शकुनं भुरण्युम् ॥ ८ ॥

இருக்கு 3-45-1.

𑌨𑌾𑌕𑍇 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌮𑍁𑌪𑌯𑌤𑍍𑌪𑌤𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌾𑌵𑍇𑌨𑌨𑍍𑌤𑍋 𑌅𑌭𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑌤 𑌤𑍍𑌵𑌾 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌕𑍍𑌷𑌂 𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯 𑌦𑍂𑌤𑌂 𑌯𑌮𑌸𑍍𑌯 𑌯𑍋𑌨𑍌 𑌶𑌕𑍁𑌨𑌂 𑌭𑍁𑌰𑌣𑍍𑌯𑍁𑌮𑍍 ॥

அந்வயம்.

सुपर्णं, पतन्तं, हिरण्यपक्षं, वरुणस्य, दूतं, यमस्य, योनौ, शकुनं, भुरण्युं, त्वा, हृदा, वेनन्तः, नाके, अभ्यचक्षत, उपयत् ॥

பதவுரை.

सुपर्णं	𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌂	இனிய வீழ்ச்சி யுடையவனும் (கீழ் வருபவனும்)
पतन्तं	𑌪𑌤𑌨𑍍𑌤𑌂	வானிற் செல்பவனும்
हिरण्यपक्षं	𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌕𑍍𑌷𑌂	பொற் சிறகுள்ளவனும்
वरुणस्य	𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯	நீரை யபிமானிக்குந் தேவதைக்குத் (வருணனுக்கு)
दूतं	𑌦𑍂𑌤𑌂	தூதனும்
यमस्य	𑌯𑌮𑌸𑍍𑌯	மின்னலாகிய தீயினுக்கு
योनौ	𑌯𑍋𑌨𑍌	இடமாகிய அந்தரிக்ஷத்தில்
शकुनं	𑌶𑌕𑍁𑌨𑌂	பறவையா யிருப்பவனும்.
भुरण्युं	𑌭𑍁𑌰𑌣𑍍𑌯𑍁𑌂	மழை முதலியவைகளால் உலகைக் காப்பாற்றுபவனுமாகிய
त्वा	𑌤𑍍𑌵𑌾	(கந்தருவனென்னும்) உன்னை
हृदा	𑌹𑍃𑌦𑌾	உள்ளத்தால்
वेनन्तः	𑌵𑍇𑌨𑌨𑍍𑌤𑌃	வேண்டப்பெற்ற துதிப்போர்கள்
नाके	𑌨𑌾𑌕𑍇	விண்ணில்
अभ्यचक्षत	𑌅𑌭𑍍𑌯𑌚𑌕𑍍𑌷𑌤	பார்க்கின்றார்கள். அக்கால்
उपयत्	𑌉𑌪𑌯𑌤𑍍	வந்துகொண்டிருக்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—8. வேனோபார்க்க ரிஷி. தேவதை வேந:

வேநனே! உன்னை, உள்ளத்தில் விருப்பம் மிகுந்த துதிப்போர்கள் வானில் இனிது பார்க்கின்றார்கள். எப்போது பார்க்கின்றார்களோ, அப்போது வந்துக்கொண்டிருக்கின்றாய் என்பது எஞ்சி நின்றது. எவ்வண்ணத்தனாகிய நின்னை யெனின்? வானிற் செல்கின்றவனும், பொன்மயமான சிறகுகளை யுடையவனும், நீரபிமானி தேவதையாகிய வருணனுக்குத் தூதனும், நியமிக்கப்படும் மின்னலாகிய அக்கினியின் இருப்பிடத்தில் (அந்தரிக்ஷத்தில்) பறவை வடிவாக இருப்பவனும், மழை முதலியவைகளால் உலகனைத்தையும் பரிபாலிப்பவனுமாகிய உன்னை. காண்கின்றார்கள் என முடித்துக் கொள்க. (8)

குறிப்பு.—ஈண்டு வேனன் என்பவன் வானிலிருந்து வரும் ஒரு கந்தருவன்.

மந்திரம் 9.

१२ ३१ २३२ ३२ ३ १ २ ३२ ३ १ २ ३१ २

321. ब्रह्म जज्ञानं प्रथमं पुरस्ताद्विसीमतः सुरुचो वेन आवः ।

२ ३क २२ ३ १ २ ३ २ ३२ ३ २ ३ १२ ३ १ २

स बुध्न्या उपमा अस्य विष्ठाः सतश्च योनिमसतश्च विवः ॥ ९ ॥

இருக்கு 5-6-1.

ப்ரஹ்ம ஜஜ்ஞாநம் ப்ரதமம் புரஸ்தாத்விஸீமத: ஸுருசோ வேந [ஆவ: |

ஸ புத்⁴ந்யா உபமா அஸ்ய விஷ்டா: ஸதஶ்ச யோநிமஸதஶ்ச விவ: ||

அந்வயம்.

वेनः, पुरस्तात्, जज्ञानं, ब्रह्म, प्रथमं, विसीं, अतः, सुरुचः, आवः, सः, बुध्न्याः, अस्य उपमाः, विष्ठाः, सतः, च, असतः, योनिं, विवः ॥

பதவுரை.

वेनः	வேந:	வேனன், என்னும் யாதொரு கந்தருவன்
पुरस्तात्	புரஸ்தாத்	முற்காலத்தில்
जज्ञानं	ஜஜ்ஞாநம்	தோன்றிய, அல்லது, ஞானமுடைய
ब्रह्म	ப்ரஹ்ம	உத்தம குலத்தை

विसीं	விஸீம்	விசீம், விசீம், என்னும் நலக்குறியாகிய ஒலியிட்டுக்கொண்டு
अत:	அத:	காணப்படும் இவ்வனைத்தினின்றும்
सुरुच:	ஸுருச:	நற் காந்திபுடையவனைக்
आव:	ஆவ:	காப்பாற்றினேனே,
स:	ஸ:	அக் கந்தருவன்
बुध्न्या:	புத்⁴ந்யா:	அந்தரிக்ஷத்தின்
अस्य उपमा:	அஸ்ய உபமா:	இதற்கொப்பான இரவி முதலியவற்றின் காந்திகளை
विष्ठा:	விஷ்டா:	சிறப்பாய் நிலை நிறுத்தினன். (அவ்வாறே)
सत:	ஸத:	இப்போதிருப்பதும்
च	ச	மற்றும்
असत:	அஸத:	இப்போ திலாததும், மேலுண்டாவதுமாகிய
योनिं	யோநிம்	இருப்பிடத்தையும்
विव:	விவ:	உண்டாக்கினன்,

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—9. பிருகற்பதி, அல்லது, நகுல ரிஷி.

'வேனன்' என்னும் மேற் செல்லுகின்ற ஒரு கந்தருவன். "வேனன் அதைக் கண்டு" என்று தொடங்கி "கந்தருவன் என்போன்" என ஏனைய மறைச்சாகையும் முடிவிற் கூறுகின்றது காண்க. அவ் வேனன், முற்காலத்தில் உண்டாகிய, அல்லது, மெய்யறிவுடைய, உத்தம குலமாகிய முன்னுடம்பை, இவைகளினின்று மேலாகப் பார்க்கப்பட்ட ஒளியாற் காப்பாற்றினன். விசீம், என்று சொல்லப்பட்டது அவன் வாயினின் றெழுமோர் ஒலிக்குறிப்பு, அதாவது அநுக்கிரகக் குறியாம். அத் தன்மைய ஒலியை வாயினின்றும் வெளிப்படுத்திக்கொண்டு உத்தமகுல வுடம்பை பேரொளி யுடையதாகச் செய்துவிட்டான் என்பது (திரண்ட) பொருள். அவ் வேனன் இச் சரீரத்திற்கு ஒப்பான வானிற்றோன்றுகின்ற இரவியின் ஒளி முதலியவைகளை விசேடமாகத் தாபித்தனன். அங்ஙனமே இப்போது இருக்கப்பட்டதும், மேல் வருங்காலத்தில் இராததுமாகிய, உற்பத்தியின் காரணத்தை அல்லது வசிக்குமிடத்தை வெளிப்படுத்தினன் என்பதாம். (9)

குறிப்பு.—வேனன் என்பதை அறிவுமயமாகிய பரமான்மா என்பார் ஒரு சாரார். மூலத்தில் 'பிரமம்' என்பது உத்தம குலத்தின் உடம்பெனப்பட்டது பாடியத்தில்.

மந்திரம் 10.

१२ ३१२ ३२ ३१२ ३१२ ३१३
322. अपूर्व्या पुरुतमान्यस्मै महे वीराय तवसे तुराय ।
३ १२३२३१२ ३ १२ ३ १२
विरप्शिने वज्रिणे शन्तमानि वचांस्यस्मै स्थविराय तक्षुः ॥१०॥

இருக்கு 6-32-1.

அபூர்வ்யா புரூதமான்யஸ்மை மஹே வீராய தவஸே
[துராய ।
விரப்ஸிநே வஜ்ரிணே ஶந்தமாநி வசாம்ஸ்யஸ்மை ஸ்தவிராய
[தக்ஷு: ॥

அங்வயம்.

महे, वीराय, तवसे, तुराय, विरप्शिने, वज्रिणे, स्थविराय, अस्मै, अपूर्व्या, पुरुतमानि, शन्तमानि, वचांसि, तक्षुः ॥

பதவுரை,

महे	மஹே	மகானும்
वीराय	வீராய	வீரனும்
तवसे	தவஸே	வலியுடையோனும்
तुराय	துராய	வேகமுடையோனும்
विरप्शिने	விரப்ஸிநே	சிறப்பாகிய தோத்திரத்திற்கு விடயமாவோனும்
वज्रिणे	வஜ்ரிணே	வச்சிராயுத முடையானும்
स्थविराय	ஸ்தவிராய	பழையோனுமாகிய
अस्मै	அஸ்மை	இவ் விந்திரன் பொருட்டு,
अपूर्व्या	அபூர்வ்யா	புதியவைகளும்
पुरुतमानि	புரூதமாநி	பலவகைகளும்
शन्तमानि	ஶந்தமாநி	நலந் தருபவைகளுமான
वचांसि	வசாம்ஸி	தோத்திர வடிவ வாக்குகளைத்
तक्षुः	தக்ஷு:	துதிப்போர்கள் சொல்கின்றார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—10. சுகோத்திர ரிஷி. இந்திரன்-தேவதை.

பண்டைக் காலத்தோர்களாற் றுதிக்கப்படாதனவும், மிகுதிப்பட்டனவும், இன்பந் தருவனவுமான தோத்திரவடிவ வாக்குகளை இவ்விந்திரன் பொருட்டுத் துதியாளர்கள் பாடுகின்றார்கள். ஈண்டுத் துதியாளர்கள் என்பது

எஞ்சி நின்றது. எவ்வண்ணத்தனாகிய இந்திரனுக்கெனின்? பெரியோனும், பலவகையான பகைஞர்களைக் கொல்வோனும், ஆற்றலுடையோனும், வேகமுடையோனும், சிறந்த துதிகட்கு விடயனும், பழையோனும், வச்சிராயுதமுடையோனுமாகிய இந்திரனுக்கு. பாடுகின்றார்களென மேற்கூட்டுக. (10)

ஒன்பதாவது கண்டம்

முற்றும்.

பத்தாவது கண்டம்

பிரபாடகம்—4. அத்தியாயம்—3. கண்டம்—10.

ஒன்பது மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २ ३ १ २ ३ १ २ ३२ ३ २ ३१ २ ३१ २
323. अव द्रप्सो अंशुमतीमतिष्ठदियानः कृष्णो दशभिः सहस्रैः ।
२ ३ २ उ ३ २ ३ १ २ ३ २३ १ २ ३१ २ ३ २
आवत्तमिन्द्रः शच्या धमन्तमप स्नीहितिं नृमणा अपद्राः ॥ १ ॥

இருக்கு 8-96-13.

𑌅𑌵 𑌦𑍍𑌰𑌪𑍍𑌸𑍋 𑌅𑌂𑌶𑍁𑌮𑌤𑍀𑌮𑌤𑌿𑌷𑍍𑌠𑌦𑌿𑌯𑌾𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌦𑌶𑌭𑌿𑌃 𑌸𑌹[𑌸𑍍𑌰𑍈𑌃 ।
𑌆𑌵𑌤𑍍𑌤𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌶𑌚𑍍𑌯𑌾 𑌧𑌮𑌨𑍍𑌤𑌮𑌪 𑌸𑍍𑌨𑍀𑌹𑌿𑌤𑌿𑌂 𑌨𑍃𑌮𑌣𑌾 𑌅𑌪𑌦𑍍𑌰𑌾𑌃 ॥

அந்வயம்.

द्रप्सः, दशभिः, सहस्रैः, इयानः, कृष्णः, अंशुमतीं, अव अतिष्ठत्, शच्या, धमन्तं, तम्, इन्द्रः, आवत्, (अथ,) नृमणाः, स्नीहितिं, अपद्राः ॥

பதவுரை.

द्रप्सः	𑌦𑍍𑌰𑌪𑍍𑌸𑌃	வேகமாய்ச் செல்கின்ற
दशभिः सहस्रैः	𑌦𑌶𑌭𑌿𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑍈𑌃	பத்தாயிரம் அசுரர்களுடன்
इयानः	𑌇𑌯𑌾𑌨𑌃	முன்னேறிவந்த
कृष्णः	𑌕𑍃𑌷𑍍𑌣𑌃	கிருஷ்ணன், என்னும் அசுரன்

अंशुमतीं	அம்ஶுமதீம்	அஞ்சுமதி, என்னும் நதியை
अव अतिष्ठत्	அவ அதிஷ்டத்	வந்தடைந்திருந்தனன். பின்னர்
शच्या	ஶச்யா	தனது, செய்கையால் அல்லது ஞானத்தால்
धमन्तं	த்மந்தம்	உலகிற்குப் பீதியுண்டாக்குகின்ற ஒலியிடும்
तं	தம்	அவ் வசுரனை
इन्द्रः	இந்த்ர:	(மருத்துக்களோடுகூட) இந்திரன்
आवत्	ஆவத்	போய்ச் சூழ்ந்துகொண்டனன்.
(अथ)	(அத)	(பின்னர்)
नृमणाः	ந்ருமணா:	வேட்போர்கள் (பால்) மனம் வைக்கும் அவ் விந்திரன்
स्नीहितिं	ஸ்நீஹிதிம்	துன்புறுத்துகின்ற அவ் வசுர சேனைகளை
अपद्राः	அபத்ரா:	நாசஞ்செய்து விட்டனன்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—1. த்யுதான ரிஷி.

ஈண்டோர் இதிகாசங் கூறப்படுகின்றது அதாவது :—முன்னொரு காலத்தில் கிருஷ்ணன் என்பதோர் அசுரன், பத்தாயிரம் அசுரர்களாற் சூழப் பட்டோனாய் அம்சுமதி என்னும் நதிக்கரையிற் றங்கியிருந்தனன். அங்கு நீர் நடுவிலிருந்த அக் கிருஷ்ணனை, இந்திரன் பிருகற்பதியோடு போய்ச் சேர்ந்து அவனையும், அவனைப் பின்றொடர்ந்தார்களையும், பிருகற்பதியின் சகாயத்தாற் கொன்றனன் என்பதாம். சோமன், என்பவன் அஞ்சுமதி நதிக் கரையிலிருந்தனன். அவனை, பிருகற்பதியோடு இந்திரன் சென்று, பன்னாட் போராற்றிக் கொன்றனன் என, இவ் விதிகாசத்தை மற்றோர் வகையாய்க் கூறுவார் சிலர். இவ்விதிகாசமனைத்தும் இம்மந்திரத்திற் கூறப்படுகின்றது. இஃது இருடியாற் கூறப்படாததெனினோ, கொள்ளற்பாலதன்றாம். (இருடி மொழியாதலின் இஃது கொள்ளற்பாலதேயாம் என்பது கருத்து.)

இனி முறையாய் மந்திரத்தின் பொருள் கூறப்படுகின்றது. அது வருமாறு :—விரைவாகச் செல்கின்ற பத்தாயிர மெண்கொண்ட அசுரர்களாற் சூழப்பட்ட கிருஷ்ணன் என்னும் அசுரன், அம்சுமதி, என்னும் நதிக்கரையிலிருந்தனன். பின்னர், தனது செய்கையால், அல்லது, அறிவால் நீருக்குள்ளிருக்கப்பட்ட, அல்லது, உலகம் பயப்படுமாறு ஒலி செய்யப்பட்ட, கிருஷ்ணன் என்னும் அவ் வசுரனை இந்திரன் மருத்துக்களோடு போய் அடைந்தனன். அடைந்த பின்னர் அவனையும், அவனைப் பின்பற்றினோர்களையும், இந்

திரன் கொன்றுவிட்டனன் என்பதாம். மனிதர்களிடத்து, அல்லது, தே போர்களிடத்து மனமுள்ள, அவ் விந்திரன் அனைவரையுந் துன்புறுத்து அசுரனுடைய சேனையைக் கொன்று, அவனுடன் இருந்தார்களையுங் கொன்று, விரைவில் ஓடிய அவ் வசுரனையுங் கொன்றுவிட்டனன் என்பது கருதித் தனக் கொள்க.

மந்திரம் 2.

३१२ ३२३१२ ३१२३१२

324. वृत्रस्य त्वा श्वसथादीषमाणा विश्वेदेवा

३१२ ३१२ ३२३२उ

मरुद्भिरिन्द्र सख्यं ते अस्त्वथेमा विश्वा

வ்ருத்ரஸ்ய த்வா ஶ்வஸதாதீஷமாணா விஶ்வே

மருத்³பி⁴ரிந்த்³ர ஸக்²யம் தே அஸ்த்வதே²மா விஶ்வ

அந்வயம்.

हे इन्द्र!, ये, विश्वेदेवाः, सखायः, वृत्रस्य, श्वसथात्, ईषमाणाः, त्वा, अजहुः, मरुद्भिः, ते, सख्यं, अस्तु, अथ, इमाः, विश्वाः पृतनाः, जयासि ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்³ர!	இந்திரனே! (உனக்கு)
ये	யே	எந்த
विश्वे देवाः	விஶ்வே தே³வா꞉	விசுவ தேவர்கள்
सखायः	ஸகா²ய꞉	(போரில், முன்னர்) உதவியாயிருந்தார்களோ, (அவர்கள்)
वृत्रस्य	வ்ருத்ரஸ்ய	விருத்திராசுரனுடைய
श्वसथात्	ஶ்வஸதா²த்	பெருமூச்சால்
ईषमाणाः	ஈஷமாணா꞉	வெருண்டோடினவர்களாய்
त्वा	த்வா	நின்னை
अजहुः	அஜஹு꞉	விட்டுவிட்டார்கள். (ஆதலின் இந்திர!)
मरुद्भिः	மருத்³பி⁴꞉	மருத்துக்களோடு
ते	தே	உனது
सख्यं	ஸக்²யம்	நட்புத்தன்மை
अस्तु	அஸ்து	இருக்குக.

அய	பின்னர்
ஊமா:	இந்த
விஸ்வா:	எல்லாப்
வ்ருதநா:	பகைஞர் படைகளையும்
ஜயாஸி	வெற்றிகொள்வாயாக.

சாயண பாடியம்.

ருக்கு—2· த்யுதான ரிஷி.

...ர் நினக்கு எந்த விசுவ தேவர்கள் (எல்லாத் தேவர் ...பி செய்பவர்களா யிருக்கின்றோம், என்று நண்பர்க ...களனைவரும், விருத்திராசுரனுடைய பெருமூச்சால், ...தவர்கள் அனைவர்களையும் விருத்திராசுரன் நோக்கி ...மாறு பெருமூச்செறிந்தனன். அப் பெருமூச்சாற் ...ரம். இதுகொண்டே யாண்டு மோடினவர்களாய்ப் ...ு விட்டார்கள். இவ்வாறுபவழி இந்திர! மருத் ...டு நினக்கு மித்திரத் தன்மை யிருக்குக. எவ் ...துக்களோடெனின்? எம் மருத்துக்கள் நின்னைப் ...ர்களோடு. பின்னர் இவர்களனைவர்களும் பகைஞர் ...யாலடக்கி விடுவார்கள் என்பது கருத்து. "இந்தி ரன் விருத்திரனைக் கொன்று" என்றற் றொடக்கத்து (3-2-9.) ஐதரேயப் பிராமணம் கூறுகின்றது ஈண்டுச் சிந்திக்கற்பாலது. (2)

மந்திரம் 3.

३ १ २ ३१ २र ३१ २र३ १ २ ३ १ २

325. विधुं दद्राणꣳ समने बहूनां युवानꣳ सन्तं पलितो जगार ।

३ १ २ ३ १ २ ३ २उ ३ २३ १ २र

देवस्य पश्य काव्यं महित्वाद्या ममार स ह्यः समानः ॥ ३ ॥

இருக்கு 10-55-5.

விதும் தத்ராணம் ஸமநே பஹூநாம் யுவாநம் ஸந்தம் பலிதோ [ஜகார ।

தேவஸ்ய பஶ்ய காவ்யம் மஹித்வாத்யா மமார ஸ ஹ்ய: ஸமாந: ॥

அந்வயம்.

विधुं, समने, बहूनां, दद्राणं, युवानं सन्तं, पलितः, जगार, देवस्य, महित्वा, काव्यं, पश्य, अद्य, ममार, सः, ह्यः, समानः ॥

திரன் கொன்றுவிட்டனன் என்பதாம். மனிதர்களிடத்து, அல்லது, வே போர்களிடத்து மனமுள்ள, அவ்விந்திரன் அனைவரையுந் துன்புறுத்தும்ப அசுரனுடைய சேனையைக் கொன்று, அவனுடன் இருந்தார்களையுங் கொன்று, விரைவில் ஓடிய அவ்வசுரனையுங் கொன்றுவிட்டனன் என்பது கருத்தெனக் கொள்க.

மந்திரம் 2.

த்நனுபுள்ள ஒரு
ந்திரனுடைய கிரு

३१२ ३२३१२ ३ १२३१२

324. **वृत्रस्य त्वा श्वसथादीषमाणा विश्वेदेवा** ன் ஒருவன்

३१२ ३१२ ३२३२उ றனன்.

मरुद्भिरिन्द्र सख्यं ते अस्त्वथेमा विश्वा கிய இந்திரனுடைய

மிக்க

வ்ருத்ரஸ்ய த்வா ஶ்வஸதாதீஷமாணா விஶ்வெ ஆற்றலை

ங்கிய ஆன்மாவே நீ) பார்ப்

ாயாக.

மருத்பிரிந்த்ர ஸக்யம் தெ அஸ்த்வதெமா விஶ்வ க் கிழத் தன்மையுடைய

நவன்) இன்று

அந்வயம். னன்.

हे इन्द्र !, ये, विश्वेदेवाः, सखायः, वृत्रस्य, श्वसथात्, ईषमाणाः, त्वा,
अजहुः, मरुद्भिः, ते, सख्यं, अस्तु, अथ, इमाः, विश्वाः पृतनाः, जयासि ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹெ இந்த்ர !	இந்திரனே ! (உனக்கு)
ये	யெ	எந்த
विश्वे देवाः	விஶ்வெ தெவாঃ	விசுவ தேவர்கள்
सखायः	ஸகாயঃ	(போரில், முன்னர்) உதவியாயிருந்தார்களோ, (அவர்கள்)
वृत्रस्य	வ்ருத்ரஸ்ய	விருத்திராசுரனுடைய
श्वसथात्	ஶ்வஸதாத்	பெருமூச்சால்
ईषमाणाः	ஈஷமாணாঃ	வெருண்டோடினவர்களாய்
त्वा	த்வா	நின்னை
अजहुः	அஜஹுঃ	விட்டுவிட்டார்கள். (ஆதலின் இந்திர !)
मरुद्भिः	மருத்பிঃ	மருத்துக்களோடு
ते	தெ	உனது
सख्यं	ஸக்யம்	நட்புத்தன்மை
अस्तु	அஸ்து	இருக்குக.

𑌅𑌧	பின்னர்
𑌇𑌮𑌾𑌃	இந்த
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌃	எல்லாப்
𑌪𑍃𑌤𑌨𑌾𑌃	பகைஞர் படைகளையும்
𑌜𑌯𑌾𑌤𑌿	வெற்றிகொள்வாயாக.

சாயண பாடியம்.

ருக்கு—2· த்யுதான ரிஷி.

...ர் நினக்கு எந்த விசுவ தேவர்கள் (எல்லாத் தேவர் ...ி செய்பவர்களா யிருக்கின்றோம், என்று நண்பர்க ...களனைவரும், விருத்திராசுர னுடைய பெருமூச்சால், ...தவர்கள் அனைவர்களையும் விருத்திராசுரன் நோக்கி ...மாறு பெருமூச்செறிந்தனன். அப் பெருமூச்சாற் ...ரம். இதுகொண்டே யாண்டு மோடினவர்களாய்ப் ...ு விட்டார்கள். இவ்வாறுயவழி இந்திர! மருத் ...ுடு நினக்கு மித்திரத் தன்மை யிருக்குக. எவ் ...ருக்களோடெனின்? எம் மருத்துக்கள் நின்னைப் ...ர்களோடு. பின்னர் இவர்களனைவர்களும் பகைஞர் ...யாலடக்கி விடுவார்கள் என்பது கருத்து. "இந்தி ...விருத்திரனைக் கொன்று" என்றற் றொடக்கத்து (3-2-9.) ஐதரேயப் பிராமணங் கூறுகின்றது ஈண்டுச் சிந்திக்கற்பாலது. (2)

மந்திரம் 3.

३ १ २ ३ १ २र ३ १ २र३ १ २ ३ १ २

325. **विधुं दद्राणꣳ समने बहूनां युवानꣳ सन्तं पलितो जगार ।**

३ १ २ ३ १ २ ३ २उ ३ २३ १ २र

देवस्य पश्य काव्यं महित्वाद्या ममार स ह्यः समानः ॥ ३ ॥

இருக்கு 10-55-5.

𑌵𑌿𑌧𑍁𑌂 𑌦𑌦𑍍𑌰𑌾𑌣𑌂 𑌸𑌮𑌨𑍇 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌯𑍁𑌵𑌾𑌨𑌂 𑌸𑌨𑍍𑌤𑌂 𑌪𑌲𑌿𑌤𑍋 [𑌜𑌗𑌾𑌰 ।

𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑌶𑍍𑌯 𑌕𑌾𑌵𑍍𑌯𑌂 𑌮𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌾 𑌮𑌮𑌾𑌰 𑌸 𑌹𑍍𑌯𑌃 𑌸𑌮𑌾𑌨𑌃 ॥

அந்வயம்.

विधुं, समने, बहूनां, दद्राणं, युवानं सन्तं, पलितः, जगार, देवस्य, महित्वा, काव्यं, पश्य, अद्य, ममार, सः, ह्यः, समानः ॥

பதவுரை.

विधुं	விதும்	போர் முதலியவைகளைச் செய்ப வனும்
समने	ஸமநே	போரில்
बहूनां	பஹூநாம்	அநேகம் பகைஞர்களை
दद्राणं	தத்ராணம்	வெருட்டுபவனுமாகிய
युवानं सन्तं	யுவாநம் ஸந்தம்	தருணப் பருவத்தனுமுள்ள ஒருவனை, (இந்திரனுடைய கிருபையால்)
पलितः	பலித:	கிழவன் ஒருவன்
जगार	ஜகார	வென்றனன்.
देवस्य	தேவஸ்ய	காலமாகிய இந்திரனுடைய
महित्वा	மஹித்வா	மகிமை மிக்க
काव्यं	காவ்யம்	(இந்த) ஆற்றலை
पश्य	பஶ்ய	(யானாகிய ஆன்மாவே நீ) பார்ப்பாயாக.
अद्य	அத்ய	(மிகக் கிழத் தன்மையுடைய ஒருவன்) இன்று
ममार	மமார	இறந்தனன்.
सः	ஸ:	அவன்
ह्यः	ஹ்ய:	மறு தினத்திற்
समानः	ஸமாந:	பிறப்பெடுத்து வருகின்றான். (இதையும் பார்ப்பாயாக.)

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—3. பிருகதுக்த ரிஷி.

இம் மந்திரத்தில் இந்திரன் கால வடிவாய்த் துதிக்கப்படுகின்றான். எல்லா யுத்தங்களையும் நியமிப்பவனும், அதாவது போரனைத்தையுஞ் செய்பவனும்) அவ்வாறே போரில் எல்லாப் பகைஞர்களையும் வெருட்டு பவனுமாகிய இத்துணை வலியோடுகூடிய ஒரு தருணனை, கிழத்தன்மை யுடையோன் ஒருவன் இந்திரனுடைய கிருபையால் வென்றனன். இத்தன் மைய இயல்புள்ளவனும், மேற்கூறிய இலக்கணத்தை யுடையவனுமாகிய, காலம் என்னும் இந்திரனுடைய மகிமை தங்கிய ஆற்றலை, பிருகத்துக்தனே! நீ காண்பாயாக. இந்த ரிஷி தனதான்மாவையே கூப்பிட்டுச் சொல்கின்றார். எவன் கிழத்தன்மையடைந்து இன்று இறக்கின்றானோ, அவன் மற்றைய தினத்தில் நன்று பிழைக்கின்றான். அதாவது மறு பிறப்பில் வெளிப்படு கின்றான். (இதையுங் காண்பாயாக.) (3)

மந்திரம் 4.

२ ३ २ ३२ ३ १२ ३१२ ३ १२
326. त्वꣳह त्यत् सप्तभ्यो जायमानोऽशत्रुभ्यो अभवः शत्रुरिन्द्र ।
३१ २र २ १ २र ३ २ ३ १२ १२
गूढे द्यावापृथिवी अन्वविन्दो विभुमद्भ्यो भुवनेभ्यो रणं धाः ॥

இருக்கு 8-96-16.

𑌤𑍍𑌵𑌂𑌹 𑌤𑍍𑌯𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌭𑍍𑌯𑍋 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑍋𑌽𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑍍𑌯𑍋 𑌅𑌭𑌵𑌃 [𑌶𑌤𑍍𑌰𑍁𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰 ।
𑌗𑍂𑌢𑍇 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌅𑌨𑍍𑌵𑌵𑌿𑌨𑍍𑌦𑍋 𑌵𑌿𑌭𑍁𑌮𑌦𑍍𑌭𑍍𑌯𑍋 𑌭𑍁𑌵𑌨𑍇𑌭𑍍𑌯𑍋 [𑌰𑌣𑌂 𑌧𑌾𑌃 ॥

அந்வயம்.

हे इन्द्र !, त्वं ह, त्यत् , जायमानः, अशत्रुभ्यः, सप्तभ्यः, शत्रुः, अभवः, गूढे, द्यावापृथिवी, अन्वविन्दः, विभुमद्भ्यः, भुवनेभ्यः, रणं धाः ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே !
त्वं ह	𑌤𑍍𑌵𑌂 𑌹	உண்மையில் நீ
त्यत्	𑌤𑍍𑌯𑌤𑍍	(மேல்வரும்) இவ்வித பராக்கிரம முடையாய்.
जायमानः	𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃	தோன்றும் போதே
अशत्रुभ्यः	𑌅𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑍍𑌯𑌃	சத்துருக்களற்ற
सप्तभ्यः	𑌸𑌪𑍍𑌤𑌭𑍍𑌯𑌃	கிருஷ்ணன், விருத்திரன், நமுசி முதலிய எழுவர்களின் பொருட்டுச்
शत्रुः	𑌶𑌤𑍍𑌰𑍁𑌃	சத்துருவாக
अभवः	𑌅𑌭𑌵𑌃	ஆனாய். (மற்றும், நீ)
गूढे	𑌗𑍂𑌢𑍇	இருள் மூடிப்புள்ள
द्यावापृथिवी	𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀	வானையும் மண்ணையும்
अन्वविन्दः	𑌅𑌨𑍍𑌵𑌵𑌿𑌨𑍍𑌦𑌃	விளக்கிக்கொண்டனை. (அங்ஙனமே)
विभुमद्भ्यः	𑌵𑌿𑌭𑍁𑌮𑌦𑍍𑌭𑍍𑌯𑌃	பெரிதாகின
भुवनेभ्यः	𑌭𑍁𑌵𑌨𑍇𑌭𑍍𑌯𑌃	புவனங்களினின்றும்
रणं	𑌰𑌣𑌂	இரமித்தலைக்
धाः	𑌧𑌾𑌃	கொள்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—4. த்யுதான ரிஷி.

இந்திர! உண்மையில் நீ இத் தன்மைய செய்கையைச் செய்தோனு யிருக்கின்றாய். அஃதென்னை யெனின்? தோன்றிய போதே சத்துருக்க ளில்லாத கிருஷ்ணன், விருத்திரன், நமுசி, சம்பரன் முதலிய எழுவருக்குஞ் சத்துருவாயினை. அல்லது, ஏழுபுரியின் பொருட்டுச் சத்துருவாயினை. 'ஏழு புரத்தை எவன் நாசஞ்செய்கின்றான்' என்று நிருத்தமுங் கூறுகின்றது. அல்லது இருக்கோதுவான் முதலிய ஏழு வேட்போரின் பொருட்டு வேள்வி யிற் றோன்றும்போதே இடையூறு விளைப்பவர்கட்குச் சத்துருவானாய். அன்றியும், இந்திர! நீ இருளால் மூடப்பட்ட வானுலகையும் மண்ணுலகை யும், இரவி வடிவமாய் விளக்கி முறையாய் அவைகளை யடைந்தாய். அங்ஙன மே மகத்தான புவனங்களினின்றும் ஆடல் செய்வதை மேற்கொண்டாய். (இத்தன்மைய அரிய செயலை நீ செய்தனை என்பது கருத்து.) (4)

மந்திரம் 5.

३ १ २र ३ १ २ ३ १ २ ३ १ २ ३ २ ३ १ २
327. मेडिं न त्वा वज्रिणं भृष्टिमन्तं पुरुधस्मानं वृषभं स्थिरप्स्नुम् ।
३ २उ ३ १२ ३ १ २र ३ १ २३१२
करोष्यर्य्यस्तरुषीर्दुवस्युरिन्द्र द्युक्षं वृत्रहणं गृणीषे ॥ ५ ॥

மேடிம் ந த்வா வஜ்ரிணம் ப்ருஷ்டிமந்தம் புருதஸ்மாநம் வ்ருஷபம் [ஸ்திரப்ஸ்நும் ।

கரோஷ்யர்யஸ்தருஷீர்துவஸ்யுரிந்த்ர த்யுக்ஷம் வ்ருத்ரஹணம் [க்ருணீஷே ॥

அந்வயம்.

हे इन्द्र !, दुवस्युः, अर्यः, तरुषीः, करोषि, वृत्रहणं, द्युक्षं, पुरुधस्मानं, वृषभं, स्थिरप्स्नुं, वज्रिणं, भृष्टिमन्तं, त्वा, मेडिं न, गृणीषे ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! நீ
दुवस्युः	துவஸ்யு:	துதி முதலிய வழிபாட்டை விழைந்து
अर्यः	அர்ய:	எனது பகைஞர் தாழ்ந்தவராக வும்
तरुषीः	தருஷீ:	யான் வெற்றியுடை யனாகவும்
करोषि	கரோஷி	செய்கின்றாய்.

वृत्रहणं	வ்ருத்ரஹணம்	விருத்திரனைக் கொன்றவனும்,
शुक्षं	சுக்ஷம்	வானுலகி லிருப்போனும்,
पुरुधस्मानं	புருதஸ்மானம்	நீரைத்தாங்குவோனும், அல்லது பகைஞரைக் கெடுப்போனும்
वृषभं	வ்ருஷபம்	வேண்டியதை மழையெனப் பொழிவோனும்
स्थिरप्स्नुं	ஸ்திரப்ஸ்னும்	நிலைத்த வடிவனும்
वज्रिणं	வஜ்ரிணம்	வச்சிராயுதந் தாங்கியவனும்
भृष्टिमन्तं	ப்ருஷ்டிமந்தம்	பகைஞரைக் காய்பவனுமாகிய
त्वा	த்வா	உன்னை
मेडिं न	மேடிம் ந	மழையைக் கொடுக்கின்ற வாக்கைத் துதிக்குமாறு
गृणीषे	க்ருணீஷே	தோத்திரம் பண்ணுகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—5. வாமதேவ ரிஷி.

இந்திர! துதித்தல் முதலிய பணியை விரும்புகின்ற நீ எனது பகைஞர்களைத் தாழ்ந்தவர்களாகவும் (தோல்வி யுடையவர்களாகவும்) எங்களை வெற்றியுடையவர்களாகவுஞ் செய்கின்றாய். அல்லது, எங்களைத் தருணர்களாகவும், எமது சத்துருக்களை மெலிவுடையவர்க (கிழவர்க) ளாகவுஞ் செய்கின்றாய். ஆதலின், மழையைக் கொடுக்கும் மத்திமை வாக்கைப்போல், அதாவது மழையின் பொருட்டு (அவ்வாக்கை)த் துதிக்குமாறு உன்னைத் தோத்திரம் பண்ணுகின்றேன் என்பதாம். எவ்வண்ணத்தனாகிய நின்னை யெனின்? விருத்திராசுரனைக் கொன்றோனும், மேகத்தைக் கடிந்தோனும், வானுலகிலிருப்போனும், மிகுந்த நீரைத் தாங்குவோனும், அல்லது, பல சத்துருக்களை யடக்குவோனும், விரும்பியவைகளை மழையாய்ப் பெய்விப்போனும், உண்மை வடிவனும், இந்திரனுடைய வடிவம் ஓர்காலும் நழுகுவதில்லை ஆதலினென்க. அல்லது, நிலையான சத்துருக்களைக் கொல்வோனும், வச்சிராயுதமுடையோனும், பகைஞரைக் காய்வோனுமாகிய நின்னை. துதிக்கின்றேன் என்பதனோடு சேர்த்துக்கொள்க. (5)

மந்திரம் 6.

१ २ ३ २ २३ १२ ३ १२ ३ १२ ३ १ २
328. प्रवो * महे महे वृधे भरध्वं प्रचेतसे प्रसुमतिं कृणुध्वम् ।
१ २ ३ १ २र ३ २
विशः पूर्वीः प्रचर चर्षणीप्राः ॥ ६ ॥

இருக்கு 7-31-10.

---

* महो महि वृध, என்பது இருக்கு.

𑌪𑍍𑌰 𑌵𑍋 𑌮𑌹𑍇 𑌮𑌹𑍇 𑌵𑍃𑌧𑍇 𑌭𑌰𑌧𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌚𑍇𑌤𑌸𑍇 𑌪𑍍𑌰 𑌸𑍁𑌮𑌤𑌿𑌂
[𑌕𑍃𑌣𑍁𑌧𑍍𑌵𑌂 ।
𑌵𑌿𑌶𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍀𑌃 𑌪𑍍𑌰 𑌚𑌰 𑌚𑌰𑍍𑌷𑌣𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 ॥

அந்வயம்.

(हे अस्मदीयाः !,) वः, महे वृधे, महे, प्रभरध्वं, प्रचेतसे, सुमतिं, प्रकृणुध्वं, चर्षणिप्राः, पूर्वीः, विशः, प्रचर ॥

பதவுரை.

(हे अस्मदीयाः !)	(𑌹𑍇 𑌅𑌸𑍍𑌮𑌦𑍀𑌯𑌾𑌃 !)	(எம்மவர்களே !)
वः	𑌵𑌃	நீவிர்
महे वृधे	𑌮𑌹𑍇 𑌵𑍃𑌧𑍇	தனத்தை மிக வளரச்செய்கின்ற
महे	𑌮𑌹𑍇	பெரியோனுகிய இந்திரனுக்கு
प्रभरध्वं	𑌪𑍍𑌰𑌭𑌰𑌧𑍍𑌵𑌂	சோமரசத்தை அர்ப்பணஞ் செய்வீர்களாக.
प्रचेतसे	𑌪𑍍𑌰𑌚𑍇𑌤𑌸𑍇	மேலாகிய அறிவுடைய இந்திரன் பொருட்டு
सुमतिं	𑌸𑍁𑌮𑌤𑌿𑌂	இனிய தோத்திரத்தை
प्रकृणुध्वं	𑌪𑍍𑌰𑌕𑍃𑌣𑍁𑌧𑍍𑌵𑌂	நன்கு செய்வீர்களாக. (இந்திர !)
चर्षणिप्राः	𑌚𑌰𑍍𑌷𑌣𑌿𑌪𑍍𑌰𑌾𑌃	பிரசைகளின் மனோவேட்கையை நிறையப் பண்ணுகின்ற நீ
पूर्वीः	𑌪𑍂𑌰𑍍𑌵𑍀𑌃	அவி கொடுக்கின்ற
विशः	𑌵𑌿𑌶𑌃	பிரசைகளை
प्रचर	𑌪𑍍𑌰𑌚𑌰	நன்கு அடைவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—6. வசிட்ட ரிஷி. விராட் சந்தம்.

எம் மவர்களே ! நீவிர் தனத்தை மிக வளரச்செய்கின்ற பெரியோனுகிய இந்திரனுக்குச் சோமரசங்களை அர்ப்பணஞ் செய்வீர்களாக. மேலாகிய ஞானமுடைய இந்திரன் பொருட்டு அழகாகிய தோத்திரத்தையுஞ் செய்வீர்களாக. இனிப் பிரத்தியட்சத் தோத்திரம். இந்திர ! வேண்டியவைகளாற் பிரசைகளைத் திருப்தி செய்கின்ற நீ, அவிகளை நிறையக் கொடுக்கின்ற பிரசைகளை இனிதடைவாயாக என்பதாம். (6)

மந்திரம் 7.

३ १ २ ३१ २ ३ १ २३ २उ ३ १२३ १२
329. शुनं हुवेम मघवानमिन्द्रमस्मिन् भरे नृतमं वाजसातौ ।
३ १ २३२३ २२ ३ २ ३ १ २ ३ १ २ ३ २ ३ १ २
शृण्वन्तमुग्रमूतये समत्सु घ्नन्तं वृत्राणि सञ्जितं धनानि ॥ ७ ॥

இருக்கு 3-30-22.

ஶுநம் ஹுவேம மகவாநமிந்த்ரமஸ்மிந் பரே ந்ருதமம் வாஜஸாதௌ |
ஶ்ருண்வந்தமுக்ரமூதயே ஸமத்ஸு க்நந்தம் வ்ருத்ராணி ஸஞ்ஜிதம்
[தநாநி ||

அந்வயம்.

वाजसातौ, भरे, अस्मिन्, शुनं, मघवानं, नृतमं, इन्द्रं, हुवेम, शृण्वन्तं, उग्रं, समत्सु, वृत्राणि, घ्नन्तं, धनानि, सञ्जितं, ऊतये ॥

பதவுரை.

वाजसातौ	வாஜஸாதௌ	அன்னத்தை யடைவிப்பதும்
भरे	பரே	போராற்றுவோர்க்கு வெற்றி யென்னும் இலக்குமியை யடைவிப்பதுமாகிய
अस्मिन्	அஸ்மிந்	இப் போரின்கண்
शुनं	ஶுநம்	வளர்ந்துள்ளவனும்
मघवानं	மகவாநம்	தன முடையவனும்
नृतमं	ந்ருதமம்	மனிதர்களுள் மேம்பட்டவனுமாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை
हुवेम	ஹுவேம	வேள்விக்கு அழைக்கின்றோம். (அங்ஙனமே)
शृण्वन्तं	ஶ்ருண்வந்தம்	எனது துதியைக் கேட்போனும்
उग्रं	உக்ரம்	பகைஞர்கட்குப் பயங் கொடுப்போனும்
समत्सु	ஸமத்ஸு	போர்களில்
वृत्राणि	வ்ருத்ராணி	இராக்கதர்களைக்
घ्नन्तं	க்நந்தம்	கொல்வோனும்
धनानि	தநாநி	பகைஞரின் தனங்களை
सञ्जितं	ஸஞ்ஜிதம்	வெற்றியிற் கொள்கின்றவனுமாகிய நின்னை
ऊतये	ஊதயே	எம்மைப் பாதுகாத்தற் பொருட்டுக் (கூப்பிடுகின்றோம்.)

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—7. விசுவாமித்திர ரிஷி. சந்தம் திருஷ்டுப்.

அன்னலாபத்தைத் தரும் வெற்றி இலக்குமியை யளிக்கும் உயுத்தத்தில் உற்சாகத்தால் வளர்கின்றவனும், தனமுடையவனும், இதனுனே வியப்புற்ற ஐசுவரியமுடையானும், உலகனைத்தையும் வியப்புடன் நியமிப்போனுமாகிய இந்திர ! உன்னை, குசிகர்களான நாங்கள் வேள்வியின் பொருட்டு அழைக்கின்ரேம். அங்ஙனமே எனது தோத்திரத்தைக் கேட்போனும், பகைஞர்களை அச்சப் படுத்துவோனும், போர்களில் விருத்திராசுரனை உபலக்கணமாய்க் கொண்ட எல்லா அசுரர்களையுங் கொன்ருேனும், சத்துருக்களின் தனங்களை இனிது வெற்றிகொள்வோனுமாகிய நின்னை, எங்களைக் காப்பாற்றுமாறு அழைக்கின்ரேம் என்பதாம். (7)

குறிப்பு.—குசிதர்கள் - குசித ரிஷியைச் சேர்ந்தவர்கள்.

மந்திரம் 8.

२३ १ २ ३ १ २ ३१ २
330. उदु ब्रह्माण्यैरत श्रवस्येन्द्रꣳ समर्ये महया वसिष्ठ ।
१ २२ ३ १२ ३ १ २ ३ २ ३ १२ ३ १ २
आ यो विश्वानि श्रवसा ततानोपश्रोता म ईवतो वचाꣳसि ॥८॥

இருக்கு 7-23-1.

உது ப்ரஹ்மாண்யைரத ஶ்ரவஸ்யேந்த்ரம் ஸமர்யே மஹயா [வஸிஷ்ட ।
ஆ யோ விஶ்வாநி ஶ்ரவஸா ததாநோபஶ்ரோதா ம ஈவதோ [வசாம்ஸி ॥

அந்வயம்.

श्रवस्या, ब्रह्माणि, उदैरत, वसिष्ठ, समर्ये, इन्द्रं, महय, यः, विश्वानि, श्रवसा, आततान, ईवतः, मे, वचांसि, उपश्रोता ॥

பதவுரை.

श्रवस्या	ஶ்ரவஸ்யா	அன்ன வேட்கையால்
ब्रह्माणि	ப்ரஹ்மாணி	துதிகளை, அல்லது அவிகளை (இந்திரன் பொருட்டு)
उदैरत	உதைரத	(இருடிகள்) அர்ப்பணஞ் செய்கின்றுர்கள். (ஆதலின்)
वसिष्ठ !	வஸிஷ்ட !	இந்திரியங்களை வென்ருேனுகிய வசிட்ட ! நீ

समर्ये	ஸமர்யெ	வேள்வியில்
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை
महय	மஹய	ஆராதிப்பாயாக. (மற்றும்)
यः	யஃ	எவ் விந்திரன்
विश्वानि	விஶ்வாநி	உலகங்களை
श्रवसा	ஶ்ரவஸா	{ அன்னத்தால், அல்லது, கீர்த்தியால்
आततान	ஆததாந	{ விருத்தி பண்ணுகின்றானோ, (அவன்)
ईवतः	ஈவதஃ	உபாசிக்கின்ற
मे	மெ	எனது
वचांसि	வசாம்ஸி	வாக்குகளைக்
उपश्रोता	உபஶ்ரோதா	கேட்போனாகுக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—8. வசிட்ட ரிஷி.

அன்னம் (வேண்டுமென்னும்) விருப்பால் தோத்திரங்களையும், அன்னங்களையும், இந்திரன் பொருட்டு இருடிகள் அர்ப்பிக்கின்றார்கள். ஈண்டு இருடிகள், என்பது எஞ்சி நின்றது. வசிட்ட! நீயும் வேள்வியில் இந்திரனைத் தோத்திரத்தாலேனும், அவியாலேனும் பூசிப்பாயாக. மற்றும், யாதொரு இந்திரன் இப் புவனங்களை அன்னத்தினாலேனும், கீர்த்தியினாலேனும், விருத்திபண்ணுகின்றானோ, அவன், வழிபடுகின்ற என்னுடைய துதியாகிய வாக்குகளைக் கேட்போனாகுக. (8)

மந்திரம் 9.

३ १ २र ३ १ २र ३ १ २र ३ १ २र
331. चक्रं यदस्याप्स्वा निषत्तमुतो तदस्मै मध्विच्चच्छद्यात् ।
३ १ २र ३ २उ३ २ ३ १ २र३ १ २
पृथिव्यामतिषितं यदूधः पयोगोष्वदधा ओषधीषु ॥ ९ ॥

இருக்கு 10-73-9.

சக்ரம் யதஸ்யாப்ஸ்வா நிஷத்தமுதோ ததஸ்மை மத்விச்சச்சத்யாத் ।
ப்ருதிவ்யாமதிஷிதம் யதூதஃ பயோகோஷ்வததா ஓஷதீஷு ॥

அந்வயம்.

अस्य, यत् चक्रं, अप्सु, आ, निषत्तं, उतो, अस्मै, मध्वित्, चच्छद्यात्, तत्, पृथिव्यां, अतिषितं, यत् ऊधः, पयोगोषु, ओषधीषु, अदधाः ॥

பதவுரை.

अस्य	அஸ்ய	இவ் விந்திரனுடைய
यत् चक्रं	யத் சக்ரம்	யாதொரு சக்கராயுதம்
अप्सु	அப்ஸு	வானில்
आ	ஆ	நாற்புறத்தும்
निषत्तं	நிஷத்தம்	மேகத்தைக்கடிய நின்றதோ,
उत:	உத:	(மற்றும்)
अस्मै	அஸ்மை	இவ் விந்திரன் பொருட்டு
मधिवत्	மதிவத்	நீரையும்
चच्छद्यात्	சச்சத்யாத்	வசப்படுத்துகின்றதோ.
तत्	தத்	அது
पृथिव्यां	ப்ருதிவ்யாம்	தரையில்
अतिषितं	அதிஷிதம்	விடப்பட்ட
यत् ऊध:	யத் ஊத:	நீரை
पयो गोषु	பயோ கோஷு	பாற்பசுக்களிலும்
ओषधीषु	ஓஷதீஷு	பச்சிலைகளிலும்
अदधा:	அததா:	நிலைக்க வைக்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—9. கௌரவீதி ரிஷி.

இவ் விந்திரனுடைய சக்கராயுதம், அந்தரிட்சத்தில் நாற்புறமும் மேகங்களைக் கடிதற்பொருட்டுத் தோன்றியது. மற்றும், அது இந்திரனுக்கு நீரையும் வசமாக்குகின்றது. தரையின்கண் விழப்பட்ட நீரை, பச்சிலைகளிலும், பால் கறக்கின்ற பசுக்களிடத்தும் நிறுத்தி வைக்கின்றது என்பதாம். (9)

பத்தாவது கண்டம்.

முற்றும்.

பதினோராவது கண்டம்.

பிரபாடகம்—4. அத்தியாயம்—3. கண்டம்—11.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

२ ३२ ३ १२ ३१ २ ३ १२ ३ १२ १ २
332. त्यमूषु वाजिनं देवजूतꣳ सहोवानं तरुतारꣳ रथानाम् ।
१२ ३ १२ ३ २ ३ २ ३ १ १ ३ १ २
अरिष्टनेमिं पृतनाजमाशुꣳ स्वस्तये तार्क्ष्यमिहा हुवेम ॥ १ ॥

இருக்கு 10-178-1.

த்யமூஷு வாஜிநம் தேவஜூதம் ஸஹோவாநம் தருதாரம் [ரதாநாம் |
அரிஷ்டநேமிம் ப்ருதநாஜ மாஶும் ஸ்வஸ்தயே தார்க்ஷ்யமிஹா [ஹுவேம ||

அந்வயம்.

वाजिनं, देवजूतं, सहोवानं, रथानां, तरुतारं, अरिष्टनेमिं, पृतनाजं, आशुं, त्यं तार्क्ष्यं, स्वस्तये, इह, हुवेम ॥

பதவுரை.

वाजिनं	வாஜிநம்	அன்னமுடையோனும், அல்லது வலியுடையோனும்,
देवजूतं	தேவஜூதம்	தேவர்களால் நியமிக்கப்பட்டோனும்
सहोवानं	ஸஹோவாநம்	ஆற்றலுடையோனும்
रथानां	ரதாநாம்	போரில் எனைய இரதங்களைக்
तरुतारं	தருதாரம்	கடந்து செல்வோனும்
अरिष्टनेमिं	அரிஷ்டநேமிம்	கூரிய ஆயுதமுடையோனும்
पृतनाजं	ப்ருதநாஜம்	பகைஞர் படைகளை வெல்வோனும்
आशुं	ஆஶும்	வேகமாய்ச் செல்வோனுமாகிய
त्यं तार्क्ष्यं	த்யம் தார்க்ஷ்யம்	புகழுற்ற அந்தத் திருக்ஷ புத்திரனாகிய சுபர்ணனை
स्वस्तये	ஸ்வஸ்தயே	மங்கலத்தின் பொருட்டு
इह	இஹ	இக் கருமத்திற்குப்
हुवेम	ஹுவேம	பன்முறை யழைக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—1. *தார்க்ஷிய புத்திரர் அரிஷ்டநேமி ரிஷி.*

புகழ்மலிந்த திருக்ஷனுடைய புத்திரன், தார்க்ஷியன் (சுபர்ணன்) என்னுந் தேவனை மங்கலத்தின் பொருட்டு இக் கிரியை(க்கு)யில் பன்முறை அழைக்கின்றோம். எவ்வண்ணத்தனை யெனின்? அன்னமுடையானும், அல்லது பலமுடையானும், தேவர்களாற் சோமங்கொண்டு வருதற்கு நியமிக்கப் பட்டவனும், அல்லது தேவர்களாற் பிரியப்பட்டவனும், ஈண்டு யாஸ்க முனிவரும் "தேவ தூதனை தேவப் பிரியனை" எனக் கூறியுள்ளார். வலியுள்ளானும், இதனாலே போரில் ஏனையோர்களின் இரதத்தைத் தாண்டிச் செல்வோனும், அல்லது, இரதமென்னும் இவ்வுலகத்தை, சோமரசங் கொண்டு வருங்கால் கரையேற்றுபவனும், ஈண்டு "இவனே இவ்வுலகங்களை இப்போதே கரையேற்றுகின்றான்" என ஏனைய மறையுங் கூறுகின்றது. துன்புறுத்தாத தேருடையானும், அல்லது துன்புறுத்தாத ஆயுதமுடையானும், அல்லது அரிஷ்டநேமி, என்னும் எனது காரணமானவனும், பகைஞரின் சேனைகளை அடையுமாறு செய்வோனும், அல்லது, செயிப்போனும், விரைவிற் செல்பவனுமானவனை. (இனிது அழைக்கின்றோம் என்பதனோடு சேர்க்க.) (1)

குறிப்பு.—*அரிஷ்டநேமியாகிய யான் இந்திரனை யழைக்கின்றேன் என்பாருமுளர்.*

மந்திரம் 2.

३ २३ १ २　३ २३ २ ३　१ २ ३२३　२३ १ २
333. ऋतारमिन्द्र मवितारमिन्द्रꣳ हवेहवे सुहवꣳ *शूरमिन्द्रम् ।
३२उ　३१　३१ २र ३२　३२ ३१ २　३ १ २
†हुवे नु शक्रं पुरुहूतमिन्द्रमिदꣳ हविर्मघवा ‡वेत्विन्द्रः ॥ २ ॥

இருக்கு 6-47-11.

ருதாரமிந்த்ர மவிதாரமிந்த்ரம் ஹவே ஹவே ஸுஹவம் ஶூரமிந்த்ரம் ।
ஹுவே நு ஶக்ரம் புருஹூதமிந்த்ரமிதம் ஹவிர்மகவா வேத்விந்த்ரஃ

அந்வயம்.

ऋतारं, इन्द्रं, हुवे, अवितारं, इन्द्रं, (हुवे) हवे हवे, सुहवं, शूरं, शक्रं, पुरुहूतं, इन्द्रं, (हुवे) मघवा इन्द्रः, इदं, हविः, वेतु ॥

---

* सूरं, † ह्वयामि, ‡ यात्विन्द्रः, என்பன இருக்கு.

பதவுரை.

त्रातारं	த்ராதாரம்	பகைஞர்களினின்றும் பாதுகாப்போனாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை
हुवे	ஹுவே	(யான்) அழைக்கின்றேன்.
अवितारं	அவிதாரம்	மனோ விருப்பை நிறையச் செய்கின்ற
इन्द्रं (हुवे)	இந்த்ரம் (ஹுவே)	இந்திரனை யழைக்கின்றேன்.
हवे हवे	ஹவே ஹவே	போர்களனைத்திலும்
सुहवं	ஸுஹவம்	இனிது அழைக்கத் தக்கோனும்
शूरं	ஶூரம்	சூரனும்
शक्रं	ஶக்ரம்	எல்லாச் செய்கையிலும் வல்லுநனும்
पुरुहूतं	புருஹூதம்	பலரால் அழைக்கப்படுவோனுமாகிய
इन्द्रं (हुवे)	இந்த்ரம் (ஹுவே)	இந்திரனை அழைக்கின்றேன்.
मघवा इन्द्रः	மகவா இந்த்ர:	தனமுள்ள இந்திரன்
इदं	இதம்	இந்த
हविः	ஹவி:	அவியை
वेतु	வேது	அருந்துவானாக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—2. பரத்துவாச ரிஷி.

சத்துருக்களினின்றும் பாதுகாப்போனாகிய இந்திரனை அழைக்கின்றேன். அங்ஙனமே மனோவேட்கைகளை நிறையச் செய்கின்ற இந்திரனை யழைக்கின்றேன். உயுத்தங்களனைத்திலும் இனிது அழைத்தற்குரியோனும், வீரமுடையானும், காரியங்களனைத்திலும் வல்லுநனும், பாதுகாக்குமாறு பல்லோர்களால் அழைக்கப்படுவோனுமாகிய இந்திரனை அழைக்கின்றேன். இவ்வாறு அழைக்கப்பட்டவனும், தனமுடையவனுமாகிய அவ்விந்திரன் முன்னிருக்கின்ற இந்த அவியை அருந்துவானாக என்பதாம். (2)

மந்திரம் 3.

१ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ २ १ २
334. यजामह इन्द्रं वज्रदक्षिणꣳ हरीणाꣳ *रथ्या३ विव्रतानाम् ।
१२र ३ १ २ १ २ ३ १ २र ३ १ २ ३ १ २र
प्रश्मश्रुभिर्दोधुवदूर्ध्वधा भुवद्विसेनाभि ‡ र्भयमानो वि राधसा ॥३॥

இருக்கு 10-23-1.

---

* रथ्यं, ‡ दयमानो, என்பன இருக்கு.

𑌯𑌜𑌾𑌮𑌹 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌜𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌹𑌰𑍀𑌣𑌾𑌂 𑌰𑌥𑍍𑌯𑌂 𑌵𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰 𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌭𑌿𑌰𑍍𑌦𑍋𑌧𑍁𑌵𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌧𑌾 𑌭𑍁𑌵𑌦𑍍𑌵𑌿 𑌸𑍇𑌨𑌾𑌭𑌿𑌰𑍍𑌭𑌯𑌮𑌾𑌨𑍋
[𑌵𑌿𑌰𑌾𑌧𑌸𑌾 ॥

அந்வயம்.

वज्रदक्षिणं, विव्रतानां, हरीणां, रथ्यं, इन्द्रं, यजामहे, श्मश्रुभिः, दोधुवत्, ऊर्ध्वधाः, विभुवत्, सेनाभिः, भयमानः, वि राधसा ॥

பதவுரை.

वज्रदक्षिणं	𑌵𑌜𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂	வலக்கையில் வச்சிராயுதந் தாங்கியவனும்
विव्रतानां	𑌵𑌿𑌵𑍍𑌰𑌤𑌾𑌨𑌾𑌂	தேர் கொண்டு போதல் முதலிய பல தொழிலைச் செய்கின்ற
हरीणां	𑌹𑌰𑍀𑌣𑌾𑌂	அரி, யென்னுங் குதிரைகளை
रथ्यं	𑌰𑌥𑍍𑌯𑌂	வசமாக்கித் தேரிற் செலுத்துவோனுமாகிய
इन्द्रं	𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂	இந்திரனை
यजामहे	𑌯𑌜𑌾𑌮𑌹𑍇	அவிகளாற் பூசிக்கின்றோம். (பின்னர் அவன்)
श्मश्रुभिः दोधुवत्	𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌭𑌿𑌃 𑌦𑍋𑌧𑍁𑌵𑌤𑍍	தனது மீசைகளை யடிக்கடி யசைத்துக்கொண்டு
ऊर्ध्वधाः	𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌧𑌾𑌃	மேலே
विभुवत्	𑌵𑌿𑌭𑍁𑌵𑌤𑍍	நன்கு வெளிப்படுகின்றான். (மற்றும்)
सेनाभिः	𑌸𑍇𑌨𑌾𑌭𑌿𑌃	சேனைகளுடன்
भयमानः	𑌭𑌯𑌮𑌾𑌨𑌃	பகைஞர்களைப் பயமுறுத்திக் கொண்டு
वि राधसा	𑌵𑌿 𑌰𑌾𑌧𑌸𑌾	போற்றுவோர்க்குப் பல வகைத் தனங்களைக் கொடுக்கின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—3. வசுக்குரோ, அல்லது விமதோ ரிஷி.

இந்திரனை, சோமங்களென்னும் அவிகளால் யாம் ஆராதிக்கின்றோம். எவ்வண்ணத்தனாகிய இந்திரனை யெனின்? பகைஞர்களைக் கொல்லுதற்பொருட்டு இடைவிடாது வலக்கையில் வச்சிராயுதந் தாங்கியவனை. மற்றும், தேரிழுத்தல் முதலிய பலவகைத் தொழிலைச் செய்கின்ற அரி, என்னுங் குதிரைகளைக் கொண்டு தேர்ச்செலுத்துவோனை. ஆராதிக்கின்றோம் என்பதனோடு சேர்த்துக்கொள்க. அவ் விந்திரன் சோமரசம் அருந்திய பின்னர்

தனது மீசைகளை அடிக்கடி யசைத்துக்கொண்டு விசேடமாய் மேலே தோற்று கின்றான். அன்றியும் மருத்துக்கள் முதலான தனது சேனைகளாற் சத்து ருக்களை நடுங்கச் செய்துகொண்டு துதிப்போர்கட்குப் பலவிதமான தனங் களைக் கொடுக்கின்றான். (3)

குறிப்பு.—ஈண்டு மூலத்தில் வி, என்னும் அடைச்சொல்லைக் கொண்டு அதற் குரிய வினைச்சொல் சேர்க்கப்பாலதாமாதலின், பலவகைத் தனத்தைக் கொடுக் கின்றான் என வருவித்துரைக்கப்பட்டமை காண்க.

மந்திரம் 4.

३ २ १ १२ ३ २१ १ २ ३ १ २ ३१ २३२ ३१ २
335. सत्राहणं दाधृषिं तुम्रमिन्द्रं महामपारं वृषभꣳ सुवज्रम् ।
२ ३ २ ३१ २र ३२उ ३ १ २ ३ १ २ ३१ २ ३ १ २
हन्ता यो वृत्रꣳ सनितोत वाजं दाता मघानि मघवा सुराधाः॥४॥

இருக்கு 84-17-8.

ஸத்ராஹணம் தாத்ருஷிம் தும்ரமிந்த்ரம் மஹாமபாரம் வ்ருஷபம் ஸு
[வஜ்ரம் ।
ஹந்தா யோ வ்ருத்ரம் ஸநிதோத வாஜம் தாதா மகாநி மகவா
[ஸுராதா: ॥

அந்வயம்.

सत्राहणं, दाधृषिं, तुम्रं, महां, अपारं, वृषभं, सुवज्रं, इन्द्रं, यः, वृत्रं हन्ता, उत, वाजं सनिता, सुराधाः, मघवा, मघानि दाता ॥

பதவுரை.

सत्राहणं	ஸத்ராஹணம்	சத்துருவைக் கொல்வோனும்
दाधृषिं	தாத்ருஷிம்	மிகப் பயப்படுத்துவோனும்
तुम्रं	தும்ரம்	பகைஞரை வெருட்டுவோனும்
महां	மஹாம்	பெரியோனும்
अपारं	அபாரம்	கெடாதோனும்
वृषभं	வ்ருஷபம்	மனோவிருப்பங்களை மழையெனப் பொழிவோனும்
सुवज्रं	ஸுவஜ்ரம்	அழகிய வச்சிராயுத முடையோனுமாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனைத் (துதிக்கின்றோம்.)
यः	ய:	யாதொரு இந்திரன்

वृत्रं हन्ता	வ்ருத்ரம் ஹந்தா	விருத்திரனைக் கொன்றவனே,
उत	உத	மற்றும்
वाजं सनिता	வாஜம் ஸநிதா	அன்ன மளிப்பவனே,
सुराधाः	ஸுராதா:	மிகுந்த தனமுடையானே,
मघवा	மகவா	எவ் விந்திரன்
मघानि दाता	மகாநி தாதா	தனங் கொடுக்கின்றானே, (அவனைத் துதிக்கின்றேன் எனக் கூட்டுக.)

சாயண பாஷ்யம்.

கண்டம்—11. இருக்கு—4. வாமதேவ ரிஷி.

அநேக பகைஞர்களை யழிப்போனும், வியப்பாகப் பயப்படுத்துவோனும், சத்துருக்களைச் செலுத்துவோனும், பெரியோனும் விகாரப்படாதோனும், (நாசமற்றோனு மென்பதுமது) அழகிய வச்சிராயுத முடையோனுமாகிய இந்திரனை ஏத்துவோர்களான யாங்கள் துதிக்கின்றோம். ஈண்டு ஏத்துவோர்களான யாங்கள் என்பது எஞ்சி நின்றது. யாதொரு இந்திரன் விருத்திரன் என்னும் அசுரனைக் கொன்றவனாகின்றானோ, மற்றும், எவ் விந்திரன் அன்னங் கொடுப்போனாகின்றானோ, அழகிய தனமுடைய எவ் விந்திரன் தனங் கொடுப்போனாகின்றானோ, அவ் விந்திரனைத் துதிக்கின்றோமென மேலே கூட்டிக்கொள்க. (4)

மந்திரம் 5.

१ २ ३ १ २ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २

336. यो नो वनुष्यन्नभिदाति मर्त्त उगणा वा मन्यमानस्तुरो वा ।

३ २ ३ १ २र ३ १ २ ३ १ २ ३ १ २

क्षिधी युधा शवसा वा तमिन्द्राभीष्याम वृषमणस्त्वोताः ॥ ५ ॥

யொ நொ வநுஷ்யந்நபிதாதி மர்த்த உகணா வா மந்யமாநஸ்து [ரொவா ।

க்ஷிதீ யுதா ஶவஸா வா தமிந்த்ராபீஷ்யாம வ்ருஷமணஸ்த்வோதா: ॥

அந்வயம்.

हे इन्द्र !, यः, मर्त्तः, नः, वनुष्यन्, अभिदाति, यो वा, मन्यमानः, क्षिधी, युधा, शवसा, उगणाः वा, तुरः, तं, त्वोताः, वृषमणः, अभिष्याम ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹெ உருா !	இந்திரனே !
यः	யஃ	எந்த
मर्त्तः	ஐத்த்தஃ	மனிதன்
नः	நஃ	எங்களைக்
वनुष्यन्	வநுஷ்யந	கொல்ல விரும்பி
अभिदासि	ஐஷிதாதி	மேலேறிவருகின்றானோ, மற்றும்,
यो वा	யொ வா	எவன்
मन्यमानः	ஐநூஐாநஃ	தன்னைப் பெரியோனெனமதிக்கின்றவனோ,
क्षिधी	க்ஷியீ	அறுக்கத்தக்க
युधा	யுயா	ஆயுதத்தை யெடுத்துக்கொண்டு
शवसा	ஶவஸா	வேகமாக
उगणाः वा	உஙணாஃ வா	பெருங் கூட்டமானவைகளும்
तुरः	துரஃ	கொல்லுதற் குரியவைகளுமான எமது பிரசைகளின்மேல் ஏறி வருகின்றானோ,
तं	தம்	அவனை
त्वोताः	க்வொதாஃ	உன்னாற் காப்பாற்றப்பட்டவர்களும்
वृषमणः	வரஷஐணஃ	வலிய நடையுடையவர்களுமான யாங்கள்
अभिष्याम	ஐஷிஷ்யாஐ	அடக்கி விடுவோமாக. (நாசஞ் செய்வோமாக.)

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—5. வாமதேவ ரிஷி.

இந்திரனே ! எம் மனிதன் எங்களைக் கொல்ல விரும்பி ஒருமுகப்பட்டு வருகின்றானோ, அல்லது, எவன் தன்னைப் பெரியோனாய் அபிமானித்துக் கொண்டு, சிறந்த கூட்டமானவைகளும் கொல்லத்தக்கவைகளுமான எமது பிரசைகளைக் குறித்து ஏற்றமாய் வருகின்றானோ, எவ் வாயுதத்தாற் றுன்புறுத்திக்கொண்டு வருகின்றானெனின் ? கொல்லுமாயுதத்தோடு விரைவாக, அல்லது, வலியோடு வருகின்றான். அவனை, நின்னாற் காப்பாற்றப்பட்டவர்களாய் ஆற்றன் மிக்க நடையோடு கூடின நாங்கள் கொன்று விடுவோமாக (என்பதாம்). (5)

குறிப்பு.—எவன் என்னைக் கொன்று எனது திரவியத்தையும் பிறருக்குக் கொடுக்கின்றானோ, நானே கொடையாளியெனக் கருவமடைகின்றானோ, அவனை, எனக் கூறுவார் சிலர்.

மந்திரம் 6.

१ ३१२ ३ २ ३ १ २ ३ ३ ३१२३१२ ३ १२
337. यं वृत्रेषु क्षितयः स्पर्धमाना यं युक्तेषु तुरयन्तो हवन्ते ।
१ २र ३ २ ३ १ २र ३ १ २र ३ १२ ३ १ २र
यꣳ शूरसातौ यमपामुपज्मन्यं विप्रासो वाजयन्ते स इन्द्रः ॥६॥

யம் வ்ருத்ரேஷு க்ஷிதய꞉ ஸ்பர்தமாநா யம் யுக்தேஷு துரயந்தோ [ஹவந்தே ।
யம் ஶூரஸாதௌ யமபாமுபஜ்மந்யம் விப்ராஸோ வாஜயந்தே ஸ [இந்த்ர꞉ ॥

அந்வயம்.

वृत्रेषु, स्पर्धमानाः, क्षितयः, यं, हवन्ते, युक्तेषु, तुरयन्तः, यं, शूरसातौ, यं, अपां, यं, उपज्मन्, यं, विप्रासः, वाजयन्ते, सः, इन्द्रः ॥

பதவுரை.

वृत्रेषु	வ்ருத்ரேஷு	உயுத்தங்களில்
स्पर्धमानाः	ஸ்பர்தமாநா꞉	குரோதங்கொண்ட
क्षितयः	க்ஷிதய꞉	மனிதர்கள்
यं	யம்	எவனை
हवन्ते	ஹவந்தே	அழைக்கின்றார்களோ,
युक्तेषु	யுக்தேஷு	படைகளைக் கைக்கொண்ட போர்களில்
तुरयन्तः	துரயந்த꞉	ஒருவர்க்கொருவர் கொன்று கொள்கின்றவர்கள்
यं	யம்	எவனை அழைக்கின்றார்களோ,
शूरसातौ	ஶூரஸாதௌ	போர்வீரர்களைப் பிரிக்குங் காலத்தில், அல்லது, போர்வீரர்களைப் பெறுதற்கு
यं	யம்	எவனை அழைக்கின்றார்களோ,
अपां	அபாம்	தண்ணீர் வேண்டின்
यं	யம்	எவனை அழைக்கின்றார்களோ,
उपज्मन्	உபஜ்மந்	மழையின் பொருட்டு
यं	யம்	எவனைச் சரணடைகின்றார்களோ,
विप्रासः	விப்ராஸ꞉	அறிவுள்ள வேள்வித் தலைவர்கள்
वाजयन्ते	வாஜயந்தே	எவனை அவிகளால் வலியுறுத்துகின்றார்களோ,
सः	ஸ꞉	அவன்
इन्द्रः	இந்த்ர꞉	இந்திரன்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—6. வாம தேவரிஷி.

நமக்கு இடையூறான உயுத்தங்களில் முனிவு கொண்ட மனிதர்கள் எவ் விந்திரனை யழைக்கின்றார்களோ, போர் முகப்பட்டுப் படைகளைக் கைக்கொண்டவர்களாய்ப் போர்களில் ஒருவரை யொருவர் கொல்லப்பட்டுள்ள சனங்கள், எவனை அழைக்கின்றார்களோ, போர்வீரர்களை இனிது பகுக்குங்கால் போரை வெல்லுதற்பொருட்டு எவனை அழைக்கின்றார்களோ, மற்றும், தண்ணீர்கள் இலாபமாகு நிமித்தம், எவனை அழைக்கின்றார்களோ, மழை பெய்தற் பொருட்டு எவனைச் சரணடைகின்றார்களோ, அதாவது எவனை அழைக்கின்றார்களோ என்பது பொருள். மிகுந்த உணர்வுள்ள வேள்வித்தலைவர்கள் எவனை அவிகளால் வலிமிக்காணுப் பண்ணுகின்றார்களோ, அத் தன்மையன் இந்திரன் என்பதாம். (6)

மந்திரம் 7.

१ २ ३ ३ २र ३२उ ३ १२ ३१ २

338. इन्द्रापर्वता बृहता रथेन वामीरिष आवहतंᳵ सुवीराः ।

३ २ ३ १ २ ३ १२ ३ १ २ ३ १ २र ३ १२

वीतंᳵ हव्यान्यध्वरेषु देवा वर्द्धेथां गीर्भिरिडया मदन्ता ॥ ७॥

இருக்கு 3-53-1.

இந்த்ராபர்வதா ப்ருஹதா ரதேந வாமீரிஷ ஆவஹதம் ஸுவீரா:।
வீதம் ஹவ்யாந்யத்வரேஷு தேவா வர்த்தேதாம் கீர்ப்பிரிடயா மதந்தா॥

அந்வயம்.

हे इन्द्रापर्वता !, बृहता, रथेन, वामीः, सुवीराः, इषः, आवहतं, देवा !, अध्वरेषु, हव्यानि, वीतं, इडया, मदन्ता, गीर्भिः, वर्द्धेथाम् ॥

பதவுரை.

इन्द्रापर्वता !	இந்த்ராபர்வதா !	இந்திர, பருவதர்களே ! நீவிர்
बृहता	ப்ருஹதா	பெரிய
रथेन	ரதேந	இரதத்தின்மீது வந்து
वामीः	வாமீ:	போற்றுதற்குரிய
सुवीराः	ஸுவீரா:	நற்புத்திரர்களோடு
इषः	இஷ:	அன்னத்தையுங்
आवहतं	ஆவஹதம்	கொடுப்பீர்களாக.
देवा !	தேவா !	விளங்குவோர்களே !

अध्वरेषु	அத்⁴வரேஷு	எமது வேள்விகளில்
हव्यानि	ஹவ்யாநி	அவிகளை
वीतं	வீதம்	உண்பீர்களாக. அவ்வாறே
इडया	இட³யா	யாங் கொடுத்த அன்னத்தால்
मदन्ता	மத³ந்தா	களிப்படைவீர்களாக. (களிப்புற்று)
गीर्भिः	கீ³ர்பி⁴꞉	துதியாகிய எமது வாக்குகளால்
वर्द्धेथां	வர்த்³தே⁴தா²ம்	விருத்தி யடைவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—7. விசுவாமித்திரர் ரிஷி துதிக்கின்றார்.

இந்திரன், பருவதன் என்னு மிருவர்களே! நீவிர், பெரிதாகிய தேரில் வந்து, போற்றத்தக்க புத்திரர்களோடு அன்னத்தையும் எங்கட்குக் கொடுப்பீர்களாக. அன்றியும், விளக்கமான இந்திர பருவதர்களே! எமது வேள்விகளில் ஓமஞ் செய்தற்குரிய புரோடாச முதலியவைகளைப் புசிப்பீர்களாக. மற்றும், எங்களாற் கொடுக்கப்பட்ட அன்னத்தாற் களிப்புடையோர்களாய் நீங்களிருவரும் எமது துதியாகிய வாக்குகளால் விருத்தியாவீர்களாக. (7)

மந்திரம். 8.

१ २ ३ २ ३ १ २ ३१ २२ ३२ ३ १ २
339. इन्द्राय गिरो अनिशितसर्गा अपः प्रैरयत् सगरस्य बुध्नात् ।
१ २र ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ २ ३२
यो अक्षेणेव चक्रियौ शचीभिर्विष्वक्तस्तम्भ पृथिवीमुत द्याम् ॥

இருக்கு 10-89-4.

இந்த்³ராய கி³ரோ அநிஶிதஸர்கா³ அப꞉ ப்ரைரயத் ஸக³ரஸ்ய
[பு³த்⁴நாத் ।
யோ அக்ஷேணேவ சக்ரியௌ ஶசீபி⁴ர்விஷ்வக்தஸ்தம்ப⁴ ப்ருதி²வீமுத
[த்³யாம் ॥

அந்வயம்.

इन्द्राय, अनिशितसर्गाः, गिरः, सगरस्य, बुध्नात्, अपः, प्रैरयत्, यः, शचीभिः, पृथिवीं, उत, द्यां, चक्रियौ, अक्षेण इव, विष्वक्, तस्तम्भ ॥

பதவுரை.

इन्द्राय	இந்த்ராய	இந்திரன் பொருட்டு
अनिशितसर्गाः	அநிஶிதஸர்கா:	இடையறாது பேரொலியோடு சொல்லப்படுகின்ற
गिरः	கிர:	தோத்திரங்களால்
सगरस्य बुध्नात्	ஸகரஸ்ய புத்நாத்	வானிடத்தினின்று
अपः	அப:	மழை நீரைச்
प्रैरयत्	ப்ரைரயத்	செலுத்துகின்றவன்
यः	ய:	யாதொரு இந்திரனே, அவன்
शचीभिः	ஶசீபி:	வேள்வி முதலிய கருமங்களினால்
पृथिवीं	ப்ருதிவீம்	மண்ணையும்
उत	உத	மற்றும்
द्यां	த்யாம்	விண்ணையும்,
चक्रियौ	சக்ரியௌ	இரதத்தின் சக்கரங்கள்
अक्षेण इव	அக்ஷேண இவ	அச்சில் நிலைத்திருப்பன போல
विष्वक्	விஷ்வக்	நாற்புறத்தும்
तस्तम्भ	தஸ்தம்ப	நிலை நிறுத்தினன்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—8. ரேணு ரிஷி.

இந்திரன் பொருட்டு மேன்மேல் கிளம்புகின்ற தோத்திரங்களினால் வானிலிருந்து நீரைச் செலுத்துகின்றவன் எவ் விந்திரனே, அவன், வேள்வி முதலிய கருமங்களால் இரதத்தின் சக்கரங்கள் அச்சில் நிலைத்திருப்பனபோன்று வானுலகையும் மண்ணுலகையும் யாண்டும் நிலை நிறுத்தியுள்ளான் என்பதாம்.

மந்திரம் 9.

३ १ २ ३ १ २ ३२ ३१२ ३ १ २

340. *आ त्वा सखायः सख्या ववृत्युस्तिरः पुरूचिदर्णवां जगम्याः ।

३१२२२३ १२ १ ३ २ ३ १२ २२ ३ २२

पितुर्नपातमादधीत वेधा अस्मिन् क्षये प्रतरां दीद्यानः ॥ ९ ॥

இருக்கு 7-24-1.

ஆ த்வா ஸகாய: ஸக்யா வவ்ருத்யுஸ்திர: புரூசிதர்ணவாம் ஜகம்யா: ।

பிதுர்நபாதமாததீத வேதா அஸ்மிந் க்ஷயே ப்ரதராம் தீத்யாந: ॥

* चित्सखायं सख्या ववृत्यांस्तिरः पुरूचिदर्णवं जगन्वान् । पितुर्नपातमादधीत वेधा अधि क्षमि प्रतरं दीध्यानः ॥ என்பது இருக்கு.

அந்வயம்.

हे इन्द्र !, सखायः, सख्या, त्वा, आववृत्युः, पुरु, अर्णवां, तिरः, जगम्याः, अस्मिन्, क्षये, प्रतरां, दीद्यानः, वेधाः, पितुः, नपातं, आदधीत ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
सखाय:	ஸகாய:	துதிப்போர்கள்
सख्या	ஸக்யா	அன்புகொண்ட ஸ்தோத்திரத்தால்
त्वा	த்வா	உன்னை
आववृत्युः	ஆவவ்ருத்யு:	எம்மை நோக்கும்படி செய்கின்றார்கள். ஏனெனின்? நீ
पुरु	புரு	விரிந்த
अर्णवां	அர்ணவாம்	வானுலகிற்கு
तिर:	திர:	எழுந்து
जगम्या:	ஜகம்யா:	போய்விட்டனை. (ஆதலினென்க).
अस्मिन् क्षये	அஸ்மிந் க்ஷயே	வசிக்கின்ற இடமாகிய இவ்வேள்வியில்
प्रतरां	ப்ரதராம்	மிகுந்த
दीद्यान:	தீத்யாந:	ஒளி வீசும்
वेधा:	வேதா:	இந்திரன்
पितु:	பிது:	எனது தந்தைக்குப்
नपातं	நபாதம்	பௌத்திரனைக்
आदधीत	ஆததீத	கொடுப்பானாக. (எனக்குப் புத்திரனைத் தருவானாக.)

சாயண பாடியம்

கண்டம்—11. இருக்கு—9. வாமதேவரிஷி.

இந்திர ! உன்னை, நண்பர்களான துதிப்போர்கள் அன்பார்ந்த துதிகளால் ஒருமை நோக்காகச் செய்கின்றார்கள். யாது பற்றியெனின்? நீ விரிவாகிய அந்தரிக்ஷத்திற்கு எழுந்து போய் விட்டனை, அதனாலென்க. இனிப் பரோக்ஷமாய்ச் செய்யப்பட்டது. (அனைத்தையும்) விசேடமாய்த் தாங்குகின்ற இந்திரன் என்னுடைய தந்தையார்க்குப் பௌத்திரனைக் கொடுப்பானாக. (எனக்குப் புத்திரனைக் கொடுப்பானாக என்பதுமது) எவ்வண்ணனாகிய இந்திரன் எனின் ? நல்ல இருப்பிடமாகிய இவ்வேள்வியில் மிகுந்த ஒளியோடு விளங்குகின்றவன். (8)

மந்திரம் 10.

२ ३ १ २ ३ २ उ ३ २ ३ १ २ ३ १ २ ३ २
341. को अद्य युंक्ते धुरि गा ऋतस्य शिमीवतो भामिनो दुर्हृणायून् ।
३ १ २ ३ १ २ ३ १ २र ३ २ ३ २ ३ १ २
* आसन्नेषामप्सुवाहो मयोभून्य एषां भृत्यामृणधत्स जीवात् ॥

இருக்கு 3-74-16.

𑌕𑍋 𑌅𑌦𑍍𑌯 𑌯𑍁𑌂𑌕𑍍𑌤𑍇 𑌧𑍁𑌰𑌿 𑌗𑌾 𑌋𑌤𑌸𑍍𑌯 𑌶𑌿𑌮𑍀𑌵𑌤𑍋 𑌭𑌾𑌮𑌿𑌨𑍋
[𑌦𑍁𑌰𑍍𑌹𑍃𑌣𑌾𑌯𑍂𑌨𑍍 ।
𑌆𑌸𑌨𑍍𑌨𑍇𑌷𑌾𑌮𑌪𑍍𑌸𑍁𑌵𑌾𑌹𑍋 𑌮𑌯𑍋𑌭𑍂𑌨𑍍𑌯 𑌏𑌷𑌾𑌂 𑌭𑍃𑌤𑍍𑌯𑌾
[𑌮𑍃𑌣𑌧𑌤𑍍𑌸 𑌜𑍀𑌵𑌾𑌤𑍍 ॥

அந்வயம்.

अद्य ऋतस्य, धुरि, गाः, शिमीवतः, भामिनः, दुर्हृणायून्, अप्सुवाहः, मयोभून्, आसन्, कः, युंक्ते, यः, एषां, भृत्यां, ऋणधत्, सः, जीवात् ॥

பதவுரை.

अद्य	𑌅𑌦𑍍𑌯	இன்று (செய்கின்ற) இக்கிரியையில்
ऋतस्य	𑌋𑌤𑌸𑍍𑌯	வேள்விக்குச் செல்லும் இந்திரனுடைய இரதத்தின்
धुरि	𑌧𑍁𑌰𑌿	நுகத்தடியில்
गाः	𑌗𑌾𑌃	பூட்டப் பட்டவைகளும்,
शिमीवतः	𑌶𑌿𑌮𑍀𑌵𑌤𑌃	வீரமாய் வேலை செய்பவைகளும்
भामिनः	𑌭𑌾𑌮𑌿𑌨𑌃	பிரகாசமுடையவைகளும்
दुर्हृणायून्	𑌦𑍁𑌰𑍍𑌹𑍃𑌣𑌾𑌯𑍂𑌨𑍍	பகைஞர்களாற் றாங்கமுடியாத கோபமுடையவைகளும்
अप्सुवाहः	𑌅𑌪𑍍𑌸𑍁𑌵𑌾𑌹𑌃	வேள்வியின் பொருட்டு இந்திரனைக் கொண்டு போகின்றவைகளுமான
मयोभून्	𑌮𑌯𑍋𑌭𑍂𑌨𑍍	(இன்பந்தருங்) குதிரைகளை, அல்லது கடிவாளங்களை,
आसन्	𑌆𑌸𑌨𑍍	வாழ்த்துகின்ற தோத்திரவாயிலாக
कः ?	𑌕𑌃 ?	யாவன் ?
युंक्ते ?	𑌯𑍁𑌂𑌕𑍍𑌤𑍇 ?	ஏவ வல்லான் ?
यः	𑌯𑌃	எவ்வேள்வித் தலைவன்

* आसन्निषून्हृत्स्वसो, என்பது இருக்கு.

एषां	ஏஷாம்	இக் குதிரைகளின்
भृत्यां	ப்ருத்யாம்	தொழிலைத்
ऋणधत्	ருணத‌த்	துதிக்கின்றானோ,
सः	ஸ:	அவன்
जीवात्	ஜீவாத்	வாழ்கின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—10. கோதம ரிஷி.

இக் கிரியையில் வேள்விக்குச் செல்கின்றவைகளும், இந்திரனுடைய இரதத்தின் நுகத்தடியிற் கட்டப்பட்டவைகளும், விரைவாய் நடக்கின்றவைகளுமான குதிரைகளை, அல்லது கடிவாளங்களை, வாயினின் றெழுந் தோத்திரத்தால் யார் நிறுத்துவதற்கு ஆற்றலுடையார்? யாருமிலர் என்பது பொருள். எவ்விதமான குதிரைகளையெனின்? வீரமான தொழிலோடு கூடியவைகளும், பிரகாசத்தோடு கூடினவைகளும், பகைவர்களாற் பொறுக்க முடியாத கோபமுடையவைகளும், இந்திரனைக் கொண்டு செல்பவைகளும், இன்பந்தருபவைகளு மானவைகள். இத்தன்மைய குதிரைகளின் பணியை (இரதங்கொண்டேகுந் தொழிலை) எவ்வேள்வித் தலைவன் துதிக்கின்றானோ, அவன் நீண்ட ஆயுளுடையோனாகின்றான். அல்லது, "யாவன் என்பவன் பிரசாபதி" என்னும் மறைமொழியால், யாவன் என்பவன் பிரசாபதியாவன். அவன் வேள்வியை நடத்துவதில் (கோ—என்பது வாக்கு.) வேதவடிவ வாக்குவிசேடங்களை இப்போது சேர்க்கின்றவன், எவ்வண்ணத்த வேத வாக்குகளை யெனின்? கூறப்பட்ட கருமங்களோடு கூடினவைகளும், (அதாவது கூறல் கூறப்படல் என்னுஞ் சம்பந்தத்தால் வேள்வி முதலிய கருமங்களையுடையவைகளும்,) விளக்கமானவைகளும், கெடுக்க முடியாதவைகளும், வேதமோதல் நித்தியமாதலாலென்க. ஆன்மாவைக் கூறுவதால் முகம் போன்றவைகளும், அந்தரிக்ஷத்திற்கு வேள்வித் தலைவனைச் செலுத்துபவைகளும், மறையோதலால் வரும் புண்ணியத்தை (அதிருட்டத்தை) உடையவைகளுமானவைகளை. இத்தன்மைய மறைமொழிகளின் நன்மைத் தொழிலைப் பயனுடையதாகச் செய்கின்றவன் எவனோ, அவனொருவனே வாழ்கின்றான். பிறர் பிழைத்திருந்தும் இறந்தவரேயாவர் என்பதாம்.

பதினோராவது கண்டம்

முற்றும்.

பன்னிரண்டாவது கண்டம்

பிரபாடகம்—4. அத்தியாயம்—3. கண்டம்—12.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१ २ ३ १ २र ३ २ ३ १ २
342. गायन्ति त्वा गायत्रिणोऽर्चन्त्यर्कमर्किणः ।
३ १ २ ३ २३ १ २
ब्रह्माणस्त्वा शतक्रत उद्वंशमिव येमिरे ॥ १ ॥

இருக்கு 1-30-1.

𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌾 𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌿𑌣𑍋𑌽𑌰𑍍𑌚𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌕𑌮𑌰𑍍𑌕𑌿𑌣𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌸𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌤𑌕𑍍𑌰𑌤 𑌉𑌦𑍍𑌵𑌂𑌶𑌮𑌿𑌵 𑌯𑍇𑌮𑌿𑌰𑍇 ॥

அந்வயம்.

हे शतक्रतो !, त्वा, गायत्रिणः, गायन्ति, अर्किणः, अर्कं, अर्चन्ति, ब्रह्माणः, वंशं इव, त्वा, उद्येमिरे ॥

பதவுரை.

हे शतक्रतो !	𑌹𑍇 𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍋 !	இந்திரனே !
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னைச்
गायत्रिणः	𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑌿𑌣𑌃	சாமமறை பாடுவோர்கள்
गायन्ति	𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿	துதிக்கின்றார்கள்.
अर्किणः	𑌅𑌰𑍍𑌕𑌿𑌣𑌃	ஓமத்திற்கு இருக்குமறையோதுகின்ற ஓதாக்கள்
अर्कं	𑌅𑌰𑍍𑌕𑌂	போற்றத்தக்க நின்னை
अर्चन्ति	𑌅𑌰𑍍𑌚𑌨𑍍𑌤𑌿	ஓத்துக்களாலேத்துகின்றார்கள்.
ब्रह्माणः	𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌃	ஏனைய அந்தணர்கள்
वंशं इव	𑌵𑌂𑌶𑌂 𑌇𑌵	கழைக்கூத்தன் மூங்கிலையுயர்த்தி நாட்டுமாறு
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னை
उद्येमिरे	𑌉𑌦𑍍𑌯𑍇𑌮𑌿𑌰𑍇	மேலாகச் செய்கின்றார்கள்.

சாயண பாஷ்யம்.

கண்டம்—12. இருக்கு—1. மதுச்சந்த ரிஷி.

28 மந்திரங்கள் அநுஷ்டுப் சந்தங்களை யுடையன. மருத்துக்கள், அக்கினி, வைசுவ தேவம், இருக்கு, சாமம், என்னு மிவைகள் இடையிலுள்ள தேவதைகள். ஏனையவைகள் இந்திரனையே தேவதையாக வுடையன. குடைகாரர்கள் போகின்றார்கள் என்ப தொப்ப அனைத்தும் ஐந்திரம் (இந்திர தேவதையை யுடையன) எனப்படுகின்றன.

ऋग्मियं	ருக்மியம்	மனமந்திர... படு...
वस्वः अर्णवं	வஸ்வ: அர்ணவம்	தனத்... மாக
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனை, நீவிர்
गीर्भिः	கீர்பி:	துதிகளால்
अभिमदत	அபிமதத	ஒருமையொடு களிப்படையச் செய்வீர்களாக.
यस्य	யஸ்ய	எவ் விந்திரனுக்கு
मानुषं	மாநுஷம்	மனிதர்களது இனிய கருமங்கள்
द्यावः न	த்யாவ: ந	யாவர்கட்கும் இனிதாகிய இரவியின் கிரணம்போன்று
विचरन्ति	விசரந்தி	விசேடமாய் இருக்கின்றனவோ,
भुजे	புஜெ	போகத்தின் பொருட்டு
मंहिष्ठं	மம்ஹிஷ்டம்	விருத்தியடையவனும்
विप्रं	விப்ரம்	நுண்ணறிவோனுமாகிய அவ் விந்திரனைப்
अभ्यर्चत	அப்யர்சத	பூசிப்பீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—7. சக்கிய ரிஷி.

புகழுடையவனும், சத்துருக்களோடு வைரமுடையானும், அல்லது (மேஷம், என மூலத்திய சொல்லிருத்தலின்) கண்ணுவருடைய புத்திரன் மேதாதிதி என்னும் வேள்வித்தலைவனைக் குறித்து இந்திரன் ஆடாகவந்து அவருடைய சோமரசத்தை யருந்தினன். அதுபற்றி இந்திரனை ஆடு எனச் சொல்லினன், அது கொண்டு இப்போதும் இந்திரன் ஆடு எனப்படுகின்றான். "மேதாதிதி மேஷம்" என சுப்பிரமணிய மந்திரத்தின் ஒரு பாகத்திற்

நள்ள உரையாகிய பிராமணமுங் (மறையின் ஒரு பாகமுங்) கூறுகின்றது. அதாவது மேதாதிதியாகிய கண்ணுவரை இந்திரன் ஆடாக வடைந்து சோமரசத்தை யருந்தினன் என்பதாம். அநேக வேள்வித் தலைவர்களால் அழைக்கப்படுவோனும், மறையோத்துக்களால் துதிக்கப்படுவோனும், அல்லது, மறை மந்திரங்களால் உணரப்படுவோனும், தனங்களுக்கொரு நிலைக் களனும், என்னும் இத்தன்மைய குணங்களோடு கூடிய இந்திரனை, துதிப் போர்களே! நீவிர் தோத்திரங்களால் ஒருமை யடையச் செய்து களிப்புறு ரீர்களாக. மக்கட்கெல்லாம் எவ் விந்திரனுடைய இனிமையான ப்பாக இருக்கின்றனவோ, (அவ்விந்திரனை எனக் கூட்டுக,) ங்கள் யாவர்கட்கும் இனிமையாவன போன்றனல், (இந்திரனுடைய கருமங்கள் அனைவர்கட்கும் இனிய ராகத்தின் பொருட்டு வியப்பாக விருத்தியாகு டையானுமாகிய இந்திரனை நன்கு ஆராதிப்பீர்க (7)

மந்திரம் 8.

२उ ३ १ २ ३ १ २ ३ १ २२ ३ १ २ ३ १ २२

377. त्यंꣳ सु मेषं महया स्वर्विदꣳ शतं यस्य सुभुवः साकमीरते ।

२ ३ २२ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १ २

अत्यं न वाजꣳ हवनस्यदꣳ रथमेन्द्रं ववृत्यामवसे सुवृक्तिभिः ॥८॥

இருக்கு 1-52-1.

𑌤𑍍𑌯𑌂 𑌸𑍂 𑌮𑍇𑌷𑌂 𑌮𑌹𑌯𑌾 𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌿𑌦𑌂 𑌶𑌤𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍂𑌭𑍂𑌵𑌃 𑌸𑌾𑌕
[𑌮𑍀𑌰𑌤𑍇 ।

𑌅𑌤𑍍𑌯𑌂 𑌨 𑌵𑌾𑌜𑌂 𑌹𑌵𑌨𑌸𑍍𑌯𑌦𑌂 𑌰𑌥𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌵𑍃𑌤𑍍𑌯𑌾𑌮𑌵𑌸𑍇 𑌸𑍂
[𑌵𑍃𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ॥

அந்வயம்.

यस्य, सुभुवः, साकं, ईरते, मेषं, स्वर्विदं, रथं, अत्यं वाजं न, हवनस्यदं, त्यं, इन्द्रं, अवसे, सुवृक्तिभिः, सुमहय, शतं, आववृत्याम् ॥

பதவுரை.

यस्य	𑌯𑌸𑍍𑌯	எவனுக்கு
सुभुवः साकं	𑌸𑍂𑌭𑍂𑌵𑌃 𑌸𑌾𑌕𑌂	நன்கு வெளிப்பட்டுக்
ईरते	𑌈𑌰𑌤𑍇	கிடைக்கின்றனவோ அவனுடைய சத்துருக்களிடத்துப்
मेषं	𑌮𑍇𑌷𑌂	பகையுடையவனும்

स्वर्विदं	ஸ்வர்விதம்	தனத்தை, வானை அல்லது, அ
रथं	ரதம்	இரதத்தைப்போல் இடத்திற் சேர்ப்(
अत्यं वाजं न	அத்யம் வாஜம் ந	செல்லப்பழகிய குதி
हवनस्यदं	ஹவநஸ்யதம்	வேள்வியின்பால் வி வோனுமாகிய
त्यं इन्द्रं	த்யம் இந்த்ரம்	அவ் விந்திரனை,
अवसे	அவஸே	எம்மைப் பாதுகாத்தற்
सुवृक्तिभिः	ஸுவ்ருக்திபி:	அரிய தோத்திரங்களால்
सुमहय	ஸுமஹய	பூசிப்பாயாக.
शतं	ஶதம்	நூறு முறை
आववृत्यां	ஆவவ்ருத்யாம்	வலம் வருகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—8. சக்கிய ரிஷி.

புகழ்பெற்ற சத்துருக்களோடு வைரமுள்ளவனும், சூரியனை, அல்லது, சுவர்க்கத்தை அறிந்தவனும், அல்லது, அடைந்தோனும், அல்லது, தனத்தையடைவிப்போனுமாகிய இந்திரனை, வேட்போய்! நீ இனிது ஆராதிப்பாயாக. எத்தன்மைய இந்திரனை யெனின், இரதம்போல் விரும்பிய இடத்திற் சேர்ப்போனை, மற்றும், அழைப்பதை முன்னிட்டு, அல்லது, வேள்வியைக் குறித்து விரைவிற் செல்வோனை. அங்ஙனஞ் செல்வதிலுவமை :— செல்வதற்குப் பழகிய குதிரை போன்றெனல். எவ் விந்திரனுக்கு யான் நூறு முறை சுற்றுகின்றேனோ, (வலம் வருகின்றேனோ,) அத்தன்மைய இந்திரனைப் பூசிப்பாயாக என முடித்துக்கொள்க. (8)

மந்திரம் 9.

३१२ ३ १२ ३ २ ३ २ ३ १ २३ १२ ३ १ २

378. घृतवती भुवनानामभिश्रियोर्वी पृथ्वी मधुदुघे सुपेशसा ।

१ २ ३ १ २र ३ १२ ३ १ २ २ २३ १ २

द्यावापृथिवी वरुणस्य धर्मणा विष्कभिते अजरे भूरि रेतसा ॥ ९ ॥

இருக்கு 6-70-1.

க்ருதவதீ புவநாநாமபிஶ்ரியோர்வீ ப்ருத்வீ மதுதுகே ஸுபேஶ
[ஸா ।

த்யாவாப்ருதிவீ வருணஸ்ய தர்மணா விஷ்கபிதே அஜரே பூரி
[ரேதஸா ॥

அந்வயம்.

ध्वी, घृतवती, भुवनानां, अभिश्रिये, उर्वी, पृथ्वी, मधुदुघे,
ुपेशसा, वरुणस्य, धर्मणा, विष्कभिते, अजरे, भूरि रेतसा ॥

பதவுரை.

	த்யாவாப்ருதிவீ	வானுலக மண்ணுலகங்கள்
	க்ருதவதீ	நீரையுடையன. (அவை)
	புவநாநாம்	பிராணிகட்கு
	அபிச்ரியே	ஆசிரயிக்கத்தக்கனவாம்.
वी	உர்வீ ப்ருத்வீ	காரியங்களாக விரிந்தவைகளும்
दुघे	மதுதுகே	நீரைத் தருபவைகளும்.
सुपेशसा	ஸுபேசஸா	அழகிய வடிவுடையவைகளுமான அவைகள்
वरुणस्य	வருணஸ்ய	வருண தேவதையினுடைய வலியைத்
धर्मणा	தர்மணா	தாங்குதலினாலே
विष्कभिते	விஷ்கபிதே	நிலைத்தவைகளும்
अजरे	அஜரே	நித்தியங்களுமான
भूरि रेतसा	பூரி ரேதஸா	அநேகம் விதைகளையுடையன.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—9. பரத்துவாச ரிஷி.

வானுலகு மண்ணுலகுகள் இரண்டும் நீரை யுடையன. அவைகள் பூதங்கட்குப் பற்றுக்கோடாகின்றன என்பது எல்லா வகையானு முணரப் பாலது. மற்றும், விரிவையுடையன, காரிய வடிவமாய்ப் பரந்துள்ளன, நீரைத் தருவன, அழகிய வடிவத்தையுடையனவுமாம். அவைகள் இத் தரையில் எல்லாவற்றையுஞ் செலுத்துகின்ற வருணனுடைய எல்லாம் வல்ல வேறோர் ஆற்றலாகிய தருமத்தை (தன்மையை)த் தாங்கிய விடத்தில் கெடாத நிலைத்த அநேக காரியங்களை யுண்டாக்குகின்றன என்பதாம். (9)

மந்திரம் 10.

३ १ २र ३ १२ ३ २ ३ १ २
379. उभे यदिन्द्र रोदसी आपप्राथोषा इव
३ १ २ ३१ २ ३ १ २ ३ २
महान्तं त्वा महीनाꣳ सम्राजं चर्षणीनाम् ।
३ १ २र ३ १ २र
देवी जनित्र्यजीजनद्भद्रा जनित्र्यजीजनत् ॥ १० ॥

இருக்கு 10-13-4.

உபே யதிந்த்ர ரோதஸீ ஆபப்ராதோஷா இவ
மஹாந்தம் த்வா மஹீநாம் ஸம்ராஜம் சர்ஷணீநாம் ।
தேவீ ஜநித்ர்யஜீஜநத்பத்ரா ஜநித்ர்யஜீஜநத் ॥

அந்வயம்.

हे इन्द्र!, उभे रोदसी, उषा इव, यत्, आपप्राथ, महीनां, महान्तं, चर्षणीनां, सम्राजं, इन्द्रं, त्वा, देवी जनित्री, अजीजनत्, अजीजनत्, भद्रा, जनित्री ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே!
उभे रोदसी	உபே ரோதஸீ	வானுலகு மண்ணுலகு இரண்டினையும்
उषा इव	உஷா இவ	உஷாதேவதை தனதொளியால் உலகனைத்தையும் பூரணமாக்கல் போல்,
यत्	யத்	எந்த நீ
आपप्राथ	ஆபப்ராத	தனது பிரகாசத்தால் நிறையப் பண்ணுகின்றனையோ,
महीनां	மஹீநாம்	தேவதைகட்குப்
महान्तं	மஹாந்தம்	பெரியோனும்
चर्षणीनां	சர்ஷணீநாம்	மனிதர்களுக்கு
सम्राजं	ஸம்ராஜம்	இறைவனுமாகிய
इन्द्रं	இந்த்ரம்	இந்திரனென்னும்
त्वा	த்வா	(அத்தன்மைய) நின்னை
देवी जनित्री	தேவீ ஜநித்ரீ	தேவர்கட் கன்னையாகிய அதிதி தேவியார்
अजीजनत्	அஜீஜநத்	பெற்றனர்.
अजीजनत्	அஜீஜநத்	அத்தன்மைய புதல்வனைப் பெற்ற காரணத்தால் (அவர்)
भद्रा	பத்ரா	சிறந்த
जनित्री	ஜநித்ரீ	அன்னையாராவார்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—10. மேதாதிதி ரிஷி, மகாபந்திச்சந்தம்.

இந்திரனே! உஷா தேவதை தனது ஒளியால் உலகனைத்தையும் நிறையச் செய்வதுபோல எந்த நீ வானையும் மண்ணையும் தனது பிரகாசத்தால்

நிறைக்கின்றனையோ! அத்தகைய தேவர்கட்குத் தேவனும், மனிதர்கட்கெல்லாம் இறைவனுமாகின்ற இந்திரனென்னும் நின்னைப்பெற்ற, தேவர்கட்கு அன்னையாராகிய அதிதி தேவியார் இத்தன்மைய நின்னைப்பெற்ற காரணத்தாற் பெருங்கீர்த்தி யுடையவராயினர் என்பதாம். (10)

மந்திரம் 11.

२ ३ १ २ ३ १२ ३ २ ३ २ ३ १ २ ३१२ ३ १ २
380. प्र मन्दिने पितुमदर्चता वचो यः कृष्णगर्भा निरहन्नृजिश्वना ।
३ २ ३ १२३ १ २ ३ १ २ ३ १२
अवस्यवो वृषणं वज्रदक्षिणं मरुत्वन्तꣳ सख्याय *हुवेमहि ॥ ११ ॥

இருக்கு 8-69-1.

ப்ர மந்திநே பிதுமதர்சதா வசோ யः க்ருஷ்ணகர்பா நிரஹந்ந்ருஜிஶ்வநா ।
அவஸ்யவோ வ்ருஷணம் வஜ்ரதக்ஷிணம் மருத்வந்தம் ஸக்யாய ஹுவேமஹி ॥

அந்வயம்.

(हे ऋत्विजः !,) यः, ऋजिश्वना, कृष्णगर्भाः, निरहन्, मन्दिने, पितुमत्, वचः, प्रार्चत, वृषणं, वज्रदक्षिणं, मरुत्वन्तं, अवस्यवः, सख्याय, हुवेमहि ॥

பதவுரை.

(हे ऋत्विजः!)	(ஹே ருத்விஜः!)	(வேட்போர்காள்! நீவிர்)
यः	யः	எவ்விந்திரன்
ऋजिश्वना	ருஜிஶ்வநா	இருசுவி, என்னும் ரிஷியுடன்
कृष्णगर्भाः	க்ருஷ்ணகர்பாः	கிருஷ்ணன், என்னும் அசுரனது கருப்பிணி மங்கையையும்
निरहन्	நிரஹந்	கொன்றனனோ,
मन्दिने	மந்திநே	துதித்தற்குரிய அவ் விந்திரன் பொருட்டு
पितुमत्	பிதுமத்	அவியாகிய அன்னத்தோடுகூடிய
वचः	வசः	துதியை

---

* हवामहे, என்பது இருக்கு.

प्रार्चत	ப்ரார்சத	முழக்கமாய்ச் சொல்வீர்களாக.
वृषणं	வ்ருஷணம்	விரும்பியதைப் பொழிகின்றவனும்
वज्रदक्षिणं	வஜ்ரதக்ஷிணம்	வலக்கையில் வச்சிராயுதந் தாங்கியவனுமாகிய
मरुत्वन्तं	மருத்வந்தம்	இந்திரனை
अवस्यवः	அவஸ்யவ:	காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னு மிச்சையுடைய யாங்கள்
सख्याय	ஸக்யாய	நண்பன்போல உதவிபுரியுமாறு
हुवेमहि	ஹுவேமஹி	அழைக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—11. இம்மந்திரம் கருப்பசிராவிணி யுபநிடதம்.

வேட்போர்களே! நீவிர் தோத்திரஞ் செய்யத்தக்க இந்திரன் பொருட்டு அவிகளென்னும் அன்னங்களோடுகூடிய துதியாகிய வாக்கை முழக்கமாய்ச் சொல்வீர்களாக. யாதொரு இந்திரன் இருசிவி என்னும்இராசரிஷியாகிய நண்பரோடு கூடியவனாய், கிருஷ்ணன் என்னும் ஒரு அசுரனது மனைவியைக் கொன்றனனோ, அவன் பொருட்டெனக் அதாவது கிருஷ்ணன் என்னுமசுரனையும், அவனுக்குப் புதல்வன் உதியாவண்ணம், கருப்பங்கொண்ட அவனுடைய மனையாளையும் இந்திரன் கொன்றனன் என்பதாம். அவ்விந்திரன் பொருட்டு துதிவாக்கை முழங்குவீர்களாக என மேற்கூட்டுக. தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்னு மிச்சையுடைய நாங்கள் வேண்டியதை மழைபோற் பெய்கின்றவனும், வலக்கையில் வச்சிரங்கொண்டவனுமாகிய இந்திரனை நண்பன்போன்று உதவிபுரியுமாறு அழைக்கின்றோம். (11)

மூன்றுவது கண்டம்

முற்றும்.

நான்காவது கண்டம்.

பிரபாடகம்—4. அத்தியாயம்—1. கண்டம்—4.

பத்து மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

१२ ३२३ १२३ १२ २उ ३क

381. इन्द्र सुतेषु सोमेषु क्रतुं पुनीष उक्थ्यम् ।

३ २ ३२ ३ १२ ३ २

विदे वृधस्य *दक्षस्य महांहि षः ॥ १ ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑍁𑌤𑍇𑌷𑍁 𑌸𑍋𑌮𑍇𑌷𑍁 𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌪𑍁𑌨𑍀𑌷 𑌉𑌕𑍍𑌥𑍍𑌯𑌮𑍍 ।
𑌵𑌿𑌦𑍇 𑌵𑍃𑌧𑌸𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌮𑌹𑌾𑌂𑌹𑌿 𑌷𑌃 ॥

अंवयम्.

हे इन्द्र !, सोमेषु सुतेषु, वृधस्य, दक्षस्य, विदे, क्रतुं, उक्थ्यं, पुनीषे, सः, महान् हि ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே ! நீ
सोमेषु सुतेषु	𑌸𑍋𑌮𑍇𑌷𑍁 𑌸𑍁𑌤𑍇𑌷𑍁	சோமரசம் பிழிந்தெடுத்த விடத்து (அதை யருந்திக் கொண்டு)
वृधस्य	𑌵𑍃𑌧𑌸𑍍𑌯	பெருகச் செய்கின்ற
दक्षस्य	𑌦𑌕𑍍𑌷𑌸𑍍𑌯	ஆற்றலின்
विदे	𑌵𑌿𑌦𑍇	இலாபத்தின் பொருட்டு,
क्रतुं	𑌕𑍍𑌰𑌤𑍁𑌂	கருமம்பண்ணுவோனையும்
उक्थ्यं	𑌉𑌕𑍍𑌥𑍍𑌯𑌂	துதிப்போனையும்
पुनीषे	𑌪𑍁𑌨𑍀𑌷𑍇	பவித்திரஞ் செய்கின்றாய்.
सः	𑌸𑌃	இந்திர ! அத்தகைய நீ
महान् हि	𑌮𑌹𑌾𑌨𑍍 𑌹𑌿	உண்மையாகப் பெரியோனே யாகின்றாய்.

* द्रप्सा महान् हि सः, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

இம் மந்திரத்திலிருந்து 18-மந்திரங்கட்கு இந்திரன்—தேவதை. இடையில் சில மந்திரத்திற்கு மருத்துக்கள்—தேவதைகள். 17-மந்திரங்கட்கு உஷ்ணிக் சந்தம். சிலவற்றிற்கு விராட் சந்தம், சிலவற்றிற்கு ககுப் சந்தம். சுரம், ரிஷபம்.

கண்டம்—4. இருக்கு—1. நாரத ரிஷி.

இந்திரனே! நீ சோமரசம் பிழிந்தெடுத்தவிடத்து அதை யருந்திக் கொண்டு வேள்விக்கருமஞ் செய்வோனையும், துதிப்போனையும், பரிசுத்தஞ் செய்கின்றாய். அல்லது, சோமரசம் பிழிந்தவிடத்து வேள்வியையும், தோத்திரத்தையும், வேள்வித் தலைவர்களாற் பவித்திரமாக்குவிப்பாயாக. எதன்பொருட்டெனின்? விருத்தி செய்யும் ஆற்றலின் இலாபத்தின் பொருட்டு. இத்தன்மைத்தாகிய அவ்விந்திரன் மிகப் பெரியோன். இதனால் உண்மையில் இவ்வாறு செய்ய வல்லான் என்பது கருத்து. (1)

மந்திரம் 2.

१२ ३ १ २र ३१ ३ ३२

382. **तमु अभि प्रगायत पुरुहूतं पुरुष्टुतम् ।**

१ २ ३ १ २ ३१ २र

इन्द्रं गीर्भिस्तविषमा विवासत ॥ २ ॥

இருக்கு 8-15-1.

தமு அபி ப்ரகாயத புருஹூதம் புருஷ்டுதம் |
இந்த்ரம் கீர்பிஸ்தவிஷமா விவாஸத ||

அந்வயம்.

(हे स्तोतारः !,) पुरुहूतं, पुरुष्टुतं, तमु इन्द्रं, अभि प्रगायत, तविषं, गीर्भिः, आविवासत ॥

பதவுரை.

(हे स्तोतारः !)	(ஹே ஸ்தோதாரः !)	துதிப்போர்காள்! நீவிர்
पुरुहूतं	புருஹூதம்	பல்லோர்களாலழைக்கப் பெற்றோனும்
पुरुष्टुतं	புருஷ்டுதம்	அநேகர்களாலாராதிக்கப் பட்டோனுமாகிய
तमु इन्द्रं	தமு இந்த்ரம்	அவ்விந்திரனை
अभि प्रगायत	அபி ப்ரகாயத	ஒரு முகப்பட்டுத் துதிப்பீர்களாக. (மற்றும்)
तविषं	தவிஷம்	மிகப் பெரியோனாகிய இந்திரனை
गीर्भिः	கீர்பிः	மந்திர தோத்திரங்களால்
आविवासत	ஆவிவாஸத	ஆராதிப்பீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—2. கோசூக்தி யசுவ சூக்திகள் ரிஷிகள்.

துதிப்போர்களே! நீவிர் பல்லோரா லழைக்கப்பட்டோனும், அநேகர்களா லாராதிக்கப்பட்டோனுமாகிய அவ்விந்திரனை, ஒருமுகப்பட்டு இனிது துதிப்பீர்களாக. இதுவே விரித்துக் கூறப்படுகின்றது. அத்தன்மைய மிகப் பெரியோனாகிய இந்திரனை வாக்குகளால் வழிபடுவீர்களாக என்பதாம். (2)

மந்திரம் 3.

२ ३ १ २ ३ १२ ३१ २ ३ २
383. तं ते मदं गृणीमसि वृषणं * पृक्षु सासहिम् ।
३ १२ ३ १ २
उ लोककृत्नुमद्रिवो हरिश्रियम् ॥ ३ ॥

இருக்கு 8-15-4.

𑌤𑌂 𑌤𑍇 𑌮𑌦𑌂 𑌗𑍃𑌣𑍀𑌮𑌸𑌿 𑌵𑍃𑌷𑌣𑌂 𑌪𑍃𑌕𑍍𑌷𑍁 𑌸𑌾𑌸𑌹𑌿𑌮𑍍
𑌉 𑌲𑍋𑌕𑌕𑍃𑌤𑍍𑌨𑍁𑌮𑌦𑍍𑌰𑌿𑌵𑍋 𑌹𑌰𑌿𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥

அந்வயம்.

हे अद्रिवः!, वृषणं, पृक्षु, सासहिं, लोककृत्नुं, उ, हरिश्रियं, मदं, ते, तं, गृणीमसि ॥

பதவுரை.

हे अद्रिवः!	𑌹𑍇 𑌅𑌦𑍍𑌰𑌿𑌵𑌃!	வச்சிராயுதமேந்திய இந்திர!
वृषणं	𑌵𑍃𑌷𑌣𑌂	மனவிருப்பை நிறைவாக்குவதும்
पृक्षु	𑌪𑍃𑌕𑍍𑌷𑍁	பகைவருடைய போர்களில்
सासहिं	𑌸𑌾𑌸𑌹𑌿𑌂	சத்துருவை யடக்குவதும்
लोककृत्नुं	𑌲𑍋𑌕𑌕𑍃𑌤𑍍𑌨𑍁𑌂	உலகிற்கு இறையும்
उ	𑌉	மற்றும்
हरिश्रियं	𑌹𑌰𑌿𑌶𑍍𑌰𑌿𑌯𑌂	அரி யென்னுங் குதிரையால் வழிபடத்தக்கதும்
मदं	𑌮𑌦𑌂	சோமரசத்தை யருந்தியதாலுண்டாகியதுமாகிய
ते	𑌤𑍇	உன்னுடைய
तं	𑌤𑌂	அந்தக் களிப்பைப்
गृणीमसि	𑌗𑍃𑌣𑍀𑌮𑌸𑌿	புகழ்கின்றோம்.

* पृत्सु, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—3. கோசூத்தி அசுவசூத்தி ரிஷிகள்.

வச்சிராயுதமேந்திய இந்திர! மனோவேட்கையை மழைபோற் பொழிவதும், பகைஞர்களின் போரில் சத்துருக்களைத் தாழ்த்துவதும், உலகத்திற்கு இறையாவதும், இன்னும் அரியென்னுங் குதிரையாற் சேவிக்கப் படுவதும், சோமரசம் அருந்தியதாலுண்டாயதுமாகிய உன்னுடைய அக் களிப்பைப் புகழ்கின்றேன் என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २र ३ १ २ ३ १ २ ३ २ ३ २

384. यत्सोममिन्द्र विष्णवि यद्वा घ त्रित आप्त्ये ।

१ २ ३२ ३ १ २ ३ १ २र

यद्वा मरुत्सु मन्दसे समिन्दुभिः ॥ ४ ॥

இருக்கு 8-11-16.

யத்ஸோமமிந்த்³ர விஷ்ணவி யத்³வா க⁴ த்ரித ஆப்த்யே ।

யத்³வா மருத்ஸு மந்த³ஸே ஸமிந்து³பி⁴꞉ ॥

அந்வயம்.

हे इन्द्र!, विष्णवि, यत्, सोमं, यद्वा, आप्त्ये त्रिते, यद्वा, मरुत्सु, मन्दसे, समिन्दुभिः ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்³ர!	இந்திரனே! நீ
विष्णवि	விஷ்ணவி	விஷ்ணு சோமரசமருந்த வந்த விடத்து (பிறருடைய வேள்வியில்)
यत्	யத்	எப்போதும்
सोमं	ஸோமம்	சோமரசம் அருந்துகின்றாய்.
यद्वा	யத்³வா	அல்லது (மற்றும்) எக்காலும்
आप्त्ये त्रिते	ஆப்த்யே த்ரிதே	ஆத்த புத்திரனாகிய திரிதனுடைய வேள்வியில் சோமரசம் அருந்துகின்றாய்.
यद्वा	யத்³வா	அல்லது (எப்போதும்)

मरुत्सु	மருத்ஸு	பிறருடைய வேள்வியில் மருத்துக்கள் சோமரசமருந்த வந்தவிடத்து மருத்துக்களோடுஞ்
मन्दसे	மந்தஸெ	சோமரசம் அருந்திக் களிக்கின்ருய். (அங்ஙனமாயினும்)
समिन्दुभिः	ஸமிந்துபி:	மேம்பட்ட எனது சோமரசத்தாலுங் களிப்படைவாயாக.

சாயண பாடியம்

கண்டம்—4. இருக்கு—4. பருவத ரிஷி.

இந்திரனே! நீ விஷ்ணு சோமரசம் அருந்த வந்தவிடத்து பிறருடைய வேள்வியில் அவ்விஷ்ணுவோடு சோமரசம் அருந்தினை யென்ருலும், அல்லது, ஆப்தனின் புத்திரனுகிய திரிதன், என்னும் இராச ரிஷியாகிய வேள்வித் தலைவனேடு சோமரசம் அருந்தினையென்ருலும், அல்லது, மருத்துக்கள் சோமரசம் அருந்த வந்தவிடத்து (அவர்களுடன்) பிறர் வேள்வியிற் சோமரசம் அருந்திக் களிப்படைந்தனை யென்ருலும், சிறந்த எனது சோமரசத்தாலும் மிகக் களிப்படைவாயாக என்பதாம். (4)

மந்திரம் 5.

२३ १ २३ १ २ ३ १ २ ३ १ २

385. एदु *मधोर्मदिन्तरꣳ सिञ्चाध्वर्यो अन्धसः ।

२उ ३ १ २र ३ १२

एवा हि वीर स्तवते सदावृधः ॥ ५ ॥

ஏது³ மதோ⁴ர்மதி³ந்தரம் ஸிஞ்சாத்⁴வர்யோ அந்த⁴ஸ: ।
ஏவா ஹி வீர ஸ்தவதெ ஸதா³வ்ருத⁴: ॥

அந்வயம்.

हे अध्वर्यो !, मधोः, अन्धसः, मदिन्तरं इत्, आसिञ्च, वीरः, सदावृधः एव, स्तवते हि ॥

பதவுரை.

हे अध्वर्यो !	ஹெ அத்⁴வர்யோ !	வேட்போர்களே! நீவிர்
मधोः	மதோ⁴:	களிப்பைச் செய்யுஞ்
अन्धसः	அந்த⁴ஸ:	சோமக் கொடியின்

* मध्वो, என்பது இருக்கு.

मदिन्तरं इत्	மதிந்தரம் இத	பெருங் களிப்பையே யுண்டாக்கும் ரசத்தை
आसिञ्च	ஆஸிஞ்ச	இந்திரன் பொருட்டுப் பிழிவீர்களாக.
वीरः	வீர:	வல்லுநனும்
सदावृधः एव	ஸதாவ்ருத: ஏவ	எப்போதும் அவிகளால் வளரத்தக்கவனுமாகிய இந்திரனொருவனே
स्तवते हि	ஸ்தவதே ஹி	தோத்திரங்களாற் றுதிக்கப்படுகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—5. விசுவமனு, வையசுவரிஷி.

வேட்போர்காள்! நீவிர் களிப்பைத் தருகின்ற அன்னமாகிய பே கொடியை யிடித்து, பெருங்களிப்பையே யுண்டாக்குகின்ற சோமர… இந்திரன் பொருட்டுப் பிழிவீர்களாக. வல்லோனும், தேவ வுணவுக… (அவியா)ல் எப்போதும் வளர்பவனுமாகிய இந்திரனே, அல்லது. தனது ஆற்றலே வளர்க்கும் இவ்விந்திரனே, தோத்திரங்களாலும், மந்திரங்களாலும் போற்றப்படுகின்றான். உண்மையில் துதிக்கப்பட்ட இந்திரனுக்குச் சோமரசங் கொடுக்கற்பாலதாமாதலின் பிழிவீர்களாக என்பது பொருத்தமாமென்க. (5)

மந்திரம் 6.

२ ३ १ २ ३ १ २ ३ १ २र

386. एन्दुमिन्द्राय सिञ्चत पिबाति सोम्यं मधु ।

१ २र ३ २

प्र राधांꣳसि चोदयते महित्वना ॥ ६ ॥

ஏந்துமிந்த்ராய ஸிஞ்சத பிபாதி ஸோம்யம் மது |

ப்ர ராதாம்ஸி சோதயதே மஹித்வநா ||

அந்வயம்

(हे ऋत्विजः !,) इन्दुं, इन्द्राय, आसिञ्चत, (ततः,) मधु, सोम्यं, पिबाति, महित्वना, राधांसि, प्रचोदयते ॥

பதவுரை.

(हे ऋत्विजः!)	(ஹே ருத்விஜ:!)	வேட்போர்காள்! நீவிர்
इन्दुं	இந்தும்	பொங்குந்தன்மையுள்ள சோமரசத்தை
इन्द्राय	இந்த்ராய	இந்திரன் பொருட்டு
आसिञ्चत	ஆஸிஞ்சத	ஒருமையுடன் பிழிந்தெடுப்பீர்களாக.
(ततः)	(தத:)	(பின்னர்)
मधु	மது	களிப்பைத்தரும்
सोम्यं	ஸோம்யம்	சோமத்தின் இரசத்தை
पिबाति	பிபாதி	இந்திரன் அருந்துவானாக. அருந்தி
त्वना	மஹித்வநா	தனது மகிமையால்
	ஜராயாம்ஸி	துதிப்போர்க்கு அன்னங்களை
	வ்ருத்யாதயதே	மிகுதியாகக் கொடுப்பானாக.

சாயண பாடியம்

காண்டம்—4. இருக்கு—6. விசுவமனு வையசுவ ரிஷி.

துதிப்போர்காள்! நீவிர் பொங்குந்தன்மையுள்ள சோமரசத்தை இந்திரன்பொருட்டு ஒருமுகப்பட்டு பிழிந்தெடுப்பீர்களாக என்பதாம். பின்னர், சோமமாகியதும், களிப்பைத் தருவதுமாகிய இரசத்தை இந்திரன் அருந்துவானாக. அருந்தி அவ்விந்திரன் தனது மகிமையால் தனைத் துதிப்போர்கட்கு அன்னங்களை இனிது கொடுப்பானாக என்பதாம். (6)

மந்திரம் 7.

२ ३ २ ३   १ २ ३ १ २ ३   २ ३ १२

387. एतोन्विन्द्रꣳ स्तवाम सखाय स्तोम्यं नरम् ।

३ २   २र   ३ २उ ३   २

कृष्टीर्यो विश्वा अभ्यस्त्येक इत् ॥ ७ ॥

ஏதோந்விந்த்ரம் ஸ்தவாம ஸகாய ஸ்தோம்யம் நரம் ।

க்ருஷ்டீர்யோ விஶ்வா அப்யஸ்த்யேக இத் ॥

அந்வயம்.

हे सखायः!, नु, एत उ, यः, एक इत्, विश्वाः, कृष्टीः, अभ्यस्ति, स्तोम्यं, नरं, (तं) इन्द्रं, स्तवाम ॥

பதவுரை.

हे सखायः!	ஹெ ஸகாயஃ!	மித்திரர்போன்ற வேட்போர்காள்! நீவிர்
नु	நு	விரைவிலே
एत उ	ஏத உ	வருவீர்களாக.
यः	யஃ	எவ்விந்திரன்
एक इत्	ஏக இத்	ஒருவனுகவே
विश्वाः	விஶ்வாஃ	எல்லாப்
कृष्टीः	க்ருஷ்டீஃ	பகைஞர் சேனைகளையும்
अभ्यस्ति	அப்யஸ்தி	அடக்குகின்றுனே,
स्तोम्यं	ஸ்தோம்யம்	துதிக்கத்தக்கவனும்
नरं	நரம்	யாவர்க்கும் தலைவனுமாகிய
(तं) इन्द्रं	(தம்) இந்த்ரம்	அவ்விந்திரனைத்
स्तवाम	ஸ்தவாம	(யாம்) துதிப்போமாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—7. விசுவமனு வையசுவரிஷி.

ஒத்த வறிவுள்ள நண்பர்களான வேட்போர்காள்! நீவிர் விரைவில் வருவீர்களாக. எதன் பொருட்டெனின்? அது கூறப்படுகின்றது:—துதிக்கத்தக்கோனும், எல்லாவற்றையுஞ் செலுத்துவோனுமாகிய அவ்விந்திரனைத் துதித்தற்பொருட்டு. யாதொரு இந்திரன் சகாயமற்றோனுகவே எல்லாச் சத்துரு சேனைகளையுந் தாழ்த்துகின்றுனே அவனைத் துதிப்போம் என அந்வயித்துக்கொள்க. (7)

மந்திரம் 8.

१ २ ३ १२ ३ १ २ ३ २ ३२

388. इन्द्राय साम गायत विप्राय बृहते बृहत् ।

३ १२ ३१ २ ३ १ २

ब्रह्मकृते विपश्चिते पनस्यवे ॥ ८ ॥

இருக்கு 8-98-1.

இந்த்ராய ஸாம காயத விப்ராய ப்ருஹதெ ப்ருஹத் ।

ப்ரஹ்ம க்ருதெ விபஶ்சிதெ பநஸ்யவெ ॥

அந்வயம்.

(हे उद्गातारः !,) विप्राय, बृहते, ब्रह्मकृते, विपश्चिते, पनस्यवे, इन्द्राय, बृहत् साम, गायत ॥

பதவுரை.

(हे उद्गातारः !)	(ஹே உத்₃கா₃தார: !)	சாமமறையாகிய கீதம் பாடுவோர்களே ! நீவிர்
विप्राय	விப்ராய	கூரிய வுணர்வுடையானும்
बृहते	ப்₃ருஹதே	பெரியோனும்
ब्रह्मकृते	ப்₃ரஹ்மக்ருதே	அன்னத்திற்கிறைவனும்
विपश्चिते	விபஶ்சிதே	அறிஞனும்
पनस्यवे	பநஸ்யவே	துதியை விரும்புவோனுமாகிய
इन्द्राय	இந்த்₃ராய	இந்திரன் பொருட்டுப்
बृहत् साम	ப்₃ருஹத் ஸாம	பிருகத் என்னுஞ் சாமகீதத்தைப்
गायत	கா₃யத	பாடுவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—8. நிருமேத ரிஷி.

சாமகீதம் பாடுவோர்களே ! நீவிர் நுண்ணறிவாளனும், பெரியோனும், அன்னத்திற் கிறைவனும், அறிஞனும், தோத்திரத்தை யிச்சிப்போனுமாகிய இந்திரன்பொருட்டு பிருகத் என்னுஞ் சாமகீதத்தைப் பாடுவீர்களாக என்பதாம். (8)

மந்திரம் 9.

२उ ३ २३१२ ३ २३ १ २
389. य एक इद्विदयते वसु मर्त्ताय दाशुषे ।
१ २ ३ १ २ ३ १ २ ३२
ईशानो अप्रतिष्कुत इन्द्रो अङ्ग ॥ ९ ॥

இருக்கு 1-84-7.

ய ஏக இத்₃வித₃யதே வஸு மர்த்தாய தா₃ஶுஷே ।
ஈஶாநோ அப்ரதிஷ்குத இந்த்₃ரோ அங்க₃ ॥

அந்வயம்.

यः, एकः इत्, दाशुषे, मर्त्ताय, वसु, विदयते, अप्रतिष्कुतः, इन्द्रः, अङ्ग, ईशानः ॥

பதவுரை.

यः	ய:	யாதொரு இந்திரன்
एकः इत्	ஏக: இத்	ஒருவனாகவே
दाशुषे	தாஶுஷே	அவி கொடுக்கின்ற
मर्त्ताय	மர்த்தாய	மனிதன் பொருட்டுத்
वसु	வஸு	தனத்தை
विदयते	விதயதே	விசேடமாய்க் கொடுக்கின்றானோ,
अप्रतिष्कुतः	அப்ரதிஷ்குத:	(தனக்கு) இடையூறு விளைக்கத் தக்க வார்த்தையற்ற,
इन्द्रः	இந்த்ர:	(அந்த) இந்திரன்
अङ्ग	அங்க	விரைவில்
ईशानः	ஈஶாந:	உலகமெல்லாவற்றிற்கும் இறைவனாகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—9. கோதம ரிஷி.

யாதொரு இந்திரன் தனித்தே அவிகொடுத்த மனிதன் பொருட்டு (வேள்வித் தலைவன் பொருட்டுத்) தனத்தை விசேடமாய்க் கொடுக்கின்றானோ, பிறர்களாற் பேசும் இடையூறு வார்த்தையுமற்ற அவ்விந்திரன் விரைவில் உலகனைத்திற்கும் இறைவனாகின்றான் என்பதாம். (9)

மந்திரம் 10.

१ २ ३ १ २ ३ १ २र ३ १ २

390. सखाय आशिषामहे ब्रह्मेन्द्राय वज्रिणे ।

३२ ३ २ १२ ३ १२

स्तुष ऊ षु वो नृतमाय धृष्णवे ॥ १० ॥

இருக்கு 8-24-1.

ஸகாய ஆஶிஷாமஹே ப்ரஹ்மேந்த்ராய வஜ்ரிணே ।

ஸ்துஷ ஊ ஷு வோ ந்ருதமாய த்ருஷ்ணவே ॥

அந்வயம்.

हे सखायः !, वज्रिणे, इन्द्राय, ब्रह्म, आशिषामहे, वः, नृतमाय, धृष्णवे, सुस्तुषे ॥

பதவுரை.

हे सखायः !	𑌹𑍇 𑌸𑌖𑌾𑌯𑌃 !	மித்திரர்களான வேட்போர்களே! நாம்
वज्रिणे	𑌵𑌜𑍍𑌰𑌿𑌣𑍇	வச்சிராயுதந் தாங்கிய
इन्द्राय	𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯	இந்திரன் பொருட்டு
ब्रह्म	𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	தோத்திரத்தை
आशिषामहे	𑌆𑌶𑌿𑌷𑌾𑌮𑌹𑍇	சொல்வோமாக.
वः	𑌵𑌃	(மற்றும்) உங்களை முன்னிட்டு,
नृतमाय	𑌨𑍃𑌤𑌮𑌾𑌯	எல்லாவற்றையும் நன்கு செலுத்துவோனும்
धृष्णवे	𑌧𑍃𑌷𑍍𑌣𑌵𑍇	பகைஞர்கட்குப் பயங்கொடுப்போனுமாகிய இந்திரன்பொருட்டு
सुस्तुषे	𑌸𑍁𑌷𑍍𑌟𑍁𑌷𑍇	(யானும்) தோத்திரம் பண்ணுகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—10. விசுவமனு ரிஷி.

நண்பர்களான வேட்போர்களே! கையில் வச்சிரந்தாங்கிய இந்திரன் பொருட்டு நாம் தோத்திரஞ் சொல்வோமாக. அல்லது, எங்களாலீயப் பட்ட அவியாகிய அன்னத்தைப் பிரார்த்திக்கின்றோம். உங்களனைவரையும் முன்னிட்டு, எல்லாரையுஞ் செலுத்துவோனும். அல்லது, போரில் படைக் கலங்களை நியமிப்போனும், எல்லாப் பகைஞர்களையும் அச்சமுறுத்துவோனுமாகிய, அவ் விந்திரன்பொருட்டு யானே இனிது துதிக்கின்றேன் என்பதாம். (10)

நான்காவது கண்டம்

முற்றும்.

ஐந்தாவது கண்டம்

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—5.

எட்டு மந்திரங்களாலானது.

மந்திரம் 1.

३ १ २र ३ १२ ३ २ ३ १ २
391. गृणे तदिन्द्र ते शव * उपमां देवतातये ।
१ २र ३१ २र
यद्धंसि वृत्रमोजसा शचीपते ॥ १ ॥

இருக்கு 8-62-8.

க்ருணே ததிந்த்ர தே ஶவ உபமாம் தேவதாதயே
யத்தம்ஸி வ்ருத்ரமோஜஸா ஶசீபதே ॥

அந்வயம்.

हे इन्द्र!, ते, तत् शवः, उपमां, देवतातये, गृणे यत्, शचीपते!, ओजसा, वृत्रं, हंसि ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்ர!	இந்திரனே!
ते	தே	உன்னுடைய
तत् शवः	தத் ஶவঃ	கீர்த்தி வாய்ந்த ஆற்றலுக்குத்
उपमां	உபமாம்	தக்கவாறு
देवतातये	தேவதாதயே	வேள்வித் தலைவன் அல்லது, வேள்வ தம்
गृणे	க்ருணே	(யான்) துதிக்கின்றேன்
यत्	யத்	யாதினாலெனின் ?
शचीपते!	ஶசீபதே !	இந்திராணி கொழுந ! நீ
ओजसा	ஓஜஸா	வலியால்
वृत्रं	வ்ருத்ரம்	விருத்திரனை
हंसि	ஹம்ஸி	நாசஞ் செய்தனை. (ஆதலி

* उपमं, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

ண்டம்—5. இருக்கு—1. பிரகாத ரிஷி.

இந்திரனே! உன்னுடைய ஆற்றலுக்குத் தக்கவாறு, வேள்வியின் பொருட்டு, அல்லது, வேள்வித் தலைவன் பொருட்டுத் துதிக்கின்றேன். ாதுபற்றியெனின்? இந்திர! நீ விருத்திரனை ஆற்றலாற் கொன்றனை ாதலின். (உனது ஆற்றலைத் தோத்திரம் பண்ணுகின்றேன் என இயைத் துக்கொள்க.) (1)

மந்திரம் 2.

२ ३ १ २र ३ २३ १ २ ३ १२
392. यस्य त्यच्छम्बरं मदे दिवोदासाय रन्धयन् ।
३ १ २र ३ १ २र
अयं स सोम इन्द्र ते सुतः पिब ॥ २ ॥

இருக்கு 6-43-1.

யஸ்ய த்யச்ச2ம்ப3ரம் மதே3 தி3வோதா3ஸாய ரந்த4யந் ।
அயம் ஸ ஸோம இந்த்3ர தே ஸுத: பிப3 ॥

அந்வயம்.

हे इन्द्र!, यस्य, मदे, त्यत्, शम्बरं, दिवोदासाय, रन्धयन्, सः, अयं, सोमः, ते, सुतः, पिब ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹே இந்த்3ர!	இந்திரனே! நீ
यस्य	யஸ்ய	எச்சோமரசத்தினுடைய
	மதே3	களிப்பில்
	த்யத்	அந்தச்
	ஶம்ப3ரம்	சம்பராசுரனை
	தி3வோதா3ஸாய	திவோதாசன் என்னும் அன்பன் பொருட்டுக்
	ரந்த4யந்	கொன்றனையோ,
	ஸ:	அத்தகைய
(सो)मः	அயம் ஸோம:	இச்சோமரசம்
	தே	நின் பொருட்டுக்
	ஸுத:	தேடப்பட்டிருக்கின்றது
	பிப3	(ஆதலின்) அருந்துவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—2. பரத்துவாச ரிஷி.

இந்திர ! யாதொரு நீ சோமக் கொடியின் இரசத்தைப் பருகியதால் உண்டாகிய களிப்பினுற் சம்பரன் என்னும் அசுரனைக் கொன்றனையோ, அத்தகைய இச்சோமரசம் நின் பொருட்டுத் தேடப்பட்டிருத்தலினுல் (அதை) அருந்துவாயாக என்பதாம். (2)

மந்திரம் 3.

१ २ ३ १ २
393. एन्द्र नो गधि प्रिय सत्राजिदगोह्य ।
१ २उ ३ १२ ३ १ २र ३
गिरिर्न विश्वतः पृथुः पतिर्दिवः ॥ ३ ॥

இருக்கு 8-897-4

ஏந்த்ர நோ கதி ப்ரிய ஸத்ராஜிதகோஹ்ய ।
கிரிர்ந விஶ்வத: ப்ருது: பதிர்திவ: ॥

அந்வயம்.

प्रिय !, सत्राजित्, अगोह्य, इन्द्र !, गिरिः न, विश्वतः, पृथुः, दिवः, पतिः, नः, आगधि ॥

பதவுரை.

प्रिय !	ப்ரிய !	அனைவருக்கும் அன்பனும்
सत्राजित् !	ஸத்ராஜித் !	பகைஞர்களை வெல்வோனும்
अगोह्य !	அகோஹ்ய !	நிந்தை யற்றோனுமாகிய
इन्द्र !	இந்த்ர !	இந்திர !
गिरिः न	கிரி: ந	மலையைப் போன்று
विश्वतः	விஶ்வத:	எல்லா வகையானும்
पृथुः	ப்ருது:	பெரியோனும்
दिवः	திவ:	சுவர்க்கத்திற்கு
पतिः	பதி:	இறைவனுமாகிய
नः	ந:	எங்களிடத்து
आगधि	ஆகதி	வருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—3. நிருமேத ரிஷி.

அனைவர்கட்கும் அன்ப! பெரும்பகைஞர்களை வெல்வோய்! ஒருவராலும் பழிக்க வொண்ணாத இந்திர! மலைபோன்று எல்லாவற்றினின்றும் பெரியோனும், சுவர்க்கத்திற்கு இறைவனுமாகிய நீ எங்கணிமித்தம் வருவாயாக என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २ ३ १२ ३ ३ २ १ २
394. य इन्द्र सोमपातमो मदः शविष्ठ चेतति ।
२ ३ २ ३ २ २ ३ १ २
येना हंसि न्या ३ त्रिणं तमीमहे ॥ ४ ॥

இருக்கு 8-12-1.

𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸𑍋𑌮𑌪𑌾𑌤𑌮𑍋 𑌮𑌦𑌃 𑌶𑌵𑌿𑌷𑍍𑌠 𑌚𑍇𑌤𑌤𑌿 ।
𑌯𑍇𑌨𑌾 𑌹𑌂𑌸𑌿 𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌰𑌿𑌣𑌂 𑌤𑌮𑍀𑌮𑌹𑍇 ॥

அந்வயம்.

हे इन्द्र !, यः, सोमपातमः, शविष्ठ, मदः, चेतति, येन, अत्रिणं, निहंसि, तं, ईमहे ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே!
यः	𑌯𑌃	யாதொரு நீ
सोमपातमः	𑌸𑍋𑌮𑌪𑌾𑌤𑌮𑌃	சோமரசத்தை மிக அருந்துகின்றுயோ,
शविष्ठ !	𑌶𑌵𑌿𑌷𑍍𑌠 !	ஆற்றல்மிக்கோய்! (அத்தன்மைய உனது)
मदः	𑌮𑌦𑌃	களிப்பானது
चेतति	𑌚𑍇𑌤𑌤𑌿	விருத்திரனைக் கொல்லல் முதலிய காரியத்தை புணர்கின்றது.
येन	𑌯𑍇𑌨	எம்மதத்தா (களிப்பா)ல்
अत्रिणं	𑌅𑌤𑍍𑌰𑌿𑌣𑌂	இராக்கதர்களை
निहंसि	𑌨𑌿𑌹𑌂𑌸𑌿	முழுதுங் கொல்கின்றனையோ,
तं	𑌤𑌂	அக்களிப்பைப்
ईमहे	𑌈𑌮𑌹𑍇	போற்றுகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—4. பருவத ரிஷி.

இந்திரனே! யாதொரு நீ மிகச் சோமரசம் அருந்துபவனாகின்றாய். வலி மிக்க இத்தன்மையனான இந்திரனே! சோமரசம் அருந்தலாலுண்டான உனது மதமானது (களிப்பானது) விருத்திரனைக் கொல்லுதன் முதலிய காரியத்தைச் செய்ய நன்குணர்கின்றது. இதை ஒரு வாக்கியமாகவே கொண்டு, வலி மிக்க இந்திரனே! நீ சோமரசத்தாற் களிப்புடையுந் தக்கோனாகயிருந்துகொண்டு அறிகின்றாய் எனினுமாம்.

ஈண்டு, முன்னர் உணர்கின்றது என்னுந் தன்மைச்சொல் இப்போது உணர்கின்றாய், என முன்னிலைச் சொல்லாய்த் திரிந்தது. இத்தன்மைய இந்திர! நீ எச் சோமரச மருந்தலாலுண்டாகிய களிப்பால் உயிர்களைத் தின்னும் இராக்கதரை மிகத் தாழ்ந்தவர்களாய்க் கேட்டை யடையுமாறு செய்தனையோ, அச் சோமரசம் அருந்தலாலுண்டாகிய மதமானது (களிப்பானது) விருத்திரனைக் கொல்லுதன் முதலிய காரியத்தை(ச் செய்ய) நன்குணர்கின்றது. அக் களிப்பை, அல்லது, அத்தன்மைய களிப்பையுடைய நின்னை வேண்டுகின்றேன் என்பதாம். (4)

குறிப்பு.—ஈண்டு ஈமஹே, என்னும் மூலபதத்திற்கு இரத்தற்றொழிலாம் நிகண்டும் அங்ஙனங் கூறுகின்றது. அல்லது அடைகின்றேன் என்பது பொருள். அதாவது தோத்திரங்களாற் போற்றுகின்றேன் என்பதாம்.

மந்திரம் 5.

३ १ २र ३ २उ १ २ ३ १ २ ३१२

395. *तुचे तुनाय नो तत्सु द्राघीय आयुर्जीवसे ।

१ २ ३ १ २

आदित्यासः सुमहसः कृणोतन ॥ ५ ॥

இருக்கு 8-24-28.

துசெ துநாய நொ தத்ஸு த்ராகீய ஆயுர்ஜீவஸெ ।

ஆதித்யாஸ꞉ ஸுமஹஸ꞉ க்ருணொதந ॥

அந்வயம்.

हे सुमहसः आदित्यासः !, नः तुचे, तुनाय, जीवसे, द्राघीयः, तत् आयुः, सुकृणोतन ॥

---

* तुचेतनाय, என்பது இருக்க.

பதவுரை.

सुमहस:	ஸுமஹஸ:	பேரொளியையுடைய அதிதி புத்திரர்களான
हे आदित्यास:!	ஹே ஆதித்யாஸ:!	தேவர்காள்!
न: सुचे	ந: ஸுசே	எனது புத்திரனுக்கும்
तुनाय	தூநாய	பௌத்திரனுக்கும்
जीवसे	ஜீவஸே	வாழ்தற்பொருட்டு
द्राघीय:	த்ராகீய:	நெடுநாளிருக்கத்தக்க
तत् आयुः	தத் ஆயு:	அவ் வாயுளை
सुकृणोतन	ஸுக்ருணோதந	இனிது கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—5. இரிமீடி ரிஷி.

அழகிய பிரகாசங்களையுடைய அதிதி புத்திரர்களென்னுந் தேவர்காள்! நீவிர் எங்களுடைய புத்திரனுக்கும், பௌத்திரனுக்கும், இனிது வாழ்வதற்கு வேண்டிய நீண்ட ஆயுளை நன்கு விருத்தி செய்வீர்களாக என்பதாம்.

ஈண்டு 'தூநாய' என்பது பௌத்திரன்பொருட்டு என்னும் பொருளுடையது. மற்றும், தகாரத்திலேறிய உகாரம், அசை. இதுபற்றியே 'தநாய' என்றோதுகின்றனர் இருக்குமறையாளர்.

மந்திரம் 6.

२ ३ १ २र ३ १२ ३ १२
396. **वेत्था हि निर्ऋतीनां वज्रहस्त परिवृजम् ।**
१ २ ३ १ २३ १ २
अहरहः शुन्ध्युः परिपदामिव ॥ ६ ॥

இருக்கு 4-24-28.

வேத்தா ஹி நிர்ருதீநாம் வஜ்ரஹஸ்த பரிவ்ருஜம் ।
அஹரஹ: ஶுந்த்யு: பரிபதாமிவ ॥

அந்வயம்.

हे वज्रहस्त !, निर्ऋतीनां, परिवृजं, वेत्था हि, अहरहः, शुन्ध्युः, परिपदां इव ॥

பதவுரை.

हे वज्रहस्त !	ஹே வஜ்ரஹஸ்த!	வச்சிராயுதந்தாங்கிய கையோய்!
निर्ऋतीनां	நிர்ருதீநாம்	இடையூறு விளைவிக்கும் இராக்கதர்களை
परिवृजं	பரிவ்ருஜம்	வெருட்டுவதற்கு

वेत्था हि	வெத்தா ஹி	நீயே யுணர்ந்தோனுகின்ருய். எதுபோல் வெருட்ட வெனின்?
अहरहः	அஹரஹ:	நாடோறும்
शुन्ध्युः	ஶுந்த்யு:	இரவி யெழுந்தபோது
परिपदां इव	பரிபதாம் இவ	உயிர்கள் தமதிடத்தை நீங்கி நாற்புறத்தும் ஓடுவன போன்று,

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—6. விசுவமனு ரிஷி.

இப்போது இருடியானவர் இந்திரனைக் கூப்பிட்டுக் சொல்கின்ருர்:—வச்சிராயுதமேந்திய கரத்தோய்! நன்புறுத்தும் இராக்கதர்களை ஓட்டுவதற்கு நீயே யுணர்கின்ருய் (நினக்கே தெரியும்.) அதிலுவமை:—சூரியனெழுந்தபோது நாற்புறத்துஞ் சென்றடைகின்ற வேள்வித் தலைவர்கள் போன்றெனல். அல்லது, நாற்புறத்தும் பறந்தோடும் பறைவைகள் போன்றெனல். பறவைகள் தத்தமது இடத்தை நாடோறும் விடுவதற்கு உணர்கின்றனபோன்று என்னும் இந்த உவமை ஒத்ததன்மையது.

ஈண்டு, இரவி யெழுந்தவுடன் பறவைகள் தத்தமது இடங்களை விட்டு விட்டு எங்குஞ் செல்கின்றன. உண்மையில் இவ்வாறே இந்திரனுகிய நீ தனதாற்றலோடு விளங்குமிடத்துப் பகைஞர்கள் தமது நகர்களை விடுத்து ஓடுகின்ருர்கள் என்பது திரண்டபொருள். (6)

ஹி என்பது தேற்றம், சுந்தியு:, என்பது சூரியன்.

மந்திரம் 7.

१ २र ३२३ २ ३१२ ३ २

397. अपामीवामप स्निधमपसेधत दुर्मतिम् ।

१ २ ३ १२ ३ १ ३

आदित्यासो युयोतना नो अंहसः ॥ ७ ॥

இருக்கு 8-18-10.

அபாமீவாமப ஸ்ரிதமபஸேதத துர்மதிம் ।

ஆதித்யாஸோ யுயோதநா நோ அம்ஹஸ: ॥

அந்வயம்.

हे आदित्यासः !, अमीवां, अपसेधत, स्रिधं, अप, दुर्मतिं, अप, नः, अंहसः, युयोतन ॥

பதவுரை.

हे आदित्यास:	ஹே ஆதித்யாஸ꞉!	அதிதியின் புத்திரார்காள்! நீவிர்
असीवां	அஶீவாம்	நோய்களை
अपसेधत	அபஸேத₄த	எம்மிடத்தினின்று விலக்குவீர்களாக.
स्रिधं	ஸ்ரித₄ம்	துன்பந் தரும் பகைஞர்களையும்
अप	அப	எம்மிடத்தினின்று வெருட்டிவிடுவீர்களாக.
दुर्मतिं	து₃ர்மதிம்	எமைப்பீடிக்க நினைக்கும் புத்தியுடையார்களையும்
अप	அப	எம்மிடத்தினின்றும் ஒதுக்குவீர்களாக.
न:	ந꞉	(மற்றும்) எங்களை
अंहस:	அம்ஹஸ꞉	பாவத்தினின்றும்
युयोतन	யுயோதந	வேறுபடுத்துவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—7. இரிமீடிரிஷி.

அதிதி புத்திரர்களான ஆதித்தியர்களே! நீவிர், நோயை எம்மிடத்திலிருந்து நீக்குவீர்களாக. பீடைதரும் பகைஞரையும் எம்மிடத்தினின்றும் வெருட்டி விடுவீர்களாக. என்னைத் துன்புறுத்தக் கருதுகின்ற மதியுடையார்களையும் விலக்குவீர்களாக. அன்றியும், ஆதித்தியர்களே! எங்களைப் பாவத்தினின்றும் விடுபட்டோர்களாய்ச் செய்வீர்களாக என்பதாம். (7)

மந்திரம் 8.

२ ३ १ २ ३ १ २ ३ १ ३ १२ ३१ २
398. पिबा सोममिन्द्र मन्दतु त्वाऽयं ते सुषाव हर्यश्वाद्रिः ।
३ २ ३१ २ १२ ३ १ २
सोतुर्बाहुभ्यां सुयतो नार्वा ॥ ८ ॥

இருக்கு 7-22-1.

பிபா ஸோமமிந்த்₃ர மந்த₃து த்வா(அ)யம் தே ஸுஷாவ ஹர்யஶ்வாத்₃ரி꞉ ।
ஸோதுர்பா₃ஹுப்₄யாம் ஸுயதோ நார்வா ॥

அங்வயம்.

हे इन्द्र !, सोमं, पिब, त्वा, मन्दतु, हर्यश्व, सोतुः, बाहुभ्यां, अर्वा न, सुयतः, अयं, अद्रिः, ते, सुषाव ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! நீ
सोमं	ஸோமம்	சோமரசத்தை
पिब	பிப	அருந்துவாயாக. அச் சோமரசம்
त्वा	த்வா	உன்னைக்
मन्दतु	மந்தது	களிப்புடையவனுக்குக.
हर्यश्व !	ஹர்யஶ்வ !	அரியெனும் பரியையுடைய இந்திர !
सोतुः	ஸோது:	சோமரச மெடுப்போனுடைய
बाहुभ्यां	பாஹுப்யாம்	கை யிரண்டுகளாலும்
अर्वां न	அர்வா ந	குதிரையைப் பற்றுமாறு
सुयत:	ஸுயத:	இனிது கைப்பற்றிய
अयं अद्रिः	அயம் அத்ரி:	இக் கல்லானது
ते	தே	நின்பொருட்டுச்
सुषाव	ஸுஷாவ	சோமத்தைப் பிழிந்தெடுத்தது

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—8. வசிட்ட ரிஷி. சந்தம் விராட்.

இந்திரனே ! நீ சோமரசத்தை யருந்துவாயாக, அச் சோமரசம் நின்னைக் களிப்புடையோனுக்குக. அரியெனும் பரியுடையோய் ! சோமரசம் பிழிவோனுடைய கைகளால் இரண்டு கடிவாளத்தின் கயிற்றாற் குதிரையைப் பிடித்தல் போன்று நன்கு எடுக்கப்பெற்ற கல்லானது நின்பொருட்டு இச் சோமத்தைப் பிழிந்தெடுத்தது. (8)

ஐந்தாவது கண்டம்.

முற்றும்.

ஆறுவது கண்டம்.

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—6.

பத்து மந்திரங்களாலானது.

தேவதை 1, 2, 4, 5, 7, 10, இந்திரன். 3, 6, மருத்துக்கள். ககுப் சந்தம். ரிஷபம் சுரம்.

மந்திரம் 1.

३ २ ३ १ २२ ३ १ २ ३ १ २

399. अभ्रातृव्यो अना त्वमनापिरिन्द्र जनुषा सनादसि ।

३१ २ ३ १ २

युधेदापित्वमिच्छसे ॥ १ ॥

இருக்கு 8-21-13.

அப்ராத்ருவ்யோ அநா த்வமநாபிரிந்த்ர ஜநுஷா ஸநாதஸி |
யுதேதாபித்வமிச்சஸே ||

அந்வயம்.

हे इन्द्र !, त्वं, जनुषा, अभ्रातृव्यः असि, अना, सनात्, अनापिः, आपित्वं इच्छसे, युधेत् ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
त्वं	த்வம்	நீ
जनुषा	ஜநுஷா	பிறப்பினின்றே
अभ्रातृव्यः असि	அப்ராத்ருவ்ய: அஸி	பகையை யொழித்தோனா யிருக்கின்றாய், (மற்றும்)
अना	அநா	ஏவுகின்றவன் இலாதோன்.
सनात्	ஸநாத்	நீண்டகாலத்தி லிருந்தே
अनापिः	அநாபி:	சுற்றங்களற்றோன். நீ
आपित्वं इच्छसे	ஆபித்வம் இச்சஸே	யாதேனுமோர் சுற்றத்தை விரும்புவையேல், அப்போது
युधेत्	யுதேத்	போராடித் துதிக்கின்றவர்கட்கு நண்பனாகின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—1. சௌபரி ரிஷி. ககுப், சந்தம்.

இந்திர! நீ பிறப்புத் தொட்டே சத்துரு வொழிந்தோனும், நியமிப்போனற்றோனும், சுற்றமற்றோனுமாவாய். அதாவது நெடுங்காலத்தி லிருந்தே பகை முதலியவைக ளற்றோனா யிருக்கின்றாய் என்பதாம். நீ சுற்றமாந் தன்மையை விரும்புங்கால் அங்குப் போர்செய்தே துதிப்போர் கட்கு நண்பனாகின்றாய் என்பதாம். (1)

மந்திரம் 2.

१ २ ३१ २ ३ १ २र ३ २ ३ १२
400. यो न इदमिदं पुरा प्रवस्य आनिनाय तमु वस्तुषे ।
१ २ ३ १ २ ३१२
सखाय इन्द्रमूतये ॥ २ ॥

இருக்கு 8-21-1.

யொ ந இத³மித³ம் பு⁴ரா ப்ரவஸ்ய ஆநிநாய தமு வஸ்துஷெ ।
ஸகா²ய இந்த்³ரமூதயெ ॥

அந்வயம்.

सखायः, हे ऋत्विजः यजमानाः!, यः, पुरा, इदं इदं, वस्यः, नः, प्राणिनाय, तमु इन्द्रं, वः, ऊतये, स्तुषे ॥

பதவுரை.

सखायः	ஸகா²ய:	ஒத்த வறிவுடைய
हे ऋत्विजः!	ஹே ருத்விஜ:!	வேட்போர்காள்!
यजमानाः?	யஜமாநா:!	தலைவர்காள்!
यः	ய:	எவ் விந்திரன்
पुरा	பு⁴ரா	முன்பு
इदं इदं	இத³ம் இத³ம்	இந்த
वस्यः	வஸ்ய:	மேம்பட்ட தனத்தை
नः	ந:	எமக்கு
प्राणिनाय	ப்ராணிநாய	மிகுதியாய்க் கொடுத்தானோ, (தனங்கொடுக்கின்ற)
तमु इन्द्रं	தமு இந்த்³ரம்	அவ் விந்திரனை
वः	வ:	உங்கட்குக் (தனங் கிடைப்பதற்கும்.)

ऊतये	ஊதயெ	(உங்களைக்) காப்பாற்றுதற் பொருட்டுந்
स्तुषे	ஸ்துஷெ	துதிக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—1. இருக்கு—8. சௌபரிஷி.

ஒத்த மதியுள்ள வேட்போர்காள்! தலைவர்காள்! எவ் விந்திரன் முன்னர், காணற்பாலதாந் தன்மையா லிருக்கப்பட்ட சிறந்த தனங்களை எங்கட்கு நன்கு கொடுத்தனனோ, தனத்திற் கிறைவனாகிய அவ் விந்திரனை உங்கட்குத் தனங் கிடைக்குமாறும், (உங்களைப்) பாதுகாக்கும் பொருட்டும், சௌபரி யென்னும் யான் துதிக்கின்றேன் என்பதாம். (2)

மந்திரம் 3.

१२ ३ १ २ ३ १ २ ३ १२

401. आगन्ता मा रिषण्यत प्रस्थावानो मापस्थात समन्यवः ।

३ १ २

*दृढा चिद्यमयिष्णवः ॥ ३ ॥

இருக்கு 8-20-1.

ஆமந்தா மா ரிஷண்யத ப்ரஸ்தாவாநோ மாபஸ்தாத ஸமந்யவ: ।
த்ருடா சித்யமயிஷ்ணவ: ॥

அந்வயம்.

प्रस्थावानः, आगन्त, मा रिषण्यत, समन्यवः, दृढाचित्, यमयिष्णवः, मा अपस्थात ॥

பதவுரை.

प्रस्थावानः !	ப்ரஸ்தாவாந: !	மிகச் செல்கின்றவர்களான வாயுக்களென்னும் மருத்துக்களே! நீவிர்
आगन्त	ஆமந்த	எங்களிடத்திற்கு வருவீர்களாக.
मा रिषण्यत	மா ரிஷண்யத	வாராமையால் வருந்துன்பத்தைத் தாராதீர்கள்.
समन्यवः !	ஸமந்யவ: !	ஒத்த பிரகாசமுள்ளவர்களே!
दृढाचित्	த்ருடாசித்	வலிய மலைகள் முதலியவைகளையும்

* स्थिराचिन्नमयिष्णवः, என்பது இருக்கு.

यमयिष्णवः !	𑌯𑌮𑌯𑌿𑌷𑍍𑌣𑌵𑌃 !	செலுத்துஞ் சீலமுள்ள மருத்துக்காள் ! விநீர்
मापस्थात	𑌮𑌾𑌪𑌸𑍍𑌥𑌾𑌤	எங்களை விடுத்துப் பிறரிடத்தில் இருக்காதீர்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—3. சௌபரி ரிஷி.

வேகமாய்ச் செல்லுஞ் சீலமுள்ள வாயு தேவதைகாள்! நீவிர் வருவீர்களாக. வாராமையால் எங்களைத் துன்புறுத்தாதீர்கள். ஒளிநிறைந்த வொளியுடையோர்களே! அல்லது, ஒத்த கோபமுடையார்களே! மிகவலிவுடைய மலைகளையுஞ் செலுத்துஞ் சீலர்களே! எங்களிடத்தினின்றும் வேறிடத்தில் இராதீர்கள். அதாவது எங்களிடத்திலேயே இருப்பீர்களாக என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २३२उ ३१ २ ३ १२३ १२
402. **आयाह्ययमिन्दवेऽश्वपते गोपत उर्वरापते ।**
१ २
सोमꣳ सोमपते पिब ॥ ४ ॥

இருக்கு 8-21-3.

𑌆𑌯𑌾𑌹𑍍𑌯𑌯𑌮𑌿𑌨𑍍𑌦𑌵𑍇𑌽𑌶𑍍𑌵𑌪𑌤𑍇 𑌗𑍋𑌪𑌤 𑌉𑌰𑍍𑌵𑌰𑌾𑌪𑌤𑍇 ।
𑌸𑍋𑌮𑌂 𑌸𑍋𑌮𑌪𑌤𑍇 𑌪𑌿𑌬 ॥

அந்வயம்.

हे अश्वपते !, गोपते !, उर्वरापते !, इन्दवे !, अयं, आयाहि, सोमपते !, सोमं पिब ॥

பதவுரை.

हे अश्वपते !	𑌹𑍇 𑌅𑌶𑍍𑌵𑌪𑌤𑍇 !	பரிகட்குப் பதியே !
गोपते !	𑌗𑍋𑌪𑌤𑍇 !	கோக்கட்குக் கோனே !
उर्वरापते !	𑌉𑌰𑍍𑌵𑌰𑌾𑌪𑌤𑍇 !	பயிர்நிறைந்த நிலத்திற்குப் பரனே !
इन्दवे !	𑌇𑌨𑍍𑌦𑌵𑍇 !	பிரகாசமுள்ள இந்திர !
अयं	𑌅𑌯𑌂	இச்சோமரசம் நினக்காக (தேடப்பட்டு) இருக்கின்றது
आयाहि	𑌆𑌯𑌾𑌹𑌿	வருவாயாக.
सोमपते !	𑌸𑍋𑌮𑌪𑌤𑍇 !	சோமரசத்திற்குத் தலைவ !
सोमं पिब	𑌸𑍋𑌮𑌂 𑌪𑌿𑌬	சோமரசத்தை யருந்துவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—4. சௌபரி ரிஷி.

குதிரைகட்கிறைவ! கோக்களைக் காப்பாற்றுவோய்! பயிர்களெலாம் நிறைந்துள்ள பாருக்கரசே! பிரகாசமுள்ள இந்திரனென்னும் நினக்குச் சோமரசம் பிழிந்து வைத்திருக்கப்பட்டிருக்கின்றது. ஈண்டுப் பிழிந்து வைக்கப்பட்டிருக்கின்றது என்பது எஞ்சி நின்றது. ஆதலின் வருவாயாக என்பதாம். சோமரசத்திற்கிறைவ! நீ சோமரசத்தின்பொருட்டு வந்து சோமரசத்தை பருக்துவாயாக என்பது பொருள். (4)

மந்திரம் 5.

१ २ ३ २ ३ १ २२ ३ १ २

403. त्वया ह स्विद्युजा वयं प्रति श्वसन्तं वृषभ ब्रवीमहि ।

३ १ २२ ३ १ २

संस्थे जनस्य गोमतः ॥ ५ ॥

இருக்கு 8-21-11.

𑌤𑍍𑌵𑌯𑌾 𑌹 𑌸𑍍𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌜𑌾 𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌶𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑌂 𑌵𑍃𑌷𑌭 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌹𑌿 ।
𑌸𑌂𑌸𑍍𑌥𑍇 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌗𑍋𑌮𑌤𑌃 ॥

அந்வயம்.

हे वृषभ !, गोमतः, जनस्य, संस्थे, श्वसन्तम्, युजा त्वया ह स्वित्, वयं प्रति ब्रवीमहि ॥

பதவுரை.

हे वृषभ !	𑌹𑍇 𑌵𑍃𑌷𑌭 !	மனவேட்கைகளைப் பொழிகின்ற இந்திர !
गोमतः	𑌗𑍋𑌮𑌤𑌃	கோ முதலியவைகளையுடைய
जनस्य	𑌜𑌨𑌸𑍍𑌯	அன்பாது
संस्थे	𑌸𑌂𑌸𑍍𑌥𑍇	இடத்தில், அல்லது, போரில்
श्वसन्तं	𑌶𑍍𑌵𑌸𑌨𑍍𑌤𑌂	பெருமூச்செறியுஞ் சத்துருவைக் குறித்து
युजा त्वया ह स्वित्	𑌯𑍁𑌜𑌾 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌹 𑌸𑍍𑌵𑌿𑌤𑍍	உனது உதவியினாலேயே
वयं	𑌵𑌯𑌂	நாங்கள்
प्रति ब्रवीमहि	𑌪𑍍𑌰𑌤𑌿 𑌬𑍍𑌰𑌵𑍀𑌮𑌹𑌿	பதிற் சொல்வோமாக.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—5. சௌபரி ரிஷி.

வேண்டியதைப் பெய்கின்ற இந்திர! கோ முதலியவைகளோடு கூடிய அன்பாது இடத்தில், அல்லது, போர்க்களத்தில் எங்களைக் குறித்துண்டாகும் பெருங்கோபத்தால் பெருமூச்சுவிடுகின்ற சத்துருவிற்கு, நினது சகாயத்தாலேயே உண்மையில் யாம் பதிற் சொல்வோமாக. அதாவது (அவர்களைத்) தடுத்து விடுவோமாக என்பதாம். (5)

மந்திரம் 6.

१र २क२र ३ २३ १२

404. गावश्चिद्धा समन्यवः सजात्येन मरुतः सबन्धवः ।

३१२ ३ १ २ ३ २

रिहते ककुभो मिथः ॥ ६ ॥

இருக்கு 8-20-21.

காவஶ்சிதா ஸமந்யவ: ஸஜாத்யேந மருத: ஸபந்தவ: |

ரிஹதே ககுபோ மித: ||

அந்வயம்.

हे समन्यवः! मरुतः, गावश्चित्, सजात्येन, सबन्धवः, ककुभः, मिथः, रिहते ॥

பதவுரை.

हे समन्यवः! मरुतः	ஹே ஸமந்யவ: ! மருத:	ஒத்தவொளியுள்ள மருத்துக்காள்!
गावश्चित्	காவஶ்சித்	உமது மாதாவாகிய கோக்களும்
सजात्येन	ஸஜாத்யேந	ஒரு சாதியாந்தன்மையால்
सबन्धवः	ஸபந்தவ:	ஒத்த சுற்றமுடையனவாகி
ककुभः	ககுப:	கிழக்கு முதலிய திசைகளையடைந்து
मिथः	மித:	ஒன்றற்கொன்று
रिहते	ரிஹதே	(தம்முள்) நக்கிக் கொள்கின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—6. சௌபரி ரிஷி.

சமமாகிய பிரமாசமுடைய, அல்லது, சமமாகிய குரோதமுடைய வரய்வு தேவதைகாள்! உங்களுடைய மாதாவான கோக்களும் ஒரே சாதித் தன்மையால ஒரே தன்மையாக ஒவ்வொன்றுய்ச் செல்க. என்னும் இத்தன்மைய ஒத்த சுற்றமுடையனவாகிக் கிழக்கு முதலிய திசைகளின் பாகங்களை யடைந்து தம்முள் ஒன்றற்கொன்று நக்கிக் கொள்கின்றன என்பதாம். (6)

மந்திரம் 7.

१ २ ३ १२३ १ २ ३ १ २
405. त्वं न इन्द्राभर ओजो नृम्णꣳ शतक्रतो विचर्षणे ।
२ ३ १ २३ १२
आ वीरं पृतनासहम् ॥ ७ ॥

இருக்கு 8-97-10.

𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭𑌰 𑌓𑌜𑍋 𑌨𑍃𑌮𑍍𑌣𑌂 𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍋 𑌵𑌿𑌚𑌰𑍍𑌷𑌣𑍇 ।
𑌆 𑌵𑍀𑌰𑌂 𑌪𑍃𑌤𑌨𑌾𑌸𑌹𑌮𑍍 ॥

அங்வயம்.

शतक्रतो !, विचर्षणे ! इन्द्र !, त्वं, नः, ओजः, नृम्णं, आभर, वीरं, पृतनासहं, आ ॥

பதவுரை.

शतक्रतो !	𑌶𑌤𑌕𑍍𑌰𑌤𑍋 !	அளவிலாக் கருமமுடையோய்!
विचर्षणे ! इन्द्र !	𑌵𑌿𑌚𑌰𑍍𑌷𑌣𑍇! 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	மிகுந்த நோக்குடையோய்! இந்திர !
त्वं	𑌤𑍍𑌵𑌂	நீ
नः	𑌨𑌃	எங்கட்கு
ओजः	𑌓𑌜𑌃	ஆற்றலையும்
नृम्णं	𑌨𑍃𑌮𑍍𑌣𑌂	தனத்தையும்
आभर	𑌆𑌭𑌰	கொடுப்பாயாக.
वीरं	𑌵𑍀𑌰𑌂	வீரத்தன்மையுடையோனும்
पृतनासहं	𑌪𑍃𑌤𑌨𑌾𑌸𑌹𑌂	படைகளைப் பழித்துத் தள்ளுபவனுமாகிய வுன்னை
आ	𑌆	(யாம்) அழைக்கின்றோம்,

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—6. நிருமேத ரிஷி.

மிகுந்த கருமங்களையுடைய இந்திர! பெரும்பார்வை யுடையோய்! நீ எங்கட்கு ஆற்றலையும், தனத்தையுங் கொடுப்பாயாக. வீரத்தன்மை யுடையோனும், சேனைகளை யடக்குவோனுமாகிய உன்னை யாம் அழைக்கின்றோம். (7)

மந்திரம் 8.

२३क २र ३ १२ ३ १२ ३१२ ३ १२
406. अधाहीन्द्र गीर्वण उप त्वा * काम ईमहे ससृग्महे ।
३२३ १२ ३१२
उदेव ग्मन्त उदभिः ॥ ८ ॥

இருக்கு 8-98-7.

அதாஹீந்த்ர கீர்வண உப த்வா காம ஈமஹே ஸஸ்ருக்மஹே।
உதேவ க்மந்த உதபி: ॥

அங்வயம்.

हे गीर्वणः !, इन्द्र !, अधाहि, त्वा, कामः, ईमहे, उपससृग्महे, उदेव ग्मन्तः, उदभिः ॥

பதவுரை.

हे गीर्वणः !	ஹே கீர்வண: !	வாக்கால் வாழ்த்தத் தக்க
इन्द्र !	இந்த்ர !	இந்திர !
अधाहि	அதாஹி	இப்போது
कामः	காம:	விரும்பிய பொருளை யீயுமாறு
त्वा	த்வா	நின்னை
ईमहे	ஈமஹே	இரக்கின்றோம். (மற்றும்)
उपससृग्महे	உபஸஸ்ருக்மஹே	நின்னைத் துதியோடு பொருந்தச் செய்கின்றோம். (அதிலுவமை)
उदेव ग्मन्तः	உதேவ க்மந்த:	நீரிற்சென்றவன் தனக்கருகிலுள்ளானை
उदभिः	உதபி:	கையாலெற்றிய நீரால் விளையாடுவோனைச் செய்வது போன்று என்பதாம்.

* कामान्महः ससृज्महे, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—8. கருப், சந்தம். நிருமேத ரிஷி.

வாக்காற் போற்றத்தக்க இந்திர ! இச்சமயம் (யாங்கள்) நின்னை விரும்புகின்றோம். அல்லது, விரும்பியவைகளை யிரக்கின்றோம். மற்றும் (யாம்) இரப்போர்களாகித் துதிகளோடு நின்னைச் சேர்க்கின்றோம். அதிலுவமை கூறப்படுகின்றது :—நீரிற் செல்கின்றவர்கள் கையாலெற்றிய நீரால் தனக் கருகிலுள்ளார்களையும் விளையாட்டின்பொருட்டு விளையாடுவோர்களாய்ச் செய்துகொள்வது போன்றெனல். (8)

குறிப்பு.—நீரில் மரக்கலத்தாற் பிரயாணஞ் செல்லும் வணிகனைப்போன்று ஊக்கமாய் நின்பொருட்டு வேட்கின்றோம் என்டர் சிலர்.

மந்திரம் 9.

१२ ३२३२३ १२३ १२ ३२ ३१२

407. सीदन्तस्ते वयो यथा गोश्रीते मधौ मदिरे विवक्षणे ।

३१ २र

अभित्वामिन्द्र नोनुमः ॥ ९ ॥

இருக்கு 8-21-5.

ஸீத³ந்தஸ்தே வயோ யதா² கோ³ஶ்ரீதே மதௌ⁴ மதி³ரே விவக்ஷணே ।
அபி⁴த்வாமிந்த்³ர நோநும꞉ ॥

அங்வயம்.

हे इन्द्र !, गोश्रीते, मदिरे, विवक्षणे, ते, मधौ, वयो यथा, सीदन्तः, त्वां अभिनोनुमः ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்³ர !	இந்திரனே !
गोश्रीते	கோ³ஶ்ரீதே	ஆவின் பால் தயிரோடு கூடியதும்
मदिरे	மதி³ரே	களிப்பைத் தருவதும்
विवक्षणे	விவக்ஷணே	சுவர்க்கத்திற் சேர்விப்பதுமாகிய
ते	தே	உன்னுடைய
मधौ	மதௌ⁴	சோமரசத்துக் கருகில் (யாம்)
वयो यथा	வயோ யதா²	ஒன்றுகூடியுள்ள பறவைகள் போன்று
सीदन्तः	ஸீத³ந்த꞉	இருந்துகொண்டவர்களாய்
त्वां अभि	த்வாம் அபி⁴	உனது நோக்குடன்
नोनुमः	நோநும꞉	(உன்னை) அடிக்கடி வணங்குகின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—9. சௌபரி ரிஷி.

இந்திர! கோவிகாரமான பால் தயிரோடுகூடியதும், களிப்புண்டாக்குவதும், சுவர்க்கத்தை யடைவிக்குஞ் சீலமுடையதுமாகிய நின்னுடைய சோமரச மிருக்குமிடத்தில், பறவைகள் ஓரிடத்திலொன்று சேர்ந்திருப்பன போன்று, நாங்களிருந்துகொண்டு நினது நோக்கத்தால் உன்னை மீண்டும் மீண்டும் வணங்குகின்றோம் என்பதாம். (9)

மந்திரம் 10.

३२३ १२ ३२उ ३ १२ ३ १२
408. वयमु त्वामपूर्व्य स्थूरं न कच्चिद्भरन्तोऽवस्यवः ।
१२ ३ १ २
वज्रिं चित्रꣳ हवामहे ॥ १० ॥

இருக்கு 8-21-1.

வயமு த்வாமபூர்வ்ய ஸ்தூரம் ந கச்சித்பரந்தோऽவஸ்யவ: |
வஜ்ரிம் சித்ரம் ஹவாமஹே ||

அந்வயம்.

हे वज्रिन्!, अपूर्व्य!, भरन्तः वयं, अवस्यवः, स्थूरं न, कच्चित्, चित्रं, त्वामु, हवामहे ॥

பதவுரை.

हे वज्रिन्!	ஹே வஜ்ரிந் !	வச்சிராயுதந் தாங்கினோய்!
अपूर्व्य!	அபூர்வ்ய !	வேள்வி நீராடுகின்ற முக்காலத்திலும் வெளிப்படலாற் புதியோனாகிய இந்திர !
भरन्तः वयं	பரந்த: வயம்	சோமமாகிய அன்னத்தால் உம்மை நிறையச்செய்த யாங்கள்
अवस्यवः	அவஸ்யவ:	தம்மைக் காப்பாற்றிக்கொள்ளுதற்பொருட்டு விரும்பியவர்களாய்
स्थूरं न	ஸ்தூரம் ந	வீட்டில் தானியம் நிறைப்போன், மிகக் குணமுடைய
कच्चित्	கச்சித்	ஒருவனை யழைப்பது போன்று,
चित्रं	சித்ரம்	பலவித நிறமுடைய
त्वामु	த்வாமு	நின்னையே
हवामहे	ஹவாமஹே	அழைக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—6. இருக்கு—10.

வச்சிராயுத மேந்திரனே! வேள்வியின் முக்காலத்திலும் வெளிப்படுவதாற் புதியோய்! சோமமாகிய அன்னங்களால் நின்னை வளர்க்கப்பட்ட யாங்கள் அநேக நிறமுள்ள (போற்றத்தக்க வடிவமுள்ள) தம்மைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பியவர்களாய் உன்னையே அழைக்கின்றோம். அதிலுவமை:—நெல் முதலியவைகளால் வீட்டை நிறைய வைக்கின்றவர்கள் நற்குணமிகுந்த ஒருவனை யழைப்பது போன்றெனல். (10)

ஆறுவது கண்டம்

முற்றும்.

ஏழாவது கண்டம்.

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—7.

பத்து மந்திரங்களாலானது.

தேவதைகள், 8, இந்திரன். 9, விசுவே தேவர்கள். 10. அசுவினிகள். சந்தம், பங்க்தி. சுரம், பஞ்சமம்.

மந்திரம் 1.

३ २३ १ २३२३ १२ ३क२र

409. स्वादोरित्था विषूवतो मधोः पिबन्ति गौर्य्यः ।

१ २र ३१२ ३२ ३ १२ ३ २ ३ २ ३१२ ३१२

या इन्द्रेण सयावरीर्वृष्णा मदन्ति *शोभथा वस्वीरनु स्वराज्यम् ॥

இருக்கு 1-84-10.

ஸ்வாதோ ரித்தா விஷூவதோ மதோ: பிபந்தி கௌர்ய்ய: ।

யா இந்த்ரேண ஸயாவரீ வ்ருஷ்ணா மதந்தி ஶோபதா வஸ்வீரநு

[ஸ்வராஜ்யம் ॥

---

* शोभसे, என்பது இருக்கு.

அந்வயம்.

स्वादोः, इत्था, विषूवतः, मधोः, गौर्यः, पिबन्ति, याः, वृष्णा इन्द्रेण, सयावरीः, मदन्ति, शोभथाः, वस्वीः, स्वराज्यं अनु ॥

பதவுரை.

स्वादोः	ஸ்வாதோ:	சுவையுடையதும்
इत्था	இத்தா	இவ்வாறு
विषूवतः	விஷூவத:	வேள்வியனைத்திலுஞ் சூழ்ந்திருப்பதும்
मधोः	மதோ:	மதுரமுடைதுமாகிய சோமரசத்தை
गौर्यः	கௌர்ய:	வெண்மை நிறமுடைய பசுக்கள்
पिबन्ति	பிபந்தி	குடிக்கின்றன.
याः	யா:	எந்தக் கோக்கள்
वृष्णा इन्द्रेण	வ்ருஷ்ணா இந்த்ரேண	விரும்பியதை மழையெனப்பெய்யும் இந்திரனோடு
सयावरीः	ஸயாவரீ:	கூடச் செல்கின்றனவாய்க்
मदन्ति	மதந்தி	களிப்படைகின்றனவோ,
शोभथाः	ஶோபதா:	(மற்றும்) அழகுடையனவோ,
वस्वीः	வஸ்வீ:	பால் கொடுத்துக்கொண்டு வாழ்கின்றனவோ, அந்தப் பசுக்கள்.
स्वराज्यं अनु	ஸ்வராஜ்யம் அநு	தமது ஆண்டையின் இராச்சியத்தில் நிலைத்திருக்கின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—1. கோதம ரிஷி.

இன்சுவையுடைய ரசத்தோடு கூடியதும், இவ்வாற்றால் வேள்விகளனைத்திலும் நிறைந்திருப்பதுமாயுள்ளதும், மதுரமுடையதுமாகிய சோமரசத்தை, வெண்ணிறமுடைய கோக்கள் குடிக்கின்றன. எப் பசுக்கள் விரும்பியதை மழையெனப் பெய்கின்ற இந்திரனோடு செல்கின்றனவாய்க் களிப்படைகின்றனவோ, அப்பசுக்கள் இந்திரனருந்திய சேடத்தை (சோமரசத்தை) அருந்துகின்றன என்பது பொருள். இந்திரனோடு அழகுற்றிருப்பனவும், பால் கொடுக்குஞ் சீலத்தால் வாழ்கின்றனவுமான அப்பசுக்கள், தமது இந்திரனுடைய இராச்சியத்தை (வேந்தன் ஆணையைக்) குறியாகப் பற்றிக்கொண்டிருக்கின்றன என்பதாம். (1)

மந்திரம் 2.

३ २र ३ २ ३ ३ १२ ३ २३ १ २
410. इत्था हि सोम इ * न्मदो ब्रह्म चकार वर्द्धनम् ।
१२ ३ १ २ ३ १ २र २ ३ २र १ २ ३ १ १
शविष्ठ वज्रिन्नोजसा पृथिव्या निःशशा अहिमर्चन्ननु स्वराज्यम् ॥२॥

இருக்கு 3-80-1.

இத்தா ஹி ஸோம இந்மதோ ப்ரஹ்ம சகார வர்த்தநம் ।
ஶவிஷ்ட வஜ்ரிந்நோஜஸா ப்ருதிவ்யா நிஃஶஶா அஹிமர்சந்நநு
[ஸ்வராஜ்யம் ॥

அந்வயம்.

हे शविष्ठ! वज्रिन्!, इत्था हि, सोमे, मदः, वर्द्धनं, ब्रह्म, चकार, स्वराज्यं, अनु अर्चन्, ओजसा, पृथिव्याः, अहिं, निःशशाः ॥

பதவுரை.

हे शविष्ठ!	ஹே ஶவிஷ்ட!	பெரும் வலியுடையோய்!
वज्रिन्!	வஜ்ரிந்!	வச்சிரமேந்தினோய்! இந்திர!
इत्था हि	இத்தா ஹி	இம்முறையாகவே
सोमे	ஸோமே	சோமரசத்தை யேற்றுக்கொண்ட விடத்து
मदः	மதஃ	துதிப்போர்கள்
वर्द्धनं	வர்த்தநம்	வளரத்தக்க
ब्रह्म	ப்ரஹ்ம	துதியைச்
चकार	சகார	செய்தார்கள். இதனால் நீ
स्वराज्यं अनु अर्चन्	ஸ்வராஜ்யம் அநு அர்சந்	தன திராச்சியத்தில் தனது இறைவனுந்தன்மையை விளக்கிக்கொண்டு
ओजसा	ஓஜஸா	ஆற்றலால்
पृथिव्याः	ப்ருதிவ்யாஃ	பூமியினின்றும்
अहिं	அஹிம்	விருத்திராசுரனைக் குறித்து
निःशशाः	நிஃஶஶாஃ	நன்கு ஆணை செலுத்துவாயாக. (கொல்லாது அகற்றுதி.)

* मदे ब्रह्मा, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—2.

வியப்புற்ற பேராற்றலுள்ளோய்! வச்சிராயுதந் தாங்கினோய்! இந்திர! நூல் கூறிய இம்முறையாகவே, சோமரசத்தை நீ யேற்றுக்கொண்டவிடத்து, துதிப்போர்கள் நின்னை விருத்திபண்ணுந் தோத்திரத்தைச் செய்தார்கள். இதனால் நீ ஆற்றலால் பூமியினின்றும் வந்து கொல்கின்ற விருத்திராசுரனை அடியோடு கொல்லற்க. அதாவது கட்டளையிட்டுப் (அவனைப்) பிருதிவியி னின்றும் நீக்கிவிடுவாயாக என்பதாம். (2)

மந்திரம் 3.

२ ३ १ २　　३ १ २ ३ १ २ २

411. **इन्द्रो मदाय वावृधे शवसे वृत्रहा नृभिः ।**

२उ　३२ ३ २ ३ १ २२　३ १ २२३ १ २

तमिन् महत्स्वाजिषूतिमर्भे हवामहे स वाजेषु प्रनोऽविषत् ॥ ३ ॥

இருக்கு 1-83-1.

இந்த்ரோ மதாய வாவ்ருதே ஶவஸே வ்ருத்ரஹா ந்ருபி꞉ ।
தமிந் மஹத்ஸ்வாஜிஷூதிமர்பே ஹவாமஹே ஸ வாஜேஷு ப்ரநோ
[ऽவிஷத் ॥

அந்வயம்.

वृत्रहा इन्द्रः !, मदाय, शवसे, नृभिः, वावृधे, तमित्, महत्सु आजिषु, अर्भे, ऊतिं, हवामहे, वाजेषु, नः, सः प्राविषत् ॥

பதவுரை.

वृत्रहा इन्द्रः	வ்ருத்ரஹா இந்த்ர꞉	விருத்திராசுரனைக் கொன்ற இந்திரன்
मदाय	மதாய	களிப்பின் பொருட்டும்
शवसे	ஶவஸே	வன்மையின் பொருட்டும்
नृभिः	ந்ருபி꞉	வேள்வித் தலைவர்களால்
वावृधे	வாவ்ருதே	வளர்க்கப்பட்டான்.
महत्सु आजिषु	மஹத்ஸு ஆஜிஷு	பெரிய போர்களிலும்
अर्भे	அர்பே	சிறிய போரிலும்
ऊतिं	ஊதிம்	காப்பாற்றுகின்ற
तमित्	தமித்	அவ்விந்திரனையே
हवामहे	ஹவாமஹே	அழைக்கின்றோம்.

वाजेषु	வாஜேஷு	போர்களில்
नः	ந:	எங்களை
सः	ஸ:	அவ் விந்திரன்
प्राविषत्	ப்ராவிஷத்	நன்கு காப்பாற்றுவானாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—3. கோதம ரிஷி.

மழையைத் தடுக்கின்ற விருத்திரன் என்னும் மேகத்தை, அல்லது, அசுரனைக் கொல்கின்றவனாகிய, அல்லது, இடையூறு செய்யுஞ் சத்துருக்களைக் கொல்கின்றவனாகிய இந்திரன், களிப்பின்பொருட்டும், ஆற்றலின் பொருட்டும், வேள்வி யியற்றுவோர்களால் தோத்திர மந்திரங்களான துதிகளால் வளர்க்கப்பட்டனன். (துதியாலேயே ஆற்றலையடைந்து தேவர்கள் வளர்கின்றனர் என்பது வழக்கு) பெரும்போர்களில் எங்களைப் பாதுகாப்பதற்கு அவ்விந்திரனையே அழைக்கின்றோம். அங்ஙனமே அவ்விந்திரனை, சிறிய போர்களிலும் அழைக்கின்றோம். எங்களால் அழைக்கப்பட்ட அவ் விந்திரன் போர்க்களங்களில் எங்களை நன்கு பாதுகாப்பானாக என்பதாம். (3)

மந்திரம் 4.

२ ३ २ ३ १ २ ३ १ २ ३क२र

412. इन्द्र तुभ्यमिदद्रिवोऽनुत्तं वज्रिन् वीर्यम् ।

२ ३ २ ३ १ २ ३ २उ ३ २ ३ १ २र उ२ ३ १ २ ३ १ २

यद्ध त्यं मायिनं *मृगं तव त्यन् माययावधीरर्चन्ननु स्वराज्यम् ॥

இருக்கு 1-80-7.

இந்த்ர துப்யமித்ரிவோऽநுத்தம் வஜ்ரிந் வீர்யம் ।
யத்த த்யம் மாயிநம் ம்ருகம் தவ த்யந் மாயயாவதீரர்சந்நநு ஸ்வரா
[ஜ்யம் ॥

அந்வயம்.

अद्रिवः, वज्रिन्, इन्द्र!, तुभ्यमित्, यद्ध, स्वराज्यं अनु अर्चन्, वीर्यं,
अनुत्तं, मायिनं, मृगं, त्यं वृत्रं, तव मायया, अवधीः ॥

---

* मृतं तमुत्वमायया, என்பது இருக்கு.

பதவுரை.

अद्रिवः	அத்ரிவ:	மேகவாகனனும்
वज्रिन्	வஜ்ரிந்	வச்சிராயுதந் தாங்கியவனுமாகிய
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே !
तुभ्यमित्	துப்யமித்	உன்னுடைய
यद्ध	யத்த	எவ்வலியினால் உண்மையாய்
स्वराज्यं अनु अर्चन्	ஸ்வராஜ்யம் அநு அர்சந்	தனது இராச்சியத்தில் மகிமையைக் காட்டினையோ,
वीर्यं	வீர்யம்	(அவ்)வல்லுநத்தன்மை
अनुत्तं	அநுத்தம்	பகைவர்களாற் கெடுக்க முடியாததேயாம்.
मायिनं	மாயிநம்	மாயையையுடையவனும்
मृगं	ம்ருகம்	மான்வடிவமெடுத்தவனுமாகிய
त्यं वृत्रं	த்யம் வ்ருத்ரம்	அவ் விருத்திராசுரனை
तव मायया	தவ மாயயா	நினது மாயையினாலே
अवधीः	அவதீ:	கொன்றனை. (இதனால் உனது வீரத்தன்மை கீர்த்திவாய்ந்ததாம்.)

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—4. கோதம ரிஷி.

மேகவாகனனே! வச்சிரந்தாங்கினோய் ! உன்னுடைய வன்மை பகைவர்களாற் கேடுறுததேயாம். உண்மையாய் எவ் வல்லமையால், மாயையுடையவனும் மான் வடிவெடுத்தவனுமாகிய அவ்விருத்திராசுரனை நீயும் தனது மாயையினாலே கொன்றவனா யிருக்கின்றனையோ, இதனால் உன்னுடைய யாதொரு வன்மையுண்டோ அது கீர்த்தியுடையதாகின்றது என்பதாம். (4)

குறிப்பு.—மூலத்தில் 'அத்திரி' என்பது மேகம் என 1-10-1-ல் நிகண்டு கூறுகின்றது.

ஈண்டு, மூலத்திலுள்ள துப்யம், என்னும் நான்காம் வேற்றுமை, உன்னுடைய என ஆறும் வேற்றுமையினின்றது.

மந்திரம் 5.

२ ३ १ २ ३२उ ३ २ ३ १ २

413. प्रेह्य भीहि धृष्णुहि न.ते वज्रो नियंसते ।

१ २ ३२उ ३ २ ३ १२ ३ १ २र ३ २ ३१ २ ३ १ २

इन्द्र नृम्णं हिते शवो हवो वृत्रं जया अपोऽर्चन्ननु स्वराज्यम् ॥५॥

இருக்கு 1-80-3.

𑌪𑍍𑌰𑍇𑌹𑍍𑌯 𑌭𑍀𑌹𑌿 𑌧𑍃𑌷𑍍𑌣𑍁𑌹𑌿 𑌨𑌤𑍇 𑌵𑌜𑍍𑌰𑍋 𑌨𑌿𑌯𑌂𑌸𑌤𑍇 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌨𑍃𑌮𑍍𑌣𑌂 𑌹𑌿𑌤𑍇 𑌶𑌵𑍋 𑌹𑌨𑍋 𑌵𑍃𑌤𑍍𑌰𑌂 𑌜𑌯𑌾 𑌅𑌪𑍋𑌽𑌰𑍍𑌚𑌨𑍍
[𑌅𑌨𑍁 𑌸𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑍍 ॥

அந்வயம்.

हे इन्द्र !, प्रेहि, अभीहि, धृष्णुहि, ते, वज्रः, न नियंसते, ते शवः, नृम्णं, हि, स्वराज्यं अनु अर्चन्, वृत्रं हनः, अपजयाः ॥

பதவுரை.

हे इन्द्र !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 !	இந்திரனே ! நீ.
प्रेहि	𑌪𑍍𑌰𑍇𑌹𑌿	நன்கு போர் செய்வாயாக.
अभीहि	𑌅𑌭𑍀𑌹𑌿	நேர்முகமாய்ப்போய்க் கொல்லத் தக்கோர்களைக் கொல்வாயாக.
धृष्णुहि	𑌧𑍃𑌷𑍍𑌣𑍁𑌹𑌿	அப் பகைவரை யழித்தவிடத்து
ते	𑌤𑍇	உன்னுடைய
वज्रः	𑌵𑌜𑍍𑌰𑌃	வச்சிராயுதம்
न नियंसते	𑌨 𑌨𑌿𑌯𑌂𑌸𑌤𑍇	பகைவரினின்று தடுக்கமுடியாத தாகின்றது.
ते	𑌤𑍇	உனது
शवः	𑌶𑌵𑌃	வலியானது
नृम्णं	𑌨𑍃𑌮𑍍𑌣𑌂	மனிதர்களைக் குனியச் செய்வதாம்.
हि	𑌹𑌿	இதனால்
स्वराज्यं अनु अर्चन्	𑌸𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌅𑌨𑍁 𑌅𑌰𑍍𑌚𑌨𑍍	தனது இராச்சியத்தில் மகிமையைக் காட்டி
वृत्रं हन;	𑌵𑍃𑌤𑍍𑌰𑌂 𑌹𑌨𑌃	விருத்திராசுரனைக் கொல்வாயாக.
अपः जयाः	𑌅𑌪𑌃 𑌜𑌯𑌾𑌃	(அவனால்) தடுக்கப்பட்ட மழையை (யும்) வெற்றிகொள்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—5. கோதம ரிஷி.

இந்திரனே! நீ இனிது செல்வாயாக. கொல்லத்தக்க பகைஞர்களை யடைவாயாக. அடைந்து அச் சத்துருக்களைக் கொல்வாயாக. உன்னுடைய வச்சிராயுதம் சத்துருக்களாற் றடுக்கமுடியாதது. அவ்வணமே உனது ஆற்றல் மனிதர்களை வணங்கச் செய்வது. ஆகையால் விருத்திராசுரனை, அல்லது, மேகத்தை வெல்வாயாக. அதன்பின்னர் அவனாற்றடைபண்ணப் பட்ட நீரை (மழையை) வெற்றி கொள்வாயாக. விருத்திரனைக்கொன்று அவனாற்றடுக்கப்பட்ட நீரையடைவாயாக என்பதாம். எஞ்சியது விளக்கம்,

மந்திரம் 6.

२३१२ ३१२३१२ ३१२
414. यदुदीरत आजयो धृष्णवे धीयते धनम् ।
३ १ २३ २ ३ २ ३ २उ ३ १ २र ३ १ २ ३ १ २
युक्ष्वा मदच्युता हरी कꣳ हनः कं वसौ दधोऽस्माꣳ इन्द्र वसौ दधः ॥

இருக்கு 1-81-3.

யதுதீரத ஆஜயோ த்ருஷ்ணவே தீயதே தநம் ।
யுக்ஷ்வா மதச்யுதா ஹரீ கம் ஹநஃ கம் வஸௌ தயோऽஸ்மாம் இந்த்ர
[வஸௌ தயஃ ॥

அந்வயம்.

यत्, आजयः, उदीरते, धृष्णवे, धनं, धीयते, इन्द्र, मदच्युता, हरी, युङ्क्ष्वा, कं, वसो दधः, वसौ, दधः ॥

பதவுரை.

यत्	யத்	எப்போது
आजयः	ஆஜயஃ	யுத்தம்
उदीरते	உதீரதே	தொடங்கப்படுகின்றதோ, அப்போது
धृष्णवे	த்ருஷ்ணவே	பகைஞரை வெல்கின்றவருக்கு
धनं	தநம்	தனம்
धीयते	தீயதே	இருப்பாக வைக்கப்படுகின்றது.
इन्द्र !	இந்த்ர !	இந்திரனே! நீ
मदच्युता	மதச்யுதா	பகைவர்களின் கருவத்தை யொழிக்கின்ற
हरी	ஹரீ	பரிகளை,
युङ्क्ष्वा	யுங்க்ஷ்வா	இரதத்திற் பூட்டுவாயாக.
कं	கம்	எவனையேனு மொருவனைக்
हनः	ஹநஃ	கொல்கின்றாய்.
कं	கம்	எவனையேனு மொருவனை
वसौ दधः	வஸௌ தயஃ	தனமுள்ளவனுக்குகின்றாய். ஆதலின் எனது அரசனைத்
वसौ	வஸௌ	தனத்தின்கண்
दधः	தயஃ	நிலைக்க வைப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—6. கோதம ரிஷி.

ஈண்டு, இரகுகண புத்திரனாகிய கோதமரின் ஆசிரியர், "குரு சிரிஞ்சயர்கள்" என்னும் அரசர்களுக்குப் புரோகிதராயிருந்தனர். அவ்வரசர்களுக்குப் பிறர்களோடு போர் நடக்குமிடத்து இவ்விருடியானவர் இம் மந்திரத்தால் இந்திரனைத் துதித்துத் தன்னுடைய அரசனுக்கு வெற்றியுண்டாமாறு வேண்டினர் என்னும் இவ்விதிகாசமுள்ளது. மற்றும், "கோதமர் இரகுகணர் இருவரும் குரு சிருச்சயர்களுடைய புரோகிதராயிருந்தனர்." என அவ்வரசனுக்கு அவ்விருடி புரோகிதராயிருந்தமை வாஜசனேய மறை யோதுவோர்களால் கூறப்பட்டு முள்ளது. மந்திரப் பொருள்:—எக்கால் போர்கள் உண்டாகின்றனவோ அப்போது எவர் சத்துருவை வெல்கின்றாரோ, அவர்க்குத் தனங்கொடுக்கப்படுகின்றது வெல்வோர்க்குத் தனமுண்டாகின்றதென்பது பொருள். இந்திரனே! உன்னை அத்தன்மைய உயுத்தங்கள் தொடங்கினபோது, சத்துருக்களுடைய கருவத்தைத் தொலைக்கப்பட்ட உன்னுடைய குதிரைகளிரண்டையும் நினது இரதத்திற் பூட்டுவாயாக. பூட்டிக்கொண்டு நின்னைவழிபடாத வேந்தர்கள் எவர்களேனு மிருப்பார்களேல் அவர்களைக் கொல்வாயாக. எவர்களேனும் நின்னை வழிபடில் அவர்களைத் தனத்தில் நிலைக்க வைப்பாயாக. இதனால் வெற்றி தோல்விகளை நீயே செய்விக்கின்றாய் என்பது பெற்றாம். ஆதலின் இந்திர! எனது இராச சம்பந்திகளைத் தனத்தில் இருக்க வைப்பாயாக. அதாவது (வெற்றி தோல்விகட்கு நீயே காரணமாதலின் எனது வேந்தனுக்கு வெற்றியுண்டாக்கி அவனைத் தனவானாகச் செய்வாயாக என்பது திரண்ட பொருள்.) (6)

மந்திரம் 7.

२३१२ ३१२ ३१२

415. अक्षन्नमीमदन्त ह्यव प्रिया अधूषत ।

१ २३ १२ ३ २ ३१२ ३२उ ३क २र ३१२

अस्तोषत स्वभानवो विप्रा नविष्टयामती योजा न्विन्द्र ते हरी ॥७॥

இருக்கு 3-82-2.

அக்ஷந்நமீமதந்த ஹ்யவ ப்ரியா அதூஷத ।

அஸ்தோஷத ஸ்வபாநவோ விப்ரா நவிஷ்டயாமதீ யோஜாந்விந்த்ர தே [ஹரீ ॥

அந்வயம்.

हे इन्द्र!, अक्षन्, हि, अमीमदन्त, प्रियाः अवाधूषत, स्वभानवः, विप्राः, नविष्टयामती, अस्तोषत, ते हरी, नु, योज ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே! நீ
अक्षन्	அக்ஷந்	கொடுத்த அன்னத்தை வேள்வித் தலைவர்கள் அருந்தி
हि	ஹி	உண்மையாய்க்
अमीमदन्त	அமீமதந்த	களிப்புற்றார்கள்.
प्रिया: अवाधूषत	ப்ரியா: அவாதூஷத	சுவையி லின்படைந்து கூறமுடியாதவர்களாய்க் களிப்பினால் தலையசைத்த பின்னர்
स्वभानव:	ஸ்வபாநவ:	தமதொளியால் விளங்கின
विप्रा:	விப்ரா:	அறிவு மிகுந்த வேட்போர்கள்
नविष्ठयामती	நவிஷ்டயாமதீ	மிகப்புதிய தோத்திரங்களால்
अस्तोषत	அஸ்தோஷத	துதித்தனர். (ஆதலின்)
ते हरी	தே ஹரீ	நினது குதிரைகளை
नु	நு	விரைவில்
योज	யோஜ	இரதத்திற் பூட்டுவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—7. கோதம ரிஷி.

இந்திரனே! நின்னாற் கொடுக்கப்பட்ட அன்னங்களை வேள்வித்தலைவர்கள் அருந்தினார்கள். அருந்தி உண்மையாய்க் களிப்புற்றவர்களாயிருக்கின்றார்கள். அதனால் உடம்பைக் குலுக்கினார்கள். அதாவது சுவை மிகுந்ததையுண்டதாற் களிப்பு மிகுந்து பேசமுடியாதவர்களாய்த் தேகத்தை யசைத்தார்கள் என்பதாம். பின்னர், தமது பிரகாசத்தால் விளங்கின அறிவுமிகுந்த வேட்போர்கள் வியப்பாகிய புதிய துதியால் இனிது துதித்தார்கள். ஆதலின் இந்திர! நின்னுடைய அரீ, என்னு மிரண்டு குதிரைகளையும் விரைவில் இரதத்திற் பூட்டுவாயாக என்பதாம். (7)

மந்திரம் 8.

२ ३ १ २ ३२उ ३ १२३ १२

416. **उपो षु शृणुही गिरो मघवन् माऽतथा इव ।**

३ १ २ ३१२ ३ २३ २३ १ २ ३ २उ ३क २र ३ १ २

कदा नः सूनृतावतः कर इदर्थयास इद्योजा न्विन्द्र ते हरी ॥८॥

இருக்கு 1-82-1.

உபோ ஷு ஶ்ருணுஹீ கிரோ மகவந் மாऽதயா இவ ।

கதா ந: ஸூந்ருதாவத: கர இதர்தயாஸ இத்யோஜா ந்விந்த்ர தே [ஹரீ ॥

அந்வயம்.

हे मघवन् इन्द्र !, गिरः, उप उ, सुश्रृणुहि, अतथा इव मा, सूनृतावतः, नः, कदाकरः, अर्थयास इत्, ते हरी, नु, योज ॥

பதவுரை

हे मघवन् इन्द्र !	ஹே மகவந் இந்த்ர !	தனமுடைய இந்திரனே!
गिरः	கிரঃ	உன்னுடைய துதிகளை
उप उ	உப உ	அருகில் வந்து
सुश्रृणुहि	ஸு-ஶ்ருணு-ஹி	இனிது கேட்பாயாக.
नः	நঃ	எங்களை
अतथा इव मा	அததா இவ மா	முன்னுள்ள தன்மையில் மாறுபடாமலே
सूनृतावतः	ஸூ-ந்ருதாவதঃ	மெய்ம்மை வாக்குடன், துதிவாக்குகளையுமுடையவர்களாக
कदाकरः ?	கதாகரঃ ?	எக்காற் செய்குவையோ ? (அறியேம்)
अर्थयास इत्	அர்தயாஸ இத்	எங்களுடைய துதிகளை ஏற்றுக் கொள்கின்றாய், ஆதலின்
ते हरी	தே ஹரீ	நினது குதிரைகளை
नु	நு	விரைவில்
योज	யோஜ	இரதத்திற்பூட்டுவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—8. கோதம ரிஷி.

தனமுடைய இந்திரனே! நீ எங்களுடைய தோத்திரங்களை அருகில் வந்து நன்கு கேட்பாயாக. முன்பு எவ்வாறிருந்தனையோ, அதினின்றும் மாறுபாடாகாதே. முன்னர் எங்கட்கு அநுக்கிரக புத்திபுடைய வனாயிருந்தனையன்றோ, அவ்வண்ணத்தனாகவேயிருப்பாய் என்பதாம். மற்றும், எங்களைச் சத்தியவாக்குடையார்களாகவும், இனிய தோத்திரமாகிய வாக்குடையார்களாகவும் எப்போது செய்குவையோ ? (அறியேம்.) நீயும் எங்களாற்றுதிக்கப்பட்டதை ஏற்றுக் கொள்கின்றாயே யன்றி தள்ளிலாய். இதனால் இந்திரனே ! உனது குதிரைகளை விரைவில் இரதத்திற்பூட்டுவாயாக என்பது பெற்றாம். (8)

மந்திரம் 9.

३ १ २ ३ २ १ २२ ३१ २ ३ २
417. चन्द्रमा अप्स्वा३न्तरा सुपर्णो धावते दिवि ।
१ २ ३१ २ ३ १ २ ३ १ २
न वो हिरण्यनेमयः पदं विन्दन्ति विद्युतो वित्तं मे अस्य रोदसी ॥

இருக்கு 1-84-7.

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌾 𑌅𑌪𑍍𑌸𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑍋 𑌧𑌾𑌵𑌤𑍇 𑌦𑌿𑌵𑌿 ।
𑌨 𑌵𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑍇𑌮𑌯𑌃 𑌪𑌦𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍋 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑍇
[𑌅𑌸𑍍𑌯 𑌰𑍋𑌦𑌸𑍀 ॥

அங்வயம்

अप्सु, अन्तः, सुपर्णः, चन्द्रमाः, दिवि, आधावते, हिरण्यनेमयः, विद्युतः, वः, पदं, अग्रं, नविन्दन्ति, रोदसी मे, अस्य, वित्तम् ॥

பதவுரை.

अप्सु	𑌅𑌪𑍍𑌸𑍁	வானிலுள்ள நீர் மயமாகிய மண்டலங்களில்
अन्तः	𑌅𑌨𑍍𑌤𑌃	உள்ளிருக்கின்ற
सुपर्णः	𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌃	சுழும்னை, என்னுஞ் சூரிய கிரணங்களோடு கூடிய
चन्द्रमः	𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌃	சந்திரன்
दिवि	𑌦𑌿𑌵𑌿	வானுலகில்
आधावते	𑌆𑌧𑌾𑌵𑌤𑍇	ஒரு தன்மையாய் விரைவிற் சென்றனன். அவனோடு கூடியுள்ள
हिरण्यनेमयः	𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌨𑍇𑌮𑌯𑌃	பொன்னொத்த நோக்குடைய
विद्युतः	𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑌃	ஒளியுள்ள கிரணங்களே!
वः	𑌵𑌃	உங்களுடைய
पदं	𑌪𑌦𑌂	திருவடி யென்னும்
अग्रं	𑌅𑌗𑍍𑌰𑌂	நுனியாகிய பாகத்தை
नविन्दन्ति	𑌨𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿	எனது புலன்களடைகின்றில.
रोदसी	𑌰𑍋𑌦𑌸𑍀	வானுலக மண்ணுலக அபிமானி தேவதைகளே! நீங்கள்
मे	𑌮𑍇	என்னுடைய
अस्य	𑌅𑌸𑍍𑌯	இத் தோத்திரத்தை
वित्तं	𑌵𑌿𑌤𑍍𑌤𑌂	அறிவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—9. திரித ரிஷி.

வானிலுள்ள நீர் மயமண்டலத்தின் நடுவிலுள்ள, அழகிய பொன்மய திருஷ்டிகள், அல்லது, கிரணங்கள், சுபர்ணம் கிரணமென நிருத்தம் 1-5-15ல் கூறியுள்ளது. அதாவது:—சுழும்னை என்னுங் கிரணங்களோடு கூடிய சந்திரன் வானுலகில் ஒரு தன்மையாகவே செல்கின்றான். அத்தன்மைய சந்திரனுடைய கிரணங்களே! அதாவது:—பொன்மயத்திற்கொத்த வரம்புடைய, அல்லது, பிரியமாகிய நடுப்பாகத்தையுடைய, மிக விளங்குகின்ற (மின்னுகின்ற) கிரணங்களே! உங்களுடைய பாதங்கனென்னும் நுனிப்பாகங்களே எனது புலன்கள் கிணறுமறைத்தலின் அடைந்தில. இது உரித்தல்ல ஆதலின் கிணற்றினின்று என்னைத் தூக்கிவிடுவீர்களாக. மற்றும், வான்மண்களே! நீங்கள் என்னுடைய இத் தோத்திரத்தை அறிவீர்களாக.

மந்திரம் 10.

१२३ १२३ २३ १२ ३ १२

418. प्रतिप्रियतमꣳ रथं वृषणं वसुवाहनम् ।

३ १ २ ३ २ ३ १२ ३ २ ३ २ ३ १२ ३ १२

स्तोता वामश्विना वृषिं स्तोमेभिर्भूषति प्रतिमाध्वी मम श्रुतꣳ हवम्॥

இருக்கு 5-75-1.

ப்ரதிப்ரியதமம் ரதம் வ்ருஷணம் வஸுவாஹநம் ।
ஸ்தோதா வாமஶ்விநா வ்ருஷிம் ஸ்தோமேபிர்பூஷதி ப்ரதிமாத்வீ மம
[ஶ்ருதம் ஹவம் ॥

அங்வயம்.

अश्विनौ!, वाम्, प्रियतमं, वृषणं, वसुवाहनं, रथं, स्तोता, ऋषिः, स्तोमेभिः, प्रति प्रति भूषति, माध्वी श्रुतम् ॥

பதவுரை.

अश्विनौ !	அஶ்விநௌ !	அசுவினி குமாரர்களே !
वाम्	வாம்	உங்களுடைய
प्रियतमं	ப்ரியதமம்	மிகவன்மையுள்ளதும்
वृषणं	வ்ருஷணம்	பயனைப் பொழிவதும்
वसुवाहनं	வஸுவாஹநம்	தனத்தைச் சுமப்பதுமாகிய

* स्तोमेन प्रति भूषति, என்பது இருக்கு.

रथं	𑌰𑌥𑌂	இரதத்தை,
स्तोता	𑌸𑍍𑌤𑍋𑌤𑌾	துதிப்போராகிய
ऋषि	𑌋𑌷𑌿	இருடிகள்
स्तोमेभिः	𑌸𑍍𑌤𑍋𑌮𑍇𑌭𑌿𑌃	தோத்திரங்களால்
प्रति प्रति भूषति	𑌪𑍍𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌭𑍂𑌷𑌤𑌿	அலங்கரிக்கின்றார்கள். (ஆதலின்)
माध्वीः	𑌮𑌾𑌧𑍍𑌵𑍀𑌃	மதுவித்தையை புணர்ந்தோர்களே! நீங்கள்
श्रुतं	𑌶𑍍𑌰𑍁𑌤𑌂	(அதைக்) கேட்பீர்களாக.

சாயண பாடியம்

கண்டம்—7. இருக்கு—10. அவசியு ரிஷி.

அசுவினிகுமாரர்காள்! மிகப் பிரியமுள்ள உங்களுடைய இரதத்தை, துதிப்போராகிய இருடிகள் தோத்திரக் கொத்துகளால் அலங்கரிக்கின்றார்கள். அது எவ்விதமாகிய இரதமெனின்? பயனைப் பெய்வதும், தனங்களைத் தாங்குவதுமாம். இத்தன்மை இரதத்தை (இங்கு) வரும்பொருட்டுத் துதிக்கின்றார்கள் என்பது பொருள். ஆதலின் மது வித்தையை புணர்ந்தோர்களே! நீங்கள் அத் துதியைக் கேட்பீர்களாக என்பதாம். (10)

ஏழாவது கண்டம்

முற்றும்.

எட்டாவது கண்டம்

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—8.

எட்டு மந்திரங்களாலானது.

தேவதைகள், 1, 2, 7, அக்கினி. 3, உஷா. 4, சோமன். 5, 6, இந்திரன். 8, விசுவே தேவர்கள். சந்தம், 1, 7, பங்க்தி மேல் பிருகதி. சுரம், 1, 7, பஞ்சமம். 8, மத்தியமம்.

மந்திரம் 1.

१ २ ३१ २
419. आ ते अग्न इधीमहि द्युमन्तं देवाजरम् ।
२३ २ ३ १ २ ३ २ ३१ २ ३ १२र ३ २ ३ १२
यद्ध स्या ते पनीयसी समिद्दीदयति द्यवीषꣳ स्तोतृभ्य आभर ॥१॥

இருக்கு 5-6-4.

ஆ தே அக்னே இதீமஹி த்யுமந்தம் தேவாஜரம் ।
யத்த ஸ்யா தே பனீயஸீ ஸமித் தீதயதி த்யவீஷம் ஸ்தோத்ருப்ய ஆபர ॥

அந்வயம்.

हे अग्ने देव !, द्युमन्तं, अजरं, ते, आ इधीमहि, यद्ध, पनीयसी, ते, स्या, समित्, द्यवि, दीदयति, स्तोतृभ्यः, इषं, आभर ॥

பதவுரை.

हे अग्ने देव !	ஹே அக்நே தேவ !	அக்கினி தேவனே !
द्युमन्तं	த்யுமந்தம்	ஒளியுடையவனும்
अजरं	அஜரம்	கிழத்தன்மையற்றோனுமாகிய
ते	தே	உன்னை
आ इधीमहि	ஆ இதீமஹி	எல்லா வகையானும் ஒளி மிகுவோனாச் செய்கின்றோம்.
यद्ध	யத்த	உண்மையாய்ப்
पनीयसी	பனீயஸீ	போற்றத்தக்க
ते स्या	தே ஸ்யா	உன்னுடைய அந்த
समित्	ஸமித்	ஒளியானது
द्यवि	த்யவி	வானுலகிற்
दीदयति	தீதயதி	பளபளப்பாயிருக்கின்றது.
स्तोतृभ्यः	ஸ்தோத்ருப்ய:	துதிப்போர்களான எங்கட்கு நீ
इषं	இஷம்	அன்னத்தைக்
आभर	ஆபர	கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—1. வசுசுருத ரிஷி.

அக்கினி தேவனே ! பிரகாசமுடையவனும், கிழப்பருவமற்றோனுமாகிய நின்னைப் பலவாற்றானும் (யாம்) வளர்க்கின்றோம். உண்மையிற் போற்றத்தக்க உன்னுடைய அந்த ஒளிப்பிழம்பானது வானுலகில் விளங்குகின்றது. மற்றும், தோத்திரம் பண்ணுகின்ற எங்கட்கு நீ அன்னத்தைக் கொடுப்பாயாக,

(1)

மந்திரம் 2.

१ २र ३ १ २
420. आग्निं न स्ववृक्तिभिर्होतारं त्वा वृणीमहे ।
३१ २ ३१ २ ३ २ ३ १२ ३१ २ ३ १२ ३ २
*शीरं पावकशोचिषं वि वो मदे यज्ञेषु स्तीर्णबर्हिषं विवक्षसे ॥ २ ॥

இருக்கு 10-21-1.

ஆக்நிம் ந ஸ்வவ்ருக்திபிர்ஹோதாரம் த்வா வ்ருணீமஹே ।
ஶீரம் பாவகஶோசிஷம் வி வோ மதே யஜ்ஞேஷு ஸ்தீர்ணபர்ஹி-
[ஷம் விவக்ஷஸே ॥

அந்வயம்.

(हे अग्ने !,) न, स्ववृक्तिभिः, होतारं, वः, यज्ञेषु, स्तीर्णबर्हिषं, शीरं, पावक-शोचिषं, त्वा अग्निं, विमदे, आवृणीमहे, विवक्षसे ॥

பதவுரை.

(हे अग्ने !)	(ஹே அக்நே !)	(அக்கினியே !)
न	ந	இவ்வேளை
स्ववृक्तिभिः	ஸ்வவ்ருக்திபி:	தன்னால் செய்யப்பட்ட தோத்திரங்களால்
होतारं	ஹோதாரம்	தேவர்களை யழைப்போனும், அல்லது, ஓமத்தைச் செய்வோனுமாகிய
वः	வ:	உனது
यज्ञेषु	யஜ்ஞேஷு	வேள்களில்
स्तीर्णबर्हिषं	ஸ்தீர்ணபர்ஹிஷம்	எவர்க்குத் தருப்பையாசனம் விரித்துள்ளதோ, அத்தன்மையதும்
शीरं	ஶீரம்	ஔடத முதலியவைகளில் நிறைந்துள்ளதும்
पावकशोचिषं	பாவகஶோசிஷம்	பரிசுத்தப்படுத்து மொளியுடையதுமாகிய
त्वा अग्निं	த்வா அக்நிம்	அக்கினியென்னு முன்னைச்
विमदे	விமதே	சோமமருந்தலால் மிகுந்த களிப்புண்டாக்குதற் பொருட்டு
आवृणीमहे	ஆவ்ருணீமஹே	ஒருமையோடு ஆராதிக்கின்றோம்.
विवक्षसे	விவக்ஷஸே	அக்கினி தேவனே ! நீ பெரியோனா யிருக்கின்றாய்.

*यज्ञाय स्तीर्ण बर्हिषं विवो मदे शीर पावक शोचिषं विवक्षते, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—2. விமதரிஷி.

அக்கினியே! யாம் இப்போது, தானகவே செய்யப்பட்ட குற்றமற்ற தோத்திரங்களால் தேவர்களை யழைப்போனும், அல்லது, ஓமக்கிரியைகளைச் செய்வோனுமாகிய 'அக்கினி என்னும் நின்னை ஒருமையுடன் ஆராதிக்கின்றேம். எவ்வண்ணமாகிய அக்கினியை யெனின்? வேள்விகளில் எதன் பொருட்டுத் தருப்பையாசனம் விரித்து வைக்கப்பட்டிருக்கின்றதோ, அத் தன்மையதை. மற்றும், பச்சிலை முதலியவைகளில் யாண்டும் நிறைந்திருக்கின்றதை. பரிசுத்தஞ் செய்யும் பிரபையுடையதை. ஆராதிக்கின்றேம் என்பதனேடு சேர்த்துக்கொள்க. அக்கினியே! நீயும் மகானு யிருக்கின்றாய். அல்லது, வேள்வி சம்பந்தமாகிய சோமரசத்தை அருந்தலாலுண்டாகிய பல வகைக் களிப்பின்பொருட்டு உன்னை யாராதிக்கின்றேம் என்று கூட்டிக் கொள்க.

மூலத்தில் அக்கினிம், என்னும் இரண்டாம் வேற்றுமை அக்கினியே! என விளியாயிற்று. ஈண்டு விமத மென்பது ஒரு இருடியின் பெயராதலின் யாம் எனத் தம்மையே கொண்டனர். (2)

மந்திரம் 3.

३१ २ ३ १ २३ १ २ ३२ ३ १ २
421. महे नो अद्य बोधयोषो राये दिवित्मती ।
१ २ ३ १ २ ३ १ २ ३ १ २२ ३ १ २
यथाचिन्नो अबोधयः सत्यश्रवसि वाय्ये सुजाते अश्वसूनृते ॥ ३ ॥

இருக்கு 5-71-1.

மஹே நோ அத்³ய போ³த⁴யோஷோ ராயே தி³வித்மதீ ।
யதா²சிந்நோ அபோ³த⁴ய: ஸத்யஶ்ரவஸி வாய்யே ஸுஜாதே அஶ்வ
[ஸூந்ருதே ॥

அங்வயம்.

दिवित्मती, उषः!, अद्य, नः, महे राये, यथाचित्, अबोधयः, नः, बोधयः, सुजाते, अश्वसूनृते, वाय्ये, सत्यश्रवसि ॥

பதவுரை.

दिवित्मती	தி³வித்மதீ	ஒளியுடைய
उषः!	உஷ: !	உஷாதேவியாரே! நீர்
अद्य	அத்³ய	இவ்வேள்வித்தினத்தில்
नः	ந:	எங்களை

महे राये	உஹெ ராயெ	மிகுந்த தனத்தின்பொருட்டு
यथाचित्	யயாசிக்	எவ்வாறு
अबोधयः	அபொயயஃ	அறிவுறுத்தினீரோ,(அவ்வாறே)
नः	நஃ	எங்கட்கு
बोधयः	பொயயஃ	அறிவை விளங்கச் செய்வீராக.
सुजाते !	ஸுஜாதெ !	நற்பிறப்புடையாரே !
अश्वसूनृते !	அஶ்வஸூந்ருதெ !	உண்மையாய் அன்புடன் துதித்தற்குரியாரே ! நீர்
वाय्ये	வாய்யெ	வாயுவின் புத்திரனாகிய
सत्यश्रवसि	ஸத்யஶ்ரவஸி	சத்திய சிரவசனென்னும் எனக்கு அநுக்கிரகிப்பீராக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—3. சத்தியசிரவ ரிஷி.

மிகுந்த ஒளியுடைய உஷா தேவியாரே! நீர் எங்கட்கு இவ்வேள்வித் தினத்தில் தனலாபத்தின் பொருட்டு அறிவுறுத்துவீராக. (விளக்குவீராக என்பது மது) விளக்கமானவிடத்து வேள்வி வாயிலாகத் தனத்தைத் தேடல் முடியுமாதலின் என்க. எவ்வாறு முன்பு (போனவைகளில்) விளக்கினீரோ, அவ்வாறே இப்போதும் அறிவுறுத்துவீராக என்பது பொருள். அழகிய சென்மத் தோற்றமுடையீர்! உண்மை யன்புடைய தோத்திரத்திற்குரியவரே! அத்தன்மைய தேவியாரே! நீர் வாயு புத்திரனென்னும் சத்திய சிரவசனாகிய எனக்கு அநுக்கிரகம் புரிவீராக என்பதாம். (3)

மந்திரம் 4.

३२ ३ १२ ३ २ ३ १२ ३१ ३२

422. भद्रं नो अपि वातय मनो दक्षमुत क्रतुम् ।

१२ ३ १ २२ ३ २ ३२३ २ ३ २ ३ १ २२३ १२

अथा ते सख्ये अन्धसो वि वो मदे *रणा गावो न यवसे विवक्षसे ॥

இருக்கு 10-25-1.

பத்3ரம் நோ அபி வாதய மநோ த3க்ஷமுத க்ரதும் ।
அதா2 தே ஸக்2யே அந்த4ஸோ வி வோ மதே3 ரணா கா3வோ ந
[யவஸே விவக்ஷஸே ॥

அந்வயம்.

हे सोम !, विवक्षसे, अन्धसः, विमदे, नः, मनः, दक्षं, अपि उत, क्रतुं, भद्रं, वातय, अथा, यवसे, रणा, गावः, न ते, सख्ये ॥

* रणन् गावो, என்பது இருக்கு.

பதவுரை.

हे सोम !	ஹெ ஸொம !	சந்திரனே ! நீ
विवक्षसे	விவக்ஷஸெ	மகானாயிருக்கின்றாய். ஆதலின்
अन्धसः	அந்ஸஸ:	சோம சம்பந்தமான பொருட்களுக்கு
विमदे	விமதெ	மிகக் களிப்பைக் கொடுக்குமிடத்து நீ
नः	ந:	எங்களுடைய
मनः	மந:	மனத்தையும்
दक्षं अपि	தக்ஷம் அபி	அந்தரான்மாவையும்
उत	உத	மற்றும்
क्रतुं	க்ரதும்	மெய்யுணர்வையும்
भद्रं	பத்ரம்	மங்களம்
वातय	வாதய	உடையதாகச் செய்வாயாக.
अथा	அதா	மற்றும், துதிப்போர்கள்
यवसे रणा गावः न	யவஸெ ரணா காவ: ந	கோக்கள் புல்லில் இரமிப்பன போன்று
ते	தெ	உன்னுடைய
सख्ये	ஸக்யெ	மித்திரத் தன்மையில் இரமிப்போர்களாகுக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—4. விமதரிஷி.

சோமனே! நீ எங்களுடைய மனம், நலத்தைக் கருதுவதாகிய மங்கலத்தை யடையுமாறு செய்வாயாக. எங்கட்கு நல்லெண்ண முண்டாமாறு செய்வாயாக என்பதாம். அவ்வாறே, எங்கும் நிறைந்துள்ள அந்தரான்மாவையும் நற்செய்கையுடையதாகச் செய்வாயாக. மற்றும், உண்மையுணர்வை நல்ல நிச்சயமென்னும் மங்களமுடையதாகச் செய்வாயாக. பின்னர், துதிப்போனால் துதித்தற்குரிய உன்னைத் துதிக்குந்தன்மை, ஆராதித்தற்குரியதால் ஆராதிக்குந்தன்மையாகிய மித்திரத் தொழிலில் இரமிப்போனாகுக. ஈண்டு இரமிப்போனாக என்பது எஞ்சியது. அதிலுவமை:—விருப்புள்ள கோக்கள் நற்புல்லில் பிரியப்படுகின்றன போன்றெனல். யாது இருக்குமிடத்தெனின்? சோமரசமென்னும் அன்ன சம்பந்தமாகிய பொருள்களில் சோமரசத்தாலுண்டாகின்ற பலவகையான களிப்பாகிய நிமித்தமிருக்குமிடத்து. யாதினா லிவ்வண்ணமெனின்? நீ மகானாயிருக்கின்றாய் ஆதலின் என்க. (4)

மந்திரம் 5.

१ २ १ २ २ ३ २ ३ १ २र ३ १र

423. क्रत्वा महाꣳ अनुष्वधं भीम आवावृते शवः ।

१ २ ३ १र ३ २ ३ २ ३ १ २र ३ १ २ ३ १र ३र

श्रिय ऋष्व उपाकयोर्नि शिप्री हरिवां दधे हस्तयोर्वज्रमायसम् ॥

இருக்கு 1-81-4.

க்ருத்வா மஹாம் அநுஷ்வதம் பீம ஆவாவ்ருதே ஶவ: |
ஶ்ரிய ருஷ்வ உபாகயோர் நி ஶிப்ரீ ஹரிவாம் ததே ஹஸ்தயோர்வ
[ஜ்ரமாயஸம் ||

அந்வயம்.

क्रत्वा, महान्, भीमः, अनुष्वधं, शवः, आवावृते, ऋष्वः, शिप्री, हरिवान्, उपाकयोः, हस्तयोः, आयसं वज्रं, श्रिये, निदधे ॥

பதவுரை.

क्रत्वा	க்ருத்வா	மெய்யுணர்வால், அல்லது, கருமத்தால்
महान्	மஹாந்	மிகப் பெரியோனும்
भीमः	பீம:	பகைஞரைப் பயப்படுத்துவோனுமாகிய இந்திரன்
अनुष्वधं	அநுஷ்வதம்	சோமமாகிய அன்னத்தை யருந்திய பின்னர்
शवः	ஶவ:	தனது ஆற்றலை
आवावृते	ஆவாவ்ருதே	ஒருமுகப்பட்டுக் காட்டுகின்றான். பின்னர்
ऋष्वः	ருஷ்வ:	காணற்குரிய
शिप्री	ஶிப்ரீ	நீண்ட மூக்கை, அல்லது, தாடியையுடையவனும்
हरिवान्	ஹரிவாந்	அரியென்னுங் குதிரைகளையுடைய வனுமாகிய இந்திரன்
उपाकयोः हस्तयोः	உபாகயோ: ஹஸ்தயோ:	அருகிலுள்ள இரு கைகளில்
आयसं वज्रं	ஆயஸம் வஜ்ரம்	இரும்புமயமாகிய வச்சிராயுதத்தைச்
श्रिये	ஶ்ரியே	சம்பத்தின் பொருட்டுத்
निदधे	நிததே	தாங்குகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—7. கோதம ரிஷி.

கருமத்தால், அல்லது, மெஞ்ஞானத்தால் எல்லாரினும் மேம்பட்டோனும், சத்துருக்கட்குப் பலங் கொடுப்போனுமாகிய இந்திரன், சோமமாகிய அன்னத்தை யருந்திய பின்னர், தனது வலியை ஒருமுகமாய் வெளிப்படுத்துகின்றான். பின்னர், பார்க்கத்தக்க மூக்கையுடையவனும், அல்லது, முகத்தின் அமைப்பையுடையவனும், குதிரைகளையுடையவனுமாகிய இந்திரன் அருகினின்ற இருபுயங்களிலும் இரும்பு மயமாகிய வச்சிராயுதத்தை, சம்பத்தின்பொருட்டுத் தாங்குகின்றான். சோமரச மருந்தியதாற் களிப்படைந்த பேராற்றலுடைய இந்திரன் பகைஞரை யழிப்பதற்கு வச்சிராயுதமேந்தி நிற்கின்றான் என்பது பொருள். (5)

குறிப்பு.—அண்டிச் சுவரா, என்பது அன்னத்தின் பெயரென, 2·7·17·ல் நிருத்தங் கூறுகின்றது.

மந்திம் 6.

२ ३ १ २र ३ २३१ २ ३ १ २

424. स घा तं वृषणꣳ रथमधितिष्ठाति गोविदम् ।

१ २र ३२ ३१ २ ३ १ २३ २३क २र ३ ३२

यः पात्रं हारियोजनं पूर्णमिन्द्र चिकेतति योजा न्विन्द्र ते हरी॥६॥

இருக்கு 1-83-4.

ஸ வா தம் வ்ருஷணம் ரயமதிதிஷ்டாதி கோவிதம் ।
யஃ பாத்ரம் ஹாரியோஜநம் பூர்ணமிந்த்ர சிகேததி யோஜா ந்விந்த்ர
[தே ஹரீ ॥

அந்வயம்.

स घा इन्द्रः, वृषणं, गोविदं, तं रथं अधितिष्ठाति, यः, हारियोजनं, पूर्णं, पात्रं, चिकेतति, ते, हरी, नु, योज ॥

பதவுரை.

स घा इन्द्रः	ஸ வா இந்த்ரஃ	அவ்விந்திரன்
वृषणं	வ்ருஷணம்	மனோவேட்கையைப் பொழியப் பெற்றதும்
गोविदं	கோவிதம்	கோக்களை யடைவிப்பதுமாகிய
तं रथं अधितिष्ठाति	தம் ரதம் அதிதிஷ்டாதி	அவ் விரதத்திலேறுவானாக.

यः	யঃ	எந்த இரதம்
हारियोजनं	ஹாரியொஜநம்	பொரிமாவுடன் கூடிய
पूर्णं	பூர்ணம்	சோமரசம் நிறைந்த
पात्रं	பாத்ரம்	பாண்டத்தை
चिकेतति	சிகெததி	அறிவுறுத்துகின்றதோ,
हे इन्द्र !	ஹெ இந்த்ர !	இந்திர !
ते	தெ	உன்னுடைய
हरी	ஹரீ	குதிரைகளை
नु	நு	விரைவில்
योज	யொஜ	அவ் விரதத்திற் பூட்டுவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—6. கோதம ரிஷி.

அவ்விந்திரன், உண்மையாய் மனோவாஞ்சையைப் பெய்வதும், கோக்களைச் சேர்விப்பதுமாகிய இரதத்தி லேறுவானாக. இந்திர! எவ்விரமானது ஆரி, என்னும் பொரிமாவோடு கூடிய சோமரசம் நிறைந்த பாத்திரத்தைத் தெரிவிக்கின்றதோ, அந்த இரதத்திலேறுவாயாக என முன்னுள்ளதோடு அந்வயித்துக் கொள்க. உன்னுடைய குதிரைகளை விரைவில் தேரிற் பூட்டுவாயாக என்பதாம். (6)

மந்திரம் 7.

२ १ २र ३ ३ २ ३ १ २र ३१ २

425. अग्निं तं मन्ये यो वसुरस्तं यं *यन्ति धेनवः ।

२ ३ १२ ३२उ ३ १ २ ३ २ ३ १२ ३ २ ३ १ २

अस्तमर्वन्त आशवोस्तं नित्यासो वाजिन इषꣳ स्तोतृभ्य आभर॥७॥

இருக்கு 5-6-1.

அக்நிம் தம் மந்யெ யொ வஸுரஸ்தம் யம் யந்தி தெநவঃ ।

அஸ்தமர்வந்த ஆஶவொஸ்தம் நித்யாஸொ வாஜிந இஷம் ஸ்தொ

[த்ருப்ய ஆபர ॥

அந்வயம்.

यः, वसुः, अस्तं, यं, धेनवः, यन्ति, अस्तं, आशवः, अर्वन्तः, अस्तं,

नित्यासः, वाजिनः तं अग्निं मन्ये, स्तोतृभ्यः, इषं, आभर ॥

---

* नमन्ति, என்பது இருக்கு.

பதவுரை.

	ய:	எவ்வக்கினி
	வஸு:	வழிபடுவோர்கட்குத் தனமோ,
स्तं	அஸ்தம்	வீடென யாவர்கட்கும் பற்றுக் கோடாமோ,
यं	யம்	எவ்வக்கினியை
धेनवः	தேநவ:	கோக்கள்
यन्ति	யந்தி	திருப்தி செய்யப் போகின்றனவோ,
अस्तं	அஸ்தம்	பற்றுக் கோடாகிய எவ் வக்கினியை
आशवः	ஆஶவ:	வேகமுள்ள
अर्वन्तः	அர்வந்த:	குதிரைகளடைகின்றனவோ,
अस्तं	அஸ்தம்	பற்றுக் கோடாகிய எவ் வக்கினியை
नित्यासः	நித்யாஸ:	நித்தியம் உபாசிக்கின்றவனும்
वाजिनः	வாஜிந:	அவியைத் தாங்குபவனுமாகிய வேள்வித்தலைவன் அடைகின்றானோ,
तं अग्निं मन्ये	தம் அக்நிம் மந்யே	அவ்வக்கினியை யான் துதிக்கின்றேன்.
स्तोतृभ्यः	ஸ்தோத்ருப்ய:	துதிக்கின்ற எமக்கு
इषं	இஷம்	(அவ்வக்கினி) அன்னத்தைக்
आभर	ஆபர	கொடுக்குக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—7. வசுசுருத ரிஷி.

எவ் வக்கினி வழிபடுவோர்கட்குத் தனமாயிருக்கின்றதோ, யாவர்கட்கும் வீடுபோல் ஆசிரயமாயுள்ள எவ்வக்கனியை, கோக்கள் பிரியப்படுத்துமாறு அடைகின்றனவோ, மற்றும், யாவர்கட்கும் பற்றுக்கோடாயுள்ள எவ்வக் கினியை விரைவிற்செல்லுஞ் சீலமுள்ள குதிரைகள் அடைகின்றனவோ, அவ்வாறே நித்திய வேள்வி செய்துள்ள அவிகளென்னும் அன்னங்களை யுடைய வேள்வித்தலைவர்கள் அடைகின்றார்களோ, அவ் வக்கினியையான் துதிக்கின்றேன். அவ் வக்கினி துதிப்போர்கட்கு அன்னத்தைக் கொடுக்குக என்பதாம்.

(7)

மந்திரம் 8.

२उ ३ १ २३ १ २र ३ १ २

426. न तमंहो न दुरितं देवासो अष्ट मर्त्यम् ।

३ १ २ १ १२ ३ २ ३ १ २र ३ १२ ३ २ ३ १ २

सजोषसो यमर्यमा मित्रो नयति वरुणो अतिद्विषः ॥ ८ ॥

இருக்கு 10-26-1.

ந தமம்ஹோ ந து³ரிதம் தே³வாஸோ அஷ்ட மர்த்யம் ।

ஸஜோஷஸோ யமர்யமா மித்ரோ நயதி வருணோ அதித்³விஷ꞉ ॥

அந்வயம்.

देवासः, अर्यमा, मित्रः, वरुणः, सजोषसः, अतिद्विषः, यं नयति, तं मर्त्यं, अंहः, न, दुरितं, न, अष्ट ॥

பதவுரை.

हे देवासः !	ஹே தே³வாஸ꞉ !	தேவர்காள் !
अर्यमा	அர்யமா	தண்டிக்கின்ற அரியமாதேவதையும்
मित्रः	மித்ர꞉	காப்பாற்றுகின்ற மித்திர தேவதையும்
वरुणः	வருண꞉	பாவத்தை நீக்குகின்ற வருண தேவதையும்
सजोषसः	ஸஜோஷஸ꞉	அன்பினால் ஒன்று கூடியவர்களாய்
अतिद्विषः	அதித்³விஷ꞉	சத்துருக்களை வெற்றிகொள்ளச் செய்து
यं नयति	யம் நயதி	எவனை மேற்பதவியிற் சேர்க்கின்றார்களோ,
तं मर्त्यं	தம் மர்த்யம்	அம் மனிதனுக்குப்
अंहः	அம்ஹ꞉	பாவம்
न	ந	இல்லை.
दुरितं	து³ரிதம்	அதனுடைய பயனாகிய துர்க்கதியும்
न अष्ट	ந அஷ்ட	(அவனைப்) பற்றுவதில்லை.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—8. அம்மோமுக் வாமதேவ்ய ரிஷி.

தேவர்களே ! பகைஞரைத் தண்டிக்கும், அரியமா என்னுந்தேவதை, எவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றதோ, காப்பாற்றுகின்ற மித்திர

தேவதை எவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றதோ! பாவத்தை நீக்கும் வருணதேவதை எவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றதோ! அதாவது இம் மூன்று தேவர்களும் தம்முட் கூடினவர்களாய், அல்லது, பிரியமுடையவர்களாகி, சத்துருக்களைக் கடக்கச் செய்து துதிக்கின்றவனாகிய எவனை மேற்பதவியிற் கொண்டு சேர்க்கின்றார்களோ, (ஒவ்வொருவரைக் குறித்து ஒருமை) அவனை, பாவமும் அதன் பயனாகிய துர்க்கதியும் அணுகுவதில்லை என்பதாம். (8)

எட்டாவது கண்டம்.

முற்றும்.

ஒன்பதாவது கண்டம்.

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—9.

பத்து மந்திரங்களாலானது.

தேவதை 1, 6, 10, சோமன். 7, மருத்து. 8, அக்கினி. 9, வாசினம். சந்தங்கள். 1, 3, 4, 5, 7, 10, துவிபதபங்தி. 8, பந்தபங்தி. 9, பரோஷ்ணிக். 2, 3, திரிபதா. அநுஷ்டுப் பிபீலிகாமத்தியா. சுரம். 1, 3, 8, 10, பஞ்சமம். 2, 6, காந்தாரம். 9, ரிஷபம்.

மந்திரம் 1.

२३ २ ३१ २ ३ २ ३ १ ३ १ २र

427. परि प्र धन्वेन्द्राय सोम स्वादुर्मित्राय पूष्णे भगाय ॥ १ ॥

இருக்கு 6-109-1.

𑌪𑌰𑌿 𑌪𑍍𑌰 𑌧𑌨𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌯 𑌸𑍋𑌮 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁𑌰𑍍𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌯 𑌪𑍂𑌷𑍍𑌣𑍇 𑌭𑌗𑌾𑌯 ॥

அந்வயம்.

हे सोम!, स्वादुः, इन्द्राय, मित्राय, पूष्णे, भगाय, परिप्रधन्व ॥

பதவுரை.

हे सोम!	ஹெ ஸொாஉ!	சோமரசமே!
स्वादुः	ஸ்வாது꞉	இன்சுவையுடைய நீ
इन्द्राय	ஊ஦்ராய	இந்திரனுக்கும்
मित्राय	மித்ராய	மித்திர தேவதைக்கும்
पूष्णे	வூஷ்ணெ	பூஷாதேவதைக்கும்
भगाय	ஹ஗ாய	ஐசுவரிய தேவதைக்கும்
परि प्रधन्व	வரி ப்ரயந்வ	எல்லாப் பாத்திரங்களிலும் நிறைவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—1. திரியர்ண திரிசதஸ்யு ரிஷிகள்.

சோமரசமே! இன்சுவையுள்ள நீ இந்திரன் பொருட்டும், மித்திர பூஷா தேவதைகளின் பொருட்டும், எல்லாப் பாத்திரங்களிலும் நிறைவாயாக என்பதாம். (1)

மந்திரம் 2.

२३१ २ ३ १२ ३ १२ ३ १ २ २१२
428. **पर्यूषु प्र धन्व वाजसातये परि वृत्राणि सक्षणिः ।**
३ २ ३१ २ ३ १ २
द्विषस्तरध्या ऋणया न *ईरसे ॥ २ ॥

இருக்கு 9-130-1.

வயூஷு ப்ரயந்வ வாஜஸாதயெ வரி வ்ருத்ராணி ஸக்ஷணிஃ ।
த்விஷஸ்தரயூா ஙிணயா ந ஈரஸெ ॥

அந்வயம்.

हे सोम!, सु, वाजसातये, परिप्रधन्व, सक्षणिः, वृत्राणि, परि, नः, ऋणया, द्विषः, तरध्यै, ईरसे ॥

பதவுரை.

हे सोम!	ஹெ ஸொாஉ!	சோமரசமே! நீ
सु	ஸு	இனிது
वाजसातये	வாஜஸாதயெ	அன்னத்தைக் கொடுத்தற் பொருட்டுப்
परि प्रधन्व	வரி ப்ரயந்வ	பாண்டங்களில் நிறைவாயாக.

*ईयसे, என்பது இருக்கு.

सक्षणिः	ஸக்ஷணி:	பொறுமையாஞ் சீலமுடைய நீ
वृत्राणि	வ்ருத்ராணி	சத்துருக்களிடத்துப்
परि	பரி	போரிடுவாயாக.
नः	ந:	எங்களுடைய
ऋणया	ருணயா	கடனை யொழிக்கின்ற நீ
द्विषः	த்விஷ:	சத்துருக்களைக்
तरध्यै	தரத்யை	கடப்பதற்கு, அல்லது, கொல்வதற்குப்
ईरसे	ஈரஸே	போரிடச் செல்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—2. திரியர்ண திரிசதஸ்யு ரிஷி.

சோமரசமே! நீ எங்கட்கு மிகுதியாய் அன்னங்கொடுத்தற் பொருட்டாகவே நாற்புறமு மினிது சூழ்வாயாக. அல்லது, அன்ன இலாபத்தின் பொருட்டுப் போர்க்குச் செல்வாயாக. அன்றியும், அடங்கிய குணமுடைய நீ போரின் பொருட்டு சத்துருக்களை அடைவாயாக. அப்பொருளை கூறப்படுகின்றது:—எங்களுடைய கடன்களை யொழிக்கப்பட்ட நீ சத்துருக்களைக் கடக்க, அல்லது, கொல்லச் செல்கின்றாய். (2)

மந்திரம் 3.

१२ ३ १ २३२ ३ २ ३ २ ३ २ १ २ २२

429. **पवस्व सोम महान्त्समुद्रः पिता देवानां विश्वाभिधाम ॥ ३ ॥**

இருக்கு 6-106-4.

பவஸ்வ ஸோம மஹாந்த்ஸமுத்ர: பிதா தேவாநாம் விஶ்வாபிதாம ॥

அந்வயம்.

हे सोम!, महान्, समुद्रः, पिता, विश्वा, देवानां, धाम, पवस्व ॥

பதவுரை.

हे सोम!	ஹே ஸோம!	சோமரசமே! நீ
महान्	மஹாந்	பெருந்தன்மை யுடையவனும்
समुद्रः	ஸமுத்ர:	இரசமாய் ஒழுகுவோனுமாகின்றாய்.
पिता	பிதா	அனைவரையுங் காப்பாற்றுகின்ற

विश्वा	விஶ்வா	எல்லாத்
देवानां	தெவாநாம்	தேவர்களுடைய
धाम	யாம	இடங்களிலும் (உள்ள)
पवस्व	வவஸ்வ	பாத்திரங்களை நிறையச் செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—3. திரியர்ண திரிசதஸ்யு ரிஷி.

சோமரசமே! தேவர்கட்குக் கொடுக்குந் தன்மையாற் பெருந்தன்மையுடையவனும், பெருகிய இரசங்களா லொழுகப்பட்டவனும், காப்பாற்றுவோனுமாகிய நீ, தேவர்களுடைய தேகங்களைக் குறியாக வைத்துக்கொண்டு பாத்திரங்களை நிறையச் செய்வாயாக என்பதாம். (3)

மந்திரம் 4.

१२ ३२उ ३ २ ३ २ ३ २ ३ १ २र

430. **पवस्व सोम महे दक्षायाश्वो न निक्तो वाजी धनाय ॥ ४ ॥**

இருக்கு 9-109-10.

வவஸ்வ ஸொம மஹெ தக்ஷாயாஶ்வோ ந நிக்தோ வாஜீ யநாய ॥

அந்வயம்.

हे सोम !, अश्वः न, निक्तः, वाजी, महे, दक्षाय, धनाय, पवस्व ॥

பதவுரை.

हे सोम !	ஹெ ஸொம !	சோமரசமே!
अश्वः न	அஶ்வ: ந	குதிரையைப் போன்று
निक्तः	நிக்த:	நீராற் சுத்தஞ் செய்யப் பெற்று
वाजी	வாஜீ	வேகமுடையவனுயுள்ள நீ
महे	மஹெ	மிகுந்த
दक्षाय	தக்ஷாய	ஆற்றலின் பொருட்டும்
धनाय	யநாய	தனத்தின் பொருட்டும்
पवस्व	வவஸ்வ	பாத்திரத்தை நிறையச் செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—4.

சோமரசமே! குதிரையைப் போன்று விரைவுடையவனும், நீராற் பவித்திரமாக்கப் பெற்றவனுமாகிய நீ பேராற்றலின் பொருட்டும், தனத்தின் பொருட்டும், பாத்திரத்தை நிறையவைப்பாயாக என்பதாம். (4)

மந்திரம் 5.

१ २ ३ २३१ २ ३ २३१२ ३१ २२

431. इन्दुः पविष्ट चारुर्मदायापामुपस्थे कविर्भगाय ॥ ५ ॥

இருக்கு 9-109-13.

ஐந்துஃ பவிஷ்ட சாருர்மதாயாபாமுபஸ்தெ கவிர்பகாய ॥

அங்வயம்.

चारुः, कविः, इन्दुः, भगाय, मदाय, अपां उपस्थे, पविष्ट ॥

பதவுரை.

चारुः	சாருஃ	மங்களமாகியவனும்
कविः	கவிஃ	நுண்ணறிவுடையவனுமாகிய
इन्दुः	இந்துஃ	சோமரசமே! நீ
भगाय	பகாய	போற்றத்தக்க தனத்தின் பொருட்டும்
मदाय	மதாய	களிப்பின் பொருட்டும்
अपां उपस्थे	அபாம் உபஸ்தெ	நீருக்குள்
पविष्ट	பவிஷ்ட	நிறைகின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—5. திரியர்ண திரிசதஸ்யு ரிஷி.

மங்களமானவனும், நீண்மதி யுடையோனுமாகிய சோமரசமே! நீ நீரின் மத்தியில் அதாவது அந்தரிட்சத்தில், அல்லது, பாத்திரத்திற், களிப்பின்பொருட்டு நிறைகின்றாய் என்பதாம். (5)

மந்திரம் 6.

२ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २
432. अनु हि त्वा सुतꣳ सोम मदामसि महे समर्य्यराज्ये ।
१ २ ३ १ २ ३ १ २
वाजाꣳ अभि पवमान प्र गाहसे ॥ ६ ॥

இருக்கு 9-110-2.

𑌅𑌨𑍁 𑌹𑌿 𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌤𑌂 𑌸𑍋𑌮 𑌮𑌦𑌾𑌮𑌸𑌿 𑌮𑌹𑍇 𑌸𑌮𑌰𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 ।
𑌵𑌾𑌜𑌾𑌂 𑌅𑌭𑌿 𑌪𑌵𑌮𑌾𑌨 𑌪𑍍𑌰 𑌗𑌾𑌹𑌸𑍇 ॥

அங்வயம்.

हे सोम!, सुतं, त्वा, अनुमदामसि हि, पवमान, महे, समर्य्यराज्ये, वाजान्, अभिप्रगाहसे ॥

பதவுரை.

हे सोम!	𑌹𑍇 𑌸𑍋𑌮!	சோமரசமே!
सुतं	𑌸𑍁𑌤𑌂	பிழிந்தெடுக்கப்பெற்ற
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னை
अनुमदामसि हि	𑌅𑌨𑍁𑌮𑌦𑌾𑌮𑌸𑌿 𑌹𑌿	முறையாய்த் துதிக்கின்றோம்.
पवमान!	𑌪𑌵𑌮𑌾𑌨!	பாதுகாப்பாற்றுவோய்! நீ
महे	𑌮𑌹𑍇	பெரியை.
समर्यराज्ये	𑌸𑌮𑌰𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑍇	மனிதர்களோடு கூடிய
वाजान् अभिप्रगाहसे	𑌵𑌾𑌜𑌾𑌨𑍍 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌗𑌾𑌹𑌸𑍇	தனது இராச்சியத்தைக் காப்பாற்றுதற்குப் பகைஞர்படைகளை நோக்கிச் செல்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—6. திரியர்ண திரிசதஸ்யு ரிஷி.

சோமரசமே! பிழிந்தெடுத்துள்ள நின்னை உண்மையில் முறையாகத் துதிக்கின்றோம். பாதுகாக்குஞ் சோமரசமே! நீ பெரியை. மனிதர்களோடு கூடிய இராச்சியத்தைப் பாதுகாப்பாற்றுதற் பொருட்டுச் சத்துருக்களின் ஆற்றலை நோக்கி நன்கு சென்றுகொண்டிருக்கின்றாய் என்பதாம். (6)

மந்திரம் 7.

१ ३क २र ३ २३ १ २ ३२ ३ २ ३ २ ३ १ २

433. क ईम् व्यक्ता नरः सनीडा रुद्रस्य मर्या अथा स्वश्वाः ॥ ७ ॥

இருக்கு 8-21-1.

க ஈம் வ்யக்தா நர: ஸநீடா ருத்ரஸ்ய மர்யா அதா ஸ்வச்வா: ||

அந்வயம்.

व्यक्ताः, नरः, सनीडा, मर्याः, अथा, स्वश्वाः, रुद्रस्य, ईम्, के? ॥

பதவுரை.

व्यक्ताः	வ்யக்தா:	காந்தியை யுடையவர்களும்
नरः	நர:	தலைமையைத் தாங்குவோர்களும்
सनीडा	ஸநீடா	ஒத்த இடத்தையுடையார்களும்
मर्याः	மர்யா:	மனிதர்கட்கு இன்பஞ் செய் வோர்களும்
अथा	அதா	மற்றும்
स्वश्वाः	ஸ்வச்வா:	சிறந்த குதிரையை யுடையார் களும்
रुद्रस्य	ருத்ரஸ்ய	இரக்கத்தோடு வேண்டுவோர் கட்கு இதஞ் செய்பவர்களு மான
ईम्	ஈம்	இத்தன்மையர்கள்
के?	கெ?	யாவர்கள்?

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—7. வாசிட்ட ரிஷி.

காந்தியோடு கூடியவர்களும், தலைமையாய்ச் செலுத்துவோர்களும், ஒத்த இடமுடையார்களும், அழுது துன்புற்ற மனிதர்கட்கு நலஞ்செய் வோர்களும், மற்றும், சிறந்த குதிரையையுடையார்களுமான இவ்வண் ணத்தவர்கள் எவர்களிருக்கின்றார்கள்? வடிவ வியப்பினால் இருடியானவர் அற்புதமாகச் சொல்கின்றார் என்பதாம். (7)

மந்திரம் 8.

२३ २ ३ २३ २उ ३ २ ३ २ ३ १ २ ३ १२

434. अग्ने तमद्याश्वं नस्तोमैः क्रतुं न भद्रं हृदिस्पृशम् ।

३ १ २ ३ १२

ऋध्यामा त ओहैः ॥ ८ ॥

இருக்கு 4-10-1.

𑌅𑌗𑍍𑌨𑍇 𑌤𑌮𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌵𑌂 𑌨 𑌸𑍍𑌤𑍋𑌮𑍈𑌃 𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌨 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌪𑍃𑌶𑌮𑍍 ।
𑌋𑌧𑍍𑌯𑌾𑌮𑌾 𑌤 𑌓𑌹𑍈𑌃 ॥

அந்வயம்.

हे अग्ने!, अद्य, ओहैः, स्तोमैः, अश्वं न, क्रतुं न, भद्रं, हृदिस्पृशं, तं, ऋध्याम ॥

பதவுரை.

हे अग्ने!	𑌹𑍇 𑌅𑌗𑍍𑌨𑍇!	அக்கினியே!
अद्य	𑌅𑌦𑍍𑌯	இன்று, வேட்போர் முதலிய யாங்கள்
ओहैः	𑌓𑌹𑍈𑌃	இந்திரன் முதலிய தேவர்களை அடையச் செய்கின்ற
स्तोमैः	𑌸𑍍𑌤𑍋𑌮𑍈𑌃	தோத்திரங்களால்,
अश्वं न	𑌅𑌶𑍍𑌵𑌂 𑌨	பரிபோல் அவிகளைக் கொண்டு சேர்ப்பிப்பதும்
क्रतुं न	𑌕𑍍𑌰𑌤𑍁𑌂 𑌨	வேள்வி செய்வான் போன்று (அநுகூலஞ் செய்வதும்)
भद्रं	𑌭𑌦𑍍𑌰𑌂	மங்கலமாகியதும்
हृदिस्पृशं	𑌹𑍃𑌦𑌿𑌸𑍍𑌪𑍃𑌶𑌂	மிக அன்புள்ளதும்
तं	𑌤𑌂	கீர்த்தி யுடையதுமாகிய அத்தகைய உன்னை
ऋध्याम	𑌋𑌧𑍍𑌯𑌾𑌮	வளர்க்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—8. வாமதேவ ரிஷி.

அக்கினியே! நீ இத்தினத்தில் வேட்போர் முதலிய யாங்கள் இந்திரன் முதலிய தேவர்களை யடைவிக்கத்தக்க தோத்திர மஞ்சரிகளால், கீர்த்திபெற்ற உன்னை இனிது விருத்திபண்ணுகின்றோம். எத்தன்மைய நின்னை யெனின்? சுமை சுமக்கின்ற குதிரை யொப்ப அவிகளைத் தாங்குவோனாகிய தலைவனை யொத்து அனுகூலஞ் செய்வோனை. அங்ஙனமே போற்றற்குரியானை. மற்றும், உள்ளத்தில் அன்பு செய்வானை. விருத்தி பண்ணுகின்றோம் என்பதனோடு சேர்த்துக்கொள்க. (8)

மந்திரம் 9.

३ १ २ ३ १ २र ३ १ २ ३ १ २ ३ २ ३२

435. आविर्मर्त्या आ वाजं वाजिनो अग्मन् देवस्य सवितुः सवम् ।

३ १ २

स्वर्गाँ३ अर्वन्तो जयत ॥ ९ ॥

ஆவிர்மர்த்யா ஆவாஜம் வாஜினோ அக்மந் தேவஸ்ய ஸவிதுஃஸவம்।
ஸ்வர்காம் அர்வந்தோ ஜயத ॥

அந்வயம்.

मर्त्याः, आविः, वाजिनः, सवितुः देवस्य, सवं, वाजं, अग्मन्, स्वर्गाँ, अर्वन्तः, जयत ॥

பதவுரை.

मर्त्याः	மர்த்யா:	மனிதர்கட்கு இனிமை செய்வதும்
आविः	ஆவி:	பிரகாசமுடையதுமாகிய
वाजिनः	வாஜிந:	அவியேற்குந் தேவதையானது,
सवितुः देवस्य	ஸவிது: தேவஸ்ய	ஏவுந்தேவதைகட்குத்
सवं	ஸவம்	தேடற்குரிய
वाजं	வாஜம்	அன்னமாகிய சோமரசத்தைப்
अग्मन्	அக்மந்	பெற்றுக்கொண்டது. ஆதலின் வேள்வித் தலைவர்காள்! நீவிர்
स्वर्गाँ	ஸ்வர்கம்	சுவர்க்கத்தையும்
अर्वन्तः	அர்வந்த:	குதிரைகளையும்
जयत	ஜயத	வெற்றி கொள்வீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—9. வாசிதேவதைகளின் துதி.

மனிதர்கட்கு இனிமையானதும், பிரகாசமுடையமாகிய வாசினம் என்னுந் தேவதையானது, ஏவற்றேவதையினுடைய அன்னமாகிய சோமத்தைப் பெற்றுக்கொண்டது. வேள்வித் தலைவர்காள்! நீவிர் சுவர்க்கத்தையும், குதிரைகளையும் வெற்றிகொள்வீர்களாக என்பதாம் (9)

மந்திரம் 10.

१२ ३ १ २ ३२ ३ १ २ ३१२ ३ २

436. पवस्व सोम द्युम्नी सुधारो महाँ अवीनामनु पूर्व्यः ॥ १० ॥

இருக்கு 9-109-7.

பவஸ்வ ஸோம த்யும்நீ ஸுதாரோ மஹாம் அவீநாமநு பூர்வ்ய:॥

அந்வயம்.

हे सोम!, द्युम्नी, सुधारः, पूर्व्यः, महान्, अवीनां, अनुपवस्व ॥

பதவுரை.

हे सोम!	ஹே ஸோம!	சோமரசமே!
द्युम्नी	த்யும்நீ	அன்னம், அல்லது, கீர்த்தியை யுடையதும்
सुधारः	ஸுதார:	அழகிய தாரையை யுடையதும்
पूर्व्यः	பூர்வ்ய:	பழமையானதும்
महान्	மஹாந்	பெரிதுமாகிய நீ
अवीनां	அவீநாம்	ஆட்டின் உரோமங்களினின்றும்
अनुपवस्व	அநுபவஸ்வ	முறையாய் ஒழுகுவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—10. ஐசுவரர்கள், திஷண்யார்கள் ரிஷிகள்.

சோமரசமே! அன்னமுடையதும், அல்லது, கீர்த்தி யுடையதும், 'த்யும்நம்' என்பது அன்னமென யாஸ்க முனிவரும் நிகண்டின் நைகம காண்டம் 5-5-ல் கூறியுள்ளார். அழகிய தாரையையுடையதும், பழமை யானதும், மகத்தாகியதுமாகிய நீ உரோமங்களினின்றும் (வடிக்கும் கம்ப ளியிலிருந்து) முறையாய் நிறைவாயாக என்பதாம். (10)

குறிப்பு—ஈண்டு 'த்யும்நம்' என்பது கீர்த்தியாம்.

ஒன்பதாவது கண்டம்

முற்றும்.

பத்தாவது கண்டம்.

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—10.

பத்து மந்திரங்களாலானது.

தேவதைகள். 1, 5, 8, 10, இந்திரன். 6, விசுவ தேவர்கள். 7, உஷா. சந்தம், பந்தி. சுரம், பஞ்சமம்.

மந்திரம் 1.

१ २ ३ १ २ ३ १ २ ३ २ ३ १ २ ३ १ २

437. विश्वतो दावन् विश्वतो न आभर यं त्वा शविष्ठमीमहे ॥ १ ॥

விஶ்வதோ தாவந் விஶ்வதோ ந ஆபர யம் த்வா ஶவிஷ்டமீமஹே ॥

அந்வயம்.

विश्वतो दावन्!, शविष्ठं, यं त्वा, ईमहे, विश्वतः, नः, आभर ॥

பதவுரை.

विश्वतो दावन्!	விஶ்வதோ தாவந்!	யாண்டுஞ் சத்துருக்களை யழிப்போனும், அன்பர்கட்கு வரங் கொடுப்போனுமாகிய இந்திர! நீ
शविष्ठं	ஶவிஷ்டம்	பேராற்றலுடைய
यं त्वा	யம் த்வா	யாதொரு நின்னைக் குறித்து
ईमहे	ஈமஹே	விரும்பியதை யிரக்கின்றோம்.
विश्वतः	விஶ்வதঃ	எல்லாவகையானும்
नः	நঃ	எங்கட்கு
आभर	ஆபர	விரும்பிய பொருளைக் கொடுப்பாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—1.

எல்லாவகையினும் பகைஞரைத் தொலைப்போனும், யாவர்கட்கும் ஈவோனுமாகிய இந்திரனே! நீ, எல்லா விதத்தாலும் எங்கட்கு வேண்டியதைக் கொடுப்பாயாக. மற்றும், சிறந்த வலியுடைய நின்பால் விரும்பிய பொருளை யிரக்கின்றோம் என்பதாம். (1)

மந்திரம் 2.

३२ ३२उ ३ २ ३ २ ३ १ २ ३ २ ३ २
438. एष ब्रह्मा य ऋत्विय इन्द्रो नामश्रुतो गृणे ॥ २ ॥

𑌏𑌷 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌯 𑌋𑌤𑍍𑌵𑌿𑌯 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌨𑌾𑌮𑌶𑍍𑌰𑍁𑌤𑍋 𑌗𑍃𑌣𑍇 ॥

அந்வயம்.

ऋत्वियः, यः, नामश्रुतः, ब्रह्मा, एषः, गृणे ॥

பதவுரை.

ऋत्वियः	𑌋𑌤𑍍𑌵𑌿𑌯𑌃	வசந்தம், முதலிய இருதுக்களில் வெளிப்படுகின்ற
यः इन्द्रः	𑌯𑌃 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌃	யாதொரு இந்திரன்
नामश्रुतः	𑌨𑌾𑌮𑌶𑍍𑌰𑍁𑌤𑌃	தனது பெயராற் கீர்த்தியுடைய வனாயிருக்கிறானோ,
ब्रह्मा	𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾	துதிப்போர்களின் மனவிருப்பை நிறைவு பண்ணுபவனாகிய
एषः	𑌏𑌷𑌃	இத்தன்மையனைத்
गृणे	𑌗𑍃𑌣𑍇	துதிக்கின்றேன்,

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—2.

வசந்த காலம் முதலிய இருதுக்களில் தோன்றுகின்றவனாகிய யாதொரு இந்திரன் தனது திருநாமத்தாலே கீர்த்தியுடையவனாகின்றானோ, அத்தகைய இவ்விந்திரன் துதிப்போர்களின் மனம் விரும்பிய பொருளை நிறையச் செய்வோனாகின்றான். அவ் விந்திரனை யான் துதிக்கின்றேன் என்பதாம். (2)

மந்திரம் 3.

३ २ ३ १ २ ३१ २ ३ १ २र ३१२ ३ २ ३ १ २
439. ब्रह्माण इन्द्रं महयन्तो अर्कैरवर्द्धयन्नहये हन्तवा उ ॥ ३ ॥

இருக்கு 5-31-4.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌮𑌹𑌯𑌨𑍍𑌤𑍋 𑌅𑌰𑍍𑌕𑍈𑌰𑌵𑌰𑍍𑌦𑍍𑌧𑌯𑌨𑍍𑌨𑌹𑌯𑍇
[𑌹𑌨𑍍𑌤𑌵𑌾 𑌉 ॥

அந்வயம்.

अहये, हन्तवे, अर्कैः, महयन्तः, ब्रह्माणः, इन्द्रं, अवर्द्धयन् ॥

பதவுரை.

अहये हन्तवे	𑌅𑌹𑌯𑍇 𑌹𑌨𑍍𑌤𑌵𑍇	விருத்திராசுரனைக் கொல்லுதற் பொருட்டு
अर्कैः	𑌅𑌰𑍍𑌕𑍈𑌃	போற்றத்தக்க துதிகளால்
महयन्तः	𑌮𑌹𑌯𑌨𑍍𑌤𑌃	ஆராதிக்கின்ற
ब्रह्माण:	𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌃	அந்தணர்கள்
इन्द्रं	𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂	இந்திரனை
अवर्द्धयन्	𑌅𑌵𑌰𑍍𑌦𑍍𑌧𑌯𑌨𑍍	வளர்க்கின்றார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—3. திரிசதஸ்யு ரிஷி.

போற்றத்தக்க மந்திரங்களாலும், தோத்திரங்களாலும், அவியாகிய அன்னங்களாலும் ஆராதிக்கின்ற அந்தணர்கள் இந்திரனை வளர்க்கின்றார்கள். அதாவது அன்புடையோனாகச் செய்கின்றார்கள் என்பதாம். மூலத்தில் ஹந்தும், எனற் பாலது, ஈற்றேகாரம் பெற்று ஹந்தவே என்றாயிற்று. ஈண்டு விருத்திராசுரனை, கொல்லுந் தொழிற்கு செயப்படு பொருளாகக் கொள்ளலின், பயநிலைக்கு விசேடணமாயிற்று. விருத்திராசுரனைக் கொல்லுதற் பொருட்டு என்பது திரண்ட பொருள். (3)

மந்திரம் 4.

१२ ३ २·३१ २ ३ २ ३ १ २ ३ १ २

440. अनवस्ते रथमश्वाय तक्षुस्त्वष्टा वज्रं पुरुहूत द्युमन्तम् ॥ ४ ॥

இருக்கு 5-31-4.

𑌅𑌨𑌵𑌸𑍍𑌤𑍇 𑌰𑌥𑌮𑌶𑍍𑌵𑌾𑌯 𑌤𑌕𑍍𑌷𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌹𑍂𑌤
[𑌦𑍍𑌯𑍁𑌮𑌨𑍍𑌤𑌮𑍍 ॥

அந்வயம்.

हे इन्द्र!, अनवः, ऋभवः, ते, अश्वाय, रथं, तक्षुः, पुरुहूत!, त्वष्टा, वज्रं, द्युमन्तं ॥

பதவுரை.

हे इन्द्र!	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰!	இந்திரனே!
अनव:	𑌅𑌨𑌵𑌃	மனிதர்களும்
ऋभव:	𑌋𑌭𑌵𑌃	தேவர்களும்
ते	𑌤𑍇	உன்னுடைய
अश्वाय	𑌅𑌶𑍍𑌵𑌾𑌯	குதிரையின் பொருட்டு

रथं	ரதம்	இரதத்தைச்
तक्षुः	தக்ஷு:	செய்தார்கள்.
पुरुहूत!	புருஹூத!	பல்லோராலழைக்கப் பெற்ற இந்திர!
त्वष्टा	த்வஷ்டா	விசுவகருமனும்
वज्रं	வஜ்ரம்	வச்சிராயுதத்தையும்
द्युमन्तं	த்யுமந்தம்	பிரகாசமுடைய தாய்ச் செய்தனன்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—4.

மனுடர்களும், தேவர்களும், உன்னுடைய குதிரையின் பொருட்டு (வாகனத்தின் பொருட்டு) இரதத்தைச் செய்தார்கள். பல்லோராலழைக்கப்படுகின்ற இந்திர! துவஷ்டா, என்னும் விசுவகருமாவும் உன்னுடைய வச்சிராயுதத்தையும் பளபளப்புடையதாகச் செய்தனன் என்பதாம். (4)

மந்திரம் 5.

२ ३२ ३१ २ ३ २ ३ १ २र ३ १ २ ३ १ २ ३ २

441. शं पदं मघं रयीषिणो न काममव्रतो हिनोति न स्पृशद्रयिम् ॥ ५ ॥

ஶம் பதம் மகம் ரயீஷிணோ ந காமமவ்ரதோ ஹிநோதி ந ஸ்ப்ருஶ[த்ரயிம் ॥

அந்வயம்.

रयीषिणः, शं, पदं, मघं, अव्रतः, न हिनोति, कामं, रयिं, न स्पृशत् ॥

பதவுரை.

रयीषिणः	ரயீஷிண:	அவியாகிய தனத்தைக் கொடுப்போர்கள்
शं	ஶம்	இன்பமாகிய
पदं	பதம்	பதவியையும்
मघं	மகம்	தனத்தையும் அடைகின்றார்கள்.
अव्रतः	அவ்ரத:	வேள்வி முதலியன செய்யாதோர்களோ,
न हिनोति	ந ஹிநோதி	தான முதலிய செய்ய முடியாதோர்களாகின்றார்கள்.
कामं	காமம்	தாம் விரும்பிய
रयिं	ரயிம்	தனத்தைத்
न स्पृशत्	ந ஸ்ப்ருஶத்	தொடுதற்கும் முடியாமற் போகின்றார்கள்.

சாயண பாடியம்

கண்டம்—10. இருக்கு—6.

அவிகளென்னும் தனங்களை யளிக்கின்ற சனங்கள் இன்பமாகிய பதவியைப் பெறுகின்றார்கள். தனத்தையும் அடைகின்றார்கள் என்பது எஞ்சியது: இந்திரனைக் குறித்து வேள்வி முதலியன செய்யாதோர்களோ, அவி கொடுக்க முடியாதவர்களாகின்றார்கள் என்பது பொருள். (அவர்கள்) சுக முதலியவைகளை யடையார்கள், தாமும் விரும்பிய இரமிக்கத்தக்க திரவியத்தைத் தொடவுமாட்டார்கள் என்பதாம். (5)

மந்திரம் 6.

२ ३ २ ३ १ २ ३ ३ १ २ ३ १ २ ३ १ २३१२
442. सदा गावः शुचयो विश्वधायसः सदा देवा अरेपसः ॥ ६ ॥

ஸதா₃ கா₃வ: ஶுசயோ விஶ்வதா₄யஸ: ஸதா₃ தே₃வா அரேபஸ: ||

அந்வயம்.

गावः, सदा, शुचयः, विश्वधायसः, सदा, देवाः, अरेपसः ॥

பதவுரை.

गावः	கா₃வ:	இந்திரனைச் சரணடைவோர்கள்
सदा	ஸதா₃	எப்போதும்
शुचयः	ஶுசய:	நிருமலர்களும்,
विश्वधायसः	விஶ்வதா₄யஸ:	உலகனைத்தையும் பரிபாலிக்கத்தக்க ஆற்றலுடையார்களும்
सदा	ஸதா₃	எப்போதும்
देवाः	தே₃வா:	தானம், முதலிய குணத்தோடு கூடியவர்களும்
अरेपसः	அரேபஸ:	பாவமற்றவர்களும் ஆகின்றார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—6.

இந்திரன் பாற் செல்பவர்கள், அல்லது, இந்திரனைத் துதிப்போர்கள் எப்போதும் உலகனைத்தையும் பாதுகாக்கத்தக்க ஆற்றலுடையவர்களாகவும், (மிகுந்த அன்னமுடையார்களாகவும்) தான முதலிய நற்குணமுடையார்களாகவும் ஆகின்றார்கள் என்பதாம். (6)

மந்திரம் 7.

१ २ ३ १२ ३ १ २र ३ १ २र
443. आयाहि वनसा सह गावः सचन्त वर्त्तनिं यदूधभिः ॥ ७ ॥

ஆயாஹி வநஸா ஸஹ காவ꞉ ஸசந்த வர்த்தநிம் யதூதபி꞉ ॥

அந்வயம்.

(हे उषः!,) वनसा सह, आयाहि, गावः, वर्त्तनिं, सचन्त, यत्, ऊधभिः ॥

பதவுரை.

(हे उषः!)	(ஹே உஷ꞉!)	(உஷா தேவியே! நீ)
वनसा सह	வநஸா ஸஹ	விரும்புதற்குரிய ஒளியுடன்
आयाहि	ஆயாஹி	வருவாயாக.
गावः	காவ꞉	உஷாதேவதையின் வாகனமாகிய கோக்கள்
वर्त्तनिं	வர்த்தநிம்	இரதத்தைச்
सचन्त	ஸசந்த	சேவிக்கின்றன.
यत्	யத்	எக்கோக்கள்
ऊधभिः	ஊதபி꞉	பெரிய முலைக்காம்புகளோடு கூடினவைகளோ! (அக்கோக்கள் கட்டப்பெற்ற இரதத்தில் வருவாயாக.)

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—7. சம்பாத ரிஷி.

உஷா தேவியே! நீ, போற்றத்தக்க ஒளியோடு வருவாயாக. உஷாவின் வாகனங்களான கோக்கள் இரதத்தைச் சேவிக்கின்றன. குதிரையற்ற இரதத்தில் வருவாயாக என்பதாம். எக் கோக்கள் முலைக் காம்புகளால் உபலக்கணமாய்க் கொள்ளப்பட்ட பருத்த தன்மையை யுடையனவோ, அக்கோக்கள் கட்டப்பெற்ற இரதத்தில் வருவாயாக எனச் சேர்த்துக் கொள்க. (7)

மந்திரம் 8.

१ २ ३ १ २र ३ २ ३ १ २ ३ २ १२
444. उप प्रक्षे मधुमति क्षियन्तः *पुष्येम रयिं धीमहे त इन्द्र ॥ ८ ॥

இருக்கு 3-82-2.

---

* पुष्यन्तो என்பது இருக்கு.

உப ப்ரக்ஷே மதுமதி க்ஷியந்த: புஷ்யேம ரயிம் தீமஹே த இந்த்ர ||

அந்வயம்.

हे इन्द्र !, प्रक्षे, ते उप क्षियन्तः, मधुमति, रयिं, पुष्येम, धीमहे ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே!
प्रक्षे	ப்ரக்ஷே	அரசன் செய்த அகப்பை விசேடத்தினுள்
ते उप क्षियन्तः	தே உப க்ஷியந்த:	நினக்கருகிலிக்கின்ற யாம்
मधुमति	மதுமதி	மதுர இரசத்தோடு கூடிய
रयिं	ரயிம்	இனிய அன்னத்தைப்
पुष्येम	புஷ்யேம	பரிமாறுகின்றோம். (மற்றும்)
धीमहे	தீமஹே	(உன்னையுந்) தியானிக்கின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—8.

இந்திரனே! (மிகுந்த திருவாளனே!) நீ, அரசனாற் செய்யப்பெற்ற அகப்பை விசேடத்தில், நினக்கருகிலுள்ள யாங்கள் இனிய இன்சுவையோடு கூடிய அன்னத்தைப் பரிமாறுகின்றோம். மற்றும், நின்னையுந் தியானிக்கின்றோம் என்பதாம் (8)

மந்திரம் 9.

१ २ ३ २ ३ १२ ३ २ २र ३ २उ ३ १ २र

445. अर्चन्त्यर्कं मरुतः स्वर्का आस्तोभति श्रुतो युवा स इन्द्रः ॥ ९ ॥

அர்சந்த்யர்கம் மருத: ஸ்வர்கா ஆஸ்தோபதி ஶ்ருதோ யுவா ஸ [இந்த்ர: ||

அந்வயம்

स्वर्काः, मरुतः, अर्कं, अर्चन्ति, युवा, श्रुतः, सः इन्द्रः, आस्तोभति ॥

பதவுரை.

स्वर्काः	ஸ்வர்கா:	அழகிய தோத்திரத்தை, அல்லது, அன்னத்தையுடைய
मरुतः	மருத:	மருத்துக்கள்
अर्कं	அர்கம்	ஆராதித்தற்குரிய இந்திரனை

अर्चन्ति	ஸஅஆஂஞி	அவிகளாலும், தோத்திரங்களாலும் ஆராதிக்கின்றார்கள்.
युवा	யுவா	கட்டிளமையுடையவனும்
श्रुतः	ஶ்ருதஃ	கீர்த்தி பெற்றவனுமாகிய
सः इन्द्रः	ஸஃ இந்த்ரஃ	அவ்விந்திரன்
आस्तोभति	ஆஸ்தோபதி	அவனுடைய பகைஞர்களைப் போராடிக் கொல்லுகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—9.

அழகான தோத்திரங்களை, அல்லது, அன்னங்களையுடைய மருத்துக்கள் (வாயு தேவதைகள்) போற்றத்தக்க இந்திரனை அவிகளாலும், தோத்திரங்களாலும் போற்றுகின்றார்கள். எக்காலு மிளைஞனும், கீர்த்தியுடையவனுமாகிய இந்திரன் சத்துருக்களை, போர் செய்து அழிக்கின்றான் என்பதாம். (9)

மந்திரம் 10.

२ ३ १ २ ३१ २ ३ १ २ ३१ २ ३ २ ३ १२

446. प्र व इन्द्राय वृत्रहन्तमाय विप्राय गाथं गायत यं जुजोषते ॥ १० ॥

சா. வே. 2-2.

ப்ர வ இந்த்ராய வ்ருத்ரஹந்தமாய விப்ராய காதம் காயத யம்
[ஜுஜோஷதே ॥

அந்வயம்.

(हे उद्गातारः!,) वृत्रहन्तमाय, विप्राय, इन्द्राय, यं, जुजोषते, गाथं, प्रगायत ॥

பதவுரை.

(हे उद्गातारः!)	(ஹே உத்காதாரஃ!)	(சாமவேதமோதுவோர்காள்!)
यं	யம்	எந்தத்துதியை (இந்திரன்)
जुजोषते	ஜுஜோஷதே	அன்போடு ஏற்றுக் கொள்கின்றானோ,
वृत्रहन्तमाय	வ்ருத்ரஹந்தமாய	வியப்புடன் விருத்திராசுரனைக் கொன்றவனும்,
विप्राय	விப்ராய	நுண்ணறிவாளனுமாகிய
इन्द्राय	இந்த்ராய	இந்திரனுக்கு
गाथं	காதம்	அத் தோத்திரத்தை
प्रगायत	ப்ரகாயத	நன்கு படிப்பீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—10. இருக்கு—10.

சாமமறை பாடுவோர்காள்! நீவிர், அதிசயமாய் விருத்திராசுரனைக் கொன்றவனும், நுண்ணறிவாளனுமாகிய இந்திரன் பொருட்டு, அவ் விந்திரன் எத் தோத்திரத்தை அன்புடன் ஏற்றுக்கொள்கின்றனோ, அத் தோத்திரத்தை இனிது படிப்பீர்களாக. (10)

பத்தாவது கண்டம்

முற்றும்.

பதினோராவது கண்டம்

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—11.

பத்து மந்திரங்களாலானது.

தேவதைகள். 1, 2, அக்கினி. 3, 4, 8, 10, இந்திரன். 5, உஷா. 6. 7, 9, விசுவ தேவர்கள்.

சந்தம், 1, 2, 5, 7, துவிபத பந்தி. 3, 8, பஞ்சதசாக்ஷர காயத்திரி. 10, ஏகபதா அட்டாக்ஷர காயத்திரி. 6, 8, 9, துவிபதா திருஷ்டுப்.

சுரம். 1, 2, 5, 7, பஞ்சமம். 3, 4, 10, ஷட்ஜம். 6, 8, 9, தைவதம்.

மந்திரம் 1.

१२ ३१ २र ३ २उ ३१२

447. अचेत्यग्निश्चिकितिर्हव्यवाड् न सुमद्रथः ॥ १ ॥

இருக்கு 8-56-5.

அசேத்யக்நிஶ்சிகிதிர்ஹவ்யவாட் ந ஸுமத்³ரத²: ॥

---

* चिकितुः हव्यवाड सः, என்பது இருக்கு.

அந்வயம்.

हव्यवाट्, चिकितिः, सुमद्रथः न, अग्निः, अचेति ॥

பதவுரை.

हव्यवाट्	ஹவ்யவாட்	அவியைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதும்
चिकितिः	சிகிதி:	சிறந்த அறிவுடையதும்
सुमद्रथः न	ஸுமத்ரத2: ந	நல்ல அவிகளோடு கூடிய ரதம் போன்றதுமாகிய
अग्निः	அக்நி:	அக்கினி
अचेति	அசேதி	அறிகின்றது, அல்லது, அறியப்படுகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—1.

அவிகளை யேற்றுச் செல்வதும், சிறந்த அறிவுடையதும், நல்ல அவியோடு கூடியதுமாகிய இரதமொத்த அக்கினி, அனைவர்களாலு மறியப்படுகின்றது. அல்லது, அவிகொடுக்கும் வேள்வித் தலைவனை யறிகின்றது என்பதாம். (1)

மந்திரம் 2.

२ ३ २ ३ १ २ ३ २ ३ २ ३ १ २ ३ १ २ र

448. अग्ने त्वं नो अन्तम उत त्राता शिवो * भुवा वरूथ्यः ॥ २ ॥

அக்நே த்வம் நோ அந்தம உத த்ராதா ஶிவோ பு4வா வரூத்2ய:॥

அந்வயம்.

हे अग्ने!, वरूथ्यः, त्वं, नः, अन्तमः, उत, त्राता, शिवः भुवः ॥

பதவுரை.

हे अग्ने!	ஹே அக்நே!	அக்கினியே!
वरूथ्यः	வரூத்2ய:	வழிபடுதற்குரிய
त्वं	த்வம்	நீ
नः	ந:	எங்கட்கு
अन्तमः	அந்தம:	மிக அருகிலிருப்பவனாகவும்
उत	உத	மற்றும்
त्राता	த்ராதா	காப்பாற்றுவோனாகவும்
शिवः	ஶிவ:	சுகந்தருவோனாகவும்
भुवः	பு4வ:	ஆவாயாக.

* भवा, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—2. பந்து ரிஷி.

அக்கினியே! நீ, வழிபடற்குரிய, அல்லது, வேள்விச் சாலைகாளற் சூழப்பெற்ற எங்கட்கு மிக அருகிலிருப்போனும், மற்றும், பாதுகாப்போனும், சுகஞ்செய்வோனும் ஆவாயாக என்பதாம். (2)

மந்திரம் 3.

२ ३ २ ३ २ ३ २ ३ २ ३ १ २ १२

449. **भगो न चित्रो अग्निर्महोनां दधाति रत्नम् ॥ ३ ॥**

ஹகோ ந சித்ரோ அக்நிர்மஹோநாம் ஦யாதி ரத்நம் ॥

அந்வயம்.

महोनां, भगो न, चित्रः, अग्निः, रत्नं, दधाति ॥

பதவுரை.

महोनां	மஹோநாம்	பெரிதுகளுக்குள்
भगो न	ஹகோ ந	இரவியை யொத்ததும்
चित्रः	சித்ர:	விசித்திரமான குணமுடையதும் அல்லது, போற்றத்தக்கதுமாகிய
अग्निः	அக்நி:	அக்கினியானது, வேள்வி செய்வோர்கட்குச்
रत्नं	ரத்நம்	சிறந்த தனத்தைக்
दधाति	஦யாதி	கொடுக்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—3.

மகத்துக்களுக்குள் சூரியனைப் போன்று விசித்திர வடிவத்தையுடைய, அல்லது, ஆராதித்தற்குரிய தன்மையையுடைய அக்கினி, வேட்போர்கட்கு இரமணீயமாகிய தனத்தைக் கொடுக்கின்றது என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २ ३ १ २ ३ २ ३ १ २र ३ १ ३ २

450. **विश्वस्य प्रस्तोभ पुरो वासन् यदि वेह नूनम् ॥ ४ ॥**

விஶ்வஸ்ய ப்ரஸ்தோஹ புரோ வாஸந் யதி வேஹ நூநம் ॥

அந்வயம்.

विश्वस्य, प्रस्तोभः, यदि वा, इह, नूनं, पुरो, वासन् ॥

பதவுரை.

विश्वस्य	விஸ்வஸ்ய	(அவ்விந்திரன்) எல்லாப் பகைஞரையும்
प्रस्तोभः	ப்ரஸ்தோபஃ	நாசஞ்செய்கின்றான்.
यदि वा	யதி வா	அன்றியும்
इह	இஹ	இவ்வேள்வியில்
नूनं	நூநம்	உறுதியாக
पुरो वासनू	புரோ வாஸநூ	பூர்வ இடத்திலிருக்கப்பெற்றோனாய் வேட்போர்களால் நன்கு பூசிக்கப்படுகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—4. சம்வர் ரிஷி.

இந்திரன், சத்துருக்களனைவரையுங் கொல்கின்றான். அஃதன்றியும், இவ் வேள்வியில் நிச்சயமாக பூர்வதேச இடத்தில் இருக்கப்பட்ட அவ் விந்திரன் உண்மையாக வேட்போர்களால் துதிக்கப்படுகின்றான் என்பதாம்.

மந்திரம் 5.

३२उ ३ २ ३२३ १ २ १ २ ३१२

451. उषा अप स्वसुष्टमः संवर्त्तयति वर्त्तनिंॅ सुजातता ॥ ५ ॥

இருக்கு 4-73-1.

உஷா அப ஸ்வஸுஷ்டமஃ ஸம்வர்த்தயதி வர்த்தநிம் ஸுஜாததா ॥

அந்வயம்.

उषा, स्वसुः, तमः, अपसंवर्त्तयति, सुजातता, वर्त्तनिम् ॥

பதவுரை.

उषा	உஷா	உஷா தேவதை
स्वसुः	ஸ்வஸுஃ	தனது சகோதரியாகிய இராத்திரியிலுள்ள
तमः	தமஃ	இருளைத்
अपसंवर्त्तयति	அபஸம்வர்த்தயதி	தனதொளியாற்போக்குகின்றது.
सुजातता	ஸுஜாததா	சிறந்த தனது ஒளியையும்
वर्त्तनिं	வர்த்தநிம்	இரதத்திற் சேர்க்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—5.

இந்த உஷா தேவதையானவள் தனது உடன் பிறந்தாளாகிய இராத்திரியின் சம்பந்தமாகிய இருளைத் தனதொளியாற்றொலைக்கின்றாள். தன தொளியையும் இரதத்தையுடையுமாறு செய்கின்றாள் என்பதாம். (5)

மந்திரம் 6.

३२क ३ १२ ३ १ २ ३ १ २ २ ३

452. इमा नु कं भुवना सीषधेमेन्द्रश्च विश्वे च देवाः ॥ ६ ॥

இருக்கு 10-571-1.

ஐமா நு கம் புவநா ஸீஷதேமேந்த்ரஶ்ச விஶ்வே ச தேவா: ॥

அந்வயம்.

इमाः, भुवनाः, नु, कं, सीषधेम, इन्द्रः, च, विश्वे, देवाश्च ॥

பதவுரை.

इमाः	ஐமா:	(காணப்படுகின்ற) இந்த
भुवनाः	புவநா:	உலகங்களை
नु	நு	விரைவில்
कं	கம்	சுகமடைதற் பொருட்டு
सीषधेम	ஸீஷதேம	வசம் பண்ணுகின்றேன்.
इन्द्रः च	இந்த்ர: ச	இந்திரனும்
विश्वे देवाश्च	விஶ்வே தேவாஶ்ச	மற்று எல்லாத் தேவர்களும். துதியால் மகிழ்ந்து இக் கருமத்தை முடிப்பார்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—11 இருக்கு—6. பௌவன ஆத்த ரிஷி.

காணப்படுகின்ற இப் புவனங்களை விரைவாக வசப்பத்துகின்றேன். அல்லது, இப்பூத சமுதாயங்களனைத்தும் எங்கட்குச் சுகத்தைச் செய்குக. இந்திரனும், தேவர்க ளனைவர்களுந் தோத்திரத்தாற் பிரியமுடையார்களாய் இக் காரியத்தை முடித்துவைப்பார்களாக என்பதாம், (6)

மந்திரம் 7.

२ ३२ ३ १ २ ३२उ ३ १२ १२
453. वि स्रुतयो यथा पथा इन्द्र त्वद्यन्तु रातयः ॥ ७ ॥

வி ஸ்ருதயொ யயா வயா இந்த்ர த்வத்யந்து ராதயஃ ॥

அந்வயம்.

हे इन्द्र !, त्वत्, रातयः, पथा स्रुतयः यथा, वियन्तु ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹெ இந்த்ர !	இந்திரனே !
त्वत्	த்வத்	உன்னிடத்திலிருந்து
रातयः	ராதயஃ	தானங்கள் (ஈகைகள்)
पथास्रुतयः यथा	வயாஸ்ருதயஃ யயா	பெரும்வழியினின்று சிறுவழிகள் பிரிவதுபோற்
वियन्तु	வியந்து	பலவகையாய் விரிந்தோங்குக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—7. கவஷ ஐலுஷ ரிஷி,

இந்திரனே ! நின்னிடத்திலிருந்து (ஐசுவரிய) தானங்கள் (கொடைகள்) பலவிதமாய் விரிந்தோங்குக. அதிலுவமை :—அரச (பெரிய) வழியினின்று (ஆட்செல்லும்) சிறிய வழிகள் பிரிந்து (விரிந்து) போவனபோன்றெனல்.

மந்திரம் 8.

३ १ २र ३ १२ ३ १ २ ३ १ २ ३ १ २
454. अया वाजं देवहितꣳ सनेम मदेम शतहिमाः सुवीराः ॥ ८ ॥

இருக்கு 6-17-15.

அயா வாஜம் தெவஹிதம் ஸநெம மதெம ஶதஹிமாஃ ஸுவீராஃ ॥

அந்வயம்.

अया, देवहितं, वाजं, सनेम, सुवीराः, शतहिमाः, मदेम ॥

பதவுரை.

अया	அயா	இத் துதியால்
देवहितं	தெவஹிதம்	இந்திர தேவதை கொடுக்கப்பட்ட
वाजं	வாஜம்	அன்னத்தை

सनेम	ஸநேம	யாங்கள் அருந்துவோமாக.
सुवीराः	ஸுவீராः	{ அழகிய புத்திரர்களோடு கூடிய யாங்கள்
शतहिमाः	ஶதஹிமாः	{ நூற்றுக்கணக்கான பனிக்காலம் (ஏமந்தருது) வரை
मदेम	மதேம	களித்திருப்போமாக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—8. பரத்துவாச ரிஷி.

இத்தோத்திரத்தினின்று பிராகாசமுள்ள தேவதையால் (இந்திரனால்) கொடுக்கப்பட்ட அன்னத்தை நாங்கள் அநுபவிப்போமாக. மற்றும், அழகிய மக்களோடு கூடின யாங்கள் நூற்றுக் கணக்கான ஏமந்த இருதுகாலம்வரை களிப்படைவோமாக என்பதாம். (8)

மந்திரம் 9.

३ २ ३ १ ३ २ ३ १२ ३ १ २ ३ १ २

455. **ऊर्जा मित्रो वरुणः पिन्वतेडाः पीवरीमिषं कृणुही न इन्द्र ॥**

ஊர்ஜா மித்ரோ வருணः பிந்வதேடா: பீவரீமிஷம் க்ருணுஹீ ந இந்த்ர ॥

அந்வயம்.

हे इन्द्र !, मित्रः, वरुणः, ऊर्जा, इडाः, पिन्वत, नः, इषं, पीवरीं, कृणुहि ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
मित्रः	மித்ரः	மித்திர தேவதை
वरुणः	வருணः	{ வருணதேவதை (என்னும் நீவிர் அனைவர்களும்)
ऊर्जा	ஊர்ஜா	ஆற்றலோடு கூடிய
इडाः	இடாः	அன்னத்தை.
पिन्वत	பிந்வத	{ எங்கட்குக் கொடுப்பீர்களாக. (மற்றும்)
नः	நः	எங்களுடைய
इषं	இஷம்	அன்னத்தை
पीवरीं	பீவரீம்	மிகுதியாகச்
कृणुहि	க்ருணுஹி	செய்வீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—9. ஆத்திரேய ரிஷி.

இந்திரனே! மித்திர தேவதை, வருணதேவதை என்னும் நீவிர் அனைவரும் இன்சுவையோடு கூடிய, அல்லது, ஆற்றலோடு கூடிய அன்னங்களை எங்கட்குக் கொடுப்பீர்களாக. மற்றும், மிகுதியான அன்னங்களையும் எங்கட்குக் கொடுப்பீர்களாக என்பதாம். (9)

மந்திரம் 10.

२ ३ १ २
456. इन्द्रो विश्वस्य राजति ॥ १० ॥

இந்த்³ரோ விஶ்வஸ்ய ராஜதி ॥

அந்வயம்.

इन्द्रः, विश्वस्य, राजति ॥

பதவுரை.

इन्द्रः	இந்த்³ர:	இந்திரன்
विश्वस्य	விஶ்வஸ்ய	உலகனைத்திற்கும்
राजति	ராஜதி	இறைவனாகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—11. இருக்கு—10. வசிட்ட ரிஷி.

எக்காரணத்தால் இந்திரன் எல்லாப்புவனத்திற்கும் இறைவனாகின்றானோ, அக்காரணத்தால் இந்திரனை முக்கியமாக ஒரு முகப்படுத்தி கூறப்படுகின்றது என, முன் மந்திரத்தோடு அந்வயித்துக் கொள்க. (10)

பதினோராவது கண்டம்.

முற்றும்.

பன்னிரண்டாவது கண்டம்.

பிரபாடகம்—5. அத்தியாயம்—4. கண்டம்—12.

பத்து மந்திரங்களாலானது.

தேவதைகள். 1, 3, 4, 10, இந்திரன். 2, சூரியன். 5, விசுவதேவர்கள். 6, மருத்துக்கள். 7, பவமானன். 8, சவிதா. 9, அக்கினி.

சந்தங்கள். 1, 3, 5, 7, 9, அத்யட்டி. 2, 4, 6, அதிசகதி. 10, அதிசக்குவரி.

சுரம், 1, 3, 5, 7, 9, காந்தாரம். 2, 4, 6, 8, 10, நிஷாதம். 8, 10, பஞ்சமம்.

மந்திரம் 1.

१२ ११ २र ३२
457. त्रिकद्रुकेषु महिषो यवाशिरं तुविशुष्म-
२ १ २र ३ १ २ ३१ २ ३ २
*स्तृम्पत् सोममपिबद्विष्णुना सुतं † यथावशम् ।
१ २ ३ २ ३ २ ३ १ २ ३ २३१
स ईं ममाद महि कर्म कर्त्तवे महामुरुं
२र ३ २ ३२ ३ १ २र ३ १ २र
सैनं सश्चद्देवो देवं ‡ सत्य इन्दुः सत्यमिन्द्रम् ॥ १ ॥

த்ரிகத்ருகேஷு மஹிஷோ யவாஶிரம் துவிஶுஷ்ம
ஸ்த்ரும்பத் ஸோமமபிபத்விஷ்ணுநா ஸுதம் யதாவஶம் ।
ஸ ஈம் மமாத மஹி கர்ம கர்த்தவே மஹாமுரும்
ஸைநம் ஸஶ்சத்தேவோ தேவம் ஸத்ய இந்து: ஸத்யமிந்த்ரம் ॥

அந்வயம்.

महिषः, तुविशुष्मः, तृम्पत्, त्रिकद्रुकेषु, सुतं, यवाशिरं, सोमं, विष्णुना, यथावशं, अपिबत्, सः, महि, कर्म, कर्त्तवे, महां, उरुं, ईं, ममाद, सत्यः, इन्दुः, देवः, सः, सत्यं, देवं, एनं, इन्द्रं, सश्चत् ॥

---

* तृंपत्सोम, † यथावशत्, ‡ सत्यमिन्द्रं सत्य इन्दुः, என்பன இருக்கு.

பதவுரை.

महिषः	மஹிஷஃ	ஆராதிக்கத் தக்கோனும்
तुविशुष्मः	துவிஶுஷ்மஃ	பேராற்றலுடையோனும்
तृम्पत्	த்ரும்பத்	திருப்தியுடையோனுமாகிய இந்திரன்
त्रिकद्रुकेषु	த்ரிகத்ருகேஷு	சோதி, கோ, ஆயுள் என்னும் பெயருள்ள முத்தினங்களிலும்
सुतं	ஸுதம்	பிழியப் பெற்றுள்ளதும்
यवाशिरं	யவாஶிரம்	கோதுமை மாவுடன் கலந்ததுமாகிய
सोमं	ஸோமம்	சோமரசத்தை
विष्णुना	விஷ்ணுநா	விஷ்ணுவுடன்
यथावशं	யதாவஶம்	இச்சித்தவாறே
अपिबत्	அபிபத்	அருந்தினன்.
सः	ஸஃ	அருந்திய அச் சோமரசம்
महि	மஹி	பெரிய
कर्म	கர்ம	விருத்திராசுரனைக் கொல்லுதல் முதலிய கருமத்தைச்
कर्तवे	கர்தவே	செய்தற் பொருட்டு
महां	மஹாம்	மிகுந்த (மகத்தாகிய)
उरुं ईं	உரும் ஈம்	விரிந்த இவ் விந்திரனுக்குக்
ममाद	மமாத	களிப்புண்டாக்கியது.
सत्यः	ஸத்யஃ	மேம்பட்டதும்
इन्दुः	இந்துஃ	பொங்குவதும்
देवः	தேவஃ	விளக்கமுடையதுமாகிய
सः	ஸஃ	அச் சோமரசமானது
सत्यं	ஸத்யம்	சத்திய வடிவனும்
देवं	தேவம்	சோம விருப்புள்ளோனுமாகிய
एनं इन्द्रं	ஏநம் இந்த்ரம்	இவ் விந்திரனை
सश्चत्	ஸஶ்சத்	வியாபிக்குக. (நிறையச் செய்க.)

சாயண பாடியம்.

கண்டம்—12. இருக்கு—1. கிருத்சமத ரிஷி.

மகானும், பூசிக்கத் தக்கோனும், பேராற்றலுள்ளோனுமாகிய இந்திரன், திருப்தி யடைந்து, சோதி, கோ, ஆயுள் என்னுஞ் சோமயாக தினங்களிற் பிழிந்தெடுக்கப்பட்டதும், கோதுமை மாவுடன் கலந்ததுமாகிய அச் சோமரசத்தை விஷ்ணுவோடு விரும்பிய வண்ணம் அருந்தினன்.

ப⁴த்³ராந் க்ருண்வந்நிந்த்³ர ஹவாந்த்ஸகி²ப்⁴ய ஆஸோமோ வஸ்த்ரா ரப⁴ஸா[நி த³த்தே ॥

அந்வயம்.

सेनानीः, शूरः, सोमः, गव्यन्, रथानां, अग्रे, प्रैति, अस्य, सेना, हर्षते, सखिभ्यः, इन्द्र हवान्, भद्रान्, कृण्वन्, रभसानि, वस्त्रा, आदत्ते ॥

பதவுரை.

सेनानीः	ஸேநாநீ:	சேனைகளை முன்னர்ச் செலுத்துகின்றதும்,
शूरः	ஶூர:	பகைவர்களைத் துன்புறுத்துவதுமாகிய
सोमः	ஸோம:	சோமரசம்,
गव्यन्	கவ்யந்	வேள்வித் தலைவரின் பொருட்டுக் கோக்கள் முதலியவைகளை விரும்பி
रथानां	ரதாநாம்	இரதங்கட்கு
अग्रे	அக்ரே	முன்னரே
प्रैति	ப்ரைதி	இனிது போரிற் செல்கின்றது.
अस्य	அஸ்ய	இச்சோமரசத்தினுடைய
सेना	ஸேநா	சேனை
हर्षते	ஹர்ஷதே	களிப்படைகின்றது.
सखिभ्यः	ஸகிப்ய:	வேள்வித் தலைவர்களின் பொருட்டு
इन्द्र हवान्	இந்த்ர ஹவாந்	இந்திரன் அழைப்பனவை யெல்லாம்
भद्रान्	பத்ராந்	மங்களங்களாகச்
कृण्वन्	க்ருண்வந்	செய்கின்றது.
रभसानि	ரபஸாநி	இந்திரன் விரைவில் வருதற்பொருட்டு
वस्त्रा	வஸ்த்ரா	ஆடைபோல் மறைக்கும் பால் முதலியவற்றை
आदत्ते	ஆதத்தே	ஏற்றுக்கொள்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—1. பிரதர்த்தன ரிஷி.

சேனைகளை முன்னர்க் கொண்டுபோகின்றதும், சத்துருக்களை வாட்டுவதுமாகிய சோமரசம், வேள்வித் தலைவர்கட்குக் கோ முதலியவைகளை விரும்பி இரதங்கட்கு முன்னரே நன்கு போரிற் செல்கின்றது. இச் சோமரசத்தினுடைய படைகளும் களிப்புறுகின்றன. அன்றியும், இந்திரன்

அழைப்பதை உண்மையாகச் செய்கின்றது. அதாவது அழைக்கப்பட்ட இந்திரன் சோமரசத்தை அருந்திக்கொண்டு விரும்பியதைக் கொடுக்கின்றான் என்பதாம். இந்திரன் விரைவாய் வருவதற்கு நிமித்தமாகிய ஆடைபோல் மறைக்கின்ற பால் முதலியவற்றை பெற்றுக்கொள்கின்றது என்பதாம். (1)

மந்திரம் 2.

२ ३ २ ३ १२ ३ २ ३ २ ३ २ ३ १ २र

534. प्र ते धारा मधुमतीरसृग्रन् वारं यत्पूतो *अत्येष्यव्यम् ।

१२ ३ १२ ३ १ २ १ २ ३२ ३ १२ ३ २

पवमान पवसे धाम गोनां †जनयन्त्सूर्यमपिन्वो अर्कैः ॥ २ ॥

இருக்கு 9-40-1.

ப்ர தே தாரா மதுமதீரஸ்ருக்ரந் வாரம் யத்பூதோ அத்யேஷ்யவ்யம் ।

பவமாந பவஸே தாம கோநாம் ஜநயந்த்ஸூர்யமபிந்வோ அர்கை꞉ ॥

அந்வயம்.

ते, मधुमतीः, धाराः, प्रासृग्रन्, यत्, पूतः, अव्यं, वारं, अत्येषि, पवमान!, गोनां, धाम, पवसे, जनयन्, अर्कैः, सूर्यं, अपिन्वः ॥

பதவுரை.

ते	தே	(சோமரசமே!) உன்னுடைய
मधुमतीः	மதுமதீ꞉	மதுரத்தன்மையோடு கூடிய
धाराः	தாரா꞉	தாரைகள்
प्रासृग्रन्	ப்ராஸ்ருக்ரந்	களிப்பைக் கொடுக்கின்றன,
यत्	யத்	எக்கால்
पूतः	பூத꞉	வசதீவரி, என்னும் நீரால் பவித்திரம் பண்ணப்பட்ட நீ
अव्यं वारं	அவ்யம் வாரம்	ஆட்டு மயிர்களைக் (கம்பளியை)
अत्येषि	அத்யேஷி	கடந்து பாத்திரத்திற்குச் செல்கின்றனையோ, அக்கால்.
पवमान!	பவமாந!	பவித்திரமாகிய சோமரசமே! நீ
गोनां	கோநாம்	கோக்களின்
धाम	தாம	பாலைக் குறியாகக் கொண்டு
पवसे	பவஸே	நிரம்புகின்றனை. (பின்னர்)

---

* अत्येष्यव्यान्, † जज्ञान, என்பன இருக்கு.

जनयन्	ஜநயந்	இனிது தோன்றிய நீ
अर्कैः	அர்கைஃ	போற்றத்தக்க தனது பிரகாசங்களால்
सूर्यं	ஸூர்யம்	சூரியனைப்
अपिन्वः	அபிந்வஃ	பிரகாசிப்பிக்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—2. பராசர ரிஷி.

சோமரசமே! உன்னுடைய தனமாகிய மதுர இரசத்தையுடைய தாரைகள் களிப்பையுண்டாக்குகின்றன. எப்போது வசதீவரி என்னும் நீரால் பவித்திரமாகிய நீ, ஆட்டிலுண்டாகும் மயிரை (கம்பளியை)க் கடந்து செல்கின்றாயோ, (அப்போதென்க). அன்றியும், பரிசுத்தமாகிய சோமரசமே! நீ, கோக்களின் பாலை யிலக்காக்கிக்கொண்டு நிரம்புகின்றாய். பின்னர் இனிது உண்டாகிய நீ, போற்றத்தக்க ஒளிகளால் இரவியை நிறையச் செய்கின்றாய் என்பதாம். (2)

மந்திரம் 3.

१ २ ३क२र ३ १ २र ३१ २र
535. प्र गायताभ्यर्चाम देवान्त्सोमꣳ हिनोत महते धनाय ।
३१ २३२ ३ २३२ ३ १ २ ३ १२ ३ १ २र
*स्वादुः पवतामति वारमव्यमासीदतु कलशं ॥ देव इन्दुः ॥३॥

இருக்கு 9-97-4.

ப்ர காயதாப்யர்சாம தேவாந்த்ஸோமம் ஹிநோத மஹதே தநாய ।
ஸ்வாது: பவதாமதி வாரமவ்யமாஸீதது கலசம் தேவ இந்து: ॥

அங்வயம்.

(हे स्तोतारः!,) प्रगायत, देवान् अभ्यर्चामः, महते, हिनोत, स्वादुः, अव्यं वारं, अति पवतां, देवः, इन्दुः, कलशं अति आसीदतु ॥

பதவுரை.

(हे स्तोतारः!)	(ஹே ஸ்தோதார:!)	(துதிப்போர்காள்! நீவிர்)
प्रगायत	ப்ரகாயத	சோமரசத்தை நன்கு துதிப்பீர்களாக. (யாங்களோ,)
देवान् अभ्यर्चामः	தேவாந் அப்யர்சாம:	தேவர்களை யாராதிக்கின்றோம்.
महते	மஹதே	மிகுந்த தனத்தின் பொருட்டுப்

* स्वादुः पवते, ॥ देवयुर्नः என்பன இருக்கு.

हिनोत	ஹிநோத	பிழிவதற்கு முயல்வீர்களாக. (பின்னர்)
स्वादुः	ஸ்வாது³:	இன்சுவையுள்ள சோமரசம்
अव्यं वारं	அவ்யம் வாரம்	ஆட்டின் மயிர்களைக் (கம்பளியை)
अति पवतां	அதி பவதாம்	கடந்து நிறைவதாகுக.
देवः	தே³வ:	திவ்யமாகிய சோமரசம்
इन्दुः	இந்து³:	பிரகாசிப்பதாகி
कलशं अति	கலஶம் அதி	ஒரு முகமாய்த் துரோண கலசத்தில்
आसीदतु	ஆஸீத³து	நிலைத்திருக்குக.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—3. இந்திர பிரமதி வசிஷ்ட ரிஷி.

தோத்திரஞ் செய்வோர்களே! நீவிர், சோமரசத்தை நன்முறையிற் றுதிப்பீர்களாக. நாங்களோ, தேவர்களை யாராதிக்கின்றோம். அல்லது, நீவிர் தேவர்களை யாராதிப்பீர்களாக என 'யாம்' என்னுந் தன்மையை முன்னிலையாக்கிக்கொள்க. அன்றியும், பெருந்தனத்தின் பொருட்டுச் (மிகுந்த தனத்தை அடைய) சோமத்தைப் பிழிந்தெடுக்க முயல்வீர்களாக. பின்னர், மதுரமாகிய சோமரசம் விளங்குவதாகி, பவித்திரமாகிய செம்மறி ஆட்டின் மயிர்களாலாய கம்பளியைக் கடந்து செல்க. பிரகாசமுள்ள சோமரசம் ஒளி விடுவதாய்த் துரோண கலசத்தில் ஒரு முகமாய் நிலைக்குக. (3)

மந்திரம் 4.

१ २ ३ १ २ ३ १ २र ३ २ ३ १ २र ३ १ २
536. प्र हिन्वानो जनिता रोदस्यो रथो न वाजꣳ *सनिषन्नयासीत् ।
२ ३ २ ३ १२ ३ १ २ ३ २ ३ २ ३ १ २ ३ १ २
इन्द्रं गच्छन्नायुधा सꣳशिशानो विश्वा वसु हस्तयोरादधानः ॥

இருக்கு 9-97-1.

ப்ர ஹிந்வாநோ ஜநிதா ரோத³ஸ்யோ ரதோ² ந வாஜꣳஸநிஷந் [யாஸீத் ।

இந்த்³ரம் க³ச்ச²ந்நாயுதா⁴ ஸꣳஶிஶாநோ விஶ்வா வஸு ஹஸ்தயோ [ராத³தா⁴ந: ॥

அந்வயம்

प्रहिन्वानः, रोदस्योः, जनिता, वाजं, सनिषन्, इन्द्रं गच्छन्, आयुधा संशिशानः, विश्वा, वसु, हस्तयो आदधानः, प्रायासीत् ॥

* सनिष्यन्, என்பது இருக்கு.

பதவுரை.

प्रहिन्वानः	ப்ரஹின்வாநঃ	வேட்போர்களா தும்,
रोदस्योः	ரோதஸ்யோঃ	வானுலக, மண்
जनिता	ஜநிதா	(அவியையும், ப டுக்கும் வாயில. ணுகின்றதும்
रथो न	ரதோ ந	இரதம்போல் வருகின்றத் சோமரசம்
वाजं	வாஜம்	அன்னத்தைக்
सनिषन्	ஸநிஷந்	கொடுத்துக்கொண்டும்
इन्द्रं गच्छन्	இந்த்ரம் கச்சந்	இந்திரனை யடைந்து
आयुधाः	ஆயுதா:	ஆயுதங்களைக்
संशिशानः	ஸம்ஸிஸாநঃ	கூர்மையாக்கிக்கொண்டும்,
विश्वा	விஸ்வா	எல்லாத்
वसु	வஸு	தனத்தையும்
हस्तयोः आदधानः	ஹஸ்தயோঃ ஆதயாநঃ	எங்கட்கு அளிக்க இரு கைகளி லேந்திக்கொண்டும்
प्रायासीत्	ப்ராயாஸீத்	அடைகின்றது

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—4. வசிட்ட ரிஷி.

வேட்போர்களால் ஏவப்பட்டதும், வானையும் மண்ணையுமுண்டாக்கு வதுமாகிய சோமரசம் அன்னத்தை யீந்துகொண்டு (இந்திரனை) நன்கு அடைகின்றது. இந்திரனை யடைந்து ஆயுதங்களைக் கூர்மையாக்கிக் கொண்டு (இந்திரனைக் குறித்து உதவியாய்ச் செல்லுதற் பொருட்டு கூர்மை யுடைய ஆயுதங்களாக்கிக்கொண்டு) அதாவது எல்லாத் தனங்களையும் எங் கட்கு அளித்தற் பொருட்டு இவ்வாறு செய்துகொண்டு நன்கு இந்திரனை அடைகின்றது என்பதாம். (4)

குறிப்பு.—ஈண்டு, வானையும் தரையையுமுண்டாக்குந் தன்மையோ, மழையைக் கொடுத்தல் அவிகளை யேற்றல்களினாலாமென்க.

மந்திரம் 5.

२ ३ १२ ३ १२ ३ १ २र ३ १ २ ३ १ २र
'यदी मनसो वेनतो वाग्ज्येष्ठस्य *धर्मं द्युक्षोरनीके ।
२ ३ २३ १ २ ३ २उ ३ १ २ ३ २ ३ २ ३ १ २
.दीमायन् वरमा वावशाना जुष्टं पतिं कलशे गाव इन्दुम् ॥५॥

இருக்கு 9-97-22.

𑌯𑌦𑍀 𑌮𑌨𑌸𑍋 𑌵𑍇𑌨𑌤𑍋 𑌵𑌾𑌗𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌷𑍋
[𑌰𑌨𑍀𑌕𑍇 ।
𑌯𑌨𑍍 𑌵𑌰𑌮𑌾 𑌵𑌾𑌵𑌶𑌾𑌨𑌾 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌪𑌤𑌿𑌂 𑌕𑌲𑌶𑍇 𑌗𑌾𑌵 𑌇𑌨𑍍𑌦𑍁𑌮𑍍॥

அந்வயம்.

मनसः, वेनतः, वाक्, यदि, तक्षत्, धर्मन्, ज्येष्ठस्य, द्युक्षोः, अनीके, आत्, वरं, जुष्टं, पतिं, कलशे, ईं इन्दुं, वावशानाः, गावः, आयन् ॥

பதவுரை.

मनसः	𑌮𑌨𑌸𑌃	துதிப்போரின்
वेनतः	𑌵𑍇𑌨𑌤𑌃	அன்புள்ள
वाक्	𑌵𑌾𑌕𑍍	துதியாகிய வாக்கு
यदि	𑌯𑌦𑌿	எதைச்
तक्षत्	𑌤𑌕𑍍𑌷𑌤𑍍	சமற்காரத்தோடு கூடியதாய்ச் செய்கின்றதோ, (அதாவது)
धर्मन्	𑌧𑌰𑍍𑌮𑌨𑍍	வேள்வியில்
ज्येष्ठस्य	𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯	போற்றத்தக்க
द्युक्षोः	𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌷𑍋𑌃	நீராடுங் காலத்திற்கு
अनीके	𑌅𑌨𑍀𑌕𑍇	முன்னர்ச் சோமத்தைத் துதிக்கின்றதோ,
आत्	𑌆𑌤𑍍	அதன்பின்னரேயே
वरं	𑌵𑌰𑌂	மேம்பட்டதும்
जुष्टं	𑌜𑍁𑌷𑍍𑌟𑌂	தேவர்கட்குக்களிப்பை யுண்டாக்கப் போதுமானதும்
पतिं	𑌪𑌤𑌿𑌂	எல்லாவற்றையும் பாதுகாப்பாற்றுவதும்

---

* धर्मणि क्षोरनीके, என்பது இருக்கு.

कलशे	கலஶெ	கலசத்திலுள்ளதுமாகிய
ईम् इन्दुं	ஈம் இந்து³ம்	இச்சோமரசத்தை
वावशाना:	வாவஶாநா:	இச்சிக்கின்ற
गाव:	கா³வ:	கோக்கள்
आयन्	ஆயந்	தமது பாலோடு சேர்ப்பதற்கு வருகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—5. மிருடீகோவாசிட்ட ரிஷி.

துதியாளர்களின் துதியாகிய வாக்கு, எதைச் சுத்தப்படுத்துகின்றதோ, அதாவது தாங்கப்பட்ட வேள்வியின்கண்ணுள்ள சிறப்புடைய சவனத்தின் (வேள்வி நீராடுங் காலத்திற்கு) முன்னரேயே வேள்விகளில் சவனமுகத்தில் (நீராடுவதற்கு முன்பு), எப்போது துதிப்போனுடைய வாக்கு சோமரசத்தைத் துதிக்கின்றதோ, அதன் பின்னரேயே சிறந்த தேவர்களின் களிப்பின்பொருட்டு எல்லாவற்றையுங் காப்பாற்றத்தக்க கலசத்திலிருக்கின்ற இச் சோமரசத்தை, தமது பாலுடன் சேர்த்தற் பொருட்டு விருப்பமுடையவைகளான கோக்கள் வருகின்றன என்பதாம். (5)

குறிப்பு.—மூலத்திய வேநத: என்பதற்கு விரும்புகின்ற என்பது பொருளாம். "வேநத: என்பது இச்சைப் பொருளுடையது என்றார் யாஸ்க முனிவரும். மனதினுடைய, என்றதோ? மதித்தல், துதித்தல், எனவே துதிப்போனுடைய எனவாயிற்று. இங்ஙனமாயவழி துதியாளனுடைய அன்பார்ந்த துதியென்பது திரண்ட பொருளாயினமை காண்க.

மந்திரம் 6.

३ १ २　३ १ २ ३ २ ३ १ २ ३ २ ३ १ २
538. साकमुक्षो मर्जयन्त स्वसारो दश धीरस्य धीतयो धनुत्रीः ।
२ ३ १ २ ३ २ २ २ ३ १ २ ३ २ ३ २ ३ २
हरिः पर्यद्रवज्जाः सूर्यस्य द्रोणं ननक्षे अत्यो न वाजी ॥ ६ ॥

இருக்கு 9-93-1.

ஸாகமுக்ஷோ மர்ஜயந்த ஸ்வஸாரோ த³ஶ தீ⁴ரஸ்ய தீ⁴தயோ [த⁴நுத்ரீ: ।
ஹரி: பர்யத்³ரவஜ்ஜா: ஸூர்யஸ்ய த்³ரோணம் நநக்ஷே அத்யோ [ந வாஜீ ॥

அந்வயம்.

साकमुक्षः, स्वसारः, मर्जयन्त, दश धीतयः, धीरस्य, धनुत्रीः, हरिः, सूर्यस्य जाः, पर्यद्रवत्, अत्यः, वाजी न, द्रोणं ननक्षे ॥

பதவுரை.

साकमुक्षः	ஸாகஉ-க்ஷ:	ஒன்றுகூடித் தெளிப்பதற்கு
स्वसारः	ஸ்வஸார:	இங்குமங்குந் திரிகின்ற, விரல்கள்
मर्जयन्त	ஊஜ-ஒயந்த	சோமரசத்தைச், சுத்திசெய்கின்றன.
दश धीतयः	உஶ யீ-தய:	அப் பத்துவிரல்களும்
धीरस्य	யீரஸ்ய	தேவர்களால் விரும்பப்பட்ட சோமரசத்தைச்
धनुत्रीः	ய-நு-த்ரீ:	செலுத்திய பின்னர்
हरिः	ஹரி:	பசுமை நிறமுடைய சோமரசம்
सूर्यस्य जाः	ஸூ-ர்ய-ஸ்ய ஜா:	சூரியனுடைய திக்குகளைச்
पर्यद्रवत्	வய-ஒ-த்ரவத்	சூழ்ந்து அடைகின்றது.
अत्यः	அ-த்ய:	செல்லுஞ் சீலமுடைய
वाजी न	வாஜீ ந	குதிரை போன்ற சோமரசம்
द्रोणं ननक्षे	த்ரோணம் நநக்ஷெ	கலசத்தில் நிறைகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—6. நோதா ரிஷி.

சோமரசத்தை வார்த்தலாகிய தொழிலைச் செய்ய இங்குமங்கும் இனிது திரிகின்ற விரல்கள், சோமரசத்தைச் சுத்தம் பண்ணுகின்றன. அத்தகைய பத்து விரல்களும். ஆற்றலுடையதும், அல்லது, அறிவுள்ளதும், தேவர்களாற் றியானிக்கப்பட்டதும், அல்லது, விரும்பப்பட்டதுமாகிய சோமரசத்தை ஏவுகின்றன. பின்னர், பசுமை நிறமுடைய சோமரசம் சூரியனாற் றோன்றும் (சூரியனுடைய மனைவியாகிய) திக்கைச் சூழ்ந்து பரவுகின்றது. ஈண்டு இரவியின் ஒளியாலேயே திசை வெளிப்படுகின்றது. ஆதலின், திக்கு அதற்கு மனைவியெனப்பட்டது. மிகச் செல்லுஞ் சீலமுடைய குதிரை போன்றுள்ள சோமரசம் துரோண கலசத்தில் நிரம்புகின்றது. (6)

ஈண்டு, 'சாகமுக்ஷ' என்னுஞ் சொல் தெளித்தலாகிய பொருளிலும், மர்ஜயந்த:, என்பது கழுவுதலாகிய பொருளிலும், நநக்ஷ என்பது நிறைதலென்னும் பொருளிலும் நின்றமை காண்க.

धीतयः (தீதய:) என்பது விரல்கள் என நிகண்டு கூறுகின்றது.

மந்திரம் 7.

२ ३ १ २ ३ १ २३ २ ३ १ २ ३ २ ३ २३ १ २२
539. अधि यदस्मिन् वाजिनीव शुभः स्पर्द्धन्ते धियः *सूरे न विशः ।
३ १ २ ३ १ २ ३ १ २२ ३ १ २२ ३१२ ३ १ २
आपो वृणानः पवते ‡कवीयान् व्रजं न पशुवर्द्धनाय मन्म ॥७॥

இருக்கு 9-94-1.

அதி யதஸ்மிந் வாஜிநீவ ஶுப⁴: ஸ்பர்த்⁴ந்தே தி⁴ய: ஸூரே ந விஶ:।
ஆபோ வ்ருணாந:பவதே கவீயாந் வ்ரஜம் ந பஶுவர்த்⁴நாய மந்ம॥

அந்வயம்.

यत्, अस्मिन्, वाजिनि, इव शुभः, सूरे विशः न, धियः अधि स्पर्धन्ते, आपः, वृणानः पशुवर्द्धनाय मन्म, व्रजं न, कवीयान्, पवते ॥

பதவுரை.

यत्	யத்	எப்போது
अस्मिन्	அஸ்மிந்	இச் சோம விஷயத்தில்
वाजिनीव शुभः	வாஜிநீவ ஶுப⁴:	குதிரையின் அலங்காரத்தை யொப்பவும்
सूरे विशः न	ஸூரே விஶ: ந	இரவியின் கிரணங்களெழுவது போன்றும்
धियः	தி⁴ய:	விரல்கள்
अधिस्पर्धन्ते	அதி⁴ஸ்பர்த⁴ந்தே	சுத்தஞ் செய்வதற்குமுன் வந்து நிற்கின்றனவோ, (அப்போது இச்சோமரசம்)
आपः	ஆப:	வசதீவரி என்னும் நீரை
वृणानः	வ்ருணாந:	மறையச் செய்துகொண்டு
पशुवर्द्धनाय	பஶுவர்த்⁴நாய	கோக்களை வளர்ப்பதற்கு
मन्म व्रजं न	மந்ம வ்ரஜம் ந	இடையர்கள் கோச்சாலையை யடைவது போல்,
कवीयान्	கவீயாந்	துதிப்போர்களை விரும்பிக்
पवते	பவதே	கலசத்திற் சேர்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—7. கண்ணுவ கௌர ரிஷி.

ஆடை முதலியவைகளால் குதிரையை அலங்கரிப்பது போலவும், இரவியின் கிரணங்கள் எழுவன போன்றும், இச்சோம விஷயத்தில் எப்போது (அலங்காரம்) உண்டாகின்றதோ, அப்போது விரல்கள் (பத்தும்) யானே

* सूर्येन विशः, ‡ कवीयन्, என்பன இருக்கு.

முன்னர் அதைப் பரிசுத்தம் பண்ணுவேன் என ஒவ்வொன்றும் முன் வந்து நிற்கின்றன. பின்னர் இச் சோமரசம் வசதீவரி என்னும் ஆற்று நீரை மறைத்துக்கொண்டு கலசங்களை யடைகின்றது .எவ் வண்ணமாகியதெனின்? கவியைப் போன்ற நடை யுடையது, அல்லது, கவிகள் என்பது துதிப் போர்கள், அவர்களை விரும்புவது. அதிலுவமை :—பசுக்களைக் காப்போன் பசுச்சாலையை யடைவதுபோன்றெனல். அதாவது தேவர்களைப் பிரியப்படுத் தற்பொருட்டுப் பாத்திரங்களை யடைகின்றது என்பதாம். (7)

மந்திரம் 8.

१ २ ३ १ २ ३ १ २ ३ २ ३ २ ३ २ ३ २ ३ १ २
540. इन्दुर्वाजी पवते गोन्योघा इन्द्रे सोमः सह इन्वन् मदाय ।
२ ३ २ ३ १ २ ३ १ २र ३ १ २ ३ २ ३ १ २ ३ १ २
हन्ति रक्षो बाधते * पर्यरातिं वरिवस्कृण्वन् वृजनस्य राजा ॥८॥
இருக்கு 9-97-10.

இந்துர் வாஜீ பவதே கோந்யோகா இந்த்ரே ஸோம꞉ ஸஹ இந்வந் [மதாய ।
ஹந்தி ரக்ஷோ பாததே பர்யராதிம் வரிவஸ்க்ருண்வந் வ்ருஜநஸ்ய [ராஜா ॥

அந்வயம்.

इन्दुः, वाजी, गोन्योघाः, इन्द्रे, सहः, इन्वन्, वरिवः, कृण्वन्, वृजनस्य, राजा, सोमः, मदाय, पवते, रक्षः, हन्ति, अरातिं, परि बाधते ॥

பதவுரை.

इन्दुः	இந்து꞉	நெகிழ்கின்ற தன்மை யுள்ளதும்
वाजी	வாஜீ	ஆற்றலுடையதும்
गोन्योघाः	கோந்யோகா꞉	கீழே யொழுகுந் தன்மையுள்ள இரசப்பிழம்பானதும்,
इन्द्रे	இந்த்ரே	இந்திரன் நிமித்தமாக
सहः	ஸஹ꞉	வலியைத்தரும் இரசத்தை
इन्वन्	இந்வந்	ஏவுவதும்,
वरिवः	வரிவ꞉	தனத்தை
कृण्वन्	க்ருண்வந்	வேள்வித்தலைவனுக்குக் கொடுப்பதும்

* पर्यराती वरिवः, என்பது இருக்கு.

वृजनस्य	வ்ருஜநஸ்ய	ஆற்றலுக்கு
राजा	ராஜா	இறைவனுமாகிய
सोमः	ஸோமஃ	சோமம்,
मदाय	மதாய	இந்திரனுக்குக் களிப்புண்டாதற் பொருட்டுப்
पवते	பவதெ	பாத்திரத்தில் நிரம்புகின்றது. மற்றும்,
रक्षः	ரக்ஷஃ	இராக்கதர்களை
हन्ति	ஹந்தி	நாசஞ் செய்கின்றது.
अरातिं	அராதிம்	பகைவர்களை
परि बाधते	பரி பாதெ	நாற்புறத்தும் வாட்டுகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—8. மன்யுவாசிட்ட ரிஷி.

நெகிழ்ச்சியுடையதும், ஆற்றலுடையதும், கீழே யொழுகுந் தன்மை யுடையதும், இரசப் பிழம்பானதும், இந்திரன்பொருட்டு வலியைத் தரும் இரசத்தை யேவுவதுமாகிய சோமம், இந்திரனுக்குக் களிப்பை யுண்டாமாறு பாத்திரங்களில் நிரம்புகின்றது. அன்றியும், பகைவர்களை நாற்புறத்தும் நாசஞ் செய்கின்றது. எத்தன்மைய சோமமெனின்? தனத்தைக் கொடுப்பதும், துதிப்போர்களின் ஆற்றலுக்கு இறையாவதுமாம் என்க. (8)

மந்திரம் 9.

१ २ ३ १ २ ३ १ २र ३ १ २ ३ १२ ३ १ २

541. अया पवा पवस्वैना वसूनि मांश्चत्व इन्दो सरसि प्रधन्व ।

३ २ ३ २ ३ २ ३ २ १ २ ३१ २ ३ १ २ ३ १२

*ब्रध्नश्चिद्यस्य वातो न जूतिं पुरुमेधाश्चित्तकवे नरं धात् ॥ ९ ॥

இருக்கு 9-97-52.

அயா பவா பவஸ்வைநா வஸூநி மாம்ஶ்சத்வ இந்தோ ஸரஸி [ப்ரதந்வ ।

ப்ரத்நஶ்சித்யஸ்ய வாதோ ந ஜூதிம் புருமேதாஶ்சித்தகவே நரம் [தாத் ॥

அந்வயம்.

हे सोम! अया, पवा, एना, वसूनि, पवस्व, इन्दो, मांश्चत्वे, सरसि, प्रधन्व, ब्रध्नश्चित्, वातो न, नरं, जूतिं, धात्, पुरुमेधाश्चित्, यस्य, तकवे ॥

---

* ब्रध्नश्चिदत्र वातो न जूतः, என்பது இருக்கு.

பதவுரை.

हे सोम !	ஹே ஸோம!	சோமரசமே! நீ
अया पवा	அயா பவா	நிறைந்த இத்தாரையால்
एना वसूनि	ஏநா வஸூநி	இத் தனங்களைக்
पवस्व	பவஸ்வ	கொடுப்பாயாக.
इन्दो !	இந்தோ!	சோமரசமே! நீ
मांश्चत्वे	மாம்ஶ்சத்வே	மதிப்புடன் விரும்பத்தக்க
सरसि	ஸரஸி	வசதீவரி என்னும் நீருள்ள கலசத்திற்
प्रधन्व	ப்ரதந்வ	சேர்வாயாக. (பின்னர்)
प्रघ्नश्रित्	ப்ரத்நஶ்ரித்	அனைத்திற்குங் காரணமாகிய இரவி போன்றும்
वातो न	வாதோ ந	வாயு போன்றும்
नरं	நரம்	செலுத்துகின்ற
जूतिं	ஜூதிம்	வேகத்தைத்
धात्	தாத்	தாங்கிக்கொண்டோனுய்
पुरुमेधाश्रित्	புருமேதாஶ்ரித்	பலவகை யுணர்வுள்ள இந்திரனும்
यस्य	யஸ்ய	எந்தச் சோமரசத்தை
तकवे	தகவே	அடைகின்றானோ, (அத்தன்மைய சோமமே! நீ என முடிக்க.)

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—9. குத்ச ரிஷி.

சோமரசமே! நீ நிரம்புகின்ற இத்தாரையால் இந்தத் தனங்களை யளிப்பாயாக. அவ்வாறே, சோமரசமே! நீ, மதிக்கத்தக்கவர்களின் வசதிவரி என்னும் நீருள்ள கலசத்திற் செல்வாயாக. பின்னர், எல்லாவற்றிற்குங் காரண வடிவாகிய, அல்லது, அறிவுறுத்துவதாகிய இரவியும், வாயுவும் போன்று, பலவித வுணர்வையுடைய இந்திரனும் வேகமாய் எதை அடைகின்றானோ, அத்தன்மைய சோமமே! நீ என முடித்துக்கொள்க. (9)

ஈண்டுச் சோமரசமே! நின்னாற் திருப்திபண்ணப்பட்ட இந்திரனும், சூரியனும், கரும நியந்தாவாகிய புத்திரனை எமக்கு அளிப்பார்களாக என்பது இருக்கின் பாடிய பேதம்.

மந்திரம் 10.

३१ २र ३१२ ३१ २र ३२
542. महत्तत्सोमो महिषश्चकारापां यद्गर्भोऽवृणीत देवान् ।
१२ ३२ ३१ २३ १ २र ३ २३ २३१२
अदधादिन्द्रे पवमान ओजोऽजनयत् सूर्ये ज्योतिरिन्दुः ॥

இருச்கு 9-90-41.

மஹத்தத்ஸோமோ மஹிஷஶ்சகாராபாம் யத்³க³ர்போ⁴(அ)வ்ருணீத தே³வாந் ।
அத³தா⁴தி³ந்த்³ரே பவமான ஓஜோ(அ)ஜநயத் ஸூர்யே ஜ்யோதிரிந்து³: ॥

அந்வயம்.

महिषः, अपां गर्भः, सोमः, महत्, तत्, चकार यत्, देवान्, अवृणीत, पवमानः, इन्द्रे, ओजः, अदधात्, इन्दुः, सूर्ये, ज्योतिः, अजनयत् ॥

பதவுரை.

महिषः	மஹிஷ:	பெருமையுடையதும்
अपां गर्भः	அபாம் க³ர்ப⁴:	நீரின் கருப்பவடிவமுமாகிய
सोमः	ஸோம:	சோமரசம்,
महत्	மஹத்	பெரிதாகிய
तत्	தத்	அக் கருமத்தைச்
चकार यत्	சகார யத்	செய்தது. அஃது யாதெனின் ?
देवान्	தே³வாந்	தேவர்களை
अवृणीत	அவ்ருணீத	இறைஞ்சியதும். மற்றும்
पवमानः	பவமாந:	பவித்திரமாகிய சோமம்
इन्द्रे	இந்த்³ரே	இந்திரன்பால்,
ओजः	ஓஜ:	சோம மருந்தியதாலுண்டாகும் வலியைத்
अदधात्	அத³தா⁴த்	நிலைநாட்டியதும், அவ்வாறே,
इन्दुः	இந்து³:	சோமம்
सूर्ये	ஸூர்யே	இரவியின்கண்
ज्योतिः	ஜ்யோதி:	பிரகாசத்தை
अजनयत्	அஜநயத்	உண்டாக்கியது மாமென்க

சாயணய பாடிம்.

கண்டம்—7. இருக்கு—10. பராசர ரிஷி.

மகத்தாகிய, அல்லது, பூசிக்கத்தக்க சோமம், பெரிதாய அக்கருமத்தைச் (அச் செய்கையை) செய்தது. அஃது யாதெனின்? நீரின் கருப்பவடிவ

மாந்தன்மையை உண்டாக்கலால், அல்லது, உண்டாக்கப்பட்டதால் நீரின் கருப்பமாகிய அச்சோமம், தேவர்களை நன்கு ஆராதித்ததாகும். மற்றும், பவித்திரமாகிய சோமம், சோமமருந்தியதாலுண்டாகும் ஆற்றலை இந்திரன் கண் நிலைக்கவைத்ததும். அவ்வணமே ஆதித்தனிடத்தில் ஒளியையுண்டாக்கியதுமாமென்க. (இதுவே சோமரசஞ்செய்த பெரியதோர் செய்கையென்றாம்.) (10)

மந்திரம் 11.

१२ ३ २ ३ २ ३ २ ३ २ २ ३ ३ १ २ ३ १ २ ३ २

543. असर्जि वक्वा रथ्ये यथाजौ धिया मनोता *प्रथमा मनीषा ।

२३ १ २ ३ २ ३ २ १ १ ३ २ ३ १२ ३ १ २

दश स्वसारो अधि †सानो अव्ये मृजन्ति वह्निं सदनेष्वच्छ ॥

இருக்கு 91-93-3.

அஸர்ஜி வக்வா ரத்யே யதாஜௌ தியா மநோதா ப்ரதமா மநீஷா |
தஶ ஸ்வஸாரோ அதி ஸாநோ அவ்யே ம்ருஜந்தி வஹ்நிம் ஸதநேஷ்வச்ச ||

அந்வயம்.

मनोता, प्रथमा, मनीषा, वक्वा, रथ्ये यथा, आजौ, धिया, असर्जि,
दश स्वसारः, सदनेषु, वह्निं, सानो अधि, अव्ये, अच्छ मृजन्ति ॥

பதவுரை.

मनोता	மநோதா	தேவர்களின் மனத்தைப் பிணிக்கத் தக்கதும்,
प्रथमा	ப்ரதமா	முக்கியமானதும்
मनीषा	மநீஷா	துதிக்கப்பட்டதும்
वक्वा	வக்வா	ஒலி செய்கின்றதுமாகிய சோமரசம்
रथ्ये यथा	ரத்யே யதா	போரில் குதிரைகளை வகுத்து வைத்திருப்பது போன்று
आजौ	ஆஜௌ	வேள்வியில்
धिया	தியா	துதியுடன்
असर्जि	அஸர்ஜி	உண்டாக்கப்படுகின்றது.
दश स्वसार:	தஶ ஸ்வஸார:	பத்து விரல்களும்
सदनेषु	ஸதநேஷு	வேள்விச் சாலைகளில் (உள்ள பாண்டத்தையும் பிறவற்றையும்)

* प्रथमो मनीषा, † सदनानि, என்பன இருக்கு.

वह्निं	வஹ்நிம்	இன்பபதத்திற் சேர்க்குஞ் சோம ரசத்தை,
सानो अधि	ஸானோ அதி	உயர்ந்த இடமாகிய
अव्ये	அவ்யே	கம்பளியின் கண்
अच्छ मृजन्ति	அச்ச ம்ருஜந்தி	நன்கு செலுத்துகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—7. இருக்கு—11. கசியப ரிஷி.

தோத்திரத்துடன், அல்லது, கருமத்துடன் பாத்திரங்களில் ஒலிக்கின்ற சோமரசத்தை வேள்வியின் கண் உண்டாக்குகின்றார்கள். அதிலுவமை:—குதிரைகட்குரிய போரில், குதிரையை வெளிக்கொண்டு வருவது போன்றெனல். எவ்வண்ணத்த சோமரசமெனின்? தேவர்களின் மனம் எதில் பின்னிக்கொண்டிருக்கின்றதோ, அத்தன்மையதாம். அங்ஙனமே, பிராமணம் என்னும் மறையின் பாகமும் "அதின் கண்ணேயே அவர்களுடைய மனங்கள் பின்னப்பட்டுள்ளன" எனக் கூறுகின்றது. மற்றும், முக்கியமானதும், மனதினைச் செலுத்துந் துதியை யுடையதும், அல்லது, துதிப்போனைக் கொண்டு துதியைச் செலுத்துகின்றதுமாம். அன்றியும், பத்தென்னு மெண் கொண்ட விரல்கள், வேள்விச் சாலைகளில் பாத்திரங்களை யொருமுகப்படுத்திக் கொண்டு தாங்கப்பட்ட சோமரசத்தை உயரமாகிய இடத்தில் செம்மறி ஆட்டு மயிர்களாற் செய்த பவித்திரத்திற் (கம்பளியிற்) செலுத்துகின்றன என்பதாம். (11)

ஈண்டு, வக்வா என்னுஞ்சொல், ஒலிப்பொருளிலும், ஆஜி என்பது வேள்விப் பொருளிலும் நின்றமைகாண்க.

மந்திரம் 12.

३ २ ३२ ३२३ १ ३ १ २ ३ १ १२२ २३ १ २

544\. अपामिवेदूर्मयस्तर्तुराणाः प्र मनीषा ईरते सोममच्छ ।

३ २ ३१२ ३ २ ३ १ २र ३ २ ३१ २

नमस्यन्तीरुप च यन्ति संचा च विशन्त्युशतीरुशन्तम् ॥ १२ ॥

இருக்கு 9-95.

அபாமிவேதூர்மயஸ்தர்துராணா: ப்ரமநீஷா ஈரதே ஸோமமச்ச ।

நமஸ்யந்தீருப ச யந்தி ஸஞ்சா ச விசந்த்யுசதீருசந்தம் ॥

அந்வயம்.

अपां ऊर्मयः इव, तर्तुराणाः इत्, सोमं अच्छ, मनीषाः, प्रेरते, उशतीः, नमस्यन्तीः, उशन्तं, (तम्,) उपयन्ति च, संच, आविशन्ति च ॥

பதவுரை.

अपां ऊर्मयः इव	அபாம் ஊர்மய: இவ	நீரின்கண் அலைகள் விரைவிலெழுமாறு
तर्तुराणाः इत्	தர்துராணா: இத்	கருமத்தில், தேவர்களைத் துதித்தற்பொருட்டு வேகம் பண்ணுகின்ற வேட்போர்கள்
सोमं अच्छ	ஸோமம் அச்ச	சோமரசத்தை முன்னிட்டுத்
मनीषाः	மநீஷா:	தோத்திரங்களைச்
प्रेरते	ப்ரேரதே	செலுத்துகின்றார்கள்.
उशतीः	உஶதீ:	தோத்திரங்களும்
नमस्यन्तीः	நமஸ்யந்தீ:	வணங்கிக் கொண்டு
उशन्तं	உஶந்தம்	விரும்புகின்ற
(तं)	(தம்)	(அச்சோமரசத்தின்)
उपयन्ति च	உபயந்தி ச	அருகிற் செல்கின்றன.
सं च	ஸம் ச	(மற்றும்) கொத்துகளாகியும்
आविशन्ति च	ஆவிஶந்தி ச	அதிற் புகுகின்றன.

சாயண பாடியம்

கண்டம்—7. இருக்கு—12. பிரஸ்கண்வ ரிஷி.

வேகமுள்ள நீரலைகளைப் போன்று கருமத்தில் தேவர்களைத் துதித்தற் பொருட்டுத் துரிதஞ்செய்கின்ற வேட்போர்கள், சோமரசத்தை முன்னிட்டுத் தோத்திரங்களால் வழுத்துகின்றார்கள். துதிகளோ, வணங்குவனவாய்ச் சோமத்தை யடைந்து அதனருகில் நிலைக்கின்றன. அதாவது அதையே யடைகின்றன என்பதாம். இச்சையுள்ள தோத்திரங்கள் தாம் விரும்புகின்ற சோமரசத்தைச்சேர்ந்து பொருந்துகின்றன என்பதாம். (12)

ஏழாவது கண்டம்.

முற்றும்.

எட்டாவது கண்டம்.

பிரபாடகம்—6. அத்தியாயம்—5. கண்டம்—8.

ஒன்பது மந்திரங்களாலானது.

பவமானம் (சோமம்) தேவதை. சந்தம். 1, 6, 9, அநுஷ்டுப். 7, பிருகதி. சுரம், 1, 6, 8, 9, காந்தாரம் மத்தியமம்.

மந்திரம் 1.

३ १ २   ३ १ २   ३ १२   ३ १२
545. पुरोजिती वो अन्धसः सुताय मादयित्नवे ।
२ ३ १३   ३ १ २   ३क२र
अपश्वानꣳ श्नथिष्टन सखायो दीर्घजिह्व्यम् ॥ १ ॥

இருக்கு—9-101-2.

𑌪𑍁𑌰𑍋𑌜𑌿𑌤𑍀 𑌵𑍋 𑌅𑌨𑍍𑌧𑌸𑌃 𑌸𑍁𑌤𑌾𑌯 𑌮𑌾𑌦𑌯𑌿𑌤𑍍𑌨𑌵𑍇 ।
𑌅𑌪𑌶𑍍𑌵𑌾𑌨𑌂 𑌶𑍍𑌨𑌥𑌿𑌷𑍍𑌟𑌨 𑌸𑌖𑌾𑌯𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌜𑌿𑌹𑍍𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

அந்வயம்.

हे सखायः!, वः, पुरोजिती, सुताय, मादयित्नवे, अन्धसः, दीर्घजिह्व्यम्, श्वानं, अपश्नथिष्टन ॥

பதவுரை.

हे सखायः!	𑌹𑍇 𑌸𑌖𑌾𑌯𑌃 !	நண்பர்களான துதிப்போர்காள்!
वः	𑌵𑌃	நீவிர்
पुरोजिती	𑌪𑍁𑌰𑍋𑌜𑌿𑌤𑍀	எதிரில் வெற்றியையுடையதும்
सुताय	𑌸𑍁𑌤𑌾𑌯	பிழியப்பட்டதும்
मादयित्नवे	𑌮𑌾𑌦𑌯𑌿𑌤𑍍𑌨𑌵𑍇	மிகக் களிப்பைத்தருவதுமாகிய
अन्धसः	𑌅𑌨𑍍𑌧𑌸𑌃	சோமரசத்தின் பொருட்டு,
दीर्घजिह्व्यम्	𑌦𑍀𑌰𑍍𑌘𑌜𑌿𑌹𑍍𑌵𑍍𑌯𑌮𑍍	நீண்ட நாவுள்ள
श्वानं	𑌶𑍍𑌵𑌾𑌨𑌂	நாயை
अपश्नथिष्टन	𑌅𑌪𑌶𑍍𑌨𑌥𑌿𑌷𑍍𑌟𑌨	ஒதுக்குவீர்களாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—12. சுவயாசுவ ரிஷி.

நண்பர்களான, அல்லது, ஒத்த வறிவுடையார்களான துதிப்போர்களே! **நீங்கள்**, பிழியப்பட்டதும், மிகக்களிப்பைத்தருவதும் எதிரிலுள்ள வெற்றியையுடையதுமாகிய சோமரசத்தின் நிமித்தமாய், நீண்ட நாவுடைய நாயை ஓட்டுவீர்களாக. நாய்கள், அல்லது, இராக்கதர்கள், சோமரசத்தை நக்காதவாறு செய்வீர்களாக என்பதாம். (1)

மந்திரம் 2.

३ २ ३ २ ३२उ ३ १२ ३ १ २
546. **अयं पूषा रयिर्भगः सोमः पुनानो अर्षति ।**
१ ३ १ २ ३ १ २३क २र ३ १ २ ३२
पतिर्विश्वस्य भूमनो व्यख्यद्रोदसी उभे ॥ २ ॥

இருக்கு—8-101-7.

𑌅𑌯𑌂 𑌪𑍂𑌷𑌾 𑌰𑌯𑌿𑌰𑍍𑌭𑌗𑌃 𑌸𑍋𑌮𑌃 𑌪𑍁𑌨𑌾𑌨𑍋 𑌅𑌰𑍍𑌷𑌤𑌿 ।
𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑍂𑌮𑌨𑍋 𑌵𑍍𑌯𑌖𑍍𑌯𑌦𑍍𑌰𑍋𑌦𑌸𑍀 𑌉𑌭𑍇 ॥

அந்வயம்.

पूषा, भगः, रयिः, अयं, पुनानः, अर्षति, विश्वस्य, भूमनः, पतिः, सोमः, उभे रोदसी, व्यख्यत् ॥

பதவுரை.

पूषा	𑌪𑍂𑌷𑌾	பரிபாலிப்பதும்
भगः	𑌭𑌗𑌃	சேவித்தற்குரியதும்
रयिः	𑌰𑌯𑌿𑌃	தனங்கிடைத்தற்குக் காரணமுமாகிய
अयं	𑌅𑌯𑌂	இச்சோமரசம்
पुनानः	𑌪𑍁𑌨𑌾𑌨𑌃	பவித்திரத்தில் (கம்பளியில்) சுத்தம் பண்ணப்பட்டதாய்க்
अर्षति	𑌅𑌰𑍍𑌷𑌤𑌿	கலசத்தை யடைகின்றது.
विश्वस्य	𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯	எல்லா
भूमनः	𑌭𑍂𑌮𑌨𑌃	உயிர்கட்கும்
पतिः	𑌪𑌤𑌿𑌃	இறைவனாகிய
सोमः	𑌸𑍋𑌮𑌃	சோமரசம்
उभे रोदसी	𑌉𑌭𑍇 𑌰𑍋𑌦𑌸𑍀	வானுலகு மண்ணுலகிரண்டையும்
व्यख्यत्	𑌵𑍍𑌯𑌖𑍍𑌯𑌤𑍍	தனதொளியால் விளக்குகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—2. யயாதி நாகுஷ ரிஷி.

அனைத்தையும் பரிபாலிப்பதும், ஆராதிக்கத்தக்கதும், தனத்திற்குக் காரணமுமாகிய இச் சோமரசம், பவித்திரமாகிய கம்பளியிற் சுத்தம் பண்ணப்பட்டுக் கலசத்தை யடைகின்றது. அங்ஙனமே, உலகமனைத்திற்கும் இறைவனாகி (பரிபாலிப்போனாகி)ய சோமரசம் விண்ணுலகு, மண்ணுலகிரண்டையும் தனது பிரகாசத்தால் விளக்குகின்றது. இதனால் இரண்டுலகிற்கு மிறைவனாந் தன்மை குறிக்கப்பட்டது. (2)

மந்திரம் 3.

३ २ ३ १ २   ३ २ ३ १ २ ३ १ २

547. सुतासो मधुमत्तमाः सोमा इन्द्राय मन्दिनः ।

३ १२   ३ १ २   ३ १ २

पवित्रवन्तो अक्षरन् देवान् गच्छन्तु वो मदाः ॥ ३ ॥

இருக்கு—9-101-4.

ஸுதாஸோ மது⁴மத்தமா: ஸோமா இந்த்³ராய மந்தி³ந: ।
பவித்ரவந்தோ அக்ஷரந் தே³வாந் க³ச்ச²ந்து வோ மதா³: ॥

அந்வயம்.

मधुमत्तमाः, मन्दिनः, सुतासः सोमाः, पवित्रवन्तः, इन्द्राय, अक्षरन्, वः, मदाः, देवान्, गच्छन्तु ॥

பதவுரை.

मधुमत्तमाः	மது⁴மத்தமா:	மிக மதுரமுடையதும்
मन्दिनः	மந்தி³ந:	களிப்பைக் கொடுப்பதும்:
सुतासः सोमाः	ஸுதாஸ: ஸோமா:	பிழியப்பட்டதுமாகிய சோமரசம்
पवित्रवन्तः	பவித்ரவந்த:	பவித்திரமுடையதாகி
इन्द्राय	இந்த்³ராய	இந்திரன் பொருட்டு
अक्षरन्	அக்ஷரந்	(வடிக்கின்ற) பாத்திரத்திற் பொங்குகின்றது.
वः	வ:	சோமக் கொடிகளே!
मदाः	மதா³:	களிப்பைத் தரும் உங்களுடைய ரசம்
देवान्	தே³வாந்	இந்திரன் முதலிய தேவர்களை
गच्छन्तु	க³ச்ச²ந்து	அடைவதாகுக.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—3. யயாதி நாகுஷ ரிஷி.

வியப்புற்ற மதுரத்தன்மையோடு கூடியதும், இது பற்றியே களிப்பைத் தருவதும், பிழியப்பட்டதுமாகிய சோமரசம், பவித்திரஞ் செய்யப்பட்டதாகி இந்திரன் பொருட்டுப் பாத்திரத்தில் நிரம்புகின்றது. இனிப் பிரத்தியட்சமாகிய தோத்திரம்:—சோமக் கொடிகளே! களிப்பின் நிமித்தமான உங்களுடைய இரசம் இந்திரன் முதலியோர்களை அடைகுக என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २ ३ १ २ ३ १ २ ३ १ २
548. सोमाः पवन्त इन्दवोऽस्मभ्यं गातुवित्तमाः ।
३ २ ३ १ २३ १२ ३क २र ३ १२
मित्रा * स्वाना अरेपसः स्वाध्याः स्वर्विदः ॥ ४ ॥

இருக்கு—9-101-10.

𑌸𑍋𑌮𑌾𑌃 𑌪𑌵𑌨𑍍𑌤 𑌇𑌨𑍍𑌦𑌵𑍋𑌽𑌸𑍍𑌮𑌭𑍍𑌯𑌂 𑌗𑌾𑌤𑍁𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃।
𑌮𑌿𑌤𑍍𑌰𑌾 𑌸𑍍𑌵𑌾𑌨𑌾 𑌅𑌰𑍇𑌪𑌸𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌿𑌦𑌃 ॥

அங்வயம்.

गातुवित्तमाः, मित्राः, स्वानाः, अरेपसः, स्वाध्याः, स्वर्विदः, इन्दवः, सोमाः, अस्मभ्यं, पवन्ते ॥

பதவுரை.

गातुवित्तमाः	𑌗𑌾𑌤𑍁𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌾𑌃	நன்னெறியையடைவிப்பதும்
मित्राः	𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌃	தேவர்கட்கு நட்புடையதும்
स्वानाः	𑌸𑍍𑌵𑌾𑌨𑌾𑌃	இனிது பிழிந்தெடுக்கப்பட்டதும்
अरेपसः	𑌅𑌰𑍇𑌪𑌸𑌃	பாவமிலாததும்
स्वाध्यः	𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌃	நன்கு தியானம் பண்ணிவைப்பதும்
स्वर्विदः	𑌸𑍍𑌵𑌰𑍍𑌵𑌿𑌦𑌃	சுவர்க்கத்தை யடைவிப்பதும்
इन्दवः	𑌇𑌨𑍍𑌦𑌵𑌃	பிரகாசிப்பதுமாகிய
सोमाः	𑌸𑍋𑌮𑌾𑌃	சோமரசம்,
अस्मभ्यं	𑌅𑌸𑍍𑌮𑌭𑍍𑌯𑌂	எங்கணிமித்தமாய்
पवन्ते	𑌪𑌵𑌨𑍍𑌤𑍇	நிரம்புகின்றது, அல்லது, ஒழுகுகின்றது.

* सुवानाः, என்பது இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—4. மநுசாம்வரண ரிஷி.

சிறப்புடன் நன்னெறியை யடைவிப்பதும், பிரகாசிப்பதுமாகிய சோமரசம், எங்கணிமித்தமாக நிரம்புகின்றது. அல்லது, வருகின்றது. எத்தன்மைத்தாகிய சோமரசமெனின்? தேவர்கட்கு நட்பானதும், பிழியப்பட்டதும், பாவமற்றதுமாம். இது கொண்டே அழகிய தியானமுடையதும், எல்லா முணர்ந்ததுமாமென்க. (4)

மந்திரம் 5.

३ १ २ ३ १२ ३ १२ ३ १२

549. *अभी नो वाजसातमꣳ रयिमर्ष †शतस्पृहम् ।

१ २ ३१२ ३ २ २ ३१२

इन्दो सहस्रभर्णसं तुविद्युम्नं विभासहम् ॥ ५ ॥

இருக்கு—9-65-28.

𑌅𑌭𑍀 𑌨𑍋 𑌵𑌾𑌜𑌸𑌾𑌤𑌮𑌂 𑌰𑌯𑌿𑌮𑌰𑍍𑌷 𑌶𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌮𑌂 ।
𑌇𑌨𑍍𑌦𑍋 𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑌰𑍍𑌣𑌸𑌂 𑌤𑍁𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌂 𑌵𑌿𑌭𑌾𑌸𑌹𑌂 ॥

அந்வயம்.

हे इन्दो !, शतस्पृहं, सहस्रभर्णसं, तुविद्युम्नं, विभासहं, वाजसातमं, रयिं, नः, अभ्यर्ष ॥

பதவுரை.

हे इन्दो !	𑌹𑍇 𑌇𑌨𑍍𑌦𑍋 !	ஒளி மிகுந்த சோமமே ! நீ
शतस्पृहं	𑌶𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌂	நூற்றுக் கணக்கானவர்களால் விரும்பத்தக்கதும்
सहस्रभर्णसं	𑌸𑌹𑌸𑍍𑌰 𑌭𑌰𑍍𑌣𑌸𑌂	ஆயிரக் கணக்கானவர்களைக் காப்பாற்றத் தக்கதும்
तुविद्युम्नं	𑌤𑍁𑌵𑌿 𑌦𑍍𑌯𑍁𑌮𑍍𑌨𑌂	மிகுந்த கீர்த்தியை, அல்லது, அன்னத்தையுடையதும்
विभासहं	𑌵𑌿𑌭𑌾𑌸𑌹𑌂	மிக்கொளியுடையதும்
वाजसातमं	𑌵𑌾𑌜𑌸𑌾𑌤𑌮𑌂	பேராற்றலைத் தருவதுமாகிய
रयिं	𑌰𑌯𑌿𑌂	மகப்பேற்றையேனும், அல்லது, தனத்தையேனும்
नः	𑌨𑌃	எங்கட்கு
अभ्यर्ष	𑌅𑌭𑍍𑌯𑌰𑍍𑌷	அளிப்பாயாக.

* अभि, † पुरुस्पृह, विश्वासहम्, என்பன இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—5. அம்பரீஷர், ருஜீசுவான் என்னும் இருவரும் ரிஷிகள்.

பிரகாசமாகிய சோமரசமே! நீ, மிகுந்த வலியையேனும், அல்லது அன்னத்தையேனுங் கொடுக்கத்தக்க தனத்தையும், புத்திரப்பேற்றையும் எங்கட்கு அளிப்பாயாக. அஃது எத்தன்மையதாமெனின்? பலரால் விரும் பத்தக்கதும், பலவகையாய்ப் பரிபாலிக்கத்தக்கதும், பெருங் கீர்த்தியை, அல்லது, மிகுந்த தனத்தையுடையதும், "விளக்குவது கீர்த்தி, அல்லது, அன்னம்" என்றார் நிருத்தத்தில் யாஸ்கமுனிவரும். மிக்கொளியையு மமிழ்த்துவதும், அதாவது மகத்தாகிய ஒளியுடையதுமாம். இத்தன்மைய தனத்தையேனும், அல்லது புத்திரனையேனுந் தருவாயாக எனக் கூட்டிக் கொள்க. (5)

மந்திரம் 6.

३ १ २ ३१२ ३ १ २२ ३ १ २
550. अभी नवन्ते अद्रुहः प्रियमिन्द्रस्य काम्यम् ।
३२उ ३ १२ ३१ २ ३१२
वत्सं न पूर्व आयुनि जातꣳ रिहन्ति मातरः ॥ ६ ॥

இருக்கு 9-10-1.

அபீ நவந்தே அத்ருஹ: ப்ரியமிந்த்ரஸ்ய காம்யம் ।
வத்ஸம் ந பூர்வ ஆயுநி ஜாதம் ரிஹந்தி மாதர: ॥

அங்வயம்.

मातरः, पूर्वे, आयुनि, जातं, वत्सं, रिहन्ति न, अद्रुहः, इन्द्रस्य, प्रियं, काम्यं, अभि नवन्ते ॥

பதவுரை.

मातरः	மாதர:	தாய்களான கோக்கள்
पूर्वे	பூர்வே	முதலாவது
आयुनि	ஆயுநி	வயதில்
जातं	ஜாதம்	பிறந்த
वत्सं	வத்ஸம்	கன்றை
रिहन्ति न	ரிஹந்தி ந	நக்கிக்கொடுத்தல் போன்று

अद्रुहः	அத்ருஹ:	துரோகமற்றவசதீவரி என்னும் ஆற்று நீர்,
इन्द्रस्य	இந்த்ரஸ்ய	இந்திரனுக்குப்
प्रियं	ப்ரியம்	பிரியமானதும்
काम्यं	காம்யம்	அனைவராலும் விரும்பப்படுவதுமாகிய சோமரசத்தை
अभि नवन्ते	அபி நவந்தே	அன்புடனடைகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—6. ருபூசூனு, காசியபர் என்னு மிருவர் ரிஷிகள்.

கோக்கள், முதல் வருடத்திற் பிறந்த தமது கன்றை நக்குவன போன்று, துரோக மற்ற 'வசதிவரி' என்னும் ஆற்றுநீர், இந்திரனுக்கு விருப்பமானதும், அனைவராலும் விரும்பப்படுவதுமாகிய சோமரசத்தை அன்போடுஅடைகின்றது என்பதாம். (6)

மந்திரம் 7.

१ २३ १ २ ३ २३ १ २ ३ १ २
551. आ हर्यताय धृष्णवे * धनुष्टन्वन्ति पौंस्यम् ।
३ २उ ३ १ २ ३१ २ ३ १२र ३ १२
शुक्रा वि यन्त्यसुराय निर्णिजे विपामग्रे महीयुवः ॥ ७ ॥

இருக்கு—9-99-1.

ஆ ஹர்யதாய த்ருஷ்ணவே தநுஷ்டந்வந்தி பௌம்ஸ்யம் |
சுக்ரா வி யந்த்யஸுராய நிர்ணிஜே விபாமக்ரே மஹீயுவ: ||

அந்வயம்.

हर्यताय, धृष्णवे, पौंस्यं, धनुरातन्वन्ति, विपां, अग्रे, महीयुवः, शुक्राः, असुराय, निर्णिजे, वियन्ति ॥

பதவுரை.

हर्यताय	ஹர்யதாய	அனைவரும் விரும்புதற்குரியதும்
धृष्णवे	த்ருஷ்ணவே	பகைவரை யடக்குவதுமாகிய சோமத்தின்பொருட்டு
पौंस्यं	பௌம்ஸ்யம்	சிறந்த புருடத்தன்மையை விளக்குகின்ற
धनुरातन्वन्ति	தநுராதந்வந்தி	தனுவில் நாணேற்றுகின்றார்கள்.

* धनुस्तन्वन्ति शुक्रां व्ययन्त्यसुराय निर्णिजं, என்பது இருக்கு.

विप्रां	விப்ராம்	அறிஞர்கட்கு
अग्रे	அக்ரே	முன்னர்
महीयुव:	மஹீயுவ:	பூசையை விரும்புகின்ற வேட்போர்கள்
शुक्रा:	சுக்ரா:	வெண்மையான பசுவின் பாலே,
असुराय	அஸுராய	வன்மையுடைய
निर्णिजे	நிர்ணிஜே	வடிவத்தைச் சுத்திசெய்தற் பொருட்டு
वियन्ति	வியந்தி	மறைக்கின்றார்கள்.

சாயணபாடியம்.

கண்டம்—8. இருக்கு—7.

யாவர்களாலும் விரும்பத்தக்கதும், பகைவர்களை யடக்குஞ் சீலமுள்ளதுமாகிய சோமத்திற்கு புருடத்தன்மையை வெளிப்படுத்துகின்ற தனுவில் நாணேற்றுகின்றார்கள். அறிவுமிக்கோர்களின் முன்னர் பூசையை விரும்புகின்ற வேட்போர்கள் வெண்மை நிற ஆவின்பாலே ஆற்றலுள்ள வடிவத்தின் பொருட்டு (சுத்திபண்ணுவதற்கு) மறைக்கின்றார்கள் என்பது பொருள் (1)

குறிப்பு:—சோமரசத்தின் தாரை விழுதற்பொருட்டு விரித்துள்ள பவித்திரமாகிய கம்பளி ஒருவகையாய் அலங்கரிக்கப்படுகின்றது. கட்டிலின்மேல் வாயகன்ற மட்பாண்டம் ஒன்று வைத்து அதைத் துவாரமிட்டு அதிற் கம்பளிக்கயிற்றைத் தொங்கவிடுதலாகிய வழக்கு, சோமம் ஒழுகுதற்பொருட்டெனத், தெரிகின்றது.

மந்திரம் 8.

२३ १ २ ३१ २र ३१ २ ३ १२
552. परित्यꣳ हर्यतꣳ हरिं बभ्रुं पुनन्ति वारेण ।
२ ३२उ ३ २उ३ १२ ३१ २र
यो देवान् विश्वाꣳ इत्परि मदेन सह गच्छति ॥ ८ ॥

இருக்கு 9-90-7.

பரித்யம் ஹர்யதம் ஹரிம் பப்ரும் புநந்தி வாரேண ।
யோ தேவாந் விஶ்வாம் இத்பரி மதேந ஸஹ கச்சதி ॥

அந்வயம்.

य:, विश्वान् देवान् इत्, मदेन सह, परिगच्छति, हर्यतं, हरिं, बभ्रुं, त्यं, वारेण, परिपुनन्ति ॥

பதவுரை.

यः	யஃ	யாதொரு சோமம்
विश्वान् देवान् इत्	விஶ்வாந் தே³வாந் இத்	{ இந்திரன்முதலிய எல்லாத் தேவர்களையும்
मदेन सह	மதே³ந ஸஹ	களிப்பைத்தரும் இரசத்தோடு
परिगच्छति	பரிக³ச்ச²தி	அடைகின்றதோ,
हर्यतं	ஹர்யதம்	அனைவரும் விரும்பத்தக்கதும்
हरिं	ஹரிம்	பச்சை நிறமுடையதும்,
बभ्रुं	ப³ப்⁴ரும்	பொன்மை நிறமுடையதுமாகிய
त्यं	த்யம்	அச்சோமத்தை,
वारेण	வாரேண	பவித்திரமாகிய கம்பளியினால்
परिपुनन्ति	பரிபுநந்தி	சுத்தப்படுத்துகின்றார்கள்.

சாயண பாடியம்.

கண்டம்—8. இருக்கு—8. ருசிவ அம்பரிஷர்கள் ரிஷிகள்.

அனைவராலும் விரும்புதற்குரியதும், பசுமை நிறம், பொன்மை நிறமுடையதுமாகிய யாதொரு சோமம் களிப்பை கொடுக்கின்ற இரசத்துடன் இந்திரன் முதலிய தேவர்களை இனிதடைகின்றதோ, அச் சோமரசத்தைப் பவித்திரமாகிய கம்பளியாற் சுத்தப்படுத்துகின்றார்கள். (8)

மந்திரம் 9.

१ २ ३ १ २र ३ २ ३ १ २३ १ २र

553. *प्र सुन्वानायान्धसो मर्त्तो न वष्ट तद्वचः ।

२३ १२ ३ १ २ ३ २ ३१ २र

अप श्वानमराधसꣳ हता मखं न भृगवः ॥ ९ ॥

இருக்கு 9-101-13.

ப்ர ஸுந்வாநாயாந்த⁴ஸோ மர்த்தோ ந வஷ்ட தத்³வச꞉।

அப ஶ்வாநமராத⁴ஸம் ஹதா மக²ம் ந ப்⁴ருக³வ꞉ ॥

---

* प्र सुन्वानस्य वृत तद्वचः, என்பது இருக்கு.

அந்வயம்.

सुन्वानाय, अन्धसः, तत्, वचः, मर्त्ताः, न प्रवष्ट, भृगवः, अराधसं मखं न, श्वानं, अपहत ॥

पदवुரை.

सुन्वानाय	ஸுந்வாநாய	நன்கு பிழியப்பட்ட
अन्धसः	அந்தஸ:	சோமத்தைத் துதிக்கின்றதும்,
तत्	தத்	கீர்த்தி மலிந்ததுமாகிய
वचः	வச:	வாக்கை,
मर्त्ताः	மர்த்தா:	கருமத்திற்கு இடையூறு செய்கின்றவர்கள்
न प्रवष्ट	ந ப்ரவஷ்ட	கேட்காதொழிவார்களாக. (மற்றும், துதிப்போர்காள்! நீவிர்)
भृगवः	ப்ருகவ:	பிருகுவைச் சேர்ந்தோர்கள்
अराधसं मखं न	அராதஸம் மகம் ந	தட்சணையில்லா வேள்வியை முன்னர் நீக்கியவாறு
श्वानं	ஶ்வாநம்	(இங்கு வரும்) நாயை
अपहत	அபஹத	ஓட்டுவீர்களாக.

சாயணபாடியம்.

கண்டம்—8. இருக்கு—9. பிரசாபதி ரிஷி.

பிழியப்பட்ட சோமரசத்தைத் துதிக்கின்றதும், பெருமை வாய்ந்ததுமாகிய வாக்கை, இடையூறு செய்கின்ற மனிதன்போல்வான் விரும்பாதொழிவானாக. அதாவது கேட்காதொழிவானாக என்பதாம். அவ்வாறே துதிப்போர்களே! நீவிர், அனுகூலச் செய்கையற்ற நாயை ஒதுக்குவீர்களாக. அதிலுவமை:—முன்னர் அராதசம் (தட்சணையற்றது) என்னும் வேள்வியை, பிருகு சம்பந்தமுடையோர்கள் ஒதுக்கியவாறெனல். (9)

எட்டாவது கண்டம்

முற்றும்.

ஒன்பதாவது கண்டம்

பிரபாடகம்—6. அத்தியாயம்—5. கண்டம்—9.

பன்னிரண்டு மந்திரங்களாலானது.

சோமம் - தேவதை. சந்தம் - சகதி. சுரம் - நிஷாதம்.

மந்திரம் 1.

३२ ३ १२ ३१२ ३ १२ ३२उ ३ २३१२
554. अभि प्रियाणि पवते चनोहितो नामानि यह्वो अधि येषु वर्द्धते ।
१ २ ३ २ ३२उ ३२३ १२ ३२
आ सूर्यस्य बृहतो बृहन्नधिरथं विश्वञ्चमरुहद्विचक्षणः [illegible] ॥

[illegible] 5-1.

அபி ப்ரியாணி பவதே சநோஹிதோ நாமாநி யஹ்வோ அதி
[யேஷு வர்த்ததே ।
ஆ ஸூர்யஸ்ய ப்ருஹதோ ப்ருஹந்நதிரதம் விஶ்வஞ்சமருஹத்வி
[சக்ஷண: ॥

அந்வயம்.

येषु, यह्वः, अधिवर्द्धते, बृहन्, विश्वञ्चं, बृहतः, सूर्यस्य, रथं अधि, विचक्षणः, आरुहत्, चनोहितः, प्रियाणि, नामानि, अभिपवते ॥

பதவுரை.

येषु	யேஷு	எந்த நீரில்
यह्वः	யஹ்வ:	மகத்தாகிய இச்சோமம்
अधिवर्द्धते	அதிவர்த்ததே	மிக விருத்தியாகின்றதோ,
बृहन्	ப்ருஹந்	மற்றும், பெரிதாகியதும்
विश्वञ्चं	விஶ்வஞ்சம்	யாண்டுஞ் செல்கின்றதும்
बृहतः	ப்ருஹத:	மகத்துமாகிய
सूर्यस्य	ஸூர்யஸ்ய	இரவியினுடைய
रथं अधि	ரதம் அதி	இரதத்தின் மீது

विचक्षणः	விசக்ஷணః	உலகைக் காண்பதாகி
आरुहत्	ஆருஹத்	ஏறுகின்றதோ,
चनोहितः	சநோஹிதః	அருந்துதற்கினிய, அல்லது, இனிய உணவாகிய அச்சோமம்
प्रियाणि	ப்ரியாணி	உலகைத் திருப்தி பண்ணுகின்ற
नामानि	நாமாநி	நீரை,
अभिपवते	அபிபவதே	பலவகையாக அடைகின்றது.

சாயணபாடியம்.

கண்டம்—9. இருக்கு—1.

அன்னத்தின் பொருட்டு இனியதாகிய, அல்லது, இனியதாகிய அன்னமென்னுஞ் சோமரசம், உலகைப் பிரியப்படுத்தும் நீரைப் பல விதமாய் அடைந்து நிரம்புகின்றது. அந்தரிட்சத்திலுள்ள நீரில், மகத்தாகிய இச்சோமரசம் வளர்கின்றது. நீரின் நடுவில் உண்மையாய்ச் சோமமிருக்கின்றதென்க. பெரிதாகிய அச்சோமம் மகத்தாகிய சூரியனுடைய இரதத்தின் மீது [illegible]கத்தைக் காண்பதாகி ஏறுகின்றது. (இது பற்றியே) "தீயிலிட்ட அவி இ[illegible]ிதாக இரவியை யடைகின்றது" என்றார் மனுவும். (1)

மந்திரம் 2.

३ १२ १ १२३ २ ३ १२ ३२३२३ १२
555. अचोदसो नोधन्वन्त्विन्दवः *प्र स्वानासो बृह †द्देवेषु हरयः ।
१ २ ३ २३२३ १२ ३ १२ ३ १२ ३ १२
§ विचिदश्नाना इषयो अरातयोऽर्यो नः सन्तु सनिषन्तु नो धियः ॥

இருக்கு 9-71-1.

அசோதஸோ நோதந்வந்த்விந்தவః ப்ர ஸ்வாநாஸோ ப்ருஹத்தேவே[ஷு ஹரயః]
விசிதஶ்நாநா இஷயோ அராதயோऽர்யோ நః ஸந்து ஸநிஷந்து [நோ தியః ॥]

அந்வயம்.

अचोदसः, हरयः, स्वानासः, इन्दवः, नः, बृहद्देवेषु, प्रधन्वन्तु, अरातयः
नः, अर्यः इषयः, अश्नाना विचित्, सन्तु, सः, धिया, [illegible] ॥

---

* प्रसुवानासो [illegible] विचनशन्न इषे [illegible] नशन्त [illegible] नो [illegible]
என்பன இரு[illegible]

பதவுரை.

अचोदसः	அசோதஸ:	பிறரால் ஏவப்படாததும்
हरयः	ஹரய:	பாவத்தைப் போக்குவதும், அல்லது, பசுமை நிறமுடையதும்,
स्वानासः	ஸ்வாநாஸ:	நன்கு தேடப்பெற்றதுமாகிய
इन्दवः	இந்தவ:	சோமரசம்
नः बृहद्देवेषु	ந: ப்ருஹத்தேவேஷு	அநேக தேவர்கள் கூடியுள்ள எமது வேள்விகளில்
प्रधन्वन्तु	ப்ரதந்வந்து	(வந்து) சேர்வதாகுக.
अरातयः	அராதய:	தனம் முதலியவைகளை யீயாத
नः	ந:	எங்களுடைய
अर्यः	அர்ய:	பகைவர்கள்
इषयः	இஷய:	அன்னத்தை விரும்பி
अश्नानाः विचित्	அஶ்நாநா: விசித்	உண்ணுதோர்களாகவே
सन्तु	ஸந்து	ஆகுக,
नः धियः	ந: தியஃ	தேவ விஷயகமாகிய எமது தோத்திரங்கள்
सनिषन्तु	ஸநிஷந்து	தேவர்களை யுடைவனவாகுக.

சாயணபாடியம்.

கண்டம்—9. இருக்கு—2.

பிறரால் ஏவப்படாத சோமரசம், [illegible]ணிமித்தமாய் நன்கு வருவதாகுக. யாண்டெனின்? தேவர்கள் மிகு[illegible]யாய்ச் சூழ்ந்துள்ள வேள்வியின்கண். அல்லது, தேவர்களுடைய அவை நடுவில். எவ்வண்ணமாகிய சோமரசமெனின்? நன்கு பிழிந்தெடுக்கப்பட்டதும் பசுமை நிறமுடையதுமாம். அன்றியும், தனம் முதலியவைகளை யீயாத எங்களுடைய சத்துருக்கள், அன்ன விருப்புடையோர்களாய் அன்னமுண்ணுதவர்களாகவே இருப்பார்களாக. மற்றும், தேவர்கள் விஷயமான எமது தோத்திரங்கள் தேவர்களை யினிது அடைவனவாகுக என்பதாம். (2)

மந்திரம் 3.

३२उ ३ १ २ १ २ ३ २ ३ १२ ३ १२
556. एष प्र कोशे मधुमाँ [illegible] चक्रददिन्द्रस्य वज्रो *वपुषो वपुष्टमः ।
३ २ २ १ २ ३ १ २ ३ ३ १ २
§अभ्यृ३ [illegible]श्चुतो वाश्रा अर्षन्ति †पयसा च धेनवः॥

இருக்கு 9-77-1.

* वपुषो वपुष्टरः, [illegible] पयशव, என்பன இ[illegible]கு.

ஏஷ ப்ர கோஶே மது⁴மாஂ அசிக்ரதி³ந்த்³ரஸ்ய வஜ்ரோ வபுஷோ
[வபுஷ்டம: ।
அப்⁴ய்ருதஸ்ய ஸுது³கா⁴ க்⁴ருதஶ்சுதோ வாஶ்ரா அர்ஷந்தி பயஸா
[ச தே⁴நவ: ॥

அந்வயம்.

इन्द्रस्य, वज्रः, वपुषः, वपुष्टमः, एषः, मधुमान्, कोशे, प्राचिक्रदत्, ऋतस्य, सुदुघाः, घृतश्चुतः, वाश्राः, पयसा धेनवः च, अभ्यर्षन्ति ॥

பதவுரை.

इन्द्रस्य	இந்த்³ரஸ்ய	இந்திரனுடைய
वज्रः	வஜ்ர:	வச்சிராயுதமாகியதும்
वपुषः	வபுஷ:	வித்திடுவோர்களுட்
वपुष्टमः	வபுஷ்டம:	சிறந்த வித்திடுவதாகியதும்
एषः मधुमान्	ஏஷ: மது⁴மாந்	இன்சுவையோடு கூடியதுமாகிய இச் சோமம்,
कोशे	கோஶே	துரோண கலசத்தில்
प्राचिक्रदत्	ப்ராசிக்ரத³த்	ஒலியிடுகின்றது.
ऋतस्य	[illegible]ஸ்ய	நிறைந்த பயனுடைய சோம ரசத்தின்
	[illegible]	பயனை யினிது பெய்வதும்
		நீரை விழச் செய்வதுமாகிய
		இரைகின்ற தாரைகள்
	[illegible]வ: ச	பால்கறக்கின்ற பசுக்கள்போன்று
		இனிதடைகின்றன.

பாடியம்.

[illegible] சாமரசம், துரோண கலசத்தில் மிக [illegible]மெனின்? இந்திரனுடைய வச்சிரா[illegible] என்பதுமதுவெனக. இச் சோம[illegible]வரைக்) கொல்வதற்குச் சாதன[illegible]டது. இச் சோமரச [illegible]றந்த வித்திடுவோனு[illegible]மை யாதலினெனக. [illegible]து'' என மறையுங் [illegible]ள் உண்டாகின்றன.

ஒலி[illegible] யுதப[illegible] ரசமே, மாந்தல[illegible] மே, வித்[illegible] கின்றது. இது பற்றி[illegible] கூறுகின்றது

ஈண்டுத் தாரைகள் என்பது எஞ்சிநின்றது. எத்தன்மைய தாரைகளெனின்? பயன்களை இனிது பொழிகின்றவைகளும் நீர் நிறைந்தவைகளுமாம். அல்லது, இரசம் நிறையப்பெற்றவைகளும், பாலோடு கூடிய பசுக்கள் போன்று ஒலிக்கின்றவைகளுமாம் என்பதாம். (3)

மந்திரம் 4.

१ २   ३२ ३१   २ २उ   ३ २ ३१ २र   ३ १ २

557. प्रो अयासीदिन्दुरिन्द्रस्य निष्कृतꣳ सखा सख्युर्न प्रमिनाति सङ्गिरम् ।

१ २   ३ २ ३ १ २ ३ १ २ ३१ २   ३ १ २

मर्य्य इव युवतिभिः समर्षति सोमः कलशे *शतयामना पथा ॥

இருக்கு 9-76-1.

ப்ரோ அயாஸீதிந்துரிந்த்ரஸ்ய நிஷ்க்ருதம் ஸகா ஸக்யுர்ந [ப்ரமிநாதி ஸங்கிரம் ।

மர்ய்ய இவ யுவதிபி: ஸமர்ஷதி ஸோம: கலஶே ஶதயாமநா [பதா ॥

அந்வயம்.

इन्दुः, इन्द्रस्य, निष्कृतं, प्रो अयासीत्, सखा, सख्युः, सङ्गिरं. न ...

युवतिभिः मर्य इव, समर्षति, सो

பதவுரை

इन्दुः	இந்து:
इन्द्रस्य	இந்த்ரஸ்ய
निष्कृतं	நிஷ்க்ருதம்
प्रो अयासीत्	ப்ரோ அயாஸீத்
सखा	ஸகா
सख्युः	ஸக்யு:
सङ्गिरं	ஸங்கிரம்
न प्रमिनाति	ந ப்ரமிநாதி
युवतिभिः मर्य इव	யுவதி
समर्षति	ஸ

* शतयाम्ना, என்ட

सोमः	ஸொஊஃ	மற்றும், அச்சோமரசம்
शतयामना	ஶதயாஉநா	நூறு துவாரங்களோடு கூடிய
पथा	வயொ	தசா பவித்திரமென்னும் ஆடையின் வழியாய்த்
कलशे	கூஶெஶ	துரோண கலசத்தில் நிரம்புகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—4. மிருடிகண ரிஷி.

சோமரசம், பவித்திரம் பண்ணப்பட்ட இந்திரனது உதரத்தை நன்கு சேர்கின்றது. நட்பாகிய சோமரசம் மித்திரனாகிய இந்திரனுடைய நல் வயிற்றிற்கோர் துன்பத்தையுமுண்டாக்காதிருக்கின்றது. மற்றும், அச்சோமரசம், பருவ மாதுடன் காளையாகிய புருடன் கலக்குமாறு வசதீவரி யென்னுந் தருணியாகிய நீருடன் இனிது கூடுகின்றது. பிழியுங்கால் அச்சோமரசமும், நூற்றுக் கணக்கான துவாரமுடைய தசாபவித்திரமென்னும் ஆடையின் நுனியால் துரோண கலசத்திற் செல்கின்றது. ஈண்டுச் செல்கின்றது என்பது எஞ்சி நின்றது. அல்லது, ஒரு வாக்கியமாய்க்கொண்டு, புருடன் பருவ மாதுடன் கலத்தல்போன்று நூற்றுக் கணக்கான துவாரங்களை யுடைய ஆடை வழியாய் நீருடன் கலக்கின்றது எனினுமாம். (4)

...ரம் 5.

२ ३ १ २ ३ १ २ ३ २ ३ १ २
रसो दक्षो देवानामनुमाद्यो नृभिः ।
२२ ३ २ ३ १ २ ३ २
...त्वभिर्वृथा पाजांꣳसि *कृणुते नदीष्वा ॥

இருக்கு—9-73-1.

...ரஸொ தக்ஷொ தெவாநாஉநு
[மாஷொ நருஹிஃ ।
...ஹ் மிவ்ரு-ுயா வாஜாꣳஸி
[கூருணுதெ நதீஷ்வா ॥

हरिः, दिवः, पवते,
...षु, कृणुते ॥

பதவுரை.

धर्त्ता	யதர்தா	அனைவரையுந் தாங்குவதும்
कृत्व्यः	க்ருத்வ்ய:	சுத்தம் பண்ணுதற்குரியதும்
रसः	ரஸ:	இரச வடிவினதும்
देवानां दक्षः	தேவாநாம் தக்ஷ:	தேவர்கட்கு வலியைக் கொடுப்பதும்
नृभिः अनुमाद्यः	ந்ருபி: அநுமாத்ய:	வேட்போர்களாற் றுதிக்கத் தக்கதும்
हरिः	ஹரி:	பசுமை நிறமுடையதுமாகிய சோமரசம்
दिवः	திவ:	வானிலுள்ள தசா பவித்திரமுடைய பாண்டத்திலிருந்து
पवते	பவதே	புநிதமாய் வருகின்றது. (மற்றும்)
सत्वभिः	ஸத்வபி:	பிராணிகளாற்
सृजानः	ஸ்ருஜாந:	பவித்திரஞ் செய்த
अत्यो न	அத்யோ ந	(குதிரை) இனிது செல்வதுபோல்
वृथा	வ்ருதா	முயற்சியின்றியே
पाजांसि	பாஜாம்ஸி	தனது துரிதத்தை
नदीषु	நதீஷு	வசதீவரி என்னும் ஆற்றுநீரில்
कृणुते	க்ருணுதே	செய்துகொள்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—5. கவி ரிஷி.

எல்லாவற்றையுந் தாங்குகின்ற சோமரசம், அந்தரிட்சத்திலுள்ள (வண்ணியின்மேலுள்ள) தசா பவித்திரமென்னும் ஆடை நுனி வாயிலாகச் சுத்தமாய் வருகின்றது. எவ்வண்ணமாகிய சோமரசமெனின்? செயற்பாலதாம். எனின், பவித்திரம் பண்ணத்தக்கது என்பது பொருள். இரச வடிவமானதும். தேவர்கட்கு ஆற்றலைக்கொடுப்பதும். அல்லது, தேவர்களின்பொருட்டு வளர்வதும். அங்ஙனமே, நியந்தாவாகிய வேட்போர்களால் களிப்படைதற்குரியதும். அல்லது, துதிக்கத்தக்கதும், பசுமை நிறத்ததும், மனிதராற் பழக்கப்பட்ட குதிரை வருத்தமின்றிச் செல்வதுபோல் எங்களால் நன்கு திருத்தப்பட்டதுமாம். தன்னுடைய ஆற்றலை (வேகத்தை) வசதீவரி என்னும் நதி நீரில் உண்டுபண்ணுகின்றது. அதாவது நீர் வார்க்கப்படுகின்றது என்பது பொருள். இது சோமரசம் பிழியுங் காலத்திலெனக்கொள்க. (ஆற்று நீர் விட்டு சோமக்கொடியை யிடித்துச் சோமரசம் பிழியப்படுகின்றதென்பது திரண்ட பொருள்.) (5)

மந்திரம் 6.

१ २ ३ १ २ ३२उ ३ १ २ ३ १ १२ ३ २
559. वृषा मतीनां पवते विचक्षणः सोमो अह्नां प्रतरीतोषसां दिवः ।
३ १ २२ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २ ३ १ २
* प्राणा सिन्धूनां कलशाँ अचिक्रददिन्द्रस्य § हार्द्याविशन् मनीषिभिः ॥

இருக்கு 9-66-1.

வ்ருஷா உதீநாம் வவதெ விசக்ஷணஃ ஸொமொ அஹ்நாம் வ்ரதரீ
[தொஷஸாம் திவஃ ।
வ்ராணா ஸிந்தூநாம் கலஶாம் அசிக்ரதிந்த்ரஸ்ய ஹார்த்யாவிஶந்
[மநீஷிபிஃ ॥

அங்வயம்.

मतीनां वृषा, विचक्षणः, अह्नां, उषसां, दिवः, प्रतरीता, सोमः, पवते, सिंधूनां, प्राणा, मनीषिभिः, इन्द्रस्य, हार्दि आविशन्, कलशान् अभि, अचिक्रदत् ॥

பதவுரை.

मतीनां वृषा	உதீநாம் வ்ருஷா	துதிப்போர்கட்கு மன விருப்பைப் பொழிவதும்
विचक्षणः	விசக்ஷணஃ	சிறப்பாய்க் காண்பதும்
अह्नां	அஹ்நாம்	பகற்காலங்களையும்
उषसां	உஷஸாம்	உஷாக் காலங்களையும்
दिवः	திவஃ	விண்ணுலகையும், அல்லது, இரவியையும்
प्रतरीता	வ்ரதரீதா	வளர்க்கின்ற
सोमः	ஸொமஃ	சோமரசம்
पवते	வவதெ	இனிது தேடப்படுகின்றது. (மற்றும்)
सिन्धूनां प्राणा	ஸிந்தூநாம் வ்ராணா	நீரின் உயிராகிய, அல்லது, நீரால் நிறைந்த சோமரசம்
मनीषिभिः	மநீஷிபிஃ	தோத்திரங்களோடு
इन्द्रस्य	இந்த்ரஸ்ய	இந்திரனுடைய
हार्दि आविशन्	ஹார்தி ஆவிஶந்	உள்ளத்திற் புக விரும்பி
कलशान् अभि	கலஶாந் அபி	கலசத்தைச் சூழ்ந்துகொண்டு
अचिक्रदत्	அசிக்ரதத்	தாரையாற் புகுமிடத்து ஒலியிடுகின்றது.

* प्राणा, § आवीविशत्, என்பன இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—6. கவி ரிஷி.

இச்சோமரசம் பிழியப்படுகின்றது. எத்தன்மைய சோமரசமெனின்? துதிப்போர்களுடைய விருப்பைப் பொழிவதும், விசேடமாய்க் காண்பதும், விண்ணுலகை, அல்லது, வானிலுள்ள இரவியை வளர்ப்பதுமாம், மற்றும், பொங்கி வழிகின்ற நீருக்கு நியந்தாவுமாகிய சோமரசம், தாரைகளாற் கலசங்களை யடைய விரும்பித் தொழிற்படுகின்றது. அல்லது, சோமம் கலசங்களைக் குறித்துத் தொழிற்படுகின்றது. யாது செய்துகொண்டெனின்? எப்போதும் தோத்திரங்களால் இந்திரனுடைய உள்ளத்திற்புகுந்துகொண்டு, தொழிற்படுகின்றதென்க. ஈண்டு, எப்போதும் என்பது எஞ்சிநின்றது. அல்லது, தூரத்திருப்பினும் துதிப்போர்களாற் (துதிகளாற்) செல்கின்றது என்பதனோடு பொருந்துக. அதாவது தோத்திரங்களாற் கலசத்திற் செல்கின்றது என்பதாம். (6)

மந்திரம் 7.

१२ ३ २ ३१ २ ३ १ २ १२ २
560. त्रिरस्मै सप्त धेनवो *दुदुहिरे सत्यामाशिरं †परमे व्योमनि ।
३ २ ३ २ २र ३ २ ३ १२ ३ २३१ २र
चत्वार्यन्या भुवनानि निर्णिजे चारूणि चक्रे यदृतैरवर्द्धत ॥

இருக்கு 9-70-1.

𑌤𑍍𑌰𑌿𑌰𑌸𑍍𑌮𑍈 𑌸𑌪𑍍𑌤 𑌧𑍇𑌨𑌵𑍋 𑌦𑍁𑌦𑍁𑌹𑌿𑌰𑍇 𑌸𑌤𑍍𑌯𑌾𑌮𑌾𑌶𑌿𑌰𑌂 𑌪𑌰𑌮𑍇 [𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑌿 ।

𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌨𑍍𑌯𑌾 𑌭𑍁𑌵𑌨𑌾𑌨𑌿 𑌨𑌿𑌰𑍍𑌣𑌿𑌜𑍇 𑌚𑌾𑌰𑍂𑌣𑌿 𑌚𑌕𑍍𑌰𑍇 [𑌯𑌦𑍃𑌤𑍈𑌰𑌵𑌰𑍍𑌧𑌤 ॥

அந்வயம்.

परमे व्योमनि, अस्मैः, त्रिः सप्त, धेनवः, सत्यां, आशिरं, दुदुहिरे, यत्, ऋतैः, अवर्द्धत, अन्या, चत्वारि, भुवनानि, निर्णिजे चारूणि, चक्रे ॥

பதவுரை.

परमे व्योमनि	𑌪𑌰𑌮𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑌿	சிறந்த வேள்வியிலுள்ள
अस्मै	𑌅𑌸𑍍𑌮𑍈	இச்சோமரசத்தின் பொருட்டு
त्रिः सप्त	𑌤𑍍𑌰𑌿𑌃 𑌸𑌪𑍍𑌤	இருபத்தொரு

* दुदुह्रे पूर्व्ये, என்பது இருக்கு. † पूर्व्ये, என்பது பாடபேதம்.

धेनवः	தேநவ:	கோக்கள்
सत्यां	ஸத்யாம்	உண்மையாகிய
आशिरं	ஆசிரம்	பால் முதலியவற்றை,
दुदुहिरे	துதுஹிரே	கறக்கும் பாத்திரத்தில் நிரப்புகின்றன. (மற்றும் இச்சோமரசம்)
यत्	யத்	எப்போது
ऋतै.	ருதை:	வேள்விகளால்
अवर्द्धत	அவர்த்த	வளர்கின்றதோ, அப்போது,
अन्या	அந்யா	மற்றைய
चत्वारि	சத்வாரி	நான்கு வகையாகிய
भुवनानि	புவநாநி	வசதீவரி, முதலிய நீரை,
निर्णिजे	நிர்ணிஜே	சுத்தப்படுத்துதற்பொருட்டு
चारूणि	சாரூணி	மங்கள வடிவங்களாய்
चक्रे	சக்ரே	ஆக்குகின்றன,

சாயண பாடியம்,

கண்டம்—9, இருக்கு—7. இரேணு ரிஷி.

வேள்வியிலிருக்கின்ற சோமரசத்தின் பொருட்டு, அல்லது, அந்த ரிக்ஷத்தில் இருக்கின்ற சோமரசத்தின் பொருட்டு, அன்பையுண்டாக்குகின்ற இருபத்தொன்று எண் கொண்ட கோக்கள், பால் முதலியவற்றை உண்மையாகக் கறக்கின்றன. அல்லது, பன்னிரண்டு மாதம், இருதுக்கள் ஐந்து, மூன்றுலகங்கள், இரவி என்னும் இந்த இருபத்தொன்று வகைகளால் எப் பசுக்களில் பாலை உண்டாக்குகின்றார்களோ, அக் கோக்களே பாலைக் கறக்கின்றன என்பதாம். அன்றியும், இச் சோமரசம் மற்றைய நான்கு வகையாகிய நீரை, அதாவது வசதீவரி மூன்று, ஏகதனு ஒன்று, என்னும் நான்கு வகையாகிய நீரைப் பரிசோதித்தற் பொருட்டு, அதாவது, பாதுகாத்தற் பொருட்டு, மங்கள வடிவமாகச் செய்கின்றன. எக்காலத்தில் இது வேள்விகளால் விருத்தியாயிற்றோ, அக்காலத்திற் செய்கின்றன என்பதுணர்க. (7)

மந்திரம் 8.

१ २ ३ १२३ १२ ३ १ २र ३ १२ ३ २
561. इन्द्राय सोम सुषुतः परिस्रवापामीवा भवतु रक्षसा सह ।
२ ३ १२ ३ २ ३ १ २ ३ २ ३ १ २
मा ते रसस्य मत्सत द्वयाविनो द्रविणस्वन्त इह सन्त्विन्दवः ॥

இருக்கு 9-85-1.

இந்த்ராய ஸோம ஸுஷுத: பரிஸ்ரவாபாமீவா ஭வது

[ரக்ஷஸா ஸஹ |

மா தே ரஸஸ்ய மத்ஸத த்வயாவிநோ த்ரவிணஸ்வந்த இஹ ஸந்த்விந்தவ:॥

அந்வயம்.

हे सोम !, सुषुतः, इन्द्राय, परिस्रव, रक्षसा सह, अमीवा, अप भवतु, द्वयाविनः, ते, रसस्य, मा मत्सत, इन्दवः, इह, द्रविणस्वन्तः, सन्तु ॥

பதவுரை.

हे सोम !	ஹே ஸோம !	சோமமே !
सुषुतः	ஸுஷுத:	இனிய முறையிற் பிழிந்தெடுக்கப் பெறும் இரசத்தை
इन्द्राय	இந்த்ராய	இந்திரன் பொருட்டு
परिस्रव	பரிஸ்ரவ	எல்லா வகையானும் ஒழுக விடுவாயாக.
रक्षसा सह	ரக்ஷஸா ஸஹ	இராக்கதர்களோடு
अमीवा	அமீவா	நோய்களும்
अप भवतु	அப ஭வது	நீங்குக.
द्वयाविनः	த்வயாவிந:	பொய், மெய் என்னும் இரண்டு வகைகளையுடைய பாவிகள்
ते	தே	உன்னுடைய
रसस्य	ரஸஸ்ய	இரசத்தின் பாகத்தையுண்டு
मामत्सत	மாமத்ஸத	களிப்படையாதிருப்பார்களாக.
इन्दवः	இந்தவ:	உன்னுடைய ரசம்
इह	இஹ	இவ்வேள்வியில்
द्रविणस्वन्तः सन्तु	த்ரவிணஸ்வந்த: ஸந்து	என் பொருட்டுத் தனமுடைத்தாகுக.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—8. வேநோபார்க்கவ ரிஷி.

சோமமே! நீ, இனிது தரும் இரசத்தை இந்திரன்பொ
வகையாய் வெளியாக்குவாயாக. உரோகங்கள் நீங்குக.
இரசத்தினுடைய களிப்பை யடையாதார்களாகுக. (அவர்
மானவர்களெனின்? பொய், மெய் இரண்டையுமுடைய பா
பொருள். அன்றியும், உன்னுடைய இரசம் இவ்வேள்வியில
டுத் தனமுடையதாகுக என்பதாம்.

மந்திரம் 9.

१ २ ३ १ २ ३ २उ ३ २ ३ १ २ ३ ३ २ ३ १ २ र
562. असावि सोमो अरुषो वृषा हरी राजेव दस्मो अभि गा अचिक्रदत्।
३ २उ ३ १ २ ३ १२ ३ १ २र ३ १ २ ३ ३ २
पुनानो वार*मत्येष्यव्ययंꣳ श्येनो न योनिं घृतवन्त‡मासदत् ॥

அஸாவி ஸோமோ அருஷோ வ்ருஷா ஹரீ ராஜேவ தஸ்மோ அபி
[கா அசிக்ரதத் ।
புநாநோ வாரமத்யேஷ்யவ்யம் ஶ்யேநோ நயோநிம் க்ருதவந்த
[மாஸதத் ॥

அங்வயம்

अरुषः, वृषा, हरिः, सोमः, असावि, राजा, इव, दस्मः, गा अभि, अचिक्रदत्, पुनानः, अव्यं वारं, अत्येषि, घृतवन्तं, योनिं, श्येनः न, आसदत् ॥

பதவுரை.

अरुषः	அருஷ꞉	மிக வொளியுடையதும்
वृषा	வ்ருஷா	விருப்பைப் பொழிவதும்
हरिः	ஹரி꞉	பசுமை நிறமுடையதுமாகிய
सोमः	ஸோம꞉	சோமரசம்
असावि	அஸாவி	தேடப்பெற்று
राजेव दस्मः	ராஜேவ தஸ்ம꞉	வேந்தன் போல் காணப்படுவதாய்
गा अभि	கா அபி	எல்லா வகையினும் நீரைக் குறியாக்கிக்கொண்டு
चिक्रदत्	அசிக்ரதத்	தனது இரசத்தைப் பிழியுங்கால் ஒலியிடுகின்றது. (பின்னர்)
	புநாந꞉	பவித்திரமாகிய
	அவ்யம் வாரம்	செம்மறியாட்டின் மயிராலாய கம்பளியைக் கொண்டு
	அத்யேஷி	வடித்தெடுக்கப் படுகின்றது. (பின்னர்)
	க்ருதவந்தம்	நீர் மயமாகிய
	யோநிம்	தனது இடத்தை,
	ஶ்யேந꞉ ந	பருந்துபோன்று
	ஆஸதத்	அடைகின்றது.

यैषि, ‡ आसदम्, என்பன இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—9. பரத்துவாச வசு ரிஷி.

சோமரசம் பிழியப் பெற்றது. எவ்வண்ணமாகிய சோமரசமெனின்? ஒளியுடையதும், விருப்பைப் பொழிவதும், பசுமை நிறத்ததுமாம். அத்தன்மைய சோமரசம் மன்னனைப்போற் காணத்தக்கதாயிருந்து, நீரைக் குறியாக வைத்துக் கொண்டு தனது இரசத்தை யெடுக்குங்கால் ஒலிக்கின்றது. பின்னர், பவித்திரமாகிய செம்மறியாட்டின் கம்பளியில் புநிதமாகின்றது. சோமரசமே! நீ, கடந்து செல்கின்றனை. பின்னர், பருந்தைப்போல் நீருடைய தனது இடத்தை யடைகின்றாய். அதாவது வசதிவரி என்னும் நீரிலிருக்கின்றாய் என்பது பொருள். (9)

மந்திரம் 10.

२ ३२३ ३ १ २ ३ २ ३ १ २ ३ २३ २उ ३ १२

563. प्र देवमच्छा मधुमन्त इन्दवोऽसिष्यदन्त गाव आ न धेनवः ।

३ १ २ ३ १ २ ३ १२ ३१ २ ३१२ ३ १ २

बर्हिषदो *वचन वन्तः ऊधभिः परिस्रुतमुस्रिया निर्णिजं धिरे ॥

ப்ர தேவமச்சா மதுமந்த இந்தவோऽஸிஷ்யதந்த காவ ஆ ந தேநவ: |
பர்ஹிஷதோ வசநவந்த ஊதபி: பரிஸ்ருதமுஸ்ரியா
[நிர்ணிஜம் திரே ||

அந்வயம்.

धेनवः, गावः, आ न, मधुमन्तः, इन्दवः, देवं अच्छ, प्रासिष्यदन्त,
बर्हिषदः, वचनवन्तः, उस्रियाः, ऊधभिः, परिस्रुतं, निर्णिजं, धिरे ॥

பதவுரை.

धेनवः	தேநவ:	பாலினாற் பிரியப்படுத்துகின்ற
गावः	காவ:	கோக்கள்
आ न	ஆ ந	தமது கன்றுகளைக்குறித்துப் பாலைப் பொழிகின்றன போன்று,
मधुमन्तः	மதுமந்த:	மதுர இரசமுடைய
इन्दवः	இந்தவ:	சோமரசம்
देवं अच्छ	தேவம் அச்ச	இந்திர தேவதையைக் குறித்து
प्रासिष्यदन्त	ப்ராஸிஷ்யதந்த	கிரக முதலிய பாத்திரங்களிற் சேர்கின்றது.

* वचनावन्तः, என்பது இருக்கு.

बर्हिषद:	பஹிஷத:	வேள்வியிலுள்ளவைகளும்
वचनवन्त:	வசநவந்த:	கதறுகின்றவைகளுமான
उस्रिया:	உஸ்ரியா:	கோக்கள்
ऊधभि:	ஊதபி:	பால் நிறைந்த மடிகளால்
परिस्रुतं	பரிஸ்ருதம்	நாற் புறமும் வழிகின்ற
निर्णिजं	நிர்ணிஜம்	பாலாகிய சோமரசத்தை
धिरे	திரே	இந்திரன் பொருட்டுத் தாங்குகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—9. இருக்கு—10. வத்சப்பிரிய ரிஷி.

களிப்பைத் தரும் இரசத்தோடுகூடிய சோமம், இந்திரனைக் குறித்துப் பாத்திரங்களில் நிரம்புகின்றது. அதிலுவமை:—பாலால் அன்புசெய்கின்ற கோக்கள், கன்றுகளைக் குறித்துப் பாலையொழுகச் செய்வது போன்றெனல். அன்றியும், வேள்வியிலுள்ளவைகளும், கதறுகின்றவைகளுமான அத்தன்மைய கோக்கள். பால் தங்குகின்ற தமது மடிகளால் நாற்புறமும் வழிகின்ற பாலாகிய சோமரசத்தை இந்திரன்பொருட்டுத் தாங்குகின்றன என்பது பொருள். (10)

மந்திரம் 11.

३ २२र २र ३ १ ३ १ २ ३क २ ३क२र

நின்னில் வேறிலாத, அதாவது தானாய் நின்ற, எனவே அநாதியாகிய என்பது திரண்ட பொருளாயிற்று. அநாதியாய்த் தனமுடைய இந்திரனே! நீ விருத்திராசுரனைக் கொல்லுதற் பொருட்டு எப்போது வெளிப்பட்டிருந்தனையோ, அப்போதே பூமியை கீர்த்திபுடைய தாயும், உறுதியுடையதாயுஞ் செய்தனை. மற்றும், வானுலகையும், அந்தரிக்ஷத்தினின்றும் நிலையுடையதாகச் செய்தனை. இத்தன்மைய வீரத்தன்மை, நினையொழித்து வேறெவர்க்கும் உண்டாகிறதில்லை என்னும் பொருள் தோன்றவே மூலத்தில் அபூர்வ்யம் எனக் கூறப்பட்டது. (7)

இரண்டாவது கண்டம்.

முற்றும்.

மூன்றாவது கண்டம்.

பிரபாடகம்—6. அத்தியாயம்—6. கண்டம்—3.

பதின்மூன்று மந்திரங்களாலானது.

தேவதை:—1, பிரசாபதி. 2, 3, பவமானம். (சோமம்.) 4, 6, 13, அக்கினி. 7, இராத்திரி. 8, வைசுவா நரன். விசுவ தேவர். 10, இலிங்கோத்தர். 11, இந்திரன். 12, சுருவான்மா. சந்தம்:—1, 7, அநுஷ்டுப். 2, 3, 5, 6, 9, 11, 13. திருஷ்டுப். 4, காயத்திரி. 8, சகதி. 10, மகாபந்தி. சுரம்:—1, 7, காந்தாரம். 1, 3, 5, 6, 9, 11, 13, தைவதம். 4, ஷட்சம். 8, நிஷாதம். 10, பஞ்சமம்,

மந்திரம் 1.

२ ३ १ ३ २ ३ १ २र ३२ ३ १२र
602, मयि वर्चो अथो यशोऽथो यज्ञस्य यत्पयः ।
३ २ ३ १२ ३ १ २र
*परमेष्ठी प्रजापतिर्दिवि द्यामिव दृꣳहतु ॥ १ ॥

இருக்கு 6-69-3.

𑌮𑌯𑌿 𑌵𑌰𑍍𑌚𑍋 𑌅𑌥𑍋 𑌯𑌶𑍋𑌽𑌥𑍋 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌯𑌤𑍍𑌪𑌯𑌃 ।
𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌦𑌿𑌵𑌿 𑌦𑍍𑌯𑌾𑌮𑌿𑌵 𑌦𑍃𑌂𑌹𑌤𑍁 ॥

அந்வயம்.

परमेष्ठी, प्रजापतिः, दिवि, द्यां इव, मयि, वर्चः, दृंहतु, अथो, यशः, अथो, यज्ञस्य, यत्, पयः ॥

பதவுரை.

परमेष्ठी प्रजापतिः	𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃	மேலுலகத்திலிருப்பவராகிய பிரசாபதியானவர்
दिवि	𑌦𑌿𑌵𑌿	விளங்குகின்ற சுவர்க்கத்ததில்
द्यामिव	𑌦𑍍𑌯𑌾𑌮𑌿𑌵	ஒளிவிடுங் காந்தி போன்று
मयि	𑌮𑌯𑌿	எனதுடம்பில்

---

*तन्मयि प्रजापतिर्दिवि, என்பது இருக்கு.

वर्चः	வர்ச:	பிரமவொளியை
दृंहतु	த்ருஂஹது	வளர்ப்பாராக. அன்றியும், வலியுறுத்துவாராக.
अथो	அதொ	மற்றும்,
यशः	யஶ:	கீர்த்தியை வளர்ப்பாராக. அல்லது, வலியுறுத்துவாராக.
अथो	அதொ	மற்றும்,
यज्ञस्य	யஜ்ஞஸ்ய	வேள்வியினுடைய
यत् पयः	யத் பய:	யாதொரு அவியாகிய அன்னமுண்டோ, அதையும் வளர்ப்பாராக. அல்லது, வலியுறுத்துவாராக.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—1. வாமதேவ ரிஷி.

மேலுலகில் நிலைத்திருப்பவராகிய பரமேட்டி யென்னும் பிரசாபதியானவர், விளங்குகின்ற சுவர்க்கத்தில் ஒளிராநின்ற காந்தியைப் போன்று எனது தேகத்தில் பிரம வொளியை வளர்ப்பாராக. மற்றும், கீர்த்தியையும் வளரச் செய்வாராக. அன்றியும், வேள்வி சம்பந்தமாகிய, இதனாலேயே சிறப்புடைய அவியென்னும் அன்னத்தையும் வளரச் செய்வாராக என்பதாம். (1)

மந்திரம் 2.

२ ३ २ ३ १ २ ३ २ ३ २र २र ३ १२

603. सन्ते पयाꣳसि समुयन्तु वाजाः संवृष्णान्यभिमातिषाहः ।

३ १२ ३ १ २ ३१२ २र ३ १ २

आप्यायमानो अमृताय सोम दिवि श्रवाꣳस्युत्तमानि धिष्व ॥

இருக்கு 9-106-4.

ஸந்தே பயாꣳஸி ஸமுயந்து வாஜா: ஸம்வ்ருஷ்ணாந்யபிமாதி [ஷாஹ: ।

ஆப்யாயமாநோ அம்ருதாய ஸோம திவி ஶ்ரவாꣳஸ்யுத்தமாநி [திஷ்வ ॥

அந்வயம்.

हे सोम!, अभिमातिषाहः, पयांसि, ते, संयन्तु, वाजाः, वृष्णानि, आप्यायमानः, अमृताय, आ, उत्तमानि, श्रवांसि, दिवि, धिष्व ॥

பதவுரை.

हे सोम!	ஹே ஸோம!	சோமமே!
अभिमातिषाहः	அபிமாதிஷாஹ:	சத்துருவை நாசஞ் செய்கின்ற
पयांसि	பயாம்ஸி	பால்
ते	தே	உனக்குக்
संयन्तु	ஸம்யந்து	கிடைக்குக. அவ்வாறே,
वाजाः	வாஜா:	அவியாகிய அன்னங்கள் (உன்னை அடைவனவாகுக.)
वृष्णानि	வ்ருஷ்ணாநி	வீரியங்களு மடைகுக. மற்றும்,
आप्यायमानः	ஆப்யாயமாந:	நிறைந்த சோமமே! நீ
अमृताय	அம்ருதாய	தனது, மரணமிலாத் தன்மைக்கு
आ	ஆ	எல்லா வகையானும் வளர்ந்து
उत्तमानि	உத்தமாநி	மேலானவைகளும்
श्रवांसि	ஶ்ரவாம்ஸி	யாம் உண்ணுதற் குரியவைகளு மான அன்னங்களைச்
दिवि	திவி	சுவர்க்கத்தில்
धिष्व	திஷ்வ	தாங்கிக்கொள்கின்றாய்,

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—1. கௌதம ரிஷி.

சோமமே! பகைவர்களைக் கொல்கின்ற உன்னை, வெண்ணை யெடுக்க வேண்டுமென நியதம்பம் பண்ணிய பால் நன்கு அடைகுக. அவ்வாறே, அவியாகிய அன்னங்களும் நின்னை இனிதடைகுக. வீரியங்களும் அடைகுக. சோமமே! நீ, தனது மரண மிலாமைக்கு எல்லாவகையானும் பெருகுவோனாகி எங்களா லநுபவிக்கத் தக்க அவியாகிய சிறந்த அன்னங்களைச் சுவர்க்கத்தில் ஏற்றுக்கொள்கின்றாய் என்பதாம். (2)

மந்திரம் 3.

२ ३ १र २र ३ २ ३ २ ३ १ २ ३ २

604. त्वमिमा ओषधीः सोम विश्वास्त्वमपो अजनयस्त्वं गाः ।

२र २र ३ २ १ २ ३ १ २र ३ २र

त्वं * आतनोरुर्वा ३ न्तरिक्षन्त्वञ्ज्योतिषा वि तमो ववर्थ ॥ ३ ॥

இருக்கு 1-91-22.

த்வமிமா ஓஷதீ: ஸோம விஶ்வாஸ்த்வமபோ அஜநயஸ்த்வம் கா: |

த்வமாதநோ ருர்வந்தரிக்ஷந்த்வஞ்ஜ்யோதிஷா வி தமோ வவர்த ||

---

* आततन्थ, என்பது இருக்கு.

அந்வயம்.

हे सोम!, त्वं, इमाः, विश्वाः, ओषधीः, अजनयः, त्वं, अपः, त्वं, गाः, उरु, अन्तरिक्षं, त्वं, आतनोः, तमः, त्वं, ज्योतिषा, विववर्थ ॥

பதவுரை.

हे सोम !	ஹே ஸோம!	சோமமே !
त्वं	த்வம்	நீ
इमाः विश्वाः	இமா: விஶ்வா:	இவ் வெல்லாப்
ओषधीः	ஓஷதீ:	பச்சிலைகளையும்
अजनयः	அஜநய:	உண்டாக்கினாய்.
त्वं	த்வம்	நீ
अपः	அப:	கொடி செடிகட்குக் காரணமாகிய நீரையு முண்டாக்கினாய்.
त्वं	த்வம்	நீ
गाः	கா:	கோக்கள் முதலிய விலங்குகளை யுண்டாக்கினாய்.
उरु	உரு	விரிந்த
अन्तरिक्षं	அந்தரிக்ஷம்	வானை
त्वं	த்வம்	நீ
आतनोः	ஆதநோ:	பரவுமாறு செய்தாய். அதி லுள்ள
तमः	தம:	இருளையும்
त्वं	த்வம்	நீ
ज्योतिषा	ஜ்யோதிஷா	தனதொளியால்
वि ववर्थ	வி வவர்த	ஒழித்துவிட்டனை.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—3. கௌதம ரிஷி.

சோமமே! நீ, இத் தரையின்கண்ணுள்ள பச்சிலைகளனைத்தையு முண்டாக்கியவனாயிருக்கின்றாய். அவ்வாறே, கொடிசெடிகட்குக் காரணமாகிய மழைநீரையு முண்டாக்கினாய். அதுபோன்றே, எல்லா விலங்குகளையு முண்டாக்கினாய். விரிந்த வானையும் பரவச் செய்தாய். அவ் வானில் எமது பார்வையை மறைக்கின்ற யாதொரு அந்தகார முண்டோ, அதையும் தன தொளியால் நாசப்படுத்தினை என்பதாம். (3)

மந்திரம் 4.

३ १ २   ३ १ २   ३ १ २ ३ २ ३ १ २
605. अग्निमीडे पुरोहितं यज्ञस्य देवमृत्विजम् ।
१ २   ३ १ २
होतारꣳ रत्नधातमम् ॥ ४ ॥

இருக்கு 9-9-1.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌮𑍀𑌳𑍇 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑌮𑍃𑌤𑍍𑌵𑌿𑌜𑌮𑍍 ।
𑌹𑍋𑌤𑌾𑌰𑌂 𑌰𑌤𑍍𑌨𑌧𑌾𑌤𑌮𑌮𑍍 ॥

அந்வயம்.

यज्ञस्य पुरोहितं, होतारं, ऋत्विजं, रत्नधातमं, अग्निं देवं, ईडे ॥

பதவுரை.

यज्ञस्य पुरोहितं	𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌪𑍁𑌰𑍋𑌹𑌿𑌤𑌂	வேள்வியின் அங்கமாகிய ஓமத்தை முடிப்பதும், அல்லது, ஆகவனீய வடிவத்தால் வேள்வியின் பூர்வத்திலிருப்பதும்,
होतारं	𑌹𑍋𑌤𑌾𑌰𑌂	வேள்வியின் பொருட்டுத் தேவர்களையழைப்பதும்,
ऋत्विजं	𑌋𑌤𑍍𑌵𑌿𑌜𑌂	வேட்பதும்
रत्नधातमं	𑌰𑌤𑍍𑌨𑌧𑌾𑌤𑌮𑌂	வேள்வியாகிய தனத்தைத் தாங்கிக்கொள்வதும், அல்லது, காப்பாற்றுவதுமாகிய
अग्निं देवं	𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌦𑍇𑌵𑌂	அக்கினி தேவதையைத்
ईडे	𑌈𑌳𑍇	துதிக்கின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—4. விசுவாமித்திரரின் புத்திரராகிய மதுச்சந்தர் ரிஷி.

அக்கினி யென்னுந் திருநாமமுடைய தேவனைத் துதிக்கின்றேன். இம்மந்திரம் ஓதாவினாற் (இருக்கோதுவானாற்) கூறப்பட்டதா மாதலின் ஹோதாவா (இருக்கோதுவோனா)கிய நான் துதிக்கின்றேன் என்பது பெற்றாம். எவ் விதமாகிய அக்கினியை யெனின்? வேள்வியில் புரோகிதனை. (முன், இதஞ்செய்வோனை, அல்லது, இருப்பவனை,) வேந்தனுக்கு அவனுடைய புரோகிதன் இனியவை தேடுமாறு, தீயும், வேள்வியில் விரும்பிய ஓமத்தைத் (தீயோம்பலை) தேடுவதா மாதலின் இப்பெயரென்க. அல்லது, வேள்வியின் பூர்வபாகத்தில் ஆகவனீயம் என்னும் பெயரால் இருக்கப்பட்டவனை. மற்றும், எத்தன்மைய அக்கினிதேவனை யெனின்? வேட்போனாகிய

வனை. வேள்விகளில் ஹோதா வென்னும் வேட்போன் அக்கினியே யாதலி னென்க. அவ்வாறே "அக்கினியே தேவர்களுடைய ஹோதா" என மறை யுங் கூறுகின்றது. மற்றும், எத் தன்மைய அக்கினிதேவனை யெனின்? வேள் வியாகிய தனங்களை வியப்பாகத் தாங்குகின்றவனை. அல்லது, காப்பாற்று கின்றவனை. (துதிக்கின்றேன் என முடிக்க.) அக்கினி என்னுஞ் சொல்லை, யாஸ்க முனிவர் நிருத்தத்திற் பலவகையாய்ப் பொருட் படுத்தியிருக்கின்ற னர் அதை ஆண்டுக் காண்க. (4)

மந்திரம் 5.

१ २ ३ २र ३ २ ३ २ ३ १ २३२र २र

606. तेऽमन्वत प्रथमं *नाम गोनां त्रिः †सप्त परमं नाम जानन् ।

१ २३ २३क२र३ २ ३ १ २ ३ २र २र ३ १ २

‡ता जानतीरभ्यनूषत क्षा आविर्भुवन्नरुणीर्यशसा गावः ॥ ५ ॥

இருக்கு 4-1-16.

தேऽமந்வத ப்ரதமம் நாம கோநாம் த்ரி꞉ ஸப்த பரமம் நாம ஜாநந் |
தா ஜாநதீரப்யநூஷத க்ஷா ஆவிர்புவந்நருணீர்யஶஸா
[காவ꞉ ||

அந்வயம்.

हे अग्ने!, ते, प्रथमं, गोनां, नाम, अमन्वत, परमं, त्रिः, सप्त, नाम, जानन्, ताः, जानतीः, क्षाः, अभ्यनूषत, यशसा, अरुणीः, गावः, आविर्भुवन् ॥

பதவுரை.

हे अग्ने!	ஹே அக்நே!	அக்கினியே!
ते	தே	நின்னைத் துதிக்கின்ற அங்கிரசர்கள்,
प्रथमं	ப்ரதமம்	முதலில்
गोनां	கோநாம்	வாக்குகளுள்
नाम	நாம	துதிக்குச் சாதனமாகிய ஒலி மாத்திரத்தை
अमन्वत	அமந்வத	உணர்ந்தார்கள். பின்னர், வாக்கின் சம்பந்தமான
परमं	பரமம்	மேலாகிய

* नाम धेनोः, † सप्त मातुः परमाणि विन्दन्, ‡ तज्जानती रभ्यनूषत व्रा आवि भवदरुणी यशसा गोः, என்பன இருக்கு.

त्रिः सप्त	த்ரி: ஸப்த	இருபத்தொரு எண்கொண்ட
नाम	நாம	தோத்திரமாயகி நாமத்தை, அல்லது, சந்தங்களை,
जानन्	ஜாநந்	அறிந்தார்கள்.
ताः जानतीः	தா: ஜாநதீ:	அத் தோத்திரங்களை யுணர்ந்து
क्षाः	க்ஷா:	பிரசைகள்
अभ्यनूषत	அப்யநூஷத	உஷாக்காலத்தில் துதித்தார்கள். பின்னர்,
यशसा	யஶஸா	இரவியின் ஒளியோடு
अरुणीः	அருணீ:	விளக்க முடையனவாய்
गावः	காவ:	அவ் வாக்குகள்
आविर्भुवन्	ஆவிர்புவந்	வெளிப்பட்டன.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—5. வாமதேவ ரிஷி·

அக்கினியே! தோத்திரஞ் செய்கின்ற அங்கிரசர்கள், (இருடிகள்) வாக்கின் சம்பந்த முடைய தோத்திரத்தின் காரணமாகிய ஒலிமாத்திரத்தை முதலில் உணர்ந்தார்கள். பின்னர், அவ் வாக்கின் சம்பந்தமான இருபத்தொரு எண்கொண்ட துதிசாதனங்களான மேலான தோத்திரங்களை, அல்லது, சந்தங்களை யுணர்ந்து கொண்டனர். (அச் சந்தங்களோ, காயத்திரி முதற்கொண்டு சகதி என்பதீறாக ஏழு. அதி சகதி தொடங்கி அதிதிருதி யீறாக ஏழு. கிருதி முதற்கொண்டு, உத்திருதியீறாக ஏழு. இவ் வண்ணம் இருபத்தொன்றாம்.) இவ் வாறான வடமொழிச் சந்தங்களோடு கூடிய மந்திரங்களால் அக்கினியைத் துதித்தார்கள் என்பதாம். அவ் வனைத்தையும் உஷாக்காலத்தி லுணர்ந்து துதித்தார்கள் என்க. பின்னர், இரவியின் ஒளியோடு அருண நிறமான (பிரகாசமுள்ள) வாக்குகள் வெளிப்பட்டன. அல்லது, அவ் வங்கிரசர்கள் முதலில் சுரபியின் நாமதேயத்தைச் சொன்னார்கள். பின்னர் தனது தனவடிவமானவைகளும், கள்வராற் கொண்டுபோனவைகளுமான இருபத்தொரு இரத்தினங்களை யடைந்தார்கள். பின்னர், சொன்னதைக் கேட்ட கோக்கள், பெருஞ் சத்தமிட்டன. அப்போது உஷா வெளிப்பட்டது என்பதுமாம். (5)

மந்திரம் 6.

३ २ २र २र ३ १ २ ३ २ ३२ ३क२र
607. समन्या यन्त्युपयन्त्यन्याः समानमूर्वं नद्यस्पृणन्ति ।
२ ३१ २ १ २ ३ १ २ १ १र २ र३ १ २ ३ १ २
तमूशुचिं शुचयो दीदिवांसं सम * पान्नपातमु † पयन्त्यापः ॥ ६ ॥

இருக்கு 2-35-3.

ஸமந்யா யந்த்யுபயந்த்யந்யா: ஸமாநமூர்வம் நத்யஸ்ப்ருணந்தி ।
தமூஶுசிம் ஶுசயொ தீதிவாம்ஸமபாந்நபாதமுபயந்த்யாப: ॥

அந்வயம்.

अन्याः, आपः, संयन्ति, अन्याः, उपयन्ति, समानं, नद्यः, ऊर्वं, पृणन्ति, तमु, अपान्नपातं, शुचिं, दीदिवांसं, शुचयः, उपयन्ति ॥

பதவுரை.

अन्याः	அந்யா:	வேறொரு மழையின்
आपः	ஆப:	நீர்
संयन्ति	ஸம்யந்தி	தரையில் விழுகின்றது.
अन्याः	அந்யா:	முன்னரே தரையின்பாலுள்ள மற்றொரு நீர்
उपयन्ति	உபயந்தி	அதிற் கலந்து விடுகின்றது. அவ்வெல்லா நீரும்
समानं	ஸமாநம்	ஒன்றுகூடி
नद्यः	நத்ய:	ஆறுகிக்
ऊर्वं	ஊர்வம்	கடலின் நடுவிலுள்ள வடவானலத்தைத்
पृणन्ति	ப்ருணந்தி	திருப்தி பண்ணுகின்றன.
तमु	தமு	அத்தகைய
अपान्नपातम्	அபாந்நபாதம்	நீரின் பௌத்திரனாகிய
शुचिं	ஶுசிம்	நிருமலப்
दीदिवांसं	தீதிவாம்ஸம்	பிரகாசமுடையதை,
शुचयः	ஶுசய:	சுத்த நீர்
उपयन्ति	உபயந்தி	இனிது அடைகின்றது.

---

* अपान्नपातं, † परितस्थुरापः, என்பன இருக்கு.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—6. கிருத்சமத ரிஷி.

ஒருவகையாகிய மழைநீர், பூமியை யடைகின்றது. முன்னர் அதிலுள்ள மற்றொருவகை நீர் அதிற் கலந்துகொள்கின்றது. அத்தகைய எல்லா நீரும் ஒன்று சேர்ந்து ஆறாகிக் கடலின் நடுவிலுள்ள வடவாக்கினியைத் திருப்தி பண்ணுகின்றது. நீரின் பௌத்திரனாகியதும், நிருமலமானதும், பிரகாசிப்பதுமாகிய அதையே சுத்த நீர் அடைகின்றது. அதாவது இது மின்னலென்னும் அக்கினிவடிவாய் மேகத்திலிருந்துகொண்டு, எம்மை உண்டாக்கியது என்னும் புத்தியால் வடவாக்கினி வடிவமாக இருக்கப்பட்ட அதை வழிபடுகின்றது என்பது பொருள். அல்லது, ஒருவிதமான நீர், வேட்போர் சோமரச மெடுக்கச் செய்துள்ள குழியிலிட்ட சோமரச முதலியவைகளிற் றெளிக்கப்பட்ட 'வசதீவரி' என்னு நீருடன் சேர்ந்துக்கொண்டது. அந்த 'வசதீவரி' என்னும் நீரும், மற்றொரு நீருடன் கலந்தது. இவைகள் ஒன்றுகூடி வேள்வியை நிறைவேற்றுவதாய் அதில் உண்டாகும் மழை வாயிலாக ஆறுகளாகி வடவானலத்தைத் திருப்தி பண்ணுகின்றன என்பது முதலியன சமுமாம். (6)

மந்திரம் 7.

१र २र ३ १ ३२ १र२र ३१ २र
608. आप्रागाद्भद्रा युवतिरह्नः केतून्त्समीर्त्सति ।
१ २ ३ २ ३१ २ ३ १ २ ३ १ २ ३ १ २
अभूद्भद्रा निवेशनी विश्वस्य जगतो रात्री ॥ ७ ॥

ஆ ப்ராகாத்பத்ரா யுவதிரஹ்ந: கேதூந்த்ஸமீர்த்ஸதி ।
அபூத்பத்ரா நிவேஶநீ விஶ்வஸ்ய ஜகதோ ராத்ரீ ॥

அந்வயம்.

भद्रा, युवतिः, आप्रागात्, अह्नः, केतून्, समीर्त्सति, भद्रा, रात्री, विश्वस्य, जगतः, निवेशनी अभूत् ॥

பதவுரை.

भद्रा	பத்ரா	சுகந் தருவதும்
युवतिः	யுவதி:	இருளைப் புணரச் செய்வதுமாகிய இரவு,
आप्रागात्	ஆப்ராகாத்	எதிராய் வருகின்றது.
अह्नः	அஹ்ந:	சந்திரனுடைய

केतून्	கேதூந்	கிரணத்துடன்
समीत्संति	ஸமீத்ஸதி	இனிது சேரவிரும்புகின்றது. இதனால்
भद्रा	பத்ரா	மங்களமாகிய
रात्री	ராத்ரீ	இரவு
विश्वस्य	விஶ்வஸ்ய	எல்லா
जगतः	ஜகத:	உலகங்களையும்
निवेशनी अभूत्	நிவேஶநீ அபூத்	உறங்கவைப்பதாகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—7. வாமதேவ ரிஷி.

இரவியின் வெப்பத்தைத் தணித்துக் களிப்பைத் தருகின்ற இருளைக் கலக்கச் செய்யும் இரவு எதிராய் வருகின்றது. சந்திரனுடைய கிரணங்களை இனிது புணர விரும்புகின்றது, இதனாலேயே மங்களமாகிய இரவு உலகனைத்தையும் நித்திரையில் விழச்செய்வதாகின்றதென்க. பகலில் அதன் தொழிலாற் றுன்படைந்த பிராணிகளனைவரையும் தனது பற்றுக் கோடுகளில் தூங்கவைக்கின்றது என்பதாம். (7)

மந்திரம் 8.

३२ ३ १ २ ३ २ ३ २र ३ ३ ३ १ २ ३ १ २३१ २
609. *प्रक्षस्य वृष्णो अरुषस्य नू † महः प्र नो वचो विदथा जातवेदसे।
३ १२ ३१र २र ३ २ ३ १२ ३ १२३१२
वैश्वानराय मतिर्नव्यसे शुचिः सोम इव पवते चारुरग्नये ॥ ८ ॥

இருக்கு—9-8-1.

ப்ரக்ஷஸ்ய வ்ருஷ்ணோ அருஷஸ்ய நூ மஹ: ப்ர ணோ வசோ [விதயா ஜாதவேதஸே ।
வைஶ்வாநராய மதிர்நவ்யஸே ஶுசி: ஸோம இவ பவதே [சாருரக்நயே ॥

அந்வயம்.

(हे वैश्वानर !,) प्रक्षस्य, वृष्णः, अरुषस्य, महः, नु, नः, वचः, विदथा, वैश्वानराय, प्र, नव्यसे, जातवेदसे, अग्नये, शुचिः, चारुः, मतिः, सोमः इव, पवते ॥

---

* पृक्षस्य, † सतः प्रनु वोच, ‡ जातवदसे, § नव्यसीं, என்பன இருக்கு.

பதவுரை.

(हे वैश्वानर !)	(ஹெ வெஶ்வாநர !)	(வைசுவாநரனே !)
प्रक्षस्य	ப்ரக்ஷஸ்ய	வியாபகனும், அல்லது, அவியாகிய அன்னமுடையவனும்.
वृष्णः	வ்ருஷ்ணஃ	விரும்பியதைப் பொழிபவனும்,
अरुषस्य	அருஷஸ்ய	பிரகாசமுடையவனும்,
महः	மஹஃ	போற்றத் தக்கவனுமாகிய உனது ஆற்றலை, அல்லது, ஒளியை
नु	நு	விரைவாகத் துதிக்கின்றேன். இதுபற்றி
नः	நஃ	எங்களுடைய
वचः	வசஃ	வாக்குகள்
विदथा	விதயா	வேள்வியில்
वैश्वानराय	வைஶ்வாநராய	அக்கினியின் பொருட்டு
प्र	ப்ர	அடைகின்றன. (துதிக்கின்றன.)
नव्यसे	நவ்யஸெ	மிகப் புதியதும் (அவியால் வளர்ந்ததும்),
जातवेदसे	ஜாதவெதஸெ	உண்டான பிராணிகளனைத்தையு முணர்ந்ததுமாகிய
अग्नये	அக்நயெ	அக்கினியின் பொருட்டுச்
शुचिः	ஶுசிஃ	சுத்தம் பண்ணப்பட்டதும்
चारुः	சாருஃ	இன்பங் கொடுப்பதும்
मतिः	மதிஃ	மனனம் பண்ணத் தக்கதுமாகிய தோத்திரம்
सोम इव	ஸொம இவ	சோமரசம் பாத்திரத்திற் பொங்கியெழுகின்றது போல்
पवते	பவதெ	எனதகத்தி லியற்கையாய் எழுகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—9. பரத்துவாச ரிஷி.

நிறைந்ததும், அல்லது, அவியாகிய அன்னத்தை யுடையதும், விரும்பியதைப் பெய்வதும், விளங்குவதுமாகிய வைசுவாநராக்கினியினுடைய போற்றத் தக்க ஆற்றலை, அல்லது, பிரகாசத்தை விரைவிற் றுதிக்கின்றேன். இதனாலேயே எனது வாக்கு வேள்வியிற் றுதிக்கின்ற தென்க. அதாவது உண்டான பிராணிகளை யுணர்ந்த, அல்லது, தனமுடைய அக்கினியைக் குறித்து (எமது வாக்குத்) துதிக்கின்ற தென்பது பொருள். மேற்கூறிய பொருளே அன்பின் பொருட்டு வேறோராற்றாற் கூறப்படுகின்றது ;-

மிகப் புதிய (அவியால் வளர்ந்த) அக்கினியின் பொருட்டு, நிருமலமானவைகளும், அல்லது, துதிப்போர்களைச் சுத்தப்படுத்துபவைகளும், மங்களகரமானவைகளும், மனனம் பண்ணத் தக்கவைகளுமான துதிகள், என்னிடத்திலிருந்து எழுகின்றன. எவை போலெனின்? தசாபவித்திரமுள்ள வடிக்கும் ஆடையையுடைய பாத்திரத்தினின்றும், சோமரசம் பொங்கியெழுவது போல எழுகின்றது என்பதாம். (8)

மந்திரம் 9.

१ २ ३ १ २र ३२ ३२र ३ ३ ३र २र १ २
610. विश्वे देवा मम शृण्वन्तु *यज्ञमुभे रोदसी अपान्नपाच्च मन्म ।
२ ३ १ २ २ १ ३ २ ३ ३ २ २
मा वो वचाꣳसि परिचक्ष्याणि वोचꣳ सुम्नेष्विद्वो अन्तमा मदेम ॥

இருக்கு 9-52-14.

விஶ்வே தேவா மம ஶ்ருண்வந்து யஜ்ஞமுபே ரோதஸீ அபாந்ந
[பாச்ச மந்ம ।
மா வோ வசாꣳஸி பரிசக்ஷ்யாணி வோசꣳ ஸும்நேஷ்வித்வோ
[அந்தமா மதேம ॥

அந்வயம்.

विश्वे, देवाः, मन्म, मम, यज्ञं, शृण्वन्तु, अपान्नपात्, उभे, रोदसी, परिचक्ष्याणि, वचांसि, वः, मावोचं, वः, अन्तमाः, सुम्नेषु इत्, मदेम ॥

பதவுரை.

विश्वे	விஶ்வே	எல்லாத்
देवाः	தேவாঃ	தேவர்களும்,
मन्म	மந்ம	மதித்தற்குரிய
मम	மம	என்னுடைய
यज्ञं	யஜ்ஞம்	பூசையை, அல்லது, அவியை
शृण्वन्तु	ஶ்ருண்வந்து	ஏற்றுக் கொள்வார்களாக.
अपान्नपात्	அபாந்நபாத்	அந்தரிக்ஷம் அக்கினி (என்னும்)
उभे	உபே	இரண்டு வகையாகிய
रोदसी	ரோதஸீ	வானுலக, மண்ணுலக தேவதைகள் உள்ளத்திற் கொள்வார்களாக.
परिचक्ष्याणि	பரிசக்ஷ்யாணி	தள்ளத் தக்கனவாய

* यज्ञिया, என்பது இருக்கு.

वचांसि	𑌵𑌚𑌾𑌂𑌸𑌿	வசனங்களை
वः	𑌵𑌃	உங்கட்குச்
मावोचं	𑌮𑌾𑌵𑍋𑌚𑌂	சொல்லமாட்டேன். (இனிய துதியையே கூறுகின்றேன். இதனால்)
वः	𑌵𑌃	உங்களை
अन्तमाः	𑌅𑌨𑍍𑌤𑌮𑌾𑌃	மிகச்சமீபித்துள்ள யாங்கள்
सुम्नेषु इत्	𑌸𑍁𑌮𑍍𑌨𑍇𑌷𑍁 𑌇𑌤𑍍	நீங்கள் கொடுத்துள்ள சுகத்தின் கண்ணேயே
मदेम	𑌮𑌦𑍇𑌮	களிப்புறுகின்றோம்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—9. பரத்துவாச ரிஷி.

எல்லாத் தேவதைகளும், மனனஞ் செய்யத்தக்க எனது பூசைகளை, அல்லது, அவிகளை ஏற்றுக்கொள்வார்களாக. மத்திய வுலகிலுள்ள அக்கினியும், வானுலகு மண்ணுலகும், என்னுடைய தோத்திரத்தை மனதிற் கொள்வனவாகுக. இனிப்பிரத்தியட்சமாகிய தோத்திரம் :—தேவர்காள்! உங்கட்கு, தள்ளத்தக்க வாக்குகளைப் (தோத்திரங்களை) படிக்கமாட்டேன். மற்றே, இனிய தோத்திரங்களையே படிப்பேன். இதனால், உங்கட்கு மிக்க அருகில் இருப்பவர்களான யாங்கள், உங்களாற் கொடுக்கப்பட்ட சுகங்களிலேயே இருந்துக்கொண்டு களிப்படைவோமாக. (9)

மந்திரம் 10.

१ २ ३ १ २ ३ १र २र ३ २
611. यशो मा द्यावापृथिवी यशो मेन्द्रबृहस्पती
३ १ २ ३ १ २ ३ १र
यशो भगस्य विन्दतु यशो मा प्रतिमुच्यताम् ।
३ २ २ ३ २ ३ १ २ ३ १ २
यशस्व्या ३ स्याः सꣳसदोऽहं प्रवदिता स्याम् ॥ १० ॥

𑌯𑌶𑍋 𑌮𑌾 𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌯𑌶𑍋 𑌮𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑍀
𑌯𑌶𑍋 𑌭𑌗𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑍁 𑌯𑌶𑍋 𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌯𑌶𑌸𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌃 𑌸𑌂𑌸𑌦𑍋𑌽𑌹𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑌿𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍 ॥

அந்வயம்.

हे देव!, द्यावापृथिवी, यशः, मा, विन्दतु, इन्द्रबृहस्पती, यशः, मा, भगस्य, यशः, मा, मा प्रतिमुच्यतां, अस्याः, संसदः, यशः, अहं, यशस्वी, प्रवदिता, स्याम् ॥

பதவுரை.

हे देव!	ஹே தேவ!	தேவனே!
द्यावापृथिवी	த்யாவாப்ருதிவீ	வானுலக மண்ணுலகங்களிலுள்ள
यशः	யஶ:	கீர்த்தியானது
मा	மா	எனக்குக்
विन्दतु	விந்தது	கிடைக்குக.
इन्द्रबृहस्पती	இந்த்ரப்ருஹஸ்பதீ	இந்திர பிருகற்பதிகட்குள்ள
यशः	யஶ:	கீர்த்தியும்
मा	மா	எனக்குக் கிடைக்குக.
भगस्य	பகஸ்ய	ஆதித்தனுடைய
यशः	யஶ:	கீர்த்தியும்
मा	மா	எனக்குக் கிடைக்குக.
मा प्रतिमुच्यतां	மா ப்ரதிமுச்யதாம்	இப்பெருங் கீர்த்தி எப்போதும் எம்மிடத்து நீங்காதிருக்குக.
अस्याः	அஸ்யா:	இந்தச்
संसदः	ஸம்ஸத:	சபையின்
यशः	யஶ:	கீர்த்தியுங் கெடாதிருக்குக.
अहं	அஹம்	யான்
यशस्वी	யஶஸ்வீ	கீர்த்தி யுடையவனும்
प्रवदिता	ப்ரவதிதா	பெரும் பேச்சாளனும்
स्यां	ஸ்யாம்	ஆவேனுக.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—10. வாமதேவ ரிஷி.

வானுலக மண்ணுலகங்களின் கீர்த்தியானது துதிப்போனாகிய எனக்குக் கிடைக்குக. மற்றும், இந்திர, பிருகற்பதிகளின் கீர்த்தியும் எனக்குக் கிடைக்குக. இன்னும், ஆதித்தனுடைய கீர்த்தியும் எனக்குக் கிடைக்குக. பெருங் கீர்த்தியானது எம்மைவிட்டு நீங்காதிருக்குக. இச் சங்கத்தின் கீர்த்தியுங் கெடாதிருக்குக. யாண்டும் யான் கீர்த்தியுடையவனும் மிகப் பேசுவோனும் ஆவேனுக. (10)

மந்திரம் 11.

१ २ ३ २ ३क२र ३ १ २ ३ १ २ ३ १ २ १ २ ३ २
612. इन्द्रस्य नु वीर्याणि प्रवोचं यानि चकार प्रथमानि वज्री ।
२ ३ २ ३२ ३ २ ३ २ ३१ २ ३१ २
अहन्नहिमन्वपस्ततर्द प्रवक्षणा अभिनत्पर्वतानाम् ॥ ११ ॥

இருக்கு 1-32-1.

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌨𑍁 𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌵𑍋𑌚𑌂 𑌯𑌾𑌨𑌿 𑌚𑌕𑌾𑌰 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌨𑌿 𑌵𑌜𑍍𑌰𑍀 ।
𑌅𑌹𑌨𑍍𑌨𑌹𑌿𑌮𑌨𑍍𑌵𑌪𑌸𑍍𑌤𑌤𑌰𑍍𑌦 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑌣𑌾 𑌅𑌭𑌿𑌨𑌤𑍍𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

அந்வயம்.

वज्री, प्रथमानि, यानि, वीर्याणि, चकार, नु, (तस्य) इन्द्रस्य वीर्याणि, प्रवोचं, अहिं, अहन्, अनु, अपः, ततर्द, पर्वतानां, वक्षणाः, प्राभिनत् ॥

பதவுரை.

वज्री	𑌵𑌜𑍍𑌰𑍀	வச்சிராயுத மேந்திய இந்திரன்
प्रथमानि	𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌨𑌿	முன்னுள்ள, அல்லது, முதன்மையான
यानि	𑌯𑌾𑌨𑌿	எந்தப்
वीर्याणि	𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿	பராக்கிரம காரியங்களைச்
चकार	𑌚𑌕𑌾𑌰	செய்தனனோ,
नु	𑌨𑍁	விரைவில்
(तस्य) इन्द्रस्य	(𑌤𑌸𑍍𑌯) 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯	அவ் விந்திரனுடைய
वीर्याणि	𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿	பராக்கிரமங்களைச்
प्रवोचं	𑌪𑍍𑌰𑌵𑍋𑌚𑌂	சொல்கின்றேன். (அதாவது)
अहिं	𑌅𑌹𑌿𑌂	மேகத்தைக்
अहन्	𑌅𑌹𑌨𑍍	கடிந்தனன்.
अनु	𑌅𑌨𑍁	பின்னர்
अपः	𑌅𑌪𑌃	நீரைச்
ततर्द	𑌤𑌤𑌰𑍍𑌦	செலுத்தினன். (தரையில் வீழ்த்தினன்)
पर्वतानां	𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌨𑌾𑌂	மலைகளின் மேல்.
वक्षणाः	𑌵𑌕𑍍𑌷𑌣𑌾𑌃	ஓடுகின்ற நதிகளை
प्राभिनत्	𑌪𑍍𑌰𑌾𑌭𑌿𑌨𑌤𑍍	கரையைக் கெல்லி, ஓடச் செய்தனன். (என்பதாம்.)

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—11. இரணியத்தூப ரிஷி.

வச்சிராயுத மேந்திய இந்திரன், முன்னிருந்த, அல்லது, முக்கியமான எந்தப் பராக்கிரம முடைய காரியங்களைச் செய்துள்ளானோ, அவ் விந்திர னுடைய பராக்கிரம காரியங்களை விரைவிற் சொல்கின்றேன். அவைகள் யாவைகளெனின்? அவைகளைக் கூறுவாம்:—மேகத்தைப் பிளந்தனன். அஃதோர் பராக்கிரம காரியமாம். பின்னர், நீரைத் துன்புறுத்தினன். அதாவது பூமியில் வீழ்த்தினன். இஃது இரண்டாவது பராக்கிரம காரிய மாம். மலைகளின் சம்பந்தமாய்ச் செல்கின்ற ஆறுகளை இருகரைகளையுங் கெல்லுவதினால் மிகப் பெருகச் செய்தனன். இஃதோ, மூன்றாவது பராக் கிரம காரியமா மென்க. (11)

மந்திரம் 12.

३ १२ ३ ३ १ ३ १२ ३ २ ३ १ २३ १३ ३ २

613. अग्निरस्मि जन्मना जातवेदा घृतं मे चक्षुरमृतं म आसन् ।

३ १२३ १२ २२ ३ १२ २२३ १ २ ३ १२ ३ १ २

त्रिधातुरर्को रजसो *विमानोऽजस्रं ज्योतिर्हविरस्मि सर्वम् ॥१२॥

இருக்கு—3-26-7.

அக்நிரஸ்மி ஜந்மநா ஜாதவேதா க்ருதம் மே சக்ஷுரம்ருதம் ம
[ஆஸந் ।
த்ரிதாதுரர்கோ ரஜஸோ விமாநோऽஜஸ்ரம் ஜ்யோதிர்ஹவி
[ரஸ்மி ஸர்வம் ॥

அந்வயம்.

(हे कुशिक!,) अग्निः, अहं, जन्मना एव, जातवेदा, अस्मि, मे, चक्षुः, घृतं, अमृतं, मे, आसन्, अर्कः, त्रिधातुः, रजसः, विमानः, अजस्रं, ज्योतिः, हविः, सर्वं, अस्मि,

(அல்லது)

अग्निः, अस्मि, जन्मना, जातवेदाः, घृतं मे चक्षुः, अमृतं, मे, आसन्, त्रिधातुः, अर्कः, रजसः, विमानः, अजस्रं, ज्योतिः, सर्वं हविः, अस्मि ॥

* विमानो धर्मो என்பது இருக்கு.

பதவுரை.

(हे कुशिक !)	(ஹே குஶிக !)	விசுவாமித்திரமுனிவரின் பிதாவாகிய குசிக ரிஷியே! போக்கிய மென்னும் அன்னம்,
अग्निः	அக்3நி:	போக்தாவாகிய அக்கினி, என்னு மிவற்றுள்
अहं	அஹம்	அக்கினியாகிய நான்,
जन्मना (एव)	ஜந்மநா (ஏவ)	பிறப்பினின்றே
जातवेदा अस्मि	ஜாதவேதா3 அஸ்மி	ஆன்ம வடிவாய் யிருக்கின்றேன். (கேட்டல் முதலியன இன்றிப் பிரம சாக்ஷாத்காரமுடையேன்.)
मे	மே	எனது
चक्षुः	சக்ஷு:	நேத்திரம்
घृतं	க்4ருதம்	மிக விளங்குகின்றது.
अमृतं	அம்ருதம்	கரும பயன்
मे	மே	என்னுடைய
आसन्	ஆஸந்	வாயிலிருக்கின்றது. (யானே போக்தா.)
अर्कः	அர்க:	வாயுவும் நானுயிருக்கின்றேன்.
त्रिधातुः	த்ரிதா4து:	மூவகைப் பிரிவினுள், வாயு வடிவத்தால்
रजसः	ரஜஸ:	அந்தரிக்ஷத்திற்கு
विमानः	விமாந:	அதிட்டானமும் நானு யிருக்கின்றேன்.
अजस्रं	அஜஸ்ரம்	என்றுமுள்ள
ज्योतिः	ஜ்யோதி:	வானுலகிற்கு அதிட்டானமாகிய, இரவியும் நானு யிருக்கின்றேன்.
हविः	ஹவி:	போக்கியப் பொருள்கள்
सर्वं	ஸர்வம்	அனைத்தும்
अस्मि	அஸ்மி	நானு யிருக்கின்றேன்.

அல்லது

अग्निः	அக்3நி:	யான் அக்கினியாக (தேவர்கட்கு அவியைச் சேர்ப்பிப்பவனாகி)

अस्मि	அஸ்மி	இருக்கின்றேன்.
जन्मना	ஜந்மநா	பிறந்த காலத்தினின்றே
जातवेदाः	ஜாதவேதா:	ஞானமுடையோனு யிருக்கின்றேன். அல்லது, தோன்றின பொருள்களனைத்தையுந் தனதான்மசொரூபமாய்க் காணுஞ் சர்வான்மாவாயிருக்கின்றேன். ஏனெனின்?
घृतं मे चक्षुः	க்ருதம் மே சக்ஷு:	தீயில் விட்ட நெய்யென, எனது கண் பிரகாசிக்கின்றது.
अमृतं	அம்ருதம்	கெடாத ஒளியாகிய அமுதம்
मे	மே	என்னுடைய
आसन्	ஆஸந்	முகமா யிருக்கின்றது.
त्रिधातुः अर्कः	த்ரிதாது: அர்க்க:	மூவகைப் பிரிவாயுள்ள பிராணனும் நானு யிருக்கின்றேன்.
रजसः	ரஜஸ:	அந்தரிக்ஷத்தைப்பற்றி
विमानः	விமாந:	விசேடமாய்ப் பரிணமிக்கும் வாயுவும் நானு யிருக்கின்றேன்.
अजस्रं	அஜஸ்ரம்	இடையறுது வெப்பந்தரும்
ज्योतिः	ஜ்யோதி:	இரவியும் நானு யிருக்கின்றேன். விரிப்பதிலென்?
सर्वं हविः अस्मि	ஸர்வம் ஹவி: அஸ்மி	நெய், புரோடாச, முதலிய தேவவுணவுகள் எல்லாம் நானுயிருக்கின்றேன் என்க.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—2. விசுவாமித்திரர் ரிஷி.

இம் மந்திரமும், மேல்வரும் மந்திரமும் அக்கினியைத் துதிக்கின்றனவாம். அதில் இம் மந்திரம், எல்லா வடிவமாய் அக்கினியைத் துதித்தலாம். இவ் வுலகம், (அன்னம்) போக்கிய வடிவாகவும், போத்துரு (புசிப்போன்) வடிவாகவும் இருவகைப்பட்டதாம். அவ்வாறே, "இதுவே அன்னமும், அன்னமுண்போனுமாம். சோமமே அன்னம், அக்கினியே அன்னமுண்போன்" என மறையுங் கூறுகின்றது. ஆண்டுப் போக்திரு வருக்க வடிவமாய் அன்னத்தையுண்பது அக்கினியாம். அவ் வக்கினியும், அக்கினி, வாயு, ஆதித்தன், என்னும் (தனையுள்ளடக்கிய மூவகை) வேற்றுமையால், மூவகையாகிய மண்ணுலகம், அந்தரிக்கவுலகம், வானுலகம் என்பவைகளை அதிட்டித்து நிற்கின்றது. அவ்வாறே "அது தன்னை மூவகையாக்கியது இரண்டாவது இரவி மூன்றுவதுவாயும்" என வாசசனேய மென்னும் மறையுங் கூறுகின்றது. அவற்றுள், அவ் வக்கினியாகிய நான் பிறப்பிலிருந்தே சாதவேதா

வாக (அதாவது கேட்டன், முதலியன இன்றியே இயற்கையில் சாக்ஷாத்கா ரம் பண்ணிய பரமான்ம வடிவாக) இருக்கின்றேன் என்பதாம். உலகத்தை விளக்குகின்ற பிரகாச வடிவம் எனது நேத்திரம் இப்போது மிக ஒளிர்கின் றது. திவ்யமாகிய கரும பலம் முதலிய விடய போகங்கள் எனது முகத்தில் (வாயில்) இருக்கின்றன. எல்லாப் போக்தா வருக்க வடிவங்களுந் தானாய் இருத்தலின் என்க. இவ்வாறு தனதான்மாவிற்குப் பூமியின் அதிட்டானத் தன்மையைக் கூறிவிட்டு, வாயு வடிவாய் அந்தரிட்சத்திற்கு அதிட்டானத் தன்மை கூறத் தொடங்கப்படுகின்றது :—மூலத்தில் அர்க்கன் என்பது முதலியனவற்றால். ஈண்டு அர்க்கன் என்றது வாயுவாம் "அதுவே அர்க்க னுடைய அர்க்கத் தன்மை" என மறையுங் கூறுதலின் என்க. அப் பிரா ணன் நானாயிருக்கின்றேன். அதாவது மூவகையாகத் தன்னைப் பிரித்து அவற்றுள் வாயு வடிவால் அந்தரிட்சத்திற்கு அதிட்டாதாவாயிருக்கின்றேன் என்பதாம். அவ்வாறே, ஆதித்தன் வடிவால் வானுலகிற்கு அதிட்டானத் தன்மை கூறப்படுகின்றது (மூலத்தில்) "கெடாத சோதி" என. அதாவது வானுலகிற்கு அதிட்டான மென்னும் நித்தியப் பிரகாசனாகிய ஆதித்தனும் நானாயிருக்கின்றேன் என்பதாம். இவ்வாறாய போக்தா வடிவமாய்த் தன் னைச் சிந்தித்துக்கொண்டு, போக்கிய வடிவாயும் சிந்திக்கின்றார்.—மூலத்தில் யாதொரு அவிகள், என்பது முதலியவற்றால். பிரசித்தியான போக்கியங் கள் (அன்னங்கள்) அனைத்தும் நானாயிருக்கின்றேன் என்பதாம்.

அல்லது, நான் அக்கினியா யிருக்கின்றேன். அதாவது தேவர்கட்கு அவி களைச் சேர்ப்பிக்கின்றே னாதலின் ஒளி முதலிய குணமுடையனா யிருக்கின் றேன் என்பதாம். மற்றும், பிறப்பினின்றே ஞானமுடையவனா யிருக்கின் றேன் என்பதாம். தோன்றிய கணத்திலேயே எல்லா முணர்ந்தோனா யிருக் கின்றேன் என்க. அல்லது, தோன்றின வனைத்தையும் தனதான்மாவாய் உணர் கின்றது சாதவேதாவாம். அதாவது எல்லா வடிவா யிருக்கின்றேன் என்ப தாம். அஃதெவ்வா றெனின்? கூறப்படுகின்றது :—பிரசித்தியாகிய நெய், எனது நேத்திரமாயிருக்கின்றது. அதாவது நேத்திரம் போன்றதா மென் பதாம். என்னை? உலகில் கண்ணும் பிரகாசிக்கின்றது; ஆவின் நெய்யும் (தீயாகிய) என்பால் விடப்படின் என்னைப் (அக்கினியாகிய என்னை) பிரகாசிப் பிப்பதாயிருக்கின்றது, ஆதலின் என்க. ஒளியென்னும் அமுதமானது, அதாவது கெடாத பிரகாசம், எனது வாயில் இருக்கின்றது. பிராணன், அபானன், என்னும் மூவகையா யுள்ளதும், போற்றத் தக்கதுமாகிய பிரா ணனும் நானாயிருக்கின்றேன். அவ்வாறே அந்தரிக்ஷத்தினுடைய, விமா னம்=விசேடமா யுண்டாக்குவது, என்னும் வாயுவும் நானாயிருக்கிறேன். மற்றும், இடைவிடாது வெப்பந்தருஞ் சூரியனும் நானாயிருக்கின்றேன். விரிப்பதி லென்? நெய், புரோடாச முதலிய இந்த அவி வடிவத்தால்

உபலக்கணமா யுணரப்பட்ட அவ் வனைத்தும் நானுயிருக்கின்றேன் என்பதாம். "உண்மையில் இவ் வனைத்தும் பிரமம்" என மறையுங் கூறுகின்றதா மாதலின் என்க. அவ் வக்கினியை எல்லா வடிவமாகக் கூறியதால் அக்கினியே பரப்பிரமம் எனப்பட்டது. (காண்க.) (12)

மந்திரம் 13.

२ ३ २ ३१र २र ३१र २र ३१र २र३ १२
614. पात्यग्निर्विपो अग्रं पदं वेः *पाति यह्वश्चरणं सूर्यस्य ।
२ ३ १ २ ३१ २ ३१र २र ३ १ २ ३ १२ ३ २
पाति नाभा सप्तशीर्षाणमग्निः पाति देवानामुपमादमृष्वः ॥ १३ ॥

இருக்கு 3-5-ரு.

பாத்யக்³நிர்விபோ அக்³ரம் பத³ம் வே꞉ பாதி யஹ்வஶ்சரணம்
[ஸூர்யஸ்ய ।
பாதி நாபா⁴ ஸப்தஶீர்ஷாணமக்³நி꞉ பாதி தே³வாநாமுபமாத³ம்
[ருஷ்வ꞉ ॥

அந்வயம்.

अग्निः, वेः, विपः, अग्रं, पदं, पाति, यह्वः, सूर्यस्य, चरणं, पाति, नाभा, सप्तशीर्षाणं, पाति, ऋष्वः अग्निः, देवानां उपमादं, पाति ॥

பதவுரை.

अग्निः	அக்³நி꞉	அக்கினி தேவதை
वेः	வே꞉	யாண்டும் நிறைந்த
विपः	விப꞉	பூமியின் சம்பந்தமாய்
अग्रं	அக்³ரம்	முக்கியமாயுள்ள
पदं	பத³ம்	இடத்தைக்
पाति	பாதி	காப்பாற்றுகின்றது.
यह्वः	யஹ்வ꞉	மகத்தாகிய அக்கினி,
सूर्यस्य	ஸூர்யஸ்ய	இரவியின்
चरणं	சரணம்	வழியாகிய அந்தரிட்சத்தைக்
पाति	பாதி	காப்பாற்றுகின்றது.
नाभा	நாபா⁴	அந்தரிட்சத்தில் (வானில்)
सप्तशीर्षाणं	ஸப்தஶீர்ஷாணம்	மருத் கணத்தைக்

* पाति प्रियं रिपो अग्रे, என்பது இருக்கு.

पाति	வாதி	காப்பாற்றுகின்றது.
ऋत्व: अग्नि:	ஜ்வஷ்ஃ சுஃறிஃ	காணற்குரிய இவ் வக்கினி
देवानां उपमादं	தெவாநாம் உவஊாதம்	தேவர்கட்குக் களிப்பைக்கொடுக்கும் வேள்வியைக்
पाति	வாதி	காப்பாற்றுகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—14. விசுவாமித்திர ரிஷி.

அக்கினி, யாண்டும் நிறைந்துள்ள பூமியின் சிறந்த இடங்களைக் காப்பாற்றுகின்றது. மகத்தாகிய அக்கினி, இரவியின் மார்க்கமாகிய அந்தரிக்ஷத்தைக் காப்பாற்றுகின்றது. அந்தரிட்சத்தின் நடுவில் மருத் கணத்தைக் காப்பாற்றுகின்றது. பார்க்கத்தக்க இவ் வக்கினி, தேவர்கட்குக் களிப்பையுண்டாக்கும் வேள்வியைக் காப்பாற்றுகின்றது என்பதாம். (13)

மூன்றாவது கண்டம்

முற்றும்.

நான்காவது கண்டம்.

பிரபாடகம்—6. அத்தியாயம்—6. கண்டம்—1.

பன்னிரண்டு மந்திரங்களாலானது.

தேவதைகள் :—2, அக்கினி. 3, இருது. 3, 6-புருடன். 7, சிருட்டா. 8, வான், மண். 9, 11, இந்திரன். 10, ஆன்மா. 13, கோ. சந்தம் :—1, 2, பந்தி. 3, 7, 9, 10, அநுஷ்டுப். சுரம் :—1, 2, பஞ்சமம். 4, 7, 9. 10, காந்தாரம். 7, 11, 12, தைவதம். இருடிகள் ஆங்காங்கு கூறப்படுவார்கள்.

மந்திரம் 1.

१ २   ३ १ २३   २ ३ १ २
615. भ्राजन्त्यग्ने समिधान दीदिवो जिह्वा चरत्यन्तरासनि ।
२र   २र   ३ १२   ३ २ २र   २र ३१   २
स त्वन्नो अग्ने पयसा वसुविद्रयिं वर्चो दृशेऽदाः ॥ १ ॥

ப்ராஜந்த்யக்நே ஸமிதாந தீதிவோ ஜிஹ்வா சரத்யந்தராஸநி ।
ஸத்வம் நோ அக்நே பயஸா வஸுவித்ரயிம் வர்சோ த்ருஶே(அ)தா: ॥

அந்வயம்.

समिधान, दीदिवः, अग्ने !, भ्राजन्ती, आसनि, अन्तः, जिह्वा, चरति, अग्ने !, वसुवित्, सः त्वं, नः पयसा, रयिं, दृशे, वर्चः, अदाः ॥

பதவுரை.

समिधान	ஸமிதாந	வேட்போர்களால் ஒளி மிக வளர்க்கப்பட்டதும்,
दीदिवः	தீதிவ:	எவற்றினும் மேலாய்ப் பிரகாசிப்பதுமாகிய
अग्ने !	அக்நே !	அக்கினியே ! (உனது)
भ्राजन्ती	ப்ராஜந்தீ	பிரகாசமாகிய
आसनि अन्तः	ஆஸநி அந்த:	வாயின் நடுவிலுள்ள
जिह्वा	ஜிஹ்வா	நாக்கு
चरति	சரதி	(அவியைப்) புசிக்கின்றது.
अग्ने !	அக்நே !	அக்கினியே !
वसुवित्	வஸுவித்	தனத்தை யடைவிக்கின்ற,
सः त्वं	ஸ: த்வம்	அத்தகைய நீ
नः पयसा	ந: பயஸா	எமக்கு அன்னத்தோடு
रयिं	ரயிம்	இரமணீய தனத்தையும்
दृशे	த்ருஶே	பார்க்கத்தக்க
वर्चः	வர்ச:	ஒளியையும், அல்லது, ஒளித் தன்மையையுந்
अदाः	அதா:	தருவாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—1. வாமதேவ ரிஷி.

வேட்போர்களால் ஒளியெழ வளர்க்கப்பட்டதும், எல்லாவற்றினும் மேலாய் விளங்குவதுமாகிய அக்கினியே! பிரகாசமுள்ள வாயின் நடுவின் கண்ணுள்ள (உனது) நாக்கு, அவிகளை (தேவவுணவுகளை) உண்கின்றது. தனத்தைச் சேர்ப்பிக்கின்ற அத்தகைய அக்கினியே! நீ, அன்னத்துடன் இரமித்தற்குரிய தனத்தையும், காணற்குரிய ஒளியையும், அல்லது, ஒளித் தன்மையையும் எங்கட்குக் கொடுப்பாயாக என்பதாம். (1)

மந்திரம் 2.

३ २र २र ३ २र २र
616. वसन्त इन्नु रन्त्यो ग्रीष्म इन्नु रन्त्यः ।
३१र २र ३१२ ३१र २र ३ १र २र
वर्षाण्यनु शरदो हेमन्तः शिशिर इन्नु रन्त्यः ॥ २ ॥

வஸந்த இந்நு ரந்த்யோ க்ரீஷ்ம இந்நு ரந்த்ய꞉ ।
வர்ஷாண்யநு ஶரதோ ஹேமந்த꞉ ஶிஶிர இந்நு ரந்த்ய꞉ ॥

அந்வயம்.

वसन्तः इन्नु, रन्त्यः, ग्रीष्म इन्नु, रन्त्यः, वर्षाणि अनु, शरदः, हेमन्तः,
शिशिरः इन्नु, रन्त्यः ॥

பதவுரை.

वसन्तः इन्नु	வஸந்த꞉ இந்நு	இளவேனிற் காலம்
रन्त्यः	ரந்த்ய꞉	இரமித்தற் குரியது.
ग्रीष्म इन्नु	க்ரீஷ்ம இந்நு	முதுவேனிற் காலம்
रन्त्यः	ரந்த்ய꞉	இரமித்தற் குரியது.
वर्षाणि अनु	வர்ஷாணி அநு	மழை காலத்தின் பின்னர்
शरदः	ஶரத꞉	குளிர் காலமும்
हेमन्तः	ஹேமந்த꞉	முன்பனிக் காலமும்
शिशिर इन्नु	ஶிஶிர இந்நு	பின்பனிக் காலமும்
रन्त्यः	ரந்த்ய꞉	இரமிக்கத் தக்கனவாம்.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—2. வாமப்தவ ரிஷி.

சித்திரை, வைகாசியாகிய வசந்தரிதுகாலமே இரமிக்கத்தக்கதாகின்றது. ஆனி, ஆடியாகிய கிரீஷ்மரிதுவே இரமித்தற் குரியதாம், ஆவணி புரட்டாசியாகிய மழைக்காலரிதுவே இரமிக்கத்தக்கதாம். அதன் பின்னர், அர்ப்பிசி, கார்த்திகைகளான அவயவங்களையுடைய சரத்காலரிது இரமிக்கத் தக்கதாம். மார்கழி தையாகிய ஏமந்தரிதுவே இரமிக்கத்தக்கதாகின்றது. மாசி பங்குனியாகிய சிசிரருதுவே இரமிக்கத்தக்கதாம். (2)

குறிப்பு:—ஈண்டு, இருது வென்பது ஈசுர னென்பர் சிலர்.

மந்திரம் 3.

३१२३ १२ ३२ ३१२

617. सहस्रशीर्षाः पुरुषः सहस्राक्षः सहस्रपात् ।

१२ २२ ३१२३१२ २३

*स भूमिं †सर्वतो वृत्वात्यतिष्ठद्दशांगुलम् ॥ ३ ॥

இருக்கு 10-90-4.

ஸஹஸ்ரஶீர்ஷா꞉ புருஷ꞉ ஸஹஸ்ராக்ஷ꞉ ஸஹஸ்ரபாத் |

ஸ பூமிம் ஸர்வதோ வ்ருத்வாத்யதிஷ்டத்தஶாங்குலம் ||

அந்வயம்.

पुरुषः, सहस्रशीर्षाः, सहस्राक्षः, सहस्रपात्, सः, भूमिं, सर्वतः, वृत्वा, दशांगुलं, अत्यतिष्ठत् ॥

பதவுரை.

पुरुषः	புருஷ꞉	விராட் புருடன் (பெரும் பொருளாகிய இறைவன்)
सहस्र शीर्षाः	ஸஹஸ்ரஶீர்ஷா꞉	எண்ணிலாச் சிரசுகளையுடையானும்,
सहस्राक्षः	ஸஹஸ்ராக்ஷ꞉	அளவிலாக் கண்களுடையானும்,
सहस्रपात्	ஸஹஸ்ரபாத்	அளவற்ற பாதங்களை யுடையானுமாவன்.
सः	ஸ꞉	அப் புருடன்
भूमिं	பூமிம்	அண்டமாகிய தரையை
सर्वतः	ஸர்வத꞉	எல்லா வகையானுஞ்
वृत्वा	வ்ருத்வா	சூழ்ந்துகொண்டு
दशांगुलं	தஶாங்குலம்	பத்துவிரற்கடை அளவுள்ள இருதயத்தைக்
अत्यतिष्ठत्	அத்யதிஷ்டத்	கடந்து இனிது நிலைத்திருக்கின்றனன்.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—3. நாராயண ரிஷி.

எல்லா வுயிர்களின் சமட்டியாகிய (கூட்டமாகிய) விராட் எனயாதொரு புருடன் உள்ளானே, அவன், ஆயிரமென்னு மெண்ணால் உபலக்கணமாயறியப்பட்ட எண்ணமுடியாத தலைகளையுடையவன் என்பது பொருள்.

* सभूमिं विश्वता धृत्वा, என்பது இருக்கு.

† सर्वतः स्पृत्वा, என்பதும், யஜுர் सहस्र शीर्षा என்பதும், யஜுர்

எல்லாவுயிர்களுக்குண்டான தலைகளனைத்துமே இவனுக்கு ஆயிரந்தலைகளா மெனக. அவன் அவ்வுடல்களினுள் ளிருக்கின்றானாதலின் தலைகளெல்லாம் அப் புருடனுடையவைகளேயாம் என்பதாம். இவ்வாறே, ஆயிரங்கண்க ளுடைமையும், ஆயிரங் கால்களுடைமையுமா மென்பதுங் கண்டுகொள்க. அப்புருடன் பிரமாண்டமாகிய வுருண்டை வடிவப் பூமியை நாற்புறமுஞ் சூழ்ந்து வளைந்துகொண்டு பத்துவிரற்கடை யளவுள்ளதோரிடத்தைத் தாண்டியிருக்கின்றான். அதாவது பத்துவிரற்கடை என்றது உபலக்கணமாம் ஆதலின் பிரமாண்டத்தினின்றும் வெளியிலும் எங்கும் வியாபித்திருக்கின் றான் என்பது பொருள். (3)

மந்திரம் 4.

१ २ ३ २उ ३१ २३१ ३ ३ १ २ ३१ २
618. त्रिपादूर्ध्व उदैत्पुरुषः पादोऽस्येहाभवत् पुनः ।
२ ३ २ ३क २र ३ २ ३ २
तथा विष्वङ् व्यक्राम द् *शनाऽनशने अभि ॥ ४ ॥

10-90-4.

𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵 𑌉𑌦𑍈𑌤𑍍𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 𑌪𑌾𑌦𑍋𑌽𑌸𑍍𑌯𑍇𑌹𑌾𑌭𑌵𑌤𑍍 𑌪𑍂𑌨𑌃।
𑌤𑌥𑌾 𑌵𑌿𑌷𑍍𑌵𑌙𑍍 𑌵𑍍𑌯𑌕𑍍𑌰𑌾𑌮𑌦𑌶𑌨𑌾𑌽𑌨𑌶𑌨𑍇 𑌅𑌭𑌿 ॥

அந்வயம்.

त्रिपात् पुरुषः, ऊर्ध्वः, उदैत्, अस्य, पादः, इह, पुनः, अभवत्, तथा, विष्वङ्, व्यक्रामत्, अशनानशने, अभि ॥

பதவுரை.

त्रिपात् पुरुषः	𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌤𑍍 𑌪𑍂𑌰𑍂𑌷𑌃	மூன்று பாதங்களை யுடைய அப் புருடன்
ऊर्ध्वः उदैत्	𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌃 𑌉𑌦𑍈𑌤𑍍	உலகத்தின்குணதோஷங்களுக்கு வேறாய் மேம்பட்டவனாக இருக்கின்றான்.
अस्य	𑌅𑌸𑍍𑌯	இப் புருடனுடைய
पादः	𑌪𑌾𑌦𑌃	ஒருகூறு
इह	𑌇𑌹	இம் மாயையின்கண்
पुनः	𑌪𑍂𑌨𑌃	அடிக்கடி
अभवत्	𑌅𑌭𑌵𑌤𑍍	வெளிப்படுகின்றது.
तथा	𑌤𑌥𑌾	அவ்வாறே

* साशनानशने, என்பது இருக்கிலும் எசுரிலும் பாடம்,

विष्वङ्	விஷ்வங்	பலவகை வடிவாய்
व्यक्रामत्	வ்யக்ராமத்	வியாபிக்கின்றது.
अशनानशने अभि	ஸாஶநாநஶநே அபி	மற்றும், உண்ணல் முதலிய செய்கைகளையுடைய பிராணிகளாகவும், அவைகளில்லாத மலை, ஆறு முதலிய அசேதனங்களாகவும் உலகிற் பரந்தது.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—4.

பந்தத்தின் றொடர்பற்றவனும், மிகுந்த வடிவமுள்ளவனும், மூன்று பாதங்களை யுடையவனுமாகிய இப் புருடன், அஞ்ஞான காரியத்தினின்றுந் தோன்றிய வடிவனுபிருந்தும், அதிலுள்ள குண தோடங்களுடன் றொடர்பற்று மேம்பட்டவனுயிருக்கின்றான். இவனுடைய யாது ஒரு கூறுண்டோ, அது, மாயையிற் றோன்றுகின்றது. அதாவது ஆக்க லழித்தல்களால் மறித்தும் மறித்தும் வருகின்றது என்பதாம். இவ்வுலகம் பரமான்மாவினது ஓர் கூறுந் தன்மை, “இவ்வனைத்தையும் யான் வியாபித்துள்ளேன், ஒரு கூறால் உலகம் நிலைத்திருக்கின்றது” எனப் பகவானுகிய கண்ணபிரானுலுங் கூறப்பட்டிருக்கின்றது. மாயையின்பாற் றோன்றிய பின்னரோ, தேவ, மநுட, பசு, பக்ஷி முதலிய வடிவத்தாற் பலவகையாய் வியாபித்திருக்கிருக்கின்றனன். யாது செய்துகொண்டெனின்? பசி முதலியவைகளைக் குறியாகச் செய்கொண்டு நிறைந்திருக்கின்றனன். அவைகளை யுடைய சேதனசமுதாயமும்; அவைகளில்லாதனவாய மலை, யாறு முதலியவைகளும் என்ன, விருவகையாக உள்ளவாறுண்டாக்கி, இப் புருடனே பலவகையாய்த் தோற்றுமாறு செய்துகொண்டு வியாபித்தனன் என்பதாம். (4)

மந்திரம் 5.

१२३ २उ ३ २३२उ ३ १ २

619. **पुरुष एवेदꣳ सर्वं यद्भूतं यच्च भाव्यम् ।**

१ २ ३ १ ३३ १ २ ३ १२ ३१२ ३ २

पादोऽस्य सर्वा भूतानि त्रिपादस्यामृतं दिवि ॥ ५ ॥

இருக்கு 10-90-2.

புருஷ ஏவேத³ம் ஸர்வம் யத்³பூ⁴தம் யச்ச பா⁴வ்யம் |
பாதோ³ऽஸ்ய ஸர்வா பூ⁴தாநி த்ரிபாத³ஸ்யாம்ருதம் தி³வி ||

அந்வயம்.

इदं, सर्वं, पुरुषः एव, यत्, भूतं, च, यत्, भाव्यं, सर्वभूतानि, अस्य, पादः, अस्य, त्रिपात्, अमृतं, दिवि ॥

பதவுரை.

इदं	இதம்	(நிகழ் காலத்துள்ள) இவ்வுலகம்
सर्वं	ஸர்வம்	அனைத்தும்
पुरुषः एव	புருஷ: ஏவ	புருடனே யாகின்முன்
यत्	யத்	யாது,
भूतं	பூதம்	இறந்த காலத்திற் தோன்றி யிருந்ததோ,
च	ச	மற்றும்,
यत्	யத்	யாது,
भाव्यं	பாவ்யம்	வருங் காலத்திற் ரோன்றுவதோ, அவ் வனைத்தும் புருடனே யாகின்முன்.
सर्वा भूतानि	ஸர்வா பூதாநி	முற்காலத்திலுள்ள சராசரப் பொருள்கள்
अस्य	அஸ்ய	இப்புருடனுடைய
पादः	பாத:	நான்காவது கூறும்.
अस्य	அஸ்ய	இப் புருடனின்
त्रिपात्	த்ரிபாத்	மூன்று பாதங்களும் (மீந்த வடிவம்)
अमृतं	அம்ருதம்	மரணமற்றதாயிருந்து,
दिवि	திவி	ஒளிவடித்தில் நிலைத்திருக்கின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு.—5

நிகழ் காலத்திய இவ்வுலகனைத்தும் புருடனே யாவன். சென்ற காலத்திற்ரோன்றிய.வுலகமும், வருங்காலத்திற் ரோன்று முலகமுமாகிய அனைத்தும் புருடனே யாவன். நிகழ் காலத்திலுள்ள பிராணிகளனைத்தும் சராசர வடிவமாகிய புருடனுடைய கூறுகளானதே போன்று, போன கால, வருங்கால மென்னும்இருவகையாலானதுங் காணற்பாலது என்பது கருத்து. அவ் விரு வகையே விளக்கப்படுகின்றது :—இப் புருடனுக்கு மூன்று காலத்திலுள்ள பிராணிகளனைத்தும் நான்காவது கூறுகும். எஞ்சிய இப்புருடனுடைய முப்பாதமானதோ ? கேடிலாததாய்ப் பிரகாசம் மலிந்த சுயம் பிரகாச வடிவத்தில் நிலைத்திருக்கின்றது. ஈண்டு, நிலைத்திருக்கின்றது என்பது எஞ்சி நின்றது. எப்போதும் " உண்மையானதும் அறிவானதும் அந்த மற்றதும் பிரமமாம் " என்பதால் பிரமத்திற்கு இவ் வளவெனுந் தன்மை யின்மையானுல் பாதம் நான்கெனப் பகருதல் முடியாததாமாயினும்; இவ் வுலகம் பிரம வடிவத்தை நோக்க மிகச் சிறியதாம் எனக்கூறும் வேட்கையாற் பாதங்களொன்று உபசாரமாய்க் கூறப்பட்டது என்பதுணர்க. (5)

மந்திரம் 6.

१२ ३२उ ३ १२३ १२
620. *तावानस्य महिमा †ततो ज्यायांश्च पूरुषः ।
३ १२३१ २र ३ १र २र ३ १२
उतामृतत्वस्येशानो यदन्नेनातिरोहति ॥ ६ ॥

இருக்கு 9-61-12.

𑌤𑌾𑌵𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌤𑌤𑍋 𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ।
𑌉𑌤𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌶𑌾𑌨𑍋 𑌯𑌦𑌨𑍍𑌨𑍇𑌨𑌾𑌤𑌿𑌰𑍋𑌹𑌤𑌿 ॥

அந்வயம்.

तावान्, अस्य, महिमा, पूरुषः, ततः च, ज्यायान्, उत, अमृतत्वस्य, ईशानः, यत्, अन्नेन, अतिरोहति ॥

பதவுரை.

तावान्	𑌤𑌾𑌵𑌾𑌨𑍍	முக்காலத்திய வுலகங்கட்கும் பற்றுக் கோடாதல் முதலிய அவ்வனைத்துமே.
अस्य	𑌅𑌸𑍍𑌯	இப் புருடனுடைய
महिमा	𑌮𑌹𑌿𑌮𑌾	ஆற்றல் விசேடமாம். (உண்மை வடிவமன்று)
पूरुषः	𑌪𑍂𑌰𑍁𑌷𑌃	உண்மையாகிய புருடனே,
ततः च	𑌤𑌤𑌃 𑌚	ஆற்றலென்னும், அம் மகிமையினின்றும்
ज्यायान्	𑌜𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍	மிக மேம்பட்டோனவன்
उत	𑌉𑌤	மற்றும்,
अमृतत्वस्य	𑌅𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯	தேவத் தன்மைக்கு
ईशानः	𑌈𑌶𑌾𑌨𑌃	மாயை வாயிலாக இறைவனவன்.
यत्	𑌯𑌤𑍍	(யாதினாலெனின்?)
अन्नेन	𑌅𑌨𑍍𑌨𑍇𑌨	சீவர்களின் பயனாகிய நிமித்தத்தால்
अतिरोहति	𑌅𑌤𑌿𑌰𑍋𑌹𑌤𑌿	காரணமாய் நிற்கும் நிலைமையை விட்டு உலகமாந் தன்மையை யடைகின்றனன், ஆதலின் என்க.

* रातावानस्य, † अतो ज्यायां என இருக்கும், எசுரு மோதுகின்றது.

சாயண பாடியம்

கண்டம்—4. இருக்கு—6.

சென்ற காலத்திலிருந்ததும், நிகழ் காலத்திலிருக்கின்றதும், வருங் காலத்தி லுண்டாகுவதுமாய உலகம் முதலியவற்றிற்கு, யாதொரு ஆதாரனுதற் றன்மையுண்டோ, அது முதலிய வனைத்துமே இப்பரம புருடனுடைய ஆற்றல் விசேடமாம். அவனுடைய உண்மை வடிவமன்று. உண்மையாகிய புருடனே, அந்த மகிமைகளி னின்றும் மிக வியப்பானவன் என்பது பொருள். மற்றும், தனது மாயையால் தேவத் தன்மைக்கு இறைவனுவான் என்க. எக் காரணத்தால் பிராணிகளின் போக்கிய வடிவ அன்னமென்னு நிமித்தத்தால் காரணமாய் நிற்கும் தனது அவத்தையை விட்டு, காணப்படும் உலகமாகின்ற அவத்தையை யடைகின்றானே, அக் காரணத்தால், பிராணிகளினுடைய கரும போகத்தின் பொருட்டு, உலகமாய் நிற்குமவத்தை யுடன்பாடாதலின், இது அவனுடைய உண்மை நிலை அன்றென்பதுணர்க. (6)

மந்திரம் 7.

१ २ ३ १ २ ३ २ ३ २ ३ १२
621. ततो विराडजायत विराजो अधि पूरुषः ।
२ ३१र २र ३२उ ३१ २ ३२
स जातो अत्यरिच्यत पश्चाद्भूमिमथो पुरः ॥ ७ ॥

இருக்கு 10-6-5.

ததோ விராடஜாயத விராஜோ அதி பூருஷ꞉ |
ஸ ஜாதோ அத்யரிச்யத பஶ்சாத்பூமிமதோ புர꞉ ||

அந்வயம்.

ततः, विराट्, अजायत, विराजो अधि, पूरुषः, जात, सः, अत्यरिच्यत, पश्चात्, भूमिं, अथो, पुरः ॥

பதவுரை.

ततः	தத꞉	அவ் வாதிபுருடனினின்று
विराट्	விராட்	பிரமாண்டமாகிய வுடம்பு
अजायत	அஜாயத	உண்டானது.
विराजो अधि	விராஜோ அதி	விராட், என்னும் அத்தேகத்தின் கண்
पूरुषः	பூருஷ꞉	பரபுருடன் உள்ளவாறு தோன்றினன்.

जातः सः	ஜாதஃ ஸஃ	உற்பன்னமாகிய அப் புருடன்
अत्यरिच्यत	அத்யரிச்யத	விராட்டினின்றும் வேறான தேவ, மனுட பட்சிகளாயினன்.
पश्चात्	பஶ்சாத்	பின்னர்,
भूमिं	பூமிம்	பூமியை யுண்டாக்கினன்.
अथो	அதோ	பூமியை யுண்டாக்கிய பின்னர்
पुरः	புரஃ	பிராணிகளின் தேகத்தை யுண்டாக்கினன்.

சாயணபாடியம்.

கண்டம்—4. இருக்கு—7.

இக் கண்டத்தின் நான்காவது மந்திரத்திற் கூறிப்போந்த "பல்லுருவாய் வியாபித்தனன்" என்னும் பொருளே ஈண்டும் விரிக்கப்படுகின்றது:— அப் பரம புருடனிடத்தின்று விராட்டென்னும் பிரமாண்டமாகிய வுடம்பு உண்டானது. பலவகைப் பொருள்கள் இதில் விளங்கப்படுதலின் இது விராட் எனப்பட்டது. பின்னர், விராட்டென்னு அந்தத் தேகத்தையே அதிகரணமாக்கிக்கொண்டு அவ்வுடம்பை அபிமானிப்பவனாகிய ஒரு புருடன் றோன்றினன். வேத முடிகளனைத்தானு முணரப்படும் அத்தகைய இவனே பரமான்மாவாவன். அவனே பல வுருவமாய்ப் புகுந்து பிரமாண்டத்தை யபிமானிக்கும் தேவதையாகிய சீவான்மாவும் ஆயினன். இவைகள் அதர்வண வேதத்தினுடைய உத்தரதாபநீய வுபநிடதத்தில் மிக வெளிப்படையாய்க் கூறப்படுகின்றன" அஃது வருமாறு:—அத்தகைய இவன் மாயையினாலே பூதங்களையும், இந்திரியங்களையும், விளங்குகின்ற தேவதைகளையும், கோசங்களையுஞ் சிருட்டித்துப் புகுந்துகொண்டு, மூடன், மூடன், (சீவன் சீவன்) என வழங்கப்பட்டிருக்கின்றனன்" என்பதாம். உண்டாகிய அவ் விராட் புருடன், விராட்டினும் வேறான, தேவர், மனிதர், விலங்கு முதலியவைகளாயினன். தேவர்கள் முதலிய சீவத்தன்மையை யடைவதன் முன்னர் பூமியை யுண்டாக்கினன். ஈண்டுப் பூமியை யுண்டாக்கினன் என்பது எஞ்சி நின்றது, பூமியை யுண்டாக்கிய பின்னர் அவர்களுடைய தேகங்களை யுண்டாக்கினன். எழுவகைத் தாதுக்களால் நிறைந்திருத்தலின் உடம்பு புரியெனப்பட்டது. (7)

மந்திரம் 8.

१ २ ३ १ २ ३ १र २र ३ १ २ ३ १र २र

622. *मन्ये वां द्यावापृथिवी सुभोजसौ ये अप्रथेथाममितमभियोजनम् ।

१ २ ३ १ २ ३ १र २र ३ १ २

द्यावापृथिवी भवतंं स्योने ते नो मुञ्चतमंंहसः ॥ ८ ॥

அதர்—4-26-1.

மந்யே வாம் த்யாவாப்ருதிவீ ஸுபோஜஸௌ யே அப்ரதேதாமமித [மபியோஜநம் |

த்யாவாப்ருதிவீ பவதம் ஸ்யோநே தே நோ முஞ்சதமம்ஹஸ: ||

அந்வயம்.

हे द्यावापृथिवी! वां, सुभोजसौ, मन्ये, अमितं, योजनं, अभ्यप्रथेथां,

हे द्यावापृथिवी!, स्योने, भवतं, ये ते, नः, अंहसः, मुञ्चतम् ॥

பதவுரை.

हे द्यावापृथिवी!	ஹே த்யாவாப்ருதிவீ!	வானுலக மண்ணுலகங்களின் தேவதைகாள்!
वां	வாம்	உங்களிருவரையும்
सुभोजसौ	ஸுபோஜஸௌ	எம்மை இனிது பாதுகாக்கத் தக்கார்களென
मन्ये	மந்யே	யான் உணர்கின்றேன்.
अमितं	அமிதம்	(நீவிர்) அளவற்ற
योजनं	யோஜநம்	தன முதலியவைகளை
अभ्यप्रथेथां	அப்யப்ரதேதாம்	யாண்டும் விருத்தி பண்ணுவீர்களாக.
हे द्यावापृथिवी!	ஹே த்யாவாப்ருதிவீ!	வானுலக மண்ணுலகங்களின் தேவர்காள்! (நீவிர் எமக்கு)
स्योने	ஸ்யோநே	சுக வடிவர்களாக
भवतं	பவதம்	ஆவீர்களாக.
ये ते	யே தே	எவ் வானுலக மண்ணுலகங்கள் உள்ளனவோ, அவைகள்
नः	ந:	எங்களைப்
अंहसः	அம்ஹஸ:	பாவங்களினின்றும்
मुञ्चतं	முஞ்சதம்	விடுவிப்பன வாகுக.

* मन्ये वांद्यावा........मभिता योजनानि प्रतिष्ठे ह्यभवतं वसूनां ते नो என்பது அதர்வணம்.

சாயண பாடியம்.

கண்டம்—3. இருக்கு—8. வாமதேவர் ரிஷி.

வானுலக மண்ணுலகங்கட்கு அபிமானிகளான தேவர்காள்! உங்களிருவரையும் இனிது எம்மைப் பரிபாலிக்கத் தக்கவர்களென யானுணர்கின்றேன். வானுலக மண்ணுலகங்களுக்குரிய தேவர்காள்! நீவிர் அளவற்ற தன முதலியவைகளை மிக விருத்தி பண்ணுவீர்களாக. வானுலக மண்ணுலகங்களின் தேவர்காள்! நீவிர் எங்களுடைய சுக காரியத்தில் தோற்றுவீர்களாக. அவ் வானுலக மண்ணுலகங்களின் தேவர்கள் எங்களைப் பாவங்களினின்று நீக்குவார்களாக என்பதாம். (௮)

குறிப்பு.—யோஜனம், என்பது தனம்.

மந்திரம் 9.

१२ ३ १२ ३ १ २ ३ २ ३ १२

623. हरी त इन्द्र श्मश्रूण्युतो ते हरितौ हरी ।

१ २ ३ १२ ३ १ २ ३ १ २

तन्त्वा स्तुवन्ति कवयः पुरुषासो वनर्गवः ॥ ९ ॥

ஹரீ த இந்த்ர ஶ்மஶ்ரூண்யுதோ தே ஹரிதௌ ஹரீ |

தந்த்வா ஸ்துவந்தி கவய꞉ புருஷாஸோ வநர்கு³வ꞉ ||

அந்வயம்.

हे इन्द्र !, ते, श्मश्रूणि, हरी, उतो, ते, हरी, हरितौ, वनर्गवः, कवयः, पुरुषासः, तं, त्वा, स्तुवन्ति ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே !
ते	தே	உனது
श्मश्रूणि	ஶ்மஶ்ரூணி	மீசை தாடிகள்
हरी	ஹரீ	பச்சைநிற முடையனவாம்.
उतो	உதோ	மற்றும்,
ते	தே	உன்னுடைய
हरी	ஹரீ	குதிரைகள்
हरितौ	ஹரிதௌ	பச்சைநிற முடையவைகள்.
वनर्गवः	வநர்குவ꞉	கோக்களிடத்து, அல்லது, மறைமொழிகளின் கண் அன்புள்ள
कवयः	கவய꞉	நுண்ணுணர் வுடையோர்களான

पुरुषासः	புருஷாஸ:	புருடர்கள்,
तं	தம்	கீர்த்தியுள்ள, அத்தகைய
त्वा	த்வா	உன்னைத்
स्तुवन्ति	ஸ்துவந்தி	துதிக்கின்றார்கள்.

சாயணபாடியம்.

கண்டம்—4. இருக்கு—9.

உன்னுடைய வீசைகளுந் தாடிகளும் சோமரச மருந்தலாற் பச்சை நிறமுடையனவாம். அவ்வாறே, "இந்திரனது தாடி வீசைகள் பச்சை நிறங்களால் மூடியுள்ளன" என மறையுங் கூறுகின்றது. மற்றும், உன்னுடைய குதிரைகளும் பச்சை நிறமுடையனவாம். கோக்களை வழிபடுகின்ற மேதாவிகள், அல்லது, மறைமொழியி லன்புள்ள மேதாவிகள் என்னும் புருடர்கள்; அத்தகைய உன்னைத் துதிக்கின்றார்கள் என்பதாம். இம்மந்திரம் அதர்வணத்திற் சிறிது பாடபேதத்தை யுடையது. (9)

மந்திரம் 10.

२उ३ १ २ ३ २ ३ २ ३ १ २ ३ २
624. यद्वर्चो हिरण्यस्य यद्वा वर्चो गवामुत ।
३ २ ३ १ २ ३ २ ३ १ २ ३ १ २
सत्यस्य ब्रह्मणो वर्चस्तेन मा सꣳसृजामसि ॥ १० ॥

யத்வர்சோ ஹிரண்யஸ்ய யத்வா வர்சோ கவாமுத ।
ஸத்யஸ்ய ப்ரஹ்மணோ வர்சஸ்தேந மா ஸꣳஸ்ருஜாமஸி ॥

அந்வயம்.

हिरण्यस्य, यत्, वर्चः, वा, गवां, यत्, वर्चः, उत, सत्यस्य, ब्रह्मणः, वर्चः तेन, मां, संसृजामसि ॥

பதவுரை.

हिरण्यस्य	ஹிரண்யஸ்ய	இனியது செய்யும் இரமணீய தனத்திற்கு
यत्	யத்	யாதொரு
वर्चः	வர்ச:	காந்தியுண்டோ,
वा	வா	மற்றும்,
गवां	கவாம்	கோக்கட்கு
यत्	யத்	யாதொரு

वर्चः	வர்சஃ	காந்தியுண்டோ,
उत	உத	இன்னும்
सत्यस्य	ஸத்யஸ்ய	உண்மையாகிய
ब्रह्मणः	ப்ரஹ்மணஃ	வேதத்திற்கு, அல்லது, பிரமத்திற்கு
वर्चः	வர்சஃ	யாதொரு காந்தியுண்டோ,
तेन	தேந	அதனோடு (அவைகளை)
मा	மா	எம்மை (யாம்)
संसृजामसि	ஸம்ஸ்ருஜாமஸி	கூட்டுமாறு (அடையுமாறு) வேண்டுகின்றோம்.

சாயணபாடியம்.

கண்டம்—4. இருக்கு—10. வாமதேவ ரிஷி.

இனியதைச் செய்யும் இரமணீயமென்னுந் திருநாமமுள்ள தனத்திற்கு யாதொரு காந்தி யிருக்கின்றதோ, அல்லது, இப் பெயருள்ள கோக்கட்கு யாதொரு காந்தி யுண்டோ, மற்றும், அனைவராலும் உடன்பட்ட பிரமத்திற்கு யாதொரு, சாந்தியுண்டோ அவைகளோடு கூடுமாறு (அவைகளை யடையுமாறு) வேண்டுகின்றோம். யாங்கள் தனமுடையோர்களாயும், கோக்களுடையோர்களாயும், கல்வி யுடையோர்களாயும் ஆவோமாக என்பது உட்கிடை. (10)

மந்திரம் 11.

२३ १२ ३ २ ३ २ ३क   २३ १ २

625. सहस्तन्न इन्द्र दद्ध्योज ईशे ह्यस्य महतो विरप्शिन् ।

२ ३ १ ३ १र   २र ३ १ २ ३ २३ १ २ ३ १ २

क्रतुन्न नृम्णꣳ स्थविरञ्च वाजं वृत्रेषु शत्रून्त्सहना कृधी नः ॥

ஸஹஸ்தந்ந இந்த்ர தத்த்யோஜ ஈஶே ஹ்யஸ்ய மஹதோ விரப்ஶிந் ।
க்ரதுந்ந ந்ருமணꣳ ஸ்தவிரஞ்ச வாஜம் வ்ருத்ரேஷு ஶத்ரூந்த்ஸஹநா [க்ருதீ நஃ ॥

அந்வயம்.

हे विरप्शिन्!, इन्द्र!, सहः, तत्, ओजः, नः, दद्धि, हि, अस्य, महतः, ईशे, नः, क्रतुं न, नृम्णं, च, स्थविरं, वाजं, कृधि, नः, शत्रून्, वृत्रेषु, सहना ॥

பதவுரை.

हे विरप्शिन्!	ஹே விரப்ஶிந்!	துதிப்போர்கட்கு ஆசி மொழி கூறுவோய்!
इन्द्र!	இந்த்ர!	இந்திரனே!
सहः	ஸஹ:	பகைவரை யடக்குதற் குரிய
तत्	தத்	அத்தகைய கீர்த்தியுள்ள
ओजः	ஓஜ:	(உனது) ஆற்றலை,
नः	ந:	எங்கட்குக்
दद्धि	தத்தி	கொடுப்பாயாக.
हि	ஹி	ஏனெனின்? நீ
अस्य महतः	அஸ்ய மஹத:	இப் பேராற்றலுக்கு
ईशे	ஈஶிஷே	இறைவனாகின்றாய். ஆதலின் என்க.
नः	ந:	(மற்றும்) எங்கட்கு
क्रतुं न	க்ரதும் ந	வேள்வியைப் போன்று
नृम्णं	ந்ரும்ணம்	தனத்தையும்
च	ச	மற்றும்,
स्थविरं	ஸ்தவிரம்	மிகப் பெரிய
वाजं	வாஜம்	வன்மையையும்
कृधि	க்ருதி	(உண்டாகச்) செய்வாயாக. அவ்வாறே,
नः	ந:	எங்களுடைய
शत्रून्	ஶத்ரூந்	சத்துருக்களை வாட்டுதற்குரிய
वृत्रेषु	வ்ருத்ரேஷு	உபாயங்களைத்தேடும் விஷயத்தில்
सहना	ஸஹநா	அநுகூலஞ் செய்வாயாக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—11.

இனிய ஆசிமொழி கூறும் இந்திர! பகைவர்களை யடக்கத்தக்க உனது ஆற்றலை எங்கட்குக் கொடுப்பாயாக. யாதினாலெனின்? நீ, இப் பேராற்றலுக்கு இறைவனாகின்றா யாதலி னென்க. இந்திர! நீ எங்கட்கு வேள்வியைப் போல் தனத்தையும், மிகச் சிறந்த வலிப் பெருக்கையுங் கொடுப்பாயாக. மற்றும், எங்களுடைய சத்துருக்களை யடக்கு முபாய விஷயத்தில் எமக்கு அநுகூலஞ் செய்வாயாக. (சத்துருவை யடக்கத்தக்க உபாயத்தைச் செய்வாயாக என்பதாம்.) (11)

விசேடமாய் வெளிப்பட்ட ஆசிமொழி யுடையான் 'விரப்சீ' எனப் படுவன்,

மந்திரம் 12.

३१२ ३१२ ३२३ १ २ ३ २ ३ १ २

626. सहर्षभाः सहवत्सा उदेत विश्वा रूपाणि बिभ्रतीर्द्व्यूध्नीः ।

३२ ३२३१ २ ३ २ ३१र २र ३ २ ३१ २

उरुः पृथुरयं वो अस्तु लोक इमा आपस्सुप्रपाणा इहस्त ॥ १२ ॥

ஸஹர்ஷபா: ஸஹவத்ஸா உதேத விஶ்வா ரூபாணி பிப்ரதீ
[ர்த்வ்யூத்னீ: ।

உரு: ப்ருதுரயம் வோ அஸ்து லோக இமா ஆபஸ்ஸுப்ரபா
[ணா இஹஸ்த ॥

அந்வயம்.

(हे गावः !,) विश्वा, रूपाणि, बिभ्रतीः, सहर्षभाः, सहवत्साः, द्व्यूध्नीः, उदेत, उरुः, पृथुः, अयं, लोकः, वः, अस्तु, इह, इमाः आपः, सुप्रपाणाः स्त ॥

பதவுரை.

(हे गावः !)	(ஹே காவ: !)	(கோக்களே ! நீங்கள்)
विश्वा	விஶ்வா	எல்லா
रूपाणि	ரூபாணி	உருவங்களையும்
बिभ्रतीः	பிப்ரதீ:	தாங்கிக் கொண்டவர்களாயும்
सहर्षभाः	ஸஹர்ஷபா:	இடபங்களோடு கூடினவர்களாயும்
सहवत्साः	ஸஹவத்ஸா:	கன்றுடன் கூடினவர்களாயும்
द्व्यूध्नीः	த்வ்யூத்னீ:	இருவகையான மடிகளையுடையவர்களாயும்
उदेत	உதேத	திருவுடையர்களாயும் வருவீர்களாக.
उरुः	உரு:	நீண்டு
पृथुः	ப்ருது:	விரிந்துள்ள
अयं लोकः	அயம் லோக:	இவ்வுலகம்
वः	வ:	உங்கணிமித்தமாய்
अस्तु	அஸ்து	ஆகுக.
इह	இஹ	இப் பூமியில்
इमा आपः	இமா ஆப:	இந்த நீர்
सुप्रपाणाः	ஸுப்ரபாணா:	இன்புடன் மிக அருந்தத் தக்கதாய்
स्त	ஸ்த	இருக்குக.

சாயண பாடியம்.

கண்டம்—4. இருக்கு—12.

இடங்களோடும், கன்றுகளோடுங் கூடின கோக்களே! நீங்கள் காலை மாலைகளில் இருவகை மடிகளையுடையவர்களாயும், பலவகை வடிவங்களை யுடையவர்களாயுமாகி, ஐசுவரியங்களை நிறையக்கொண்டு வருவீர்களாக. இன்னும், மிக விரிந்த இவ்வுலகம் உங்களுடையதாக இருக்குக. இந்த நீர் இப்பூமியில் (இவ்விடத்தில்) இனிது பாதுகாக்கத் தக்கதாகுக. அதாவது நீங்க ளித்தன்மையராய்த் தழைத்தோங்கி வாழ்வீர்களாக என்பதாம். (12)

குறிப்பு—ஈண்டு மூலத்தில், உரு, பிருது, என்னும் இருசொற்களாலும் நீளம், விரிவு, கூறப்பட்டன.

நான்காவது கண்டம்.

முற்றும்.

ஐந்தாவது கண்டம்.

பிரபாடகம்—6. அத்தியாயம்—6. கண்டம்—5.

பதிநான்கு மந்திரங்களாலானது.

தேவதைகள் :—1, அக்கினி. பவமானம், சோமம். 2, சூரியன். சந்தம்:—2, சகதி. 3, திருஷ்டுப். 1, 4, 14, காயத்திரி. சுரம் :—1, நிஷாதம். 3, தைவதம். 1, 4, 14, ஷட்சம். இருடிகள் ஆண்டாண்டுக் கூறப்படுவார்கள்.

மந்திரம் 1.

२ ३ १ २ ३ २ ३ २ १२
627. अग्न आयूꣳषि पवस आसुवोर्जमिषञ्च नः ।
३१ २ ३१२
आरे बाधस्व दुच्छुनाम् ॥ १ ॥

இருக்கு 9-66-9.

𑌅𑌗𑍍𑌨 𑌆𑌯𑍂𑌂𑌷𑌿 𑌪𑌵𑌸 𑌆𑌸𑍁𑌵𑍋𑌰𑍍𑌜𑌮𑌿𑌷𑌂 𑌚 𑌨𑌃 ।
𑌆𑌰𑍇 𑌬𑌾𑌧𑌸𑍍𑌵 𑌦𑍁𑌚𑍍𑌛𑍁𑌨𑌾𑌮𑍍 ॥

அந்வயம்.

हे अग्ने!, आयूंषि, पवसे, नः, ऊर्जं, च, इषं, आसुव, दुच्छुनां, आरे, बाधस्व ॥

பதவுரை.

हे अग्ने!	𑌹𑍇 𑌅𑌗𑍍𑌨𑍇!	பவமானமாகிய அக்கினியே! நீ
आयूंषि	𑌆𑌯𑍂𑌂𑌷𑌿	எமது, ஆயுட்களை, அல்லது, அன்னங்களை
पवसे	𑌪𑌵𑌸𑍇	விருத்தி பண்ணுகின்றாய்.
नः	𑌨𑌃	எங்களுடைய
ऊर्जं	𑌊𑌰𑍍𑌜𑌂	அன்னரசத்தாலுண்டாகும் வன்மையையும்
च	𑌚	மற்றும்,
इषं	𑌇𑌷𑌂	அன்னத்தையும்
आसुव	𑌆𑌸𑍁𑌵	ஒருமுகமாய் ஏவுவாயாக.
दुच्छुनां	𑌦𑍁𑌚𑍍𑌛𑍁𑌨𑌾𑌂	தீயதான நாயைப் (தூரத்துவது) போன்று இராக்கதர்களைத்
आरे	𑌆𑌰𑍇	தூரமாகவே
बाधस्व	𑌬𑌾𑌧𑌸𑍍𑌵	வருத்தப்படுத்துவாயாக(ஒதுக்குவாயாக.)

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—1. வைகாநசர் ரிஷி.

சோமமாகிய அக்கினியே! நீ, எங்களுடைய ஆயுட்களை, அல்லது, இப் பெயருள்ள அன்னங்களை விருத்தி பண்ணுவாயாக. அதாவது அன்னரசமும் (வன்மையும்) அன்னமும் ஒருமுகமாய் எங்கட்கு, வருமாறு செய்வாயாக என்பதாம். மற்றும், எங்களினின்று இராக்கதர்களைத் தூரமாகவே (நிற்குமாறு) பீடிப்பாயாக என்பதாம். (1)

ஈண்டு, மூலத்தில் 'துச்சுநாம்' என்பது இராக்கதர் பெயராம்.

மந்திரம் 2.

३ २ ३१ २ ३ २र ३१२ ३१२ ३ १ २

628. विभ्राड् बृहत्पिबतु सोम्यं मध्वायुर्दधद्यज्ञपतावविहुतम् ।

१२ ३ १ २ ३१२ ३ १ २ ३ १ २ ३ १र २र

वातजूतो यो अभिरक्षति त्मना *प्रजाः पिपर्त्ति बहुधा विराजति॥

இருக்கு 10-107-1, யஜுர் 33-30.

விப்ராட் ப்ருஹத்பிபது ஸோம்யம் மத்வாயுர்தததத்யஜ்ஞபதாவவி
[ஹ்ருதம் ।

வாதஜூதோ யோ அபிரக்ஷதி த்மநா ப்ரஜாஃ பிபர்த்தி பஹுதா
[விராஜதி ॥

அந்வயம்.

विभ्राड्, यज्ञपतौ, अविहुतं, आयुः, दधत्, सोम्यं, बृहत्, मधु, पिबतु,

यः, वातजूतः, त्मना, अभिरक्षति, प्रजाः, पिपर्त्ति, बहुधा विराजति ॥

பதவுரை.

विभ्राड्	விப்ராட்	விசேடமாய்ப் பிரகாசிக்குஞ் சூரியன்,
यज्ञपतौ	யஜ்ஞபதௌ	வேள்வித் தலைவன் விஷயத்தில்
अविहुतं	அவிஹ்ருதம்	இடையூறின்றிய
आयुः	ஆயுஃ	ஆயுளை, அல்லது, அன்னத்தை
दधत्	ததத்	நிலைநாட்டியபின்
सोम्यं	ஸோம்யம்	சோமத்தினாலாகிய
बृहत्	ப்ருஹத்	சிறந்த
मधु	மது	மதுவை
पिबतु	பிபது	அருந்துவானாக.
यः	யஃ	யாதொரு சூரியன்
वातजूतः	வாதஜூதஃ	இராசிச் சக்கரத்தைச் செலுத்தும் வாயுவாற் செலுத்தப் பெற்றோனாய்,
त्मना	த்மநா	தானாகவே
अभिरक्षति	அபிரக்ஷதி	கிரணத்தால் உலகனைத்தையுங் காப்பாற்றுகின்றானோ,

* प्रजाः पुपोष, என்பது இருக்கு.

प्रजाः	ப்ரஜா꞉	பிரசைகளை
पिपर्ति	பிபர்த்தி	மழை முதலியவைகளால் வலுப்படுத்துகின்றானே,
बहुधा	பஹுதா	பலவகைப் பட்டு
विराजति	விராஜதி	விசேடமாய் விளங்குகின்றானே, (அச் சூரியன் அருந்துவானாக என முடிக்க)

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—2.

இது விப்ராணன் என்னுஞ் சூரிய புத்திரன் கண்டதாம். இதுவே ரிஷியா மெனத்தோன்றுகின்றது. விசேடமாய்ப் பிரகாசிக்கின்ற அச்சூரியன், சோமரசமுடைய சிறந்த மதுவை அருந்துவானாக. என் செய்து கொண்டெனின்? வேள்வித் தலைவன் விஷயத்தில் தடையற்ற ஆயுளை, அல்லது, அன்னத்தை விருத்தி செய்து கொண்டு அருந்துவானாக. யாதொரு சூரியன் வாயுவினாற் செலுத்தப்பட்டு, தானாகவே உலகனைத்தையும் பாதுகாக்கின்றானே, (இராசிச்சக்கரம் வாயுவினாற் செலுத்தப்படுதலின் சூரியனுக்கும் வாயுவினாற் செலுத்தப்பட்டதன்மையாமென்க) சிறப்பாய்ப் பிரகாசிக்கின்ற அச்சூரியன், மழை முதலிய வற்றைக் கொடுக்குந் தன்மையாற் பிரசைகளைப் போஷிக்கின்றான், அல்லது, பரிபாலிக்கின்றான் என்பதாம். (2)

மந்திரம் 3.

३ २ ३ २ ३ १२ ३१ २ ३ १ २ ३२ ३ १२ ३ २
629. चित्रं देवानामुदगादनीकं चक्षुर्मित्रस्य वरुणस्याग्नेः ।
२ ३ १ २ ३ २ ३ १ २ ३ १ २ ३ १२ २२ २ ३ १
आप्रा द्यावापृथिवी अन्तरिक्षꣳ सूर्य आत्मा जगतस्तस्थुषश्च ॥

இருக்கு 1-11-51.

சித்ரம் தேவாநாமுதகாதநீகம் சக்ஷுர்மித்ரஸ்ய வருணஸ்யாக்நே꞉।
ஆப்ரா த்யாவாப்ருதிவீ அந்தரிக்ஷம் ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்து
[ஷஸ்ச ॥

அந்வயம்.

देवानां, अनीकं, मित्रस्य, वरुणस्य, अग्नेः, चक्षुः, चित्रं, उदगात्, द्यावापृथिवी, अन्तरिक्षं, आप्राः, सूर्यः, जगतः, च, तस्थुषः, आत्मा ॥

பதவுரை.

देवानां	𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂	தேவர்களுடைய, அல்லது, கிரணங்களினுடைய
अनीकं	𑌅𑌨𑍀𑌕𑌂	ஒளிப்பிழம்பானதும்,
मित्रस्य	𑌮𑌿𑌤𑍍𑌰𑌸𑍍𑌯	மித்திர தேவதைக்கும்
वरुणस्य	𑌵𑌰𑍁𑌣𑌸𑍍𑌯	வருணனுக்கும்
अग्नेः	𑌅𑌗𑍍𑌨𑍇𑌃	அக்கினிக்கும்
चक्षुः	𑌚𑌕𑍍𑌷𑍁𑌃	நேத்திரமானதும்,
चित्रं	𑌚𑌿𑌤𑍍𑌰𑌂	வியப்பைத் தரத்தக்கதுமாகிய சூரிய மண்டலம்
उदगात्	𑌉𑌦𑌗𑌾𑌤𑍍	உதயமாகி
द्यावापृथिवी	𑌦𑍍𑌯𑌾𑌵𑌾𑌪𑍃𑌥𑌿𑌵𑍀	வானுலக மண்ணுலகங்களையும்,
अन्तरिक्षं	𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂	அந்தரிக்ஷத்தையும்.
आप्राः	𑌆𑌪𑍍𑌰𑌾𑌃	தன் கிரணத்தாற் பூரணமாக்கிக் கொண்டு
सूर्यः	𑌸𑍂𑌰𑍍𑌯𑌃	அத்தகைய இரவி
जगतः	𑌜𑌗𑌤𑌃	சங்கமப் பொருள்கட்கும்
च	𑌚	மற்றும்,
तस्थुषः	𑌤𑌸𑍍𑌥𑍁𑌷𑌃	தாவரப் பொருள்கட்கும்
आत्मा	𑌆𑌤𑍍𑌮𑌾	ஆன்மாவானது.

சாயணபாடியம்.

கண்டம்—5. இருக்கு—3. குச்ச ரிஷி.

கிரணங்களினுடைய, அல்லது, பிரசித்தியான தேவர்களுடைய பிரபைகளின் சமுதாயமானதும், வியப்பைத்தரத்தக்கதுமாகிய சூரிய மண்டலம், உதயாசலத்தை அடைந்தது. அஃது எத்தன்மையதெனின்? மித்திர தேவதை, வருண தேவதை, அக்கினி தேவதைகள் என்னு மிவர்ளின் நேத்திரமாம். இஃது உபலக்கணம், இதனுல் உபலட்சிதமான உலகங்களை விளக்குகின்ற நேத்திரம் போன்றதாமென்க. அல்லது, இந்திரியம் போன்றதாமெனினுமாம். மற்றும், உதயமாகி, வானுலகையும், அந்தரிக்ஷ உலகையும், மண்ணுலகையும் தனது கிரணத்தால் முழுதும் பூரணமாக்குகின்றது. இத்தன்மையாகிய மண்டலத்தின் நடுவிலுள்ள சூரியன், அந்தரியாமியாந்தன்மையால் அனைத்தையுஞ் செலுத்தும் பரமான்மா வாகின்றுன். ஜங்கமப் பொருட்கும், தாவரப் பொருட்கும் ஆன்மாவு மாவன். அதுவே தாவர ஜங்கமங்களாகிய காரிய வர்க்க மனைத்திற்கும் வடிவாம். காரணத்தினின்றுங் காரியம் வேருகாது. அவ்வாறே "தோன்றிய சப்த முதலியவைகளினின்று அஃது அன்னிய மாகா" என்பது (வியாச) இருடியாற் செய்யப்பட்ட

சூத்திரமுங் கூறுகின்றது. அல்லது தாவர, சங்கம வடிவம் என்றதற்கு, எல்லாப் பிராணிகளின் சமுதாயத்திற்குச் சீவான்மா என்பது பொருளாம். சூரியன் உதித்தபோது இரவில் இறந்தன போன்றுள்ள உலகனைத்தும், மறித்துஞ் சேதனத்தோடு கூடியதாய்க் காணப்படுகின்றன. அங்ஙனமே, "யாதொன்று இது இருளைப் போக்குகின்றது, எல்லா வற்றிற்கும் உயிர்களைக் கொடுத்துக்கொண்டு உதயமாகின்றது" என மறையுங் கூறுகின்றது என்பதாம். (3)

மந்திரம் 4.

१र २र ३ ३ १३ २ १२ ३२
630, आयङ्गौः पृश्निरक्रमीदसदन्मातरं पुरः ।
३ १२ ३ १ २
पितरं च प्रयन्त्स्वः ॥ ४ ॥

யஜுர் 3-6.

ஆயங்கௌ: ப்ருஶ்நிரக்ரமீத³ஸத³ந்மாதரம் புர: ।
பிதரம் ச ப்ரயந்த்ஸ்வ: ॥

அங்வயம்.

गौः, पृश्निः, अयं, आ अक्रमीत्, पुरः, मातरं, असदत्, पितरं, च, प्रयन्, स्वः ॥

பதவுரை.

गौः	கௌ:	செல்லுஞ் சீலமுள்ளதும்
पृश्निः	ப்ருஶ்நி:	ஒளியால் வியாபிக்கப் பெற்றது மாகிய
अयं	அயம்	இச் சூரியன்
आ अक्रमीत्	ஆ அக்ரமீத்	உதயாசலத்தை வளைந்து கொண்டனன். பின்னர்,
पुरः	புர:	கிழக்குத் திக்கில்
मातरं	மாதரம்	உயிர்களை யுண்டாக்கும் பூமியை
असदत्	அஸத³த்	அடைந்துகொண்டிருக்கின்றனன். பின்னர்
पितरं	பிதரம்	பரிபாலிக்கின்ற விண்ணுலகையும்
च	ச	அந்தரிக்ஷத்தையும்
प्रयन्	ப்ரயந்	அடைகின்றவனும்,
स्वः	ஸ்வ:	அழகிய போக்குடையவனுமாகின்றான்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—4. சார்ப்பராக்ஞி ரிஷி.

செல்லுஞ் சீலமுடையவனும், ஒளி நிறைந்தவனுமாகிய இச் சூரியன், உதயாசலத்தை யடைந்து விட்டனன். அடைந்து, கிழக்குத் திக்கில் எல்லாப் பிராணிகளேயும் நிருமாணஞ் செய்யும் பூமியையும் அடைந்தனன். பின்னர், பரிபாலிக்கும் விண்ணுலகையும் அடைந்தனன். விண்ணுலகையும் என்ற உம்மையால் அந்தரிக்ஷமுங் கொள்ளற்பாலதாம். இனிது விரைவிற் செல்கின்ற அழகிய போக்குடையவனுகின்முன். அல்லது, விண்ணுலகைச் செலுத்துகின்றனன் என்பதாம். (4)

மந்திரம் 5.

३ १२ ३ २र ३ १२ ३ २

631. अन्तश्चरति रोचनास्य प्राणादपानती ।

२र ३ १ २र

व्यख्यन्महिषो दिवम् ॥ ५ ॥

இருக்கு 1-189-2.

அந்தஶ்சரதி ரோசநாஸ்ய ப்ராணாதபாநதீ ।
வ்யக்யந்மஹிஷோ திவம் ॥

அங்வயம்

अस्य, रोचना, अन्तः, प्राणात्, अपानती, चरति, महिषः, दिवं, व्यख्यत् ॥

பதவுரை.

अस्य	அஸ்ய	இச் சூரியனுடைய
रोचना	ரோசநா	கிரணம்
अन्तः	அந்த:	உடம்பினுள்,
प्राणात्	ப்ராணாத்	முக்கியப் பிராணிகளினுடைய ஐந்து விருத்திகளினின்று நாடிவாயிலாக வாயுவை மேலே கொண்டுபோய்,
अपानती	அபாநதீ	அவ் வாயுவை நாடிவாயிலாகக் கீழ்முக மாக்குகின்றது.
चरति	சரதி	உடம்பிற்குட்பிராணவடிவாய் நிற்கும் ஒளியையுடைய
महिषः	மஹிஷ:	மகானுகிய சூரியன்
दिवं	திவம்	அந்தரிக்ஷத்தைப்
व्यख्यत	வ்யக்யத்	பிரகாசிப்பிக்கின்முன்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—5. சார்ப்பராக்ஞி ரிஷி.

இச் சூரியனுடைய ஒளியானது, உடம்பின் நடுவில் முக்கியப் பிராண வடிவாயிருக்கின்றது. என் செய்துகொண்டிருக்கின்றதெனின்? முக்கியப் பிராணனுக்கு, பிராணன் அபானன் முதலிய ஐந்து விருத்திகளாம். அவற்றுள், பிராணன் றன்மையோ? நாடிகளால் மேலே வாய்வு எழுதலாம். அத்தன்மைய பிராணனுக்கு பின்னர், அபானன் தன்மையோ? நாடிகளால் வாயுவைக் கீழ்முகமாய்க் கொண்டுவருதலாம். என்னுமிதைச் செய்துக் கொண்டிருக்கின்றது என்க. அல்லது, வானிற்குந் தரைக்கும் நடுவில் இச் சூரியனுடைய காந்தி செல்கின்றது. என்செய்து கொண்டெனின்? உதயத்தின் பின்னர் மாலையில் அத்தமிக்கின்றது (ஒடுங்குகின்றது) என்னும் இத்தன்மைய காந்தியோடு கூடியதா யுதித்தொடுங்கிக்கொண்டு செல்கின்றது. இதுபற்றியே மகானுகிய சூரியன் உதித்தொடுங்குவதற்கு இடையில் அந்தரிட்சத்தைப் பிரகாசிப்பிக்கின்றனன் எனப்படுகின்றான் என்பதாம். (5)

மந்திரம் 6.

३ २उ ३ १२ ३ १ २३१२
632. त्रिंशद्धाम विराजति वाक् पतङ्गाय धीयते ।
२ ३ २ ३२३ १२
प्रति वस्तोरह द्युभिः ॥ ६ ॥

இருக்கு 10-183-3.

த்ரிம்ஶத்தாம விராஜதி வாக் பதங்காய தீயதே ।
ப்ரதி வஸ்தோரஹ த்யுபி꞉ ‖

அந்வயம்.

वस्तोः, त्रिंशद्धाम, द्युभिः, अह, विराजति, वाक्, पतङ्गाय, प्रतिधीयते ॥

பதவுரை.

वस्तोः	வஸ்தோ꞉	பகற் காலத்தின்
त्रिंशद्धाम	த்ரிம்ஶத்தாம	முப்பது நாழிகை வரையிலும்
द्युभिः	த்யுபி꞉	கிரணங்களுடன்
अह	அஹ	ஐயமின்றிச்
विराजति	விராஜதி	(இரவி) சிறப்பாய் விளங்குகின்றது. அப்போது,

वाक्	வாக்	வேதவாணி (மறை மொழி) யானது
पतङ्गाय	பதஙாய	சூரியன் பொருட்டு
प्रतिधीयते	ப்ரதியேதே	ஒவ்வொருவர் வாயிலும் கொள்ளப் (சொல்லப்) படுகின்றது.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—6. சர்ப்பராக்ஞி ரிஷி.

ஒரு தினத்தின் கூறுகளான (பகலிரவுகளின் அம்சங்களான) முப்பது முகூர்த்தம் (நாழிகை) வரையிலும் ஒளியுடன் கூடியே சூரியன் நன்கு விளங்குகின்றான். அச் சூரியன் பொருட்டு, துதிப்போர்களால் ஒவ்வொருவரின் வாயிலுந் துதியாகிய வாக்குக் கொள்ளப்படுகின்றது. (வாயால் வாழ்த்துகின்றார்கள் என்பதாம்.) அல்லது, மூலத்தில் வஸ்தோ: என்றது, ஒரு பகற்போதாம். முப்பது தாமம் என்றது நாழிகைகள். இத்துணைப் போதிலேயே கிரணங்களோடுகூட இச் சூரியன் இனிது விளங்குகின்றான் என்பதாம். அப்போதும் மறையாகிய வாக்குகளை அச் சூரியன் பொருட்டுத் துதிப்போர்கள் வாயிற் கொள்கின்றார்கள். அதாவது அவ் வாக்கினால் முதலிற் சேவிக்கின்றார்கள் என்பதாம். அவ்வாறே, "வானில் தேவன் முற்பகலில் இருக்கு மறைமொழிகளா லேற்றப்படுகின்றான், நடுப்பகலில் எசுர் வேதம் நிற்கின்றது. அத்தமன காலத்தில் சாம மறை மொழிகளாற் போற்றப்படுகின்றான், மூன்று வேதங்களால் அடைகின்றான்" (செல்கின்றான் சூரியன்) என மறையுங் கூறுகின்றது. இந்த மந்திரத்தில் சர்ப்பராக்ஞரின் ஆன்மத் துதியெனக் கொள்ளுங்கால் அவர் ஆன்மாவைச் சூரியவடிவாய்த் துதிக்கின்றார் என வுணர்க. (6)

குறிப்பு.—மூலத்தில், (அஹ,) என்றது தேற்றப் பொருடந்து நின்றது. தாமம் என்றதோ, முகூர்த்தமாம். மூலத்தில், (பதங்கம்) என்பது செல்லுந் தன்மையாற் சூரியனாவன்.

மந்திரம் 7.

२ ३ २ २ ३ २ ३ १ २ ३ १ २
633. अप त्ये तायवो यथा नक्षत्रा यन्त्यक्तुभिः ।
१ २ ३ १ २
सूराय विश्वचक्षसे ॥ ७ ॥

இருக்கு 1-05-2.

அப த்யே தாயவோ யதா நக்ஷத்ரா யந்த்யக்துபி: ।
ஸூராய விஶ்வசக்ஷஸே ॥

அந்வயம்.

विश्वचक्षसे, सूराय, त्ये, तायवः, यथा, नक्षत्रा, अक्तुभिः, अपयन्ति ॥

பதவுரை.

विश्वचक्षसे	விஶ்வசக்ஷஸே	எல்லாவற்றையும் விளக்குகின்ற
सूराय	ஸூராய	சூரியன் பொருட்டு (அவனெழுங் காலங்கண்டு)
त्ये	த்யே	கீர்த்தி வாய்ந்த
तायवः यथा	தாயவః யதா	திருடர்கள் போன்று
नक्षत्रा	நக்ஷத்ரா	நக்ஷத்திரக் கூட்டங்கள்
अक्तुभिः	அக்துபிః	இரவுடன்
अपयन्ति	அபயந்தி	மறைந்து விடுகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—7. பிரஸ்கண்ணுவ ரிஷி.

வெளிப்படையான திருடர்கள் போல, தேவர்களின் கிருகங்களாகிய நக்ஷத்திரங்கள், "தேவர்களின் வீடுகள் நக்ஷத்திரங்கள்" என, ஏனைய மறை மொழியாலும் நக்ஷத்திரங்கள் தேவர்களின் வீடுகளெனப்படுகின்றன. அல்லது, இவ் வுலகிலுள்ள மனிதர்களில், சுவர்க்க மடைந்தவர்கள் எவர்களோ, அவர்கள் நக்ஷத்திர வடிவங்களாகத் தோற்றுகின்றார்கள் எனினுமாம். அவ்வாறே "எவன் ஈண்டு ஆராதிக்கின்றானோ, அவன் இவ்வுலகை யொழித்து நக்ஷத்திரங்களின் கேடிலாத் தன்மையை யடைகின்றான்" என மறையுங் கூறுகின்றது. அல்லது, புண்ணியசாலிகளினுடைய காந்திகள் நக்ஷத்திர வடிவங்களாய்க் காணப்படுகின்றன. அங்ஙனமே, "எவைகள் நக்ஷத்திரங்களோ, இவைகள் புண்ணியவான்களுடைய காந்திகள்" என மறையுங் கூறுகின்றது. யாஸ்க முனிவரோ, நக்ஷத்திரங்கள் என்பதை அடைவுப் பொருள்களுடையன இவைகளல்ல நக்ஷத்திரங்கள்" எனக் கூறுகின்றார். இத் தன்மைத்தான நக்ஷத்திரங்கள் இரவுடன் மறைந்து விடுகின்றன என்பது பொருள். ஈண்டு உலகத்தை விளக்குஞ் சூரியன்வருவதைக் கண்டு என்பது எஞ்சி நின்றது. நக்ஷத்திரங்களும், திருடர்களும், இரவுடன்கூட சூரியன் வருகின்றான் என வியாகூலப்படுகின்றார்கள் என்பது கருத்து. (7)

குறிப்பு.—மூலத்தில் (தாயு:) என்பது திருடன் பெயராம். நிகண்டில் ('தாயுஸ்தஸ்கர') என அப்பெயர்களுட் பாடமாமாதலின். ('அக்து:') என்பது இரவின் பெயர். நிகண்டில் நகைம காண்டம் 1, 7, 4-ல் சர்வரி (அக்து:) என அப்பெயர்களுட் பாடமாமாதலின் என்பதாம்.

மந்திரம் 8.

१२ ३२ ३ २ ३ २ ३ २ ३ १ २
634. *अदृश्रन्नस्य केतवो विरश्मयो जनाँ३ अनु ।
१२ ३ १ २
भ्राजन्तो अग्नयो यथा ॥ ८ ॥

இருக்கு 1-50-3.

அத்₃ருஶ்ரந்நஸ்ய கேதவோ விரஶ்மயோ ஜநாம் அநு ।
ப்₄ராஜந்தோ அக்₃நயோ யதா₂ ॥

அந்வயம்.

भ्राजन्तः, अग्नयः यथा, केतवः, अस्य (सूर्यस्य,) रश्मयः, जनान्, अनुव्यदृश्रन्॥

பதவுரை.

भ्राजन्तः	ப்₄ராஜந்த:	பிரகாசிக்கின்ற
अग्नयः यथा	அக்₃நய: யதா₂	அக்கினிக் கொப்பாக
केतवः	கேதவ:	விளங்குகின்ற
अस्य (सूर्यस्य)	அஸ்ய (ஸூர்யஸ்ய)	இச் சூரியனுடைய
रश्मयः	ரஶ்மய:	கிரணங்கள்,
जनान्	ஜநாந்	சனங்களனைவரையும்
अनुव्यदृश्रन्	அநுவ்யத்₃ருஶ்ரந்	முறையாய் விளக்குகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—8. பிரக்கண்வ ரிஷி.

நன்கு (உலகை) விளக்குகின்ற இச் சூரியனுடைய கிரணங்கள், சனங்களனைவரையும் முறையாய் விளக்குகின்றன. அதாவது உலகனைத்தையும் பிரகாசிப்பிக்கின்றன என்பது பொருள். அதிலுவமை:— சொலிக்கின்ற அக்கினி போன்றெனல். (8)

மந்திரம் 9.

३१ २ ३ १२ ३ १ २
635. तरणिर्विश्वदर्शतो ज्योतिष्कृदसि सूर्य ।
२ ३ १ २ ३२
विश्वमाभासि रोचनम् ॥ ९ ॥

இருக்கு 1-50-4.

* अदृश्रमस्य, என்பது இருக்கு.

தரணிர்விஶ்வதர்ஶதோ ஜ்யோதிஷ்க்ருதஸி ஸூர்ய |
விஶ்வமாபாஸி ரோசநம் ||

அந்வயம்.

हे सूर्य !, तरणिः, विश्वदर्शतः, ज्योतिष्कृत् असि, विश्वं, रोचनं, आभासि ॥

பதவுரை.

हे सूर्य !	ஹே ஸூர்ய !	சூரியனே ! நீ
तरणिः	தரணிঃ	பிறராற் செல்லமுடியாத பெரும் வழியிற் செல்கின்றவனுயிருக்கின்ருய். அல்லது, வழிபடுவோர்களை வியாதிகளினின்றுந் தாண்ட வைக்கின்ருய்.
विश्वदर्शतः	விஶ்வதர்ஶதঃ	பாவத்தைப் போக்குதற்கு நின்னை உலகந் தரிசிக்கின்றது. அல்லது, பொருளெல்லாவற்றையும் விளக்குகின்ருய்.
ज्योतिष्कृत् असि	ஜ்யோதிஷ்க்ருத் அஸி	சந்திரன் முதலியவைகளிலுள்ள கிரணங்கட்குக் கருத்தனுயிருக்கின்ருய்.
विश्वं	விஶ்வம்	உலகனைத்தையும்
रोचनं	ரோசநம்	விளக்கிக் கொண்டு
आभासि	ஆபாஸி	நீயும் நன்கு பிரகாசிக்கின்ருய்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—9. பிரக்கண்வ ரிஷி.

சூரியனே! நீ, பிறராற் செல்லமுடியாத பெரு மார்க்கத்திற் செல்கின்றவனுயிருக்கின்ருய். அவ்வாறே, "யோசனை (நான்கு கோசம்) யீரிரண்டு இருநூறு யோசனைதூரம் அரை நிமிஷத்தாற் செல்பவனைக்குறித்து வணக்கம்" என மிருதியும் கூறுகின்றது. அல்லது, வழிபடுவோர்களை வியாதிகளினின்று தாண்டச் செய்கின்ருய். அவ்வாறே, "ஆரோக்கியம் ஆதித்தனில் நின்று தருவாயாக." என மிருதியுங் கூறுகின்றது. அங்ஙனமே, எல்லாப் பிராணிகளாலுந் தரிசித்தற் குரியோனுவன். இரவியின் றரிசனம், சண்டாளன் முதலியோர்களைக் கண்டதாற் றேன்றும் பாவத்தைப் போக்கக் காரண மாதலினென்க, அவ்வண்ணமே, ஆபத்தம்பரும். "தரிசனத்

தில் சோதிகளினுடைய தரிசனம்'' என்றார். அல்லது, எல்லாவற்றையுங் காணச் செய்வோன். அவ்வாறே பிரகாசங்கட்குக் கருத்தன். அதாவது :— எல்லாப் பொருள்களையும் பிரகாசிப்பவன் என்பதாம். அல்லது, சந்திரன் முதலியவைகள் இரவில் அத்தமன மானவிடத்து, சந்திரன் முதலியவை களிற் சூரிய கிரணங்கள் பிரதிபலித்து இருளைப் போக்குகின்றன. அஃது எவ்வாறெனின்? வாசலிலுள்ள கண்ணாடியின்மேல் பட்ட சூரிய கிரணம் வீட்டிற் குள்ளிருக்கும் இருளைப் போக்குகின்றது போன்றும். இவ்வாறு மாதலின் உலகத்தை விளக்கி அந்தரிட்சத்தைப் பிரகாசிப்போனு யிருக் கின்றாய் என்க. அல்லது, சூரியனே! அதாவது அந்தரியாமியாந் தன்மை யால் எல்லா வற்றையுஞ் செலுத்தும் பரமான்மாவே! நீ, பிறவிக் கடலி னின்று கரையேற்றுவோனு யிருக்கின்றாய். எக்காரணத்தால் எல்லா மோட்ச வேட்கையாளர்களாலுஞ் சாட்சாத் கரித்தற் குரியவனு யிருக்கின் றனையோ, அக் காரணத்தா லெனமுடித்துக் கொள்க. அதிட்டான சாக்ஷாத்கார மான விடத்து (பற்றுக் கோடாகிய உண்மைப் பொருளை யுள்ள வாறுணர்ந்த விடத்து) ஆரோபிதம் (கற்பனைப் பொருள்) நீங்குகின்றது. சூரியன் முதலியவைகட்குக் கருத்தா நீயே யாவாய் என்பதாம். அது வும், "சந்திரன் மனம், உண்மையாயின, இந்திரியங்கள் சூரியன் உண்டா யின" என மறையிற் கூறப்படுகின்றது. இத் தன்மைய நீ, சித்துவடிவமாந் தன்மையால் காணப்படும் பொருளனைத்தையும் இனிது விளங்குமாறு செய்துகொண்டு விளங்குகின்றவனு யிருக்கின்றாய் என்பதாம். மற்றொரு காரணத்தால் இவ்வணங் காணப்படுகின்ற தன்று. அவ்வாறே "விளங்கு கின்ற அதைப் பின்பற்றியே அனைத்தும் விளங்குகின்றன, அதனுடைய காந்தியால் இது விளங்குகின்றது" என மறையுங் கூறுகின்றது என்ற வாறு. (9)

மந்திரம் 10.

३ २ ३ २ ३ १ २ ३ १र २र३ १ २

636. प्रत्यङ् देवानां विशः प्रत्यङ्ङुदेषि मानुषान् ।

३ २उ ३क ३ २

प्रत्यङ् विश्वं स्वर्दृशे ॥ १० ॥

இருக்கு—1-50-5.

ப்ரத்யங் தேவாநாம் விஶ: ப்ரத்யங்ஙுதேஷி மாநுஷாந் ।
ப்ரத்யங் விஶ்வம் ஸ்வர்த்ருஶே ॥

அந்வயம்.

हे सूर्य !, देवानां, विशः, प्रत्यङ् उदेषि, मानुषान्, प्रत्यङ्, विश्वं, स्वर्दृशे, प्रत्यङ् ॥

பதவுரை.

हे सूर्य !	𑌹𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯 !	சூரியனே ! நீ
देवानां	𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂	தேவர்களுக்குள்
विशः	𑌵𑌿𑌶𑌃	மருத்து என்னுந் தேவதைக்கும்
प्रत्यङ् उदेषि	𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍 𑌉𑌦𑍇𑌷𑌿	நேர்முகமாய் உதிக்கின்றாய்.
मानुषान्	𑌮𑌾𑌨𑍁𑌷𑌾𑌨𑍍	மனிதர்கட்கும்
प्रत्यङ्	𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍	நேர்முகமா யுதிக்கின்றாய்,
विश्वं	𑌵𑌿𑌶𑍍𑌵𑌂	எல்லா
स्वर्दृशे	𑌸𑍍𑌵𑌰𑍍𑌦𑍃𑌶𑍇	விண்ணுலகங் காண்பதற்கும்
प्रत्यङ्	𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍	எதிர்முகமாய் நிற்கின்றாய். (யாண்டும் எதிர்முகமாகவே யெழுகின்றாய் என்க.)

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—10. *பிரக்கண்வ ரிஷி.*

சூரியனே ! நீ, தேவர்களுக்குள் மருத்துக்கள் என்னுந் தேவதைகளைக் குறித்தும் எதிர்முகமா யெழுகின்றாய். ஈண்டு (விச:) என்பது மருத்துக்களாவார்கள். என்னை ? " மருத்துக்கள் தேவர்களுக்குள் விசர்கள் " என ஏனைய மறையு மோதலினென்க. அவ்வணமே, மனிதர்களைக் குறித்தும் எதிர்முகமா யெழுகின்றாய். அவர்களும் ' எங்கட் கெதிரிலேயே சூரிய னுதிக்கின்றான் ' என வெண்ணுகின்றார்கள் என்பதாம். உலகமடைந்த அவ்வாறே விண்ணுலகம் பார்ப்பதற்கும் எதிர்முகமா யெழுகின்றாய். சுவர்க்கத்திலுள்ளார் தமக்கும் எதிராய்க் காணுமாறு உதிக்கின்றாய் என்பதாம். இவ்வாற்றால், எவர்கள் பார்க்கின்றார்களோ, அவர்களனைவரும் தத்தமக் கெதிராய்ச் சூரியனைப் பார்க்கின்றார்கள் என்னும் பொருள் கூறப்பட்டதென்பதுணர்க. அவ்வாறே, " ஆதலின், யாவரும், எமக்கெதிராயுதிக்கின்றது (எமக்கு எதிர்முகமா யுதிக்கின்றது) இரவி என எண்ணுகின்றார்கள் " என் மறையுங் கூறுகின்றது என்பதாம். (10)

மந்திரம் 11.

१ २ ३ १ २ ३ २ ३ २ ३ १ २
637. येना पावक चक्षसा भुरण्यन्तं जनाँ अनु ।
१ २ ३ १ २
त्वं वरुण पश्यसि ॥ ११ ॥

இருக்கு 1-50-6.

யேநா பாவக சக்ஷஸா புரண்யந்தம் ஜநாம் அநு |
த்வம் வருண பஶ்யஸி ||

அந்வயம்.

हे पावक !, वरुण !, त्वं, जनान्, भुरण्यन्तम्, येन चक्षसा, अनुपश्यसि ॥

பதவுரை.

हे पावक !	ஹே பாவக !	அனைத்தையும் பவித்திரமாக்குவோய் !
वरुण !	வருண !	பிரியமிலாததை விலக்குவோனாகிய சூரியனே !
त्वं	த்வம்	நீ
जनान्	ஜநாந்	பிராணிகளைத்
भुरण्यन्तम्	புரண்யந்தம்	தாங்கிக் கொண்டு. அல்லது, பாது காத்துக் கொண்டு (இவ்வுலகை)
येन चक्षसा	யேந சக்ஷஸா	எந்தப் பிரகாசத்தால்
अनुपश्यसि	அநுபஶ்யஸி	முறையாய்ப் பிரகாசிப்பிக்கின்றனையோ, அப் பிரகாசத்தை வணங்குகின்றேன்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—11. பிரக்கண்வ ரிஷி.

எல்லாவற்றையுஞ் சுத்தப்படுத்துவோய்! வேண்டாததை விலக்குவோய்! சூரிய! நீ, பிராணிகளைத் தாங்கிக்கொண்டு, அல்லது, பரிபாலித்துக்கொண்டு, எந்தப் பிரகாசத்தினால் இவ் வுலகை விளக்குகின்றனையோ, அப் பிரகாசத்திற்கு வணக்கஞ் செய்கின்றேன் யான் என்பதாம். (11)

மந்திரம் 12.

१ २र३१२ ३२३१२ ३१२

638. *उद्यामेषि रजः पृथ्वहा मिमानो अक्तुभिः ।

२ ३ १ २

पश्यञ्जन्मानि सूर्य ॥ १२ ॥

இருக்கு 1-50-7.

𑌉𑌦𑍍𑌯𑌾𑌮𑍇𑌷𑌿 𑌰𑌜𑌃 𑌪𑍃𑌥𑍍𑌵𑌹𑌾 𑌮𑌿𑌮𑌾𑌨𑍋 𑌅𑌕𑍍𑌤𑍁𑌭𑌿𑌃 ।
𑌪𑌶𑍍𑌯𑌞𑍍𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿 𑌸𑍂𑌰𑍍𑌯 ॥

அங்வயம்.

हे सूर्य !, अहा, अक्तुभिः, मिमानः, जन्मानि, पश्यन्, पृथु, रजः, द्यां, उदेषि ॥

பதவுரை.

हे सूर्य !	𑌹𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯 !	சூரியனே ! நீ,
अहा	𑌅𑌹𑌾	பகலை
अक्तुभिः	𑌅𑌕𑍍𑌤𑍁𑌭𑌿𑌃	இரவுகளுடன்
मिमानः	𑌮𑌿𑌮𑌾𑌨𑌃	அளக்கின்றாய். (அவ்வாறே)
जन्मानि	𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌿	பிறப்பையுடைய பிராணிகளை
पश्यन्	𑌪𑌶𑍍𑌯𑌨𑍍	பிரகாசிப்பித்துக் கொண்டு
पृथु	𑌪𑍃𑌥𑍁	மிக விரிந்த
रजः	𑌰𑌜𑌃	விண்ணுலகைக் குறித்தும்
द्यां	𑌦𑍍𑌯𑌾𑌂	அந்தரிக்ஷ வுலகத்தைக் குறித்தும்
उदेषि	𑌉𑌦𑍇𑌷𑌿	உதிக்கின்றாய்.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—2. பிரக்கண்வ ரிஷி.

இரவியே! நீ, விரிந்த விண்ணுலகையும், ஈண்டு மூலத்தில் (ரஜ:) என்றது உலகமாம் "உலகங்கள் ரஜங்கள் எனப்படுகின்றன" என யாஸ் முனிவரின் நிருத்த வாக்காலுங் காண்க. அந்தரிக்ஷ வுலகையும், உதித்து

* विद्यामेषि, என்பது இருக்கு.

விளக்குகின்றாய். யாதுசெய்து கொண்டெனின்? பகல்களை, இரவுகளுடன் அளந்துகொண்டு உதிக்கின்றாய். பகலிரவுகளின் வேறுபாடு இரவி செல்கின்றதைப் பற்றியதா மாதலினென்க. அவ் வாறாகவே, பிறப்பையுடைய பிராணிகளின் சமுதாயங்களையும் பிரகாசிப்பித்துக் கொண்டு. (உதித்து விளக்குகின்றாய் என்பதுடன் சேர்த்துக்கொள்க.) (12)

மந்திரம் 13.

१ २ ३ २ ३ २३ २ ३ २२ ३क२२

639. अयुक्त सप्त शुन्ध्युवः सूरो रथस्य नप्त्र्यः ।

१ २ ३ १२

ताभिर्याति स्वयुक्तिभिः ॥ १३ ॥

இருக்கு 1-50-9.

அயுக்த ஸப்த ஶுந்த்⁴யுவ꞉ ஸூரோ ரத²ஸ்ய நப்த்ய꞉ ।

தாபி⁴ர்யாதி ஸ்வயுக்திபி⁴꞉ ॥

அந்வயம்.

सूरः, शुन्ध्युवः, रथस्य, नप्त्यः, सप्त, अयुक्त, स्वयुक्तिभिः, ताभिः, याति ॥

பதவுரை.

सूरः	ஸூர꞉	எல்லா வற்றையுஞ் செலுத்துகின்ற சூரியன்
शुन्ध्युवः	ஶுந்த்⁴யுவ꞉	சுத்தம் பண்ணுகின்றவைகளும்
रथस्य नप्त्यः	ரத²ஸ்ய நப்த்ய꞉	இரதத்தைக் கவிழ்க்காதவைகளுமான
सप्त	ஸப்த	ஏழு பரிகளையும்
अयुक्त	அயுக்த	தனது இரதத்திற் பூட்டினன்.
स्वयुक्तिभिः	ஸ்வயுக்திபி⁴꞉	தன்னாற் பூட்டப்பெற்றதான
ताभिः	தாபி⁴꞉	அக் குதிரைகளின் வாயிலாக.
याति	யாதி	வேள்வி செய்யு மிடத்தை யடைகின்றான். (ஆதலின் அவி கொடுக்கற் பாலதென்க.)

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—13. பிரக்கண்வ ரிஷி.

எல்லாவற்றையுஞ் செலுத்துகின்ற சூரியன், சுத்தப் படுத்துகின்ற ஏழு பெண் குதிரைகளைத் தனது இரதத்திற் பூட்டிவிட்டனன், அவைகள் எவ் வண்ணமான குதிரைகளெனின்? எவைகளைப் பூட்டினால் இரதங் கவிழ்க்கப்படாத தாமோ, அத் தன்மைத் தானவைகள் என்க. இதனு லிரதத்திற் பூட்டப்பெற்ற பெண் குதிரைகள் வாயிலாக வேள்விச் சாலையை யடைகின்றான் ஆதலின் அவன் பொருட்டு அவிகொடுக்கத் தக்கது என்பதாம். (13)

மந்திரம் 14.

३१ २ ३ २ ३ ३ २ १२
640. सप्त त्वा हरितो रथे वहन्ति देव सूर्य ।
३ १ २
शोचिष्केशं विचक्षण ॥ १४ ॥

இருக்கு 1-50-8.

𑌸𑌪𑍍𑌤 𑌤𑍍𑌵𑌾 𑌹𑌰𑌿𑌤𑍋 𑌰𑌥𑍇 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 𑌦𑍇𑌵 𑌸𑍂𑌰𑍍𑌯 ।
𑌶𑍋𑌚𑌿𑌷𑍍𑌕𑍇𑌶𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣 ॥

அந்வயம்.

हे सूर्य देव!, विचक्षण, सप्त, हरितः, रथे, शोचिष्केशं, त्वा, वहन्ति ॥

பதவுரை.

हे सूर्य देव !	𑌹𑍇 𑌸𑍂𑌰𑍍𑌯 𑌦𑍇𑌵 !	பிரகாசமுடைய சூரியனே !
विचक्षण !	𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣 !	அனைத்தையும் விளக்குவோய் !
सप्त	𑌸𑌪𑍍𑌤	ஏழு
हरितः	𑌹𑌰𑌿𑌤𑌃	{ குதிரைகள், அல்லது, கிரணங்கள்
रथे	𑌰𑌥𑍇	இரதத்திலிருப்போனும்
शोचिष्केशं	𑌶𑍋𑌚𑌿𑌷𑍍𑌕𑍇𑌶𑌂	{ கிரணமென்னுங் கேசமுடையோனுமாகிய
त्वा	𑌤𑍍𑌵𑌾	உன்னைத்
वहन्ति	𑌵𑌹𑌨𑍍𑌤𑌿	தாங்குகின்றன.

சாயண பாடியம்.

கண்டம்—5. இருக்கு—14. பிரக்கண்வ ரிஷி.

பிரகாசமாகிய சூரிய! அனைத்தையும் விளக்குவனவும், ஏழென்னு மெண்கொண்டவைகளுமான நினது குதிரைகள், அல்லது, இரதத்தைக் கவருகின்ற கிரணங்கள், நின்னைத் தாங்கிச் செல்கின்றன. எத்தன்மைய ஞகிய நின்னை யெனின்? இரதத்தில் இருக்கப்பட்டவனை. 'ஈண்டு இருக்கப் பட்டவனை' என்பது எஞ்சி நின்றது. அவ்வாறே கிரணங்களையே கேசங்கள் போன்றுடையானை. (தாங்குகின்றன என்பதனோடு சேர்த்துக்கொள்க.)

வித்தியாதீர்த்த மகேசுரர் மறைப்பொருளை விளக்கலால்
மாயிருள் தொலைத்து புருடார்த்தங்கள் நான்கையும் அளிப்பாராக.

சாயணுசாரியர் இயற்றிய சாமவேதார்த்தப் பிரகாச பாடியம்

முற்றும்.

வேதாகம ஞான விநோதன் திருவடி வாழ்க.

வனத்திலுள்ளார்களே ஓதுதற்குரிய ஆறுமத்தியாயமும்

முடிந்தது.

சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரம்ண்யோம்!!!

மகா நாம்நியார்ச்சிக விளக்கம்

மேல்வரும் இவ் வார்ச்சிகமானது, சந்த ஆர்ச்சிக மென்னும் பூர்வார்ச்சி கத்திலுஞ் சேரவில்லை. உத்தரார்ச்சிகத்திலுஞ் சேரவில்லை. மற்றோ, யாண்டும் பூர்வார்ச்சிகத்தின் ஈற்றிற் காணப்படுகின்றது, சாயண பாடியத்திலும் அவ்வாறே யிருக்கின்றது. ஆனால் இது ஐந்தா நாளில் இருக்குமறை யோது வானுடைய வேள்வியாக வகுக்கப்பட்டிருக்கின்றது. இது சிலரால் கொள்ளப்படாததுமாம். இதற்கு ரிஷி பிரசாபதியாவர். இது மூன்று கண்டங்களை யுடையனவா யிருத்தலின் மூவுலகத்து நிறைந்த ஆன்மாவாகிய இந்திரனே இதற்குத் தேவதையாவன் என்ப துணர்க.

இதை மகாநாம்நி யென்றும், சாக்குவரி யென்றுங் கூறுகின்றனர். 'சாக்குவரி' என்னுஞ் சந்த விசேடத்திற்கு எழுத்துக்கள் ஐம்பத்தாறும். அதன் முறை வருமாறு:— காயத்திரிச் சந்தந் தொடங்கி, அதிதிருதி யீறுகவுள்ள சந்தங்கட்கு இருபத்து நான்கு (24) எழுத்துக்கள் முதற் கொண்டு நான்கு நான்கு எழுத்துக்கள் மிகுதியா மிடத்து உஷ்ணிக் முதலிய சந்தங்கள் எனப்படுகின்றன. இவ்வண்ணம் எழுத்துக்கள் மிகுமிடத்து 56. எழுத்துகள் கூடில் சாக்குவரி என்னுமொரு சந்த விசேட (பாட்டு விசேட) மாகின்றது, இம்மந்திரங்களில் எழுத்துக்கள் ஐம்பத் தாறினும் மிகுதிப்பாடு உள்ள தென்னையோ வெனின்? அது உபசர்க்கம், பாதம் என்பனகூடினதாலே யன்றி இயற்கையில் அல்ல வென்றுணர்க. அதில் முதலாவதிலுள்ள இரண்டு பாதமும் உபசர்க்கமாம். இரண்டாவதின் நடுவிலுள்ள இரண்டு பாதமும்உபசர்க்கமாம். எஞ்சிய ஏழுபாதங்களாலும், எட்டு எழுத்துக்களாலுமாகி ஐம்பத்தாறு எழுத்துக்கள் கொண்டு முடிவது சாக்குவரிச் சந்தமென்பது காண்க.

ஈண்டுச் சந்தங்களின் முறையாமாறு

சந்தங்கள்

காயத்திரி	....	...	சந்தம்	எழுத்துக்கள்	24
உஷ்ணிக்	....	....	,,	,,	28
அநுஷ்டுப்	....	....	,,	,,	32
பிருகதி	....	....	,,	,,	36
பங்தி	....	....	,,	,,	40
திருஷ்டுப்	....	....	,,	,,	44
சகதி	...	....	,,	,,	48

அதிச் சந்தங்கள்

அதி சகதி	....	...	சந்தம்	எழுத்துக்கள்	42
சக்குவரி	....	....	,,	,,	56
அதிசக்குவரி	...	...	,,	,,	60
அஷ்டி	....	....	,,	,,	64
அதியஷ்டி	....	....	,,	,,	68
திருதி	....	...	,,	,,	72
அதி திருதி	....	...	,,	,,	67

விச்சந்தங்கள்

கிருதி	....	...	சந்தம்	எழுத்துக்கள்	80
பிரகிருதி	...	....	,,	,,	84
ஆகிருதி	...	....	,,	,,	ஃ8
விகிருதி	....	....	,,	,,	92
சம்ற் கிருதி	...	...	,,	,,	96
அதி கிருதி	...	....	,,	,,	100
உத்கிருதி	...	...	,,	,,	104

இம் மந்திரங்களில் கோடிட்டிருப்பவைகள் பாத உபசர்க்கங்களெனக் கொள்க. இது சாயண பாடியத்திலுள்ளவற்றில் மிகுச் சுருக்கமாய்க்காட்டப் பட்டது.

மகா நாம்நியார்ச்சிகம்

மந்திரம்

முதலாவது மூன்று.

३ १ ३ २ ३१२ ३ १ २
641. विदा मघवन् विदा गातुमनुशंसिषो दिशः ।
१ २ ३ २ २
शिक्षा शचीनाम्पते पूर्वीणां पुरूवसो ॥ १ ॥
விதா மகவந் விதா காதுமநுஶம்ஸிஷோ திஶ: |
ஶிக்ஷா ஶசீநாம்பதே பூர்வீணாம் புருவஸோ ||

३२उ ३ १ २ ३ २ २
642. आभिष्ट्वमभिष्टिभिः स्वाऽ३ न्नांशु ।
१२ ३ १२३१ २ ३ १२ ३२
प्रचेतन प्रचेतयेन्द्र द्युम्नाय न इषे ॥ २ ॥
ஆபிஷ்ட்வமபிஷ்டிபி: ஸ்வா3ந்ஶு |
ப்ரசேதந ப்ரசேதயேந்த்ர த்யும்நாய ந இஷே ||

३२उ ३ २ ३१र २र
643. एवा हि शक्रो राये वाजाय वज्रिवः ।
१२ ३२३ १ २ ३२३
शविष्ठ वज्रिन्नृञ्जसे मंहिष्ठ वज्रिन्नृञ्जसे ।
१२ ३ २३ ३१२
आयाहि पिब मत्स्व ॥ ३ ॥

ஏவாஹி ஶக்ரோ ராயெ வாஜாய வஜ்ரிவஃ |
ஶவிஷ்ட வஜ்ரிந்ந்ருஞ்ஜஸெ மம்ஹிஷ்ட வஜ்ரிந்ந்ருஞ்ஜஸெ |
ஆயாஹி பிப மத்ஸ்வ ||

அந்வயம்.

हे मघवन्!, विदाः, गातुं, विदाः, दिशः, अनुशंसिषः, पूर्वीणां, शचीनांपते!, हे पुरुवसो!, त्वं, आभिः अभिष्टिभिः, शिक्ष, स्वः न, अंशुः, हे प्रचेतन!, प्रचेतय, हे इन्द्र! नः, द्युम्नाय, इषे, हे वज्रिन्!, शक्रः, वज्रिवः, शविष्ठः, मंहिष्ठः, एवहि, राये, वाजाय, ऋञ्जसे, हे वज्रिन्!, आयाहि, पिब, मत्स्व ॥

பதவுரை.

हे मघवन्	ஹே மகவந்	தனமுடைய இந்திர ! நீ
विदाः	விதா:	அனைத்தையு முணர்கின்றவன்.
गातुं	காதும்	வேள்வித் தலைவன் அடையத் தக்க இடத்தையும்
विदाः	விதா:	அறிகின்றவன். (ஆதலின்)
दिशः	திஶ:	நல்வழியை
अनुशंसिषः	அநுஶம்ஸிஷ:	அறிவிப்பாயாக.
पूर्वीणां	பூர்வீணாம்	நிறைந்த
शचीनांपते !	ஶசீநாம்பதே !	அறிவு கருமங்களுக்கு இறைவ !
हे पुरुवसो !	ஹே புருவஸோ !	மிகுந்த தனமுடையோய் !
त्वं	த்வம்	நீ
आभिः अभिष्टिभिः	ஆபி: அபிஷ்டிபி:	இப்போது செய்கின்ற வேண்டுகோட்களால்
शिक्ष	ஶிக்ஷ	(எமக்கு) தனத்தைக் கொடுப்பாயாக.
स्वः न	ஸ்வ: ந	சுவர்க்கம் போன்று
अंशुः	அம்ஶு:	வியாபகனாகிய

हे प्रचेतन!	ஹெ ப்ரசெதந!	பேரறிவுடையோய்! நீ
प्रचेतय	ப்ரசெதய	எமது பக்தியை அறிவாயாக.
हे इन्द्र!	ஹெ இந்த்ர!	இந்திரனே! நீ
नः	நஃ	எங்கட்கு
द्युम्नाय	த்யும்நாய	கீர்த்தி, அல்லது, தனத்தின் பொருட்டு அநுகூலத்தன் ஆவாயாக.
इषे	இஷெ	அன்னத்தின் பொருட்டும் அநுகூலத்தன் ஆவாயாக
हे वज्रिन्!	ஹெ வஜ்ரிந்!	வச்சிரந் தாங்கியோய்! நீ
शक्रः	ஶக்ரஃ	சக்கிராயுத மேந்தியவனும்
वज्रिवः	வஜ்ரிவஃ	பாவத்தை யொழிப்போனும்
शविष्ठः	ஶவிஷ்டஃ	சிறந்த வலியுடையானும்
मंहिष्ठः एव हि	மஂஹிஷ்டஃ ஏவ ஹி	போற்றத் தக்கோனுமே யாகின்றாய். (இத்தகைய நீ)
राये	ராயெ	தனத்தின் பொருட்டும்
वाजाय	வாஜாய	அன்னத்தின் பொருட்டும்
ऋञ्जसे	ருஞ்ஜஸெ	எம்மால் வழிபடப் பெறுகின்றாய்
वज्रिन्!	வஜ்ரிந்!	வச்சிர முடையோனே! நீ
ऋञ्जसे	ருஞ்ஜஸெ	எம்மால் வழிபடப்படுகின்றாய்
आयाहि	ஆயாஹி	எமது வேள்விக்கு வருவாயாக. (வந்து)
पिब	பிப	சோமரசத்தை யருந்துவாயாக. (அருந்திக்)
मत्स्व	மத்ஸ்வ	களிப்புறுவாயாக.

சாயண பாடியம்.

(இம் மூன்று மந்திரங்களும் குளகம்) ஈண்டு "விதாஉவஸோ" என்பது முதலிய முற்பகுதியால் இருபதங் கூறப்படுகின்றது. 'வஸு' என்பது தனமாதலின் தனமுடைய இந்திர! நீ, உணர்கின்றவன் என்பதாம். இதில் அறியத் தக்க செயப்படு பொருளின் விசேடங் கூறப்படாமையின் அனைத்தையும் உணர்வாயாக எனப் பொருள் படுகின்றது. இவ் வாற்றால் நீ முற்று முணர்கின்றவனாதலின் வேள்வித் தலைவன் அடையத் தக்க இடத்தையு முணர்வாயாக. (என்பது பெற்றாம்.) அல்லது, நின் பொருட்டுச் செய்கின்ற துதியாளிகளின் தோத்திரங்களை யுணர்வாயாக எனினுமாம். ஈண்டு 'மாதர்ஹம்' என்னும் மூலத்திய சொல், கீதம் என்னும் பொருண் மேனின்றது. அதன் பின்னர், வேள்வித் தலைவன் சுவர்க்கத்திற்குச் செல்கின்ற நல்ல மார்க்கங்களையும் அறிவிப்பாயாக. என்னு மிது உபசர்க்கத்தின் கூறெனப்படுகின்றது.

இனி, "ஶிக்ஷாஶசீநாம்" என்பது முதலிய பிற்பகுதியால் 'சாக்குவரம்' என்னு மொரு பாடல் விசேடங் கூறப்படுகின்றது. ஈண்டு 'ஶசீ' (சசீ) என்பது கருமம், அல்லது, நுண்ணிய மதியாம். ஆதலின் அநேக கருமங்கட்கிறைவ! அல்லது, அநேக நுண்ணிய மதிக்கிறைவ! எனவாயிற்று. மிகுந்த தனமுடையோய்! இந்திரனே! நீ, இப்போது செய்கின்ற எமது தோத்திரங்களை முன்னிட்டுத் தனங்களைக் கொடுப்பாயாக என்பதாம். 'ஶிக்ஷ' (சிட்ச) என்பதற்கு (ஈகை) தானம் பொருள் என்று நிகண்டு 3-10-8 வது சூத்திரங் கூறுகின்றது. மிகுந்த தனமுடையோய்! என்னும் விளியால் தனம் வருவிக்கப்பட்டது.

'ஸ்வாஞாம்ஸூ' என்றற் றொடக்கத்துப் பகுதியால் உபசர்க்கங் கூறப்படுகின்றது. இதில் 'ஸு:, ந, ஸம்ஸூ:' என மூன்று சொற்கள் இருக்கின்றன. நகாரம் உவமைப் பொருண் மேனின்றது. 'ஸம்ஸூ' என்றது நிறைவாம். சுவர்க்கம் போன்று நிறைந்திருக்கின்ற இந்திர! என்பது திரண்ட பொருள். சிறந்த அறிவுடைய இந்திரனே! நீ, எங்களுடைய பக்தியை அறிந்து கொள்வாயாக என்பதாம்.

இனி, "த்யும்நாய ந ஊஷே' என்பது முதலிய பகுதியால் இரண்டு பாகமுங் கூறப்படுகின்றது. 'த்யும்நம்' என்பதற்குக், கீர்த்தி, அல்லது, அன்னம் பொருளென யாஸ்க முனிவரின் நிருத்தங் கூறுகின்றது. கீர்த்தியின் பொருட்டு, அல்லது, தனலாபத்தின் பொருட்டு நீ உதவி செய்வாயாக என்பதாம். நீ தனங் கொடுப்பதில் வல்லுந ராதலின் தனங் கொடுப்பாயாக என்பது திரண்ட பொருள்.

இனி, "ராயெவாஜாய வஜ்ரிவ:" என்றற் றொடக்கத்துப் பகுதியால், சாக்குவர பாகங் கூறப்படுகின்றது. வச்சிராயுத மேந்திய இந்திர! அல்லது, செல்கின்ற இந்திர! நீ, தன லாபத்தின் பொருட்டும், அன்ன லாபத்தின் பொருட்டும் மகிழ்ச்சி யுடையோனாகுவை. ஈண்டு மகிழ்ச்சியுடையோனாகுவை என்பது எஞ்சி நின்றது. அற்புத வலியையுடையோய்! வச்சிராயுத முடைய இந்திர! நீ, எங்களால் தன லாபத்தின் பொருட்டுச் சாதிக்க (வழிபட) ப்படுகின்றாய். அல்லது, வியங்கோள் விகுதியாய்க் கொண்டு, எங்களைத் தனமுதலிய ஐசுவரிய முடையார்களாய்ச் செய்வாயாக எனினுமாம். வள்ளலாகிய போற்றத் தக்கோய்! எங்களால் நீ சாதிக்க (வழிபட) ப்படுகின்றாய்.

"ஸுயாஹி விபஊஸ்வ" என்பது முதலிய பகுதியால் அபரபாகங் (மற்றொரு பாகங்) கூறப்படுகின்றது. நீ, இவ் வண்ணத்த னாதலின், எங்களுடைய. வேள்விக்கு வருவாயாக. வந்து சோமரசத்தை யருந்துவாயாக. அருந்திக் களிப்புறுவாயாக என்பது பொருள். (12. 3)

மந்திரம்
இரண்டாவது மூன்று

३ २ ३ २ ३ २ ३ २ ३ १ २ ३ १ ३ २ ३ १ २
644. विदा राये सुवीर्य्यम्भवा वाजानां पतिर्वशाँ अनु ।

१ २ ३ २ ३ २र २र ३ १ २
मंहिष्ठ वज्रिन्नृञ्जसे यः शविष्ठः शूराणाम् ॥ १ ॥ (४)

விதா ராயெ ஸுவீர்யம் பவா வாஜாநாம் பதிர்வஶாம் அநு |
மம்ஹிஷ்ட வஜ்ரிந்ந்ருஞ்ஜஸெ யஃ ஶவிஷ்டஃ ஶூராணாம் ॥

१र २र ३ १ २ ३ २उ ३ २
645. यो मंहिष्ठो मघोनामंशुर्न्न शोचिः ।

१ २ ३ १ २ ३ १ २ ३र २र
चिकित्वो अभि नो नयेन्द्रो विदे तमु स्तुहि ॥ २ ॥ (५)

யொ மம்ஹிஷ்டொ மகொநாமம்ஶுர்ந ஶொசிஃ |
சிகித்வொ அபி நொ நயெந்த்ரொ விதெ தமு ஸ்துஹி ॥

२ ३ २ ३ २उ ३१२ ३ १ २३१२
646. ईशे हि शक्रस्तमूतये हवामहे जेतारमपराजितम् ।

१ २ ३२३ २ ३ २३ १ २ ३ २३२
स नः स्वर्षदति द्विषः क्रतुश्छन्द ऋतं बृहत् ॥ ३ ॥ (६)

ஈஶெ ஹி ஶக்ரஸ்தமூதயெ ஹவாமஹெ ஜெதாரமபராஜிதம் |
ஸ நஃ ஸ்வர்ஷததி த்விஷஃ க்ரதுஶ்சந்த ருதம் ப்ருஹத் ॥

அந்வயம்.

हे इन्द्र!, सुवीर्यं, विदाः, राये, वाजानां, पतिः, भव, वशान्, अनु, भव, हे मंहिष्ठ!, वज्रिन्!, शूराणां शविष्ठः ऋञ्जसे, यः, मघोनां, अंशुः न, शोचिः, हे चिकित्वः!, नः, नय, इन्द्रः, तमु, विदे, अभिस्तुहि, हि, शक्रः, ईशे, अपराजितं, जेतारं, तं इन्द्रं, ऊतये, हवामहे, सः, नः, द्विषः, अतिस्वर्षत् क्रतुः, छन्दः, ऋतं, बृहत् ॥

பதவுரை.

हे इन्द्र!	ஹெ இந்த்ர!	இந்திரனே! நீ
सुवीर्यं	ஸுவீர்யம்	நல்ல வீரத்தை
विदाः	விதாஃ	அடையுமாறுசெய்வாயாக.

राये	ராயெ	தனத்தைப் பாதுகாப்பதின் பொருட்டு
वाजानां	வாஜாநாம்	சேனைகட்குத்
पतिः	பதிः	தலைவன்
भव	ஹவ	ஆவாயாக.
वशान्	வஶாநு	விரும்பின பொருள்களைக்
अनु	அநு	குறித்துப்
भव	ஹவ	(கிடைக்குமாறு) பாவிப்பாயாக.
हे मंहिष्ठ !	ஹெ மஂஹிஷ்ட !	பேராற்றலுடையோய் !
वज्रिन् !	வஜ்ரிநு !	வச்சிர மேந்தினோய் !
शूराणां	ஶூராணாம்	வீரர்களுக்குட்
शविष्ठः	ஶவிஷ்டः	எவன் சிறந்த வீரனாய்
ऋञ्जसे	ருஞ்ஜஸெ	வழிபடப் பெறுகின்றானோ,
यः	யः	யாதொருவன்
मघोनां	மகொநாம்	தனமுடையார்களுக்குட் போற்றத்தக்கானோ,
अंशुः न	அஂஶுः ந	சூரியன் போன்று
शोचिः	ஶொசிः	புநிதஞ் செய்கின்றவனோ,
हे चिकित्वः ?	ஹெ சிகித்வः !	பேரறிவுடையோய் !
नः	நः	எங்கட்குத்
नय	நய	தன முதலியவைகளை கொடுப்பவனோ,
इन्द्रः	இந்த்ரः	சிறந்த ஐசுவரிய முடையவனோ,
तमु	தமு	அவ் விந்திரனையே
विदे	விதெ	அனைவரும் மிகுந்த தனமுடையானென அறிகின்றனர்
अभिस्तुहि	அஹிஷ்டுஹி	(எனது ஆன்மாவே நீ) அவனைத் துதிப்பாயாக.
हि	ஹி	எதனால்
शक्रः	ஶக்ரः	பேராற்றலுடையோனாய்.
ईशे	ஈஶெ	அனைத்தையுஞ் செலுத்துகின்றவன் எவனோ, அதனால்
अपराजितं	அபராஜிதம்	பிறரால் வெல்லப்படாதோனும்
जेतारं	ஜெதாரம்	பகைவரை வெல்லுஞ் சீலமுடையானுமாகிய
तं इन्द्रं	தம் இந்த்ரம்	அவ் விந்திரனை
ऊतये	ஊதயெ	எமது பாதுகாப்பின் பொருட்டு

हवामहे	ஹவாமஹெ	யாம் அழைக்கின்றோம்.
सः	ஸஃ	அவ் விந்திரன்
नः	நஃ	எமது
द्विषः	த்விஷஃ	துவேஷிகளை
अतिस्वर्षत्	அதிஸ்வர்ஷத்	முழுது மொழிப்பானாகை.
क्रतुः	க்ரதுஃ	(எமது) கருமங்களும்,
छन्दः	சந்தஃ	சந்தங்களும்,
ऋतं	ருதம்	சோமரசமும்,
बृहत्	ப்ருஹத்	பெருகுக.

சாயண பாடியம்

ஈண்டு "விஶ்வாநராயெஹ்வீயதம்" என்றற் றொடக்கத்துப் பகுதியால் இரண்டாவது இருக்கில் முதலாவதாகிய இருபதங் கூறப்படுகின்றது. இந்திர! நீ நற்புத்திரனைப் பெறுமாற்றலை, அல்லது, போர் முதலியவைகளில் தோல்வி யடையாத வீரத்தைக் கொடுப்பாயாக. சேனைகளுக்கு, அல்லது, வன்மைகளுக்கு நீ இறைவனாகின்றாய். வேண்டிய பொருளை, அல்லது, உன்வசமாயிருக்கின்ற வேள்வித் தலைவனை (நலமாகுமாறு) பாவிப்பாயாக.

இனி, "ஶம்ஹிஷ்ட வஜ்ரிந்" என்பது முதலிய பகுதியால், தனது பாகங் கூறப்படுகின்றது. அற்புத வன்மை யுடையோய்! நீ, தனமுடையார்களுட் சிறந்த வள்ளலாதலின், தனத்தின் பொருட்டு நாங்கள் நின்னை வழிபடுகின்றோம் என்பதாம்.

"ஶம்பாஹ்ஞாதசெபாஅிஃ" என்றற் றொடக்கத்துப் பகுதியால் உபசர்க்க பாகங் கூறப்படுகின்றது. சூரியனொளி போன்று முழுச் சோதி யுடையவன், பரிசுத்தன். இனிப், பிரத்தியட்சமாகிய தோத்திரம்:—சூரியவுணர்வுடைய இந்திர! நீ, எங்கட்கு தனத்தைக் கொடுப்பாயாக.

இனி, "உந்த்ராவிஶெதஶஹ்வூஹி" என்பது முதலிய பகுதியால் இரண்டு பாகங்களு மொருங்கே கூறப்படுகின்றது. இந்திரன், மேம்பட்ட ஐசுவரிய முடையவன் என, அனைவராலும் அறியப்படுகின்றான். அவ் விந்திரனையே துதிப்பாயாக வென இந்த இருடியானவர் தன தான்மாவையே கட்டளை யிட்டுக்கொள்கின்றார். சத்துருவைக் கொல்கின்ற இந்திரன் அனைத்தையுஞ் செலுத்துகின்றானாதலின், அவனையே துதிப்பாயாக வென இயைபுபடுகின்றது காண்க.

"ஸாதயே ஹவாமஹே" என்றற் றொடக்கத்துப் பகுதியால் சாக்குவ்ர மென்னு மொரு பாடல் விசேடங் கூறப்படுகின்றது. அவ் விந்திரனை, எங்களுடைய பாதுகாப்பின் பொருட்டு அழைக்கின்றோம் என்பதாம். எவ்வண்ணத்தனை யெனின்? போர்களிற் சத்துருவை வெல்லுஞ் சீலமுடையானை. இதனால், பிறரால் தோல்வி யடையாத அவ் விந்திரன் எங்களுடைய பகைவர்களை முழுது மொழிப்பானாக என்பது பெற்றும். அல்லது, எங்களைத் சத்துருக்களினின்றுங் கடக்கச் செய்வானாக எனினுமாம். அது பற்றியே "ஸ ந꞉ ஸ்வர்ஷத்" என அநேகம் இருக்கோதுவார்கள் கூறுகின்றன ரென்க.

இனி, "க்ரதூம்ஷி ஸத்யம்பரஹஸ" என உபசர்க்க பாகங் கூறப்படுகின்றது. சத்துருக்களைக் கொன்றதன் பின்னர், எங்களால் அநுட்டிக்கத் தக்க கருமங்களும், காயத்திரி முதலிய சத்திரம் என்னுங் கீதங்களும், சோமரசமும், அல்லது, உண்மையாகிய கருமபயனும் பெருகுவதாகுக. ஈண்டு ஆகுக என்பது எஞ்சி நின்றது (4-5-6)

மந்திரம்

மூன்றுவது முன்று

२ ३ १२ ३ १२ ३ १२३१२

647. इन्द्रं धनस्य सातये हवामहे जेतारमपराजितम् ।

१ २ ३२३२३ १ २ ३२३१२

स नः स्वर्षदतिद्विषः स नः स्वर्षदतिद्विषः ॥ १ ॥ (७)

இந்த்ரம் தநஸ்ய ஸாதயே ஹவாமஹே ஜேதாரமபராஜிதம் ।

ஸ ந꞉ ஸ்வர்ஷததித்விஷ꞉ ஸ ந꞉ ஸ்வர்ஷததித்விஷ꞉ ॥

१२ ३ १ २ ३ २र २र

648. पूर्वस्य यत्ते अद्रिवोंऽशुर्म्मदाय ।

३ २र २र ३१ २

सुम्न आधेहि नो वसो पूर्तिः शविष्ठ शस्यतें ।

३ २उ ३ २ २१र २र ३ १२

वशी हि शक्रो नूनन्तन्नव्यं सन्न्यसे ॥ २ ॥ (८)

பூர்வஸ்ய யத்தே அத்ரிவோம்ஶுர்ம்மதாய ।

ஸும்ந ஆதேஹி நோ வஸோ பூர்தி꞉ ஶவிஷ்ட ஶஸ்யதே ।

வஶீ ஹி ஶக்ரோ நூநந்தந்நவ்யம் ஸந்ந்யஸே ॥

३१२ २२ ३ २ १

649. प्रभो जनस्य वृत्रहन्त्समर्य्येषु ब्रवावहै ।

२ ३ २उ ३ १ २ ३ १ २ ३ २ ३ १२

शूरो यो गोषु गच्छति सखा सु शेवो अद्वयुः ॥ ३ ॥ (९)

പ്രഭോ ജനസ്യ വൃത്രഹന്ത്സമര്യേഷു ബ്രവാവഹൈ ।
ശൂരോ യോ ഗോഷു ഗച്ഛതി സഖാ സുശേവോ അദ്വയുഃ ॥

அங்வயம்.

जेतारं, अपराजितं, इन्द्रं, धनस्य सातये, हवामहे, सः, नः, द्विषः, अतिस्वर्षत्, हे अद्रिवः !, पूर्वस्य, ते, यत्, हे इन्द्र !, अंशुः, मदाय, हे वसो !, नः, सुम्ने, आधेहि, हे शविष्ठ !, (तव) पूर्त्तिः, शस्यते, हि, शक्रः, वशी, नव्यं, नूनं, सन्न्यसे, हे प्रभो !, हे वृत्रहन् !, जनस्य अर्येषु, सम्ब्रवावहै, शूरः, गोषु, सखा, सुशेवः, अद्वयुः ॥

பதவுரை.

जेतारं	ജേതാരം	பகைவரை வெல்வோனும்
अपराजितं	അപരാജിതം	பிறரால் வெல்லப்படா தோனுமாகிய
इन्द्रं	ഇന്ദ്രം	இந்திரனை,
धनस्य	ധനസ്യ	தனத்தினுடைய
सातये	സാതയേ	இலாபத்தின் பொருட்டு
हवामहे	ഹവാമഹേ	அழைக்கின்றோம்.
सः	സഃ	அவ் விந்திரன்
नः	നഃ	எங்களுடைய
द्विषः	ദ്വിഷഃ	துவேஷிகளை
अतिस्वर्षत्	അതിസ്വർഷത്	(அவன்) முழுதும் நாசஞ் செய்வானாக.
हे अद्रिवः !	ഹേ അദ്രിവഃ !	மலைகளை யுடைய இந்திர !
पूर्वस्य	പൂർവസ്യ	பழமையாகிய
ते	തേ	உனக்கு
यत्	യത്	யாதொருதனமுண்டோ, அதைக் கொடுப்பாயாக.
हे इन्द्र !	ഹേ ഇന്ദ്ര !	இந்திரனே !
अंशुः	അംശുഃ	சோமக் கொடித் துணுக்குகளின் இரசம்

मदाय	மதாய	மதத்தின் பொருட்டு ஆகின்றது.
हे वसो !	ஹே வஸோ !	வாழ்வதற்குக் காரணமானோய் !
नः	நஃ	எங்களைச்
सुम्ने	ஸும்நே	சுகத்தில்
आधेहि	ஆதேஹி	நிறுத்துவாயாக.
हे शविष्ठ !	ஹே ஶவிஷ்ட !	பேராற்றலுள்ளோய் !
(तव) पूर्त्तिः	(தவ) பூர்த்திஃ	(நினது) ஈகை
शस्यते	ஶஸ்யதே	அனைவராலும் போற்றப்படுகின்றது.
हि	ஹி	எக்காரணத்தால்
शक्रः	ஶக்ரஃ	வல்லுநனே,
वशी	வஶீ	அனைத்தையுஞ் செலுத்துகின்றனையோ, அக் காரணத்தால்
नव्यं	நவ்யம்	புதியோனாகிய வுன்னை
नूनं	நூநம்	உறுதியாக
सम्म्यसे	ஸம்ந்யஸே	(மனதில்) நிலைநாட்டுவேனாக.
हे प्रभो !	ஹே ப்ரபோ !	சனங்களுக்குத் தலைவ !
हे वृत्रहन् !	ஹே வ்ருத்ரஹந் !	விருத்திராசுரனைக் கொன்றோய் !
जनस्य	ஜநஸ்ய	மனிதரின்
अर्येषु	அர்யேஷு	வேள்வி முதலிய கருமங்களில்
संब्रवावहै	ஸம்ப்ரவாவஹை	(நாமிருவரும்) கூடிப் பேசுவோமாக.
शूरः	ஶூரஃ	வல்லுநன்
गोषु	கோஷு	பசுக்களைக் கொண்டுவருமிடத்தில்
सखा	ஸகா	நண்பனானவன்
सुशेवः	ஸுஶேவஃ	முழுச் சுகங் கொடுப்பவன்.
अद्वयुः	அத்வயுஃ	ஒருவனே சத்திய வடிவனானவன்.

சாயண பாடியம்.

ஈண்டு "உக்ரம் யநஸ்ய" என்றற்றொடக்கத்து மந்திரக் கூற்றுள் மூன்றாவது இருக்கின் முதலாவது இருபதங் கூறப்படுகின்றது. தன

லாபத்தின் பொருட்டென்க. எஞ்சியது வெளிப்படை. (ஈண்டு வெளிப் படை யென்பது பகைவரை வெல்வோனும், பிறரால் வெல்லப்படா தோனுமாகிய இந்திரனைத் தனலாபத்தின் பொருட்டு அழைக்கின்றோம் என்பதாம்.)

இனி, "ஸ ந꞉ ஸூஷ–உ திஷ꞉" என்பது முதலிய மந்திரப் பகுதி யாற் சாக்குவர பாகங் கூறப்படுகின்றது. அவ் விந்திரன், எங்களுடைய துவேஷிகளை யொழிப்பானாக. பிறர் தாம் துவேஷப்படுகின்றிலர். அங் ஙனமாயினும், எங்களால் அவர்கள் துவேஷிக்கத் தக்கார்கள். ஆதலின் அவர்களை நாசஞ் செய்வாயாக. யாண்டும் வேதங்களில் "எவன் எங் களைத் துவேஷிக்கின்றானோ" "எவனை நாங்கள் துவேஷிக்கின்றோமோ" என்பது முதலியவைகளில் துவேஷிப்போன் துவேஷிக்கத் தக்கான் என் பவர்களை விநாசப்படுத்துமாறு வேண்டப்படுகின்றமை காண்க. மலையுடை யோய்! ஈண்டு 'அத்ரி' என்றது மலை. இந்திரன் மலைகளைச் சிதைத்தவனாத லின் இந்திரனுக்கும் மலைகளுக்கும் சிதைத்தல், சிதைக்கப்படுதலாலாகிய சம் பந்தமாம். அல்லது, ஆதரித்தலினால், அல்லது, அசுரர்களைக் காத்ததால், அல் லது, தான் பிறரால் கவரப்படாமையால் 'அத்திரி' என்றது வச்சிரமாம். அதை யுடையான் எனினுமாம். இந்திர! பழைமையாகிய உன்னுடைய தனம் யாதொன்றுண்டோ, அதை எங்கட்குக் கொண்டுவந்து கொடுப் பாயாக. ஈண்டுக் கொடுப்பாயாக என்பது எஞ்சி நின்றது.

மற்றும், "ஸ꞉ம்பா–உ–ஊாய," என்பது முதலிய மந்திரக் கூற்றால் அபரபாகங் (மற்றொரு பாகங்) கூறப்படுகின்றது. இந்திரனே! நீ, சோமக் கொடியின் யாதொரு துண்டுகள் உண்டோ அவைகளினுடைய இரசம் (நினது) களிப்பின் பொருட்டு ஆகுக. எங்களாற் கொடுக்கப் பெற்ற சோமரசம் உனது மதத்தின் பொருட்டா மாதலின் வாழ்வதற்குக் காரண மாகிய இந்திர! நீ, எங்களைச் சுகத்தில், அல்லது, தனத்தில் நிறுத்துவா யாக.

"வ–த்தி–ஃ பவிஷபாஸ்தெ," என்பது முதலிய மந்திரக் கூற் றால் தனது பாகமும், பிறபாகங்களும் ஒருங்கே கூட்டிக் கூறப்படுகின்றன. போரற்ற லுடைய இந்திர! உன்னுடைய கொடை, அனைவராலும் போற்

றப்படுகின்றது. நீ வல்லுநன், அனைத்தையுஞ் செலுத்துவோன், ஆதலின் உனது நன்கொடை போற்றப்படுகின்றதென்க. அல்லது, தனத்தையேற்றுக் கொள்வோன். நன்கொடையில் ஆற்றல் மிக்கோன். ஆதலின் நினது வள்ளற் றன்மை போற்றப்படுகின்றதென்க.

" ந-ூ நஷுஷவஃ," என்பது முதலிய மந்திரக் கூற்றால் சாக்குவர பாகங் கூறப்படுகின்றது. சனங்களனைத்திற்கு மிறைவ! விருத்திரனாகிய பகைவனைக் கொன்றோய்! பழையோனாகாத (புதியனாகிய) தன்மை வாய்ந்த இந்திரனாகிய உன்னை, யான் ஒருதலைபாக நன்கு நிலைநாட்டுவேன். அதாவது இவ் வேள்விக் கருமத்தில் அவிகளையுண்போனாகத் தாபிப்பேன் என்பது பொருள். அல்லது, இந்திர! பிறராற் கேடுறாதபடி எங்களால் வழிபடப்படுகின்றாய் எனினுமாம். மற்றும், வேள்விக் கருமங்களில் நாமிருவரும் பேசிக்கொள்வோமாக. எல்லா வேள்வித் தலைவர்கட்கும் இந்திரன் வெளிப்படுகின்றான் என்பதைக் குறிப்பிடுவதற்கு கூடிப் பேசுந் தன்மையாமென்றுணர்க.

" ஶ-ூரா யொமொஷ-" என்றற் றொடக்கத்து மந்திரக் கூற்றால் உபசர்க்க பாகங் கூறப்படுகின்றது. இந்திரன் வல்லுநன், சத்துருக்களிடத்திலிருந்து பசுக்களைக் கொண்டு வருவதற்குச் செல்கின்றவனாகின்றான், அவன் எத் தன்மையனெனின்? பெரு நட்பாளனும், இது கொண்டேமுழுச் சுகங் கொடுப்போனும், மெய்மை பொய்மைகள் என்னும் இரண்டற்றோனும், அதாவது சத்திய வடிவன் என்பது பொருள். அல்லது, உள்ளத்திலோ, அல்லது, வாக்கிலோ, வேறுபாடிலாதோனும், அல்லது, தனக்கொப்பில்லாத் தனியனுமாவன். மற்றும், இவற்றால் வேள்வித் தலைவனுக்கும் இந்திரனுக்கு முள்ள, பேச்சுமுறைமை கூறப்படுகின்றது. இந்திர! வேள்வித் தலைவன் தட்சணையாகப் பசுக்களை யளிக்குமிடத்து உதாரனாய் எழுகின்றான். எவ்வண மெனின்! "எல்லா வற்றையுங் கொடுக்கின்றேன்" என, அல்லது, கலப்பதன்பொருட்டுப் பால் கொண்டு வருவதற்குப் பசுக்களிடத்துச் செல்கின்றான் எனவுமாம். எனது குணத்தை நீ தேவர்களுக்குச் சொல்வாயாக. இந்திரனாகிய நான், தோத்திரங்களில் நண்பனாயிருந்து இந்திரன் சுகங் கொடுக்கின்றான் என, நினது குணத்தை, ஏனைய துதியாளிகளிடத்துச் சொல்கின்றேன் என்பதாம். இவ்வாறு மந்திரங்கட்கு உரை கூறப்பட்டது. (7-8-9)

ஐந்தாவது புரீஷபதங்கள்

३ २ ऽऽऽऽऽऽ २ ३ १ २ ३ १ २
650. एवाह्ये ऽ३ऽ३ऽ३ व एवाꣳ ह्यग्ने एवाहीन्द्र ।

३१२ २२ ३१२ २२
एवाहि पूषन् एवाहि देवाः ॥ ४ ॥ (१०)

ஏவாஹ்யெ ZஈZஈZஈ வ ஏவாம் ஹ்யக்நே ஏவாஹீந்த்ர |
ஏவாஹி பூஷந் ஏவாஹி தேவாஃ ||

அந்வயம்.

हे इन्द्र !, एवाहि, हे अग्ने !, एवाहि, हे इन्द्र !, एवाहि, हे पूषन् !, एवाहि,
हे देवाः !, एवाहि ॥

பதவுரை.

हे इन्द्र !	ஹே இந்த்ர !	இந்திரனே ! நீ
एवाहि	ஏவாஹி	உண்மையாய் இத்தன்மையனேயாவாய். அல்லது, வேள்வியைக் குறித்து வருகுதி.
हे अग्ने !	ஹே அக்நே !	தேவர்களுக்குள் முதல்வ !
एवाहि	ஏவாஹி	உண்மையில் இக்குணத்தனே நீ, அல்லது, வேள்விக்கு வருவாயாக.
हे इन्द्र !	ஹே இந்த்ர !	உயர் திருவாள !
एवाहि	ஏவாஹி	இத்தகைய குணமுடையவனே நீ, அல்லது, வேள்விக்கு வருவாயாக.
हे पूषन् !	ஹே பூஷந் !	உலகைப் பரிபாலிப்போய் !
एवाहि	ஏவாஹி	இத்தன்மைய குணமுடையவனே நீ, அல்லது, வேள்விக்கு வருவாயாக.
हे देवाः !	ஹே தேவாஃ !	தேவர்களின் வடிவத்தோய் !
एवाहि	ஏவாஹி	இத்தன்மைத்தாய குணமுள்ளவனே நீ, அல்லது, வேள்விக்கு வருவாயாக.

சாயண பாஷ்யம்.

இனி புரீஷ பதங்களுக்கு உரை கூறப்படுகின்றது. அவைகளனைத்தும் ந்திரனைப் பற்றியவைகளேயாம். அத்தன்மைய குணமுடைமையின் ங்க. ஈண்டுள்ள மூன்றாவது அக்கினி முதலிய சொற்களாலும் இந்திரனே வழைத்துப் போற்றப்படுகின்றான் என்பதாம்.

அவற்றுள், "ஸவாஹொஹ்வா" என முதலாவது பதங் கூறப்படுகின் து:—இந்திரனே நீ, உண்மையாய் இத்தன்மைய குணமுடையவனே கின்றாய். அல்லது, 'ஏவ' என்னுஞ் சொல் 'நட' எனப் பொருள் படலின் து வேள்வியைக் குறித்தே வருபவனாகுவை எனவுமாம். மறித்தும் ரித்தும் கூறியுள்ள தேற்றம் அன்பின் பொருட்டாமென்க.

"ஸவாஹொஹ்தஹ்" என இரண்டாவது பதங் கூறப்படுகின்றது:—அக் கினியே! அதாவது, தேவர்கட்கெலாம் முன் செல்வோய்! அல்லது, அக் கினி வடிவோய்! இந்திர! நீ, உண்மையில் இத்தன்மைய குணமுடைய னேயாகின்றாய். அல்லது, வேள்வியை முன்னிட்டு வருபவனுவாய் என் தாம்.

"ஸவாஹீந்ர" என மூன்றாவது பதங் கூறப்படுகின்றது. இந்திரனே! மிகுந்த ஐசுவரிய முடையோனாகின்றாய். அல்லது, ஒளியால் உலகை ளக்கலின் இந்திரன், அல்லது, உலகனைத்தையும் முதலிற் பார்த்தலின் இந் ரனாகின்றாய். "இதைப் பார்த்தனன் ஆதலின் இந்திரன் என்னும் பெயர்" ன ஐதரேய வுபனிடதமுங் கூறுகின்றது. இத்தன்மைய குணமுடைய னேயாவாய். அல்லது, வேள்விக்கு வருபவனுவாய்.

"ஸவாஹி வஂஷணிதி" என நான்காவது பதங் கூறப்படுகின்றது. லகைப் பாதுகாப்போனும், அல்லது, சூரிய வடிவனுமாகிய இந்திர! நீ இத்தன்மைய குணமுடையவனேயாவாய். அல்லது, வேள்விக்கு வருபவ னாகுவை.

"ஸவாஹி தெவா ஊதி" என ஐந்தாவது பதங் கூறப்படுகின்றது. தேவர்காள்! அதாவது இந்திரன் முதலியோர்களே! நீவிர், எல்லாத் தேவர்

களின் வன்மை வடிவாய் இந்திரன் இருக்குங்கால் இந்திரனையே அநேகமு
அழைக்கப்படுகின்றது. இந்திரனே! நீ, இத்தன்மைய குணமுடையவ
யாகின்றாய், அல்லது, எனது வேள்வியைக் குறித்து வருவோனுவாய். (

வித்தியாதீர்த்த மகேசுரர் வேதப் பொருளை விளக்குவதால் உள்ளத் திரு
யோதுக்கிப் புருடார்த்தங்கள் நான்கையுங்
கொடுப்பாராக.

மகா நாம்நியார்ச்சிகம்

முற்றும்.

சந்த ஆர்ச்சிகமாகிய பூர்வார்ச்சிகமும்

முடிந்தது.

சுப்ரமண்யோம்! சுப்ரமண்யோம்!! சுப்ரமண்யோம்!

வேதாகம ஞான விநோதன் திருவடி வாழ்க.

எவரெடி பிரஸ், நெ. 34, ஹண்டர்ஸ் ரோட், சூளை, மதராஸ்,